மௌலானா முஹம்மது அலி "ஜௌஹர்"
1878—1931
1931ஆம் ஜனவரி௴ 4௳ லண்டனில் வபாத்தாகி (மரித்து)
பைத்துல் முகத்தஸில் (Jerusalem) அடக்கஞ் செய்யப்பட்டார்.

786

மௌலானா

முஹம்மது அலி

"ஜௌஹர்"

இஃது

உத்தம பாளையம், மௌலவி, அல்ஹாஜ்,

S. S. முஹம்மது அப்துல்காதிர் சாகிப் பாக்கவீ

அவர்களால் எழுதப்பட்டு

சென்னை, பிரபல வர்த்தகர்

ஆலி ஜனுப் O. S. சதக்தம்பி மரைக்காயர்

அவர்களால் வெளியிடப்பட்டது.

முதற் பதிப்பு

காபிரைட்]

1938

[விலை ரூ. 3-0-0

First Edition.

Pages 1 to 581
PRINTED AT
THE JUPITER PRESS,
MADRAS.

w973.

முகவுரை

ஒரு சமூகம் முன்னேற்றமடைவதும், வீழ்ச்சி யடைவதும் சில வருஷங்களுக்குள் நிகழக்கூடிய காரியமல்ல. சமூக முன்னேற்றமும் வீழ்ச்சியும் சிறு கச் சிறுக நாளடைவில் ஏற்பட்டு, பல நூற்றுண்டுகளுக் குப் பின்னர்தான் அதன் பயன் பகிரங்கமாகத் தோன்று வது வழக்கம். நமது முஸ்லிம் சமூகம் அது அடைய வேண்டிய உச்சஸ்தானத்தை அடைந்தது. உலகில் எந்த மதத்தவரும் காணுத அவ்வளவு விசாலமான பூமிக்கு முஸ்லிம்கள் அதிபதியாயினர். இவ்வுலக வியவகார விஷயங்களிலும்கூட முஸ்லிம்கள் உலகமக் களுக்கு வழிகாட்டியாக நின்றனர் என்று கூறின் அது மிகையாகாது.

ஆனல், இவ்வுலகில் இயற்கையாக நடைபெற்று வருகிற வழக்கத்திற்கேற்ப மனிதன் எப்பொழுதும் தனக்கதிகாரம் வேண்டும், செல்வம் வேண்டும் என விரும்புகிறுன்; அவன் வேண்டும் அதிகாரமும் செல்வ மும் கிடைத்தால் திருப்தியடைந்து விடுவதில்லை. அதற்குமேலும் அதிகமான செல்வத்தையும், அதிகாரத தையுமே விரும்புவான். இவ்விதமாக அவனுக்கு அர சுரிமையுங் கிடைத்துவிட்டால், தன்னைக் கடவுள் என் றுங் கூடக் கூறிவிடுவான். கடவுளுக்கு நடக்கிற மரி யாதை தனக்கும் நடைபெறவேண்டும் என ஆசைப்படு வான். இவ்வாறு ஆசைப்பட்டவரும் பலருளர்.

ஆகவே, மனித சமூகத்திற்குச் செல்வாக்கும், செல்வமும், அதிகாரமும் கிடைத்துவிட்டால், ஆண்டவனை மறப்பதும், அவனது கட்டளைகளை அலக்ஷியம் செய்வதும்தான் வழக்கமாக இருந்துவருகிறது என்பதை நாம் தெரிந்துகொள்கிறோம். இவ்வாறான நிலைமை எச்சமூகத்திற் கேற்படுகிறதோ அச்சமூகத்தினர்மீது ஆண்டவனின் கோபம் அல்லது கிருபை உண்டாகிறது. அவர்களிடமுள்ள செல்வமும் அதிகாரமும் நீங்கி, தரித்திரமும், இழிவும் வருகின்றன. இத்தருணத்தில் சீர்திருத்த வாதிகள் தோன்றி, அச்சமூகத்திலுள்ள தீக்குணங்களை அகற்றி அதனை முன்னேற்றத்தின் பாதைக்குக் கொண்டுவருகின்றனர்.

இவ்வழக்கத்திற்கேற்ப முஸ்லிம் சமூகத்தினர் உச்சஸ்தானத்தை அடைந்து, உலகை ஆண்டுகொண்டிருக்கும்போது, அல்லாஹ்வையும், அவனது றஸூலையும் அவர்கள் மறந்து, தங்களது மனம் போனவாறு நடக்கத்தொடங்கினர். ஆண்டவனின் கோபம் அல்லது கருணை அச்சமூகத்தின்பால் பிரதிபலிக்கத் தொடங்கிற்று. முஸ்லிம்களது ஆதிக்கம் கொஞ்சங்கொஞ்சமாகக் குலைந்தது. முஸ்லிம் ராஜ்யங்களை அந்நியர் கைப்பற்றி, முஸ்லிம்களை அடிமைப்படுத்த வாரம்பித்தனர். இம்முறையிலேதான் இந்தியாவிலுள்ள முஸ்லிம் ராஜ்யம் கொஞ்சங் கொஞ்சமாக நீங்கி, சென்ற சிப்பாய்க் கலகத்திலிருந்து இந்திய முஸ்லிம்கள் முற்றிலும் அடிமைகளாயினர்; கல்வியை இழந்தனர்; கைப்பொருளைத் தோற்றனர்.

எனவே, சீர்திருத்த வாதிகள் தோன்றலாயி னர். இவ்வாறு தோன்றியவர்களில் ஜமாலுத்தீன், முஸ்தபா காமில், அப்துல் கரீம், ஜக்லூல் பாஷா, மஹ்மூது ஹஸன், மௌலானு முஹம்மது அலி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டு, முஸ்லிம் சமூகத்தை முன்னேற்றத்தின் பாட்டையில் கொண்டு வந்து விட்டிருக்கின்றனர். இவர்களது உழைப்பின் பயனுக இஸ்லாமிய நாடுகள் பல இப்பொழுது சுயேச்சையடைந்திருக்கின்றன. வேறு பல தேசங்கள் சுயேச்சைக்காக முயன்றுகொண்டிருக்கின்றன.

இப்பொழுது நாம் வெளியிடுகிற இப்புத்தகம் இத்தலைவர்களில் ஒருவரான மௌலானு முஹம்மது அலி "ஜௌஹர்" மர்ஹூம் அவர்களது ஜீவிய சரித்திரமாகும். இவர் இவ்வுலகை விட்டுச்சென்று கிட்டத்தட்ட 8 வருஷங்களாகின்றன. இச் சமயத்தில் இதனை வெளியிடவேண்டிய காரணம் என்னவென்பதாகச் சிலர் நினைக்கலாம்.

தற்போது, காங்கிரஸில் சேர்ந்துள்ள முஸ்லிம்கள் எல்லா முஸ்லிம்களையும் தங்கள்பால் அழைக்கின்றனர். தங்களுடன் சேராதவர்களை "வகுப்பு வாதிகள், தேசாபிமான மற்றவர்கள், அந்நியருக்கு அடிமைப்பட்டவர்கள்" என்று கூறுகின்றனர். "காங்கிரஸ் வாதிகள் முஸ்லிம் சமூகத்தின்மீது துவேஷமுள்ளவர்கள். ஆதலால், அதில் சேரக்கூடாது" என்று முஸ்லிம் லீக்கைச்சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். தலைவர்கள் என்று சொல்லிக்கொள்கிற

இவர்களுக்கு மத்தியில் முஸ்லிம் பொது ஜனங்கள் தத்தளிக்கின்றனர். தங்களது உண்மைத் தலைவர் எவர் என்று தேடுகின்றனர். ஆகவே, முஸ்லிம் சமூகத்திற்குத் தலைமை வகித்து நடத்துபவரிடம் என்னென்ன அம்சங்களிருக்க வேண்டும்? முஸ்லிம்களுக்கு உண்மையாகவே தலைமைவகித்து வந்தவர்கள் அச்சமுகத்திற்கு ஏற்படுத்தியுள்ள வழியாது? என்பதை அறிவிக்கும் நோக்கத்துடன்தான் முஸ்லிம்களின் மாபெருந் தலைவரான மௌலானா முஹம்மது அலி "ஜௌஹர்"; அவர்களது ஜீவிய சரித்திரங்களையும், உபதேசங்களையும், முயற்சிகளையும் ஒருங்கே திரட்டி வெளியிடுகிறோம்.

இந்திய முஸ்லிம்களாகிய நாம் இந்தியாவிலுள்ள சில மாகாணங்களில் பெரும்பான்மையினராகவும், வேறு சில மாகாணங்களில் மிகச் சிறுபான்மையினராகவும் வசிப்பதுடன், இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பாகத்தினராகவும் இருக்கிறோம். நாம் வாழும் இந்தியா பிறரால் அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே, நமக்குத் தலைவர்களாக இருப்பவர்கள் நமது சமூகம் அழிந்து போகாதபடி காப்பவர்களாகவும், நமது நாட்டில் வாழும் ஏனைய சகோதரர்களுடன் நட்பையும், சகோதரத்துவத்தையும் உண்டுபண்ணுபவர்களாகவும், நம்மை அடிமைத்தன்மையிலிருந்து விடுவிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். எனவே, அவர்கள் இஸ்லாம் மதக் கோட்பாடுகளையும், இதர மதஸ்தர்களின் தன்மைகளையும், தற்கால ராஜதந்திர முறைகளையும், லௌகீக

வைதீகக் கல்வி முதலியவைகளையும் நன்குணர்ந்தவர்களாகவும், சுய நலமில்லாதவர்களாகவும், நீதிவான்களாகவும், எத்தகைய கஷ்டம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமலும், அதைரியமடையாமலும், முன்வைத்த காலைப் பின் வைக்காமல் உள்ளும் புறமும் ஒன்றுபோல் உழைக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்விதமான தன்மைகள் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி அவர்களிடம் இருந்தன.

அவர் இங்கிலாந்திலுள்ள பெரிய சர்வகலாசாலை ஒன்றில் படித்துப் பட்டம் பெற்றவர்; மார்க்கக் கல்வியை அறபிக் கலாசாலைகளில் முறைப்படி பயின்று "மௌலவி" பட்டம் பெறாவிடினும், அவரது குருவான மௌலானா அப்துல்பாரீ சாகிப் போன்றவர்களிடம் அறபி கற்று, அறபிப் பாஷையில் பிரசங்கம் செய்யும் ஆற்றல்படைத்தவர். மார்க்கச்சட்டங்களான பிக்ஹுமஸ் அலாக்களில் போதியளவு அவருக்குத் தேர்ச்சி இல்லை என்று சிலர் சொல்லக் கூடுமாயினும், இஸ்லாமிய மூலாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும்பற்றி அவருக்குப் பாண்டித்துவ மிருந்தது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அவர் அரசர்கள் முன்னிலையிலும், பொது ஜனங்களின் முன்னிலையிலும், தலைவர்கள் மத்தியிலும் உண்மையை உரைப்பதற்குக் கொஞ்சமும் தயங்காதவர். திருமக்காவில் நடைபெற்ற அகில உலக முஸ்லிம் மகாநாட்டின் போழ்து, ஹிஜாஸ் அரசரும் நஜத் சுல்தானுமான இப்னு சுஊதை நோக்கிச் செய்த அறபிப் பிரசங்கமும், இந்தியாவிற்குச் சீர்திருத்தம்

வழங்குவது சம்பந்தமாக லண்டனில் கூட்டப்பட்ட வட்டமேஜை மகாநாட்டில் செய்த பிரசங்கமுமே இதற்கு சாக்ஷிகள். இந்தியாவின் ராஜீய நிலைமையையும், தற்போதைய பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இந்தியருக்குள்ள சுதந்திரத்தையும் முஸ்லிம்சமூகத்திற்கிருக்கிற பாத்தியதைகளையும் பற்றி அவருக்கிருந்த நிபுணத்துவத்திற்கு அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டிலும், மத்திய கிலாபத் கமிட்டி, அகில இந்திய ஜமிய்யத்துல் உலமா ஆகியவைகளின் மகாநாடுகளிலும் அவர் செய்த தலைமைப் பிரசங்கங்கள் சான்று பகர்கின்றன. இந்திய அரசியலமைப்பைப் பற்றியும், சட்டத்தைப்பற்றியும், அவருக்கிருந்த பாண்டித்தியத்திற்கு கராச்சி வழக்கில் ஜூரர்களின் முன் அவர் செய்த விவாதம் இன்றும் ஓர் எடுத்துக்காட்டாக இருந்துவருகிறது. காங்கிரஸ், முஸ்லிம்லீக், மத்திய கிலாபத் கமிட்டி, அகில இந்திய ஜமிய்யத்துல் உலமா முதலிய மகா சபைகளுக்கு அவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டதும், அவைகளுக்குத் தலைமை வகித்து நடத்தி வந்ததும் ஹிந்துக்களிடத்திலும், முஸ்லிம்களிடத்திலும், உலமாக்களிடத்திலும், மார்க்க பக்தர்களிடத்திலும் அவருக்கிருந்த செல்வாக்கை நிரூபணம் செய்கின்றன.

எனவே, மௌலானா முஹம்மது அலி "ஜௌஹர்" மர்ஹூம் அவர்கள்பால் எம்மைப்போல் இன்னும் எத்தனையோ பேர் அபிமானம் கொண்டிருப்பர். என்றாலும், நமது முஸ்லிம் சமூகத்தின் தற்போதைய நிலைமையை உத்தேசித்து அவரது ஜீவிய சரித்திரத்தை

யும், அரிய ஊழியங்களையும் அச்சிட்டுப் பிரசுரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் சிலருக்குத்தான் இருக்க முடியும். இவ்வெண்ண முள்ளவர்களில் நமது நண்பரும், பின்னி கம்பெனியின் ஏஜண்டும், மார்க்காபிமானியும், ஏழைகளின் தோழரும், தேசாபி மானியுமான ஆலி ஜனுப் O. S. சதக் தம்பி மரைக்காயரும் ஒருவராவர். எனவே, மௌலானு அவர்களது சரித்திரத்தைத் தமிழில் எழுதிக்கொடுத்தால், அதனை அச்சிலிடுவதாகவும், லாபத்தை எதிர்பாராமல் பொது ஜன நன்மையை உத்தேசித்து மிகக் குறைந்த விலைக்கு விற்பதாகவும் கூறியதற்கிணங்க இப்புத்தகத்தை எழுதலானேம்.

மௌலானு அவர்களது சரித்திரத்தைப்பற்றி ஆங்கிலத்திலும், உர்தூவிலும், தமிழிலும், வேறு பல பாஷைகளிலும் அநேக புத்தகங்கள் வெளியிடப் பட்டுள்ளன. அவைகளில் டில்லி ஜாமியா மில்லிய்யா இஸ்லாமியாவினுல் பிரசுரிக்கப்பட்ட "ஸீரத்தே முஹம்மது அலி" எனும் உர்தூ புத்தகம் நாம் விரும்பும் முறையில் எழுதப்பட்டிருந்தது. அதனையே மொழி பெயர்க்க வேண்டும் என முடிவு செய்து, அப் புத்தகத்திற்குரியவர்களிடம் அனுமதியும் பெற்றேம். ஆயினும், அப் புத்தகத்தை அப்படியே மொழிபெயர்த்து விடாமல் நமது நாட்டிற்கு வேண்டிய முக்கிய விஷயங்களை மட்டிலும் அதிலிருந்து எடுத்துக் கொண்டதுடன், மௌலானு அவர்கள்மீது சர்க்காரால் தொடரப்பட்ட கராச்சி வழக்கில் ஜூரர்களின் முன்னிலை

யிலும்; வட்ட மேஜை மகாநாட்டிலும் செய்த பிரசங் கங்களை ஆங்கில புத்தகங்களி லிருந்தும், வட்ட மேஜை மகாநாடு சம்பந்தமாக சர்க்காரால் வெளி யிடப்பட்ட அறிக்கைகளி லிருந்தும் எமது அன்பர் ஸ்ரீமான் S. சாமிநாதய்யர், B. A. அவர்களைக் கொண்டு தமிழில் எழுதுவித்து அனுபந்தங்களாகச் சேர்த்திருக்கிறோம்.

இப் புத்தகத்தை அச்சியற்றி வெளியிடும் விஷயத் தில் எமக்கு உதவி புரிந்த ஆலி ஜனாப் O. S. சதக் தம்பி மரைக்காயர், ஸ்ரீமான் S. சாமிநாதய்யர் முதலிய. வர்களுக்கு எமது மன மார்ந்த நன்றியறிதலைச் செலுத்து வதுடன், இஃது யாவரிடத்திலும் பரவி, பயனளிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றனம். மனிதராகப் பிறந் தவர் குற்றங் குறைகளில்லாமலிருக்க முடியாது என்ற படி, எம்மிலும் சில குறைகளிருக்கலாம். அதன் பய ஞக இப்புத்தகத்தில் பல தவறுகளிருக்கக்கூடும். இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் அவைகளைத் திருத்தி வெளியிட யாம் சித்தமாக இருப்பதால், இதில் காணப்படும் குறைகளை எமக் கறிவிப்பின் மிக நன்றி யறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வஸ்ஸலாம்.

சென்னை
14-10-1938

முஸ்லிம் ஊழியன்,
S. S. முஹம்மது அப்துல் காதிர்.

—————

பதிப்புரை

சமூக முன்னேற்றத்திற்குப் பல்வேறு துறைகளி ருந்தாலும், உலகிற்ருேன்றிய பெரியார்களின் அரிய பெரிய காரியங்களேயும், தொண்டுகளேயும், தன்னலமற்ற செய்கைகளேயும், தியாகங்களேயும் பற்றிய புத்தகங் களேப் பொதுஜனங்கள் வாசிப்பதும் ஒன்ருகும். தலே வர்களது சரித்திரங்களேயும், தொண்டுகளேயும் வாசிப் பதால் மனதில் ஒரு விதமான உணர்ச்சி உண்டாகி, அவர்கள் சென்ற வழியைப் பின்பற்றி, அவர்களடைந்த வெற்றியை அடையும் ஆசையை இப் புத்தகங்கள் உண்டு பண்ணுகின்றன. இவ் வெண்ணத்தை முன் னிட்டே காலஞ் சென்ற நமது தலேவர் மௌலான முஹம்மது அலி "ஜௌஹர்" அவர்களது ஜீவிய சரித் திரத்தைப் பிரசுரம் செய்ய வேண்டுமென்ற ஆவல் எனக் குண்டாயிற்று. மௌலான முஹம்மது அலி தேசாபி மானியாகவும், மதாபிமானியாகவும் இருந்தார். அவர் வெறும் மதாபிமான உணர்ச்சியுடன் இல்லாமல், மார்க்கக் கிரியைகளான தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்ஜு ஆகிய கடமைகளேயும்,இதர விதிவிலக்குகளேயும் கடைப்பிடித் தொழுகுபவராகவும் இருந்தார். அவரிடம் இத் தன்மைகளெல்லாம் இருந்ததால்தான் அவர் முஸ் லிம்களில் படித்தவர், படியாதவர், ஆலிம், ஸூபி ஆகிய யாவராலும் மதிக்கப் பட்டும், கௌரவிக்கப்பட்டும் வந் தார். எனவே, அவரது ஜீவிய சரித்திரத்தை வெளி

யிடுவது பொது ஜனங்களுக்கு அதிகப் பிரயோஜனமாக இருக்குமாதலால், இதனைத் தமிழில் எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க உத்தமபாளையம் ஆலி ஜனுப் அல்ஹாஜ் மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாகிப் பாக்கவீ அவர்களும், ஸ்ரீமான் S. சாமிநாதய்யர், B.A. அவர்களும் தமிழில் எழுதிக் கொடுத்ததுடன், இதனை அச்சிடும் வேலையிலும் எனக்கு உதவி புரிந்தனர். ஆகவே, அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வியாபார முறையில் அல்லாமல் பரோபகார முறையிலேயே இப்புத்தகத்தை யான் பதிப்பித்திருப்பதால், இதில் பிரதிப் பிரயோஜனத்தை எதிர்ப்பாராமல் மிகவும் சொற்ப கிரயத்தையே ஏற்படுத்தி இருக்கிறேன். அன்பர்கள் இதனை ஆதரித்து, இன்னும் பல புத்தகங்களைப் பதிப்பிக்க எனக்கு உற்சாக மூட்டுவார்கள் என நம்புகிறேன்.

சென்னை
14-10-1938

பிரசுரகர்த்தர்,
O. S. சதக்தம்பி.

அட்டவணை

விஷயம்	பக்கம்
பீடிகை	1
முதல் பாகம்	
வம்ச வரலாறு	1
பிறப்பிடம்	,,
பிறப்பு	2
அலிகார் கலாசாலையும் மௌலானா முஹம்மது அலியும்	5
பி. ஏ. பரீக்ஷை	12
இங்கிலாந்துப் பிரயாணம்	14
ஷௌகத் அலியின் தியாகம்	15
ஆக்ஸ்போர்டு லின்கன் கலாசாலை	17
மறுபடியும் இங்கிலாந்துப் பிரயாணம்	20
ஆங்கிலத்தில் பாண்டித்தியம்	21
ஆராய்ச்சிப் பிரியமும் அதிகமாகப் படித்தலும்	31
தலைமைப் பதவி	39
சத்தியம் பேசல்	55
ஆராய்ச்சி வன்மை	72
உபகாரம்	81
உறுதியும் துணிச்சலும்	92
மத உணர்ச்சி	98
ஹாஸ்யப் பேச்சுகள்	111
தேசாபிமானமும் சமூகாபிமானமும்	124

தேச பரிபாலனம் 128
குடியரசுக் கொள்கை 132
புலவத்தன்மை 137
நீண்ட வியாசம் எழுதும் தன்மை 141
நேசமும் அபிமானமும் 145
பொது நலத்தின் பொருட்டு வாதாடும் வன்மை 152
தியாகமும் சுயநலமின்மையும் 159
வாக்குச் சுதந்திரம் 167
நம்பிக்கை யிழத்தல் 172
ஹிந்துக்களிடம் மனம் உடைந்ததற்குக்காரணம் 178
சுகவீனம் 188
மரணம் 199
வேண்டுகோள்கள் 204
நல்லடக்கம் 209
அனுதாபக் கூட்டங்கள் 214
பத்திரிகைகளின் அபிப்பராயம் 216
தலைவர்கள் அபிப்பராயம் 220
சில குறிப்புகள் 226
ஞாபகச் சின்னம் 228

இரண்டாம் பாகம்

உத்தியோகம் 231
"காம்ரேட்" பத்திரிகை 245
முஸ்லிம் சர்வகலாசாலை 250
முஸ்லிம் லீக் 284
வைத்திய தூதுவக் கூட்டம் 289

டர்னர் மாரிஸன் கம்பெனியும், இதர சம்பவங்களும் 295
“ஹம்தர்த்” பத்திரிகை 298
கான்பூர் மஸ்ஜிது 317
“சாய்ஸ் ஆப் தி டர்க்ஸ்” 323
பாதுகாப்பில் வைக்கப்படல் 326
சுண்டுவாடா 344
சுண்டுவாடாவிலிருந்து பேத்தூல் 358
பேத்தூலிலிருந்து அமிர்தசரஸ் 364
டில்லி 367
வைசிராயிடம் தூது 369
ஐரோப்பாவிற்கு கிலாபத் தூதுவர்கள் 371
ஜாமிஆமில்லியா அல்லது தேசிய சர்வகலாசாலை 380
நாகப்பூர் காங்கிரஸ் 395
கிலாபத் பிரசினை 399
மன்னிப்புக் கேட்ட கதை 403
கராச்சி கிலாபத் கான்பரன்சும் அலி சகோதரர்கள் கைது செய்யப்படலும் 414
கராச்சி வழக்கு 417
தண்டனைக்குப் பிறகு 425
விடுதலையும் காங்கிரஸ் தலைமைப் பதவியும் 433
சோர்வு காலம் 438
காங்கிரஸ் அபிமானம் 443
ஒற்றுமை மகாநாடு 460
ஹிஜாஸ் பிரசினைகள் 467
நஜத்ஹிஜாஸ் யுத்தம் 472

காஜா ஹஸன் நிஜாமியும் ஹைதராபாதும்	491
ஸ்பெஷல் கிலாபத் கான்பரன்சு	494
ஹஜ்ஜூச் சட்டம்	499
மாப்பிள்ளைக் குழந்தைகளின் பெருநாள்	501
கிலாபத் நிதி மோசடி	503
ராஜ்பால் பிரசுரம்	506
ஆல்பார்ட்டீஸ் கான்பரன்சு	513
14 கோரிக்கைகள்	515
ஸைமன் கமிஷன்	521
ஐரோப்பா யாத்திரை	527
நேரு ரிப்போர்ட்டு	533
கல்கத்தா காங்கிரஸ்	540
முஸ்லிம் சர்வ கக்ஷி மகாநாடு	546
வைசிராய் அறிக்கை	553
தென் ஆப்பிரிக்கா	558
சாரதா சட்டம்	562
உலமா கான்பரன்சு	566
லாகூர் தேசீய வாரம்	572
வட்டமேஜை மகாநாடு	574
முடிவுரை	579
அனுபந்தம் I.	
காராச்சி விசாரணை	1
அனுபந்தம் II.	
வட்டமேஜை மகாநாட்டில் மௌலானா முஹம்மது அலி செய்த பிரசங்கம்	119

மௌலானா முஹம்மது அலி
"ஜௌஹர்"

பீடிகை

"இறைவனை எவர் பணிந்தாரோ அவரை உலகத்தாரனைவரும் பணிவர்" என்பது முதுமொழி. இதற்கேற்க, இவ்வுலகத்தில் எத்தனையோ பெரியார்கள் தோன்றி இருக்கின்றனர். இவர்களடைந்த கீர்த்தியும், புகழும் இந்நாள்வரை இக்குவலயத்தில் நிலைநிற்பதற்கு அவர்களிடமுள்ள புஜபல பராக்கிரமமோ, அல்லது அவர்களின் வாள் வலிமையோ காரணமல்ல. அவர்கள் இறைவனின் கட்டளையைச் சிரமேற்றாங்கி மக்களுக்கு ஆற்றிய தொண்டுகளே காரணமாகும். இவ்வாறு தொண்டாற்றியவர்கள் பற்பல வகையினராக இருக்கிறார்கள். அவர்களின் உயர் நிலையும் பற்பல விதமாக இருக்கின்றது. இறைவனின் கட்டளைகளை வானவர் மூலமாக அடைந்து, அக்கட்டளைகளை அவனியோருக்கறிவித்து, அவ்வல்லோனின் உத்தரவுப்படி தொண்டாற்றிய பெரியார்களை நாம் நபிமார்களென்றும், றஸூல்மார்களென்றும் அழைக்கிறோம். இந் நபிமார்கள் காட்டிய

வழியைப் பின்பற்றி, இறைவனின் கட்டளையை மேலோங்கச் செய்வதற்காக வாள்வலி கொண்டு பிரயத்தனப்படுவோரை முஜாஹிதுகளென்றழைக்கிறோம். தங்களுடைய சொந்த நற்குண நல்லொழுக்கத்தின் மூலம் இறைவனின் கட்டளையை மக்களிடம் பரவச் செய்த பல பெரியார்களை ஒலிமார்கள் என்றழைக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும் சாமான்யர்களை நாம் தலைவர்கள் என்றும், மார்க்காபிமானிகள் என்றும், சமூகாபிமானிகளென்றும் கூறுகிறோம்.

உலகில் இறைவன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென மூவகை ஆசைகளை மக்களுக்கு ஏற்படுத்தி இருப்பதால் சிலர் தகாத முறைகளில் இவ்வாசைகளை நிறைவேற்ற முயலுவதுண்டு. இதனால், உலகில் நல்லோரும் தீயோரும் தோன்றலாயினர். நல்லோர் தீயோர் தோன்றி உலகில் பாப புண்ணியம் பெருக ஆரம்பித்ததால் துஷ்ட நிக்ரகம் சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காக அரசர்கள் தோன்றலாயினர். இப்படிப்பட்ட அரசர்கள் தங்கள் நீதிநெறி முறை தவறாது பிரஜைகளின் க்ஷேமத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பார்களாயின் நபிமார்களும் சரி, ஒலிமார்களும் சரி, தலைவர்களும் சரி யாவரும் அவ்வரசருடன் ஒத்துழைப்பதும், செங்கோல் தவறிய முறையில் ஆட்சி புரிந்து, பிரஜைகள் அல்லலுக்கு உட்படுவார்களாயின் அப்படிப்பட்ட அரசர்களை மேலே கூறப்பட்ட மகான்கள் எதிர்த்து அறிவுறுத்துவதைத் தங்கள் கடமையாகக் கொள்வதும் வழக்கமாக இருக்கிறது.

இப் புவியில் இம்மாதிரி தோன்றியவர்கள் பலருள்ளராயினும், சமீப காலத்தில் இந்திய நாட்டில் இணையற்ற தலைவராக இருந்து, ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் தொண்டாற்றுவதிலேயே தங்கள் முழுக் காலத்தையும் செலவு செய்து, தம்மை ஜன ஊழியத்திற்கென்றே அர்ப்பணம் செய்த தலைவர் மௌலானா முஹம்மது அலி ஜௌஹர். அவர்கள் ஒரு முக்கிய ஸ்தானம் வகிப்பவர்களாய் இருத்தலானும், அப்பெரியார் அவர்களின் அருங்குணங்களிலிருந்து நம்மவர் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் அதிகமிருத்தலானும், அப்பெரியாரின் ஜீவிய சரித்திரத்தை எழுதி நம்மவருக்குச் சமர்ப்பிக்கத் துணிந்தனம்.

சிப்பாய் கலகம்

கி. பி. 1857-ம் வருஷத்தில் டில்லியில் பிரிட்டிஷாருக்கு விரோதமாக ஒரு சிப்பாய் கலகம் தோன்றி, இந்தியாவின் பல பாகங்களிலும் பலமாகப் பரவிற்று. இச் சிப்பாய் கலகம் அடங்கியபின் இந்தியாவின் நிலைமை முற்றிலும் மாறுபாடடைந்துவிட்டது. இக் கலகத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்திருந்தனர். இவ்விரு வகுப்பாரிலுமிருந்து இக் கலகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் தங்களாலியன்ற முயற்சியைச் செய்தனர். ஆயினும், கலகம் அடங்கியபின் இவ்விரு வகுப்பாரின் மனப் பான்மையில் அதிக வித்தியாசமேற்பட்டது. ஹிந்து சகோதரர்கள் அரசாங்கத்துடன் பூரணமாக ஒத்துழைத்தனர். அரசாங்க உத்தி

யோகப் பதவிகளிலமர்ந்தனர். ஆங்கிலங் கற்பதில் ஈடுபட்டனர். அரசாங்கத்தின் நிழலை, கற்பகத் தருவின் நிழலென மதித்தனர். ஆனால், முஸ்லிம்களிட மிருந்த அரசாங்கம் பிரிட்டிஷாரிடம் சென்றமையான் முஸ்லிம்களுக்கு ஆங்கிலேயர்களுடன் உறவாடவோ, ஒத்துழைக்கவோ மனம் வரவில்லை. அக் காலத்தி லிருந்த உலமாக்கள் மனிதருக்கு இயற்கையாகவுள்ள இந்தத் தன்மையின் மேலீட்டால் ஆங்கிலேயர்களின் கல்வி, நாகரீகம், வாழ்க்கைமுறை முதலியவைகள்பால் வெறுப்புண்டு முஸ்லிம்களை அவைகளை விட்டு ஒதுக்கி வைத்தனர்.

ஸர். ஸெய்யித் அஹ்மது கான்

இவ்வித நிலைமையில் ஸர். ஸெய்யித் அஹ்மதுகான் கல்வியில் சீர்திருத்தம் செய்யும் பணியிலீடுபட்டார். அவர் முஸ்லிம்களை நோக்கி "அரசாங்கம் உங்கள் கையை விட்டு நீங்கி விட்டது. உங்களுடைய வாழ்க்கை வேறொரு அரசாங்கத்தின் நிழலின் கீழிருக்கவேண்டியதாக இருக்கிறது. ஹிந்துக்கள் உங் களைப் பார்க்கினும் முந்திவிட்டார்கள், அதிகமாக ஆங் கில பாஷையைக் கற்றுக்கொண்டனர். தங்களைக் குற்ற மற்றவர்கள் என்று பிரிட்டிஷாரிடம் காட்டிக்கொண் டார்கள். அரசாங்க உத்தியோகங்களெல்லாம் அவர் கள் கைவசம் சென்றுவிட்டன. சிப்பாய் கலகம் செய்த வர்கள் முஸ்லிம்கள் தாம் என்று பிரிட்டிஷார் நினைத்து வருகிறார்கள். நீங்கள் ஆங்கிலங் கற்கவில்லை. ஆங்கில

அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பதை நீங்கள் ஹறும் (விலக்கப்பட்டது) என்று மதிக்கிறீர்கள். இப்பொழுது நீங்களும் பிற சமூகத்தாரைப்போல் சமத்துவமாக வாழவேண்டுமாயின், இதுவரை தவறவிட்டது போக, இனியேனும் முன் வந்து உங்களாலானதைச் செய்யுங்கள். போனதுபோகட்டும். இனியேனும் ஆங்கிலங் கற்க முற்படுங்கள். ஆங்கில அரசாங்கத்தின் அனுதாபத்தை அடைய முன் வாருங்கள்" என்று உபதேசித்தார்.

அத்துடன், ராஜிய விஷயங்களில் முஸ்லிம்கள் ஈடு படலாகாது என்றும், ஆங்கிலக் கல்வியில் போதிய அளவு பங்கெடுத்துக்கொள்ளும் வரை, ராஜிய விஷயங்களின் சிந்தனையையே மனத்திற் கொள்ளலாகாதென்றும் உபதேசித்தார். இவருடைய இவ்வுபதேசத்தை முஸ்லிம் பொதுஜனங்கள் பலமாக எதிர்த்தனர். அடியடிதோறும் அவருக்குத் தடைகளும் கண்டனங்களும் ஏற்பட்டன. ஆயினும், அவர் இவ்வெதிர்ப்புகளை எல்லாம் மலர்ந்த முகத்துடன் சகித்துக்கொண்டு, "கருமமே கண்ணாயினர்" என்றபடி, முஸ்லிம் சமூகப் புனருத்தாரண வேலையைக் குன்றா ஊக்கத்துடன் செய்து வந்தார். இவரை முஸ்லிம்கள் பொதுவாக எதிர்ப்பினும் இவரது வேலைக்கு ஆதரவும் அளித்தனர். இதற்குக் காரணம், இவரது வேலைத் திட்டத்திலும் வேலை முறையிலும் இருந்த சில குறைகள் இவருக்குக் கஷ்டத்தைக் கொடுத்தன. ஆயினும், இவரது நோக்கம் சரியானதாக இருந்தமையான், இவரைக் கண்

டித்ததுடன் ஆதரிக்கவும் செய்தனர். இவ்விவரத்தை விரிவாக எழுத இப்புத்தகம் இடங்கொடாதாகையால் இத்துடன் விட்டு விட்டனம். ஆண்டவன் கிருபை செய்தால் சமயம் வாய்ப்பின் ஸர். ஸெய்யித் அஹ்மது கானுக்கு தடை முறைகள் ஏன் ஏற்பட்டனவென் பதைப்பற்றி எழுதுவோம்.

ஸர். ஸெய்யித் அஹ்மதுகான் மரித்தபின், நவாப் முஹ்ஸினுல் முல்க் அவர்கள் சமூகப் புனருத்தாரண வேலையைத் தொடர்ந்து செய்து முஸ்லிம்களுக்குப் பேரூழியம் புரிந்தார். இப்பொழுது ஆங்கிலக் கல்வி பயின்ற முஸ்லிம்களும் ஓரளவு உண்டாயினர். ஆங்கில அரசாங்கத்தின் ஆட்சி முறையிலும் ஓரளவு வித்தியாச மேற்பட்டது. அதாவது, ஊர் இரண்டு பட்டால் கூத் தாடிக்கு கொண்டாட்டம் என்றபடி, பிரித்தாளும் தந்திர முறையை ஆங்கிலேயர்கள் கைக்கொண்டார்கள். இதன் பலனாக முஸ்லிம்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித் தொகுதியும் ஏற்பட்டதுடன் முஸ்லிம்கள் தாங்களாக இவ்வுரிமையை வேண்டாம் என்று கூறும் வரை அவர்களை விட்டு இவ்வுரிமையை அகற்றுவதில்லை என்றும் அரசாங்கத்தார் உறுதிமொழி யளித்தனர். இதுவும் போதாதென்று இஸ்லாமிய உலகிலுள்ள பல பகுதிகளையும், பிரிட்டிஷார் கைப்பற்றும் தந்திர முறைகளைக் கையாளத் தொடங்கினர். இந்திய முஸ்லிம்களுக்கு மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் அளித்துள்ள மத சுதந்திரத்திலும் தலையிட்டனர். கான்பூரில் மஸ்ஜிதை இடித்து முஸ்லிம்

களின் உணர்ச்சியைப் புண்படுத்தினர். முஸ்லிம் களுக்கு கலீபாவான துருக்கி சுல்தான்கள் விஷயத்தி லும் தலையிட்டார்கள். துருக்கி சுல்தானின் ஆதிக் கத்துக் குட்படுத்தப்பட்ட தேசங்கள் மகாயுத்தத் துக்குப்பின் துண்டு துண்டாக்கப் பட்டன. முஸ்லிம் களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்துகொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறந்தன. இந்தச் சமயத்தில் முஸ்லிம்களின் உணர்ச்சி பற்றி எரிந்தது. ஒன்று, இந்த அக்கிரமக்காரர்களை அடியுடன் ஒழிக்கவேண்டும் அல் லது தாங்களும் அழிந்துபோகவேண்டும் என்று முஸ்லிம்கள் உறுதி கொண்டார்கள்.

இச்சமயத்தில் முஸ்லிம்களுக்குத் தலைமை வகித்து அவர்களது உணர்ச்சியைச் சமாளிக்கத் தகுந்த தலைவர் ஒருவர் தேவையாக இருந்தது. அத் தலைவர் பிரிட்டிஷாரின் நோக்கம், சித்தம், நடைமுறை, தந்திரம் முதலியவைகளை எல்லாம் நன்கு தெரிந்தவராகவும், அவர்களின் ஏமாற்றமான காரியங்களைக் கண்டு ஏமாந்து போகாதவராகவும், மன தைரியமும், தெம்பும், தந்நல மின்மையும், பொது ஜன ஊழியம் செய்ய வேண்டு மென்ற உண்மை உணர்ச்சியுள்ளவராகவும் இருக்க வேண்டி யிருந்தது.

ஒரு தேசமோ அல்லது ஒரு வர்க்கமோ பல துறைகளிலும் சங்கடத்தை அனுபவித்து நெருக்கப் படும் சமயம், அவர்களைத் தேற்றுவதற்காக இறைவன் ஒரு தலைவரை அவர்களுள் எழுப்புவது உலகம் தோன் றிய கால முதல் நடைபெற்றுவரும் காரியமாக இருந்து

வருகிறது. இக்காலம் முஸ்லிம்களைப் பொறுத்த வரை யில் மிகவும் நெருக்கடியான காலமாக இருந்தது. முஸ் லிம்கள் அழிவுறுந் தருவாயிலிருந்தனர். இப்படிப் பட்ட சமயத்தில் ஒரு வீரர் தம்முடைய சகல தன்மை களிலும் குறையில்லாதவராகவும், மற்றவர்கள் பார்த்துப் பெருமை கொள்ளத் தக்கவராகவும் தோன்றினர் அவரை ஜனங்கள் மௌலானா முஹம்மது அலி "ஜௌஹர்" என்ற பெயரால் அழைக்கிறார்கள்.

இவர் ராஜிய உலகில் அடியெடுத்து வைத்தவுடன், நிகரற்ற பிரசங்கியாகவும், ராஜ தந்திரியாகவும், ஆசிரிய ராகவும், புலமைத் தன்மை வாய்ந்தவராகவும் இருப்பது மல்லாமல், இஸ்லாத்துக்கு உழைப்பதே தமது லக்ஷியம் என்ற உணர்ச்சியுள்ளவராகவும் இருக்கிறார் என்பது பொது ஜனங்களுக்கு வெளியாகி விட்டது. அத் துடன், இவர் முஸ்லிம்களில் புத்துணர்ச்சி உண்டுபண் ணத் தக்கவர் என்பதையும், அசத்தியத்தை அடியுடன் ஒழிக்கும் ஆற்றல் படைத்தவர் என்பதையும் மக்கள் உணர்ந்து கொண்டனர்.

ராஜிய உலகில் இவர் பிரவேசித்த சில காலத்துக் குள் இவரால் எதிர்பார்த்த காரியங்கள் தவறவில்லை என் பதை உலகம் அறிந்துகொண்டது. இவர் இஸ்லாமிய ஊழியம் செய்தது மாத்திரமில்லாமல், இஸ்லாமிய ஊழியம் புரியும் ஒரு வர்க்கத்தாரையும் உற்பத்தி செய் தார். இவர் இஸ்லாமிய சமூகத்தாருக்கும், முஸ்லிம் உலகத்துக்கும் மதிக்கத்தக்க பேரூழியம் செய்தார். இவ்வுலகம் உள்ளளவும், சூரியனும் சந்திரனும் உள்ள

ளவும், இவருடைய பூத உடலம் நம்முன் இல்லையென்ருலும் இவருடைய புகழுடலம் என்றும் நம்முன் நிலைத்திருக்கும். இவரது அரிய ஊழியங்களை மிகவும் இன்பமாகச் செவிமடுப்பர். இவர் காட்டிய வழியினைப் பின்பற்றி நடப்பர். இப்பெரியாரின் முகதரிசனத்தைப் பார்க்காதவர்கள் இவரை நாம் பார்க்கவில்லையே என்றேங்குவர். இவரைப் பார்த்த புண்யவான்கள் இனி இவரது தரிசனம் என்று கிடைக்குமோவென்று பெருமூச்செறிவர். இவ்வுலகில் உதித்தவர் எவரும் நித்திய ஜீவனுள்ளவரல்லர். ஆதலின், இறைவன் நாட்டப்படி இவரும் தம்முடைய இவ்வுலக வாழ்க்கையைப் பூர்த்திசெய்து கொண்டார். இப்பொழுது நமக்கு இவரது அரிய தொண்டுகளும், இவர் காட்டியவழியும், இவரது திட்டமும் நம் மனக்கவலையை மாற்றவல்ல ஜீவ சஞ்சீவியாயிருக்கின்றன. அவைகளைப் படித்துணர்ந்து நாமும் நேரான வழியில் நடப்போமாக.

மௌலானா முஹம்மது அலி
"ஜௌஹர்"

முதல்பாகம்

முதலாம் அத்தியாயம்

வம்ச வரலாறு

மௌலானாவின் மூதாதையர் எப்பொழுதும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவரது பாட்டனாரான தாதாஅலி பக்ஷ் என்பவர் டில்லி சிப்பாய் கலகத்தின்போழ்து மிக வீரதீரமாக அநேக ஆங்கிலேயரின் உயிரைக் காப்பாற்றினார். இச்செய்ந் நன்றிக்காக, முராதாபாதைச் சேர்ந்த பிரதேசத்தில் இ வ ரு க் கு ஜாகீர் வழங்கப்பட்டது. மௌலானாவின் தகப்பனாரான அப்துல் அலிகான் என்பவரை ராம்பூர் நவாபான யூஸஃப் அலிகான் தம்முடைய தர்பாரில் அழைத்துத் தம்முடைய உற்ற தோழர்களில் ஒருவராக நியமித்திருந்தார். இவர் தமது வாணுள் முழுவதிலும் நவாபின் நன்மதிப்பைப் பெற்று, தம் காலத்தவரில் கண்ணியம் வாய்ந்திருந்தார்.

பிறப்பிடம்

மௌலானாவின் சொந்த ஊர் எது என்று நிச்சயமாகத் தெரியவில்லை. முராதாபாது தான் அவரது

சொந்த ஊர் என்று சிலர் கருதுகின்றனர். பிஜ்னூர் ஜில்லாவைச் சேர்ந்த நஜீப் ஆபாத்வாசி யெனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

பிறப்பு

மௌலானு கி. பி. 1878-ம் வருஷத்துக் கடைசியில் தம்முடைய பெற்றேருக்குக் கனிஷ்ட குமாரராகப் பிறந்தார். இவருக்கு மூத்தவர் ஷௌகத் அலி. யாவருக்கும் மூத்தவர் துல்பக்கார் அலிகான் "கௌஹர்." உலகிற்ரேன்றிய பெரியார்களிற் பெரும்பாலர் தங்களது சிறுவயதிலேயே பெற்ரேரிருவரையும் இழந்தவர்களாக அல்லது தந்தையை மட்டிலும் இழந்தவர்களாக அல்லது பெற்ரேர்களிருந்தாலும் அவர்களது பராமரிப்பைப்பெறக் கொடுத்து வைக்காதவர்களாகவே இருந்திருக்கிருர்கள். இது போலவே, மௌலானுவும் தமது குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்த தனையராகவும், தந்தையின் மடியில் வளரும் பாக்கியம் பெருதவராகவு மிருந்தார்.

நல்ல வேளையாக தாயின் நிழல் அவருக்கு வெகு காலம் வரை இருந்தது. மௌலானுவின் மாதா பீ அம்மா அவர்கள் மிகவும் பொறுமையுடனும், உறுதியுடனும் தமது பாலர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் பயிற்றுவித்தார். இவ்விவரத்தை விளக்குவதாயின் இது மட்டிலும் தனிப் புத்தகமாக விரிந்துவிடும். பெண்ணுலகுக்கு பீ அம்மா அவர்களின் சரித்திரம் சிறந்த வழிகாட்டியாக இருக்குமென்பதி லையமில்லை.

ஆரம்பப் படிப்புகளைத் தமது சொந்த பிறப்பிடத்திலேயே பயின்றபின், பரேலி ஹைஸ்கூலில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அங்குள்ள போர்டிங் ஹௌஸிலேயே அவர் தங்கி இருக்கவும் ஏற்பாடாயிற்று. அக்காலத்தில் பரேலி ஹைஸ்கூலில் உயர்தர வகுப்பில் மௌலானா ஷௌகத் அலியும், மீர்மஹ்பூஜ்அலி முதலியவர்களும் கல்வி பயின்று கொண்டிருந்தனர். இப்பெரியார்களில் மிகச் சுறுசுறுப்பும், தந்திரமுமுள்ள முஹம்மது அலியும் ஒருவராக இருந்தார். ஆயினும், வயதில் சிறியவராக இருந்தார்.

அக்காலத்தில் பரேலி ஹைஸ்கூலில் மாணவராக இருந்த மீர்மஹ்பூஜ்அலி சாகிப் நமது மௌலானா அவர்களைப்பற்றி,

> "முஹம்மது அலி பரேலியில் மிகவும் நுட்ப புத்தி யுள்ளவராயிருந்தார். ஆனால், உழைப்பு மிகச் சொற்பம். உபாத்தியாயர்களனைவரும் அவர்பால் அதிகப் பிரியமுள்ளவர்களாயிருந்தனர். மிகவும் அவசர புத்தியுள்ளவர். உடனுக்குடன் பதில் கூறும் சக்தி வாய்ந்தவர்"

என்று கூறி இருக்கிறார். இன்னும் அவர் மௌலானாவின் சிறந்த புத்திசாலித்தனத்தைப்பற்றிக் கூறி இருப்பது இக் காலத்திலுள்ள நம்மவர் கவனிக்கத் தக்கதாகும்.

ஷௌகத் எந்நேரமும் பலரைக் கூட்டம் போட்டுக் கொண்டு, பேசிக்கொண்டே இருக்கும் சுபாவமுள்ளவர். அத்துடன் மற்றவர்களின் மீது நாட்டாண்மை செலுத்

தும் தன்மையும் வாய்ந்தவர். பள்ளி மாணவர்களுடன் உட்கார்ந்து கொண்டு 'முஹம்மது அலி! வெற்றிலை கொண்டுவா! ஜலம் கொண்டு வா! புத்தகத்தை எடுத்து வா! என்றெல்லாம் வேலை வாங்கிக்கொண்டே இருப்பார். ஒரு நாள் மௌலவி ஸகாவத் ஹூஸைன் மர்ஹூம் அவர்கள் "நாயாகப் பிற. ஆனால் இளையவனாகப் பிறக்கக் கூடாது" என்ற பாரசீகப் பழ மொழியின் கருத்தைப் பற்றிக்கூறும்போது "கழுதையாகப் பிற. ஆனால், மூத்தவனாகப் பிறக்காதே" என்ற மற்றொரு பழமொழியையுங் கூறி "முஹம்மதுஅலி நாயாயினன், ஷௌகத்அலி கழுதையாயினன்" என்று தமாஷாகக் கூறினார். உடனே நமது மௌலானா "ஜனாப் அவர்களே, நான் நாயாக இருக்கப் பிரியப்படுவேன். ஆனால், ஷௌகத் அண்ணன் கழுதையாக இருக்க விரும்பேன்" என்று கூறினார். இதைக்கேட்டு மௌலவி சாகிப் "ஷபாஷ்" என்று முஹம்மது அலியின் மூத்தோர் மரியாதையைப் பற்றி மெச்சினார்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்றபடி முஹம்மது அலி இங்கு சிறு பிள்ளையாக இருந்தார். அவரைப்பற்றிக் கவனிப்பார் யாருமிலர். அவ்வாறிருந்தும் தம்முடைய வயதை யொத்த தோழர்களிடம் அவர் தலைவராகவே இருந்து வந்தார்.

இரண்டாம் அத்தியாயம்

அலிகார் கலாசாலையும் மௌலானா முஹம்மது அலியும்

அக்காலத்தில், டாக்டர் ஸர். ஸெய்யித் அஹ்மது கானின் "அலிகார் காலேஜ்" மிகக் கீர்த்தி பெற்றிருந்தது. அக்கலாசாலையை முஸ்லிம்கள் பொதுவாக ஆக்ஷேபித்தாலும் அக்கலாசாலையின் பெருமையைப் போற்றினர். அக்காலத்தில் அலிகாரின் வாழ்வே தனி வாழ்வாக இருந்தது. போர்டிங்கிலுள்ள வாழ்க்கை முறை, மாணவர்கள் கல்வி கற்கும் ஆவல், ஆட்டங்களிலும், திரேகப் பயிற்சியிலும் மாணவர்களுக்கு இருந்த மதிப்பு, பிரசங்கத்திலும், எழுத்திலும் அவர்களின் திறமை இவைகளெல்லாம் அலிகார் கலாசாலைக்கு வெளியில் மிக மிகத் தூரமான இடங்களிலெல்லாம் பரவி இருந்தன. இதனால், எல்லோருடைய கவனமும் அலிகார் கலாசாலையின் பக்கமே திரும்பி இருந்தது. படித்துப் பட்டம்பெற இஷ்டப் படுபவர்களனைவரும் அங்கு செல்லவே விரும்பினர்.

அக்காலத்தில் அலிகார் கலாசாலை ஒருவித வசிய சக்தியைப் பெற்றிருந்தது. நூற்றுக்கணக்கான பிரபுக்களின் புதல்வர்கள் அலிகாரில் கல்வி பயின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்கிருந்து வெளியேறும்போது தீவிர உணர்ச்சியும், சுறுசுறுப்பும்,

எவரையும் லக்ஷியம் செய்யாத தன்மையும் உள்ளவர்களாக இருந்தனர். சாமான்யர்களைக் கண்டால் அவர்களைப் பற்றி இரண்டொரு வார்த்தை கூறுமல் இருக்க மாட்டார்கள். ரயிலில் ஏறினல் அங்கு இவர்களின் கூச்சல்தான் மிகைத்திருக்கும். டிப்டி கலெக்டர் போன்ற உத்தியோகங்களை அடைவது இக்கலாசாலை மாணவர்களுக்கு மிகவும் எளிய காரியமாக இருந்தது.

இம்மாதிரி கீர்த்தி பெற்றிருந்த அலிகார் கலாசாலையில் தம்முடைய மூத்த சகோதரர் மௌலானா ஷௌகத் அலியின் மேல்பார்வையின் கீழ் நமது மௌலானா சேர்ந்தார்கள். சொற்ப நாட்களுக்குள் அலிகார் கலாசாலையின் கீர்த்தியையும், கியாதியையும் இன்னும் அதிகமாக ஓங்கச் செய்வதில் தனக்கு விசேஷப் பங்கிருக்கிறதென்பதை அவர் ருஜூப்பித்து விட்டார்.

பரேலி ஹைஸ்கூலில் மௌலானா எல்லா மாணவரிலும் அதிக மதி நுட்பம் வாய்ந்தவராகவும், சொற்பப் பிரயாசை யெடுப்பவராகவும் இருந்தது போலவே, இங்கும் இருந்து வந்தார். அவருடைய நடையுடை பாவனையில் எவ்வித மாறுதலுமேற்படவில்லை.

இந்தியா சட்ட சபையின் மாஜி தலைவரான ஸர். முஹம்மது யாக்கூப் மௌலானாவுடன் ஒரே வகுப்பில் கல்வி பயிலும் மாணவராக இருந்தார். மௌலானா, அலிகார் கலாசாலையில் இருந்த காலத்தில் எவ்வாறிருந்தார் என்பதைப்பற்றி, அவர் பின்வருமாறு கூறி இருக்கிறுர்:—

"வருஷம் முழுவதும் விளையாட்டிலும் வேடிக்கையிலும் கூத்திலும் காலத்தைக் கடத்து வார். கலாசாலை வகுப்புப் பாடப் புத்தகங்கள் அவரிடம் பூரணமாக இருப்பது மிகுந்த துர் லபம். ஆனால், இறைவன் அவருக்கு அபார ஞாபகசக்தியையும் மதி நுட்பத்தையும் அளித் திருந்தான். பரீக்ஷைக்கு இரண்டு மாதங்களுக்கு முன் புத்தகங்களை இரவல் வாங்கிச் சேகரித்துப் படிப்பார். பதினைந்து நாள் சிரமத்தில் எப் பொழுதும் போல நல்ல மார்க்குகளுடன் பரீக்ஷை யில் வெற்றிபெறுவார்."

நமது மௌலானா அலிகாரிலும் அதிகமாக முயற்சி எடுத்துப் படிக்காததைப் பற்றி மீர்மஹ்பூஜ் அலி சாகிப் புகார் கூறி இருக்கிறார். ஆயினும், அவரு டைய மதிநுட்பத்தை அவரும் பின்வருமாறு போற்றி இருக்கிறார் :

"முஹம்மது அலி பொறுமைகொள்ளத் தக்க விதமாக வகுப்பில் பிரசங்கத்தைக் கேட்பார். பீல்டில் கிரிக்கட் விளையாடுவார். யூனியனில் பிர சங்கம் செய்வார்."

அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையின் மாஜி ரெஜிஸ்டாரான ஸெய்யித் ஸஜாத் ஹைதர் சாகிப் மௌலானா அவர்களுடன் ஒரே வகுப்பில் கல்வி பயின் றவர். பள்ளிக்கூடத்து சிநேகிதர். இவர் "அலிகார் வாழ்க்கையும் முஹம்மது அலியின் நிலைமையும்" என்பதைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"காஜா குலாமுத் தகலேன், ஜ"பர் அலிகான், சௌத்ரி குஷி முஹம்மது நாஜிர், ஹமீதுத்தீன் ஆகியவர்கள் காலேஜ் வகுப்புகளில் கல்வி பயின்று கொண்டிருந்தனர். இவர்கள் தங்களது படிப்புத் திறமையால் மாணவர்களினுடையவும், உபாத்தியாயர்களினுடையவும் அன்புக் குரியவர்களாயிருந்தனர். ஷௌகத் அலிகான் கிரிக்கட் காப்டனாக இருந்தார். கிரிக்கட் காப்டன், அக்காலத்து அலிகாரில், ஹாஸ்டலிலிருந்த மாணவர்களுக்கு ஓர் முஸோலினியாகவிளங்கினர். மாணவர்கள் அவருக் கீழ்ப்படிந்தவர்களாகவும் சொற்படி நடப்பவர்களாகவு மிருந்தனர். அவருடைய செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் ஆசிரியர்களும் ஒப்புக்கொண்டனர். மற்றவர்களும் காப்டன் பதவி வகித்தனர். இன்றும் சிலர் வகித்து வருகின்றனர். ஆனல், ஷௌகத் அலி காப்டனாக இருந்த காலம் என்றும் மறக்கப்படாமலிருந்து வரும். அவர் தான் காப்டனுடைய அறையை தர்பாருடைய அந்தஸ்துக்குக் கொண்டுவந்தார். அந்த அறை ஏக காலத்தில் அரச தர்பாராகவும், அன்பர்கள் கூடும் சபையாகவும் இருக்கும். அங்கு மாணவர்களின் புகார்களும் முறையீடுகளும் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புகளும் நடைபெறும். இவ்வழக்குகளை விசாரணை செய்யும்போது அந்த அறையின் உள்ளிலும் புறத்திலும் மாணவர்களினுடையவும் நண்பர்களினுடையவும் கூட்டம் நிறம்பி இருக்கும்.

அவர் இவ்வழக்குகளை விசாரணை புரியும்போது சமயாசமயத்தில் ஜூரிகளையும் ஏற்படுத்திக் கொள்வார். நான் அலிகார் கலாசாலையில் 9-வது வகுப்பில் சேர்ந்தேன். ஷௌகத் அலியுடன் அவருடைய இளைய சகோதரர் முஹம்மது அலியும் இருந்துகொண்டிருந்தார். இவர் தம்முடைய வகுப்பில் அதிக மதி நுட்பம் வாய்ந்தவர். வகுப்புக்கு வெளியில் சண்டைக்காரர். ஒவ்வொரு காரியத்திலும் எஜமானனாக இருந்தார். முஹம்மது அலி தன்னுடைய மிகச் சொற்பமான உலகினுள் தன்னுடைய ஜோடி வயதுப் பிள்ளைகளுக்குத் தலைவராகவுமிருந்தார். ஆனால், அவருடைய மூத்தசகோதரர் ஷௌகத் அலிக்கு ஏற்பட்டிருந்த அதிகாரத்தையும், செல்வாக்கையும், ஆடம்பரத்தையும் போலில்லை. அவ்வாறிருந்தும் மூத்த சகோதரர் இந்த குட்டித் தலைவரைக் கூட்டத்தில்வைத்து அவமானப்படுத்துவார். அப்பொழுது இவருடைய தலைமைப் பதவி யெல்லாம் பறந்துவிடும். அநேக தடவைகளில் நமது முஹம்மது அலியை அவரது மூத்த சகோதரர் அதட்டிக் கூப்பிட்டு, தம்முடைய நண்பர்களும் மற்றவர்களும் இருக்கும் சபையில் பகிரங்கமாக இரண்டொரு கேள்விகளைக் கேட்டுவிட்டு கன்னத்தில் அறைந்து தண்டனை விதிப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்.”

அவர் தம்முடைய ஆங்கில பாஷைத் திறமையில் மேம்பட்டிருந்தார். நாங்களிருவரும் என்ட

ரன்ஸ் பரீக்ஷை பாஸ் செய்து காலேஜ் வகுப்பில் சேர்ந்தோம். இங்கு வந்தபின் அவரிடமிருந்த விசேஷத்தன்மைகள் இன்னும் அதிகமாக வெளியாயின. அவருக்கிருந்த இவ்விசேஷத் தன்மையினால் தம் காலத்தினரில் அதிகப் பெருமை யடைந்தவராயிருந்தார். அவர் சுய அபிப்பிராயமும், சுயேச்சையான நடத்தையுமுள்ளவராக இருந்தார். புரொபஸர்களுடன் அடிக்கடி முரண்பட்டுக் கொள்வார். யூனியனில் அவர் பிரசங்கம் செய்யும்போது அநேக முக்கிய விஷயங்களைப்பற்றி விவாதம் செய்வார். அவ்விவாதங்களைப் பற்றிப் பேச புரொபஸர்களாலும் முடியாது. அவருடைய பிரசங்கம் வலிமையுள்ளதாக இருக்கும். பேச்சு உறுதியாயிருக்கும். அவர் வயதுப் பிள்ளைகளைப் பார்க்கினும் அவருடைய பிரசங்கம் மனதில் பதியக் கூடிய சக்தியுள்ளதாக இருக்கும்.”

மௌலானா முஹம்மது அலி அ.லிகாரில் வாசிக்கும்போதே அதிக மதிநுட்பம் வாய்ந்திருந்தார். அவர் படிப்பில் அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளாததைப்பற்றி எல்லோரும் அவரை அக்காலத்தில் குறைகூறினாலும் அவருடைய நுட்ப புத்தியையும் ஞாபக சக்தியையும் போற்றாதார் எவருமில்லை. அக்காலத்தில் அலிகாரில் அறபி புரொபஸராக இருந்த மௌலானா ஷிப்லி அவர்களிடம் அவர் பரீக்ஷைக்குச் சென்ற விபரம் மிக ருசிகரமானது. இச்செய்தியை மௌலானா அவர்கள் தமது நண்பரான மௌலானா அப்துல் மாஜித் பி. ஏ.

தர்யாபாதி அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதைக் கீழே தருகிறோம்.

"பதினொன்றும் வயதில் யான் அலிகாருக்குச் சென்றேன். பெரிய அண்ணன் மௌலானா ஷிப்லி மர்ஹூம் அவர்களிடம் நான் செய்யுள் சொல்லுவதைப்பற்றிக் கூறிவிட்டார். மற்றொரு அண்ணன் என்னுடைய ஞாபகச் சக்தியைப்பற்றிப் புகழ்ந்து கூறிவிட்டார். "அவர் அறபிப்பாஷையில் கூறியுள்ள அமீனுடைய கொலையைப்பற்றியுள்ள இரங்கற்பாவிலிருந்து ஒன்றை நான் கூறினேன். அறபியைக் கொஞ்சமும் கற்றுக்கொள்ளாத முஹம்மது அலி அதற்குச் சரியாக மொழி பெயர்ப்புச் செய்துவிட்டான்" என்று மௌலானா ஷிப்லீயிடம் புகழ்ந்து கூறினார். அவருக்கு இதில் நம்பிக்கை வரவில்லை. பரீக்ஷித்துப் பார்க்கவேண்டுவதற்காக நான் அழைக்கப்பட்டேன். மாமூனுடைய மக்கள் எத்தனை பேர் என்பதைப்பற்றி என்னிடம் விசாரித்தார். பிறகு அவருடைய பரம்பரை விவரத்தைக் கேட்டார். இவ்விரு கேள்விகளிலும் தேறின பின்னர் ஒரு செய்யுளிலிருந்து "ஒரு அடி" சொல்லி இந்த அடியை வைத்து இந்த இடத்திலேயே செய்யுள் இயற்றிக் கூறவேண்டும் என்று கட்டளையிட்டார். அதே சமயத்தில் நான் கூறினேன். அன்று மௌலானா ஷிப்லி மர்ஹூம் அவர்களுக்கு என்மீது உண்டான மதிப்புக் கடைசிவரை குறைப்பவே இல்லை."

புலமைத் தன்மை

மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் பிறவியிலேயே கவி சொல்வதிலும், செய்யுள் எழுதுவதிலும் அதிக சிரத்தையுள்ளவராக இருந்தார். சமயம் வாய்க்கும்போதெல்லாம் தம்முடைய மன உணர்ச்சியைச் செய்யுள்களின் மூலம் வெளியிடுவது வழக்கம். நமது மௌலானா தம்முடைய காலேஜ் வாழ்க்கையின்போது தாம் கூறிய செய்யுள்களைப்பற்றி மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் விவரமாகக் கூறி இருக்கிறார். அன்றியும் அவர் தமக்கு "ஜௌஹர்" என்ற சிறப்புப் பெயரை ஏற்படுத்திக்கொண்டு உருது பாஷையில் எழுதிய செய்யுள்கள் அநேகம் உண்டு. இளமையில் மாத்திரமின்றி முதுமையிலும் கூட அநேக செய்யுள்களை அவர் எழுதியுள்ளார்.

பி. ஏ. பரீக்ஷை

பாடப்புத்தகங்களை மனனஞ் செய்யும் விஷயத்தில் கவலையீனமாக இருந்துவந்த நமது மௌலானா முஹம்மது அலி கி. பி. 1896-ம் வருஷத்தில் அலிகார் கலாசாலையில் ஐக்கிய மாகாணத்தில் முதன்மையாகத் தேர்ந்தார். அலிகாரிலுள்ள ஒரு விளையாட்டுக்காரர் சர்வகலாசாலைப் பரீக்ஷையில் யாவருக்கும் முதன்மையாக வெற்றி பெற்றார் என்ற செய்தியைக் கேட்க ஜனங்கள் வியப்படைந்தனர். அதுவும் தம்முடைய பதினெட்டாவது வயதில் வெற்றிப்பெற்றது அரும் விஷயமாகும்.

“மிஸ்டர் கோக்கலே மரணமடைந்த போது, டில்லி டௌன்ஹால் மைதானத்தில் ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அதில் பண்டித மதன்மோகனமாளவியா, ஸுரேந்திரநாத் பானர்ஜி முதலியவர்கள் பிரசங்கம் செய்தார்கள். இவ்விருவரில் ஒருவர் “மிஸ்டர் கோக்கலே தம்முடைய இருபத்தொன்றுவது வயதில் பி. ஏ. பரீக்ஷையில் வெற்றிப் பெற்று சர்வகலாசாலையில் உன்னத ஸ்தானத்தை அடைந்தார்” என்று புகழ்ந்து கூறினர். பின்னர் முஹம்மது அலி பிரசங்கம் செய்கையில் “கோக்கலே கல்வி கேள்விகளே உருவாயமைந்த பெரியார். அவர் இருபத்தொன்றுவது வயதில் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றது ஒரு பெருமையான காரியமல்ல. உங்களுடைய இவ்வூழியன் கோக்கலேக்கு முன் எவ்வித அந்தஸ்துக்கும் சரியில்லாதவன். இருபது வயதுக்குள் சர்வகலாசாலையில் முதன்மையான ஸ்தானத்துக்கு வந்திருக்கிறன்” என்று கூறினர். இதைக்கேட்டு சபையினர் ஆச்சரியமடைந்தனர் என்று மீர் மஹ்பூஜ் அலிகான் கூறி இருக்கிறர்.

மூன்றும் அத்தியாயம்

இங்கிலாந்துப் பிரயாணம்

அலிகார் சர்வ கலாசாலையில் மௌலானு முஹம்மது அலி, யாவரும் பொறுமை கொள்ளத்தக்க விதமாகத் தமது படிப்பைப் பூர்த்தி செய்துகொண்டு இங்கிலாந்துக்குப் பிரயாணம் செல்ல முடிவு செய்தார். ஆனுல், முஹம்மது அலி இங்கிலாந்து செல்வதற்கு எவ்வித ஏற்பாடு செய்யப்பட்டது, அவருடைய அன்பர்களுக்கு அவரது பிரிவாலேற்பட்ட உணர்ச்சி யாது, அவருடைய ஆசிரியர்கள் யாது செய்தனர், என்ற விவரத்தை அறிந்துகொள்ள நீங்கள் ஆவலுள்ளவர்களாயிருப்பீர்கள். இவ் விவரத்தைப்பற்றி அவருடைய பள்ளித்தோழர் ஸெய்யித் ஸஜ்ஜாத் ஹைதர் சாகிப் பின்வருமாறு கூறி இருக்கிருர்:

"அலிகார் கலாசாலையில் இவ்வளவு பிரகாசத்துடன் தமது படிப்பை முஹம்மது அலி பூர்த்தி செய்துகொண்டு அலிகாரை விட்டு வெளியேறினுர். சண்டைக்கார மாணவனொருவன் தனது கல்வியை அபிவிருத்தி செய்ய இங்கிலாந்து செல்கிருன் என்று காலேஜ் பிரின்ஸிபால் ஆனந்தங் கொண்டார். மனரம்மியமான பேச்சுக்காரர், மனதைக் குஷிப்படுத்தும் வாக்கு சாதுரியமுள்ளவர், தங்கள் சார்பாக ஆசிரியர்களிடம் அஞ்சாமலும் சங்கோஜமின்றியும் போராடுபவர் தங்களை விட்டகலுகிருர் என்று மாணவர்கள் வருந்தினர். தங்களை

விட்டு முஹம்மது அலி எங்ஙனம் தூர இருக்க முடியும், அவர் எவ்வாறு தங்களிடம் சிரிப்புண்டாக்கிக் கொண்டிருந்தார், என்ற விஷயங்களைப் பற்றி கல்விப் பிரியர்களாகவும், திறமைசாலிகளாகவுமிருந்த மாணவர்கள் தயங்கி நின்றனர். நமது மௌலானா முஹம்மது அலி இங்கிலாந்துக்குச் செல்லுமுன் மற்றொரு முறை அலிகாருக்கு வந்தார். அவருடைய நண்பர்கள் அவருக்கு வழியனுப்பு உபசாரம் செய்து அவருக்கு விருந்தும் அளித்தனர். அவருக்கு ஒரு வாழ்த்துப் பதிகமும் வாசித்தளிக்கப்பட்டது. அதில், அவர் திறமையுடன் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் வெற்றிபெற்று வாழவேண்டுமென்று பிரார்த்திக்கப்பட்டிருந்தது."

இந்தப் பிரார்த்தனை அச்சமயத்துக்கு எற்றதாக இருந்தாலும், இது இறைவனிடம் ஒப்புக்கொள்ளப் படாமலிருந்ததற்கு இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகவும், அவரைக்கொண்டு இறைவன் அநேக அரிய பெரிய காரியங்களைச் செய்விக்க இருந்தான் என்றும் ஸையத் ஸஜ்ஜாத் ஹைதர் சாகிப் நமது மௌலானா அவர்கள் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் வெற்றி பெறாதது பற்றிக் கூறுவது வழக்கம்.

ஷௌகத் அலியின் தியாகம்

இவ்விதம் மௌலானா அவர்களைப் பயணம் அனுப்பும் உபசாரம் ஒரு பக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்க,

இங்கிலாந்தில் இருந்து படிப்பதற்கான செலவுக்கு என்ன வழி செய்யவேண்டுமென்பதைப்பற்றிய ஆலோசனைகளும் ஏற்பாடுகளும் மற்றொரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மௌலானா முஹம்மது அலியின் பாட்டனருக்கு அரசாங்கத்தார் பெரிய ஜாகீர் வழங்கினார்கள் என்பதை நீங்கள் இதற்கு முன் படித்திருக்கிறீர்கள். மௌலானா அவர்களது தந்தையானவர் ராம்பூர் நவாபினிடம் செல்வாக்கும் நன்மதிப்பும் பெற்றவர். இவ்வாறிருந்தும் அவர்களது அநேக பூமிகள் கடனுக்குக் கட்டுப்பட்டு கொதுவை வைக்கப்பட்டிருந்தன. அலி சகோதரர்கள் குழந்தைகளாக இருக்கும்போதே தந்தையை இழந்ததால் தங்களிடமுள்ள பூஸ்திதியைச் சரியாக மேற்பார்வை செய்து, இருந்த சொற்பக் கடன்களைத் தீர்த்துக் குடும்ப வரும்படியைப் பெருக்கிக் கொள்ளத்தக்க மேற்பார்வையாளர் அகப்படவில்லை. ஆதலின், பூமி இருந்தும் பிரயோஜனப் படுவதற்கில்லை. அலி சகோதரர்களின் மாதாவான பீ அம்மா அவர்கள் தங் குழந்தைகளை நேரில் பரிபாலனஞ் செய்யவேண்டிய பொறுப்பேற்பட்டதால் தமது ஆபரணங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக விற்று மக்களைப் படிப்பித்தார். இனி சீமைக்கு அனுப்பத் தாயாரிடம் பணமில்லை. ஆனால், நல்ல வேளையாக மௌலானா ஷௌகத் அலி அவர்கள், அது போழ்து அப்காரி டிபார்ட்மெண்டில் உத்தியோகம் பார்த்து வந்தார். தமது அருமைச் சகோதரரின் கல்வி அபிவிருத்திக்காகப் பெரும் தியாகம் செய்ய முன் வந்து, தமக்கு அரசாங்கத்திலிருந்து

கிடைக்கும் சம்பளம் முழுவதையும் முஹம்மது அலி யின் சீமைப் படிப்புச் செலவுக்குக் கொடுத்து விடுவதாக வும், தமக்குக் கிடைக்கும் பிரயாணப் படியினுல் தமது குடும்பச் செலவுகளைக் கவனித்துக் கொள்வதாகவும் கூறி, சகோதர வாஞ்சையையும், "இளைய சகோதரர் கள் மக்களின் அந்தஸ்திலுள்ளார்கள்" என்று மூத்தோர் கூறிய முதுமொழியையும் பிரத்தியக்ஷமாகச் செய்து காண்பித்தார். ஆகவே, மூத்த சகோதரரைக் கொள்ளை யடித்து இளைய சகோதரர் சீமைக்குச் சென்ருர். மௌலானு ஷௌகத் அலியின் இத் தியாகத்தைப்பற்றி மௌலானு யல்தரும் அவர்கள் "வெகு சொற்ப தந்தை யர்கள் தங்கள் மக்களுக்காகச் செய்யுங் காரியத்தை ஷௌகத் அலி தமது சகோதரனுக்காகச் செய்தார்" என்று கூறுவது வழக்கம்.

ஆக்ஸ்போர்டு லின்கன் கலாசாலை

முஹம்மது அலி அதிக உற்சாகத்துடனும் சந் தோஷத்துடனும் ஆவலுடனும் சீமைக்குப் பிரயாண மாகிவிட்டார். இங்கிலாந்திலுள்ளபெரிய பெரிய ஸ்தா பனங்கள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் முதலிய இடங்களில் நடைபெறும் பிரமிக்கத்தக்க காரியங்களைக் கேட்டு நமது முஹம்மது அலி அவர்களது மனத்தில் சீமையைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலும் உணர்ச்சி யும் ததும்பிக்கொண்டிருந்தன. இப்பொழுது அவை களை நேரில் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தை இறைவன் தமக்கு அளித்திருப்பதை உணர உணர முஹம்மது

அலிக்கு ஆவலும் ஆசையும் இன்னும் அதிகமாக உண்டாகி ஆனந்த பரவசமடைந்தார். இறுதியாக இங்கிலாந்து வந்து சேர்ந்தார். இங்குள்ள வாழ்க்கை முறைகள் இந்திய முஸ்லிம் வாழ்க்கை முறைகளுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தன. மதுபானம் அருந்துதல், வேடிக்கை பார்த்தல், கூத்துப் பார்த்தல் முதலிய இஸ்லாம் மதத்துக்கு ஆகாத காரியங்களைச் செய்ய இங்கு எத்தகைய தடையும் கிடையாது. மேலும், இத்தகைய காரியங்கள்தாம் இங்கு நாகரீகமாகக் கருதப்படுகின்றன. ஷௌகத் சாகிபின் உதவியால் செலவுக்கு வேண்டிய பணம் மாதந்தோறும் தவருமல் கிடைத்துக்கொண்டே இருக்கிறது. என்றாலும், முஹம்மது அலியானவர் இங்கிலாந்தில் இஸ்லாமிய ஒழுக்கத்துக்கு ஆகாத காரியங்களைச் செய்யத்துணிந்தாரில்லை. அங்குள்ள அரம்பைபோன்ற அரிவைகளைக் கண்டு மயங்கினாரில்லை. அவருடைய பரிசுத்தத் தன்மையைப் பார்த்த ஒவ்வொருவரும் ஆச்சரியமுற்றுத் தங்களது ஆள் காட்டி விரலைக் கடித்துக் கொண்டனர்.

மௌலானா அவர்களே தம்முடைய தூய வாழ்க்கையைப் பற்றி பல முறையும் கூறுவதுண்டு. ஒரு முறை மௌலானா அப்துல் மாஜித் பி. ஏ., தர்யாபாதி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் "காலேஜை விட்டவுடன் சீமைக்குச் சென்றேன். அங்கு ஒன்றுக்கும் குறைவில்லை. இயற்கை செயற்கை அழகின் காட்சிகளுக்குப் பஞ்சமில்லை. ஜேபியில் நிறம்பப் பணமுமிருந்தது. ஆயினும், அங்குள்ள பொது வழக்கத்துக்கு

மாருக என் மனம் தெய்வபக்தியிலும் பேணுதலிலும் துறவறத்திலுமே நிலைத்திருந்தது" என்று குறிப்பிட்டிருக்கிருர். ஆக்ஸ்போர்டிலுள்ள லின்கன் காலேஜில் சேர்ந்தார். இவர் கல்விப் பிரியராகவும், அறிவு நூல் ஆராய்ச்சியாளராகவுமிருந்ததால் தமது மனத்துக்கினிய பாடங்களையும் நூல்களையும் அதிகமாகக் கவனித்தார். தம் மனத்திற்கு ஒவ்வாத பாடங்களையும் புத்தகங்களையும் கொஞ்சமும் கவனித்தாரில்லை. இதன் பலனாக ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தோல்வியுற்ருர்.

இவ் விசனகரமான செய்தி நமது ஷௌகத் சாகிபுக்குக் கிடைத்தது. அவரது மனம் எவ்வாறு துடித்திருக்கும், அவரது சிந்தை எவ்வாறு கலங்கி இருக்கும், என்பதை வாசகர்களுக்கு நாம் விளக்க வேண்டியதன்று. அகத்திலுள்ளது முகத்தில் தெரியும் என்றதுபோல் அவருடைய உணர்ச்சியை அவரது முகம் காட்டிற்று. சந்திரனைப்போல் அவ்வளவு பிரகாசமான அவருடைய முகமானது இச்செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் மஞ்சள் நிறமாக மாறி இருண்டு விட்டது. ஆனாலும், அதுபோழ்து அவரண்டையில் அமர்ந்திருந்த அன்னை பீ அம்மா அவர்கள் இதையறிந்து எவ்வளவு சங்கடப்பட்டிருப்பார்கள்? பெண்கள் பேதையரன்றே? மன தைரியம் பெண்களுக்கதிகமில்லை என்றல்லவா நாம் கருதி வருகிறேம். பெண்களுக்கேற்ற இத்தன்மை பீ அம்மா அவர்களுக்கும் இருந்திருக்கும் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இருந்தாலும், பீ அம்மாவின் சமயோஜித புத்தியும்,

உணர்ச்சியும், உறுதியும் பெண்ணுலகில் பலருக்கேற் படுவது அபூர்வம். சிந்தை கலங்கிய தமது மைந்தரைத் தேற்றினர். "பரீக்ஷையில் தேராவிட்டால் என்ன மோசம் வந்தது? ஒன்று மில்லையே! உடனே இந்தியாவுக்குப் புறப்படும்படி தகவல் தெரிவித்து விடு. பெண் காத்துக் கொண்டிருக்கிருள். விவாக காரியத்தைக் கவனிப்போம். அப்புறம் நடப்பது நடக்கட்டும்" என்றனர். அன்னையின் வீர மொழியைக் கேட்ட மாத்திரத்தில் ஷௌகத் சாகிபின் விசனம் பறந்தது. தம்பிக்குத் தந்தி சொல்லித் தாயகம் திரும்பக் கட்டளையிட்டார். முஹம்மது அலி அடுத்த கப்பலில் இந்தியா வந்து சேர்ந்தார். விவாகமும் நிறைவேறிற்று.

மறுபடியும் இங்கிலாந்து பிரயாணம்

இப்பொழுது நமது முஹம்மது அலி ஆக்ஸ்போர்டு பி. ஏ. பரீக்ஷைக்காக மறுபடியும் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். இப் பரீக்ஷைக்காக முஹம்மது அலி முன் ஜாக்கிரதையுடன் படிக்கவும் செய்தார். அவருடைய மனத்திற்குப்பிடித்த பாடங்களே பாடங்களாக இருந்தன. ஆதலால், ஆனர்ஸில் கிராஜுவேட் ஆனர். இம் மகத்தான வெற்றிக்குப்பின் இந்தியாவுக்குத்திரும்பினர்.

நான்காம் அத்தியாயம்

ஆங்கிலத்தில் பாண்டித்தியம்

மௌலானா முஹம்மதுஅலி ஜௌஹர் அவர்கள் தங்காலத்தவர் அனைவரினும் ஆங்கில பாஷைத் திறமையிலும் பாண்டித்தியத்திலும் எப்பொழுதும் மேம்பட்டே இருந்தார் என்பதை அவரை அறிந்தவர்களெல்லோரும் ஒரு முகமாய்க் கூறுகிறார்கள். பரேலி ஹைஸ்கூலில் அவர் வாசிக்கும்போது மிகவும் சிறு பிராயமுள்ளவராக இருந்தார். ஆனாலும், தம்முடைய வகுப்பு மாணவர் அனைவரையும் பார்க்கினும் ஆங்கிலத்தை நன்கு அறிந்தவராக இருந்தார். அலிகாருக்கு வந்து சேர்ந்தார். முறைப்படி கிரிக்கட் ஆட்டத்திலும் சேர்ந்தார். அங்கும் அவர் தமது வகுப்பு மாணவர்களில் மிக இளையவராகவும், கிரிக்கட் ஆட்டக்காரராகவும், யூனியனில் பிரசங்கம் செய்பவராகவும், உபாத்தியாயர்களோடு தர்க்கம் பேசுபவராகவும், புத்தகங்களை ஏறெடுத்துப் பாராதவராகவுமிருந்து, இவ்விஷயத்தில் பெயரும் வாங்கினார். ஆனாலும், எல்லாரைப் பார்க்கினும் திறமையாக ஆங்கிலபாஷை பேசுபவராகவும் எழுதுபவராகவுமிருந்தார். பின்னர், அவர் ஆக்ஸ்போர்டுக்குச் சென்றார். அங்கும் அவருடைய ஆங்கில பாஷா பாண்டித்தியத்தில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டது. இங்கிலாந்துக்குச் செல்வதற்குமுன் அவர் திறமையாக ஆங்கிலம் பேசக் கூடியவராகவும் ஆசிரியராகவும் இருந்தார். இங்கிலாந்தி

லிருந்து திரும்பி வந்தபோது ஆங்கிலபாஷை நிபுணராக வும் ஆராய்ச்சியாளராகவும் தேர்ந்துவிட்டார்.

அலிகார் காலேஜில் "அலிகார் மன்த்லி" என்ற ஆங்கில மாதாந்திர சஞ்சிகை ஒன்று பிரசுரமாகிக்கொண் டிருந்தது. நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி அக்கலாசாலையில் வாசித்துக்கொண்டிருந்தபோது அப்பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதினார். அவ்வியா சத்தை யாவரும் போற்றினர். மாணவர்கள் மட்டுமில் லாமல் ஆசிரியர்களும் நமது மௌலானாவைப் பாராட் டினர். அக்காலத்தில் அந்த காலேஜுக்கு பிரின்ஸிபா லாக இருந்த மிஸ்டர் மாரிஸன் என்ற பிரபல ஐரோப் பியர் மௌலானாவைப் பார்த்து :

"நீர் ஒரு காலத்தில் ஆங்கிலத்தில் நிகரற்ற பண்டிதராகிவிடுவீர்" என்று கூறினார்.

மௌலானா அவர்களைப்பற்றி எழுதிய வேறொரு சரித்திராசிரியர், "ஷேக்ஸ்பியரைப்போல் முஹம்மது அலியும் நிபுணராக இருக்கிறார். இம்முறையில் இந்தி யாவில் எவரும் அவருக்கு நிகர் கிடையாது. தவிரவும், இவர் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் மாணவராக இருந்தபோது அங்குள்ள ஒருமாசிகையில் சிறந்த தொரு வியாச மெழுதினார். இவ்வியாசம் எழுதியதற்குக் கைம்மாறாக, ஆக்ஸ்போர்டு ஸொஸைட்டியில் இவரைக் காரியதரிசியாக நியமித்தார்கள். இவர்தான் முதல் முதலாக அந்தப் பதவியை அடைந்த இந்தியர். இது இந்தியருக்கு இங்கிலாந்தில் கிடைக்கக்கூடிய உயர்ந்த அந்தஸ்தாகும்" என்று எழுதி இருக்கிறார்.

மௌலானா

ஆக்ஸ்போர்டு கலாசாலை மாணவர்.

லார்டு மின்டோ:—இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த லார்டு மின்டோ மௌலானா அவர்களைப்பற்றிக் கூறிய அபிப்பிராயத்தை ஒரு பத்திரிகைக்காரர் குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு:—

"மௌலானாவின் (Thought) ஆராய்ச்சி வன்மை இந்தியாவில் கண்ணியமாக மதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது மட்டுமின்றி, அக்காலத்தில் வைஸ்ராயாக இருந்த லார்டு மின்டோ பிரபுவும், அவருடைய சீப் செக்ரெடெரியும் கூட மௌலானா அவர்களின் உயரிய திறமையைப் போற்றிப் பாராட்டி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்."

தற்போது பிரிட்டிஷ் முதல் மந்திரியாக இருக்கிற மிஸ்டர் ராம்சே மாக்டனால்டு அவர்களுடன் மௌலானா அவர்களுக்கு நெருங்கிய சம்பந்தமிருந்து வந்தது. இவருக்கு அவருடன் எவ்வாறு சம்பந்த மிருந்து வந்தது? என்பதைப்பற்றி ஆண்டவன் நாடினால் இனியொரு அத்தியாயத்தில் விவரிக்கப்படும். இந்த இடத்தில் மௌலானா அவர்களுக்கு ஆங்கில பாஷையில் உள்ள பாண்டித்தியத்தைப் பற்றி அவர் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளார்? என்பதை மாத்திரம் விவரிப்போம்:—

"சென்ற 1913-ம் வருஷத்தில் லார்டு ஐலிங்டன் தலைமையின் கீழ் இந்தியாவுக்கு வந்த பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்டும் ஒரு அங்கத்தினராக இந்தியாவுக்கு வந்தார். இக் கமிஷன் லக்னௌவுக்குச் சென்ற

பொழுது மௌலானா முஹம்மது அலி அந்தக் கமிஷன்முன் சாக்ஷியம் கொடுப்பதற்காக ஆஜரானார். அங்கு பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் அங்கத்தினர்களுடன் மௌலானா அவர்கள் பேசுகையில் மௌலானா அவர்களின் 'காம்ரேட்' பத்திரிகையை மிஸ்டர் மாக்டனால்டு விடாமல் படிப்பதாகக் கூறி, மௌலானா அவர்களின் வியாசங்களைப் பற்றிப் புகழ்ந்தும் கூறினார்."

மௌலானா அவர்கள் லண்டனில் உயிர் துறந்த போது, 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையின் லண்டர் நிருபர் (அப் பத்திரிகையின் மாஜி ஆசிரியர்) மௌலானா அவர்களின் ஆங்கில பாஷைப் பாண்டித்தியத்தைப்பற்றிக் கூறி இருப்பது வருமாறு:—

"அவரைப் புகழ்ந்து கூறப்பட்டவைகளில் அவருடைய ஒரு திறமையைப்பற்றிக் கூறாமல் விட்டுவிட்டது எனக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. அவர் ஆங்கில பாஷையில் அற்புதமான பாண்டித்தியம் பெற்றிருந்தார்; எந்த இந்தியரும் இவ் விஷயத்தில் அவருடன் போட்டி போட முடியாது. ஆங்கிலேயர்களிலும் மிகச் சிலரே அவரைப் பார்க்கினும் நேர்த்தியாக எழுதக்கூடும். காலஞ்சென்றவர் பத்திரிகை தொழிலை ஆரம்பிக்கும் முன் என்னிடம் ரொம்ப ஆலோசனை செய்திருக்கிறார்."

பிரபல ஆங்கில நூலாசிரியரான எச். ஜி. வேல்ஸ் என்பவர்:-

"முஹம்மது அலி நெப்போலியனின் இருதயமுள்ளவர். அவருடைய பேனாவின் சக்தி மெக்காலேயுடைய பேனாவின் சக்தியுள்ளதாக இருந்தது. அவருடைய நாவன்மை பர்க்கின் நாவன்மைக்கு நிகராக இருந்தது."

என்று கூறி இருக்கிறார்.

நோபில் வெகுமதி யடைந்த பிரபல ஆசிரியரான ஜார்ஜ் பர்னாடு ஷாவுக்கும் மௌலானா அவர்களுக்கும் நெருங்கிய உறவு இருந்து வந்தது. இவரும் மௌலானா அவர்களின் விசேஷப் பாண்டித்தியத்தைப் போற்றி இருக்கிறார். மௌலானா அவர்கள் வயித்திய சிகிச்சை செய்து கொள்வதற்காக 1928-ம் வருஷம் இங்கிலாந்து சென்றபோதும், வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ற போதும் ஜார்ஜ் பர்னாடுஷாவுக்கும் மௌலானா அவர்களுக்கு மிடையில் பலமுறை சந்திப்பு ஏற்படவும் சம்பாஷணை செய்யவும் சந்தர்ப்ப மேற்பட்டது. இதைப்பற்றி பர்னாடுஷா, அப்துல் மாஜித் அவர்களுக்கு எழுதிய நிருபத்தில் குறிப்பிட்டிருப்பது வருமாறு:—

"என்னுடைய வீட்டில் நான் முஹம்மது அலியை ஒருமுறைதான் சந்தித்தேன். மார்ட்டின் லூத்தர் கிறிஸ்து மதத்தைச் சீர்திருத்தம் செய்ததுபோல் இஸ்லாம் மதத்தில் சீர்திருத்தம் செய்ய இடமுண்டா? என்பதைப் பற்றி நாங்கள் சம்பாஷணை செய்தோம். முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக வீழ்ச்சி யடைந்திருப்பதை விட்டு

அவர்களை வெளிப்படுத்துவதற்கு முஸ்லிம்கள் இஸ்லாமியப் பிரசாரத்தையும் இஸ்லாத்தின் போதனையையும் மறுபடியும் ஆரம்பிக்கவேண்டும் என்ற முடிவுக்கு நாங்களிருவரும் வந்தோம். முஹம்மதுஅலியைச் சந்தித்துப் பேசியதுஎனக்கு இன்பத்தை அளித்தது. முஹம்மது அலிக்கு நான் கஷ்டம் கொடுத்து விடவில்லை என்பது அவர் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரிய வருகிறது. எங்களுடைய சந்திப்புகள் இவ்வளவு சிநேக பான்மையாக இருந்தன என்பதற்காக நான் பெருமை கொள்கிறேன். முஹம்மது அலியின் சொந்தத் திறமையைப் பற்றி எனக்கு அதிக பிரேமை இருந்தது. அவர் காலஞ்சென்ற சமாச்சாரம் எனக்கு எட்டியபோது இஸ்லாத்தின் ஊக்கமும் உற்சாகமும் பலமும் பொருந்திய ஊழியர் சென்றுவிட்டார் என்பதை நான் உணர்ந்தேன்'.

பஞ்சாப் மாஜி லெப்டினன்ட் கவர்னர் ஸர். மைக்கேல் ஓட்வியரும் மௌலானா அவர்களை அதிகம் மதித்து வந்ததுடன், உண்மையான நண்பராகவுமிருந்து வந்தார். ஜாவ்ரா சமஸ்தானத்து மந்திரிப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி அவர் மௌலானா அவர்களை அதிகமாக வற்புறுத்தினார். ஆனால், மௌலானா அவர்கள் அப் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டதுடன் "காம்ரேட்" பத்திரிகையை நடத்த முடிவு செய்த போது அவர் மௌலானா அவர்களுக்கு கண்ணியமான முறையில் நல்ல ஆலோசனைகள் கூறி உதவிபுரிந்தார்.

இறுதியாக மௌலானு அவர்களது பத்திரிகையில் அவருக்குக் கசப்பு ஏற்பட்டுவிட்டது. இதைப்பற்றி ஸர். மைக்கேல் ஒட்வியர் தமது புத்தகத்தில் எழுதி இருப்பதாவது :—

"மிஸ்டர் முஹம்மது அலி அப்பத்திரிகையை ஆரம்பித்து நடத்துவதற்கு முன் என்னிடம் அதைப்பற்றி அதிக ஆலோசனை புரிந்தார். நான் அவருக்கு உற்சாகமுமளித்தேன். எனினும், நான்தான் அப்பத்திரிகையில் அதிகமாகக் கண்டிக்கப்பட்டு கொண்டிருந்தேன்."

மௌலானு அவர்களைப் பற்றி காலஞ்சென்ற மிஸ்டர் கோபாலகிருஷ்ண கோகலே கொண்டுள்ள அபிப்பிராயத்தைப் பற்றி "இன்கிலாப்" பத்திரிகையின் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதாவது :—

"முஹம்மது அலி இலக்கியம், ராஜியம் முதலியவைகளில் தமக்குள்ள திறமையின் காரணமாக சில ஆங்கிலப் பத்திரிகைகளில் மிகவும் முற்போக்கான வியாசங்களை எழுதிவந்தார். "டைம்ஸ ஆப் இந்தியா," "இன்டியன் எக்ஸ்பிரஸ்", "இன்டியன் ரிவியு" முதலிய பத்திரிகைகளின் பழைய பைல்கள் இதற்கு சாக்ஷியங்களாக இருக்கின்றன. மின்டோ மார்லி சீர்திருத்தம் சம்பந்தமாக மௌலானு அவர்களுக்கும் மிஸ்டர் கோக்கலேக்கும் எழுத்துமூலம் விவாதங்கள் நடைபெற்றன. இவ்விவாதத்தில் மௌலானு அவர்கள் தம்முடைய முழு திறமையையும் காண்பித்தார். மிஸ்டர் கோக்கலேயும்கூட மௌலானு அவர்கள் கூறும் ஆதா

ரங்களையும், பிரசங்க வன்மையையும் ஒப்புக்கொண்டார். லார்டு மின்டோவும் மௌலானு அவர்களின் திறமையைப் பாராட்டினர்."

ஒருகாலத்தில் "பம்பாய் கிரானிக்கல்" பத்திரிகைக்கு டில்லி பதிப்பும் வெளியாகிக்கொண்டிருந்தது. அப்பத்திரிகையின் ஆசிரியர்களின் கூட்டத்தில் ஒருவராக இருந்த மிஸ்டர் எம். என். டே என்பவர் மௌலானு அவர்களின் திறமையையும் வன்மையையும்பற்றி ருசிகரமான ஒரு வியாச மெழுதினர். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"காம்ரேட் பத்திரிகையின் இதழ்களை நன்ருய் வாசிக்காதவர்கள் முஹம்மது அலியின் திறமையின் இரகசியங்களை உணரவே இல்லை என்று கூறவேண்டும். முஹம்மது அலி இத் தேசத்தில் பத்திரிகைத் தொழில் நடத்தும் ஆசிரியர்களில் மிகவும் சிறந்த அறிவாளி. தம்முடைய பேணுவின் மூலம் தம்முடைய இருதயத்திலுள்ளதை அள்ளிக் கொட்டிவிடுகிருர். அத்துடன் அவர் ஹாஸ்யமாகவும், சமிக்ஞையாகவும், பரிகாசமாகவும், குத்துப்பாடாகவும் தமது பத்திரிகையில் கூறும் விஷயங்கள் பத்திரிகைத் தொழில் நடத்துவோருக்கு இனி ஒருகாலம்வரை ரோஷத்தை உண்டாக்கிக்கொண்டே இருக்கும். மக்களின் ராஜிய உணர்ச்சி, அவர்களின் வேலை முறை, அவர்களது இயக்கங்களின் தன்மை ஆகிய இவைகளைப்பற்றிய பிளான் கூறுவதில் முஹம்மது அலிக்கு இரண்டாமவர் கிடையாது. இனி மேலும் அவ்வாறே இருந்து வருவார்."

எழுத்து வேகம்:—விசேஷமான இத்தகைய் நிபுணத்துவம், பாண்டித்துவம், நுண்ணிய அறிவு ஆகியவைகளுடன் முஹம்மது அலியினிடம் மற்ெருரு சக்தியு மிருந்துவந்தது. அதாவது, வேகமாக எழுதும் ஆற்றல். மிகவும் முக்கியமான வியாசங்களையும்கூட அவர் மிகவும் சொற்ப நேரத்தில் பூர்த்திசெய்து விடுவார். "சாய்ஸ் ஆப் தி டர்க்ஸ்" என்ற தலைப்பின் கீழ் அவர் எழுதிய நீண்ட வியாசம் 34 மணி நேரம் உட்கார்ந்த இடத்திலேயே ஒரே முயற்சியில் எழுதப்பட்டது. இவ்வொரு வியாசம் மட்டிலுமில்லை, பெரும்பாலான வியாசங்களை அவர் இம்மாதிரிதான் எழுதிக் கொண்டிருந்தார். அவ்வாறு எழுதும்படி நிர்பந்திக்கப் பட்டு மிருந்தார். அவரிடம் அடிக்கடி பல பெரிய மனிதர்கள் வந்து அவரைக் கண்டு பேசுவதாலும், அவருக்குப் பலமுக்கியமான அலுவல்கள் ஏராளமாக இருந்ததாலும் அவர் சாவதானமாக இருந்து வியாசங்களை எழுதுவதற்கான நேரம் அவருக்கு வாய்ப்பதில்லை.

மீர் மஹ்பூஜ் அலிகான் "ஹம்தர்து", "காம்ரேட்" பத்திரிகாலயத்தில் இருந்த காலத்தில் அவர் கண்ட ஆச்சரிய சமாச்சாரங்களைப்பற்றி பின்வருமாறு நன்கு கூறி இருக்கின்ருர் :—

"முஹம்மது அலிகான் சோம்பேறியல்ல. ஆனல், அசட்டை அதிகம் உண்டு. நிமிஷத்தில் செய்யவேண்டிய வேலைகளை நாள் கணக்காகவும் வாரக் கணக்காகவும்கூடச் செய்து முடிக்கமாட்டார். ஆனல், வேலையைச் செய்ய

ஆரம்பித்து விடுவாராயின் பல வாரங்களில் செய்யக்கூடிய வேலைகளை சில நிமிஷங்களில் முடித்து விடுவார் என்று சொல்வதற்கில்லை யென்ருலும் சில மணி நேரத்துக்குள் நிச்சயமாகச் செய்து முடித்துவிடுவார். அவர் டில்லிக்கு வந்த பிறகு "காம்ரேட்" பத்திரிகை குறித்தகாலத்தில் ஒருநாளும் பிரசுரமாகவில்லை. காலை போஜனத்திற் குப் பின் வியாசம் எழுத உட்காருவார். அதற்குள் எவரேனும் ஒரு நண்பர் வந்துவிடுவார். அப்புறம் பேச்சிலேயே பொழுதுபோய் விடும். பிறகு வெளியிற் செல்லவேண்டிய நேரம் வந்துவிடும். உடனே வெளியிற் சென்றுவிடுவார். சாப்பாட்டு நேரத்தில் திரும்பி வருவார். எங்களுடைய பொறுமை அலம்ப ஆரம்பித்து விடும். வாயில் வந்ததைக் கூற ஆரம்பிப்போம். மறுநாள் காலை நாஷ்டாவுக்கு நாங்கள் உட்காரும்போது, சோத ரீர், கோபம்தணிந்ததா ? ஏன் கோபங் கொள்கிறீர் கள்? வியாசத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறி ஒரு கத்தையை எடுத்து போடுவார். பிரித் துப் பார்த்தால் "காம்ரேட்" பத்திரிகைக்கு அது ருசிகரமான சிறந்த கட்டுரையாயிருக்கும்."

ஐந்தாம் அத்தியாயம்

ஆராய்ச்சிப் பிரியமும் அதிகமாகப் படித்தலும்

முஹம்மது அலிக்கு இறைவன் அபார மூளைச் சக்தியையும், அறிவையும், ஆற்றலையும், ஞாபகச் சக்தியையும் அளித்திருந்தான். ஆனால், இறைவன் அளித்த இக்கொடையுடன் அவர் திருப்தியுற்றிருந்து விடுபவராக இல்லை. தம்முடைய மூளைச் சக்திகளையும் அறிவாற்றல்களையும் எப்பொழுதும் உபயோகத்திலேயே வைத்திருந்து அவைகளைப் பிரகாசிக்கும்படியாகவே செய்துகொண்டிருந்தார்.

பல முறைகளில் அவர் பெரும்பாலானவர்களுக்கு மாறான அபிப்பிராயங் கொள்ளவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது. மாறுபட்ட அபிப்பிராயமும் மதவிஷயத்தில் ஏற்பட்டது. மௌலானா அவர்கள் அறபிக் கல்வி விஷயத்தில் கிட்டத்தட்ட ஒன்றும் அறியாதவரென்றே சொல்லவேண்டும். ஆதலின், அவர் மத விஷயங்களில் அதிகமாகத் தலையிடாமலிருந்து விடுவதுதான் வெளிக்கு யுக்தமாகத் தோன்றிற்று. ஆயினும், அவர் அவ்வாறிருந்துவிடவில்லை.

காஜி அமானுல்லாகான் ஆப்கானிஸ்தானத்தில் ராஜ்யபாரம் செலுத்திவந்தபோது நிஃமத்துல்லா காதியானி என்ற ஒருவர் அத்தேசத்தில் கல்லாலடித்துக் கொல்லப்பட்டார். இதைக் கண்டித்து காதியானிகள் பெருங்கிளர்ச்சியை யுண்டாக்கிவிட்டனர். இந்தியாவில் பல கண்டனக் கூட்டங்களைக் கூட்டித் தீர்மானங்களை

நிறைவேற்றி வைசராய், மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தி பெருமான் ஆகியவர்களுக்கு அனுப்பினர். சர்வ தேச சங்கத்திலும்கூட இவ்விஷயம் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

மற்றொரு பக்கல், இந்தியாவிலுள்ள உலமாக்கள் ஒரு சிறு கியாமத்தை (பெருங் கிளர்ச்சியை) இந்தியாவில் உற்பத்தி செய்து விட்டார்கள். அமானுல்லாகான் செய்த இச்செய்கை சகல விஷயத்திலும் பாராட்டத் தக்கது என்றும், இஸ்லாமிய ஷரீஅத்தில் மிகவும் முக்கியமான கொள்கைப்படி இத்தண்டனை நிறைவேற்றப்பட்டது என்றும் அவர்கள் முடிவு கூறினர். இவ் விஷயத்தில் முஹம்மது அலி கூறிய அபிப்பிராயம் தான் சரியானது; மற்றவர்கள் கூறிய அபிப்பிராயம் சரியன்று என்பதைப்பற்றி நாம் இங்கு விவாதிக்க விரும்பவில்லை. ஆனால், முஹம்மது அலி இவ்விருசாராரும் கூறும் ஆதாரங்களையும் தாவாக்களையும் நன்கு ஆராய்ந்தார். பின்னர் "முர்த்தத்துகளைக் கொலை செய்வது இஸ்லாம் மதத்தில்ஜாயிஸ் இல்லை. ஆனால், குழப்பக்காரர்களைக் கொலை செய்வதை இஸ்லாம் மதம் அனுமதிக்கிறது மாத்திரமின்றி அதைக் கடமையாகவும் ஆக்கி இருக்கிறது" என்று கூறினர்.

இந்த அபிப்ராயத்தை முஹம்மது அலி சமர்ப்பித்தவுடன் எதிர்பார்த்தபடி இதற்கு எதிர்ப்புகளும் உண்டாயின. ஆனால், இவ்வெதிர்ப்புகளையும் ஆக்ஷேபணைகளையும் முஹம்மது அலி லக்ஷியம் செய்யவில்லை. ஏனெனில், அவர் இவ்விஷயத்தில் கொண்டுள்ள அபிப்

பிராயம் அவர் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து முடிவுக்கு வந்ததாக இருக்கிறது. இது சம்பந்த மாக அவர் திரு குர்ஆனின் வசனங்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீதுகள், மார்க்கச் சட்ட நிபுணர்கள் கூறியுள்ள அபிப்பிராயங்கள், இமாம் களின் கருத்துகள், முஜ்தஹிதுகளின் ஆராய்ச்சிகள் ஆகியவைகளிலிருந்து ஒரு பெரும் பொக்கிஷத்தைச் சேகரித்திருந்தார். இப்பிரசினையைப்பற்றி எவருந் துருவி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரப்போதுமான துணை ஆதார ஆதேயங்களை ஒன்று திரட்டி இருந்தார். ஆதலால், அவர் தமது அபிப்பிராயத்தைக் கடைசி வரை வற்புறுத்திக் கொண்டே இருந்தார்.

சாரதா சட்டம்:—சாரதா சட்டத்தை எல்லாருக் கும் முதலில் எதிர்த்தவர் நமதுமௌலானா முஹம்மது அலி தான். இது சம்பந்தமாகப் பல வியாசங்களை எழுதி இச்சட்டத்திலுள்ள ராஜீய முக்கியத்துவத்தையும் மத சம்பந்தத்தையும் முஸ்லிம் பொது ஜனங்களுக்கு விளக் கினார். தமது வழக்கப்படி இந்தச் சட்டத்தை ஆதரிப் பவர்கள், எதிர்ப்பவர்கள் ஆகிய இரண்டு கூட்டத்தாரின் ஆதாரங்களையும், விவாதங்களையும் எடுத்துக் கொண் டார். மதசம்பந்தமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷ யங்களையும் சேகரித்துக் கொண்டார். நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலும், ஸஹாபிகள், தாபியீன்கள் காலத்திலும் நிகழ்ந்த விருத்தாந்தங்களையும் ஒன்று கூட்டினார். பிக்ஹு, ஹதீது ஆகியவைகளிலிருந்தும்

ஒரு பெரும் பொக்கிஷத்தைத் தம் முன் வைத்துக் கொண்டார். இதற்குப் பிறகு இச் சட்டத்தை மிகப் பலமாக எதிர்த்தார். ஒவ்வொருவரிடமும் இது சம்பந்தமாகத் தக்க வாதம் புரிந்தார், வியாசங்கள் எழுதினார். ஜனங்களைத் தம் சார்பில் சேர்க்க முயன்று, பெரும் அளவிற்கு இதில் வெற்றி பெற்றார்.

தேவ் பந்து சம்பவம்:—காட்டில் ஓரிடத்தில் ஏதேனும் ஒரு சம்பவம் நிகழுமாயின் பத்திரிகைக்காரர்கள் பெரிய கொட்டைஎழுத்துக்களால் தலைப்புகள் கொடுத்து விஷயங்களைப் பெருக்கி எழுதிவிடுவது இக்காலத்தில் சகஜமாகஇருக்கிறது. அத்துடன் இவர்கள் தங்களது சமூகத்திற்கும் ஜனத்திற்கும் அபிமானமும் அனுதாபமும் கொண்டவர்கள் என்பதையும் காண்பித்துக்கொள்வதும் அவர்களது வழக்கமாயிருக்கிறது. தேவ் பந்து மத்ராஸாவில் வேலை நிறுத்தம் நடந்தது. பல பத்திரிகைகள் தேவ் பந்து மத்ராஸாவின் நிர்வாகிகளை ஆதரித்துக் காரியதரிசியைக் கண்டித்தன. சில பத்திரிகைகள் காரியதரிசியை ஆதரித்து நிர்வாகிகளைக் கண்டித்தன.

ஆனால், மௌலானா முஹம்மது அலி அவ்வாறு செய்யவில்லை. இவ்விஷயத்தில் தமது பொறுப்பை உணர்ந்தார். தமக்குள்ள முக்கிய அலுவல்களையும் காரியங்களையும் கூடக் கவனிக்காமல் நேராக தேவ் பந்து சென்றார். அங்குள்ள விஷயங்களை நேரில் கவனித்தார். இரு கக்ஷியினரையும் கண்டு கலந்து அவர்களது அபிப்பிராயங்களைத் தெரிந்தார். இவ்விரு கக்ஷியாரிடமிருந்தும் எழுத்து மூலம் அவரவருடைய

கோரிக்கைகளை எழுதித் தரும்படி வாங்கிக் கொண்டு அவைகளைப் படித்தார். பிறகு, "ஹம்தர்து" பத்திரிகையில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். இன்னமும் அப்பத்திரிகையின் ரிக்கார்டுகளில் இந்தக் கடிதங்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

இது நமதுமுஹம்மது அலியின் உண்மையை உணரும் ஆராய்ச்சி முறையாகவும், தமது கடமையைச் சரியாக நிறைவேற்றும் பொறுப்பாகவும் இருந்தது. இவர் ஆங்கில பாஷையில் வியாசம் எழுதுவதிலும், சரித்திரசம்பந்தமான நுட்பங்களைக் கூறுவதிலும், நிகரற்ற வல்லுனராக இருந்தார் என்பது உலகப் பிரசித்தம். ஆனால், அவருக்கு விசேஷ சம்பந்தமில்லாத விஷயங்களிலும், அல்லது விசேஷமாக அவர் சிரத்தை கொண்டு தயாராகாத விஷயங்களிலும்கூட அபிப்பிராயங் கூறுவதில் அவர் எல்லோருக்கும் முதல் அந்தஸ்திலேயே இருந்து வந்தார்.

புராக் ஷரீப் அல்லது ஒப்பாறிச்சுவர்:—பாலஸ்தீனத்தில் சென்ற கி. பி. 1928-ம் வருஷத்தில் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கு மிடையில் ஒப்பாறிச்சுவர், புராக்ஷரீப் ஆகியவைகள் சம்பந்தமாக ரத்தப்பழி ஏற்பட்டது. அதுபோழ்து மௌலானு முஹம்மது அலி நோய்வாய்ப்பட்டிருந்தார். ஒரு அலுவலின் நிமித்தமாக அவர் பம்பாய்க்குச் சென்றிருந்தார். அதுவும் தமக்கு வயித்தியம் செய்துகொள்ளும் அலுவலாகத்தான் இருக்கவேண்டும். ஒரு பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டிகண்டு இப் பிரசினை சம்பந்தமாக அவ

ருடைய அபிப்பிராயம் என்னவென்று விசாரித்தார். மௌலானா அவர்கள் தங்களுடைய முடிவான அபிப் பிராயத்தைப் பின்னர் வெளியிட்டார். ஆயினும், நோயாளியாக இருக்கும்போது, இப் பிரசினையைப் பற்றி சிந்திக்கவோ அல்லது பத்திரிகைப் பிரதிநிதி களுக்கு விஷயத்தைக் கூறவோ சக்தியற்றிருக்கும் நிலைமையில் அந்தப் பிரதிநிதிக்கு அவர் அளித்த விவ ரம் மிகவும் ஆதாரமுள்ளதாகவும், சரித்திர பூர்வமான தாகவும் இருந்தது. அன்று அவர் கொடுத்த பேட்டி என்றும் இந்தியச் சரித்திரத்தில் இருந்துவரும்.

ஆகவே, நமது மௌலானாவுக்கிருந்த இவ் விசேஷ ஆற்றல்பற்றி படித்த வகுப்பார் அவரிடமிருந்து கல்வி சம்பந்தமான ஊழியங்களைச் செய்வித்தல் வேண்டும் என்ற ஆர்வங் கொண்டவர்களாக இருந்தனர்.

உருது என்ஸைக்கிளோபீடியா:—ஒரு காலத்தில் மஹ்மூதாபாத் மகாராஜா கல்விக்கு மிகவும் ஊழியம் புரிபவராக இருந்தார். உருது என்ஸைக்ளோபீடியா எழுதுவதற்காகத் தமது சொந்தப் பணத்திலிருந்து ஒரு லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுப்பதாக முன் வந்தார். இதற்கான முன் ஏற்பாடுகளும், அத்தியாயங் களும், பிரிவுகளும்கூட ஒழுங்கு செய்யப்பட்டன. இந் நூலை இயற்றும் பொறுப்பு மௌலானா ஸெய்யித் சுலை மான் சாகிப் நத்வி, மௌலானா அப்துல் மாஜித் சாகிப் பி. எ. தர்யாபாதி ஆகிய இரு கனவான்களிடமும் ஒப்பு விக்கப்பட்டிருந்தது. ஆனால், இவ்வேலை முற்றுப் பெறாமல் நின்றுவிட்டது வருந்தத்தக்க விஷயமாகும்.

இதற்காக நவாப் இமாதுல் முல்க், ஸர். அப்துர் ரஹீம், ஸர். ஸாப்ரே, ஸர். இக்பால், ராஸ்மஸ்ஊத் முதலிய பிரபல அறிஞர்களைக்கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது. அக்கமிட்டியில் நமது மௌலானா முஹம்மது அலியும் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார். இதில் மௌலானாவின் பெயரைச் சேர்த்துக்கொண்டது மட்டுமின்றி இவ்வேலையில் அவர் நேரடியாகக் கலந்து பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்பதாகவும் அவரை அழைத்தார்கள். இது சம்பந்தமாக மௌலானா முஹம்மது அலி அவர்களுக்கு மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதி எழுதிய கடிதம் வருமாறு :—

"உருது என்ஸைக்கிளோபீடியா இயற்றுவதற்காகப் பத்திரிகையில் வெளியான அறிக்கைகளைத் தாங்கள் படித்திருப்பீர்கள். இதில் தங்களுடைய பங்கு எவ்வளவு இருக்கும் என்பதைத் தாங்கள் அறிவியுங்கள். தங்களுடைய பெயரை ஆலோசனைக் கமிட்டியில் சேர்த்துக்கொண்டிருக்கிறோம். ஆயினும், தாங்கள் எவ்விஷயத்தைப் பற்றி எழுத விரும்புகிறீர்களோ அதை நாங்கள் மிகவும் சந்தோஷமாகவும் கண்ணியமாகவும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதற்கென்றேற்படுத்தப்பட்ட ஆலோசனைச் சபையில் தாங்கள் கலந்துகொள்வது மட்டிலும் போதாது, தாங்கள் இதில் அதிகம் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். சரித்திரம், இலக்கியம், பத்திரிகைத் தொழில் போன்றவைகளில் தாங்கள் எதை

விரும்புகிறீர்களோ அதைப்பற்றித் தாங்கள் எழுதலாம்.”

மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதியைப் போல் மௌலானா ஸெய்யித் சுலைமான் சாகிப் நத்வியும் ஒரு கடிதம் எழுதினார். அதுவருமாறு:—

“நான் தற்போது ஒரு சுய நலத்தினால் தங்களிடம் பிரசன்னமாகி இருக்கிறேன். தாங்கள் பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்தபோது தாங்கள் ஏதேனும் அறிவு சம்பந்தமான பணியில் இறங்கி இருந்தீர்களா என்பதை அறிவியுங்கள். இக் கேள்விக்குத் தாங்கள் எனக்கு அவசியம் பதில் கூறவேண்டும். விசேஷமான ஒரு அவசியம் நேர்ந்துள்ளது. தாங்கள் *ஸீரத்துநபவியைப் படித்திருக்கக் கூடும். அதைப்பற்றித் தாங்கள் என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிறீர்கள்? அதில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் யாவை?”

* ஸெய்யிது சுலைமான் நத்வியால் வெளியிடப்பட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஜீவிய சரித்திரம்.

ஆறும் அத்தியாயம்

தலைமைப் பதவி

நமது மௌலானுவிற்கு கல்வி கேள்விகளில் யாவரும் மெச்சத்தக்க திறமைகள் இருந்தது மட்டுமில்லாமல், அவரை ஆதரிப்பவர்களும், எதிர்ப்பவர்களும் கூட அவரது தலைமைத் தனத்தையும் வழிகாட்டும் ஆற்றலையும் ஒப்புக்கொண்டிருந்தனர். முஹம்மது அலியின் தலைமைத்தனமில்லாமல் இவ்வியக்கம் வெற்றியடையாது என்று ஒவ்வொருவரும் தம் இயக்கத்தைப் பற்றிக் கருதி இருந்தனர். நமது மௌலானு முதல்முதலாகக் கல்வி ஊழியத்தில் பிரவேசித்து, "காம்ரேட்" பத்திரிகையை துவக்கித் தமது அபிப்பிராயங்களை வெளியிட ஆரம்பித்த மாத்திரத்திலேயே விஷயமுணர்ந்தவர்கள் "இன்றில்லையேனும் இனி ஒருநாளில் இவர் ராஜீயம், பத்திரிகைத் தொழில் ஆகிய உலகத்திற்கு சந்திர சூரியனுக இலங்குவார்" என்று உணர்ந்து கொண்டனர். இவரைப் பாமர ஜனங்கள் மட்டும் இவ்வாறு கருதவில்லை. பிரபல தலைவர்களுங்கூட இவரைப்பற்றி இவ்விதமான அபிப்பிராயங்கொண்டு தங்களுடைய முறையீடுகளை அவரிடம் கூறுபவர்களாக இருந்தனர். அலிகார் முஸ்லிம் கல்லூரியை ஸ்திரப்படுத்தும் விஷயத்திலும், முஸ்லிம் லீக் ஸ்தாபனவிஷயத்திலும் நவாப் வகாறுல் முல்கு இவரைத்தமது வலது கையாகப் பாவித்தார். இந்தியாவில் "மதீனு சர்வ

கலாசாலை" என்ற பெயரால் ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபிக்க வேண்டுமென்ற இயக்கம் கற்றோரிடமிருந்து தோன்றியபோது, அச் சர்வகலாசாலைக்குப் போதனு முறைத் திட்டமேற்படுத்தவும், சட்ட திட்டங்களேற் படுத்தவும் வேண்டிப் பல தலைவர்களும் மௌலானு அவர்களை நாலா பக்கங்களிலிருந்தும் அழைத்தனர்.

மௌலானு ஷிப்லீ அவர்கள் தம்முடைய அருமை மாணவரான முஹம்மது அலியை தமது நோக்கமே உருவாயமைந்தவர் என்று கருதிவந்தார். மௌலானு ஹமீதுத்தீன் பராஹீ எந்நேரமும் இவரது சமூகத்தி லிருப்பதற்குத் தயாராக இருந்தார். டாக்டர் ஸர். முஹம்மது இக்பால் சகல விஷயத்திலும் இவரை முற் படுத்தத் தயாராக இருந்தார். ஆகவே, "காம்ரேட்" பத்திரிகையின் இவ்வாலிப ஆசிரியர் இத்தலைவர்களனை வருக்கும் மத்தியஸ்தானமாக அமைந்திருந்தார். பிரபல கவியாகிய மௌலானு ஹாலீ தம்முடைய தள்ளாத வயதில் இவருக்கு எழுதிய ஒரு கடிதத்தை இவ்விடத் தில் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். அக்கடிதம் வருமாறு :—

"அருமையான ஹபீபே! நான் இப்பொழுது மிகவும் பலஹீனமடைந்துவிட்டேன். எழுது வதையும் படிப்பதையும் முற்றிலும் விட்டுவிட் டேன். ஆனல், சில அவசியங்கள் என்னை இவ் வேலையில் நிர்ப்பந்திக்கின்றன. என்னுடைய சக்திக்குமேல் அதிகமாக நான் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. தற்போது ஆக்ரா

மெடிகல் டிபார்ட்மெண்டில் முஸ்லிம்களுக்கு விரோதமான உணர்ச்சி பரவி இருப்பதைப்பற்றிக் கவனம் செலுத்துமாறு தங்களை கேட்டுக்கொள் கிறேன். தாங்கள் உண்மைச் சமாசாரத்தைக் கண்டுபிடித்து சத்தியத்துக்கு உதவி புரிவீர்க ளென்றும், மிக நேர்மையாகவும், சரியாகவும், ஒழுங்காகவும் உங்கள் காரியத்தை நீங்கள் செய்வீர்களென்றும் நம்புகிறேன்."

மௌலானு அபுல்கலாம் ஆஜாத் நமது முஸ்லிம் சமூகத்தின் நாடியை பார்க்கும் பெரியராகவே எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறுர். ஒரு காரியம் நிகழ்வதற்கு முன்பே அவர் வரும்பொருள் உரைப் பார். அக்காலத்தில் முஸ்லிம் லீக்கைப்பற்றிய பிர சினைதான் மிகவும் முக்கியமான விஷயமாக இருந்தது. இதைப்பற்றி நமது மௌலானுவிற்கு அவர் எழுதிய கடிதம் வருமாறு :—

"அல்லாஹுதஆலா சிறந்த பத்திராசிரிய ருக்கு இருக்கவேண்டிய சக்தியைப் பார்க்கினும் அதிகமான சக்தியை தங்களுக்கு ஏற்படுத்தி வைத்திருக்கிறுன். நீங்கள் உங்களது சக்திகளை உபயோகிக்காமலிருப்பது பெரும் அநீதியாகும். தங்களை மகாஜனங்கள் கட்டாயப்படுத்தி பிரசி டெண்டாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பது தான் என் அபிப்பிராயம். நான் இதைப்பற்றி விவரமாக எழுதுவேன். முஸ்லிம்களின் புதிய ராஜீயவாழ்வை அமைப்பதில் தங்களைப் பார்க்கி

னும் அதிக அருகதை யுள்ளவர் வேறு யாரு மில்லை என்று நான் எப்பொழுதும், நீங்களில்லாத காலத்திலும், கூறி வந்திருக்கிறேன்.''

இந்த நிலைமை மௌலானா முஹம்மது அலி அவர்கள் ஜனங்களின் பார்வையில் மதிக்கத் தக்கவராக இருந்த காலத்தில் உள்ள நிலைமையாகும். பின்னர் அவர் பீஜப்பூர் சிறைச்சாலையிலிருந்து விடுதலை யடைந்த பின் அவருக்கு விரோதிகளும் சதிகாரர்களும் அதிகமாகப் பெருகிவிட்டனர். இந்தியாவில் தப்லீக், தன்ஜீம் இயக்கங்கள் ஒரு புறமும், சுத்திசங்கடன் இயக்கங்கள், மற்றொரு புறமும் தாண்டவமாடின. சுல்தான் இப்னு சுஊது ஹிஜாஸ் தேசத்தைக் கைப்பற்றி அங்குள்ள புராதன ஞாபகச் சின்னங்களையும் மஜார்ஷரீபு (கப்று)களையும் இடித்துத் தள்ளியபோது இந்தியாவில் அஹ்லஹதீது ஜமாஅத்தார்களுக்கும், ஸுன்னிமுஸ்லிம்களுக்குமிடையில் பெருங் கிளர்ச்சியும் கலக்கமும் ஏற்பட்டது. பின்னர், ராஜ்பால் எழுதிய 'ரங்கேலா ரஸூல்' என்ற புஸ்தகம் சம்பந்தமாகக் குழப்பமேற்பட்டது. இப்பிரசினைகளில் நமது மௌலானா சுயேச்சையான அபிப்பிராயந் தெரிவித்ததால் முஸ்லிம்களிடத்திலேயோ ஹிந்துக்களிடத்திலேயோ நல்ல கீர்த்தி வாங்கிக் கொள்வதற்கிடமில்லை. இருதரத்தாரும் இவரைத் தூஷிக்கவும் எதிர்க்கவும் செய்தனர். பின்னர், காங்கிரஸ் மகாசபையையும் எதிர்க்க வேண்டியதாயிற்று. இவ்வித நிலைமையில் முஸ்லிம்பத்திரிகைகள், ஹிந்துபத்திரிகைகள், ஆங்கிலோஇந்திய

பத்திரிகைகள் ஆகிய எல்லாப் பத்திரிகைகளும் ஒவ்வொரு காரியார்த்தமாக நமது மௌலானுவிற்கு விரோதமாக இருந்து வந்தன. ஆயினும், அவர் மனந்தளர்ந்து விடவில்லை. அனைத்தையும் மிக வீரதீரமாக எதிர்த்து உறுதியுடன் நின்றார்.

இது மட்டுமா? நமது மௌலானுவைத் தூஷித்தவர்களும், விரோதமாகப் பேசியவர்களும், எதிர்த்தவர்களும் பின்னர் அவரிடமே சரணடைந்து தங்களுக்கு வழி காட்டும்படி அவரை வேண்டிக்கொள்ள வேண்டியதாக ஏற்பட்டது. ஆகவே, இது சரித்திரத்தில் மிகவும் ஆச்சரியமும் நூதனமுமான சம்பவமாகும். ஜனங்கள் நமது மௌலானுவிற்கு விரோதமாகவும் நடந்து கொண்டனர். அவரது எண்ணம் சரியன்று என்றுங் குறை கூறினர். முஸ்லிம் சமூகத்துக்கு அவர் ஆபத்தை விளைவிக்கக்கூடியவர் என்றுங் கருதினர். ஆனாலும், அவரது தலைமைத்தனத்தை அவர்கள் அலக்ஷியம் செய்யவில்லை.

பஞ்சாப் சம்பவம்:—ராஜ்பால் எழுதிய "ரங்கேலாரஸூல்" என்ற புத்தகத்தைப்பற்றி முஸ்லிம்களிடை கொதிப்பு ஏற்பட்டிருந்த காலத்தில் அவ்வழக்கை விசாரணை செய்து ராஜ்பாலை விடுதலை செய்த லாகூர் ஹைகோர்ட் ஜஸ்டிஸ் தூலிப் சிங்கைப்பற்றி பஞ்சாப் தலைவர்கள் ஆத்திரமடைந்தனர். தூலிப்சிங் ராஜீநாமா கொடுத்துவிட வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்தனர். இதனையொட்டி "முஸ்லிம் ஔட் லுக்" பத்திரிகையின் ஆசிரியரான, ஜனுப் அப்ஸாலை அரசாங்கத்தார் தண்டித்

தனர். இதன்பேரில் பஞ்சாப் முழுவதிலும் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. பஞ்சாபிலுள்ள மற்றொரு தலைவர் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கும் வேலையைச் செய்து வந்தார். இவரையும் அரசாங்கம் கைது செய்தது. தற்செயலாக இக்கிளர்ச்சியும் அடங்கிவிட்டது. இத் தலைவரின் புதல்வர் லாகூரிலிருந்து டெலிபோன் மூலமாக நமது மௌலானா முஹம்மது அலியை அழைத்து "தாங்கள் லாகூருக்கு வந்து எங்களுக்கு வழி காட்ட வேண்டும். கண்ணியம் பொருந்திய தந்தை அவர்கள் கைதுசெய்யப்பட்டது சம்பந்தமாக நீங்கள் காட்டும் வழியின் மூலம் நாங்கள் பிரயோஜனமடைய விரும்புகிறோம்" என்று வேண்டிக் கொண்டார்.

இந்தப் பெரியார் கைது செய்யப்படுவதற்கு முன், மௌலானா முஹம்மது அலியைப் பன்முறையும் தொடர்ச்சியாகத் தமது பத்திரிகையின் மூலம் தாக்கி, "முஹம்மது அலிக்கு ஏற்பட்டுள்ள நீர் ரோகமானது அவருடைய மூளை சக்தியைக் கெடுத்துவிட்டது" என்று கூறிவந்தார்.

ஸைமன் கமிஷன் :—ஸைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தகாலத்தில் பஞ்சாபிலுள்ள சுயேச்சை வாதிகள் நமது மௌலானாவிற்கு விரோதமாக இருந்தும், அக்கமிஷன்பகிஷ்காரம் சம்பந்தமாக அவர் உதவியை விட்டு தேவையற்றிருக்கவில்லை. பஞ்சாபிலிருந்த சுயேச்சை வாதிகளுக்கு தலைமை ஸ்தலமாக இருந்த லாகூரில் காலஞ்சென்ற ஸர். ஷாபி முஹம்மது அவர்கள் இருந்துகொண்டு முஸ்லிம் லீக்கை இரண்டு

பாகமாகப் பிரித்துப் பிளவை உண்டுபண்ணிவிட்டார். முஸ்லிம் லீக்கின் ஒரு கக்ஷி, மகாநாட்டை லாகூரில் கூட்டும்படி செய்து அதற்கு அவரே தலைமையும் வகித்தார். ஸைமன் கமிஷனுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று அம்மகா நாட்டில் தீர்மானமும் நிறை வேற்றுவித்ததுடன், ஸைமன் கமிஷன் நியமனத்தை வெறுப்பதாக வாயளவில் ஒரு தீர்மானத்தை மட்டும் நிறைவேற்றுவித்தார்.

ஆகவே, ஸர் ஷாபி முஹம்மதை மௌலானா முஹம்மது அலி பகிரங்கமாக அறைகூவி அழைத்த துடன் பஞ்சாபிலுள்ள ஏனைய ஸர் பட்டதாரிகளையும் வாதுக்கழைத்தார். பஞ்சாப் மாகாணமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து ஸைமன் கமிஷனுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து ஜனங்களிடம் ஸைமன்கமிஷனைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்ற உணர்ச்சியை உண்டுபண்ணினார். அக்காலத்தில்தான் பஞ்சாபிலுள்ள ஒரு வர்க் கத்தார் முஹம்மது அலி தமது செல்வாக்கை இழந்து விட்டார் என்றும், பைத்தியக்காரர் என்றும் கருதிக் கொண்டிருந்தனர்.

மற்றொரு சம்பவம் :—ராஜ்பாலைக் குத்திக்கொன்ற இல்முத்தீனை மியான்வாலி சிறையில் தூக்கிவிட்டு அச் சிறையிலேயே அவரை அடக்கமும் செய்துவிட்டார்கள். அவரது உடலத்தை லாகூருக்குக் கொண்டுவந்து ஜனஸாத் தொழுகையை நிறைவேற்றி ஊர்வலமாகக் கொண்டுபோய் அடக்கவேண்டும் என்பது லாகூர் முஸ் லிம்களின்விருப்பம். இதனால், ஹிந்து முஸ்லிம்வகுப்புக்

கலகம் ஏற்படும் என்று பஞ்சாப் கவர்ன்மெண்டார் முஸ்லிம்களின் கோரிக்கைக்கு இணங்கவில்லை. முஸ்லிம்கள் செய்த முயற்சி யொன்றும் பலிக்கவில்லை. இதனால் பொதுஜனங்களிடம் அரசாங்கத்தின்மீது ஆத்திரமும் கோதிப்பும் உண்டாயிற்று. இதற்காகச் சகல தியாகத்தையும் செய்யப் பின் வாங்குவதில்லை என்றுந் துணிந்தனர். ஆனால், இக்காரியத்தில் யாரைத் தலைவராக நியமித்துக் கொள்வது என்ற பிரசினை யுண்டாயிற்று. லாகூரோ தலைவர்கள் மிகுந்த ஸ்தலம். அவ்வாறிருந்தும் மௌலானா முஹம்மது அலியின்மீதே எல்லோருடைய திருஷ்டியும் விழுந்தது. மௌலானாவை எதிர்த்துப் பிரசாரம் செய்வதிலும், தூற்றுவதிலும் முன்னணியில் இருந்து வந்த எல்லாத் தலைவர்களும் மௌலானாவைத் தலைவராக நியமித்து, அவருடைய கட்டளைப்படி நடந்து கொள்ளத் தாங்களாகவே முன் வந்தனர். அப்படிப்பட்ட விரோதத் தலைவர்களில் கீர்த்தி பெற்ற ஒருவர் இது சம்பந்தமாக மௌலானாவை வேண்டிக் கொள்ளும்போது எழுதிய நிரூபத்தின் ஒரு பாகம் பின் வருமாறு :—

"இப்பொழுது நிலைமை மிக நெருக்கடியாக இருக்கிறது. மிக செல்வாக்கும் அந்தஸ்துமுள்ள எல்லா ஊழியர்களும் தங்களுடைய ஆலோசனைகளைக் கேட்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றனர். தங்களுடைய ஆலோசனையின்படி புரோகிராம் தயார் செய்யவேண்டுமென்றும் தங்களுடைய தலைமைத் தனத்தின் கீழில் இம்முக்கிய

காரியத்தைநிறை வேற்றவேண்டுமென்றும் விரும்புகிறார்கள்."

ஒரு பாரிஸ்டரின் அபிப்பிராயம்:—அலஹாபாத்திலுள்ள ஒரு பாரிஸ்டர் சென்ற ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றி மௌலானாவுக்கு எழுதிய நிருபத்தில் குறிப்பிட்டிருப்பது வருமாறு:—

"நான் இதுவரை வக்கீல் தொழிலை விடவில்லை. இவ்வியக்கத்தில் சிறிது பங்கெடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், தாங்கள் என் முன் வந்து விட்டால் நான் வக்கீல் தொழிலை முற்றிலும் உதரித் தள்ளிவிட்டு பகிரங்கமாக போர்க்களத்தில் இறங்கிவிடத் தயாராக இருக்கின்றேன்."

ஜௌஹர்லால் அபிப்பிராயம்:—சென்ற சட்ட மறுப்பு இயக்க காலத்தில் காங்கிரஸ் மகாசபையின் ஊர்வலங்களிலும் கூட்டங்களிலும் முஸ்லிம்கள் கலந்து கொள்வதை நமது தலைவர் மௌலானா விலக்கியபோது பண்டிட் ஜௌஹர்லால் நேரு தம்முடைய ஒரு பிரசங்கத்தில் மௌலானாவைப்பற்றிக் குறிப்பிட்டது வருமாறு:—

"நான் இந்த வீரத் தலைவரை அதிகம் மதிக்கிறேன். இந்தியாவின் விடுதலைக்காக அவர் செய்திருக்கிற தியாகங்களும், ஆற்றிய அருந் தொண்டுகளும் இந்தியாவின் சுதந்திரச் சரித்திரத்தில் தங்க மை கொண்டு, எல்லாவற்றிற்கும் மிகவும் முக்கியமான இடத்தில் எழுதப்படும்."

காந்திஜீயின் அபிப்பிராயம்:—காந்திஜீ உப்புச் சட்டமறுப்புச் செய்ய முடிவு செய்திருந்தபோது

அவரது பக்தர்களிலொருவர் "யங் இந்தியா" பத்திரிகையில் காந்திஜியிடம் "அலி சகோதரர்களின் கூட்டுறவு இல்லாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறீர்களா?" என்று வினவி இருந்தார். அதற்கு காந்திஜீ பதில் கூறுகையில் "இல்லை! அலி சகோதரர்கள் இன்று நம்முடன் ஒத்துழைப்பார்களாயின் நமது இயக்கத்துக்கு எத்தனையோ மடங்கு அதிக பலம் உண்டாகிவிடும்" என்று எழுதினார். மௌலானா ஷௌகத் அலியைப்பற்றி காந்திஜீ அது போழ்து "அவர் என்னை தமது ஜோபியிலிருந்து வெளியில் எடுத்தெறிந்து விட்டார்" என்று வருத்தத்துடன் பன்முறையும் கூறி இருக்கிறார்.

இவ் வபிப்பிராயங்களைக் கூறிய இத்தலைவர்கள் அரசாங்க உத்தியோகம் பார்க்காதவர்கள். இவர்கள் ஒரு காலத்தில் மௌலானாவின் சகஊழியர்களாகவும் இருந்தவர்கள். இவர்கள் மட்டும்தான் இப்படிப்பட்ட அபிப்பிராயங் கொண்டுள்ளார்களென்று நினைக்கவேண்டாம். உத்தியோகவர்க்கத்தைச் சேர்ந்தவர்களுங்கூட மௌலானாவின் திறமையையும் வல்லமையையும் பாராட்டிப் போற்றி இருக்கிறார்கள். உத்தியோகவர்க்கத்தாரில் நாம் ஒரு கண் பார்த்தால் ஸப்ஜட்ஜாக உள்ளவர்கள் தங்கள் சீப்ஜட்ஜுகளைப்பற்றி மௌலானாவிடம் முறையிட்டுக் கொள்வதையும், கலெக்டர்கள் மௌலானாவின்பால் தங்களுக்குள்ள மரியாதையைச் சமர்ப்பித்துக் கொள்வதையும் கண்டு கொள்ளலாம்.

ஒரு இந்திய மாகாண கவர்ன்மெண்டின் ஹோம் மெம்பர் ஒருவர்:—வட்டமேஜை மகாநாட்டில் நமது மௌலானா முஹம்மது அலி அவர்கள் அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டபோது மௌலானாவைப் பற்றிக் கூறி யிருப்பது வருமாறு:—

"முஸ்லிம் சமூகத்தாரின் எண்ணமெல்லாம் எப்பொழுதும் அவர் பக்கலே சேர்ந்திருந்தது. இந்த முக்கியமான மகா நாட்டில் அவரது சமூகத்தார் அவர் போன்ற செல்வாக்கும் திறமையும் பெற்றவர்களின் தலைமைத் தனத்தை இழக்காமல் இருந்துவிட்டதற்கு இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்."

இதே ஹோம் மெம்பர் மற்றொரு சந்தர்ப்பத்தில் மௌலானா முஹம்மது அலியை நோக்கி:—

"லார்டு இர்வினிடம் ஒரு தூதுவக் கோஷ்டி செல்லவேண்டியது அவசியமாக இருக்கிறது. இக் காரியம் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கலந்து ஆலோசனை செய்யாமல் முடிவுபெற வழியில்லை. ஆதலால், உங்களால் சாத்யமான முறையில் வைஸிராயைப் பேட்டிகாண முன்வரும்படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று மொழிந்திருக்கிறார்.

அஸம்ப்ளி மெம்பர்:—நபிமார்களையும் மதத் தலைவர்களையும் இழிவுபடுத்திக் கூறுவதையும் எழுதுவதையும் தடுப்பது சம்பந்தமாக மத்திய அஸம்ப்ளியில் கேள்வி கேட்க, இந்தியா சட்டசபையிலுள்ள பிரபல அங்கத்தினர் ஒருவர் விரும்பினார். ஆனால், அந்தக் கேள்வியை

நமது தலைவர் மௌலானா எழுதிக் கொடுக்கவேண்டும் என்பது அவரது விருப்பம். இதைப்பற்றி அவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், "நான் இந்தியா சட்ட சபையின் அடுத்த கூட்டத்தில் இது சம்பந்தமாகச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். எந்தெந்தக் கேள்விகள் கேட்பது பொருத்தமாக இருக்கிறது என்று தாங்கள் அபிப்பிராயப்படுகிறீர்களோ அதன் காப்பி ஒன்றை எனக்குக் கூடிய சீக்கிரத்தில் அனுப்பினால் நான் அவைகளை அஸம்ப்ளிக்கு அனுப்பிவைக்கச் சௌகரியமாக இருக்கும்" என்றெழுதியிருக்கிறார்.

டில்லியில் பிரசுரமாகிக் கொண்டிருந்த மௌலானா அவர்களின் "ஹம்தர்து" என்ற உருது தினசரி பத்திரிகை நிறுத்தப்பட்டபோது, மௌலானா அவர்களின் கடைசி காலத்தில் அவருக்குக் கடும் விரோதியாயிருந்த ஹிந்து வாரப்பத்திரிகை ஒன்று அப் பத்திரிகையைக் குறித்து பின்வருமாறு எழுதிற்று :—

"மௌலானா முஹம்மது அலியின் 'ஹம்தர்து' பத்திரிகை பணமுடையினால் கடைசி மூச்சில் இருந்துகொண்டிருக்கிறது. இது நின்றுவிட்டால் இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் வெட்கமடைய வேண்டும். மௌலானா முஹம்மது அலி சுதந்திரம், சுயேச்சை என்ற வழியில் செல்லாமலிருந்துவந்தால் இன்றையதினம் அவர் வைசிராயின் நிர்வாக சபை மெம்பராகவோ அல்லது ஒரு மாகாண முதன் மந்திரியாகவோ இருப்பார் என்பதில் ஐயமில்லை. சுயேச்சையுள்ள

ஒரு தேசத்தில் இந்த நமது முஹம்மது அலி பிறந்திருப்பாராயின் இன்று அவருடைய அந்தஸ்து எகிப்து ஜக்லுல் பாஷாவுடையவும், ஜெர்மனியின் வான்ஹின்டன்பர்கினுடையவும் அந்தஸ்துக்குக் குறைவாக இருக்காது."

பிரீம்சந்த் என்பவரது கடிதம்:—முஸ்லிம் ஸ்ரீமான்களின் இருதயங்களில்மட்டும் மௌலானுவின்பால் பற்று ததும்பிக்கொண்டிருக்கவில்லை. விஷயமுணர்ந்த ஹிந்துக்களும் முஸ்லிம்களைப் போலவே மௌலானு அவர்களைக் கண்ணியமாக மதித்து நடந்துகொண்டனர். இது சம்பந்தமாக இந்தியாவில் பிரக்கியாதி பெற்ற நாவல் ஆசிரியரான ஸ்ரீமான் முன்ஷி பிரீம்சந்த் என்பவர் எழுதிய கடிதத்தை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும்:—

"தங்களுடைய அபிப்பிராயங்களை அதிகமாக வியாபிக்கும்படிச் செய்ய நான் ஹிந்தி பாஷையில் "ஹம்தர்து" என்ற பெயரால் ஒரு வாரப் பத்திரிகையைப் பிரசுரித்தால் தாங்கள் அதை ஆதரிப்பீர்களா? மகாத்மா காந்திக்குப் பிறகு என் இருதயத்தில் தங்கள் மதிப்புதான் இருந்து வருகிறது. தங்கள்பால் நான் கொண்டுள்ள அபிப்பிராயத்தை இன்று வெளியாக்கியும் விட்டேன்."

ருஷிய சோவியத் அழைப்பு:—மௌலானு அவர்களுக்கு இந்தியாவில் மாத்திரம் தான் இத்தகைய மரியாதையும் கண்ணியமும் இருந்தது என்பதல்ல. இந்தியாவுக்கு வெளியிலும் பல்வேறு தேசங்களிலும்

அவர்பால் பல பெரியார்கள் அன்புகொண்டிருந்தனர். ரஷ்ய சோவியத் அரசாங்கத்தில் பத்தாவது வருஷாந்தர விழாவின்போது மௌலானு அவர்களுக்கு அடியிற் கண்ட தந்தி அனுப்பப்பட்டது:—

"ருஷியாவுக்கும் இதர தேசங்களுக்கு மிடையில் உள்ள தௌத்திய சம்பந்தத்தை அபிவிருத்தி செய்யும் சங்கம் தங்களை ருஷியாவுக்கு வந்து சோவியத் அரசாங்கத்தின் பத்தாம் ஆண்டு பூர்த்தி விழாவில் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறது; அக்டோபர்மீ 30-உ மாஸ்கோவில் ஷெ சங்கம் தங்களை விருந்தாளி என்ற முறையில் வரவேற்கும். தாங்கள் இஷ்டப்படின், தாங்கள் மாஸ்கோவில் தங்கியிருக்கும் காலத்திலேற்படும் சகல செலவுகளையும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறது. தாங்கள் இதை அரசாங்க அழைப்பு என்று மதியுங்கள். தாங்கள் அவசியம் வருவீர்களென்று எதிர்பார்க்கிறோம்."

மௌலானு முஹம்மது அலி அவர்களுக்கு ருஷியாவில் மாத்திரம் இவ்வளவு மதிப்பு இருந்தது என்பதில்லை. ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆசியா ஆகிய கண்டங்களிலுள்ள பல தேசங்களிலும் அதிக மதிப்பும் செல்வாக்குமிருந்தது. மௌலானு அவர்கள் லண்டனில் உயிர்துறந்த காலத்தில் அவருக்காக அனுதாபங் காட்டித் தங்களது மரியாதையைச் செலுத்திய விருத்தாந்தத்தில் இவ்விஷயத்தைக் காணலாம். அவ்வாறிருந்தும் நமது மௌலானுவிற்கு இந்தி

யாவில் ஹிந்துக்களிலும் முஸ்லிம்களிலும் கணக்கற்ற விரோதிகளிருந்தனர். ஒவ்வொரு காரியத்திலும் எதிர்ப் பிரசாரம் செய்து, மௌலானா எடுத்த காரியம் சித்தி பெறுமலிருக்கச் செய்வதற்காக தங்களாலான சகல முயற்சிகளையும் செய்தனர். எனவே, இவ்விஷயத்தில் மௌலானுவிற்கு நடைபெற்ற காரியங்களை ஹஜ்றத் அலிமுர்த்தஜா (றலி) அவர்களுக்கு நடைபெற்ற காரியங்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவது பொருத்தமாகும். இதனை மௌலானா அப்துல் மாஜித் சாகிப் தர்யாபாதி, மௌலானா முஹம்மது அலி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டிப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

"அலியும் முஹம்மது அலியும்" என்று தலையங்கமிட்டு ஒரு வியாசம் எழுதவேண்டும் என்றும், ஹஜ்றத் அலிமுர்த்தஜா (றலி) அவர்கள் கலீபா பதவியை ஏற்றுக்கொண்டபின் அவர்களுக்கு அடியடிதோறும் ஏற்பட்ட அதே தடைகளும், அதே உள்நாட்டுக் குழப்பங்களும், அதே வியவகாரங்களும் குறைந்த ஓரளவுக்கு இன்று முஹம்மது அலிக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற விஷயத்தை அவ்வியாசத்தில் வெளிப்படுத்தவேண்டும் என்றும் என் மனத்தில் தோன்றுகிறது. ஹஜ்றத் அலிமுர்த்தஜா (றலி) அவர்களது திறமையையும், பெருமையையும், அருமையையும் சொந்த ஹோதாவில் எவரும் மறுக்கவில்லை. ஹஜ்றத் அமீர் முஆவியா (றலி) அம்றுப்னுல்ஆஸ் (றலி)

ஆகிய இருவரும் கூடத் தங்களைப் பார்க்கினும் ஹஜ்றத் அலி (றலி) அவர்கள் அதிகச் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள் என்று கூறி, இவருடைய தனிப்பெருஞ் சிறப்புகளை ஒப்புக்கொண்டிருக் கிறார்கள். அவ்வாறிருந்தும், காரியத்தில் அவர் கள் ஹஜ்றத் அலி (றலி) அவர்களது ஒவ்வொரு அபிப்பிராயத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் மாறு செய்துகொண்டே இருந்தார்கள். சரியாக அதே முறை தான் இன்று நமது மௌலானா முஹம்மது அலிக்கும் நடைபெற்றுக்கொண் டிருக்கிறது."

ஏழாம் அத்தியாயம்

சத்தியம் பேசல்

மௌலானு முஹம்மதுஅலி அவர்களுக்கு இருந்த பல்வேறு தனிச் சிறப்புக்களில் அவர் "சத்தியமே பேசல்" என்ற கொள்கையை ஆரம்ப முதல் கடைசி வரை நிறைவேற்றி வந்தது, மிகவும் முக்கிய சிறப் பாகும். அரச தர்பார்களிலும், மந்திரிச் சபைகளிலும், தலைவர்கள் கூட்டங்களிலும், அறிஞர்கள் மத்தியிலும், தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிடவேண்டிய சந்தர்ப்பம் அவருக்குப் பலமுறை கிடைத்தது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் தமது மனச்சாக்ஷி எவ்விதம் இருந்ததோ அதையே கார் கால இடியோசைபோல் கர்ஜித்து வந்தார். இதனைப் பற்றிச் சில முக்கிய சம்பவங்களில் இரண்டொன்றைக் கீழே தருகுவம்.

காங்கிரஸ் தலைமைப்பதவி:—நமது தலைவர் மௌலானு முஹம்மதுஅலி பீஜப்பூர் சிறைச்சாலையி லிருந்து விடுதலையடைந்தவுடன், நமது இந்தியாவி லுள்ள எல்லா மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும், மௌலானு அவர்களை அகில இந்திய காங்கிரஸ் மகா சபைக்கு ஏகமனதாகத் தலைவராகத் தெரிந்தெடுத்தன. காங்கிரஸ் மகாசபையில் ஹிந்து முஸ்லிம் ஸிக்கிய கிறிஸ்துவ சமூகத்தார் அனைவரும் சேர்ந்திருந்தாலும் அதிலுள்ள அங்கத்தினரின் நிலைமையைக் கவனிக்கு மிடத்து ஹிந்து சமூகத்தாருக்கு அதிகப் பங்கிருந்தது

என்று கூறலாம். நமது மௌலானா அவர்கள் காங்கிரஸ் தலைவராக இருந்துங்கூட தமது மதக்கொள்கையை விட்டுக் கொடுத்தாரில்லை. "பாபமும் பழியும் செய்யும் ஒரு முஸ்லிம், அவன் முஸ்லிமாக இருக்கிறான் என்ற முறையில், மகாத்மா காந்தியைப்பார்க்கினும் சிறந்தவன் என்று நான் நம்புகிறேன்" என்று பகிரங்கமாக முழக்கினார். அவர் இவ்வாறு கூறியது நம் தேசச் சகோதரர்களுக்குப் பெரும் ஆத்திரத்தையும் கொதிப்பையும் உண்டாக்கிவிட்டது. இதற்காக இந்தியா வெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. தீர்மானங்கள் செய்யப்பட்டன. பத்திரிகைகளில் நீண்ட தலையங்கங்கள் எழுதப்பட்டன. ஆயினும், அவர் தம்முடைய மேற்கண்ட அபிப்பிராயத்தை வாபீஸ் வாங்கினாரில்லை. அதில் ஸ்திரமாகவே இருந்ததுடன், தம்மைக் கண்டித்தவர்களுக்கு "முஸ்லிம் என்ற முறையில் நான் இதனையே கூறக்கடமைப்பட்டிருக் கிறேன். காந்திஜீ சரியான உண்மை ஹிந்துவாக இருப்பின், என்னைப்பற்றி அவர் இம்மாதிரிதான் அபிப்பிராயங் கொள்ளவேண்டும். ஆனால், ராஜதந் திரத்தில் அவரது பெருமை எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். மதவிஷயத்தில் அவர் வழி தவறி இருக்கிறார் என்பது என்னிடத்தில் அணுத் துணையும் ஐயமின்று" என்று பதில் கூறினார். அவர் இவ்வாறு பதில் கூறியதுமட்டுமில்லாமல், பல சமயங் களில் "காந்திஜீ முஸ்லிமாகிவிடக்கூடாதா" என் றும் வெளியிட்டுக்கூறி இருக்கிறார்.

மௌலானா அப்துல் பாரீ :—மௌலானா முஹம்மது அலி அவர்கள் லக்னௌ பரங்கிமஹல்லாவிலுள்ள மௌலானா அப்துல் பாரீ சாகிப் அவர்களிடம் தீட்சை பெற்றிருக்கிறார். அவர் பொதுவாக அலி சகோதரர்களுக்கும், சிறப்பாக முஹம்மது அலிக்கும், அநேக முறைகளில் உதவி புரிந்திருக்கிறார். இதை முஹம்மது அலியும் கூடப் பலமுறை கூறி இருக்கிறார். அவ்வாறிருந்தும் அவர் தமது மனப்பான்மையை எடுத்துக்கூறுவதில் நம்முடைய ஞான குருவான மௌலானா அப்துல் பாரீயையும்கூட அவர் லக்ஷியம் செய்தாரில்லை.

மக்காஷரீபு ஹுஸைனுடனும் அவரது புதல்வர் அமீர் அலியுடனும் சுல்தான் இப்னுசஊது யுத்தம் செய்து, ஹிஜாஸ் தேசத்தைக் கைப்பற்றிய காலத்தில் மௌலானா அப்துல் பாரீ அவர்கள் சுல்தான் இப்னுசஊதுக்கு விரோதமான கூட்டத்தாருடன் சம்பந்தம் வைத்திருந்தார். ஆனால், முஹம்மதுஅலி அக்காலத்தில் சுல்தான் இப்னுசஊதை ஆதரிக்கும் கூட்டத்தாருக்குத் தலைவராக இருந்தார். சுல்தான் இப்னுசஊதினிடம் சில குறைகள் இருந்தால் அவை நீங்கிவிடும் என்று அவர் எண்ணி இருந்தார். குருவும். சிஷ்யரும் முறண்பட்ட இரண்டு கூட்டத்தில் தனித்தனியே சம்பந்தப்பட்டிருந்ததால், முஹம்மது அலியின்மீது சொந்த ஹோதாவில் வருத்தமுள்ளவர்கள் அவரது ஞானகுருவான மௌலானா அப்துல் பாரீ அவர்களிடம் இல்லாத பொல்லாத காரியங்களைக் கூறித்தூண்டி விட்

டார்கள். முற்காலத்திலுள்ள பெரியார்கள் களங்க மற்றவர்களாகவும், பிறர்கூறும் சமாசாரங்கள் பொய் யென்று பிரத்தியக்ஷமாக வெளியாகும்வரை அனைத்தை யும் மெய்யென்று நம்புபவர்களாகவும் இருந்தது போல், நமது மௌலானா அப்துல் பாரீ அவர்களும் பெரும் பாலும் சகல விஷயங்களையும் எளிதில் நம்பிவிடக்கூடிய களங்கமற்ற மனத்தவராகவே இருந்தார். ஆயினும், நமது மௌலானா முஹம்மதுஅலி அவர்கள் சதிகாரர் களின் வலையில் சிக்கித் தமது குருவின் விஷயத்தில் எவ்விதமான மரியாதைக் குறைவையும் செய்து விடா மல் தமது அபிப்பராயத்தில் ஸ்திரமாக இருந்து தேச மெங்கும் அதனைப் பிரசாரமும் செய்தார்.

ஜமிய்யத்துல் உலமா :—முராதாபாதில் ஜமிய்யத் துல் உலமாவின் வருஷாந்தர மகாநாடு நடைபெற் றது. இம்மகாநாட்டுக்கு இந்தியாவில் கியாதிபெற்ற உலமாக்களில் அநேகர் வந்திருந்தனர். உலமாக்களைக் கொண்ட இம்மகாநாட்டில் மௌலானா முஹம்மதுஅலி அவர்களுக்குப் பிரசங்கம் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அவர் உலமாக்களிடமும் நிர்தாக்ஷண்யமாகத் தமது மனச்சாக்ஷியை வெளி யிட்டு, உலமாக்களின்பால் தமக்குள்ள நல்ல எண்ணத் தையும் மரியாதையையும் விளக்கியதுடன் அவர்களிட முள்ள குறைகளையும் எடுத்துக்கூறினர். அன்று அவர் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:—

"நான் கண்ணியம் பொருந்திய உலமாக்கள் சமூகத்தில் ஒரு விஷயத்தை அறிவித்துக்கொள்ள

விரும்புகிறேன். உங்களுடைய உயர்ந்த அந்தஸ்தின் கண்ணியத்தையும் முக்கியத்தையும் நீங்கள் பூரணமாக உணரவில்லை என்று நான் பயப்படுகிறேன். உங்கள் வர்க்கத்தாரின் அந்தஸ்து எல்லா வர்க்கத்தாரின் அந்தஸ்தைப் பார்க்கினும் மிக மேம்பட்டதும் உயர்ந்ததுமாகும். ஆதலின், உங்களுக்கு எல்லாரைப்பார்க்கினும் அதிகமான பொறுப்பு இருக்கிறது. கண்ணியவான்களான உலமாக்கள் தங்கள் அந்தஸ்தின் உயர்வை உணர்ந்து, தங்கள் கடமையைச் செய்யப் பூரணமாக ஈடுபட்டிருந்திருப்பார்களாயின், நமது சமூகத்தின் நிலைமை இன்று இவ்வளவு கேவலமாக இருக்க முடியாது. நீங்கள் இஸ்லாத்தின் தர்பாருக்குக் காவற்காரர்கள். இறுதியாக முஸ்லிம்களாகிய நமக்கு, விரோதிகள் சவுக்கடி கொடுப்பார்களாயின், அப்பொழுது நீங்கள் அவ்வடிக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்துக்கொள்ள வேண்டாம். நாங்கள் நூற்றுக்கு இருபத்தைந்து அடிக்கு ஆளாகுவோமாயின், நீங்கள் எழுபத்தைந்து அடிக்கு ஆளாக வேண்டியிருக்கும். ஆதலின், எங்களைப் பார்க்கினும் உங்களுக்குத்தான் அதிகப் பொறுப்பு இருக்கிறது. ஜனங்கள் தாடி வைக்கவேண்டுமா அல்லவா, மீசையை வெட்டிக் கொள்ளுகிறார்களா இல்லையா, கரண்டைக்கு மேல் உயர்த்தி கால்சராய் அணிகிறார்களா இல்லையா, என்ற விஷயத்தைக் கவனித்துக் கொள்

வது மட்டும் உங்கள் வேலையன்று. இதனைப் பார்க்கினும் இன்னும் சிறந்தவேலைகள் அநந்தமிருக்கின்றன. அவைகளையும் உலமாக்கள் செய்யவேண்டும். ஏழைமுதல் குபேரன்வரை எல்லா முஸ்லிம்களும் அகத்தூய்மை அடையவேண்டியிருக்கிறது. அவர்களுடைய ஒழுக்கங்களைச் சீர்திருத்துவதற்காக உலமாக்கள் மார்க்கக் கல்விச்சாலைகளைச் சீர்திருத்தல் வேண்டும். மார்க்கக் கல்வியை நாம் கற்றுக்கொள்வதுடன் உலக அலுவல்களையும் செவ்வனே செய்து கொள்வதற்குத் தக்கவாறு மதப் பாடசாலைகளில் திட்டம் ஏற்படுத்தவேண்டும். மார்க்கக்கல்வி என்ற பெயரால் நாம் கற்பிக்கும் கல்வி யாது என்று கவனியுங்கள். நான் தாடி வளர்க்கவேண்டியது அவசியம் என்று கூறுபவன் நானும் தாடி வைத்திருக்கிறேன்; மீசையைக் கத்தரித்துக் கொள்ளவேண்டும் என்று நான் கூறுபவன்; நான் சொல்வது போல் எனது மீசையைக் கத்தரித்துக் கொண்டுமிருக்கிறேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய உடையை நான் நேசிக்கிறேன். ஆனால், நமது உலமாக்கள் தாடி மீசைப் பிரசினையிலேயே ஆழ்ந்து விடக்கூடாது; அவர்கள் வெளிக்கோலத்தை மட்டிலும் கவனிக்கக்கூடாது. இதைப்பார்க்கினும் அவசியமாகக் கவனிக்க வேண்டியது அகம் தான். நமது அகம் சரியாகி விட்டால் நமது புறக்கோலம் தானாகவே சரியாகிவிடும். தாடியைச் சிறைத்துக் கொள்பவர்

களை நமது உலமாக்கள் நேச்சரி என்றும் காபிர் என்றுங் கூறித் தள்ளிவிட்டார்கள். உலமாக்கள் நல்லோர்களுடன் மாத்திரம் சேர்ந்திருப்பது அவர்களுடைய வேலையன்று. அவர்கள் மது பானக்கடைகள், சூதாடுமிடங்கள் முதலிய இடங் களுக்கும் சென்று அங்குள்ளவர்களையும் சீர் திருத்தம் செய்ய வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் மத்தியில் நபி யாக வரவில்லை. காபிரான ஜனங்களின் மத்தியில் தான் நபியாக வந்தார்கள். நாயகம் (ஸல்) அவர் கள் காபிர்களைத்தான் சுத்தப்படுத்தினார்கள். உல மாக்கள் எல்லாவற்றிற்கும் முதலில் நேர்வழிக்கு ஊற்றுக்கண்ணாகிவிடவேண்டும். நான் இமாம் களைப் பின்பற்றாதவன் அல்லன், ஹனபி மத் ஹபைப் பின்பற்றுபவன். ஆனால், என்னைப் போன்ற ஒரு அறிவிலி ஒரு மஸ் அலாவில் சரி யான அபிப்பராயமுள்ளவராக இருக்கலாம். ஆனால், இமாம் அபூஹனிபா (றஹ்) போன்ற பெரி யார்களும் பேரறிஞர்களும் தவறு செய்யக்கூடும் என்பது எனது நம்பிக்கை. ஆதலின், நானும் திருகுர் ஆனையும் ஹதீது ஷரிபையும் நேரில் படித் துணர்ந்து விஷயத்தைக் கிரகிக்கவேண்டிய தவசிய மாகும். நான் உங்களிடத்தில் எதையும் புதி தாக உற்பத்தி செய்ய விரும்பவில்லை. மார்க்க விஷயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஸஹாபிகள் ஆகியவர்கள் காலத்தில் இல்லாத

விஷயங்களை வழிகேடானவையென மதிக்கிறேன். ஆதலால், திருகுர்ஆன் ஹதீதுஷரிப் ஆகியவை களின்பால் ஜனங்கள் ஹனபி பிக்குஹூ சம்பந்த மாக மாத்திரம் கவனஞ் செலுத்தவேண்டுமென்று நான் விரும்பவில்லை. நவீனக் கல்வியை கற் றிருப்போரின் மன நிலைமையை உங்களுக்குக் கூறமாட்டேன். உங்களிற் பெரும்பான்மை யினர் நவீனக் கல்விகற்றவர்களை பட்டகுச்சிகள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள்தான் அந்த பட்டகுச்சி, அதன்மீது திரு குர்ஆன் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், நாங்கள் அந்தப் பட்டக்குச்சியைத் தள்ளிவிட விரும்பவில்லை. மேலும், அதனை நாங்கள் கண்ணி யப்படுத்தவே விரும்புகிறோம். ஆனால், உங் களுக்கு ஏற்படுகிற கௌரவம் நீங்கள் ஷரீஅத் தைக் காக்கும் கூட்டத்தார் என்ற முறையில் இருக்கவேண்டும். நீங்கள் ஷரீஅத்தின் உண்மை யான போதனையை எடுத்துக்கூறி நீங்களும் அதன்படி நடந்து எங்களையும் அதன்படி நடத்தி னால் உங்களுக்கு அந்த கண்ணியம் உண்டாகும்."

சுயராஜ்ய கட்சி:—மௌலானா முஹம்மது அலி அவர்கள் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது சுயராஜ்ய கட்சி சம்பந்தமாக அவருடைய நடப்பு எவ்வாறிருந்தது என்பதைப்பற்றி ஆண்டவன் நாடினால், இனியோரிடத் தில் எழுதப்படும். ஆனால், நமது மௌலானா அவர்கள் பக்கா காங்கிரஸ்காரராக இருக்கிறார் என்றும், ஹிந்துக்

களின் அடிமை என்றும் முஸ்லிம்களிடம் கெட்ட பெயர் வாங்கின காலத்தில் அவர் சுயராஜ்ய கக்ஷியைப் பற்றிக் கூறிய அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது.

"இந்தியாவில் இதர மாகாணங்களுக்கு அளிக்கப்பட்ட அதே சீர்திருத்தம் எல்லைப்புற மாகாணத்துக்கும் வழங்கப்படவேண்டும் என்பது இந்திய முஸ்லிம்களின் ஏகமனதான கோரிக்கையாகும். காங்கிரஸ் மகாசபையும் இக்கோரிக்கைக்கு ஆதரவாக இருந்தது. என்றாலும், ஹிந்து மகாசபை இதனைப் பலமாக எதிர்த்தது. 1926-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் இப்பிரசினை இந்தியா சட்டசபையில் விவாதத்துக்கு வந்தது. லாலா லஜபதிராய், பண்டித மாளவியா ஆகியவர்கள் இதை மிகவும் கேவலமான முறையில் எதிர்த்தனர். சுயராஜ்ய கக்ஷியின் தலைவரான பண்டித மோதிலால் நேரு இத் தீர்மானத்தை எதிர்த்ததுமட்டு மில்லாமல் இதனை எதிர்க்கும்படி தமது கக்ஷிக்குக் கட்டளையுமிட்டார். சுயராஜ்ய கக்ஷியிலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்கள் இரண்டு கக்ஷியாகப் பிரிந்துவிட்டார்கள். ஒரு வர்க்கத்தார் தங்களது கக்ஷித் தலைவர் பிறப்பித்த உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து இத்தீர்மானத்தை எதிர்த்தனர். மற்றொரு கக்ஷியார் தங்கள் தலைவர் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்து இத்தீர்மானத்தை ஆதரித்ததுமட்டுமில்லாமல், இதற்காக சுயராஜ்யகக்ஷியிலிருந்து விலகிக்கொள்ளவும் செய்தனர். இத்தீர்மானத்தைப்

பிரேரேபித்தவர் சென்னை தென்தொகுதிப் பிரதிநிதியான மௌலவி ஸெய்யிது முர்த்தஜா சாகிப் பகதூர் அவர்களாவார்கள். இத்தீர்மானத்துக்காக இவர் சுயராஜ்யகக்ஷியை விட்டு விலகிக்கொள்ளவும் செய்தார். பாட்னாவைச் சேர்ந்த, மௌலவி ஷபி தாவூதியும் இதை ஆதரித்து சுயராஜ்ய கக்ஷியைவிட்டு விலகினார். மன வருத்தத்தைத் தரக்கூடிய இக்காக்ஷியைப் பார்ப்பதற்காக நமது மௌலானா முஹம்மது அலி அவர்கள் கடும் வியாதியாக இருந்துங்கூட இந்தியாசட்டசபைக்குச் சென்றிருந்தார். எல்லைப்புறமாகாண சீர்திருத்தம் சம்பந்தமாக அங்கு நடைபெற்ற காக்ஷியைப்பற்றி அவர்பின் வருமாறு தமது "ஹம்தர்த்" பத்திரிகையில் எழுதினர்:—

"நமது தேச சகோதரர்கள் (ஹிந்துக்கள்) இதை உணர்ந்துகொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்களுடைய மத துவேஷ உணர்ச்சியானது அவர்களுடைய எதிரிகளுக்கு மட்டுமில்லாமல் என்னைப்போன்ற அவர்களுடைய நண்பர்களுக்கும் எவ்வளவு வருத்தத்தை உண்டு பண்ணிவிட்டது? ஆனாலும், முஸ்லிம்களுக்கு எத்துணை அநீதி செய்யப்பட்டபோதினும் முஸ்லிம்களுக்கு இவ்வுதவி எந்நிலைமையிலும் அவர்கள் செய்யத்தான் வேண்டும் என்று மோதிலால் நேருவும் அவரது சுயராஜ்யகக்ஷியிலுள்ள இதர மெம்பர்களும் உணர்ந்திருக்க

வேண்டும். முஸ்லிம்கள் செய்த உதவி சம்பந்தமாக அவர்கள் உத்தேசிக்கும் திட்டம் மிகவும் தவறானது என்பதை அவர்கள் உணர வேண்டும்.”

சுல்தான் இப்னுசுஊத் :—ஹிஜாஸ் தேசத்தில் ஷரீப்ஹுஸைன் அரசுபுரிந்துவந்தார். அது சமயம் நஜத் சுல்தான் அப்துல் அஜீஸுப்னு ஸுஊது என்பவர் அவரிடம் யுத்தம் செய்தார். ஷரீப்ஹுஸைன் இந்த யுத்த காலத்திலேயே தமது மைந்தர் அமீர் அலிக்குப் பட்டத்தைக் கொடுத்துவிட்டு அரசு துறந்தார். பின்னர், அமீர் அலியும் சுல்தான் இப்னுசுஊதினால் தோற்கடிக்கப்பட்டு ஹிஜாஸ் தேசத்தை விட்டுவெளியேற்றப்பட்டார். இந்த யுத்தம் நிகழ்ந்த காலத்தில் சுல்தான் இப்னுசுஊத் இஸ்லாமிய உலகுக்குப் பல அறிக்கைகளையும் வாக்குறுதிகளையும் விடுத்து, ஹிஜாஸ் தேசத்தை அரசாட்சி புரியவேண்டும் என்ற எண்ணமோ, நாடுபிடிக்கும் ஆசையோ தமக்கு இல்லை என்றும் அவ்வறிக்கைகளிற்கூறி இருந்தார். உலக முஸ்லிம்களின் அபிப்பிராயபப்படியே ஹிஜாஸ் சம்பந்தமாக அவர் நடந்துகொள்ளப்போவதாக வாக்களித்ததுடன், ஹிஜாஸ் தேசத்தில் அவருக்குப்பூரண ஆதிக்கமேற்பட்டபின், உலக முஸ்லிம் மகாநாடு ஒன்றை மக்காவில் கூட்டினார். அதற்காக உலகமெங்கிருந்தும் முஸ்லிம் பிரதிநிதிகள் மக்காவுக்குச் சென்றார்கள். ஆயினும், இம்மகாநாடு நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன் தம்மை “மலிக்குல் ஹிஜாஸ்” (ஹிஜாஸ் அரசர்)

என்று பட்டங்கட்டிக்கொண்டார். நமது இந்தியப் பிரதிநிதிகளில் அலி சகோதரர்களும் சென்றிருந்தனர். சுல்தான் இப்னுசுஊது செய்த வாக்குறுதிகளையும் அறிக்கைகளையும் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி, அம்மகாநாட்டில் எடுத்துக்கூறி, சுல்தான் அவர்கள் கட்டிக்கொண்ட பட்டத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி செய்ய முயன்றார். ஆயினும், சுல்தான் இப்னு சுஊதை ஆதரவு செய்யக்கூடியவர்கள் அவருக்கு நன்றாகப் போதித்து விட்டதால், அவர் அதை வாபீஸ் செய்பவராக இருக்கவில்லை. சுல்தான் இப்னு சுஊது தம்மை "மலிக்குல் ஹிஜாஸ்" என்று பிரகடனம் செய்ததை நமது தலைவர் மௌலானா முஹம்மதுஅலி பெரிய குற்றமென்று மதித்தார். ஆதலின், அகில உலக முஸ்லிம் மகாநாட்டுக்குச் சென்ற உலமாக்கள் நிறைந்திருந்த சமயத்தில் சுல்தான் இப்னுசுஊதின் முன்னிலையில் இதைப் பற்றி அவர் உருக்கமாகப் பிரசங்கம் புரிந்தார். சுல்தான் இப்னுசுஊது இதற்கு மறுமொழி கூற முடியாமல் உலமாக்களின் அக்கூட்டத்தை விட்டு மௌனமாக வெளியேறி விட்டார். அங்கு நமது மௌலானா அறபி பாஷையில் செய்த பிரசங்கம் வருமாறு:—

"நீங்கள் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கண்ணியம் பொருந்திய கலீபாக்களைப் பின்பற்றவில்லை. கைஸர், கிஸ்ரா ஆகியவர்களைப் பின்பற்றுகிறீர்கள். குலபாயே ராஷிதீன்கள் ஹிஜாஸுக்கு

அரசரென்று தங்களைக் கூறிக்கொள்ளவில்லை. கைஸரும் கிஸ்ராவும்தான் தங்களை அரசரென்று கூறிக்கொள்ளுகிறார்கள். குலபாயே ராஷிதீன்கள் தங்களுக்குப் பிறகு தங்கள் மக்கள்தாம் பட்டத்துக்கு வரவேண்டும் என்று அவர்களுக்கு இளவரசுப்பட்டம் கட்டிவைக்கவில்லை. கைஸரும், கிஸ்ராவும்தான் இம்மாதிரி தங்கள் மக்களுக்கு இளவரசுப் பட்டங் கட்டிக் கொள்கிறார்கள்."

மௌலானா அவர்களின் இப்பிரசங்கத்தையும் மனோ தைரியத்தையும் பார்த்து அங்குள்ள பிரதிநிதிகள் ஆச்சரியமடைந்து தங்கள் விரல்களைக் கடித்துக் கொண்டனர். உடனே, சுல்தான் இப்னுசுஊது அந்த இடத்தைவிட்டு வெளியேறிச் சென்றார். ஆயினும், நமது மௌலானா அவர்கள் தமது பிரசங்கத்தை நிறுத்தவில்லை. அதைப் பூரணமாகக் கூறியே முடித்தார். இதுமட்டுமா! அவர் மக்காவிலிருந்த காலத்தில் இக் கருத்தை ஹரம்ஷரீபில் பல முறைகளிலும் திரும்பத் திரும்பக்கூறி வெளியிட்டுக்கொண்டே இருந்தார்.

வைசிராய் :—ஹரிவிலாஸ் சாரதாவினால் சட்டமாக்கப்படுவதற்காக இந்தியா சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டுச் சட்டமாக்கப்பட்டபோது, அச்சட்டத்தில் முஸ்லிம்களையும் அரசாங்கத்தார் கட்டுப்படுத்தினார்கள். இச்சட்டத்தில் முஸ்லிம்களையும் கட்டுப்படுத்துவது முஸ்லிம்களின் மதசுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்று முஸ்லிம்களிற் பெரும்பாலர் கருதி

னர். மௌலானா முஹம்மதுஅலி இப்பெருங்கூட்டத்திற்குத் தலைவராக இருந்தார். இப்பிரசினையைச் சட்ட வரம்புக்குட்பட்டு கிளர்ச்சி செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆதலால், மேன்மை தங்கிய இராஜப் பிரதிநிதி அவர்களைப் பேட்டிகண்டு பேசுவதற்கு ஏற்பாடு செய்து ஒரு தூதுவக்கூட்டத்தைச் சேர்த்தார்கள். அதில் உலமாக்கள், வக்கீல்கள், அரசாங்க கௌரவப் பட்டதாரிகள், அரசாங்கத்துக்கு விரோதமாகவுள்ளவர்கள் முதலாக சகலவிதமான ஜனப் பிரதிநிதிகளும் சேர்ந்திருந்தனர். மௌலானா முஹம்மதுஅலி இத்தூதுவக்கூட்டத்துக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இத்தூதுவக் கூட்டம் மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி அவர்களைப் பேட்டிகண்டு தன்னுடைய நோக்கத்தை விளக்கிக் கூறிற்று. ஆயினும், இச்சட்டத்தைவிட்டு முஸ்லிம்களைப் பிரித்துவிடத் தம்மால் இயலாது என்பதாக ராஜப்பிரதிநிதி பதிற் கூறிவிட்டார்.

அப்பொழுது மௌலானா முஹம்மது அலி தூதுவக் கூட்டத்துத் தலைவர் என்ற முறையில் ராஜப் பிரதிநிதியைப் பார்த்து "இனி, நமக்கும் உங்களுக்குமிடையில் போராட்டம்தான். சமாதானமாகவும் பணிவாகவும் நடந்துகொள்ளவேண்டிய முறை முற்றுப் பெற்றுவிட்டது" என்று கூறினார்.

அதற்கு ராஜப்பிரதிநிதி "தாங்கள் சட்டத்துக்கு உட்பட்டமுறையில் போராட்டம் செய்வீர்கள் என்று நினைக்கிறேன்" என்று கூறினார். அதற்கு,

அவர் பதில் கூறுகையில் "தெய்வச் சட்டத்துக்குக் கீழ்ப்படிவது என்னுடைய முதற்கடமையாகும். அதற்குத்தான் நான் கீழ்ப்படிவேன். அச்சட்டத்தை நிறைவேற்றும் விஷயத்தில் லார்டு இர்வினின் அரசாங்கத்துச் சட்டம் குறுக்கிடுமாயின் இச்சட்டத்தை நான் லக்ஷியம் செய்யப்போவதில்லை. நிச்சயமாக நான் இதைக் கொஞ்சமும் மதிக்க மாட்டேன்" என்று கூறிவிட்டுத் திரும்பி வந்துவிட்டார். நமது மௌலானு அவர்களின் ஸ்தூல நிலைமையும், அவரது ஜீவிய காலமும் அவருக்குத் துணையாக நின்றிருந்திருக்குமாயின் இப்பிரசினையில் ஒருவித முடிவு நிச்சயமாக ஏற்பட்டிருந்திருக்கும்.

ரங்கூனில் காந்திஜீயுடன் சந்திப்பு:—நேரு சுயராஜ்யத்திட்டத்தால் ஏற்பட்ட தேசிய போராட்டத்துக்குப்பின் 1929-ல் தமது ஸ்தூல சுகத்தை உத்தேசித்து நமது தலைவர் மௌலானு ரங்கூன் சென்றுர். அக்காலத்தில் காந்திஜீயும் ரங்கூன் சுற்றுப்பிரயாணத்திலிருந்தார். ஒரு இடத்தில் காந்திஜீக்கும் நமது மௌலானுவிற்கும் சேர்த்து ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தபின், மகாத்மா காந்தி தமது பிரசங்கத்தில் மௌலானு முஹம்மதுஅலி அவர்களைப் பிரஸ்தாபித்து, "இனி, பெரும்பாலும் நாங்களிருவரும் ஒன்று சேர்ந்திருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள்" என்று கூறினுர். உடனே, மௌலானு முஹம்மதுஅலி அவர்கள் இதற்கு மறுமொழியாக "நாமிருவரும் ஒன்று

சேர்ந்திருப்போம் என்பது தவறு. காந்திஜீ, தமது போக்கை மாற்றிக் கொள்ளும்வரை இது சத்திய மன்று" என்பதாகத் தமது பிரசங்கத்தில் தெளிவாகக் கூறினார்.

மௌலானா அவர்களின் போக்கைச் சிலர் ஆதரிக்கவும் கூடும். சிலர் எதிர்க்கவும் கூடும். ஆயினும், அவர் சுயேச்சையாகவும் நிர்தாக்ஷண்யமாகவும் தமது அபிப்பிராயத்தை வெளியிடுவதைச் சகலரும் போற்றினர். அவர் நயவஞ்சகமாக நடந்து கொள்ளும் தொழிலை எடுத்துக்கொள்ள வில்லை. தமக்கு நியாயமாகத் தோன்றுவதை அவர் ஒளிவுமறைவில்லாமல் கூறிவந்தார்.

வட்டமேஜை மகாநாடு:—லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாட்டில் அவர் செய்த உருக்கமானதும், தேசாபிமானம் ததும்பியதும், உண்மை நிறைந்ததுமான அவருடைய பிரசங்கம், சரித்திரத்தில் என்றும் இருந்துவரும். இப்பிரசங்கத்தைப் பற்றி இனியோரிடத்தில் விரிவாக எழுதப்படும். மௌலானா முஹம்மதுஅலி தம்முடைய கடைசிக் காலத்தில் இம்பீரியலிஸ்டாக மாறிவிட்டார் என்று சிலர் நினைத்திருக்கிறார்கள். அவர்கள் உண்மையை உணரவேண்டும் என்பதற்காகவும், அவருடைய தொண்டைக்குக் கீழில் அந்தப் பிடிவாதம் இறங்கவே வழி இல்லை என்பதை உணர்த்துவதற்காகவும் அவர் பிரசங்கத்தின் இரண்டு மூன்று வாக்கியங்களைக் கீழே தருகிறோம்:—

"நான் எனது பிறவியினாலும், கொள்கையினாலும், குடியரசுக் கொள்கையை ஆதரிப்ப

வனுக இருக்கிறேன். என்னுடைய அபிப்பரா யங்களில் அரசர்களுக்கும் இளவரசர்களுக்கும் கொஞ்சமும் இடமே இல்லை ”

கராச்சி :—நமது மௌலானுவின்மீது கராச்சியில் நடைபெற்ற ராஜதுரோக வழக்கில் மாஜிஸ்டிரேட்டுக்கு முன் அவர் கொடுத்த வாக்குமூலத்தின் ஒரு வாக்கியத்தை இங்கு எடுத்துக் கூறி இவ்வத்தியாயத்தை முடித்துக்கொள்ள விரும்புகிறோம். அது வருமாறு :—

“ அரசாங்கம் தன்னுடைய தற்போதைய நடைமுறையில் ஸ்திரமாக இருக்குமாயின் இதற்கு முன் பாபிலோனிலும், எகிப்திலுமிருந்த பெரிய அரசாங்கங்களுக்கு நேர்ந்த முடிவுதான் இதற்கு மேற்படும் என்று எனக்குத் தோன்றுகிறது. அவ்வரசாங்கங்கள் இறைவனுடன் போட்டி போட்டதால் ஒரு அற்பமான கொசுவும், கடல் அலையும் அவைகளைக் கவிழ்த்துவிடப் போதுமானதாக இருந்தன.”

எட்டாம் அத்தியாயம்

ஆராய்ச்சி வன்மை

இந்தியாவிலுள்ள தலைவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தங்கள் செல்வாக்கால் தலைவர்களாக ஆனவர்கள் ஒருவகை. தங்கள் அறிவு, ஆற்றல், ஒழுக்கம், உழைப்பு முதலியவைகளின் மூலமாகத் தொண்டாற்றி தேசத்திலும், தேசமக்களின் மனத்திலும் தங்களுக்குரிய ஸ்தானத்தை உற்பத்தி செய்துகொண்டவர்கள் மற்றொரு வகை. நமது மௌலானா முஹம்மது அலி இவ்விரண்டாவது வகையைச் சேர்ந்தவர். இவர் ஒருவரைப் பின்பற்றவில்லை. ஜனங்களுடைய நோக்கம் எவ்வாறிருக்கிறது என்பதைக் கவனித்து அந்தப்பக்கம் தமது பிரயத்தனத்தைத் திருப்பிக்கொள்ளவுமில்லை. ஆனால், எந்த இயக்கத்தில் அவர் ஈடுபட்டாரோ அந்தஇயக்கத்துக்கு அவர் நாட்டில் ஆதரவும் வியாபகமும் உண்டுபண்ணினர். அவர் தமது மனத்துக்கு எஜமானராக இருந்தார். ஆதலால், அவசியம், அனுவசியம் ஆகிய சகல பிரசினைகளையும் அவர் தீர்க்காலோசனை செய்து ஒரு முடிவுக்கு வருவார். அப்பால் அதை மற்றவருக்கு எடுத்துரைப்பார். அதை உறுதியுடனும் அதிதீரத்துடனும் எடுத்துக் கூறுவார். அவர் தமது மனச்சாக்ஷிக்கும், அறிவுக்கும் விரோதமாக பொதுஜன அபிப்பிராயத்தை லக்ஷியம் செய்ததே இல்லை. பொதுஜன அபிப்பிராயத்தைக் கண்டு தமது அபிப்பிராயத்தை அவர் மாற்றிக் கொண்டதுமில்லை.

பொதுஜன அபிப்பிராயத்தில் தவறிருந்தால் அதை மாற்றித் தம்முடைய அபிப்பிராயத்துக்குத் திருப்பி விடவேண்டும் என்றே அவர் எப்பொழுதும் முயற்சி செய்துவந்தார். இவ்விஷயத்தில் அவருக்கேற்பட்ட எதிர்ப்புகளையும், போட்டிகளையும், ஆக்ஷேபணைகளையும் அவரைத்தவிர வேறு யாரும் சகிக்கவே முடியாது. வேறு யாரும் இவ்வித முயற்சியில் ஈடுபட்டிருந்தால் சிக்கலான சமயத்தில் மூலையில் போய்த்தான் இருந்து கொள்வார்கள் - அதாவது அவர்கள் துறவுபூண்டு விடுவார்கள் அல்லது தன்னை வெடிதீர்க்கப்பட்ட தோட்டா என்று கூறிக்கொள்வார்கள், அல்லது தமக்குச் சரியான சந்தர்ப்பம் வரும்வரை தலையிடாமல் ஒதுங்கியே இருப்பார்கள். இதைப்பற்றி மௌலானா அவர்கள் பஞ்சாப் தலைவர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் "பொதுஜன அபிப்பிராயம் என்று கருதப்பட்ட எந்த விஷயத்தையும் தாங்கள் எப்பொழுதேனும் தைரியமாகவும் ஊக்கமாகவும் எதிர்த்ததாக நான் பார்த்ததில்லை. ஆனால், ஒரு சீர்திருத்தக்காரனுக்கு சமயத்தில் இம்மாதிரியும் செய்யவேண்டிய அவசியமேற்படும்" என்று அறிவுறுத்தி இருக்கிறார். மௌலானா அவர்களுக்கு இம்மாதிரியான சந்தர்ப்பம் சமயாசமயத்தில் ஏற்படவில்லை. அநேக சமயங்களில் இவ்விதமாகவே ஏற்பட்டிருக்கிறது.

ராஜ்பாலின் புத்தகம்:—ராஜ்பால் என்ற பஞ்சாப் மாகாண ஹிந்து ஒருவர் "ரங்கேலா ரஸூல்" என்று ஒரு புத்தகம் எழுதி முஸ்லிம்களின் மனத்தைப்

புண்படுத்திவிட்டார். பஞ்சாப் மாகாணத்தில் இப்புத்தகம் வெளியானபடியினால் அங்கு இதைப்பற்றிப் பலமான உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஏற்பட்டது. முஸ்லிம்களின் உணர்ச்சியைக் கருதி, பஞ்சாப் கவர்ன்மெண்டார் ராஜ்பால் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டனர். கீழ்க்கோர்ட்டார் ராஜ்பாலுக்குத் தண்டனை விதித்தனர். அவர் லாகூர் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்தார். அவ்விசாரணை ஜஸ்டிஸ் துலிப் சிங்கின் கோர்ட்டில் நடைபெற்றது. 1927-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஜஸ்டிஸ் துலிப்சிங் இந்த செக்ஷன்படி தண்டிப்பதற்கில்லை என்று தமது தீர்ப்பில் கூறி, ராஜ்பாலை விடுதலை செய்து விட்டார்.

ஜஸ்டிஸ் துலிப்சிங்கின் இத்தீர்மானம் பஞ்சாபிலுள்ள முஸ்லிம்களுக்கு முன்னிலும் அதிக ஆத்திரத்தையும் வருத்தத்தையும் உண்டு பண்ணிற்று. அவர் உடனே தமது பதவியை ராஜினாமா செய்துவிடவேண்டும் என்று முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்தனர். லாகூரில் பிரசுரமாகிக் கொண்டிருந்த "முஸ்லிம் ஔட்லுக்" என்ற ஆங்கிலமுஸ்லிம் தினசரிப்பத்திரிகை இத்தீர்மானத்தை எதிர்த்துப் பலமாக ஆக்ஷேபணை செய்தது. கோர்ட்டை அவமதித்ததாக அரசாங்கத்தார் அப்பத்திரிகையின் ஆசிரியர், பிரசுரகர்த்தர், பதிப்பாளர் முதலிய எல்லார்மீதும் வழக்குத்தொடர்ந்து அவர்களைத் தண்டித்தனர். இது முஸ்லிம்களை இன்னும் அதிகமாகப் புண்படுத்திற்று. நாடெங்கும் இதனைப்பற்றிய ஆத்திரமும் கோபமும் பொங்கிற்று. மௌலானா அத்தா

வுல்லா ஷாஹ்புகாரி, காஜீ அப்துர் ரஹ்மான் முதலிய பஞ்சாப் தலைவர்களெல்லாம் கைதி செய்யப்பட்டு தண்டனையடைந்தனர். அதுபோழ்து, மௌலானா முஹம்மதுஅலி பொதுஜன அபிப்பராயத்துக்கு விரோதமாகத் தமது அபிப்பராயத்தை வெளியிட்டார். "ஜட்ஜின்மீது தவறில்லை. சட்டத்தின் மீது தான் தவறிருக்கிறது" என்று பகிரங்கமாகக் கூறினார். இவ்வபிப்பராயத்தை நமது மௌலானா வெளியிட்டவுடன் பஞ்சாப் மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் ஆத்திரம் முழுவதும் அவர்பால் ஒன்றுதிரண்டு திரும்பிற்று. "ஹிந்துக்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் நல்ல பிள்ளையாக ஆகுவதற்காக முஹம்மதுஅலி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தூஷணை செய்வதையுங்கூடச் சகித்துக் கொண்டார்" என்று கூக்குரல் கிளப்பினர். ஆனால், நமது மௌலானா இக்கிளர்ச்சியை லக்ஷியம் செய்தாரில்லை. அவர் இந்தக் கிளர்ச்சிகளையும், குழப்பங்களையும் தைரியமாக எதிர்த்தார். தம்முடைய அபிப்பராயத்தை இவ்வெதிர்ப்புகளுக்குப் பயந்து மாற்றிக்கொள்ளவில்லை. "சட்டத்தில்தான் தவறு இருக்கிறதேயன்றி நீதிபதியின் பேரில் தவறில்லை. இன்று துலிப்சிங்கைப் பதவியிலிருந்து அகற்றிவிடலாம். அவருடைய ஸ்தானத்தில் வருகிற வேறொரு நீதிபதி நாளை இம்மாதிரி தீர்ப்புச் செய்யமுடியும். சட்டத்தில் அதற்கு இடமிருக்கிறது. ஆதலால், நாம் நீதிபதியைப்பற்றிக் குறை கூறவேண்டியதில்லை. இனிமேல் இம்மாதிரியான தீர்ப்பு நிகழாமலிருப்பதற்குத் தக்க

வாறு புதிய சட்டமியற்றவேண்டும்" என்றே அவர் கூறி வந்தார். மௌலானாவின் இவ்வபிப்பராயத்தை ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் நாளடைவில் இவ்வபிப் பராயத்தை நேர்மையென்றுணர்ந்து அம்மாதிரியான சட்டமியற்றுவிப்பதற்காக இறுதியில் நமது மௌலானா வினிடம் வந்தனர்.

நஜத் ஹிஜாஸ் போராட்டம் :—ஹிஜாஸ் அரசரான மக்கத்து ஷரீப்ஹுஸைனுக்கும், நஜத் சுல்தானை அப்துல் அஜீஸுப்னுஸுஊதுக்கும் யுத்தம் நிகழ்ந்த போது இந்தியாவில் இது சம்பந்தமாகப் பெருங் கிளர்ச்சி யுண்டாயிற்று. 'ஷரீப்ஹுஸைன் பிரிட்டி ஷாரின் நண்பர், அவர்கள் கூறுவதுபோல் செய்யக் கூடியவர், என்ற வருத்தம் இந்திய முஸ்லிம்களின் மனத்தில் இருந்தாலும், நஜத்சுல்தான் வஹ்ஹாபிக் கொள்கையுள்ளவர் என்ற காரணத்தால் இந்திய முஸ் லிம்களில் ஒரு பிரிவார் ஷரீப்ஹுஸைனுக்கு ஆதரவு காட்டினர். வேறு சிலர் நஜத்சுல்தானுக்கு ஆதரவு காட் டினர். நமது மௌலானா அவர்கள் நஜத்சுல்தானை ஆத ரவுகாட்டும் கோஷ்டியைச் சேர்ந்திருந்தார். "சுல்தான் இப்னுசுஊதுடைய கொள்கைகளையும், தவறுகளையும், திருத்திக்கொள்வதற்காக நாம் நினைத்தபோது அவரிடம் போராடமுடியும். ஆனால், தற்சமயம் சுல்தான் இப்னு சுஊதை நாம் ஆதரிப்பதால் ஹிஜாஸ் தேசத்துக்கும், இஸ்லாமுக்கும் ஏற்படக்கூடிய நன்மையை நாம் இப் பொழுது இழந்துவிடக்கூடாது. இப்பொழுது கிடைத் துள்ள சந்தர்ப்பம் இனி நமக்கு என்றும் கிடைக்கும்

என்று நினைப்பதற்கில்லை" என்று உபதேசித்தார். நஜத் சுல்தான் இப்னுசுஊதும் தம்முடைய வாக்குறுதியில் உறுதியாகத்தானிருந்தார். ஆயினும், அவரைத் திருப்பி விடுவதற்காகத் திரைமறைவில் செய்யப்பட்ட முயற்சிக்கு அவர் இணங்கி தம்மை "மலிக்குல் ஹிஜாஸ்' (ஹிஜாஸ் அரசர்) என்று பட்டங் கட்டிக்கொண்டார். அவர் அவ்வாறு செய்யாதிருப்பின் இன்று அகில உலக இஸ்லாத்தின் கொடி, ஹிஜாஸ் தேசத்தில் பறந்து கொண்டிருக்கும். அவர் அகில உலக முஸ்லிம்களின் உள்ளத்தை ஆளுபவராக இருந்திருப்பார்.

சமூகவாரிப் பிரசினை:—இந்திய ராஜீய வியவகாரங்களில் சிறுபான்மையோர் பிரசினை மிகவும் சிக்கலான பிரசினையாகும். சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் திருப்திகரமான முடிவுசெய்ய பெரும்பான்மையினர் இன்னமும் முன் வரவில்லை. நமது மௌலானா இது சம்பந்தமாக அதிக சிந்தனை செய்து புதிய ஒரு வழியைக்கண்டுபிடித்து, ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்த அபேக்ஷகர்களும் இதர சமூகத்து வாக்காளர்களில் நாலிலொருபங்கு வாக்குகளையேனும் வாங்கினுலொழிய அவர் வெற்றி பெற்றவராக ஏற்றுக்கொள்ளப்படாது என்று கூறினர். இவ்வழிப்படி தேர்தல் நடைபெறுமாயின் இந்தியாவிலுள்ள எந்த அபேக்ஷகரும் இதர சமூகத்தின் நம்பிக்கைக்கு உரியவராகாமல் சட்டசபைக்குச் செல்ல முடியாது. இதன்மூலம் இந்தியாவின் நேர்மையான ராஜீயக் கொள்கையுள்ளவர்களே தெரிந்தெடுக்கப்படமுடியும்.

வகுப்புவாதத்தையே முதன்மையாகக்கொண்டு பிற சமூகத்தார்மீது துவேஷங்கொண்டுள்ளவர்கள் சட்ட சபைக்குச் செல்ல இடமே ஏற்பட்டிருக்காது.

மற்றொரு வழி :—திருப்தியளிக்கக்கூடிய இத்திட்டத்திற்குப் பிறகு சிறுபான்மையினர் பாதுகாப்புக்காக மிகவும் பிரயோஜனமுள்ள மற்றொரு வழியையும் கூறினர். இந்தியாவில் எந்த இடத்திலும் முஸ்லிம்கள் மொத்தமாக வசிக்கவில்லை. எல்லா மாகாணங்களிலும் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். சென்னை மாகாணத்தில் ஆறு சத விகித மென்றால், ஐக்கிய மாகாணத்தில் பத்து சத விகிதமிருக்கிறார்கள். எல்லைப்புற மாகாணத்தில் தொண்ணூற்றைந்து சத விகிதம், பஞ்சாபில் ஐம்பத்தெட்டு சத விகிதம், வங்காளத்தில் ஐம்பத்தாறு சத விகிதம் இருந்து வருகிறார்கள். சில மாகாணங்களில் சிறுபான்மையினரில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். ஆகவே, இந்தியாவில் அமைதி, சமாதானம், நட்பு, கூட்டுறவு ஆகியவைகளை ஏற்படுத்த வேண்டுமாயின் "ஒரே சமூகத்தார் எல்லா மாகாணங்களிலும் சிறுபான்மையினராக இருக்கக்கூடாது. ஒருமாகாணத்தில் ஒரு வகுப்பார் சிறுபான்மையினராக இருந்தால், இன்னொரு மாகாணத்தில் வேறொரு வகுப்பார் சிறுபான்மையினராக இருக்க வேண்டும்" என்று திட்டம் ஏற்படுத்தினர். ஆகவே, மாகாணச் சட்டசபைகளில் பெரும்பான்மையினராக இருக்கும் எவ்வகுப்பாரும் தங்களது சிறுபான்மையினரை அலக்ஷியம் செய்யமுடியாது. அவ்

வாறு அலக்ஷியம்செய்தால் பிறிதொருமாகாணத்தில் தங்கள் சமூகத்தார் அலக்ஷியம் செய்யப்பட்டுவிடுவர். ஆதலால், இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் சிறுபான்மையினரும், பெரும்பான்மையினரும் ஒருவருக்கொருவர் நேசமாக வாழ இதனுல் இடமேற்படுகிறது.

நமது தலைவர் மௌலானு அவர்களின் இந்தத் திட்டங்கள் அமுல் நடத்தப்படுமாயின், அது இந்தியாவிலுள்ள சகல வகுப்பினருக்கும் நன்மையை அளித்திருக்கும். ஆனுல், காங்கிரஸ் மகாசபை இத்திட்டங்களை ஒப்புக்கொள்ளவுமில்லை. முஸ்லிம் கான்பரன்ஸோ, கிலாபத் கமிட்டியோ இத்திட்டத்தை வற்புறுத்தவுமில்லை. ஆண்டவன் நாடினுல் இனியொரு சமயத்தில் நம்மவர் இத்திட்டத்தையனுசரித்து சில மாறுதல்களுடன் வேறு ஒரு திட்டத்தைத் தயாரிப்பது முடியாத காரியமல்ல.

முதலில் இந்தியன், அப்பால் முஸ்லிம் :—1928-ல் நேருவின் சுயராஜ்ய திட்டத்தால் இந்தியாவில் ஏற்பட்ட கிளர்ச்சிக்குப்பின் மற்ருெரு புதிய கிளர்ச்சி உண்டாயிற்று. அதாவது "முதலில் இந்தியன், அப்பால் முஸ்லிம்" என்ற கிளர்ச்சி. மார்க்கபக்தி அதிகமாகவுள்ளவர்கள் "முதலில் முஸ்லிம், அப்பால் இந்தியன்" என்று கூறினர். காங்கிரஸ் மகாசபையின் தேசீய இயக்கத்தின்பால் விசேஷ அக்கறை கொண்டுள்ளவர்களிற் பெரும்பாலர் "முதலில் இந்தியன், அப்பால் முஸ்லிம்" என்று கூறினர். விஷய ஞானமுள்ள சிலர் இவ்விரண்டையும் விட்டு விட்டு மௌனவிரதம் கொண்டனர். ஆனுல், நமது மௌலானு அவர்கள் மௌனம் சாதித்த

வர்கள் கூட்டத்தில் சேராமல் தம் நோக்கத்தைப் பகிரங்கமாகக் கூறினர். அதாவது "மார்க்க விஷயங்களைப் பற்றிய பிரசினையுண்டாகும்போது நான் முதலிலும் கடைசியிலும் முஸ்லிமாகவே இருப்பேன். முஸ்லிம் என்பதைத் தவிர நான் வேறு யாருமாக இருக்கவேமாட்டேன். இந்திய தேசீயப் பிரசினையுண்டாகும்போது நான் முதலிலும் இறுதியிலும் இந்தியனுகவே இருப்பேன். நான் இந்தியனைத் தவிர வேருெருவனுமில்லை" என்று கூறினர்.

இவ்வாக்கியங்கள் எவ்வளவு நேர்மையானதும் அர்த்த புஷ்டியுள்ளவையுமாக இருக்கின்றன வென்பதைப் பாருங்கள். ஒரு இந்திய முஸ்லிமுக்கு இருக்க வேண்டிய முக்கிய அம்சத்தை இவை தெற்றென விளக்குகின்றன. முஸ்லிம் என்ற முறையில் இஸ்லாமிய பிரசினைதான் முஸ்லிம்களுக்கு முக்கியமானது. இந்தியன் என்ற முறையில் அவர்களுக்கு இந்திய பிரசினை முக்கியமாகும். ஆகவே, இந்திய முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய வியவகாரமும் இந்திய வியவகாரமும் அதி முக்கியமானவை. இரண்டுக்காகவும் அவர்கள் தங்களாலான சகல ஊழியத்தையும் செய்யக் கடமைப்பட்டிருக்கிருர்கள். இதனுல், நமது மௌலானு அவர்கள் தீவிர தேசிய வாதியாக இருந்து போராடும் அதே சமயத்தில் இந்தியாவுக்கு வெளியிலுள்ள முஸ்லிம்களுக்காக அதிகமாகப் பாடுபடுபவராகவுமிருந்தார். இவ்வுணர்ச்சியை அவர் வாயால்மட்டும் வெளியிடாமல் கிரியாம்சையிலும் நன்கு வெளிப்படுத்தினர்.

ஒன்பதாம் அத்தியாயம்

உபகாரம்

இந்தியாவிலுதித்தவர்களில் நமது மௌலானு வைப் பார்க்கினும் அதிகச் சண்டைபோட்ட தலைவர்கள் மிகச்சிலரே இருக்கமுடியும். சத்தியம், அசத்தியம் ஆகிய இரண்டும் ஒன்றையொன்று மோதிக்கொண் டிருக்குமாயின், அவர் தமது பந்துத்துவத்தையோ, சிநேகத்தையோ, ராஜீய தேசீய சம்பந்தத்தையோ கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் சத்தியத்துக்கு உதவிபுரிந்து, அசத்தியத்தை அடியுடன் ஒழிப்பதற் கான சகல முயற்சிகளையும் முழுமனதுடன் செய்வார். அவரது ஜீவிய வாழ்க்கையை நன்கு கவனித்தவருக்கு அவர் "அல்லாஹு தஆலாவுக்காகவே நேசம் கொள்ள வேண்டும், அல்லாஹு தஆலாவுக்காகவே விரோதம் கொள்ளவேண்டும்" என்ற கொள்கையையே முற்றி லும் கடைப்பிடித்திருந்தார் என்பது தெரியவரும்.

இஸ்லாமிய ஒழுக்கத்துக்கும், பெருந்தன்மைக்கும், நற்குணத்துக்கும் சிறந்த ஊற்றுக அவர் இருந்தார். இதனுல், அவர் தம்முடைய ஜன்மவிரோதிகளுக்குங் கூட சமயத்தில் உதவிபுரிபவராக இருந்துவந்தார். இவ்விஷயத்தை விளக்குவதற்காக இரண்டொரு சம் பவத்தை ஈண்டு குறிப்பிடுவோம்:—

ஹஜ்றத் காஜா ஹஸன் நிஜாமி :—டில்லியி லுள்ள காஜாஹஸன்நிஜாமிக்கும் நமது மௌலானு விற்கும் ராஜீயக் கொள்கையில் அதிக வித்தியாச

மிருந்துவந்தது. இவ்விருவரும் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் வேலை செய்தது மிகச் சொற்பம். ஆனால், இவ்விருவருக்குமிடையில் ஹைதராபாத் நிஜாம் ஸமஸ்தான சம்பந்தமாக ஏற்பட்ட பலத்த தகராறு உலகமறிந்த விஷயம். இவருடைய ராஜீய மதப்பிரசார வேலைகளை நமது மௌலானா பலமாகக் கண்டித்து எழுதினார். காஜாஹஸன் நிஜாமியும் இவரைப்பலமாகக் கண்டித்து நேர்மையற்ற முறையிலுங் கூட எழுதினார் என்று கூறலாம். அவ்வாறிருந்தும் ஹஜ்றத்காஜாஹஸன் நிஜாமிக்கு ஒரு சங்கடமானநேரம் வந்தது. அவரது துணைவர்களும், கோஷ்டியினரும், அரசாங்கத்தினரும் கூட அவரை ஆதரிக்கத்தயங்கினர். அவர் தனிமையில் விடப்பட்டவரைப் போலானார். அதுபோழ்து நமது மௌலானா ஒருவர்தான் எல்லோருக்கும் முதலில் அவரை ஆதரித்து அவருக்கு வர இருந்த சங்கடத்தை நிவர்த்திசெய்தார்.

சென்ற 1926-ம் வருஷத்தில் ஆரிய சமாஜிகளின் தலைவரான சிரத்தானந்தர் ஒரு முஸ்லிமால் கொல்லப் பட்டார். "இக்கொலை தனிப்பட்ட ஒருமனிதனால் செய்யப்பட்டதன்று, இதற்குப்பின் பலமான சதியாலோசனைக் கூட்டம் ஒன்றிருந்து வருகிறது; இச்சதியாலோசனைக்குச் சிரத்தானந்தரின் பலமான மதவிரோதியான காஜாஹஸன்நிஜாமிதான் தலைவராக இருக்கக் கூடும்" என்று ஹிந்துப் பத்திரிகைகள் அவருக்கு விரோதமாகப் பல கட்டுரைகளெழுதின. சிரத்தானந்தர் கொலைசெய்யப்பட்டது, ஹிந்துக்களுக்கு அதிகத் துய

ரத்தைத்தந்ததால், ஹிந்துக்களில் ஒரு சதியாலோசனைக் கூட்டம் கிளம்பி, காஜா ஹஸன் நிஜாமியின் உயிருக்கு ஆபத்தையுண்டாக்கிவிடுமோ என்ற ஐயம் உண்டாகி விட்டது. இவ்வளவு கஷ்டமான நேரத்தில் நமது மௌலானா, தமது "ஹம்தர்து" பத்திரிகையில் அவரை ஆதரித்து, ஹிந்துப் பத்திரிகைகளின் சந்தேகங்களைக் கண்டித்து உண்மையை விளக்கியதுடன் "இத்தகைய விஷமத்தனமான இயக்கங்களில் காஜா ஹஸன் நிஜாமி கலந்து கொள்வார் என்று நினைப்பது சுத்தத் தவறு" என்பதாக விளக்கினார்.

மற்றொரு சமயம் :—காஜா ஹஸன் நிஜாமி தமது மோட்டாரில் ஒரு நாள் மாலைநேரத்தில் பழைய டில்லியிலிருந்து நிஜாமுத்தீனுக்கு வந்து கொண்டிருந்தார். தமது வீட்டுக்குப் பக்கத்தில் மோட்டார் வந்து நின்றவுடன், யாரோ ஒருவர் காஜா ஹஸன் நிஜாமியைத் தொடர்ச்சியாகச் சுட்டார். நல்லவேளையாக அவர் உயிருக்கு எவ்விதச் சேதமும் ஏற்படவில்லை. ஆனாலும், அவருடனிருந்த மற்றொருவர் காயமடைந்து மரித்தார்.

இச்சம்பவம் நிகழ்ந்தபோது நமது மௌலானா முஹம்மது அலி தேவ்பந்தில் இருந்தார். அவர் இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டு, காஜா ஹஸன் நிஜாமிக்குத் தந்திமூலம் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டதுடன், மறுநாள் தேவ்பந்திலிருந்து டில்லிக்குத் திரும்பிவந்தபோது காஜா ஹஸன் நிஜாமியின் இல்லத்திற்கு நேரில் சென்று, தமது அனுதாபத்தைத் தெரிவித்து, அவருக்கு ஆறுதல் கூறினார். அவரது

இச்சிறந்த உதாரகுணம் காஜாசாகிபிடத்தில் நன்கு பதிந்துவிட்டது. ஆகவே, அவர் தமது தினசரிக் குறிப்பில் 'மிஸ்டர் முஹம்மது அலி' என்று எப்பொழுதும் மௌலானாவைப் பற்றி எழுதி வந்ததை விட்டு விட்டு "மௌலானா முஹம்மது அலி" என்று எழுதி தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

விஷயம் இம்மட்டுடன் நின்றுவிடவில்லை. துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தைப் போலீசார் புலன் விசாரித்துக் குற்றவாளியைத் தண்டனைக்குட்படுத்த வேண்டும் என்பது காஜாஹஸன் நிஜாமியின் விருப்பம். ஆனால், போலீசார் இவ்விஷயத்தில் போதிய சிரத்தை காட்டவில்லை. போலீசாரின் இந்நடத்தையால் காஜாஹஸன் நிஜாமிக்கு அதிக வருத்தமேற்பட்டது. இவர் தம் உயிருக்கு ஆபத்து நிச்சயமாய் வந்து விடும் என்பதை உறுதியாக நம்பினார். அவ்வாறிருந்தும் போலீசார் அச்சம்பவத்தைக் குறித்து கிரியாம்சையில் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

இக்காலத்தில் மௌலானா முகம்மது அலி அரசாங்கத்துக்கு மாறாக நடக்கும் மாறுதல் கக்ஷிக்காரராயிருந்தும், டில்லி போலீஸ் சூப்ரின்டண்டன்டை டெலிபோனில் அழைத்து, போலீசார் காஜாஹஸன் நிஜாமி விஷயத்தில் அசிரத்தை கொண்டிருப்பதைப் பற்றி விவாதித்து, போலீசாரின் இந்நடத்தையால் விளையக்கூடிய பலாபலனை விளக்கிக் கூறினார். இதன் பேரில் போலீசார் அப்புறம் சிலநாள் வரை இதில் சிரத்தையுடன் வேலை செய்தனர்.

டாக்டர் கிச்லு :—கி. பி. 1927-ம் வருஷத்தில் இந்தூரில் பெரும் குழப்பமேற்பட்டது. அங்குள்ள முஸ்லிம்கள் இரக்கமற்றுக் கஷ்டப்படுத்தப்பட்டதை உலகம் நன்கறியும். டில்லியிலுள்ள பிரபல பாரிஸ்டரான மிஸ்டர் ஆஸிப் அலியை இவ்விஷயமாக இந்தூருக்கு அனுப்ப வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது. இச்சமயம் அமிர்தசரஸிலிருந்து டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு, இந்தூர் முஸ்லிம் குற்றவாளிகளுக்காக இந்தூரில் வழக்கை நடத்தச்சென்றூர். டாக்டர் கிச்லு பிரபல பாரிஸ்டராகவும், தலைவராகவும் இருந்ததால், அவர் இந்தூர் சென்ற சமாசாரம் முஸ்லிம்களுக்கு ஆறுதல் அளித்தது. டாக்டர் கிச்லு வழக்கை மேல்நடத்துவதற்கான சகல காரியங்களையும் கவனித்துக் கொண்டிருந்தார். ஆனுல், அவர் இருபது மணி நேரத்துக்குள் இந்தூரை விட்டுச் சென்றுவிட வேண்டுமென்று சமஸ்தான மகாராஜா ஹோல்காரிடமிருந்து உத்தரவு வந்தது. இந்தூரைவிட்டு ரெஸிடென்ஸி பிரதேசத்தில் இருந்துகொண்டு வழக்கை நடத்த வேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டார். ஆனுல், பிரிட்டிஷ் பிரதேசமான ரெஸிடென்ஸி இலாக்காவில் தங்குவதற்கும் அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. ஆகவே, அவர் நிர்ப்பந்தமாக டில்லிக்குத் திரும்பிவர வேண்டியதாயிற்று. அவர் டில்லிக்கு வந்து நடந்த விருத்தாந்தத்தை நமது மௌலானுவிடம் கூறினுர்.

இந்தூர் சமஸ்தானத்துடன் நமது மௌலானுவிற்கு இருந்துவந்த சம்பந்தம் உலகறிந்த விஷயம்.

அவர்து உறவினரும் பந்துக்களும் இந்தூரில் இருக்கின்றனர். தவிர, அவருடைய மைத்துனர் மிஸ்டர் முஅஜ்ஜம் அலி பாரிஸ்டர் (டாக்கா லா காலேஜ் மாஜி பிரின்ஸிபால்) குற்றவாளிகளை விசாரித்து முடிவுகூறும் ட்ரிபியுனலில் ஒரு அங்கத்தினராக இருந்தார். இச்சம்பந்தங்களை எல்லாம் அவர் லக்ஷியம் செய்யவில்லை. இது சம்பந்தமாக "ஹம்தர்து" பத்திரிகையில் ஒரு அனுபந்தத்தை வெளியிட்டு டாக்டர் கிச்லுவுக்கு ஆதரவளித்து, இந்தூர் சமஸ்தான அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தார்.

இக்காலத்தில் நமது மௌலானாவிற்கும் டாக்டர் கிச்லுவிற்கும் ராஜீய விஷயங்களில் அபிப்பராயபேதம் பலமாக இருந்துவந்தது. டாக்டர் கிச்லு ஆரம்பித்துள்ள தன்ஜீம் இயக்கமும் அவருடைய போக்கும் இந்தியாவுக்குப் பெரும் நஷ்டத்தையுண்டாக்கும் என்பது மௌலானாவின் அபிப்பராயம். ஆனால், இந்தூர் சம்பவத்தில் டாக்டர் கிச்லுவின் பக்கம் நியாயமிருக்கிறது என்பதை அவர் உணர்ந்தபோது, தம்முடைய அபிப்பராயபேதத்தைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் அவரை ஆதரித்து இந்தூர் சமஸ்தான அரசாங்கத்தைக் கண்டித்தார்.

டாக்டர் ஆலம்:—டாக்டர் முஹம்மது ஆலம் பஞ்சாப் தலைவர்களில் ஒருவர். இவரது போக்கும், இவரது கோஷ்டியினருடைய போக்கும் மௌலானாவிற்கு எப்பொழுதும் பிடிக்காது. இவர்களுடன் சேர்ந்து வேலை செய்ய மௌலானாவிற்குச் சந்தர்ப்பம்

வாய்த்ததே இல்லை. நேரு அரசியல் திட்டம் சம்பந்தமாக ஏற்பட்ட பிணக்கில் மௌலானாவுக்கும் டாக்டர் முஹம்மது ஆலமுக்கும் இன்னும் கடுமையான அபிப்பராயபேதமுண்டாகி இருந்தது.

ஒருமுறை டாக்டர் முஹம்மது ஆலம் தமது மனைவி மக்களுடன் ஒரு காரியார்த்தமாக லாகூருக்கு வெளியில் மோட்டாரில் சென்று கொண்டிருந்தார். தெய்வாதீனமாக மோட்டார் விபத்து ஏற்பட்டு டாக்டர் ஆலமுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பலமான காயமேற்பட்டது. அவரது புதல்வருக்குப் பாடம் போதிக்கும் உபாத்தியாயருக்கு அவ்விபத்தில் ஏற்பட்ட அடியினால் அவர் உயிர் தப்பினாரில்லை. இவ்விபத்துச் செய்தி நமது மௌலானாவிற்கு டில்லியில் கிடைத்தது. மிகத் துயரமடைந்தார். அதே தினம் மஃரிபு தொழுகைக்குப்பின் டில்லி ஜாமிஆ மஸ்ஜிதில் டாக்டர் ஆலமும் அவரைச் சேர்ந்தவர்களும் சீக்கிரத்தில் குணமடைய வேண்டும் என்பதற்காக ஒரு பெருங் கூட்டம் ஏற்படுத்தி, அவர் பிரார்த்தனை புரிந்தார். சபையினர் அனைவரும் ஆமீன் கூறினர்.

மற்றொரு தலைவர்:—பஞ்சாப் மாகாணத்து மற்றொரு பிரபலத் தலைவருக்காகவும் அவர் பிரார்த்தனை புரிந்தார். அத்தலைவருக்கு மௌலானா எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:—

“மௌலானா அபு......அவர்களுக்காகவும், தங்களுக்காகவும், “ஸியாஸத்” பத்திராதிபர் அவர்களுக்காகவும் நான் சிறையிலிருக்கும்போது அநேக முறையில் துஆ

செய்திருக்கிறேன் என்பதை நான் அல்லாஹ்வை சாக்ஷி வைத்துக் கூறுகிறேன். என்னைச் சீர்திருத்தி நேர் வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் இறைவனைப் பிரார்த்தித்த போதெல்லாம் தங்களுக்காகவும் அவ்விருவருக்காகவும் துஆ செய்திருக்கிறேன். மற்றவர் பேச்சைக் கேட்டு விரோதம் செய்ய முன்வரும் எண்ணத்தை மனத்திலும் நினையாதீர்கள். மற்றவர்களைக் குறை கூறித் திரியும் எண்ணத்தை விட்டுவிடுங்கள். உங்களுடைய சுய உழைப்பால் பெயரெடுக்க விரும்புங்கள். மற்றவர்களை இழிவுபடுத்துவதால் உங்களுடைய கீர்த்தியை நிலை நிறுத்த நினைக்கவேண்டாம்.''

பரோடா மகாராஜா:—ஒரு முக்கிய சந்தர்ப்பத்தில் பரோடா மகாராஜாவுக்கும் நமது மௌலானா சரியான உதவிபுரிந்தார். அவ்விவரத்தைப்பற்றி அவர் கூறியிருப்பதையே ஈண்டுக் குறிப்பிடுவது மிகப்பொருத்தமாக இருக்கும்:—

"டில்லி தர்பாரின் போழ்து, பரோடா மகாராஜா, மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்களையும், அவரது மனைவி மேரி மகாராணியார் அவர்களையும் மதிக்கவில்லை என்று அவர் மீது ஒரு பெருங்குற்றம் சுமத்தப்பட்டது. இத்தேசத்திலுள்ள பத்திரிகைகளில் ஒன்று கூட உண்மையை ஆதரிக்கத் தைரியங் கொள்ளவில்லை. ஹிந்துப் பத்திரிகைகளில் ஒன்று கூட இதைப்பற்றி எழுதாதிருந்தது ஆச்சரியமாகும். நான் தின்ற உப்புக்குப் பங்கம் செய்யக்கூடாது என்ற எண்ணத்தாலல்லாமல் உண்மையை உண்மை என்று ருஜுப்பிக்க

வேண்டும் என்ற எண்ணத்தால், இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள இங்கிலிஷ் பத்திரிகைகளை எதிர்த்து, லார்டு ஹார்டிங் பிரபுவின் போக்கு ஓரளவு சொந்த வருத்தத்தையும் கோபத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்று ருஜூப்பித்தேன். கல்கத்தாவிலுள்ள ஒரு ஆங்கிலப் பத்திரிகை என்னுடைய சொல்லின்பேரில் மகாராஜா கெய்க்வாரை ஆதரித்தது. இதற்குப் பிரதிபலனாக மகாராஜாவிடம் ஏதேனும் வாங்குவது ஒரு பக்கல் கிடக்க, அதே க்ஷணத்தில் அவரிடம் நான் பார்த்துவந்த உத்தியோகத்தை (அக் காலத்தில், நான் சம்பளமில்லாமல் இரண்டு வருஷம் லீவு எடுத்திருந்தேன். மகாராஜா என்னுடைய ராஜிநாமாவை ஒப்புக்கொள்ள மறுத்துக் கொண்டிருந்தார்) ராஜீநாமாக் கொடுத்து, அச்சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்ப்பவர் கூறுவதில் என்ன நம்பிக்கை இருக்கிறது என்று அரசாங்கத்தார் கூறுவார்கள் என்ற காரணத்தைக் கூறி எனது ராஜீநாமாவை அவர் ஒப்புக் கொள்ளும்படி செய்தேன்.”

பம்பாய்க் கலகம்:—நமது தலைவர் நீர் ரோகத்தால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தார். மௌலானா ஷௌகத் அலியின் வற்புறுத்தலுக்கு இணங்கி அவர் பம்பாயிலுள்ள ஒரு ஹாஸ்பிடலில் சிகிச்சை செய்யப் பட்டுக் கொண்டிருந்தார். படுக்கையை விட்டு அசையக் கூடாது என்றும், அவ்வாறு அசைந்தால் எலும்புகள் கெட்டுப்போகுமென்றும், எலும்புகள் கெட்டுப் போனால் பின்னர் அவைகளை வெட்டவேண்டிய அவ

சியமேற்படுமென்றும் டாக்டர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்திருந்தார்கள். இது 1929-ம் வருஷம் பிப்ரவரி மாதம் நடைபெற்றது. இக்காலத்தில் அவர் காங்கிரஸைக் கடுமையாக எதிர்ப்பவராக இருந்தார். ஹிந்துக்களிலும் காங்கிரஸ் மகாசபையிலும் அவருக்குச் செல்வாக்குக் குறைந்திருந்த சமயம்.

அவர் பம்பாய் ஹாஸ்பிடலில் படுக்கையில் இருந்த இச்சமயத்தில் அந்நகரில் ஹிந்து முஸ்லிம் கலகம் ஏற்பட்டதாகத் தகவல் கிடைத்தது. கொஞ்ச நேரத்துக்குப்பின் காயம்பட்டவர்களும், அடிபட்டவர்களும் ஹாஸ்பிடலுக்குச் சிகிச்சைக்காக வந்தார்கள். சில மணி நேரத்துக்குள் ஹாஸ்பிடலில் காயம்பட்டவர்கள் நிறைந்துவிட்டனர். இக்காட்சியை அவர் போன்றவர்கள் பார்த்துக் கொண்டு, தம்முடைய தேக சுகத்தைப் பெரிதென நினைத்து இருந்துவிடமுடியுமா? இதை அவர் சகிக்கவில்லை. ஹாஸ்பிடலை விட்டு வெளியேறிக் கலக ஸ்தலம் சென்றார். அங்கு நடந்த விவரத்தைப்பற்றி அவர் கூறியதையே ஈண்டுக் குறிப்பிடுவம்:—

"நான் கமாட்டிப் பூராவில் முஸ்லிம்கள் வசிக்கும் ஒவ்வொரு தெருவுக்கும் சென்று அல்லாஹ் றஸூல் ஆகியவர்களை ஆணையிட்டு அவர்களைக் கெஞ்சி, மில் தொழிலாளர்கள் செய்யும் அநீதி அக்கிரமங்களை நீங்களும் செய்யவேண்டாமென்று தடுத்து அவர்களுக்கு வெட்க முண்டு பண்ணினேன். நான் அங்கிருந்து வெளிப்படும் சமயத்தில் ஹிந்துக்களின் ஒரு கூட்டம் முஸ்லிம்

களைத் தாக்க முன்னேறிவந்தது. முஸ்லிம்களும் தங்களுடைய தெருக்களிலிருந்து வெளியேறி, தங்கள் மத சகோதரர்களுக்கு உதவிபுரிய முன்வந்தபோது ராணுவத்தார் குண்டுபோட ஆரம்பித்து விட்டனர். துப்பாக்கிப் பிரயோகம் நடந்து கொண்டிருக்கும்போது, எதிரிலிருந்து ஒரு ஜட்கா வண்டிக்காரன் தனது ஜட்காவை ஓட்டிக் கொண்டு வந்தான். உடனே, முஸ்லிம்கள் அவனைக் கூட்டமாகத் தாக்க ஆரம்பித்தனர். நான், உடனே டாக்ஸியை விட்டுக் குதித்து, அவர்களிடம் ஓடி, அல்லாஹ் றஸூல் ஆகியவர்களின் பெயரைக் கூறி, ஜட்கா வண்டிக்காரனைத் தாக்காமல் தடுத்தேன். இதனுல் குற்றமற்ற ஒருவன் அடிபடாமல் தப்பினுன்.''

இதுதான் நமது மௌலானுவின் பெருந்தன்மையாக இருந்தது. இந்தியாவில் தலைவர்களுக்கும் செல்வாக்குள்ளவர்களுக்கும் பஞ்சமில்லை. ஆனல், நமது மௌலானுவின் பெருந்தன்மை வாய்ந்தவர்கள் அகப்படுவதுதான் அருமை.

பத்தாம் அத்தியாயம்

உறுதியும் துணிச்சலும்

மௌலானா முஹம்மது அலி ஒரு காரியத்தை நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தால், அப்புறம் அதில் கற்பாறையைப்போல் உறுதியாக நின்று கொள்வது அவருடைய பிறவிக் குணமாக இருந்து வந்திருக்கிறது. இதனாலேற்படும் பலாபலனைப் பற்றியும், இதைச் செய்வதன் உசிதானுசிதத்தைப் பற்றியும் அப்புறம் லக்ஷம் கூறிடினும் அதைவிட்டு மாறவேமாட்டார். அவர் நினைத்த காரியத்தைச் செய்தே முடிப்பார்.

ஒரு வியாசம்:—"சாய்ஸ் ஆப் தி டார்க்ஸ்" என்று அவர் ஒரு வியாசம் எழுதி வெளியிட்டார். அதைப்பற்றி மீர் மஹ்பூஜ் அலிசாகிப் பின் வருமாறு கூறி இருக்கிறார்:—

> "ஒரு காரியத்தைப் பற்றி ஆலோசனை செய்து அது சரியான காரியம்தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டால், அப்புறம் அதைப் புறக்கணிப்பது அவருடைய இயற்கையில் அசாத்தியமானதாகவே இருந்தது. "சாய்ஸ் ஆப் தி டார்க்ஸ்" என்ற தலையங்கமிட்டு அவர் எழுதிய வியாசம் அவருடைய ஜீவியத்தின் சத்து அனைத்தையும் சேர்த்து எழுதியதென்று கூறலாம். மர்ஹூம் ராஜா (குலாம்ஹுஸன்) அவ்வியாசத்தைப் படித்துவிட்டு ஹக்கீம் (அஜ்மல்கான்) சாகிபிடமும் டாக்டர் அன்ஸாரியிடமும் இதைப்

பற்றிப் பிரஸ்தாபித்தார். டாக்டர் அன்ஸாரி அவ் வியாசத்தைப் படித்தார். ஹக்கீம் சாகிப் அதன் கருத்தைக் கேட்டார். இவ்வியாசம் இது போழ்து வெளியிடத் தகுந்ததாக இல்லை என்று அவ்விருவரும் அபிப்பராயப்பட்டார்கள். ராஜா சாகிப் அவ்வியாசத்தைப் படித்துப் பயந்து என்னை உடனே வரும்படி பதாயூனுக்குத் தந்தி சொன்னார். நானும் வந்தேன். சாந்தமான முறையில் நாங்கள் அவருக்கு எவ்வளவோ கூறினோம். அவைகளில் ஒன்றையும் அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை. நாங்கள் கொஞ்சம் அதிகமாகச் சொன்னபோது "நான் எனது மரண வாரண்டில் கையொப்பமிட்டிருக்கிறேன் என்பதை நானறிவேன். இப்பொழுது நான் எனது அபிப்பராயத்தை முடிவுசெய்துகொண்டேன். இனி ஒன்றுஞ் செய்யமுடியாது என்று கூறிவிட்டார்."

சுண்டுவாடா:—டாக்டர் அனிபெஸன்ட் முதலியவர்கள் விடுதலையடைந்தபின், அலி சகோதரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதைப் பற்றி தேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. "அலி சகோதரர்களையும் விடுதலை செய்துவிட வேண்டும்" என்று வைசிராயைக் கட்டாயப்படுத்தப்பட்டது. ஆனால், சர்க்கார் இக்கோரிக்கையை கவனிக்கவில்லை. தவிர, இரகசியப் போலீஸ் சூப்ரின்டன்டன்ட் ஷெய்கு அப்துல் மஜீத் சாகிப், மௌலானா முஹம்மது அலியிடம் சென்று

அரசாங்கத்தார் திருப்தியடையக்கூடிய ஒரு ஸ்டேட்மென்டை எழுதி வாங்க முயன்றூர். இவ்வாறு ஒரு ஸ்டேட்மென்டை எழுதிக் கொடுத்தால் அரசாங்கத்தார் விடுதலை செய்து விடுவார்கள் என்றும் வாக்களித்தார். ஆனால், தன்னம்பிக்கை என்ற இம்மலையானது தன்னுடைய உறுதியைவிட்டு மாறவில்லை. இவ்வாறான ஸ்டேட்மென்ட் எழுதிக்கொடுக்க கண்டிப்பாக அவர் மறுத்துவிட்டார். ஜனுப் முஹம்மது அலி ஜின்னா, மல்ஹருல்ஹக், மஹ்மூதாபாத் மகாராஜா உள்பட அநேகர் அபார முயற்சிகளைச் செய்தனர். ஸ்டேட்மென்ட் எழுதி வாங்காமல் விடுதலை செய்ய அரசாங்கமும் முன்வரவில்லை. ஸ்டேட்மென்ட் எழுதிக் கொடுத்து விடுதலையடைய அலி சகோதரர்களும் இணங்கவில்லை. அவர்கள் சந்தோஷமாக ஐந்து வருஷ காலம் பாதுகாப்பில் இருந்துவிட்டு, இறுதியாகத் தங்கள் இஷ்டம்போல் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலையடைந்தனர்.

ரஹ்மத்துல்லா கமிஷன்:—அலிகார்முஸ்லிம் சர்வகலாசாலையின் முன்னேற்றத்தைக் கருதி போபால் பேகம்சாகிபா ஒரு கமிஷனை நியமித்தார். அக்கமிஷனுக்கு "ரஹ்மத்துல்லா கமிஷன்" என்று பெயர். இக்கமிஷன் முன், நமது மௌலானா முஹம்மதுஅலி சாக்ஷியம் கொடுக்கவேண்டும் என்று அவருடைய நண்பர்களனைவரும் விரும்பினர். அலிகார் சர்வகலாசாலையைச் சீர்திருத்துவதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாக இருந்தது. ஆகவே, அநேகர் சாக்ஷியம் கொடுத்தனர்.

நமது மௌலானா தம்முடைய போக்கில் மாறுதலேற் படுத்திக் கொள்ளக்கூடாது என்று முடிவுசெய்து கொண்டிருந்தார். ஆதலால், அவரை எத்தனையோ பேர் தூண்டியும் அவர் சாக்ஷியம் கூற இணங்கவில்லை. அவர் இக்கமிஷனிடம் சாக்ஷியம் கூறவேண்டும் என்று அக் கமிஷனும் அபிப்பராயப்பட்டது. போபால் நாவாபும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். இது சம்பந்தமாக நமது மௌலானாவிற்கு வந்த கடிதத்தின் ஒரு பகு தியை வாசகர்கள் அறிந்து கொள்வது நல்லது. அதன் விவரம் வருமாறு:—

"தாங்களும் முஸ்லிம் சர்வகலாசாலைக் கமி ஷன் முன் சாக்ஷியங் கூறுவது மிக நல்லது என்பது என்னுடைய அபிப்பராயம். ஒத்துழை யாமை என்றவிவாதத்தைக் கவனியாமல் கல்வி போதிக்க வேண்டிய முறைகளையும் சட்டதிட்ட அமைப்பையும் பற்றித் தாங்கள் சாக்ஷியங்கூற லாம். இச்சந்தர்ப்பம் சர்வகலாசாலையில் போதனா முறையையும் ஒழுக்கத்தையும் சீர்திருத்தவேண் டிய சந்தர்ப்பமாகும். தாங்கள் சாக்ஷியங் கொடுக்க அலிகாருக்குச் செல்வது எனது அபிப்பராயத்தில் மிகவும் அவசியமாக இருக்கிறது. தாங்கள் சாக்ஷியங்கொடுத்தால் மிக நல்லதாக இருக்கும் என்பது ஹிஸ் ஹைனஸ் போபால் நவாப் அவர் களுடையவும், ஸர். இப்ராஹிம் ரஹ்மத்துல்லா அவர்களுடையவும், புரோபஸர் ரஹ்மானுடைய வும் அபிப்பராயம்."

இவ்வாறு கடிதங்கள் எழுதி வேண்டிக்கொண்டும், நமது மௌலானா தமது அபிப்பராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

அலிகார் ஜூபிப்ளி:—அலிகார் சர்வகலாசாலையின் ஐம்பதாவது வருஷ ஜூப்ளிவிழாவின் போழ்தும் இது போன்ற முக்கிய சந்தர்ப்ப மேற்பட்டது. மௌலானா முஹம்மதுஅலிக்கு அலிகார் சர்வகலாசாலையின் பாலுள்ள இடையறுதபற்றைக் கவனிக்குமிடத்து இம் முக்கிய சந்தர்ப்பத்தில் அவர் அங்கு சென்று அவ் விழாவில் கலந்து கொள்ளவேண்டியது அவசியமாக இருந்தது. ஆனால், கொள்கை என்ற விஷயம் இங்கு தடைக்கல்லாகக் குறுக்கே நின்றுகொண்டது. ஆகவே, அவர் இவ்விழாவில் கலந்துகொள்ள இஷ்டப்படவில்லை. அவர் இஷ்டமில்லாமலிருப்பதை அவரது பள்ளிக்கூட நண்பரும் ஜபல்பூரில் ஜட்ஜாக இருந்தவரும் பாரிஸ் டருமான ஜனாப் இஹ்ஸானுல்ஹக் என்பவர் உணர்ந்து அவருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதி ஜூப்ளிக்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டார்:—

"1915-ல் நடைபெற்ற ஓல்டு பாய்ஸ் டின்னருக்குப் பிறகு நான் அலிகாருக்குச் செல்லவில்லை. சில சம்பவங்கள் எனக்குக் குறுக்கிட்டதால் நான் அங்கு செல்லச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இப்பொழுது ஜூப்ளியில் கலந்துகொள்ள எனக்கு விருப்பமிருக்கிறது. தாங்கள் அலிகார் செல்ல இஷ்டப்படவில்லை என்பதாகத் தெரிய வருகிறது. தாங்கள் செல்லாவிடில் நூற்றுக்கணக்கான மற்ற

வர்களும் செல்லமாட்டார்கள் என்பதை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். நாங்கள் வழி தவறியவர்களாக இருக்கலாம். ஆனால், நாங்களும் உங்கள் மனிதர்கள்தான், நீங்களும் எங்களைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.''

பதினேராம் அத்தியாயம்

மத உணர்ச்சி

மௌலானு முஹம்மது அலியின் ராஜீய, தேசீய வாழ்க்கையில் அவருடைய மத உணர்ச்சியும் ஒரு முக்கிய பாகமாக இருந்தது. அவருக்கு ஆழமான மத பக்தியும், இஸ்லாமியக் கல்வியுமிருந்தது. அவர் தமது வாணுளில் ஒவ்வொரு காரியத்தையும், சிக்கலான ஒவ்வொரு ராஜீயப் பிரசினையையும் மார்க்க சம்பந்த முள்ளதாகவே காண்பார்.

சில தலைவர்களைப்போல் அவர் ஒரு காலம்வரை ஒரு மாதிரியாக இருந்துவிட்டு அப்பால் ராஜீய நன்மையை யுத்தேசித்து தம்மீது 'மார்க்க பக்தி' என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டவரல்லர். அவர் பால்யராக இருந்த காலம் முதலே மார்க்க பக்தியும் மத உணர்ச்சியும் நிரம்பியவராக இருந்தார்.

ஸர் முஹம்மது யாக்கூப் :—"அலிகாரில் முஹம் மது அலி மாணவராக இருந்த காலத்தில் ஷௌகத்தின் ஆதிக்கம் மிகைத்திருந்தது. சீமைக்குச் சென்றபின் அங்கு அவர்மீது வெளிக்கோலமான ஆங்கில முறைகள் மிகைத்திருந்தன. ஸூட், பூட், ஹாட் ஆகியவை களணிவதில் அவர் அதிகமாக ஈடுபட்டிருந்தார். அவ் வாறிருந்தும், அவர் மதக் கொள்கையில் எப்பொழுதும் ஸ்திரமாகவே இருந்தார். சீமையிலுங்கூட அவர் ஒரு போதும் றம்லான் மாத நோன்பை நோற்கத் தவறிய தில்லை" என்று கூறி இருக்கிருர்.

ஹிஜாஸ் நஜத் யுத்த காலம் :—மௌலானா முஹம்மது அலி அவர்களே தம்முடைய மதக் கொள்கை சம்பந்தமாகக் கூறி இருக்கிறார். ஹிஜாஸ் அரசரான ஷரீப் ஹுஸைனுக்கும் நஜத் சுல்தான் இப்னுஸுஊதுக்கும் யுத்தம் ஏற்பட்ட காலத்தில் இந்தியாவில் இரு கக்ஷிகள் தோன்றின என்பதை யாம் முன்னொரு அத்தியாயத்தில் கூறி இருக்கிறோம். இவ்விரு கக்ஷியில் நமது மௌலானா முஹம்மது அலி ஒரு கக்ஷியிலும் அவருடைய ஞானசிரியரான மௌலானா அப்துல்பாரீ சாகிப் வேறு ஒரு கக்ஷியிலுமாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொண்டார்கள் என்றும் நாம் விவரித்திருக்கிறோம். எனவே, மௌலானா அப்துல்பாரீ சாகிப் அவர்களிடம் மௌலானா முஹம்மது அலி தீட்சை பெற்று மத விசுவாசப் பிரமாணம் செய்திருக்கிறார். இப்பிரமாணத்தை முறித்துக் கொள்வது சம்பந்தமான பிரசினையும் இக்கிளர்ச்சியின் போது சிலரால் உண்டாக்கப்பட்டது. அப்பொழுது மௌலானா முஹம்மது அலி தமது மத விசுவாசத்தைப்பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார் :—

"சகல புகழும் அல்லாஹ்வுக்கே தகும். நான் மௌலானா அவர்கள் கையில் மத விசுவாசப் பிரமாணம் செய்வதற்கு முந்தியும் முஸ்லிமாக இருந்தேன், இன்றும் முஸ்லிமாகத்தானிருக்கிறேன். ஆண்டவன் நாடினால் இனி எப்பொழுதும் முஸ்லிமாகவே இருப்பேன். அலிகாரில் எட்டு வருஷங்களும், ஆக்ஸ் போர்டில் நான்கு வருஷங்களும் இருந்தேன். இந்தப்

பன்னிரண்டு வருஷ காலத்தில் என்னிடம் குப்ரான எண்ணமோ, மார்க்கப் புரட்டான உணர்ச்சியோ உண்டாகவில்லை. அவ்வாறிருக்க, இப்பொழுது நான் இஸ்லாமுக்காகவே அலிகாரைவிட்டு முகந்திரும்பி விட்டேன். ஆக்ஸ்போர்டையும் உதைத்துத் தள்ளிவிட்டேன். இப்பொழுது குப்ரின் பக்கமும், மார்க்கப்புரட்டின் பக்கமும் இழுத்துச் செல்ல என்னை இறைவன் விட்டுவிடுவானோ? இப்பொழுது நான் கேட்கும் துஆ எல்லாம் "என்னை யாவரும் வெறுக்கட்டும். ஆனால், நீயும் உனது ரஸூலும் என்னை வெறுக்கக்கூடாது. நான் அளித்த வாக்குத்தத்தங்களெல்லாம் முறிந்து போகட்டும். ஆனால், உன்னிடத்திலும், உனது ரஸூலிடத்திலும் அளித்த வாக்குத்தத்தங்கள் மட்டிலும் முறிந்துவிடக் கூடாது. இவ்வுலகம் முழுவதிலும் நான் செய்து கொடுத்த பிரமாணம் மாற்றப்பட்டுப்போகட்டும். ஆனால், ரோஸேமீதாக்கில் எல்லாவற்றிற்கும் முதலில் செய்து கொடுத்த பிரமாணம் மட்டும் மாற்றப்படக் கூடாது. நான் உன்பால் திருப்தி கொண்டுளேன், உனது பரிசுத்த ரஸூலின்பால் திருப்திகொண்டுளேன், உனது திருமறையின்பால் திருப்திகொண்டுளேன், ரஸூலின் ஸுன்னத்தின்பேரில் திருப்திகொண்டுளேன் என்பதை நான் நாவாலுரைப்பதுடன் நீயும் உனது ரஸூலும் என்பால் திருப்திகொள்ளவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்" என்பதே.

மௌலானா அப்துல்மாஜித் சாகிப்:—மௌலானா அப்துல்மாஜித் தர்யாபாதி இந்தியாவிலுள்ள சிறந்த

விஞ்ஞான சாஸ்திரிகளிலொருவர். இவர் ஆங்கில பாஷையில் தத்துவ சாஸ்திரம் சம்பந்தமாக ஒரு புத்தகத்தை வெளியிட்டார். இதைப் பற்றி நமது தலைவர் மௌலானாவின் அபிப்பராயத்தைக் குறித்து அப்துல் மாஜித் தர்யாபாதி கூறி இருப்பது வருமாறு:—

1916-ம் வருஷத்தில் ஆங்கிலபாஷையில் தத்துவ சாஸ்திரம் சம்பந்தமாக ஒரு புத்தகம் எழுதினேன். சுண்டுவாடாவில் பாதுகாப்பில் வைக்கப்பட்ட கைதியானவர் (மௌலானா முஹம்மதுஅலி) அந்தப் புத்தகத்தைப்பற்றித் தம்முடைய அபிப்பராயத்தைக் கடிதத்தின்மூலம் அறிவித்தார். என்னை அதுவரை "யுக்தி" சாஸ்திரம் ஆட்டிவைத்துக் கொண்டிருந்தது. எனக்கு அக்கடிதத்தைப் பார்த்தபின் "காம்ரேட்" பத்திரிகையின் ஆசிரியரின் ஒவ்வொரு வரியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்பால் பக்தி ததும்பினதாக இருக்கிறது என்பதைக்காண எனக்கு ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரிய முண்டாயிற்று.

கராச்சி சிறை:—நமது மௌலானாவின் தினசரிக் குறிப்பு புத்தகங்களிலிருந்து சில விபரங்கள் கிடைத்திருக்கின்றன. கராச்சி சிறையில் அவர்பிரவேசித்தபோது கூறியவிபரத்தைப்பற்றி எழுதி இருப்பதாவது:—

"மாலை எழுமணிக்கு நான் சிறைக்கூடத்தில் வந்து சேர்ந்தேன். 'என் றப்பே உண்மையின் பிரவேசத்தில் என்னைப்பிரவேசிக்கச் செய். உண்மையின் வெளியேற்றத்தில் என்னை வெளியேறச் செய். இன்னும்

எனக்கு உன்னிடத்திலிருந்து அதிகாரியையும் உதவியாளனையும் ஏற்படுத்துவாயாக' என்ற திருவேதவசனத்தைப் படித்துக்கொண்டு சிறையினுட் புகுந்தேன்... படுக்கை முதலியன சிறைச்சாலைக் குரியவைகள் தாம். வந்தவுடன் இரண்டு ரக்கஅத்து ஷுக்ரிய்யாவுக்காகத் தொழுதேன்."

"நித்திரைவந்து கொண்டிருந்தது. இஷாத் தொழுகை தவறிவிடும் என்பதற்காக நான் தூங்கவில்லை. இஷாத் தொழுத பின்பு படுத்துக்கொண்டேன். ராத்திரியில் பாரா கொடுப்பவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆதலால், இடையிடையே விழித்துக்கொண்டிருந்தேன். குலாம் முஜத்தித்சாகிப் ஊக்கமும், தைரியமும், பொறுமையும், சாந்தமுமுள்ள பெரியார். அவரிடம் பெரியார்களுக் கிருக்கவேண்டிய சகல அம்சங்களும் இருக்கின்றன."

"மாலையில் சிறைக்குள் அடைக்கப்பட்டோம். இராத்திரியில் சாப்பிடவில்லை. இஷாத் தொழுதுவிட்டு நித்திரைக்குச் சென்றேன். இரவு 3½ மணிக்கு எழுந்தேன். தஹஜ்ஜத் தொழுக இறைவன் உதவிசெய்தான்."

பலஸ்தீன் பிரதம முப்தீ:—அகில உலக முஸ்லிம் கான்பரன்சில் கலந்துகொள்வதற்காக மௌலானா முஹம்மது அலி திரு மக்காவுக்குச் சென்றார். ஒருநாள் நள்ளிரவில் பலஸ்தீனத்து பிரதம முப்தீ ஸெய்யித் அமீனுல் ஹுஸைனி மஸ்ஜிதுல்ஹராமில் கஃபாவின் பக்கமாகச் சென்றுகொண்டிருந்தார். இந்த நள்ளிரவில் கஃபாவின் போர்வையைப் பிடித்துக்

கொண்டு ஒருவர் தாழ்ந்த குரலில் இறைவனிடம் அழுது தம்முடைய விண்ணப்பத்தையும் வேண்டு கையையும் கூறிக்கொண்டிருந்தார். அதாவது "இவ் வகிலத்தைப் படைத்தாளும் ரக்ஷகா, என்னை நீ நரகத் தில் போட்டுவிடு. என்னுடைய சொந்த விருப்பமெதை யும் நீ நிறைவேற்றித்தரவேண்டாம். ஆனால், இனி யும் ஒருமுறை கிலாபத்தே ராஷிதாவின் அந்த நிகரற்ற புண்ணியகாலத்தைக் கொண்டுவா. அக்காலத்தின்மகிமை யைப்பற்றி எங்கள் செவிகள்தான் கேள்விப்பட்டிருக் கின்றன. ஆனால், கண்களைக்கொண்டு அதனை நாங்கள் இன்னமும் பார்க்கவில்லை. இந்தியா அந்நியரின் ஆட் சியை விட்டு விடுதலையடைந்து, சுயமே நிற்பதற்குத் தகுந்தவாறு இந்தியாவுக்கு சுயேச்சையளித்தருள்வா யாக" என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார். இக்காட் சியை பலஸ்தீனத்துப் பிரதம முப்தியானவர் "நான் ஆச்சரியத்துடன் இந்நூதனமான காட்சியைப் பார்த் துக்கொண்டிருந்தேன். இவர் தமது பிரார்த்தனையை முடித்துக்கொண்டு தலையை நிமிர்ந்தபோது அவரையார் எனக்கவனித்தேன். அப்பொழுது அவர் கீழ்நாட்டின் தலைவரான முஹம்மதுஅலியாக இருந்தார். இலங்கும் படியான அவரது முகத்திலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது" என்றுகூறி இருக்கிறார்.

ராஜ்பாலின் தூஷணை புத்தகம் :—லாகூரிலுள்ள ராஜ்பால் என்ற ஹிந்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர் களைத் தூஷணை செய்து எழுதிய புத்தகம் வெளியில் வந்தபோது, மௌலானா முஹம்மதுஅலி துடிதுடித்து

விட்டார். இதுபோன்ற வீணான காரியங்களைத் தடுப்ப தற்காகச் சட்ட முறைப்படியுள்ள சகல முயற்சிகளையும் அவர் செய்தார். ஆனால், இச்சம்பவத்தால் அவரது இரு தயமும் மூளையும் அதிகம் புண்பட்டன. ஆதலால், தமது வருத்தத்தை அடக்க முடியாமல் ஒரு சந்தர்ப்பத்தில் இதைப் பற்றி அவர் பின்வருமாறு கூறி இருக்கிறார்:—

"என் சம்பந்தப்பட்டவரை எனக்கு சட்டத்தின் தேவையுமில்லை. நீதிமன்றத்தின் அவசியமுமில்லை. ஒரு ஹிந்து சகோதரர் ஒரு சாதாரண மிருகம் (பசு) பரிசுத்தத் தன்மையுள்ளதாக இருக்கிறது என்று என்னை ஒப்புக் கொள்ளச் செய்து, அதனால் அவர் பலனடைவதற்காக என்னிடம் உரிமை கொண்டாடும்போது, எல்லா சிருஷ்டிகளிலும் சிறந்த மனித வர்க்கத்தில் யாவரிலும் மேன்மை வாய்ந்தவரும், மனுஜின் ஆகிய இரு வர்க்கத்தாருக்கும் நபியானவரும், இவ்வுலக உற்பத்திக்குக் காரணமானவருமான நாயகம்(ஸல்) அவர்களின் பரிசுத்தத்தன்மை எனது இருதயத்தில் நிறம்பி ததும்பிக் கொண்டிருக்கிறது. இப்பரிசுத்தமான நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தி என் மனத்தைப் புண்படுத்துவதை கவனித்தேனும் அதை அவர் விட்டுவிடவில்லையாயின், என்னால் எவ்வளவுக்குப் பொறுமையாக இருக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பொறுமையாக இருப்பேன்; பின்னர் பொறுமை என்ற 'பானகம்' பொங்கி வடிய ஆரம்பித்து விடுமாயின், அசுத்த

உள்ளமும், அருவறுக்கத்தக்க எண்ணமும் நிறைந்துள்ள காபிரின் உயிரை யான் வாங்குவேன் அல்லது எனது உயிரை இம்முயற்சியில் இழந்து விடுவேன்.”

மற்றவர்கள் பார்த்துப் பொருமைப் படக்கூடிய இத்தகைய மத உணர்ச்சியையும் உண்மையையும் அவர் ‘பக்கா’ காங்கிரஸ் வாதியாக இருந்த சமயத்தில் வெளியிட்டார் என்பதை வாசக நேயர்கள் மறந்துவிடக் கூடாது. அக்காலத்தில் இந்தக் குழப்ப சம்பந்தமாக இந்தியாவிலுள்ள பெரிய மனிதர் எனப்படுபவர்களின் நாக்களெலாம் சுவையற்றுப் போய்விட்டன. இந்தியாவிலுள்ள சிறந்த திறமை வாய்ந்த தலைவர்கள் வாய்மூடி இருந்து கொண்டனர். ஹிந்துக்களிலும்கூட இதே நிலைமைதான் ஏற்பட்டிருந்தது. ஒருமுறை அஸோஸியேட்டட் பிரஸின் பிரதிநிதி, பண்டித மோதிலால் நேருவிடம் சென்று இது சம்பந்தமாக அவருடைய அபிப்பராயத்தை அறிய விரும்பியபோது அவர் இதைப் பற்றி எதுவும் பேசக் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

பார்லிமேண்ட் காலரியில் தொழுகை:—1928-ல் மௌலாஞ முஹம்மது அலி வைத்திய சிகிச்சை செய்து கொள்ளும் நோக்கத்துடன் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தபோது, இங்கிலாந்திலும் சில தினங்கள் தாமதித்திருந்தார். அதுபோழ்து பார்லிமெண்ட் சபையின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகச் சென்றார். விஸிட்டர்கள் காலரியில் அவர் அமர்ந்து சபையின்

நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது தொழுகைக்கு நேரமாகி விட்டது. அதே சமயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயர் வைக்கப்பட்ட இவ்வடியார் தமது இருப்பிடத்தை விட்டெழுந்து பக்கத்திலுள்ள ஒரு மூலையில் தமது "அபா"வை (நீண்ட மேல் சட்டையை) விரித்து இவ்வுலகத்தை மறந்து இறைவன்பால் தமது சிந்தையைச் செலுத்தி தொழுகலானார். அங்கிருந்த ஜனங்கள் இக்காட்சியை மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தனர். லண்டனிலுள்ள ஒரு பத்திரிகை இச் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், மௌலானாவின் பெயரைக் கூருமல் "இன்று ஒரு மனிதரால் இச்செய்கை நிகழ்ந்தது" என்றெழுதி இருந்தது. அவரை உணர்ந்தவர்கள் "அந்த மனிதர் முஹம்மது அலியாகத்தான் இருக்க வேண்டும். அவரைத் தவிர வேறு யாருக்கும் இவ்வளவு தைரியம் வரமுடியாது" என்று அறிந்து கொண்டனர். பின்னர் அவர் ஐரோப்பாவிலிருந்து திரும்ப வந்தவுடன் "ஸச்" பத்திரிகையின் கண்ணியம் வாய்ந்த ஆசிரியர் இதைப்பற்றி விசாரித்தபோது, அந்த மனிதர் அவர்தான் என்பது தெரியவந்தது.

இந்தியாவிலும்கூட, கிலாபத் கான்பரன்சாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் மகாநாடாக இருந்தாலும் சரி, முஸ்லிம் லீக் மகாசபையாக இருந்தாலும் சரி, வேறெந்தக் கூட்டமானாலும் சரி தொழுகையின் நேரம் வந்துவிட்டால், அவர் ஸ்டேஜின் ஒரு மூலையில் தமது "அபா"வை விரித்துத் தொழுகையில் ஈடுபட்டு விடு

வார். இவ்வுலகில் பரிகசிக்கும் புத்தியுள்ளவரும், குத்துப்பாடு செய்து பேசும் குணமுள்ள நண்பர்களும் தம்மைப்பற்றி என்ன சொல்வார்கள் என்ற எண்ணத்தையே அவர் தம் மனத்திற் கொண்டுவர மாட்டார்.

மதச் சீர்திருத்த இயக்கம்:—நாம் மேலே கூறியது அவருடைய சொந்த மத உணர்ச்சியும் நடத்தையுமாகும். ஏதேனும் ஒரு இயக்கம், மத சம்பந்தமாகவோ அல்லது இதர விஷயங்கள் சம்பந்தமாகவோ மிகவும் பிரயோஜனமுள்ளதென்று அவருக்குத் தோன்றி விடுமாயின், தமது "ஹம்தர்து" "காம்ரேட்" பத்திரிகைகளை அதற்கென்றே தத்தம் செய்துவிடுவார். தம்மாலியன்றவரை அதற்கு அவரும் உதவி புரிவார். ஒரு முறை, ஹஜ்ரத் காஜா ஹஸன் நிஜாமி பிரயோஜனமுள்ள ஒரு சீர்திருத்த வேலையை ஆரம்பித்தார். அதாவது, முஸ்லிம்கள் ஷஅபான் மாதம் 15-வது தேதியில் படாஸ் சுடும் கெட்ட வழக்கத்தைத் தடை செய்வதற்கான வேலையை ஆரம்பித்தார். இவ்விஷயத்தில் முஸ்லிம்கள் தவறான வழியிற் செல்கிறார்கள் என்பதை நமது மௌலானா உணர்ந்திருந்தார். இவ்வீணான வழக்கத்திற்கு மத சம்பந்தத்தைக் கொடுத்து லக்ஷக்கணக்கான பொருள்களை முஸ்லிம்கள் நாசம் செய்து விடுகிறார்கள் என்பதை அவர் நினைத்து வருந்திக் கொண்டிருந்தார். காஜா ஹஸன் நிஜாமி பிரயோஜனமுள்ள இச்சீர்திருத்தத்தில் ஈடுபட்டதை யறிந்ததும், மெய், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியாக அவரது முயற்சிக்கு பூரண ஆதரவு புரிந்தார். 'ஹம்தர்து' பத்-

திரிகையின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தவரை அழைத்து இது சம்பந்தமாக காஜாசாகிப் வெளியிடும் சகல சீர்திருத்த விளம்பரங்களையும், வேண்டுகோள்களையும், வால்போஸ்டர்களையும் எவ்விதப் பிரதிபிரயோஜனத்தையும் எதிர்பாராமல் பிரசுரிக்கவேண்டுமென்று கட்டளையிட்டார். காஜாசாகிபின் இந்த நல்ல வேலையை ஆதரிப்பதற்காக டில்லி கிலாபத் கமிட்டியை அற்பணம் செய்தார். டில்லி கிலாபத் கமிட்டியின் உதவி அவருக்குக் கிடைத்திராவிடில் அவர் தம் முயற்சியில் இவ்வளவு மகத்தான வெற்றியடைந்திருக்கமாட்டார் என்று சொல்லப்படுகிறது.

பின்னர், காஜாசாகிபின் நவீன உணர்ச்சியுள்ள மனத்தில் மற்றொரு யோசனையுமுண்டாயிற்று. படாளை (சீனவெடியை)க் கொடும்பாவி, கட்டி யமுனை நதிக்கரையில் அதை அடக்கம் செய்துவிட வேண்டுமென்று முடிவு செய்தபோது, நமது மௌலானாவும் அதில் ஈடுபட்டு, அதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திலும் ஊர்வலத்திலும் கலந்துகொண்டார்.

தேவ்பந்து பிணக்கு :—இந்திய முஸ்லிம்களின் பிரபல மார்க்கக் கல்லூரியான தேவ்பந்து "தாருல் உலூமி"ல் வேற்றுமையும் பிணக்கும் உண்டானபோது அவர் தமது சகல ராஜீய அலுவல்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு தேவ்பந்து செல்வதற்குத் தக்க சாவகாசத்தை உண்டாக்கி அங்கு நேராகச் சென்று இரு கக்ஷியாருடனும் கலந்து பேசி அவர்களுக்கிடையில் சமரச மேற்படுத்த முயன்றார்.

பர்லின் மஸ்ஜிது:—1928-ம் வருஷம் அவர் வைத்திய சிகிச்சையின் காரியார்த்தமாக ஐரோப்பா வுக்குச் சென்றபோது பர்லினில் கட்டப்பட்ட மஸ்ஜிதைப் பார்க்கச் சென்றுர். அங்கு அவரைக்கொண்டு ஒரு பிரசங்கம் செய்விக்க வேண்டுமென அங்குள்ளவர்கள் விரும்பியதன் பேரில் "இஸ்லாமும் இந்தியாவும்" என்ற பொருள்பற்றி ஒரு பிரசங்கம் புரிந்தார். ஆனுல், அச்சமயம் அவர் எதிலும் சம்பந்தப்படாமல் பூர்ண ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டிய நிலைமையிலிருந்தார். ஆயினும், அவருக்கு இத்தகைய சந்தர்ப்பம் கிடைப்பதை அவர் விடக்கூடியவரன்று.

ஜிஹாதும் மகாயுத்தமும்:—இவருக்கு மத உணர்ச்சி அதிகமிருந்ததால் இவருக்குச் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் மதத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தையேனும் கூறுமலிருக்கமாட்டார். அவர் வட்ட மேஜை மகாநாட்டுக்குச் சென்று பிரசித்திபெற்ற பிரசங்கம் செய்தபோழ்து ஓரிடத்தில் மதத்துக்கு ஆற்ற வேண்டிய கடமையையும் செய்திருக்கிறுர்.

"உலகில் நடைபெற்ற மதச்சண்டைகளும், யுத்தங்களும் உங்களுடைய சென்ற மகா யுத்தத்தைபோல் அவ்வளவு ஆபத்துக்களையும் நஷ்டங்களையும் விளைவிப்பனவாக இருந்ததில்லை. இந்த யுத்தம் உங்களது தேசபக்தியினுல் ஏற்பட்ட யுத்தமாக இருந்தது. அது என்னுடைய ஜிஹாது (மத யுத்தம்) அல்ல என்பது ஞாபகமிருக்கட்டும்" என்று கூறினுர்.

இதுமட்டுமோ? அதே பிரசங்கத்தில், "மதம் என்பது வெறும் கொள்கைக்கும் எண்ணத்துக்கும் இடப்பட்ட பெயரன்று. என்னிடத்தில் மதம் என்பது வாழ்க்கையின் நிலைமையைவெளியிடும் வார்த்தையாகும். எனக்கு இஸ்லாத்தின் பொருட்டால் நாகரீகம், வாழ்க்கைத் திட்டம், வாழ்க்கையின் நம்பிக்கையைத்தரக்கூடிய எதிர் காலம் ஆகியவைகள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. இஸ்லாம் இவ்வெல்லா விஷயங்களையும் தன்னுள்அடக்கிக்கொண்டிருக்கிறது. ஆண்டவன் சம்பந்தமான பிரசினை எங்கு தோன்றுகிறதோ அங்கு நான் முதலிலும் முஸ்லிமாக இருப்பேன்; இறுதிவரையிலும் முஸ்லிமாக இருப்பேன். இஸ்லாத்தின் நாகரீகம், வாழ்க்கைத் திட்டம், ஒழுங்கு ஆகியவைகளை விட்டுவிட்டு உங்களது அரசாங்கத்துக்குள் அல்லது சமூகத்துக்குள் என்னைச் சேர்ந்து கொள்ளும்படி நீங்கள் கூறுவீர்களாயின், நான் அவ்விதம் ஒருபோதும் சேர்ந்துகொள்ளவேமாட்டேன். என்னைப் படைத்தவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது தான் எனது முதற்கடமையாகும். மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி பெருமானுக்கோ அல்லது எனது நண்பர் டாக்டர் முஞ்சேயுக்கோ பணிவது எனது முதற்கடமையன்று." என்பதாகக் கூறி இருக்கிறார்.

இம்மாதிரி தெளிவானதும் சந்தேகத்துக்கிடமில்லாததுமான பிரசங்கத்தை நமது மௌலானாவைத் தவிர வேறு யாரும் கூறவுமில்லை. அதைக் கடைசிவரை அனுஷ்டிக்கவுமில்லை.

———

பன்னிரண்டாம் அத்தியாயம்

ஹாஸ்யப் பேச்சுகள்

நமது மௌலானா முஹம்மது அலி யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டத் தலைவராகவும் மார்க்க பக்தி நிறைந்தவராகவும் இருந்தது மட்டுமில்லாமல், மற்றவர்களைக் கெட்ட எண்ணத்துடன் பார்க்கும் நோக்கமில்லாத தலைவராகவுமிருந்தார். ஹாஸ்யமாகப்பேசி, யாவரையும் மகிழவைக்கும் தன்மையும் அவரிடமிருந்தது. இவ்வாறு ஹாஸ்யமாகப் பேசுவதில் அவருக்கு அதிக பிரியமுமுண்டு. ஆதலால், அவர் சித்திரம் முதலிய கலைகளை அதிகம் போற்றிக் கொண்டிருந்தார். இவரது வாயிலிருந்து வெளியாகும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் பழமொழியாக உபயோகிக்கத் தகுந்தனவாக இருந்தன. அவர் கூறிய ஹாஸ்ய வார்த்தைகளைப்பற்றி இங்கு சிறிது விளக்குவாம்.

ஜியாவுத்தீன் பர்னீ:—இவரைப் பற்றிப் பின் வரும் ருசிகரமான சம்பவத்தை மிஸ்டர் ஜியாவுத்தீன் பர்னீ கூறி இருக்கிறார்:—

"கான்பூர் மஸ்ஜிது சம்பந்தமாக நடைபெற்ற குழப்ப காலத்தில் ஒருமுறை அல்லாமா ஷிப்லீ டில்லிக்கு விஜயம் செய்தார். மௌலானா முஹம்மது அலி இவருக்கு இராப்போஜன விருந்தளித்தார். அநேக நண்பர்களும் இவ்விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். விருந்துக்கு வந்திருந்த யாவரும் அல்லாமா ஷிப்லீ அவர்களைக் கேட்டுக்

கொண்டதற்கிணங்க கான்பூர் துக்ககரமான சம்பவத்தைப்பற்றி அவர் இயற்றியுள்ள சில செய்யுள்களைக் கூறினார். மௌலானா முஹம்மது அலி கான்பூர்மஸ்ஜிதை முன்போல் திரும்பக்கட்டிவைப்பதற்காக எடுத்துக் கொண்டுள்ள அரிய முயற்சிகளைப் பாராட்டியும் அல்லாமா ஷிப்லீ சில செய்யுள்களைக் கூறினார். இது சம்பந்தமாக சில சரித்திர பூர்வமான விஷயங்களையும் கூறி 'முஹம்மது' என்பதுடன் 'அலி' என்ற பெயரையும் சேர்த்து வைக்கப்பட்டவர்கள் யாவரும் எப்பொழுதும் விசேஷ சக்தி வாய்ந்தவர்களாக இருப்பதையே நான் காண்கிறேன் என்று கூறினார். மௌலானா முஹம்மது அலி, ஆரம்ப முதல் மௌனமாக இருந்து, தம்மைப்பற்றி அவர் புகழ்ந்து பேசுவதையும் கேட்டுக் கொண்டே இருந்து விட்டுக் கடைசியாக "ஈரான் அரசர் முஹம்மது அலியைத் தாங்கள் மறந்து விட்டீர்கள் போலும்" என்று கூறினார். இதைக் கேட்டவுடன் மௌலானா ஷிப்லீ உள்பட சபையிலுள்ள அனைவரும் 'கொல்' என்று சிரித்தனர்.

மற்றொரு ஹாஸ்யம் :—மௌலானா அப்துல்மாஜித் சாகிப் தர்யாபாதி பின்வருமாறு கூறி இருக்கிறார் :—

ஒருமுறை மத்திய கிலாபத் கமிட்டிக் கூட்டம் நடைபெற்ற சமயத்தில் ஹக்கீம் அஜ்மல்கான் கிலாபத்து தலைவர்களுக்கு ஒரு விருந்து அளித்தார். இவ்விருந்திற்கு நமது மௌலானா முஹம்மது அலியும் இதர தலை

வர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். பஞ்சாப் அஹ்ரார் சபையினரிற் சிலருமிருந்தனர். ஹக்கீம் அஜ்மல்கான் விருந்தினருக்கு 'தர்போஸ்' பழங்களும் வழங்கினர். விருந்துக்கு வந்திருந்த அனைவரும் தர்போஸ் பழத்தைப் பற்றிச் சிலாகித்து, அதைப் பற்றியே பேசிக் கொண் டிருந்தனர். டில்லியில் விளையும் தர்போஸ்கள் மிகவும் ருசியுள்ளனவாக இருக்கின்றன என்று ஒருவர் கூறினர். அதுசமயம் நமது மௌலானா முஹம்மது அலி தமது அண்டையிலிருந்த தமது பஞ்சாபி நண்பரும் தலைவருமான ஒருவரைப் பார்த்து "ஆனல், பஞ்சாபில் விளைகிற 'கர்'போஸாவும் மிக ருசியாக இருக்கின்றன" என்று கூறினர். சபையிலிருந்தவர்க ளனைவரும் சிரித்தனர்.

குடிக்க நேரமாயிற்று:—ஒரு முறை ஒரு சிக்கலான பிரசினை உண்டாயிற்று. இதைக் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வருவதற்காக ஒரு ஆலோசனைக் கமிட்டி கூட்டப்பட்டது. இவ்விஷயம் மிகவும் சிக்கலானதும் அபிப்பிராய பேத முள்ளதுமாக இருந்த படியால் விஷயம் சீக்கிரம் முடிவடைவதற்கான வழியைக் காண வில்லை. பிளவும் அபிப்பராய பேதமும் தான் பெரு கிக்கொண்டே இருந்தன. பிறகு இந்தியாவிலுள்ள பிரபல தலைவர்களில் ஒருவர் "இரவு அதிகமாகி விட்டது, சாப்பிடுவதற்கு நேரமாகிறது. ஆதலால், கூட்டத்தை ஒத்தி வைக்கவேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இத்தீர்மானத்தை மௌலானா முஹம் மதுஅலி ஆமோதித்துப் பேசுகையில், "கூட்டம் ஒத்தி

வைக்கப்படவேண்டியது அவசியமாகும். சாப்பிடுவதற்கும் நேரமாகிறது குடிப்பதற்கும் நேரமாகிறது. கடைசியாக இவ்வளவு அலுவல்களையும் பார்த்து அலுத்துவிட்டதால் "அக்லும் ஷுர்பும் அவசியமாகும்" என்று கூறினர்.

இந்தியா சட்டசபை:–மௌலானா முஹம்மது அலி காங்கிரஸில் மாறுதல் வேண்டா கக்ஷிக்காராக அதாவது சுயராஜ்ய கக்ஷிக்கு மாறான கக்ஷியைச் சேர்ந்தவராக இருந்தபடியால், இந்தியா சட்டசபை, மாகாண சட்டசபை ஆகியவைகளில் சிரத்தையில்லதவராக இருந்தார். ஆயினும், அவர் பத்திரிக்கைத் தொழில் நடத்துபவராக இருந்தபடியால் மத்திய சட்டசபையில் முக்கியமான பிரசினைகள் வரும்போது நடவடிக்கையைக் கவனிப்பதற்காக சமயா சமயத்தில் செல்வதுண்டு. எனவே, ஒரு முறை அவர் மத்திய சட்டசபைக்காலரியில் வீற்றிருந்து நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது அச்சபையின் அங்கத்தினரான சுயராஜ்ய கக்ஷி நண்பர்களில் ஒருவர் மௌலானாவைப் பார்த்து, "தாங்கள் இவ்வளவு தூரம் வந்து விட்டீர்கள். இன்னும் இரண்டு அடி எடுத்துவைத்து சபைக்குள் வந்து எங்களுடன் சேர்ந்து கொள்ளமாட்டீர்களா?" என்று கூறினர். அதற்கு அவர் "நான் உங்கள் கக்ஷியில் எவ்வாறு சேர்ந்துகொள்ள முடியும்? நான் இங்குமேலே இருந்து கொண்டு உங்களுக்கு நடைபெறும் 'கதியை' வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேனே" என்று கூறினர். இதைக் கேட்டவுடன் எல்லோரும் சிரித்தார்கள். அத்து

டன் ‘கதி’ என்று அவர் கூறிய வார்த்தையில் இப்போ திருக்கிற மத்திய சட்டசபைக்கு அதிகாரமில்லையென் பதை அங்கத்தினர்களுக்கு எடுத்தறிவிப்பதாகவும் இருந்தது.

சட்டம்.—1927-ம் வருஷத்தில் சென்னையில் காங்கிரஸ் மகாசபை நடை பெற்றது. காங்கிரஸின் லக்ஷியம் என்ன வென்பதைப்பற்றிய விவாதம் இம் மாகாசபையில் நடைபெற்றது. காங்கிரஸின் லக்ஷியம் பூர்ண சுயேச்சைதான் என்று முடிவு செய்துவிட வேண் டும் என்பது பண்டித ஜௌஹர்லால் நேருவின் விருப் பம். அதனைக் குறித்து ஒரு தீர்மானத்தையும் அவர் கொண்டு வந்தார். மௌலானு முஹம்மதுஅலி அதனை ஆதரித்தார். இத்தீர்மானத்தை பண்டித மதன் மோகன மாளவியா விஷயாலோசனைக் கமிட்டியில் பலமாக எதிர்த்துப் பிரசங்கம் புரிந்தபோது சக்கரவர்த்தியின் பெயரைக் கூறித் தம்முடைய எதிர்ப்பை வற்புறுத் திக் கொண்டே இருந்தார். இதனை நமது மௌலானு மறுத்துக் கூறுகையில் “சக்கரவர்த்தி, சக்கரவர்த்தி என்று தாங்கள் கூறிக் கொண்டிருப்பது என்ன? சக்கர வர்த்தியின் அந்தஸ்து என்ன? அது ஒரு தவறுன சட் டக் கொள்கையாகும். இதைத்தவிர வேறு ஒன்றும் அங்கில்லை,” என்று கூறினுர். இவ்வபிப்பிராயம் சபை யினரால் ஆதரிக்கப்பட்டது. ஆகவே, மாளவியாவின் சப்தம் அடங்கிவிட்டது.

முஸ்லிம் சர்வககக்ஷி மகாநாடு:—சுத்தி இயக்கம் மிகப் பலமாகவிருந்த காலத்தில் டாக்டர் கிச்லு முஸ்லிம்

சமூகப் புனருத்தாரண வேலையைச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் அமிர்தசரஸில் முஸ்லிம் சர்வகக்ஷி மகாநாட்டைக் கூட்டினார். முஸ்லிம் தலைவர்களுக்கிடையிலுள்ள ஒற்றுமையின்மை, பிளவு முதலியவைகளை நீக்கி அனைவருக்குமிடையில் நட்பு, சகோதரத்துவம் ஆகியவைகளை ஏற்படுத்த வேண்டும் என்பது அவரது நோக்கம். இந்தியாவிலுள்ள முஸ்லிம் தலைவர்களிற் பெரும்பாலர் இம் மகாநாட்டிற்கு வந்திருந்தனர். அலி சகோதரர்களும் வந்தனர். இம் மகாநாட்டில் மௌலானா ஷௌகத் அலி பிரசங்கம் செய்கையில்,

> "நான் முஹம்மது அலியைப் பற்றி ஒன்றுங் கூறமுடியாது. அவர் சில சமயங்களில் பொருத்தமற்ற வார்த்தைகளையும் கூறிவிடுகிறார்"

என்று கூறினார். இதன் பேரில் ஒருவர் மௌலானா ஷௌகத் அலி கூறிய வார்த்தைகளை மகாநாட்டுத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். மௌலானா ஷௌகத் அலி தாம் கூறிய வார்த்தைகளை வாப்பிஸ் வாங்கவேண்டும் என்று தலைவர் கட்டளையிட்டார். மௌலானா ஷௌகத் அலியும் தலைவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, "நான் முஹம்மது அலியிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என்று கூறினார். சபையினர் "மௌலானா முஹம்மது அலி" என்று கூறவேண்டும் என்று சப்தமிட்டனர். மௌலானா ஷௌகத்அலி பதறிக் கொண்டு, "நல்லது நான் மௌலானா முஹம்மது அலியிடம் மன்னிப்புக் கேட்

கிறேன்" என்று கூறினர். மூத்த சகோதரர் இளைய சகோதரரிடம் இம்முறையில் மன்னிப்புக் கேட்ட காக்ஷி சபையினருக்கு நல்ல காக்ஷியாக இருந்தது. அதிலும் மௌலானு முஹம்மது அலி மகாநாட்டுத் தலைவருக்கு நன்றி செலுத்திய மாதிரியானது, சபையினருக்கு இன்னும் அதிக இன்பத்தைத் தந்தது. மௌலானு ஷௌகத்அலி இம்மாதிரி மன்னிப்புக் கேட்டவுடன், மௌலானு முஹம்மது அலி எழுந்து மகாநாட்டுத் தலை வருக்கு நன்றி செலுத்துகையில் "தாங்கள் குறைந்த பக்ஷம் ஒரு மனிதரையேனும் என்மீது ஏசல் பேசல் செய்வதைவிட்டுத் தடுத்து விட்டமைக்குத் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று கூறினர்.

மற்றொரு சம்பவம்:—"ஹம்தர்து" என்ற உருது தினசரிப் பத்திரிகையை நமது மௌலானு முஹம்மது அலி இரண்டாவது முறையாக ஆரம்பித்து ஒரு வரு ஷம் பூர்த்தியானபோது, டில்லியிலுள்ள பிரபலஸ்தர் களுக்கும், பத்திரிகைத் தொழில் நடத்துபவர்களுக்கும் விருந்தளித்தார். எடிட்டோரியல் இலாக்காவின் சார் பாக ஆரிப்ஹஸ்வீ நன்றி செலுத்தினர். விருந்தினர் களின் சார்பாக விருந்தளித்தவருக்கு நன்றி செலுத் துவதற்காக ஹக்கீம் அஜ்மல்கான் எழுந்து பேசு கையில் "ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் இம்மாதிரி யான வருஷப் பூர்த்திவிழா வரும்படி இறைவன் செய் வானுக" என்று கூறினர். அப்பொழுது மௌலானு முஹம்மது அலி "அவ்வாருயின் பத்திரிகையின் வரு ஷாந்திரச் சந்தாவையும் இதே கணக்குப்படிதான் வாங்க

வேண்டும்" என்று கூறினுர். இதைக் கேட்டவுடன் சபையினர் அனைவரும் சிரித்தனர்.

பம்பாயில்:—1928-ம் வருஷத்தில் மௌலானு முஹம்மது அலி வைத்திய சிகிச்சை செய்துகொள்ளும் நோக்கத்துடன் ஐரோப்பாவுக்குப் பிரயாணமானுர். அது சமயம் இந்தியாவில் பார்டோலி விவசாயிகளின் பிரசினை இந்திய மக்களின் கவனத்தைத் தன்பால் திருப்பிக்கொண்டிருந்தது. அரசாங்கத்தார் வரி வசூல் செய்யும் கொடுமை, பர்டோலி விவசாயிகளின் அதிசயிக்கத் தக்க ஒற்றுமை ஆகியவைகளே ஒவ்வொருவரின் கண்ணெதிரிலும் நின்று கொண்டிருந்தன. மௌலானு முஹம்மது அலி ஐரோப்பா செல்வதற்காகக் கப்பலுக்குச் சென்ருர். சட்டப்படி டாக்டர் நமது மௌலானுவின் நாடியைப் பரிசோதித்து "தாங்கள் நன்ருயிருக்கிறீர்களே" என்று கூறினுர். அதற்கு அவர் "நான் நன்ருக இருந்தால் ஐரோப்பாவுக்கு ஏன் செல்லுகிறேன், பார்டோலிக்கல்லவா செல்வேன்" என்று கூறினுர்.

மாளவியாவிற்குப் பதில்:—ஒரு முறை நமது மௌலானு அரபியரின் உடையணிந்து மத்தியசட்ட சபைக்கு சென்ருர். அங்கு தற்செயலாக பண்டித மதன் மோகன மாளவியாவைச் சந்திக்க நேர்ந்தது. மௌலானுவை மாளவியாஜீ பார்த்தவுடன் "ஆகா மௌலானு முஹம்மது அலி தாங்கள்தானு? தாங்கள் இந்த உடையில் வந்ததைப் பார்த்து, போப்பால் பேகம் சாகிபா அவர்கள் வருகிருர் என்றல்லவோ நினைத்தேன்?" என்று கூறி வாய் மூடுவதற்குள் மௌலானு முஹம்மது அலி

"போப்பால் பேகம் சாகிபா அவர்கள் ஆண் சிங்கத்தை ஒத்த மனப்பான்மையுடையவர், இம்மாதிரியான பெண்களுள்ள சபைக்கு வர இஷ்டப்படமாட்டார்" என்றார்.

மற்றொன்று :—அப்பால் அறைக்குள் சென்ற போது மத்திய சட்ட சபைத் தலைவர் மிஸ்டர் பட்டேலுடன் சந்திப்பு ஏற்பட்டது. அவர் தமது அறைக்கு மௌலானாவை அழைத்துச் சென்று ஒரு பெரிய ஆங்கிலேயரிடம் அறிமுகப் படுத்தி வைத்தார். அவ்வாங்கிலேயர், நமது மௌலானா இவ்வுடையில் வந்திருப்பதைப் பார்த்து, "மௌலானா! தாங்கள் முற்றிலும் அரபியாகவே தோன்றுகிறீர்களே" என்று தம்முடைய அபிப்பராயத்தைத் தெரிவிக்க ஆரம்பித்தார். உடனே, மௌலானா, அவரை நோக்கி, "தங்களுடைய இந்த நல்ல எண்ணத்துக்கு நன்றி செலுத்துகிறேன். பன்னிரண்டு வருஷகாலம் நான் பரிபூரணமான ஆங்கில உடை தரித்துக்கொண்டிருந்தபோது தங்கள் இனத்தாரில் ஒருவர் கூட என்னைப் பார்த்து, "தாங்கள் முற்றிலும் ஆங்கிலேயராக இருக்கிறீர்களே" என்று கூறவில்லை, "கருப்பு மனிதன்" என்ற வார்த்தைகளே அவர்களது நாவில் இருந்து கொண்டிருந்தன. இப்பொழுதோ யான் எனது நபிகள் பிரான் (ஸல்) அவர்களது ஊராரின் உடையை அணிந்தபோது நான் தங்களுடைய பார்வைக்கு முற்றிலும் அரபியாகத் தோன்றுகிறேன்" என்று கூறினார்.

ருசிகரமான மதிப்புரை:— பொறுப்பற்ற முறையில் வெளியிடப்படும் பத்திரிகைகளைப் பற்றி மௌலானா

மிகவும் ருசிகரமான முறையில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்:—

"ஜனங்களுக்கு இம்மாதிரிப் பத்திரிகைகள் தாம் விருப்பமாக இருக்கின்றன. இப்பத்திரிகைகளைத் தான் வாங்கிக் கொள்கின்றனர். ஆனால், இவைகளின் போக்கு ஒரு பைசாவுக்கு ஒரு திட்டுத் திட்டுவேன் என்று கூறுவதை ஒத்திருக்கிறது. அல்லது அருவையான விளம்பரங்கள் போடப்பட்ட பத்திரிகைகள் தாம் விருப்பமாக இருக்கின்றன. இவ் விளம்பரங்களைப் படிப்பதனால் மட்டுமென்ன? இவைகளை அச்சிடுவதிலேயே "அனேகருக்கு நன்மை" ஏற்படுகிறது."

"அநேகருக்கு நன்மை" என்ற வார்த்தையின் உட்கருத்து உருது பாஷையின் மத்திய இடத்திலிருந்து பிரசுரமாகிற பத்திரிகைகளைப் படிப்பவருக்கு நன்கு தெரியும். இது சம்பந்தமாக நமது மௌலானா அவர்கள் மேலும் கூறுகையில் கூறியதாவது:—

"இவைகள் 'நியூஸ்' பேப்பர் (சமாச்சாரப் பத்திரிகை)களல்ல. உண்மையில் 'வியூஸ்' பேப்பர் (அபிப்பிராயப் பத்திரிகை)களாகவே இருக்கின்றன. இப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப் படுவவைகள் நியூஸ் (சமாச்சாரங்)களன்று. அவைகள் அந்தரங்கத்தில் ஆசிரியர்களின் வியூஸ் (அபிப்பிராயங்)களாகவே இருக்கின்றன.

கராச்சி வழக்கு :—மௌலானா முஹம்மது அலி முதலிய ஆறு பேர்கள் மீது, கராச்சியில் வழக்கு நடந்

த்து உலகப் பிரசித்தம். அவ்வழக்கு விசாரணை நடைபெற்றபோது பிராசிகியூஷன் தரப்பிலிருந்து மௌலானு முதலியவர்களுக்கு எதிரான சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டனர். சாக்ஷி விசாரணை நடைபெற்ற போது நடவடிக்கையில் கலந்து கொள்ளாமல் அவர்கள் விலகி இருந்தார்கள். ஒருமுறை கோர்ட்டார், மௌலானு வைப்பார்த்து "தாங்கள் சாக்ஷியிடம் ஏதாவது குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறீர்களா?" என்று விசாரித்தார். அதற்கு அவர் எழுந்து சாக்ஷியம் கூறியவரிடம் "க்ஷேமலாபம்" விசாரித்துவிட்டு உட் கார்ந்துகொண்டார். இதன்பேரில் கோர்ட்டில் அனை வரும் 'கொல்' என்று சிரித்தனர்.

மௌலானு அவர்கள் கராச்சி ஜெயிலில் இருக்கும் போது எழுதிய குறிப்புப் புத்தகங்களில் மற்றொரு விஷயம் காணப்படுகிறது. அது இவ்விடத்திற்கு மிகப் பொருத்தமாக இருக்கும்:

"ஒரு கைதி வந்தார். எல்லோருக்கும் செய் யப்பட்ட அதே பந்தோபஸ்துடன் வந்தார், அதா வது ஒரு லாரி நிறைய ஆயுதந்தரித்த வெள்ளைப் பட்டாளம், ஆயுதந்தரித்த இந்திய போலிஸ், மூடப்பட்ட மோட்டாரில் கைதி ஆகியவர்கள் வந் தார்கள். (இவர் மௌலானு ஹுஸைன் அஹமது வாக இருக்கக்கூடும்). அது சமயம் மாஜிஸ்டிரேட் வரவில்லை. ஆதலால், அவர்கள் தடுத்துவைக்கப்பட் டிருந்தனர். இது பரிதபிக்கத்தகுந்த காக்ஷியாக இருந்தது. கைதியை வீட்டுக்குப் போகவும்

விடுகிறார்களில்லை, ஜெயிலுக்குள் வரவும் விடுகிறார்களில்லை, தலைவாசலின்மீது உட்கார வைத்திருக்கிறார்கள்.''

மாற்றுப் பெயர் வைத்தல் :—மௌலானா முஹம்மது அலி, பெயரில் சிறிது மாற்றத்தை யுண்டுபண்ணிப் பெரிய அர்த்த புஷ்டியான மாறுதல்களைச் செய்வதில் சமர்த்தர். லார்டு பர்க்கன்ஹேட் இந்தியா மந்திரியா இருந்தவர். இவரை நமது மௌலானா 'புரோக்கன் ஹேட்' (மண்டை உடைந்தவர்) என்று கூறுவார். பிரிட்டிஷ் பிரதம மந்திரியான மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்ட் என்பவர் ஹிந்துக்களின்மீது அபிமான முள்ளவர். ஆதலால், அவருக்கு "ராம்ஜீ முகுந்தாமில்" என்று கூறுவார். "ஸச்" என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு தானா போன் மௌலானா அஷ்ரப் அலியின்மீது பற்று உண்டு என்பது இவருக்கு நன்கு தெரியும். ஆதலால், "ஸச்" பத்திரிகையின் ஆசிரியரைக் காணும்போதெல்லாம், உங்கள் 'தாணாதார்' சௌக்கியமாக இருக்கிறாரா என்று வினவுவார்.

ஷௌகத் அலியைப்பற்றி :—ஒரு முறை தமது நண்பர்களுடன் பேசிக்கொண் டிருந்திருந்தபோது ஒருவர் வேடிக்கையாக "நீங்கள் மூன்று சகோதரர்கள் இருக்கிறீர்கள். அதில் இருவர் புலவர்கள். துல்பக்கார் அலி "கௌஹராக" இருக்கிறார். முஹம்மது அலி "ஜௌஹராக" இருக்கிறார். ஷௌகத் அலி எப்படி? என்று வினவினார். அதற்கு மௌலானா "ஷௌஹர்" என்று கூறினார். எல்லோரும் சிரித்தனர்.

இந்தியா மந்திரிக்குக் கடிதம்:— இந்தியா மந்திரியாக இருந்த மிஸ்டர் வெட்ஜுவுட்பென் என்பவருக்கு நமது மௌலானு எழுதிய கடிதத்தில் "என்னுடைய சம்பாஷணை தோல்வியடைந்த பின் யுத்தம் நடைபெற இடமுண்டு. ஆனல்,யுத்த முயற்சிகள் தோல்வியடைந்து விட்டால் அப்பால் சமாதானத்துக்கு இடமே இல்லை" என்று குறிப்பிட்டார்.

நல்ல வக்கீல்:— நமது மௌலானு முதலியவர்கள் மீது கராச்சியில் ராஜதுரோக வழக்கு நடக்கும்போது ஒருநாள் அவர்களிடம் ஜெயில் சூப்ரிண்டன்டன்ட் வந்து "26உ வழக்கு விசாரணை ஆரம்பமாகும். தயாராகிக் கொள்ளுங்கள்" என்று கூறினர். அல்ஹம்துலில்லாஹ், இதற்கு அவசியமே இல்லை. வழக்கை மேல் நடத்துபவர்களுக்குக்கன்றே தயாராகிக் கொள்ளவேண்டிய அவசியமிருக்கிறது. நமக்கோ அல்லாஹுத் ஆலாவைப் போன்ற நிஃமல் வக்கீல் (நல்ல வக்கில்) தேவை என்று மௌலானு கூறியதாக அவரது டையிரியில் எழுதப்பட்டிருக்கிறது.

பதின்மூன்றும் அத்தியாயம்

தேசாபிமானமும் சமூகாபிமானமும்

இந்திய ராஜீய உலகில் தேசீயம், சமூகம் என்ற பிரசினை மிகவும் முக்கியமான பிரசினையாக இருந்தது. இந்தியாவிலுள்ள ராஜீய வாதிகள் இவ்விஷயத்தில் இரண்டு பிரிவினராக இருக்கின்றனர். ஒரு கக்ஷியினர் சமூகாபிமானத்தை ஆதரிக்கின்றனர். வாழ்க்கையின் படித்தரங்களைக் கடந்து முன்னேற்றமடைவதற்குச் சமூகாபிமானம்தான் அஸ்திவாரமாக இருக்க வேண்டும் என்பது இக்கக்ஷியினரின் அபிப்பிராயம். மற்றொரு கக்ஷியார் சமூகாபிமானம் என்ற வார்த்தையைக் காதில் போட்டுக்கொள்ளக் கூட இஷ்டப்படுகின்றனரில்லை. தேசியத்தின்மீது கரைகாணுக் காதல் பூண்டிருக்கின்றனர். இவர்களிடத்தில் சமூகாபிமானம் என்பது அர்த்தமே இல்லாத வீணுன வார்த்தையாக இருக்கிறது. நேர்மையான உணர்ச்சியுள்ள மனிதருக்கு இது அவசியமே இல்லை. இதனுல் குறுகிய நோக்கமும், ஊக்கமின்மையும்தான் உண்டாகிறது. ஆதலால், இயன்றவரை இப்பதத்தை இந்திய அகராதியிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்கின்றனர். “சமூகாபிமானம் என்பது நிலையற்றது. எந்த நேரத்திலும், எச்சமயத்திலும் தனது மதத்தை மாற்றிக்கொண்டு, வேறொரு மதத்தைத் தழுவ முடியும். ஆதலால், சமூகாபிமானம் எந்த க்ஷணத்திலும் மாறக்கூடியது. தேசாபிமானம் என்பது அவ்வாறன்று. இது ஒருவருக்கு ஏற்பட்டு

விடுமாயின் அப்புறம் அது அவரை விட்டகலக்கூடிய விஷயமன்று. ஆதலால், தேசாபிமானத்தை வணங்க வேண்டும் சமூகாபிமானம் என்ற விக்கிரகத்தை உடைத்தெரியவேண்டும்" என்பது இரண்டாவது கக்ஷியினரின் நோக்கம்.

மௌலானா முஹம்மது அலி இந்தியாவிலுள்ள முதல்தரமான ராஜதந்திரிகளின் கூட்டத்திலுள்ளவர். ராஜீய வாதிகள் அடையக்கூடிய உன்னத பதவிகளை அடைந்தவர். ஆயினும், அவர் இவ்விரண்டாவது கூட்டத்தைச் சேர்ந்தவரன்று. "மனிதனின் முன்னேற்றத்துக்கு மதம் தான் அஸ்திவாரமான ஊன்றுகோலாக இருக்கிறது என்பது அவரது அபிப்பராயம். மனிதனின் முன்னேற்றம் பூகோளத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பூபாகத்தின் எல்லைக்குள் கட்டுப்பட்டதல்ல. மனிதன் இப்பூகோள எல்லைக்குப் புறம்பாகிவிட வேண்டும். தேசாபிமானம் என்பது மனிதனை பூகோள எல்லைக்குள் கட்டுப்படுத்துகிறது. தேசாபிமானம் என்ற பைத்தியம் ஜனங்கள் கண்களின்மீது திரையைப்போட்டிருக்கிறது. இதனால், அவர்கள் விஷயத்தின் உட்கருத்தையும் மனித சமூகத்துக்குரிய நன்மை தீமையையும் சீர்தூக்கிப் பார்க்க முடிவதில்லை. சமூகாபிமானம் வேண்டாம் என்று கூறுவதானது, உன்னுடைய குடும்பத்தைத் துறந்துவிடு, உன்னுடைய கோத்திரத்தைத் துறந்துவிடு, உன்னுடைய குலத்தைத் துறந்துவிடு, என்று கூறுவதற்கு ஒப்பாக இருக்கிறது. இப்படிச் செய்து விடுவது தேசாபிமானமாகாது. இப்படிப்பட்ட

வியாதிக்குத்தக்க ஔஷதம் அகஸ்தியரிடமுமில்லை, ஷிபாவுல் முல்குகளிடமுமில்லை" என்பது நமது மௌலானாவின் அபிப்பராயம்.

கிலாபத் கான்பரன்சு:—கல்கத்தாவில் நடந்த அகில இந்திய கிலாபத் கான்பரன்சில் மௌலானா தலைமை வகித்துச் செய்த பிரசங்கத்தில் இதனைக் குறித்து,

"நான் ஜனாபிமானத்தை ஆதரிக்கிறேன். தேசாபிமானத்தை ஆதரியேன். இறைவன் மனிதர்களைச் சிருஷ்டித்தான். ஷைத்தான் மனிதர்களைப் பற்பல வகுப்பினராகப் பிரித்து பிளவை யுண்டுபண்ணினான்" என்று கூறினார்.

வட்டமேஜை மகாநாடு:—மௌலானா அவர்கள் வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்று அங்கு செய்த பிரசங்கத்திலும்,

"இறைவன் மனிதரைச் சிருஷ்டித்தான். ஷைத்தான் மனிதரைப் பற்பல தேசத்தார் என்று பிரித்து விட்டான். தேசாபிமானம் என்பது, மனிதரை ஒன்று சேர விடாமல் பிரித்து வைக்கிறது. ஆனால், மதமோ எல்லா ஜனங்களையும் ஒன்று சேர்த்து இணைக்கிறது என்று நான் கூறுகிறேன்." என்று தேசாபிமான உணர்ச்சியைக் கண்டித்துக் கூறினார்.

இந்தியன் நேஷனல் யூனியன்:—1926-ல் பண்டிதமோதிலால் நேரு புதிதாக ஒருசங்கத்தை ஸ்தாபிக்க முயன்றார். வகுப்புவாத சங்கங்களை விட்டு விலகியவர்களுக்கு இச்சங்கத்தில் ஸ்தானம் அளிக்கவேண்டும் என்பது அவரது நோக்கம். இச்சங்கத்துக்கு இந்தியன்

நேஷனல் யூனியன் என்று பெயர். நமது மௌலானு இதை ஆக்ஷேபித்து பின் வருமாறு கூறிஇருக்கிறர்:—

"கம்யூனலிஸம் (சமூகாபிமானம்) என்பது நேஷனலிஸம் (தேசியம்) என்பதற்கு மாருனது என்று முன்பின் யோசிக்காமல் கூறுவதானது தேசாபிமானத்திற்காக தன்னுடைய குடும்பத்தார், வம்சத்தார், பந்துக்கள் ஆகியவர்களைப் பரிபாலித்து அவர்களை ஒழுங்கு செய்வதை விட்டுவிடவேண்டும் என்று வாதிப்பதற்கு ஒப்பாகவே இருக்கிறது. தேசாபிமானம்தான் முக்கியம் என்று கருதுவதானது ஐரோப்பாவைச் சாசுவதமாகப் பின்பற்றுவதாகும். "வத்தனியத்" என்னும் தேசபக்தியானது ஒரு வகையில் "வதனியத்" எனும் விக்கிரக ஆராதனையேயாகும். இஸ்லாம் மதம் தேச பரிபாலனம் செய்புமே யன்றி தேசபக்தி செய்யமாட்டாது."

"இஸ்லாம் தேச பரிபாலனம் செய்யும். தேசபக்தி செலுத்தமாட்டாது" என்று மௌலானு அவர்கள் எடுத்துக்காட்டிய வாக்கியம் எவ்வளவு பொருள்களும் உட்கருத்துக்களும் நிறைந்த வாக்கியம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வாழ்ந்த கருத்தைத்தான் அவர் ஒவ்வொரு பிரசங்க மேடையிலும் ஹிந்துக்களானுலும் சரி, முஸ்லிம்களானுலும் சரி, அன்றி கிறிஸ்துவர்களானுலும் சரி, சீக்கியர்களானுலும் சரி யாவருக்கும் எச்சமயத்திலும் எடுத்தியம்பிக் கொண்டே இருந்தார்.

பதினுன்காம் அத்தியாயம்

தேச பரிபாலனம்

மௌலாளு முஹம்மது அலியின் இருதயத்தில் தேசபக்தி என்பது இல்லை என்றுல் தேசபரிபாலன உணர்ச்சியும் இல்லை என்று நீங்கள் கருத வேண்டாம். தேசபக்தர் என்ற பெயரால் தற்போது தோன்றியுள்ள எவருக்கும் அவர் தேசாபிமானத்தில் குறைந்தவராக இருக்கவில்லை. இந்தியாவின் விடுதலை விஷயத்தில் பெரிய பெரிய மகாத்மாக்களுக்கு எவ்வளவு அபிமானமும் ஆர்வமும் இருந்ததோ அவ்வளவு ஆர்வமும் அபிமானமும் அவருக்கும் இருந்தது. தேச ஊழியம் செய்யும் விஷயத்தில் சுதந்தர தாகமுள்ள ஒரு தலைவர் தனது உயிருடன் விளையாடுவதுபோல், நமது மௌலாளுவும் இந்தியாவுக்காக-இந்தியாவின் நலனுக்காக, இந்தியா சுயேச்சை பெறுவதற்காக தமது உயிரைத் தமது கையில் வைத்துக்கொண்டு அரும் பாடு பட்டு உழைத்து பல அருமையான தியாகங்களையும் செய்தார்.

சைமன் கமிஷன்:—சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தபோது அவர் அக்கமிஷனைப் பகிஷ்கரிக்கும் விஷயத்தில் செய்த முயற்சிகள் என்றும் மறக்கக் கூடியனவன்று. அதுபோழ்து அவர் இந்தியாவெங்குஞ் சுற்றுப் பிரயாணம் செய்து, நண்பர்களிற் பலரின் எதிர்ப்பையும், தன் தேசத்தார் பலரின் தூஷணைகளையும் சகித்துக்கொண்டு, அக்கமிஷனுடன் ஒத்துழைக்கக்

கூடாது என்ற விஷயத்தில் பலமாகப் பிரசாரம் செய்தார்.

அப்கான் படையெடுப்பு:—மௌலானு முஹம்மது அலி மார்க்க பக்தி நிறைந்தவர் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆதலால், அவரது உள்ளக் கிடக்கையை அறிவான் வேண்டி "இண்டிபெண்டன்ட்" பத்திரிகையின் பிரதிநிதி அவரை அணுகி "காபுல் அமீர் இந்தியாவின்மீது படையெடுத்தால் தங்களுடைய போக்கு எவ்வாறிருக்கும்" என்று வினவியபோது,

> "இந்தியர்களை ஆங்கிலேயர்களின் அடிமைத்தளையைவிட்டு விடுதலை செய்யவேண்டும் என்றஎண்ணத்தால் காபுல் அமீர் இந்தியாவின்மீது படையெடுத்து வருவாராயின் நான் அவருக்கு உதவிபுரிவேன். இந்தியாவை அவர் அடிமைப் படுத்திக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தால் அவர் படையெடுத்து வருவாராயின் அவருக்கு நான் உதவிபுரியாம லிருப்பதுமட்டு மில்லாமல் அவருக்கு எதிராகப் போர் புரிந்து என் தேசம் அந்நியர் எவருக்கும் அடிமையாகா வண்ணம் அதனைக் காப்பாற்றுவேன்"

என்றதாக மிகத் தெளிவாகப் பதில் அளித்தார்.

சீன யுத்தம்:—சீனுவின்மீது பிரிட்டன் யுத்தம் தொடுக்க விரும்புகிறது என்ற பிரஸ்தாபம் 1926-ம் வருஷத்தில் உண்டாயிற்று. யுத்தத்திற்கான ஆரம்ப முயற்சிகளும் செய்யப்பட்டன; அதாவது, சில பட்டாளங்கள் சீனுவை நோக்கிப் புறப்பட்டுவிட்டன; சில

பட்டாளங்கள் புறப்படுவதற்கு தயாராக இருந்தன. அது போழ்து மௌலானா முஹம்மது அலி பிரிட்டனின் இப்போக்கை பலமாகக் கண்டித்து காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தை ஆதரித்து, 'இந்தியப் பட்டாளம் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்துக்கு இரையாகுவதற்காக சீனதேச யுத்தத்தத்துக்குச் செல்லப் படாது" என்று பிரசங்கித்தார். மிஸ்டர்ஷுஐப் குறைஷி கிலாபத் கமிட்டியின் சார்பாக சீனுதேசம் சென்று காயம் பட்டவர்களுக்கும் கொல்லப்பட்டவர்களுக்கும் வேண்டிய உதவி புரிந்து ஊழியம் செய்ய முன் வந்தார். இதை நமது மௌலானு பெரிதும் ஆதரித்து அவருக்கு உற்சாகமூட்டினாராயினும், அவருக்கு பாஸ்போர்ட்கிடைக்காததால் அவரது தலைமையின் கீழ் இத்தூதுவக் கூட்டம் சீனதேசம் செல்வதற் கில்லாமற்போய்விட்டது.

டில்லி மகாநாடு:—இச்சமயம், டில்லியில் ஒரு பெரும் மகாநாடு கூடிற்று. அரசாங்கத்தாரின் இந்த நடவடிக்கையை கண்டித்துத் தங்களுடைய அதிருப்தியைக் காண்பித்துக்கொள்வதுதான் இம்மகாநாட்டைக் கூட்டியவர்களின் நோக்கமாக இருந்தது. ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாச அய்யங்கார், பண்டித மோதிலால் நேரு, சுபாஸ் சந்திரபோஸ் ஆகியவர்களும் இம் மகா நாட்டுக்கு வந்திருந்தார்கள். நமது மௌலானா அவர்கள் இம் மகாநாட்டில் பொன்னேபோல் போற்றத் தக்க அருமையான பிரசங்கம் புரிந்தார். அரசாங்கத்தாரின் இந் நடைமுறையை அழுத்தமாகக் கண்டித்தார். "அரசாங்கம் தன்னுடைய இந்த நடவடிக்கையை

நிறுத்திக் கொள்ளாமல், இந்தியாவின் மனத்தைப் புண்படுத்தக் கூடிய இந்த முயற்சியை மேலும் மேலும் செய்யும் பக்ஷத்தில் நாம் தண்டவாளத்தின்மீது படுத்துக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்து துருப்புகள் ஏறிச்செல்லும் ரயில் வண்டியின் சக்கிரங்களால் நமது தலையை வெட்டிக் கொள்ளவேண்டும்'' என்றும் ஆலோசனை கூறினார். மௌலானா அவர்களின் பிரசங்கத்துக்கு நிகராக அம் மகாநாட்டில் வேறெவரும் அவ்வளவு அழுத்தமாகப் பேசவில்லை.

ஒரு **கடிதம்**:— ஒரு முறை நமது மௌலானா ஹஜ்ஜுக்குச் செல்வதாக முடிவு செய்திருந்தார். அது போழ்து மோசுல் பிரதேசத்தில் யுத்தம் தோன்றக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இந்தியாவிலிருந்து அங்கு பட்டாளம் அனுப்பப்படும் என்ற சந்தேகமும் தோன்றிற்று. அவ்வாறு யுத்தம் தோன்றிவிடுமாயின் தாம் ஹஜ்ஜுக்குச் செல்வதை நிறுத்திவிட்டு இந்தியாவிலிருந்து யுத்தத்தைத் தடுப்பதற்கான வேலை செய்யவேண்டியதுதான் முதன்மையான காரியம் என்று முடிவு செய்து கொண்டதுடன், தம்முடைய இவ்வபிப்பராயத்தை மௌலானா நிதார் அஹமது சாகிப் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் "ஹஜ்ஜுக்குச் செல்வதாக முடிவு செய்துவிட்டேன். ஆனால், மோசுலைப்பற்றிய விஷயம் பயமாக இருக்கிறது. அங்கு யுத்தம் தோன்றிவிடுமாயின் நான் இந்தியாவில் இருந்துகொண்டு வேலை செய்வது ஹஜ்ஜைப்பார்க்கிலும் முதன்மையான காரியமாகிவிடும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

பதினைந்தாம் அத்தியாயம்

குடியரசுக் கோள்கை

சில கொள்கைகள் மனிதரின் இருதயத்தில் ஊறி விடுவது வழக்கமாக இருக்கிறது. அப்படி ஒரு கொள்கை ஒருவரின் இருதயத்தில் ஊறிவிடுமாயின், அப்புறம் அதனை அகற்றுவதற்கு எந்த உபாயமும் பயன்படுவதில்லை. இத்தகையவர்கள் தங்களது கொள்கையை எந்த இடத்திலும் வெளிப்படுத்துவதில் பின் வாங்குவதுமில்லை.

"முடியாட்சி" என்பது நமது மௌலானாவின் அபிப்பிராயத்தில் கொஞ்சமும் சகிக்கமுடியாத குற்றமாக இருந்தது. இதை எதிர்த்து அபிப்பிராயங்கூறும் விஷயத்தில் அவர் எதையும் லக்ஷியம் செய்வதே இல்லை. தம்முடைய நண்பர்களுடனிருந்தாலும் சரி, பொதுக் கூட்டங்களிலிருந்தாலும் சரி, "முடியாட்சி" என்ற பிரசினை உண்டாகிவிட்டால், அதை அழுத்தம் திருத்தமாக அவர் கண்டித்தே பேசுவது வழக்கம்.

அல்வார் மகாராஜா :—அல்வார் மகாராஜா மௌலானா முஹம்மது அலியின் முக்கிய உபகாரிகளிலொருவர். வைத்திய சிகிச்சை செய்து கொள்வதற்காக இவர்தான் மௌலானாவை ஐரோப்பாவுக்கு அனுப்பி வைத்தார். அவர்மீது ஏற்படுத்திய கட்டுத்திட்டங்களை அகற்ற ராம்பூர் நவாப் விரும்பாதபோது அல்வார் மகாராஜா அதை எதிர்த்தார். இவ்வளவு உபகாரமும் பற்றுமுள்ள மகாராஜா தம்முடைய பட்டாபிஷேக தினத்

தைக் கொண்டாடும்போது உத்தியோகப் பற்றுள்ள வர்களையும் உத்தியோகப்பற்றில்லாத தமது நண்பர் களையும் அவ்விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு விருந்தளித்தார். இவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் நமது மௌலானா முஹம்மது அலியும் ஒருவர்.

விருந்துக்குப் பின் மகாராஜாவைப் பாராட்டிப் பிரசங்கங்கள் நடைபெற்றன. அதில் மௌலானாவும் பேசினார். முதலில் மௌலானா தமக்கும் மகாராஜா வுக்கு மிடையில் உள்ள சம்பந்தத்தையும் நட்பையும் பேசிவிட்டு இறுதியாகக் கூறுகையில் "மகாராஜா எனது நண்பர். அவருடைய அறிவாற்றலையும் திறமை யையும் நான் பாராட்டுகிறேன். ஆனால், "முடியாட்சி" என்பது எனக்குப் புறம்பான விஷயம். அதற்குக் கீழ்ப் படிய என்னால் முடியாது. நான் முடியாட்சிக்கு விரோதி. அதை நான் ஆதரிக்க முடியாது. எனக் குச் சக்தி இருக்குமாயின் நான் அல்வார் மகாராஜாவை இந்திய ஐக்கிய அரசாங்கத்துக்குப் பிரசிடென்டாக ஆக்கி விடுவேன். இந்தியக் குடியரசின் தலைவராக ஆக்கிப் பார்ப்பேன். ஆனால், அவரை நான் மகா ராஜாவாக ஆக்கமாட்டேன்" என்று கூறினார். நமது மௌலானாவின் மனப்பான்மை அல்வார் மகாராஜாவுக்கு நன்கு தெரிந்திருந்ததால் அவருடைய இப்பிரசங்கத் துக்காக மகாராஜாவுக்கு அதிருப்தி ஏற்படவில்லை.

சுல்தான் இப்னுசுஊது:—நஜத் சுல்தான் இப்னு சுஊதின் மூலம் ஹிஜாஸ் தேசம் பரிசுத்தமாகி விடும் என்ற நம்பிக்கை நமது மௌலானாவிற்கு இருந்த காலம்

வரை சுல்தான் இப்னு சுஊதை ஆதரித்துக்கொண் டிருந்தார். "இந்த நம்பிக்கை வியர்த்தமாகிறது. இந்த எண்ணம் அவரைக் கொண்டு சரியான முறையில் ஈடேறாது. அவர் அளித்த வாக்குறுதிகளைக் கொஞ்சங் கொஞ்சமாகப் புறக்கணிக்கிறார்" என்று மௌலானா விற்குப் புலப்பட்டபோது சுல்தான் இப்னு சுஊதுக்கு அவர் மாறு செய்ததுமட்டுமில்லாமல் மக்காவில் நடை பெற்ற இஸ்லாமிய மகா நாட்டின் போழ்து நஜத் சுல்தானை நோக்கி "தன்னை அரசரென்று முடிசூட்டிக் கொள்வது கைஸர், கிஸ்ரா ஆகியவர்களைப் பின்பற்றும் செய்கையாகும். ஹஜ்றத் அபூபக்கர், உமர், உதுமான், அலி (ரலியல்லாகு அன்ஹும்) ஆகியவர்களைப் பின் பற்றும் செய்கையல்ல" என்று விளக்கிக் கூறினார்.

கிலாபத்தே ராஷிதா:—நமது மௌலானா முடி யாட்சியை முற்றிலும் வெறுப்பவராக இருந்தார். மேலும், கிலாபத்தே ராஷிதாவின் திட்டம்தான் உலகுக்கு க்ஷேமத்தைத் தரக்கூடியது, நாட்டுக்கு நலன் விளைவிக்க வல்லது என்று பூரணமாகக் கருதி இருந்தார். நஜத் சுல்தான் இப்னு சுஊது உலக முஸ்லிம் மகாநாட் டைக் கூட்டியபோது அதில் கலந்து கொள்வதற்காக மௌலானா திரு மக்காவிற்குச் சென்ற சமயம் தம் முடைய "ஹம்தர்து" பத்திரிகையில் அவர் பின் வருமாறு எழுதினார்:

"இவ்வருஷம் பைத்துல்லாவை ஹஜ்ஜுச் செய்யவேண்டுமென்று நான் உறுதிகொண்டுள் ளேன். ஹிஜாஸ் தேசம் சுத்தமாக்கப்பட்டுவிட்டது.

இதற்குப் பின்னரும் அரசாங்கம் தவருன முறை யில் ஏற்படுத்தப்படுமாயின் முஸ்லிம்கள் எத்தனை காலத்திற்குத்தான் ஒரு ஆபத்தை விட்டு விலகி இன்னொரு ஆபத்திற்குள் சிக்கிக்கொண்டிருப் பார்கள் என்பது தெரியவில்லை. கர்பலா சம்ப வத்தின் முக்கியத்தை முஸ்லிம்கள் இன்னமும் உணரவில்லை. நாம் இச்சம்பவத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஈரல் குலைத் துண்டான ஹஜ்றத் இமாம் ஹுஸைன் (றலி) அவர்களது மரணத்தை நினைத்து வருந்தவேண்டியது மட்டு மில்லை. கிலாபத்தே ராஷிதா மரணமடைந்ததற் காக நாம் மாரடித்துக் கொள்ளவேண்டியது அவ சியமாகும். ஹிஜாஸைச் சுத்தப்படுத்தியதானது ஒரு மகாநாட்டைக் கூட்டுவதற்கான சந்தர்ப் பத்தை அளித்திருக்கிறது. கிலாபத்தே ராஷி தாவின் அஸ்திவாரத்தின்மீது சரியான முறையில் ஒரு குடியரசை ஏற்படுத்தி விடலாம் என்ற எண் ணங்கள் தோன்றி இருக்கின்றன. இன்று, சுல்தான் இப்னுசுஊது செய்திருக்கும் சிறந்த ஏற்பாடு மேலானதுதான் என்பது சரி. ஆனல், முடியாக்ஷியில் மறைந்திருக்கிற தீமைகள் சீர் திருத்தப்படக் கூடியனவன்று. பல தீமைகளைச் செய்வதற்கு அது அவசியம் தூண்டுகோலாக இருக்கும். அமீர் முஆவியா (றலி) அவர்கள் செய்யத் தவறியதன் காரணமாக முஸ்லிம்கள் பதின்மூன்று நூற்றுண்டுகளாகக் கஷ்டமடைந்து

கொண்டிருக்கின்றனர். இதே விதமான தவறு இப்பொழுது மீண்டும் ஏற்படாமலிருக்கவேண்டும். நம்மால் இன்று அம்மாதிரியான தவறு ஏற்பட்டு விடுமாயின் இன்னொரு பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு நாம் சுய நலத்துத்துக்கும் குடும்ப நலத்துக்குமாக அலையவேண்டியதாக ஏற்பட்டுவிடும். இப்பொழுது பனூ உமய்யாவின் அரசாங்கமோ, பனூ அப்பாஸின் அரசாங்கமோ, உதுமானியா அரசாங்கமோ ஏற்பட முடியாது. இப்பொழுது ஏற்படுகிற அரசாங்கம் இஸ்லாம் இப்னு இஸ்லாமாக (இஸ்லாத்தின் மகன் இஸ்லாமாக) இருக்க வேண்டும்.

பதினாறும் அத்தியாயம்

புலவத்தன்மை

நம்முடைய இப் புத்தகத்தின் பெயர் 'மௌலானா முஹம்மது அலி ஜௌஹர்' என்பது உங்கள் எல்லீருக்கும் தெரியும். மௌலானா அவர்களின் இயற்கைப் பெயர் முஹம்மது அலி என்பதாகும். இவரது இஸ்லாமிய ஊழியத்தைப் பாராட்டியும், இஸ்லாம் மார்க்க விஷயத்தில் இவருக்கிருந்த ஆழ்ந்த ஞானத்தை மெச்சியும் இவருடைய ஞான குருவும் லக்ஷ்மணபுரியில் பரங்கி மஹல்லாவில் வசித்தவருமான காலஞ்சென்ற, மௌலானா அப்துல் பாரீ அவர்கள் இவரது பெயருடன் "மௌலானா" என்ற சிறப்புப் பெயரையும் சேர்த்து "மௌலானா முஹம்மது அலி" என்றழைத்தார். இனி, இவரது பெயருடன் "ஜௌஹர்" என்றொரு புனைப்பெயரும் இருப்பதைப்பற்றி நீங்கள் சிந்திக்கலாம். இதற்குக் காரணம் இல்லாமலில்லை. உருது, அறபி, பார்ஸீ பாஷைகளிலுள்ள புலவர்கள் தங்களாலியற்றப்படும் செய்யுள்களின் இறுதியில் தங்களது பெயரையும் சேர்த்து முத்திரை அடியாகப் பாடுவது வழக்கம். இம்முத்திரை அடியில் தங்களுடைய முழுப் பெயரையும் சேர்த்துச் சொல்வது சிற்சில சமயங்களில் சிரமமாக இருக்கும். ஆதலால், ஒவ்வொரு புலவரும் தமக்கு ஒரு புனைப் பெயரை எற்படுத்திக்கொள்வதுண்டு. நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி சிறந்த வித்வானாகவும் கவி சொல்பவராகவும் இருந்ததால் தமக்கு ஒரு புனைப்

பெயரை ஏற்படுத்திக் கொண்டார். அப் புனைப் பெயர் தான் "ஜௌஹர்" என்பதாகும். இவரால் சொல்லப் பட்ட உருதுபாக்களில் ஆழ்ந்த கருத்துக்களும், இறை வன்பால் இவருக்குள்ள இடையருக் காதலும் பக்தியும் ததும்பிக்கொண்டிருக்கும். உருது பாஷையை உணர்ந் தோர் இவராலியற்றப்பட்ட செய்யுள்களின் மகத்து வத்தை நன்கறிவர். அவைகளின் மகத்துவத்தை நந் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுவது அத்துணை பயன் தருமென்று கருதுவதற்கில்லை. ஆயினும், இவர் உருது வில் சிறந்த வித்துவானாக இருந்தார் என்பதையும், இவர் எவ்வாறு இவ் வித்வத்தன்மையை அடைந்தார் என் பதையும் சுருக்கமாகக் கூற விரும்புகிறோம். நமது தலை வர் மௌலானா தம்முடைய நண்பர் மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இதைப்பற்றி விளக்கிக் கூறி இருக்கிறார். அதைச் சுருக்கமாக ஈண்டு கூறுவது மட்டும் போதுமென நினைக்கிறோம்.

மௌலானா அப்துல் மாஜிதுக்கு எழுதிய கடிதம் வருமாறு:—தாங்கள் என்னுடைய வித்வத் தன்மை யைப் பற்றி விசாரிப்பானேன்? நான் சிறு பையனாக இருந்தபோதே இப்பொழுது செய்யுள் சொல்வதற் கான உபமான உபமேயங்கள் கூறும் விஷயத்தில் எனக் குத் தக்க சௌகரியங்கள் கிடைத்துவிட்டன. ராம் பூரில் வீடுதோறும் 'கவி' சொல்லும் போட்டிச் சபை கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் நான் பிறந் தேன். தாக், அமீர், தஸ்லீம், ஜலால், உரூஜ், ஆகிய

பிரசித்திபெற்ற வித்வத் நக்ஷத்திரங்களும், டில்லி, லக்ஷ்மணபுரி முதலிய இடங்களிலிருந்து பிரிந்து வந்த இதர நக்ஷத்திரங்களும் ராம்பூரின் வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தன. என்னுடைய குடும்பத்தாரில் 'கவி' சொல்லும் ஆசை மிகுந்திருந்தது. என்னுடைய பந்துக்களில் 3-4 பேர்கள் உஸ்தாது "தாக்" அவர்களின் மாணவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவர் என் உடன் பிறந்த தமையனார் துல்பக்கார் அலி கௌஹர். என்னுடைய சிறிய தகப்பனாரின் புதல்வர் மற்றொருவர். எனது மாமனாரான அஜ்மத் அலிகான் இன்னொருவர். அவரது சகோதரர் ஹாபிஜ் அஹ்மது அலி ஷௌக் என்பவர் நான்காமவர். எங்களது வீட்டில் பல முறை 'கவி' சொல்லும் போட்டிச் சபை கூட்டப்பட்டது. அதற்குமேல், பிரசித்திபெற்ற வித்துவச் சிங்கமான "தாக்" என்பவரை ராம்பூர் நவாப் கல்பு அலிகான் என்பவர் மாதாந்திர சம்பளம் கொடுத்துத் தம்முடைய குதிரைலாய மானேஜராக ஏற்படுத்தி வைத்திருந்தார். ஆதலால், என் தமையனார் துல்பக்கார் அலிகான் கௌஹர் தினசரி உஸ்தாது "தாக்" இல்லம் செல்வார். அவர் போகும்போது என்னையும் தம்முடன் அழைத்துச் செல்வது வழக்கம். உஸ்தாது "தாக்" என்னை முதலாவது நாள் உனக்கு ஏதாவது செய்யுள், பாடமாக இருந்தால் சொல் என்பதாகக் கூறினார். அது சமயம் எனது வயது மிகவும் குறைவு. ஆயினும், என் தமையனார் எனக்குச் சில செய்யுள்களைச் சொல்லிக் கொடுத்திருந்தார். அவைகளை நான் மிகப் பலமாகவும்,

அழுத்தந் திருத்தமாகவும் கூறினேன். அதிலும் நான் கூறிய அந்தச் செய்யுள்கள் அவர் இயற்றிய செய்யுள்களாகவே இருந்தன. இதைக்கேட்டவுடன் அவர் பரவசமடைந்து என்தமையனாரிடம் தினசரி என்னை அவசியம் அழைத்து வரவேண்டும் என்று கட்டளையிட்டார். நண்ப! நான் வித்வத்திலேயே வளர்ந்தேன் என்று கூறுவேனாயின் அது முற்றிலும் நியாயமேயாகும். நண்ப! நான் வித்வத்தில் வளர்ந்தேன் என்று மட்டும் கூறவில்லை. அக்கடலில் குதித்தவன். அதை யானையாக ஆக்கி அதன்மீது சவாரி செய்தவன் என்றுயான் தாவா செய்யமுடியும்."

நமது தலைவர் மௌலானா, தமது தமையனார் துல்பக்கார் அலிகான் கௌஹர் என்பவருடன், உஸ்தாது தாக் என்ற பிரசித்திபெற்ற வித்துவத்ரத்தினத்திடம் பயின்றவர் என்பதும் இதிலிருந்து நாம் நன்கு தெரிந்து கொண்டோம். அப்பால் கல்விபயிலுவதற்காக பரேலி, அலிகார் ஆகிய நகரங்கள் சென்றார். அங்கும் அக்காலத்தில் பல சிறந்த வித்துவான்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். இதன்றியும் அலிகாரில் இவர் கல்விபயின்ற காலத்தில் இவரால் இயற்றப்பட்ட அநேக செய்யுள்கள் இன்னும் வடஇந்தியாவிலுள்ள புலவர்களால் போற்றப்பட்டு வருகின்றன.

பதினேழாம் அத்தியாயம்

நீண்ட வியாசம் எழுதும் தன்மை

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் சிறந்த வித்துவானாகவும், செய்யுள்களியற்றும் ஆற்றல் நிரம்பப் பெற்றவராகவும் இருந்தார் என்பது இதற்கு முந்திய அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அவர் பல பொருள்களைச் சுருக்கமாக இரண்டொரு வாக்கியங்களில் கூறிவிடும் ஆற்றல் பெற்றவரென்றும, அந்தப் பழக்கம் அவரிடம் இருந்திருக்குமென்றும் நீங்கள் கருதக் கூடும். விஷயம் அவ்வாறன்று. அவர் எழுதிய வியாசங்கள் அவசியத்திற்கு அதிகமானவைகளாக இருந்தன. கூறியதையே திரும்பத் திரும்பச் சொற்ப மாறுதலுடன் எழுதி விடுவார். முதல் நாள் எழுதிய விஷயத்தையே மறுநாளும் மீண்டும் கூறி அப்புறம் அசல் சமாசாரத்தைக் கூற ஆரம்பிப்பார். இதற்கிடையில் சம்பந்தமற்ற சில விஷயங்களும் எழுதப்படுவதுண்டு. இதனால், அவர்பால் அன்புள்ளவர்களும்கூட சில சமயங்களில் அவைகளைப் படிக்கச் சிறிது சிரமப்படுவர். விஷயம் எவ்வளவு ருசிகரமானதாக இருந்தாலும், அதை விளக்கிக் கூறுபவருக்கு எவ்வளவு ஆற்றலிருந்தாலும், அது அளவுக்குமேல் அதிகமாக நீண்டிருந்தால் படிப்பவருக்குச் சுவையில்லாமற்போவது இயற்கை. அதிலும் நமது மௌலானா முஹம்மது அலி "ஹம்தர்து" "காம்ரேட்" பத்திரிகைகளுக்கு வியாசம் எழுத உட்கார்ந்தால் ஒரே

சமயத்தில் 8, 9, 10 பத்திகள் எழுதி நிரப்பி விடுபவ ராக இருந்தார்; இவ்வளவு நீண்ட வியாசத்தை ஒருவர் படித்துக் கொண்டிருப்பது என்றால் அது சலிப்பைத் தருவது இயற்கையேயாகும்.

என்றாலும், நமது தலைவர் மௌலானாவிற்கு எல் லாக் காலத்திலும் இதே முறையில் எழுதும் வழக்க மிருந்ததாக எண்ணற்க. இவர் முதல் முதலாக பொது ஜன ஊழியத்திலும் பத்திரிகைத்தொழிலிலும் ஈடுபட்ட போது நானுபக்கங்களிலிருந்தும் இவரைப் பாராட்டி போற்றிப் புகழ்ந்தார்கள். இவருடைய வேலை முறையும், சக்தியும் வாலிப தசையிலிருந்தது. அது போழ்து இவர் இம்முறையில் நீண்ட வியாசம் எழுதுவதில்லை. பொது ஜனங்கள் சலிப்படையாமலிருப்பதற்கு எவ்வளவு அவசியமோ அந்த அளவிற்குத் தான் அவரது வியா சங்களுமிருந்தன.

பின்னர், அவருடைய கடைசிக் காலத்தில், தேச மெங்கும் அவரது ஒவ்வொரு காரியத்திலும் வழிமறிப் போரும், முட்டுக்கட்டை போடுவோரும், ராஜீய விரோ திகளும் தோன்றி அவரைச் சகல காரியத்திலும் நெருக் கிக்கொண்டிருந்தனர். அக்காலத்தில் அவர் மீது "அடங் காதவர்" "பிறரைப் பின்பற்றும் குணம்படைத்திராத வர்" "சுயேச்சையுணர்ச்சியுள்ளவர்" என்றெல்லாம் குற் றங்குறைகள் கூறி அவரைத் தூற்றவும் ஒரு கூட்டம் தலைப்பட்டு விட்டது. அக்காலத்தில் அவர் தமது கருத்தை மற்றவர்களுக்கு விளக்கமாகக் கூறிவிடவேண் டும், மற்றவர்களுக்குத் தமது அபிப்பராயத்தில் எத்

தகைய தப்பர்த்தமும் உண்டாகக்கூடாது என்ற உணர்ச்சியால் விஷயத்தை விவரமாக எழுதத்தொடங்கினர். இவ்வாறு எழுதுவதால் பொதுஜனங்கள் முற்றிலும் படித்துப்பார்ப்பதில் சலிப்படைகின்றனர் என்ற விஷயத்தை அவர் உணராமலுமில்லை. அவ்வாறு அவர் உணர்ந்தாலும் இம்மாதிரி எழுதும் விஷயத்தில் அவரைக் குறைகூறவும் முடியாது. ஏனெனில், தலைவர்களாகவுள்ளவர்கள் தங்களது அபிப்பராயத்தில் தப்பர்த்தந் தோன்றக்கூடாது என்றும், தங்கள் அபிப்பராயம் முழுவதையும் குறைவறப் பிறர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் கருதுவதியல்பு. இவ்வியற்கைக்கு ஒப்ப அவரும் நடந்துகொண்டார். ஆயினும், நீண்ட வியாசம் எழுதுவதைப் பற்றித் தமக்குள்ள உணர்ச்சியை அவர் விளக்கி இருக்கிறார். அது வருமாறு:—

"என் வியாசங்கள் நீண்டு விடுவதற்குக் காரணமில்லாமலில்லை. நான் தேசத்துக்கும் சமூகத்துக்கும் ஆற்றவேண்டிய தொண்டில் ஈடுபட்டிருக்கிறேன். வியாசம் எழுதுவதற்குப் போதிய சாவகாசமில்லை. நான் சாவகாசமாக அமர்ந்து, கருத்துக்கள் முழுவதும் வெளிப்படத் தக்கவாறு சுருக்கமான பதங்களையும் வாக்கியங்களையும் ஆலோசித்து எழுத எனக்கு நேரம் வாய்ப்பதில்லை. ஒருவர் தனது நண்பருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "மன்னிப்புச் செய்யுங்கள். கடிதம் நீண்டுவிட்டது. சுருக்கமாக எழுத எனக்குச் சாவகாசமில்லை" என்று எழுதி

யத்து முற்றிலும் உண்மையாகும். அவர் என்னைப் போல் நினைத்த மாத்திரத்தில் விஷயத்தை எழுத நிர்பந்திக்கப் பட்டவராக இருந்திருப்பார்போலும்; என்னுடைய வியாசத்தைப் படிப்போரும் கேட்போரும் தங்களுடைய இருதயங்களில் என்னுடைய இருதயத்திலுள்ள அபிப்பராயத்தை நிரப்பிக் கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதே நோக்கம்தான் என்னைச் சமாதானமற்றவனாகச் செய்திருக்கிறது. என்னுடைய நோக்கத்தை ஜனங்கள் இன்னமும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லையோ? என்னுடைய ஆதாரங்களையும் சான்றுகளையும் அவர்கள் கிரகித்துக்கொள்ளவில்லையோ? உணர்ச்சிகள் அவர்களுடைய மனத்தின்கண் புகுந்து நான் உணர்வதைப்போல் அவர்களையும் உணரச் செய்யவில்லையோ? என்ற சந்தேகம் எனக்கு எந்நேரமும் இருந்துகொண்டிருக்கிறது.”

இது தான் நமது மௌலானா முஹம்மது அலி அவர்கள் நீண்ட வியாசம் எழுதுவதற்குக் காரணம். இவ்வளவு அபாரமான அலுவல்களை வைத்துக்கொண்டிருந்தவருக்கு, “ஹம்தர்து” பத்திரிகைக்கு சாவதானமாக அமர்ந்து வியாசம் எழுத எங்ஙனம் நேரம் கிடைக்கும்?

———

பதினெட்டாம் அத்தியாயம்

நேசமும் அபிமானமும்

வெளியிற் பார்ப்பதற்கு மௌலானா முஹம்மது அலி சண்டைக்காரராகவும், யுத்தப்பிரியராகவும், அசத்தியத்தை அழிக்கும் இடிமுழக்கமாகவும், விஷமத்தையுண்டு பண்ணுபவர்களுக்கு எமனாகவும் இருந்தார் என்று தோன்றும். ஆனால், அவர் உள்ளத்தில் தமது குடும்பத்தினர், மக்கள், உற்றார், உறவினர் ஆகியவர்களை உண்மையுடன் நேசிப்பவராகவும், அவர்களது கஷ்டசங்கடங்களில் சமபங்கெடுத்துக் கொள்பவராகவும், அவர்களுடைய கஷ்டங்களையுணர்ந்து வேண்டிய உதவி புரிபவராகவுமிருந்தார். அவர் சிறந்த ராஜதந்திரியாகவும், வித்துவானாகவும், பிரசங்கியாகவும், ஆசிரியராகவும் இருந்ததுடன், தமக்கு கிடைக்கும் அற்ப ஓய்வு காலங்களில் தம்முடைய எல்லா வேலைகளையும் விட்டு விட்டுக் குழந்தைகளுடன் விளையாடி அவர்களைக் 'குஷிப்' படுத்துபவராகவுமிருந்தார். இவர் தமது சகோதரர்பால் நீங்காத அன்பு கொண்டவராகவும், தமது வயோதிகத் தாயாரின்பால் விளக்குப் பூச்சியைப்போல் பற்றும், தமது மக்கள்பால் அளவற்ற வாஞ்சையும், தமது நண்பர்களிடத்தில் ஆழ்ந்த அபிமானமும் உள்ளவராக இருந்தார்.

பிள்ளைகள்பால் அன்பு:—மௌலானா முஹம்மது அலி சிறு குழந்தைகள்பால் பொதுவாகவும், அதிலும் பெண் குழந்தைகளிடத்தில் முக்கியமாகவும் அதிகக்

கருணையும் அன்பும் உள்ளவராக இருந்தார். அவரது எதிரில் ஒரு சிறு குழந்தை வந்துவிட்டால் அவரும் சிறு குழந்தையைப்போலவே ஆகிவிடுவர். அக் குழந்தை எந்த தேசத்துக் குழந்தை, எந்த வகுப்புக் குழந்தை என்பதைப் பார்க்காமல் அக்குழந்தையின் பால் தமக்குள்ள அன்பையும் கருணையையும் அவர் அடக்கமுடியாதவராகிவிடுவார். அவர் சகலத்தையும் மறந்து அக்குழந்தையுடன் விளையாடுவதிலும் அத னுடன் பேசுவதிலும் ஈடுபட்டுவிடுவார்.

ஜாமியாமில்லியாவின் குழந்தைகள்:—தற்போது டில்லியிலுள்ள ஜாமியாமில்லியா என்ற தேசீய முஸ் லிம் சர்வகலாசாலையில் நமது தலைவர் மௌலானு முஹம்மது அலிக்கு நெருங்கிய சம்பந்தமுண்டு என் பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அவர் டில்லியில் கோச்சே சிலான் என்ற தெருவில் வசித்துக்கொண்டிருந் தார். அப்பால் தமது வாசஸ்தலத்தை குரூல் பாக் என்ற இடத்துக்கு மாற்றினுர். இந்த இடம் ஜாமியா மில்லியாவிற்குப் பக்கத்திலிருந்தது. இங்கு வந்தபின் நமது மௌலானு அக்கலாசாலையில் நடைபெறும் சகல வைபவங்களிலும் கலந்துகொண்டிருந்தார். அவர் அங்கு செல்லும்போதெல்லாம் சிறு பிள்ளைகளுக்கெனப் பிரத் தியேகமாக வைக்கப்பட்டிருக்கும் ஹாஸ்டலுக்குச் செல் வார். அங்கு சென்றவுடன் அவரும் அச்சிறுகுழந்தை களைப்போல் ஒரு சிறுகுழந்தையாகிவிடுவார். நானும் இக்குழந்தைகளுடன் சேர்ந்துகொள்ளக்கூடாதா என்று அவர் பல முறை கூறி இருக்கிறுர். தம்முடைய

கடைசிக்காலத்தில் இவ்விருப்பத்தை அவர் அடிக்கடி கூறுவதுண்டு. ராஜீய அலுவல்களைத் துறந்து இத் தேசிய முஸ்லிம் சர்வகலாசாலையில் ஒரு மூலையில் தனித்திருந்து விடவேண்டும் என்று அவர் பலகாலும் பகர்ந்திருக்கிறார். மரணமானது அவருடைய இவ்விருப் பத்தையும், கலாசாலைக்கு நெடுநாளாக இருந்த தேவை யையும் பூர்த்தி செய்யவிடாமல் அவரைக் கொண்டு போய்விட்டது.

மற்றொரு சம்பவம்:—மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதி ஒருமுறை மௌலானா முஹம்மது அலி யின் வீட்டில் விருந்தினராகத் தங்கி இருந்தார். நவாப் இஸ்மாயில் கான், பாரிஸ்டர் அட் லா அவர்களும் தம் முடைய குடும்பத்துடன் ஒரு அலுவலாக அங்கு வந்து தங்கி இருந்தார். நமது மௌலானா தமது அறையில் உட்கார்ந்து கொண்டிருந்த பொழுது நவாப் இஸ்மாயில் கான் அவர்களின் சிறிய பெண்குழந்தை அந்த அறைக்கு வந்தது. மௌலானா அக்குழந்தையுடன் முற்றிலும் குழந்தையைப் போலாகிவிட்டார். அந்த அறையில் அவர் ஓடுவார். அக்குழந்தை அவரை விரட் டிப் பிடிக்கும். பிறகு அக்குழந்தை ஓடும், அதை அவர் விரட்டிப்பிடிப்பார். பிறகு மௌலானா ஓடி ஒளிந்து கொள்வார். அக்குழந்தை மௌலானாவைக் கண்டு பிடித்து விடுவதற்காக அந்த அறையில் அங்குமிங்கும் ஓடும். பிறகு அக்குழந்தை ஒளிந்து கொள்ளும். மௌலானா அதனைக் காணாமல் தேடி அலைவதுபோல் பாசாங்கு செய்து அங்குமிங்கும் அவ்வறைக்குள்

ஓடி அக்குழந்தையைக் கண்டுபிடிப்பார். இவ்விதமாக வெகு நேரம் வரை அக்குழந்தையுடன் அவர் விளையாடிக் கொண்டிருந்தார்.

பீ அம்மா:—மேலே எழுதிய சில வரிகளில் நமது தலைவர் மௌலானாவிற்குச் சிறு குழந்தைகள்பால் எவ்வளவு பிரியம் இருந்தது என்பது தெரியவரும். இது போல் வயோதிகர்களிடத்திலும் அவருக்கு அளவற்ற கருணையும் அன்புமிருந்தது. தம்முடைய தாயார், சகோதரர், நண்பர்கள் ஆகியவர்களிடமும் அதிகப்பிரியம் உள்ளவராக இருந்தார். ஒருமுறை அவரது தாயார் பீ அம்மா ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது தமது தாயாரின் பிரிவாற்றாமையைப்பற்றி அவர் தமது நண்பர் மீர்மஹ்பூஜ் அலிகானுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

"சென்ற ரம்ஜானிலிருந்து எனது இருதயம் பைத்துல்லாவின் பக்கமே இருக்கிறது. நஊது பில்லாஹி எனக்கேற்பட்ட இந்த ஆவல் பைத்துல்லாஹ் (இறைவனின் வீடு) என்பதற்காகவன்று. என்னுடைய தாயார் அவ்வீட்டுக்கு ஆண்டவனின் விருந்தாளியாகச் சென்றிருக்கிறார் என்ற எண்ணத்தினால் என்மனம் பைத்துல்லாவை நோக்கி இருக்கிறது. எப்ரல்மீ 30-ந்தேதியிலிருந்து நான் பம்பாயிலிருந்தேன். ஏனெனில், என் தாயார் ஊர் போய்ச்சேர்ந்து விட்டாரோ என்று நான் ராம்பூர் சென்று பார்த்தேன். அங்குவராததால் பம்பாய்க்குத் திரும்பிவந்தேன். மேமாதம் 5-ம்தேதி கப்பல்

பம்பாய் துறைமுகம் வந்தது. நான் எனது வயோதிகத் தாயாரைக் காண்பதற்காக எவ்வளவு ஆத்திரமும் அவசரமும்பட்டுக்கொண்டிருந்தேனோ அவ்வளவு ஆத்திரம் ஒரு காதலன் தன் காதலியைப் பார்க்கக் காண்பித்திருக்கமாட்டான்."

மற்றொரு சம்பவம்:—ஒரு முறை அவர் "உலமாக்கள் கான்பரன்சை"யும் "இஸ்லாமிய மகாநாட்டை"யும் கான்பூரில் கூட்டினார். அக்காலத்தில் மௌலானா ஷௌகத்அலி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். ஆனால், அம் மகாநாடுகள் கூடிய அதேதினத்தில் அவர் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி நேராக கான்பூர் வந்து சேர்ந்தார். மௌலானா ஷௌகத்அலி பந்தலுக்குள் நுழைந்தவுடன் இவ்வளவு காலம் பிரிந்திருந்த முஹம்மதுஅலி தமது தமையனாரிடம் ஓடி எவ்வளவு ஆவலாக அவரை ஆலிங்கனம் செய்தார் என்பதைப்பற்றி எழுத பேனாவால் முடியாது. அவருக்கிருந்த ஆவலை விளக்க நாவாலும் முடியாது. அந்தக்காட்சியைப் பார்த்தவர்கள்தான் அவ்விருவருக்குமிடையிலிருந்த சகோதர வாஞ்சையை உணரமுடியும். அந்தக்காட்சியை அன்று கண்டவர்களுக்கு அலி சகோதரர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பு இன்னது என்பது இன்னமும் மறந்து போயிருக்கமாட்டாது.

மௌலானா அப்துல் மாஜித் சாகிப் தர்யாபாதி தம்மைப் பற்றிய ஒரு சம்பவத்தைப் பின் வருமாறு கூறி இருக்கிறார்:—

மௌலானா முஹம்மது அலி லக்நௌவுக்கு வந்து, மகாராஜா மஹ்மூதாபாத் அவர்களது இல்லத்தில் தங்கி இருந்தார். அவரைச் சந்தித்துப் பேசுவதற்காக தர்யாபாதிலிருந்து மௌலானா அப்துல் மாஜித் சாகிப் வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துச் சாவதானமாக அளவளாவிப் பேசுவதற்குள், ஒருவர் வந்து மௌலானா அப்துல் மாஜித் சாகிப் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் கடும்நோயுற்று அபாயகரமான நிலைமையிலிருப்பதாகத் தெரிவித்தார். இதைக் கேட்டவுடன் மௌலானா தர்யாபாதிக்குத் சற்று விசனமும் துயரமும் உண்டாயிற்று. மஹ்மூதாபாத் மகாராஜாவும் அங்கிருந்த மற்றவர்களும் மௌலானா தர்யாபாதிக்கு ஆறுதல் கூறினர். எனினும், மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதியைப் பார்க்கினும் அதிகமாக நமது மௌலானா முஹம்மது அலிக்குத்தான் துக்கமும் துயரமும் உண்டாயிற்று. இதுவுமல்லாமல் அதே சமயத்தில் மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதியை ஊருக்குத் திரும்ப அனுப்பிவைத்ததுடன், அவரது வாழ்க்கைத் துணைவியின் ஸ்தூல நிலைமையைக் குறித்து அவர் பூரண சௌக்கியம் அடையும் வரை தந்தி மூலமாகவும் கடிதத்தின் மூலமாகவும் விசாரித்துக் கொண்டே இருந்தார்.

ஹர்கரன் நாத் மிஸ்ரா:—நஜத் சுல்த்தான் இப்னு சுஊது ஹிஜாஸின் மீது படையெடுத்து வந்த காலத்தில் இந்திய முஸ்லிம்களுக்கிடையில் பிளவேற்பட்டது யாவரும் அறிந்த விஷயம். அதுபோழ்து அலி

சகோதரர்கள் சுல்தான் இப்னு சுஊதை ஆதரித்தனர். அவர்களின் குருவான மௌலானா அப்துல் பாரீ, சுல்தான் இப்னுசு ஊதை ஆதரிக்காமல் எதிர் கக்ஷியில் இருந்தார். அத்துடன் அக்காலத்தில் ஹிந்து முஸ்லிம் வேற்றுமையும் நாட்டில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. சுத்தி சங்கடன், தப்லீக், தன்ஜீம் இயக்கங்கள் முழு பலத்துடன் வேலை செய்துகொண்டிருந்தன.

ஒரு மகாநாடு சம்பந்தமாக மௌலானா முஹம்மது அலி அச்சமயம் லக்நௌவுக்கு விஜயம் செய்து சௌத்ரி கலீக் குஜ்ஜமானின் இல்லத்தில் தங்கி இருந்தார். இவர் வந்திருக்கும் தகவல் தெரிந்து பிரபல காங்கிரஸ் ஊழியரும் பாரிஸ்டருமான பண்டித ஹர்கரன் நாத் மிஸ்ரா இவரைக்கண்டு கொள்ள வந்தார். அவர் வெகு தூரத்தில் வரும்போதே மௌலானா "இதோ ஹிந்து உடையிலுள்ள முஸ்லிம் வருகிறார்" என்று கூறி எழுந்து நின்று அவரை வரவேற்றார். அவர் பக்கத்தில் வந்தவுடன் அவரை ஆலிங்கனம் செய்து பண்டிதரின் கன்னத்தில் பல முத்தங்கள் கொடுத்தார்.

இதுபோல அப்கான் மாஜி அரசரான காஜி அமானுல்லாகான் பட்டந்துறந்து ஐரோப்பா செல்ல பம்பாய் வந்தபோது அவரது கன்னமும் மௌலானாவின் முத்தத்துக்கு வசப்பட்டது.

பத்தொன்பதாம் அத்தியாயம்

பொதுநலத்தின்பொருட்டு வாதாடும் வன்மை

மௌலானு முகம்மது அலி பிறர் செய்த குற்றத்தை உடனே மன்னித்துவிடுவார். அதற்காகப் பழி வாங்க நினைக்கமாட்டார். ஆயினும், அதைமறந்துவிடமாட்டார். அவருடைய ராஜீயவாழ்வில் தம்முடைய நண்பர்களிடமும் ஊழியர்களிடமும் பிணங்கிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் பல ஏற்பட்டது. ஆயினும், தமக்கும் அவர்களுக்குமிடையிலுள்ள அன்புக்கும் சிநேகத்துக்கும் மயிரிழைகூடப் பிரிவு ஏற்படாமல் நடந்துகொண்டார். இது சம்பந்தமாக ஸர். முஹம்மது யாகூப் கூறுவது இவ்விடத்தில் மிகப் பொருத்தமானது :

> "பொது விஷயங்களில் எனக்கும் முஹம்மது அலிக்குமிடையில் சில சமயங்களில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. சிற்சில சமயம் ஒருவரை ஒருவர் நன்றாகத் தாக்கி போட்டிப் பிரசாரமும் செய்தோம். ஆனால், எனக்கும் அவருக்குமிடையிலுள்ள சொந்தச் சம்பந்தங்களில் எள்ளளவும் வித்தியாசமேற்படவில்லை. நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் எங்களிருவருக்குமிடையிலிருந்த அந்நியோன்யம் அதற்குப் பின்னர் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பிணங்கிக் கொண்டிருந்தபோது மிருந்தது."

ஸஜ்ஜாத் ஹைதர்:—நமது தலைவர் மௌலானு முஹம்மதுஅலி, பள்ளி மாணவராக இருந்த காலங்

தொடுத்து ஸஜ்ஜாத் ஹைதர் யல்தரூமுடன் அவருக்கு சிநேகம் இருந்தது. ஆனால், அவ்விருவரின் வேலை முறை பெரியவர்களான பின்பு ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டுவழிகளில் சென்றன. அலிகாரில் முஸ்லிம் சர்வகலாசாலையை ஒழித்து விட்டு அதற்கு பதிலாக தேசிய முஸ்லிம் சர்வகலாசாலை ஏற்படுத்தவேண்டு மென்ற முயற்சியில் நமது மௌலானா ஈடுபட்டபோது அலிகார் சர்வகலாசாலையிலுள்ள பழைய மாணவர் விடுதியிலிருந்து அவரை மிகக்கடுமையான முறையில் வெளியேற்றினர். அது போழ்து ஸஜ்ஜாத் ஹைதர் சாகிப் யல்தரூம் தம்முடைய பழைய நட்பை ஆதரவு வைத்து, இம் முயற்சியில் ஈடுபடவேண்டாம் என்று இவரைத்தடுத்துவிடவும், தேசிய முஸ்லிம் சர்வகலா சாலை ஸ்தாபிப்பதைக் கைவிடச் செய்யவும் வேண்டும் என்பதற்காகவே அலிகாருக்கு வந்தார். நம் தலைவர் மௌலானாவை அவர் பேட்டிகண்டு வேண்டிய மட்டும் கூறினர். ஆனாலும், அவர் கிலாபத்இயக்கத்துத் தலைவ ராகவும், முஸலிம்சர்வகலாசாலை நிர்வாகிகளின் போக்கை மிகவும் பலமாக எதிர்ப்பவராகவும் இருந்ததால், ஸஜ்ஜாத் ஹைதர் சாகிப் அவர்கள்கூறியவற்றைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. அவ்வாறிருந்தும் இரு வருக்குமிடையிலிருந்த பாசமும் அன்பும் மரணபரி யந்தம் குறைவில்லாமலிருந்தன.

மிஸ்டர் முஹம்மது அலி ஜின்னா:—1925-ம் வருஷத்தில் பம்பாயில் ஜனாப் ரிஜாஅலி அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் அகில இந்திய முஸ்லிம் லீக்

மகாசபை நடைபெற்றது. அம் மகா சபையில் மௌலானா முஹம்மது அலியும், ஜனாப் முஹம்மது அலி ஜின்னாவும் கலந்துகொண்டனர். இவ்விருவருக்குமிடையில் பலத்த விவாதமும் நடந்தது, ஒருவரை ஒருவர் குத்துப்பாடு செய்தும் பேசினர். ஆனால், மகாநாடு முடிவடைந்தவுடன் நமது மௌலானா தமது இருப்பிடத்தை விட்டு எழுந்து ஜனாப் முஹம்மது அலி ஜின்னாவிடம் சென்று அவரை மார்புறத்தழுவி ஆலிங்கனம் செய்து அவருடைய கன்னத்தில் பலமுறை முத்தம் கொடுத்தார்.

தேசபந்து ஸி. ஆர். தாஸ்:—நாகப்பூர் காங்கிரஸின் போழ்து காந்திஜீ கொண்டுவந்த ஒத்துழையாமைத் திட்டத்தை தேசபந்து ஸி. ஆர் தாஸ் பலமாக எதிர்த்து விதவிதமான ஆக்ஷேபனைகளைச் செய்தார். நமது மௌலானா முஹம்மது அலி, தமக்கும் ஸி. ஆர். தாஸுக்கும் இருந்துவந்த நட்பையும் கூட்டுறவையும் கவனித்து ஒத்துழையாமைத் திட்டத்தை ஸி. ஆர். தாஸ் ஒப்புக்கொள்வது மாத்திரமின்றி தமது வக்கீல் தொழிலையும் விட்டுவிடவேண்டும் என்று வற்புறுத்திவந்தார். ஆனால், இவ்விருவருக்கும் நண்பர்களாக இருப்பவர்கள் நமது மௌலானாவிடம் சென்று வக்கீல் தொழிலை விடவேண்டும் என்று தேசபந்துவை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். தேசபந்து ஸி. ஆர். தாஸ் இரண்டையும் அங்கீகரிக்க மறுத்துக்கொண்டிருந்தார். ஆனால், நமது மௌலானா இவ்விரண்டையும் தாஸ் விட்டுவிடவேண்டுமென்று விடாப்பிடியாக இருந்தார். இவ்வித

நிலைமையில் ஒரு இரவு சுமார் 3 மணிக்கு மௌலானா அவர்கள் காந்திஜியிடமிருந்து தேசபந்துதாஸ் தங்கியிருக்கும் விடுதிக்கு வந்தார். அதுபோழ்து தேசபந்து நமது மௌலானா அவர்களைத் தனியே அழைத்துச் சென்று "முஹம்மது அலி! உமது அபிப்பராயம் சரிதான். நான் வக்கீல் தொழிலை விட்டு விடுவதாக முடிவு செய்து விட்டேன்" என்று கூறினர். அவர் இவ்வார்த்தைகளைக் கூறியவுடன் மௌலானாவுக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு எல்லையில்லை. உடனே தேசபந்து தாஸைக் கட்டித் தழுவி அவரது கன்னத்தில் பலமுறை முத்தமிட்டார்.

மௌலானா அவர்களின் போட்டி:—அலிகார் முஸ்லிம் கலாசாலை நிர்வாகிகளுக்கு நமது மௌலானாவைக் கண்டால் பயம். அவருடைய நிர்தாக்ஷண்யமான பேச்சுக்களும், சுயேச்சையான அபிப்பராயங்களும் அவரை அநேகருக்கு விரோதியாக்கி வைத்திருந்தன. ஆயினும், அவர் தமக்குப் பலர் விரோதமாக இருப்பதைக்கண்டு மனந்தளருவதில்லை. இவ்விதமான எதிர்ப்புகளை அவர் மலர்ந்த முகத்துடன் ஏற்றுக்கொள்ளுவது வழக்கம்.

அலிகார் காலேஜின் டிரஸ்டி பதவிக்கு நமது தலைவர் மௌலானாவும் ஒருமுறை அபேக்ஷகராக நின்றார். காலேஜ் நிர்வாகிகளிற் பலர் இதற்கெதிராக இருந்தனர். அலிகாரிலுள்ள ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களும் கூட மௌலானாவின் அபேக்ஷைக்கு விரோதமாக இருந்தனர். காலேஜ் செக்ரடரி நவாப் இஸ்ஹாக்

கான் கூட இதற்கு எதிராக இருந்தார். மேஜர் ஸெய்யித் ஹுஸைன் பல்கராமியை நமது மௌலானாவிற்குப் போட்டியாக நிறுத்தின மேஜர் பல்காரமிக்காக நமது மௌலானா தமது அபேக்ஷையை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று பலர் வற்புறுத்தினர். இதற்கு அவர் சம்மதிக்காததால் பலமான போட்டி யேற்பட்டது. இறுதியாக ராம்பூர் நவாப் ஹிஸ் ஹைனஸ் ஸர். ஹாமிது அலி அவர்களிடமும் சிபாரிசு செய்தனர். மௌலானா ஷௌகத் அலி, நவாப் இஸ் ஹாக்கான் முதலிய பலர் முன்னிலையில் ராம்பூர் நவாப் இதைப் பிரஸ்தாபித்து நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி போட்டிக்கு நிற்காமல் விலகிக் கொள்வது நல்லது என்று தமது விருப்பத்தை அறி வித்துக் கொண்டார். இத்தனை முயற்சிகளைக் கண் டும் அவர் தமது அபேக்ஷையை வாபீஸ் வாங்கவில்லை. அதனைப் பலமாக வற்புறுத்தத் தொடங்கினர். இறுதி யாகத் தேர்தல் நடந்தது. மௌலானா முஹம்மது அலி வெற்றியடைந்தார். ஆனால், அவர் வெற்றியடைந்த பின் தமது மேலான நற்குணத்தையும் தாராள நோக் கத்தையும் காண்பித்து மேஜர் ஸெய்யித் ஹுஸைன் பல்கராமீக்காகத் தமது பதவியை ராஜீநாமா செய்து அந்த ஸ்தானத்தில் அவர் வருவதற்குச் சந்தர்ப்ப மளித்தார்.

லாலா லஜபதிராய்:—லாலா லஜபதிராய்க்கும் மௌலானாவுக்கு மிடையில் எவ்வளவு பலமான அபிப் பிராய பேதமும் பிணக்குமிருந்தது என்பதைப் பத்தி

ரிகை படிப்போர் நன்கறிவர். ஸைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்து லாகூர் சென்றபோது அக் கமிஷனைப் பகிஷ்காரம் செய்ய நடைபெற்ற ஊர்வலத்தின் போழ்து போலீசாரால் லஜபதிராய் அடிபட்டுச் சில நாட்களுக்குப்பின் மரித்தார். அச்சமயம் நமது மௌலானு இங்கிலாந்தில் இருந்தார். இந்தியாவுக்குத் திரும்பி வந்தவுடன் முதல் முதலாக லாலா லஜபதிராயின் மரணத்தைக் குறித்துத்தான் பேசினுர். அவரது மரணத்தை அடைய மற்றவர்கள் போட்டிபோட வேண்டுமென்றும் கூறி, தமக்கு அம்மாதிரி மரணம் கிடைக்காதா என்றும் பேசினுர். அதற்கு முன் அவர் இந்தியா சட்ட சபையில் ஹிந்து முஸ்லிம் பிணக்குக்கு பிரிட்டிஷார்தான் காரணம் என்று குறிப்பிட்டுச் செய்த பிரசங்கத்தை மௌலானு ஆதரித்து தமது பத்திரிகையில் இது சம்பந்தமாகப் பல கட்டுரைகளையும் எழுதினுர்.

மாளவியாஜீ:— பண்டித மாளவியா ஹிந்து மகா சபை மனப்பான்மை கொண்டவர் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். சென்னைக்காங்கிரஸின் போழ்து இவர் அரசாங்கத்தின் கொள்கையைக் கண்டித்து "சண்டை மூட்டுங்கள். அரசாட்சி புரியுங்கள்" என்ற முறையில் அரசாங்கத்தார் நடந்து வருகிறுர்கள் என்று கூறி மிகவும் உக்கிரமானதொரு பிரசங்கம் செய்தார். அதனை நமது மௌலானு ஆதரித்து "பண்டிதரின் இப் பிரசங்கம் அவரது அகத்திலிருந்து உண்மையோடுங் கூடி வெளிப்பட்டிருக்குமாயின் இன்றே இந்து முஸ்லிம் ஒற்

றுமையுண்டாகிவிட்டது என்று கூறலாம். ஸைமன் கமிஷன் இந்தியாவுக்கு வருவதை நாம் பகிஷ்கரிக்க வேண்டியதில்லை. அக் கமிஷன் தாராளமாக வரட்டும். எகிப்தில் மில்னர் கமிஷன் வந்தபோது அத்தேசத்தார் நடந்துகொண்டதுபோல் நாமும் நடந்து கொள்வோம். சிறுபான்மையோர் பிரசினையைத் தீர்க்க வல்லவர் மாளவியா தான். அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று நாம் ஸைமன் கமிஷனிடம் கூறிவிடுவோம்" என்று கூறினர்.

ஸர். அப்துல் கையூம்:—சாரதா சட்டம் சம்பந்தமாக நமது தலைவர் மௌலானாவிற்கும், மிஸ்டர் முஹம்மதுஅலி ஜின்னா, ஸர்அப்துல்கையூம் ஆகியவர்களுக்கும் இடையில் ஒருநாள் டில்லியில் பலத்த விவாதம் நடந்தது. மூவரும் ஒருவருக்கொருவர் நன்கு பேசினர். அது ரமலான் மாதமாகவுமிருந்தது. இதனால், விவாதத்தின் போக்கு கடுமையாகவும் மாறிற்று. பிறகு மௌலானா அவர்களது உள்ளத்தில் இவ்விவாதம் நடைபெற்ற எண்ணம் கூட எழவில்லை. வழக்கம் போல் அவர்கள் அன்னியோன்யமாகவே எப்பொழுதும் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

இருபதாம் அத்தியாயம்

தியாகமும் சுயநல மின்மையும்

மௌலானு முஹம்மது அலி ஜௌஹர் செல்வமாக வளர்ந்தவர். அவரைச் சேர்ந்தவர்களனைவரும் பணச் செருக்குள்ளவர்கள். மௌலானு அவர்களும் பணம் சம் பாதிப்பதை வெறுத்துத் தள்ளிவிடவில்லை. ஆயினும், அவர் பிறரிடம் தேவை யில்லாதவராகவே எப்பொழு தும் இருந்து வந்தார். தன்னைப் பொறுத்தமட்டில் சக லத்தையும் தியாகம் செய்யும் உணர்ச்சியே அவரிடம் ததும்பிக் கொண்டிருந்தது.

ஆக்ஸ் போர்டு சர்வ கலாசாலையில் "ஆனர்ஸ்" பட்டம் பெற்றவர்களுக்கு உலகாதயங்கள் அடி அடி தோறும் இருந்தன. ரூபாயும் பவுனும் அவரது பாதங் களில் குவியல் குவியலாகக் கிடந்தன. ஆனால், அவரு டைய மனமும் உணர்ச்சியும் தேவையற்றனவாகவும் தியாகமுள்ளனவாகவு மிருந்தன. ஆதலால், அவை களை அவர் ஒருநாளும் லக்ஷியம் செய்யவே இல்லை. அவருக்கு செல்வந்திரட்ட வேண்டு மென்ற ஆசைமட் டும் இருந்திருக்குமாயின் அவர் பரோடா சமஸ்தானத்து உத்தியோகத்தை ராஜீநாமா செய்திருந்திருக்கமாட்டார். ராம்பூர்பதவியை விட்டிருந்திருக்கமாட்டார். ஜாவரா சம ஸ்தானத்து மந்திரிப் பதவியை உதரித்தள்ளி இருக்க மாட்டார். போப்பால் சமஸ்தானத்து சீப் செக்ரி டரி பதவியை அவர் தமது கைவசத்தில் வைத்துக் கொண்டிருந்திருப்பார். இதல்லாமல், அரசாங்கப் பதவி

களில் தனக்கு இஷ்டமான எந்தப் பதவியிலும் அமர்ந்திருந்திருப்பார். ஆனால், அவருடைய மனம் இவைகளில் எதையும் நாடவேயில்லை. தேசத்துக்கும் சமூகத்துக்கும் ஊழியம் செய்யும் விஷயத்தில் அவரால் கூடுமானதைச் செய்ய அவர் மறக்கவே இல்லை.

அவருக்குப் பணம் எப்பொழுதும் தேவையாகவே இருந்தது. அவருடைய செலவினங்கள் அவருக்கு எப்பொழுதும் பெருகிக்கொண்டே இருந்தன. அவரது வரவும் செலவும் ஒருபோதும் சரிப்பட்டே வரவில்லை. ஆதலால், அவர் ஸர். ஆகாகான், மஹ்மூதாபாத் மகாராஜா, அல்வார் மகாராஜா, ஸேட் அப்துல்லா ஹாரூன் ஆகியவர்களிடமிருந்தெல்லாம் உபகாரம் பெற்றார். ஆனாலும், அவர் தம் மனச்சாக்ஷியை விட்டுக் கொடுக்கவில்லை. தமக்குப் பணங்கொடுத்து உதவி புரிகிறவர்கள் என்பதற்காக அவர்களிடம் தயைகாட்டவில்லை. ஸர். ஆகாகானின் அபிப்பராயம் சரியில்லை என்று தமக்குத் தோன்றியபோது தமக்கு அவர் செய்யும் உபகாரத்தைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் அவரைப் பலமாக எதிர்த்தார். இதனால், அவரிடமிருந்து அடைந்து கொண்டிருந்த உதவியை இழந்தார். மஹ்மூதாபாத் மகாராஜாவிடம் அபிப்பராயபேதம் ஏற்பட்ட போழ்தும் அவருடைய உதவியை அவர் லக்ஷியம் செய்யவில்லை. அவரும் இறுதியாகத் தம்முடைய உதவியை நிறுத்திக் கொள்ளவேண்டியதாக ஏற்பட்டது. டாக்டர் அன்ஸாரி, மௌலானாவுக்கு மிகவும் அதிகமாக உதவி புரிந்தார். ஆனால், மனச்சாக்ஷி என்ற பிரசினை வந்தபோது டாக்

டர் அன்ஸாரியையும் கண்ணியமான முறையில் எதிர்த்தார். இதனல், அவர் எப்பொழுதும் ஏழையாகவே இருக்கவேண்டியதாக இருந்தது. பணத்துக்காகத் தமது மனச்சாக்ஷியை, தமது அபிப்பராயத்தை விற்று விடவில்லை. அவர் பணத்தேவை யுள்ளவராகவும், தமக்குள்ள அவசியங்களுக்குப் பிறரின் உதவியை எதிர் பார்ப்பவராகவும் இருந்து கொண்டு சட்டப்படி நடப்பவராகவும், அவசியம் நேர்ந்துழி தமக்குக் கிடைக்கும் உதவியையும் கவனிக்காமல் பலமாகக் கண்டித்துச் சத்தியத்தை நிலை நிறுத்த முயற்சிப்பவராகவுமிருந்தார்.

பேகம் குலாம் ஹுஸைன்:—ராஜா குலாம் ஹுஸைன் என்பவர் நமது மௌலானுவிற்கு வலக் கையைப்போலிருந்தார். "காம்ரேட்" பத்திரிகையின் கீர்த்திக்கும் அபிவிருத்திக்கும் இவர் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பாராட்டாமலிருக்க முடியாது. இவர்பால் மௌலானுவிற்கு அதிகப் பிரீதியும் அன்பும் இருந்தது. திடீரென நிகழ்ந்த ஒரு சம்பவத்தால், ராஜா குலாம் ஹுஸைன் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து மறு உலகடைந்தார். அப்பொழுது அவர்மீது நமது மௌலானு "இரங்கற்பா" எழுதினர். பிறகு, பாது காவலிலிருந்து விடுதலையடைந்தார். அவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த காலத்தில் அவருக்கு அளவற்ற பொருள் நஷ்டம் ஏற்பட்டது. சகலவிதமான தொழில் முறைகளும் நின்றுவிட்டன. ஆயினும், விடுதலை யடைந்தவுடன், ராஜா குலாம் ஹுஸைன் மர்ஹூம் அவர்களது விதவைக்கு அவர் உதவி செய்வதில் பின்

வாங்கவில்லை. தம்மிடம் பணமில்லாமல், தமது செலவுக்குத் தக்க முறையின்றி கஷ்டத்திலாகி இருந்த அதே சமயம் அவ்விதவைக்கு ரொக்கமாக ரூ. 500—0—0-ம், ஒரு மெஷினுள்ள அச்சுக்கூடமும் இனமாக அளித்தார். இவ்வாறு உதவி புரிவதைப்பற்றி ஒருவர் ஆக்ஷேபிக்கவும் செய்தார். ஆயினும், அவர் உத்தேசித்த உதவியைச் செய்யப் பின்வாங்கவில்லை.

"ஜமீன்தார்" பத்திரிகைக்கு உதவி :—இந்தியாவிலுள்ள பத்திரிகைகளில் "ஜமீன்தார்" பத்திரிகை தேசத்திற்காகவும் சமூகத்திற்காகவும் செய்த ஊழியத்தையும், இது சம்பந்தமாக அப்பத்திரிகை அடைந்த கஷ்டங்களையும் பொருள் நஷ்டங்களையும் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் அங்கீகரிப்பர். நமது மௌலானாவிற்கு அப்பத்திரிகையின் நடைமுறையும் அதன் போக்கும் திருப்தியளிப்பதாக இருந்ததில்லை. ஆயினும், அப்பத்திரிகைக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் நஷ்டங்களையும் கண்டு ஒருபோதும் அவர் சந்தோஷமடைந்ததே இல்லை. அப்பத்திரிகைக்குத் தம்மாலான உதவியை அவர் எப்பொழுதும் செய்துகொண்டே இருந்தார். அதற்காக மற்றவர்களிடமும் நன்கொடை வசூல் செய்தார்.

கிலாபத் கமிட்டி :—மௌலானா முஹம்மது அலி அவர்கள் பூர்த்தியாக ஐந்துவருஷகாலம் அரசாங்கத்தின் பாதுகாப்புக்குள்ளிருந்து சிறைவாசம் செய்ததால் சகல தொழில்களும் நின்றுவிட்டன என்பதை மேலே கூறி இருக்கிறோம். அரசாங்கத்தாரால் பாதுகாப்பில் வைக்கப்பட்டபோது அலி சகோதரர்கள் தங்களது

குடும்பத்தாரனைவருடனும் சுண்டுவாடாவில் இருந்து வந்தனர். அரசாங்கத்தார் அவர்களின் செலவுக்காக மாதந்தோறும் ரூ. 250 கொடுத்து வந்தனர். "ஹம்தர்து", "காம்ரேட்" பத்திரிகைகள் நின்று விட்டன. அச்சுக்கூடத்துக்கு ஜாமீன் கட்டவேண்டிய தேற்பட்டதால் அதுவும் நடைபெற இயலாமற் போய் விட்டது. சொற்ப வரும்படியைக் கொண்டு குடும்பச் செலவை நிர்வகிக்க முடியவில்லை. கடன் வாங்கிச் செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திலானார்கள். முராதாபாத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஜாகீர்களும் கொஞ்சங் கொஞ்சமாக ஒழிந்தன. இவ்வித நிலைமையில் அவர்கள் விடுதலையடைந்தபோது சாப்பாட்டுக் கவலையும் தோன்றிற்று. டில்லியில் குடி இருந்த வீட்டுக்கு வாடகைப் பணமும் கட்டவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. கடன் தலைக்குமேல் நின்றது.

அவர்கள் விடுதலை யடைந்தபோது தேசமக்கள் அவர்களுக்கு மரியாதையும் செய்தனர். அவர்களுக்கிருக்கிற கடனைத் தீர்த்து அவர்களுக்கு உதவி புரியவும் விரும்பினர். அதாவது டாக்டர் அன்சாரியும், ஹக்கீம் அஜ்மல்கானும், இதர கிலாபத் அபிமானிகளும் முயற்சி செய்து ஒரு பெருந் தொகையைத் திரட்டினர். அலி சகோதரர்கள் டில்லிக்கு வரும்போது அவர்களிடம் இத்தொகையை அளிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

அவர்கள் டில்லிக்கு வந்தபோது நிகரற்றவண்ணம் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஒரு ஆயிரம் பவுன்

கிரயமுள்ள தங்க ஜரிகை மாலை அவ்விருவருக்கும் அணிவிக்கப்பட்டது. ஆனால், தனக்கென வாழா அவ்விரு சகோதரர்களும் அம்மாலைகளிரண்டையும் அதே இடத்தில் ஏலம் வைத்து 17 ஆயிரம் ரூபாய்க்குக் கிரயம் செய்தனர். தங்களுக்கு அளிக்கப்பட்ட 12 ஆயிரம் ரூபாய் பணமுடிப்பையும் அதனுடன் சேர்த்து கிலாபத் நிதிக்காக அதனை அர்ப்பணம் செய்துவிட்டு, தங்களுடைய கஷ்ட நிலைமைக்கும் கடனுக்கும் அல்லாஹுதஆலாவை நம்பி இருந்துவிட்டனர். இந்தத் தொகைதான் முதல்முதலாக கிலாபத் நிதிக்காக அளிக்கப்பட்ட பெருந்தொகை என்பதை நாம் இவ்விடத்தில் மறந்துவிடக் கூடாது.

வெள்ளிக்கோப்பை :—ஹைதராபாத்தில் ஒரு சமயம் அபிமானியும் நண்பருமான ஒருவர் விலையுயர்ந்ததும், அழகியதுமான வெள்ளிக்கோப்பைகளையும், தட்டுகளையும் அவர்களுக்குக் காணிக்கையாக அளித்தார். மார்க்கபக்தி நிறைந்த அவர் அவ்வெள்ளிக் கோப்பையையும், தட்டையும் தேநீர் அருந்த உபயோகிப்பார் என்பது அவ்வபிமானியின் நோக்கம்போலும். ஆனால், அவர் அவ்வபிமானி அளித்த காணிக்கையைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார். ஆயினும், அவைகளை உபயோகப்படுத்தாமல் கிலாபத் நிதிக்காகக் கொடுத்துவிட்டார்.

நத்வத்துல் உலமா :—கான்பூரில் ஹக்கீம் அஜ்மல் கான் தலைமையின் கீழ் நத்வத்துல் உலமாவின் வருஷாந்திர மகாநாடு நடைபெற்றது. இம் மகா நாட்டில்

பல கக்ஷித் தலைவர்களும் கலந்து கொண்டனர். ராஜீய வாதிகளில் மௌலானா ஜூபர் அலிகான், டாக்டர் கிச்லு, ஹஸ்ரத் மோஹானி முதலிய தலைவர்களும், மார்க்கக் கல்வியிற் சிறந்த உலமாக்களில் ஹக்கீம் அஜ்மல் கான், காரிஷாஹ் சுலைமான் புல்வாரி முதலியவர்களும், ஒத்துழைப்புக் கக்ஷிக்காரர்களில் ஹாபிஜ் ஹிதாயத் ஹுஸைன், ஸர். ரஹீம் பக்ஷ் போன்றவர்களும் கலந்து கொண்டனர். இம்முக்கியமான மகா நாட்டில் மௌலானா முஹம்மது அலியும் கலந்துகொண்டார் என்பதை நாம் கூறாமலே வாசக நேயர்கள் தெரிந்து கொள்வார்களாக.

இரண்டாம் நாள் மகா நாடு கூடியபோது நத்வத் துல் உலமாவுக்குப் பொருளுதவி செய்யும் பிரசினையுண் டாயிற்று. சம்பத்துள்ளவர் அந்த இடத்திலேயே தங் கள் தங்களாலியன்ற பொருளை ஈந்தனர். சிலர் ஒரு தொகை கொடுப்பதாகப் பகிரங்கமாக வாக்களித்தனர். இதில் யாவருக்கும் முதலில் நமது மௌலானா இருநூறு ரூபாய் வருஷ சந்தா தருவதாக வாக்களித்தார்.

மற்றொரு சமயம்:—1928-ம் வருஷத்தில் நமது மௌலானா லண்டனுக்குச் சென்றார். அச் சமயம் ஸ்ரீமதி ஸரோஜினி தேவியும் அங்கிருந்தார். லண்டனில் இருக்கும் இந்தியப் பிரமுகர்களில் ஒரு வரும், மாஜி பார்லிமெண்ட் அங்கத்தினருமான மிஸ் டர் சக்லத் வாலா என்பவரது அரிய முயற்சியால் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அம்மகா நாட்டில் சைமன் கமிஷன் நியமனத்தைப் பற்றி ஸ்ரீமதி ஸரோஜினி

தேவியும், மௌலானா முஹம்மது அலியும் அருமையான சொற்பொழி வாற்றினார்கள். பின்னர், இந்தியாவின் கோரிக்கையையும், பிரிட்டனின் ஏகாதிபத்திய ஆசையையும்பற்றி இங்கிலாந்தில் பிரசாரம் புரிவதற்கென்று ஒரு சங்கமும் அம்மகா நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

நமது மௌலானா தமது நோய்க்குச் சிகிச்சை செய்து கொள்வதற்காகப் பிறரது உதவியின் பேரில் இங்கிலாந்துக்கு வந்திருந்தாலும், இச்சங்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் சந்தாவாகக் கொடுத்தார். அவர் வாயால் மாத்திரம் பேசுவதுடன் நில்லாமல் கிரியாம்சையில் செய்து காட்டும் தர்ம சிந்தனையுள்ளவராகவும் இருந்தார்.

இருபத்தொன்ரும் அத்தியாயம்

வாக்குச் சுதந்திரம்.

மௌலானு முஹம்மது அலி ஜௌஹர் குடியரசுக் கொள்கையுள்ளவர். முடியரசையும், ஏதேச்சாதிகாரத்தையும், அவர் அடியுடன் வெறுப்பவர். தம்முடைய ஊழியத்தையும், தியாகத்தையும் கூறிப் பொது ஜனங்களின் அபிப்பராயத்தைத் தமக்குத் துணையாகச் சேர்க்கும் முயற்சியையுங்கூட அவர் வெறுப்பவர். பொது ஜனங்களுக்கு வாக்குச் சுதந்திரம் இருக்க வேண்டுமென்ற விருப்ப முள்ளவர். பொது ஜனங்கள் தங்கள் மனத்திற்ருேன்றியதைத் தாராளமாகக் கூறவும், தங்கள் சுய அபிப்பராயத்தைத் தாராளமாக உபயோகிக்கவும் அவர்களுக்குப் பூரண சுதந்திர மிருக்க வேண்டுமென்ற அபிப்பராய முள்ளவர்.

இதே காரணத்தினுல்தான் அவர் தமது அபிப்பராயத்தைப் பொதுஜனங்கள் ஆதரிக்கவேண்டும் என்பதற்காகத் தமது இஸ்லாமிய ஊழியத்தையோ பொது ஜனத் தொண்டையோ, தியாகங்களேயோ மற்றவர்களிடம் சொல்லிக் காண்பித்ததில்லே. பொது ஜனங்களுக்குத் தாராளமான வாக்குச் சுதந்திர மிருந்தால்தான் தேசமும், சமூகமும் முன்னேற்றமடையும் என்று அவர் அடிக்கடி கூறுவார்.

லாகூர் கிளர்ச்சி:—நஜத்ஹிஜாஸ் யுத்தம் நடைபெற்றபோது இந்தியாவில் முஸ்லிம்களுக் கிடையில் வாய்ச் சண்டை மிகப்பலமாக இருந்தது. முக்கியமாக

பஞ்சாபில் இது மிக பலமாக நடந்துகொண்டிருந்தது. பஞ்சாபிலுள்ள சில பிரபலஸ்தர்கள் தோன்றுவித்த இந்த வாய்ச் சண்டைக் கிளர்ச்சியை அடக்க அங்குள்ள அஹ்ரார் சபையினரால் முடியவில்லை. தினந்தோறும் புதுப்புது வதந்திகள் ஜனங்களிடை உண்டாக்கப்பட்டன. இன்று இப்னு ஸுஊது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களது ரௌலாஷரீபைத் தாக்க விரும்பினார், நாளைய தினம் தாக்கப்போகிறார் என்பன போன்ற செய்திகளை எல்லாம் பொது ஜனங்களிடம் பரவச் செய்தனர். ஆதலால், மௌலானா முஹம்மதுஅலியை அங்கு வரும்படியாக லாகூரிலுள்ள பிரபலஸ்தர்கள் பன்முறை வினயமாய் வேண்டி வருந்தி யழைத்தனர்.

இறுதியாக, மௌலானா ஜுபர் அலிகானின் அழைப்பின் பேரில் நமது தலைவர் மௌலானா லாகூருக்கு விஜயம் செய்தார். அங்கு கூட்டப்பட்ட மகா நாட்டிற்கு டில்லி ஜமிய் யத்துல் உலமா மகா சபையின் காரியதரிசியான மௌலானா அஹ்மது ஸயீது சாகிப், அமிர்தசரஸ் மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரி ஆகிய பிரபல உலமாக்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

மௌலானா அஹ்மது ஸயீது சாகிப் தற்கால நிலைமையைப் பற்றி சபையினரின் மனதைக் கவரத் தக்க விதமாகப் பேசினார். பிறகு மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரி பிரசங்கம் செய்தார். இவர் பஞ்சாபிகளில் சிறந்த மார்க்கோபதேசி என்று பெயர் வாங்கியவர். இவரது பிரசங்கம் மிக

வன்மை பொருந்தியது. சபையினரை வசியம் செய்வதில் நிகரற்றது. சபையினர் அனைவரும் இவரது பிரசங்க வன்மையால் இவர் ஆதரிப்பதை ஆதரித்தும், அவர் எதிர்க்கும் கக்ஷியினரை எதிர்த்தும் கூச்சலிட்டனர். இவர் சபையினரை இவ்வண்ணம் தம்பால் திருப்பி வெற்றியடைந்ததைப் பற்றி நமது மௌலானா சந்தோஷமடைந்தார். பொது ஜனங்கள் தங்களைப் பலமாக எதிர்ப்பார்களென அத் தலைவர்கள் நினைத்திருந்தனர். ஆயினும், மௌலானா புகாரியின் பிரசங்கத்தால் எதிர்ப்பு அடங்கியதுமட்டுமில்லாமல் தங்களை ஆதரிப்பவர்களாகப் பொது ஜனங்கள் மாறியும் விட்டனர். ஆயினும், நமது மௌலானா இதை வெற்றி எனக் கொள்ளாமல் அவருக்குப் பின்வருமாறு உபதேசம் செய்தார் :

மௌலானா அவர்கள் உபதேசம்:—மௌலானா அவர்கள் தமது பிரசங்கத்தைப் பொது ஜனங்களுக்குக் கூறவில்லை. மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரியை நோக்கி,

"சோதரீர்! நான் உமது பிரசங்கத்தைக் கேட்டு மிகவும் ஆனந்தமடைந்தேன். நீர் சபையினரை முற்றிலும் வசியப்படுத்திவிட்டீர். இதற்குப் பிறகு, நீர் இச்சபையினரைக்கொண்டு தவறான ஒரு காரியத்தைச் செய்வித்துக்கொள்ள விரும்புவீராயின் அவர்கள் அக்காரியத்தைச் செய்தே முடிப்பார்கள். உமது நாவுக்கு இருக்கும் வன்மையானது இறைவனால் உமக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கிறது. இது இறைவன் உமக்களித்த பெரும் பாக்கியமாகும். ஆனால்,

இது அபாயகரமான ஒரு பாக்கியம் என்பதை அறிவித்துக் கொள்கிறேன். இப்பாக்கியத்தின் காரணமாக நீர் இறைவனிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய பொறுப்பு இன்னும் அதிகமாக இருக்கிறது. நீர் இதை சத்திய விஷயங்களில் உபயோகிப்பீராயின் அது உமக்கு இருலோகத்திலும் முக்தியை அளிக்கும். ஆனால், இதைத் தவறான வழியில் உபயோகிப்பீராயின் இறைவனின் அடியார்களில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் உம்மால் வழிதவறி விடுவார்கள். வசியத் தொழிலால் வசியம் செய்பவருக்கோ, வசீகரிக்கப்பட்டவருக்கோ நன்மை ஏற்படுவதில்லை. ஆகவே, எந்த விஷயத்தையும் அதிலுள்ள சாதக பாதகங்களிரண்டையும் பொது ஜனங்களுக்கு அறிவித்து அவர்களே அதனைப் பற்றிய முடிவு செய்துகொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். இதன் மூலம் பொதுஜன அபிப்பிராயத்தில் அபிவிருத்தியை உண்டாக்கல் வேண்டும். ஏனெனில், பாமரர்கள் மிருகத்துக் கொப்பானவர்கள் என்பது பழமொழி. அவர்களை இன்று நீர் வசியப்படுத்திவிடலாம். நாளை வேறொருவர் தமது நாவன்மையால் அவர்களைத் தம் பக்கம் திருப்பிக் கொள்ளலாம். இதனால், சத்தியம், அசத்தியம் ஆகிய இரண்டையும் பிரித்தறிந்து கொள்ளும் சக்தி இவ்வுலகம் முடியும் வரைப் பொது ஜனங்களுக்கு ஏற்படாமல் போய்விடும். ஒரு சமயம் உம்மை ஆதரிக்கும் இந்தப் பொது ஜனங்கள், நாளை உமக்கு எதிர்க் கக்ஷியிலும் சேர்ந்து கொள்வர். இன்று உம்மை அரியணையில் அமரச் செய்யும்

பொது ஜனங்களே, நாளை உம்மைப் படுகுழியில் தள்ளி விட்டு, வேறொருவரை அந்த ஸ்தானத்தில் அமர்த்தவும் கூடும்" என்று உபதேசித்தார்.

எனவே, நமது மௌலானா பொதுஜன அபிப்பிராயத்தை வளர்க்கவும், பொது ஜனங்களிடம் நன்மை தீமைகளைப் பிரித்தறியும் சக்தியை உண்டு பண்ணவும் எப்பொழுதும் முயற்சி செய்து வந்திருக்கிறார் என்பதை மேலே கண்ட அவரது பிரசங்கம் நன்கு வற்புறுத்துகிறது என்பது நிதரிசனம்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

நம்பிக்கை யிழத்தல்

மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் தமது கடைசி காலத்தில் மனம் முறிந்தவராகிவிட்டார். தம் முடைய பேச்சைக் கேட்பவர் எவருமில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். நேற்றுவரை முஹம்மது அலி நடக்கும் ரஸ்தாவுக்கு விரிப்பாக இருந்துக்கொண்டிருந் தவர்கள் இன்று கடுகடுப்பான நோக்குடன் அவரைப் பார்க்கின்றனர். நேற்றுவரை முஹம்மது அலியின் தலை மைத்தனத்தை வானளாவப் போற்றிக்கொண்டிருந்தவர் கள், இன்று தங்களைத் தாங்களே பெருந்தலைவர்களாக நினைத்துக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். நேற்றுவரை முஹம்மது அலியின் அறிவையும், கூர்ந்த மதியையும் நாவன்மையையும், எழுதும் ஆற்றலையும் பற்றி நாவில் ஜலம் சொட்டப் பேசிக்கொண் டிருந்தவர்களிடத்தில் இன்று முஹம்மது அலியின் சப்தத்திற்கு கொஞ்சும் மதிப்பில்லாமலாகிவிட்டது. நேற்றுவரை அலி சகோத ரர்கள்பால் அபிமானம் கொள்வதும் அவர்களைப் பின் பற்றுவதும் ஒரு புது மாதிரியாக ஏற்பட்டிருந்தது. ஆனால் கால சக்கரத்தின் மாறுபாட்டால் இன்று அவர் களுக்கு மாறுசெய்வதுதான் மனச்சாட்சியின்படி நடப் பதற்குத் தக்க ருஜுவாக இருந்தது.

ஒரு தலைவருக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்படு வது அவருடைய மனதை அதிகமாகப் புண் படுத்தி மனமுறிவை யுண்டுபண்ணிவிடும். அவருக்கிருக்கும்

புத்தி நுட்பங்களை யெல்லாம் போக்கிவிடும். அவர் பொது ஜனங்கள்பால் நம்பிக்கையிழந்து பொது வாழ் வைத்துறந்து விடுவார். அல்லது குறைந்த பக்ஷம் மௌனமேனும் அனுஷ்டிப்பார். ஆனால், நமது தலை வர் மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் இந்தப் பொது விதியிலிருந்து விலக்கப்பட்டிருந்தார். தற்போது தமக்கு அத்தனை மதிப்பில்லை என்பதையும், ஜனங்கள் தம்மைப் பலவிதத்திலும் எதிர்த்து மாறுசெய்கிறார்க ளென்பதையும் அவர் உணர்ந்திருந்தும், தமது முயற் சியை, தாம் ஆற்றவேண்டிய கடனை ஒருபோதும் கைவிட்டாரல்லர். மரணம் தன் பலமான கையை அவருடைய முயற்சிகளின்மீது போட்டு அவைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்வரை அவர் இடைவிடா மல் தமது முயற்சியைச் செய்துகொண்டே இருந்தார்.

மௌலானா அவர்கள் கூறுவது:—தமது மனத்தை முறிக்கத்தக்க இந்நிலைமையைப்பற்றி நமது தலைவர் மௌலானாவே ஒரு சந்தர்ப்பத்தில்,

"இந்தியாவில் என்னுடைய அபிப்ராயத்தை ஆதரிப்பவர்கள் மிகவும் சொற்பம் என்பதை என்னைப் பார்க்கினும் வேறு யாரும் அதிகமாக உணர முடியாது. அவ்வாறு என்னுடைய அபிப்ராயமுள்ள சொற்ப ஜனங்களும் என்னுடன் ஒத்துழைக்கும் கஷ்டத்தை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் எனக்காக இறைவனிடம் பிரார்த்தனை புரிந்துவிட்டு மற்ற விஷயங் களில் பெரும்பாலும் அலக்ஷியமாக இருந்து விடுகிறார் கள். என்னுடைய அபிப்பராயத்தை ஆதரிக்காதவர்

களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. அவர்கள் எனது அபிப்பிராயத்தை ஆதரிக்காதது ஒன்றே அவர்கள் நம்முடன் சேராததற்குத் தக்க காரணமாக இருக்கிறது. ஆனால், அவர்கள் என்னை நோக்கி, நீர் என் எங்களது அபிப்பிராயத்தை ஒத்துக்கொள்வதில்லை என்று ஆக்ஷேபனை செய்வதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. இவர்கள் தங்களைப் பொறுத்தவரை "சுய அபிப்பிராயம்" "உறுதி" யென்று கருதி இருப்பதையே என்னைப் பொறுத்தவரைப் "பிடிவாதம், முரண்பாடு" என்றும் கூறுகிறார்கள்" என்று கூறி இருக்கிறார்.

மற்றொரு விஷயம்:—லாகூரிலுள்ள கோர மனப்பான்மை கொண்ட ராஜ்பால் என்ற ஹிந்துவால் எழுதப்பட்ட "ரங்கேலா ரஸூல்" என்ற பிரசுரத்தால் இந்தியாவெங்கும் முஸ்லிம்களிடம் பெரும் உணர்ச்சியும் கிளர்ச்சியும் உண்டாயிற்று. அதுபோழ்து நமது மௌலானு வெளியிட்ட அபிப்பிராயத்தைப் பஞ்சாபிலுள்ள சில நிதானமற்றவர்கள் பலமாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அவரை ஆதரிக்கும் கக்ஷியார் அவரது தலைமையின் கீழ், லாகூரில் இது சம்பந்தமாக ஒரு மகாநாட்டைக்கூட்ட விரும்பினர். அதற்கு அவரும் சம்மத மளித்திருந்தார். அதுபோழ்து ஒரு நண்பர் அவரது அபிப்பிராயத்தைக் கண்டனம் செய்து "சில ஆலோசனைகள்" என்று ஒரு நிரூபம் எழுதினார். அதில் "தாங்கள் இவ்வாறு செய்யவேண்டும். அவ்விதம் செய்யக்கூடாது. இவ்வாறு செய்தால் நாங்கள்

ஆதரிப்போம் அவ்வாறு செய்தால் ஆதரிக்க மாட்டோம்" என்று விரிவாக எழுதி இருந்தார். இவ்வாலோசனைகளை நமது தலைவர் மௌலானு தமது பத்திரிகையில் பிரசுரித்து, அடியிற் கண்ட தமது குறிப்பையும் எழுதி இருந்தார் :—

"இந்தக் கடிதம் என்னைக் கண்ணியவான் என்றும், என்பால் தமக்கு அபிமான முண்டு என்றும் கூறிக்கொள்ளும் ஒரு கனவான் எழுதிய நிரூபமாகும். ஆனால், இக்கடிதத்தை எழுதுபவருக்கு நான் மரியாதை செய்யவேண்டு மென்பதையும், அவர்பால் நான் அபிமானங்கொள்ள வேண்டும் என்பதையும் இக்கடிதத்தின் ஒவ்வொரு வாசகமும் என்னை வற்புறுத்துகிறது. இதை எழுதிய கனவான் 'பைபிள்' பழைய ஏற்பாட்டில் "பத்துக் கற்பனைகள்" எழுதப்பட்டுள்ள தொனியால் இதை எழுதி இருக்கிறுர் என்று தோன்றுகிறது. "அரை வைத்தியன் உயிருக்கு ஆபத்தானவன், அரை முல்லா ஈமானுக்கு ஆபத்தானவன்" என்ற பழமொழிக்கேற்ப, படித்த இத்தகைய கனவான்கள் தங்களுடைய தவருன அபிப்பராயப்படி, தங்களை பொது ஜன ஊழியர்கள் என்று மதித்துக்கொண்டு, ஏனைய சமூக மத தேச ஊழியர்களை அடக்கி ஒடுக்கவும், பயமுறுத்தவும், ஆசைவார்த்தை கூறவும் விரும்புகின்றனர். இக்கனவான்களது சொற்படிகேட்டு இவர்களைத் திருப்தி செய்துவிட்டால் அப்புறம் தங்களுடைய "தலைமை"ப்பதவி யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும் என்று உபதேசிக்கின்றனர். இத்தகைய

வர்களைப்பற்றித்தான் பார்ஸி பாஷையில் "குருக்களுக்குப் பறக்க முடியவில்லை. சிஷ்யர்கள் பறக்கிறார்கள்" என்ற பழமொழி சொல்லப்படுகிறது. நான் இப்படிப்பட்ட 'குரு'த்தன்மையை விட்டு விலகி இருப்பவன். இப்படிப்பட்ட சிஷ்யர்களுக்கு நான் வெகு தூரத்துக் கப்பாலிருந்து கொண்டே ஸலாம் சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன்."

இன்கிலாப் பத்திராதிபர் கூறுவது:—மௌலானா டில்லியில் ஒரு நண்பரிடம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது கூறியதாவது: "அன்னே! முஸ்லிம்கள் என்னை மதிக்கவில்லை. இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் உயிருடனுள்ளவர்களைப் போற்றுவதில்லை. செத்தவர்களைப் போற்றுபவர்கள். நான் இறந்துபோன பிறகு தான் இவர்கள் என்னைப்பற்றி நினைப்பார்கள். ஆனால், நானும் இவர்களால் ரொம்ப நெருக்கடி செய்யப்பட்டு விட்டேன். இந்தியாவில் நான் மரிக்கவும் கூடாது என்று நான் நினைக்கும்படி அவ்வளவு நெருக்கடி செய்யப்பட்டு விட்டேன். இந்தியாவில் எனக்கு மரணம் வராமல் இறைவன் என்னைக் காப்பாற்ற வேண்டும்."

மேலே கூறப்பட்ட சில வரிகள் எவ்வளவு படிப்பினையைக் கற்பிக்க வல்லனவாக இருக்கின்றன? மௌலானா தமது சகோதரர்களிடம் எவ்வளவு வருத்தம் கொண்டிருந்தார்? அவருடைய கடைசி வாழ்நாள் எவ்வளவு கசப்புள்ளதாக இருந்திருக்கிறது? அவருடைய நண்பர்களிலும், உற்றார் உறவினர்களிலும் அவருக்கு நம்பிக்கையான கூட்டத்தாரெவரும் இருக்க

வில்லை. அவர்பால் அபிமானமும் பக்தியும் கொண்டவர்களிலும்கூட எவரும் அவர் காட்டிய வழி முறையையும் அவர் சமர்ப்பித்த ஆலோசனைகளையும் கிரியாம்சையில் செய்வதாக இருக்கவில்லை.

ஆனால், அவர் இவ்விதம் நம்பிக்கை யிழந்து விட்டாலும், அவர் தமது ஊழியத்தை விட்டு விலகிக் கொள்ளாமலிருந்தது அவரது பெருந்தன்மையையும், தமது சமூகத்தார், தேசத்தார்பால் அவர் கொண்டுள்ள நல்லெண்ணத்தையும் காண்பிக்கிறது.

இருபத்துமூன்றும் அத்தியாயம்

ஹிந்துக்களிடம் மனம் உடைந்ததற்குக் காரணம்

மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்வதற்குச் சில காலத்துக்கு முன்னிருந்து காங்கிரஸுக்கு மாறுபட்டவராகி விட்டார். காங்கிரஸ் செய்யும் காரியங்களைவிட்டு முஸ்லிம்கள் முற்றிலும் ஒதுங்கி இருக்க வேண்டுமென்பதே அவரது கட்டளையாக இருந்தது. அவர் "காங்கிரஸையும் ஹிந்துக்களையும் விட்டு இவ்வாறு ஏன் மனமுடைந்தார்? இந்தியாவை அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்பது அவரது ராஜீய முயற்சிகளின் முக்கிய நோக்கமாக இருந்ததே! அவ்வாறிருக்க, அம் முயற்சியில் ஈடுபட்டுள்ள காங்கிரஸுக்கு விரோதமாக அவர் ஏன் திரும்பினார்? இவ்வாறு அவர் செய்தது ஒரு வகையில் பிரிட்டிஷாருக்கு இந்தியா விஷயத்தில் உதவி செய்தது ஆகாதா?" என்ற கேள்விகள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் சகஜமாகத் தோன்றலாம்.

அவர் காங்கிரஸைவிட்டு விலகியதன் அந்தரங்கக் காரணத்தை உணராமலிருப்பவர்களுக்கும், அதைத் தெரிந்துகொள்ள இஷ்டப்படாதவர்களுக்கும், "பண்டித மோதிலால் நேரு முதலிய காங்கிரஸ் தலைவர்களிடம் நமது மௌலானாவிற்கு விரோதமிருந்தது. ஆதலால், அவர் காங்கிரஸைவிட்டு விலகிக்கொண்டார்" என்ற எண்ணமே தோன்றும். உண்மை அவ்வாறன்று; அவர் காங்கிரஸைவிட்டு விலகியதைப்பற்றி

எழுந்த கேள்விகளுக்கு அவ்வளவு சுலபமாக பதில் கூறுவது முடியாத காரியமாகும். அவர் காங்கிரஸை விட்டு விலகியதற்குள்ளகாரணத்தைக்கொஞ்சம்ஆழ்ந்து சிந்திப்பவர்தான் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும். அதன் விவரம் பின் வருமாறு:—

" காங்கிரஸ் மகா சபையை அவர் இந்திய தேசிய சபை என்று கருதி இருந்தகாலம்வரை, காங்கிரஸில் அவர் சம்பந்தப்பட்டு தம்முடைய முழு முயற்சியுடனும் உணர்ச்சியுடனும் உழைத்தார். இதில் அவர் உறுதியுடன் நின்று போராடிய விஷயத்தில் அவருக்கு நிகர் வேறொருவரைக் காண்பது அரிதாகும். காங்கிரஸின் செல்வாக்குக் குறைந்து, சுத்தி, சங்கடன், தன்ஜீம், தப்லீக் இயக்கங்கள் நாட்டில் பரவி, ஹிந்து முஸ்லிம் இரு வகுப்பினரையும் காங்கிரஸின்மீது வெறுப்புக் கொள்ளும்படிச் செய்திருந்தபோதும் அவர் காங்கிரஸில்தானிருந்தார். இவ்வியக்கங்களின் வேகம் தணிந்து, காங்கிரஸுக்கு நாட்டில் மறுபடியும் செல்வாக்குண்டாகி, பொது வாழ்வில் ஈடுபடாமல் ஒதுங்கி இருப்போரின் உள்ளங்களிலும் தேசீய உணர்ச்சியும், கதர் அபிமானமும் உண்டாகிப் பிரசங்க மேடைக்கு வந்த பின்னரே அவர் காங்கிரஸை விட்டு விலகினர்.

காங்கிரஸ் மகாசபையானது இப்பொழுது இந்திய தேசீய மகாசபையாக இல்லாமல், ஹிந்து மகாசபையின் பிரதிபிம்பமாக இருக்கிறது என்று திட்ட வட்டமாக அவர் உணர்ந்தபோது, அந்தச் சபையைவிட்டு ஒதுங்கி விட்டார். காற்று எப்பக்கம் அடிக்கிறது என்பதை

அவர் கொஞ்சமும் லக்ஷியம் செய்யவில்லை. காற்று எப்பக்கம் அடித்தாலும் சரி, அதைக் கைப்பற்றி விட வேண்டும் என்றே அவர் முயற்சி செய்தார்.

தவிர, இந்தியாவில் அமைக்கப்பட்டிருக்கும் அரசாங்கம் ஹிந்து முஸ்லிம் ஆகிய இரு வகுப்பினரும் ஒருவரை ஒருவர் கேவலமாகவும், குரோதமாகவும் மதிக்கத்தக்க முறையில் இந்தியாவை ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதாவது பிரித்தாளும் தந்திர முறையை பிரிட்டிஷார் கைக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள ராஜீய சபைகளில் காங்கிரஸ் ஒன்று தான் சகல வகுப்பிலுமுள்ள துவேஷமற்ற தலைவர்களும், அறிவாளிகளும், தூரதிருஷ்டியுள்ளவர்களும் கலந்துகொள்ள ஹேதுவுள்ள சபையாக இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட சபையிலும் ஹிந்து மகாசபை மனப்பான்மை நிலவி இருப்பதாக அவருக்குப் புலப்பட்டது. இச்சபையின் அங்கத்தினருள்ளங்களைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது பெரும்பாலான காங்கிரஸ் வாதிகளின் முக்கிய முயற்சிகள் ஹிந்து மகா சபையின் முயற்சிகளாகவே இருக்கின்றன என்பது அவருக்கு வெளியாயிற்று. ஆகவே, இம்மனப்பான்மை குடிகொண்டுள்ள சபையிலிருந்து இந்தியாவின் பொது நன்மைக்கு ஒன்றுஞ் செய்வதற்கில்லை என்ற முடிவுக்கு அவர் வந்து, அதனை விட்டு விலக வேண்டியதாயிற்று.

தவிரவும், அவரின் வேலை முறைகள் இஸ்லாத்துக்கு உழைப்பதாக இருந்தது. காங்கிரஸ் மகாசபை

அவருடன் ஒத்துழைக்க உண்மையாக விரும்பிய காலம்வரை அவர் அதனுடன் ஒத்துழைத்து வந்தார். அவருடைய ஒத்துழைப்பை அம்மகாசபை விரும்பாத போது அவரும் தம்முடைய ஒத்துழைப்பை நிறுத்திக் கொண்டார். இதுபோல் ஆங்கிலேயர்கள் அவருடன் ஒத்துழைக்க விரும்பியபோது அவர்களுடன் ஒத் துழைப்பதற்கான சந்தர்ப்பங்களையும் அளித்தார். அவர் முஸ்லிமாக இல்லாமல் ஹிந்துஸ்தானியாக மட்டு மிருந்து, மத விஷயங்களை அடியுடன் அகற்றி விடுபவ ராக இருந்து, அவர் காங்கிரஸில் சம்பந்தப்பட்டிருந்தால் அதைவிட்டு அவர் விலகுவது ஆச்சரியமாக இருக்க முடியும். அவர் முஸ்லிமாக இருந்துகொண்டு காங் கிரஸைவிட்டு விலகுவதில் ஆச்சரிய மொன்றுமில்லை.''

காந்திஜீ கூறிய விஷயம் :—இந்திய ராஜீய உலகில் காந்திஜீயின் கீர்த்தியும், செல்வாக்கும், மதிப்பும் உல கறிந்த விஷயமாகும். அவைகளைப்பற்றி இந்தியர் எவருக்கும் எடுத்துக் கூறவேண்டிய அவசியமின்று. இவ்வொரு தலைவர்மீதுதான் முஸ்லிம் பெரும்பான்மை யினருக்குச் சிறிது நம்பிக்கை இருந்தது. இவர் வகுப்புவாதமும் மதத்துவேஷமும் இல்லாதவர் என் றும், இஸ்லாத்தின்பால் அனுதாபம் கொண்டவர் என்றும் முஸ்லிம்களிற் பலர் நினைத்திருந்தனர். 1924-ம் வருஷத்தில் கோஹாட்டில் நடைபெற்ற ஹிந்து முஸ்லிம் வகுப்புச் சண்டையினால் தலைவர் களுக்கிடையில் பிளவுண்டாயிற்று. இதற்குமுன் ஜுஹு என்றவிடத்தில் இருந்துகொண்டு காந்திஜீ

29-5-1924ல் ஒரு அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கையில் காந்திஜீ "முஸ்லிம்கள் தைரியவான்களாகவும், ஹிந்துக்கள் கோழையர்களாகவு மிருக்கிறார்கள்" என்று கூறி இருந்தார்.

நமது மௌலானாவிற்கு காந்திஜீயின் இவ்வறிக்கை புண்படுத்தி விட்டது. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தால் இதற்கு முன்பு வரை தேசத்தில் ஏற்படும் சமூகக் கலகங்கள், கலவரங்கள், குழப்பங்கள் முதலியவைகளி லெல்லாம் அவர் முஸ்லிம்களையே குறை கூறிக்கொண்டிருந்தார். பின்னர், காந்திஜீ இம்மாதிரி அறிக்கை வெளியிட்டது அவரை அதிகமாக வருத்தப்படுத்தியது.

ஐக்கிய மாகாண அரசியல் மகாநாடு :—மௌலானா முஹம்மது அலி, மிஸ்டர் முஹம்மது அலிஜின்னாவின் கூட்டுறவில் "டில்லித் தீர்மானங்களை"த் தயார் செய்திருந்தார். இதில் முக்கியபாகம் கூட்டுத் தொகுதியாகும். இதுவரை முஸ்லிம்கள் கூட்டுத்தொகுதியை வெறுத்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும், மௌலானா அவர்கள் சலியா உழைப்பினால் கூட்டுத்தொகுதியை முஸ்லிம்களை ஏற்றுக்கொள்ளச் செய்தார். பிறகு காங்கிரஸையும் ஒப்புக்கொள்ளச் செய்தார். இதன் பேரில் இந்திய தேசியவாதிகள் அதிகச் சந்தோஷமடைந்தனர். அவர் இப்பிரச்சினையை வெகு சிரமத்துடன் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தமைக்காக அவருக்கு வாழ்த்தும் கூறினர். இதன் விபரம் அதற்குரிய இடத்தில் தெரிவிக்கப்படும். அவர் செய்த இவ்வேற்பாட்டை முஸ்

லிம்களும் அங்கீகரித்தனர், காங்கிரஸ் காரியக்கமிட்டியும் அங்கீகரித்தது, காங்கிரஸ் விசேஷ மகாநாடும் அங்கீகரித்தது, காங்கிரஸ் தலைவர்களும் அங்கீகரித்தனர், ஹிந்து மகாசபையினரும் அங்கீகரித்தனர், மோதிலால் நேரு, பண்டித மதன் மோகன மாளவியா, டாக்டர் மூஞ்சே போன்றவர்களும்கூட இவ்வேற்பாட்டை அங்கீகரித்துக் கொண்டனர். இது சென்னைத் தலைவர் ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள் காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்தில் நடைபெற்ற விஷயமாகும். அதற்குப்பின் தேசத்தில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றிப் பிரிதோரிடத்தில் கூறப்படும். சுருங்கக் கூறின் அவரது ஏற்பாடு எல்லா இடங்களிலும் அங்கீகாரமாயிற்று.

பின்னர் 1925-ம் வருஷம் நவம்பர்மீ 26-27-28-வது தேதிகளில் அலிகாரில் நடைபெற்ற ஐக்கிய மாகாண அரசியல் மகாநாட்டில், இப்பிரசினை விவாதத்துக்கு வந்தது. இம்மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக நமது மௌலானாவும் அலிகார் சென்றிருந்தார். ஆயினும், அங்கு அவர் கண்ட காக்ஷி அவரது மனதைப் புண்படுத்தக்கூடிய காக்ஷியாக இருந்தது. இதைப் பற்றி அவர் கூறி இருப்பதையே ஈண்டு கூறுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

“ஆமினு மர்ஹூமாவின் கப்ரில் நின்று பாத்திஹா ஓதியபின் மகாநாட்டுக்கு வந்தேன். அங்கு வந்து சேர்ந்தபின் என் செவிக்கெட்டிய செய்திகள் மனதை இன்னும் சஞ்சலப்படுத்தின. இதுவரை, விஷயாலோசனைக் கமிட்டியில்தான் விவாதம் நடைபெற்றிருக்கிறது

என்று தெரியவந்தது. விஷயாலோசனைக் கமிட்டியின் நிலைமையைக் கேள்விப்பட்டபின் "ஆமினா மர்ஹூமாவிற்காக அழுவேனோ அல்லது எனது மாகாணத்தின் கதியை நினைத்தழுவேனோ" என்று ஆலோசிக்கலானேன். இம்மகாநாடு, இந்த மாகாணத்தின் ஹிந்து மகாசபையுடையது மன்று, முஸ்லிம்லீக்கினுடையதுமன்று. காங்கிரஸின் மகாநாடாகும். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை சம்பந்தமாக பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நடைபெற்ற பின்னரும் இது சம்பந்தமாக மாகாண காங்கிரஸ் கமிட்டியில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இவ்வளவு தூரத்துக்குச் சண்டை போட்டுக்கொண்டிருந்தால் இத்தேசத்தில் அமைதியும் சமாதானமும் எப்பொழுது உண்டாகக் கூடும்? இத்தேசத்தாருக்கு எப்பொழுது சுதந்திரம் கிடைக்கும் என்ற சிந்தனையிலாழ்ந்தேன். பிறகு மகாநாடு கூடுமிடத்திலிருந்து ஹாஜி மூஸா கான் சாகிபின் இல்லம் வந்தேன். அங்கு டாக்டர் (அன்ஸாரி) சாகிபும் ஷுஐப் குறைஷி சாகிபும் மனம் முறிந்து கவலையுடன் அமர்ந்திருந்தனர். கல்கத்தாவில் நிறைவேறிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தின் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொண்டபோதுதான் பெரும்பான்மையினரின் மனப்பான்மை ஹிந்து மகாசபையின் மனப்பான்மையாக இருக்கிறது என்பது நன்கு தெரியவந்தது" என்று கூறி இருக்கிறார்.

மோதிலால் நேருவின் மனமாற்றம் :—1924-ம் வருஷம் மே மாதத்தின் மத்தியில் பம்பாயில் கூடிய

அகில இந்திய காங்கிரஸ் கம்மிட்டிக் கூட்டத்தில் "டில்லித் தீர்மானங்கள்" கொண்டுவரப்பட்டன. அப் பொழுது இத் தீர்மானத்தை அங்கீகரிக்கச் செய்வ தற்காக காங்கிரஸ் காரியக்கமிட்டியில் அதிக சிரத்தை யும், முயற்சியும் எடுத்துக்கொண்டவர் பண்டித மோதிலால் நேருதான். இதே பண்டிதர் தம்முடைய "நேரு சுயராஜ்ய திட்டத்தில்" சில விஷயங்களில் இத்தீர்மானங்களுக்கு மாறுன முடிவுகளைச் செய்து இந்தியா முழுவதிலுமுள்ள ஹிந்துக்களை ஆதரிக்கச் செய்ய விரும்பியதுமட்டுமல்லாமல், முஸ்லிம்களையும் ஒப்புக்கொள்ளச் செய்ய முயன்றுர். பண்டிதரின் இம் மனமாற்றத்தால் மௌலாணுவுக்கு அதிக வருத்த மேற்பட்டது.

ஜெய்ராம்தாஸ் தௌலத்ராம்:—"டில்லித் தீர்மா னங்களை" பண்டித மோதிலால் நேரு நிறைவேற்று வித்த அதே பம்பாய்க் காங்கிரஸ் கூட்டத்திலிருந்த ஹிந்து மகாசபைக்காரர்களும்கூட அத் தீர்மானங் களை ஆதரித்தனர். ஆனுல், இந்தக் கூட்டத்துக்கு வராமலிருந்த ஜெயராம்தாஸ் தௌலத்ராம் இத் தீர் மானங்களை எல்லோருக்கும் முதலில் எதிர்த்தார்.

காந்திஜீயும் இதர காங்கிரஸ்வாதிகளும்:—வருந் தத்தக்கதும் துக்ககரமானதுமான இந்த நிலைமை இன்னமும் முடிவடையவில்லை. இதனைப்பற்றி மௌலாணு பின்வருமாறு கூறியிருக்கிறுர்:—

"ஸ்ரீனிவாச அய்யங்கார் கல்கத்தாவில் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தைக் கூட்டினுர். பசுபலி,

பள்ளிமுன் மேளம் ஆகியவைகள் சம்பந்தமாக அக் கூட்டம் ராஜதந்திரமுள்ள தீர்மானத்தைச் செய்தது. அங்கு இரண்டு ஹிந்து மகாசபைக்காரர்கள் கடைசி வரை போராடிக்கொண்டே இருந்தனர். இவர்களில் ஒருவர் "சுயராஜ்யா" பத்திரிகைக்குச் சொந்தக் காரரும் ஆசிரியருமான பிரகாசம் என்பவராவார். மற்றொருவர், சிந்து மாகாணத்தைச் சேர்ந்த ஜெப ராம்தாஸ் தௌலத்ராம் என்பவராவார். பம்பாய் கூட் டத்தில் காரியக்கமிட்டியின் அங்கீகாரத்துக்குப் பின் இத் தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் எடுத் துக்கொள்ளப்பட இருந்த தருவாயில் மகாத்மாஜீ தம் முடைய விரதத்திலிருந்து வெளியில் வந்து டாக்டர் அன்ஸாரியை அழைத்து "நான் உங்களுக்கு உதவி செய்து ஹிந்து முஸ்லிம் வேற்றுமையை ஒழிப்பதற் காகக் கடைசியான முடிவைச் செய்யவேண்டும் என்று வந்திருக்கிறேன். ஆனால், விஷயாலோசனைக் கமிட்டி யில் சமர்ப்பிப்பதற்காகக் காரியக்கமிட்டி தயார் செய் திருக்கிற தீர்மானத்தையும், பம்பாய் கல்கத்தா ஆகிய இடங்களில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்கள் அங்கீகரித்திருப்பதையும் பார்த்து என் னுடைய எண்ணமெல்லாம் பறந்துபோய்விட்டது. பசுபலி சம்பந்தப்பட்ட பாகத்தை எந்த ஹிந்து வும் ஆதரிப்பதற்கு இல்லை. அது எங்களது மதக் கடமைகளுக்கு விரோதமாக இருக்கிறது. நான் உங்களுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக இது நிறைவேறுவதற்கு உங்களுக்கு ஒரு தடையாக ஏற்

பட்டு விடுவேனே என்ற கவலையால் எனக்கு இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. நீங்கள் அலி சகோதரர்களிடம் சென்று அவர்களை என்னிடம் அழைத்துக்கொண்டு வாருங்கள்'' என்று கூறினர். நாங்களும் அவரிடம் சென்றோம். மகாத்மாஜீ தமது மத உணர்ச்சியை மற்றொரு முறை எங்களிடம் கூறினர். நான் மகாத்மாவின் யுக்தியை ஆக்ஷேபித்தேன்.''

இவைகளை அல்லாமல் வெளியிலிருந்து அவருக்குக் கிடைத்துக்கொண்டிருந்த தகவல்கள் இன்னும் வருந்தத்தக்கனவாகவே இருந்தன. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்துவதே தமது முக்கிய லக்ஷியமாகக் கொண்ட காங்கிரஸ்காரர்களின் மனப் பான்மையைப் பற்றியே தகவல்கள் கிடைத்துக்கொண்டிருந்தன.

இவ்விதமாக ஹிந்து மனப்பான்மை சரியான முறையில் தெரிந்துகொள்ளக்கூடிய பல சம்பவங்களை இங்கு எடுத்துக் காண்பிக்க முடியும். ஆனல், இது ஒருவருடைய ஜீவிய சரித்திரமாக இருப்பதால், இங்கு அவைகளை எடுத்துக் கூறுவதற்கில்லை. இவ்விதமான பல காரணங்களால் அவர் ஹிந்து சகோதரர்களிடத்திலும், காங்கிரஸிடத்திலும், கடைசியாக காந்திஜீயிடத்திலும் மனமுடைந்து வெறுப்புக்கொண்டார்.

இருபத்துநான்காம் அத்தியாயம்

சுகவீனம்

மௌலானா முஹம்மதுஅலி ஜௌஹருக்குப் பல வருஷங்களாகச் சுகவீனம் ஏற்பட்டிருந்தது. 1928-ல் அவர் ஐரோப்பா சென்றதும் இதே சுக வீனத்துக்கு ஏதேனும் சிகிச்சைசெய்து கொள்ளவேண்டும் என்பதற்காகவேதான். ஆனால், அவர் இவ்வுலக வாழ்வைத் துறப்பதற்குச் சுமார் 1½ வருஷங்களுக்கு முன்னரிருந்து அவரது தேகநிலைமை மிகவும் சீர்கேடடைந்தது. அவரது தேகஸ்திதி வெகுதூரம் பாதிக்கப்பட்டது. அவருக்கு உடன்பிறந்த வியாதியைப்போலிருந்த நீர் ரோகம் மறுபடியும் பலமாக அவரைத் தாக்கிற்று. இதன் பலனாக அவருக்கு ஒரு கண் பார்வை அடியுடன் போய்விட்டது. இரண்டாவது கண்ணும் அபாயத்துக்குள்ளிருந்தது. இருதயத் துடிப்பும் சரியாக இருக்கவில்லை. நீர் ரோகத்தின் காரணமாக அவரது எலும்புகளும் கேடடைந்திருந்தன. ஆகவே, அவரது பாதம் வீக்கங்கண்டிருந்தது. உயிர்பிழைக்க வேண்டுமாயின், சகல அலுவல்களையும் துறந்துவிட்டு அமைதியாக வீடடங்கி இருக்கவேண்டும் என்று டாக்டர்கள் ஆலோசனை கூறினார்கள். ஆனால், தேச, சமூகப்பிரசினைகள் அவரை அமைதியாக இருக்க விடவில்லை. முஸ்லிம்களின் பரிதாபநிலை அவரை மௌனமாக இருக்க விடவில்லை. ஆகவே, அவர் அமைதியாக ஓரிடத்திலிருந்து பூரண ஓய்வெடுத்துக்கொள்வது என்பது

அவரைப் பொருத்தமட்டில் அசம்பாவிதமான காரிய மாகிவிட்டது. முஸ்லிம்களின் நிலைமையைச் சீர்குலைய விடாமற் காப்பதில் அவர் புதியதொரு ஊக்கங்கொண்டு அதிக சிரத்தையுடன் ஊழியம் புரியலானார். ஆதலின், அவரது ஸ்தூல நிலைமை வெகு துரிதமாகச் சீர் கேடடைந்து கொண்டே சென்றது.

டில்லியில்:— அவர் டில்லியில் இருந்த காலத்தில் மிகவும் நோயுற்றுப் படுத்த படுக்கையாக இருந்த போது டாக்டர் அன்ஸாரி அவருக்குச் சிகிச்சை செய்து வந்தார். சகல அலுவல்களையும் முற்றிலும் துறந்து விட்டுப் பூரண ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும்; தேக நிலை சீர்பட்டு குணமடைந்தபின் இஷ்டப்பட்டதைச் செய்துகொள்ளலாம் என்று அடிக்கடி டாக்டர் கூறி வந்தார். ஆனால், மௌலானா அவர்களுக்கு தேசத் தின்பாலும், சமூகத்தின் பாலுமிருந்த இடையரு அன்பு அவ்வாறு அமைதியாக இருக்க அவரை விட வில்லை. பிறகு, காற்று மாற்றிக்கொள்ள வேண்டும் என் பதற்காக சிம்லாவுக்குச் சென்றார். அங்கு அவருக்கு அத்தனை சிரமமிருக்காது, ஓய்வு இருக்குமாதலால், அவருக்கு ஸ்தூல சுக மேற்படலாம் என்ற நம்பிக்கை தேச மக்களுக்குண்டாயிற்று. ஆயினும், அங்கு சென்றும் அவர் தேச ஊழியத்தைக் கைவிடவில்லை. இதனால், அங்கு சென்றபின் அவரது சுகவீனம் இன் னும் அதிகமாயிற்று. இருதய ஓட்டம் பலவாறு ஓட ஆரம்பித்தது. அவர் பிழைப்பார் என்பது சந்தேகத்திலாகிவிட்டது.

இராஜப்பிரதிநிதியின் சொந்த வைத்தியர் :—நமது தலைவரின் தேகநிலை மிகவும் சீர்கேடுற்ற தென்பதைக் கேள்விப்பட்டு, அக்காலத்தில் இந்திய ராஜப்பிரதிநிதியாயிருந்த லார்டு இர்வின் பிரபுவினுடைய சொந்த வைத்தியரை அவரிடம் அனுப்பி அவரது ஸ்தூலநிலைமையைச் சரியாகப் பரீக்ஷித்து, தக்க சிகிச்சை செய்வதற்காக ஏற்பாடு செய்தார். எவ்விதத்திலேனும், அவர் வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்லத் தக்க விதமாக அவரது தேகநிலை சுகம் பெறவேண்டும் என்பது இராஜப்பிரதிநிதியின் நோக்கம். ஏனெனில், அவர் வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்வது அவசியம் என்பது அவரது விருப்பம்.

மேன்மைதங்கிய இராஜப்பிரதிநிதியின் சொந்த வைத்தியர், மௌலானா அவர்களுக்குச் சிகிச்சைசெய்ய ஆரம்பித்தவுடனேயே அவரது ராஜீய விரோதிகளுக்குத் தக்கசமயம் கிடைத்துவிட்டது. அவர் அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டு விட்டார் என்பதற்கு இதை முக்கியமானதோர் ஆதாரமாகக்கொண்டு தங்கள் கைகொண்டமட்டும் தாக்கி எழுதியது மல்லாமல் தங்களாலானவரை பேசவும் தொடங்கிவிட்டனர். ஆகவே, படுத்த படுக்கையில் இருக்கும் நோயாளி அவரது விரோதிகளால் நன்றாய்த் தாக்கப்பட்டார். பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகை அவரைக் கண்டித்து எழுதியது மிகவும் வருந்தத்தக்கதாகும். படுத்த படுக்கையில் கிடக்கும் ஒரு நோயாளியை, அதிலும் அசையவும் திரும்பவும்கூட இயலாமல் இருக்கும் நோயா

ளியை அவரது மனம் புண்படும்படி, கவலை அதிகரிக்கும் விதமாக இந்த நிலைமையில் எழுதலாமா என்றும் கூட யோசிக்காமல், அவரது நோய் குணமாகும்வரை கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம் என்றும் எண்ணுமல், அவரைப் பலமாகக்கண்டித்தெழுதியது மிகவும் வருந்தத்தக்கதாக இருப்பதுமட்டுமல்லாமல், இரக்கமற்றுக் கொலை செய்வதற்கொப்பாகவும் இருந்தது. எவ்வாருயினும் மௌலானு அவர்கள் இம்மாதிரி நோய் வாய்ப்பட்டதை அவருடைய விரோதிகள் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டு, வேண்டியமட்டும் சந்தோஷங் கொண்டாடினர்.

ஸர். முஹம்மது யாக்கூப்:—நமது தலைவர் மௌலானு நோயாளியாக இருந்தபோது அவரைப் பார்ப்பதற்காக ஸர். முஹம்மது யாக்கூப் சென்றுர். அவர் கண்ட அதிசயத்தைப் பின்வருமாறு கூறினர்:—

" சென்ற ஜூலை மாதத்தில் ஸிம்லாவிலுள்ள ரிப்பன் ஹாஸ்பிட்டலில் நான் முஹம்மது அலியைக் கடைசி முறையாகச் சந்தித்தேன். ஜூன்மாத இறுதியில் நான் ஸிம்லாவுக்குச் சென்றபோது முஹம்மது அலியும் இங்கு வந்திருக்கிருர் என்று தெரியவந்தது. மறுநாள் சாயங்காலம் நான் அவரைக்கண்டுகொள்வதற்காகச் சென்றேன். அவர் தோல்பூர் ஹௌஸில் தங்கி இருந்தார். நான் சப்தம் கொடுத்ததன்பேரில் வேலைக்காரப்பையன் ஒருவன் வந்தான். இரவு முழுவதிலும் மௌலானுவின் தேக நிலைமை மிகவும் சீர்கே

டாக இருந்தது. தற்போது அவர் கொஞ்சம் கண் அயர்ந்திருக்கிறார் என்று அப்பையன் கூறினான். அதன் பேரில் நான் எனது விலாசமெழுதப்பட்ட கார்டை அப் பையனிடம் கொடுத்துவிட்டுத் திரும்பினேன். மேல் மெத்தைமாடியிலிருந்து "யாக்கூப்! யாக்கூப்!! இங்குவா!!! என்ற சப்தம் எனக்குக்கேட்டது. அதன்பேரில் நான் திரும்ப மௌலானா அவர்களிடம் சென்றேன். அங்கு சென்று பார்க்கும்போது, அவர் படுக்கையில் உட்கார்ந் திருந்தார். ஸைமன் கமிஷன் ரிப்போர்ட்டு அவரது கையிலிருந்தது. முதலில் வழக்கம்போல் சலாம் சொல்லி, முஸாபஹாச்செய்து க்ஷேமலாபங்களை ஒரு வருக்கொருவர் விசாரித்துக்கொண்டோம். பிறகு நான் அவரது நோயைப்பற்றியும் தேகசுகத்தைப் பற்றியும் விசாரிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது அவர் "நேற்று மாலைதான் ஸைமன் கமிஷன் ரிப்போர்ட்டு என் கைக்கு வந்தது. இரவு 2-மணிவரை நான் இதைப் படித்துக்கொண்டிருந்தேன். இதன்பேரில் மயக்கம் வந்துவிட்டது. இருதயத்திலும் வலியுண்டாகிவிட் டது. இரவு முழுவதும் இந்த ரிப்போர்ட்டைப் படித் துக்கொண்டிருந்தேன். இப்பொழுது இது கிட்டத் தட்ட முடிவடையும் தருவாயிலிருக்கிறது என்றுகூறி ஏறக்குறைய ஒரு மணி நேரம்வரை இந்த ரிப்போர்ட் டைப்பற்றிக் கண்டனம் செய்துகொண்டும், தவறுகளை எடுத்துக் கூறிக்கொண்டு மிருந்தார். நான் திரும்ப வந்தபின் அந்த இரவு முழுவதும் மார்வலி மறுபடியும் உண்டாகி இருந்தது."

வட்டமேஜை மகாநாடு :—இவ்வித நிலைமையில் லார்டு இர்வின் அவரை லண்டன் வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்லும்படி அழைத்தார். நமது மௌலானா தம்முடைய நிலைமையைக் கவனித்து வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்லாமலிருந்து விடலாம். ஆனாலும், அக்கான்பரன்சுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவர்கூட மௌலானாவின் அபிப்பராயமும் நோக்கமுமுள்ளவராக இருக்கவில்லை. குறைந்தபக்ஷம் தம்முடைய ராஜீய கொள்கைகளுக்கு நம்பிக்கையானவர் ஒருவர்கூட அதில் தெரிந்தெடுக்கப்பட்டில்லை. ஆகவே, தம்முடைய மரண அவஸ்தையையும் கவனியாமல் அம் மகாநாட்டில் கலந்துகொள்ளத் தமது சம்மதத்தை அறிவிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திலானார். ஆதலால், அவர் நிர்ப்பந்தத்தின்பேரில் மகாநாட்டில் கலந்து கொள்வதாகத் தமது சம்மதத்தை அறிவித்தார். ஆயிரக்கணக்கான கண்டனங்களையும் ஆக்ஷேபனைகளையும் அவர் பொருட்படுத்தாமல் மகாநாட்டில் கலந்து கொண்டார். ஆனால், அவர் அம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்துக்குப் பயணமாகும்போது அவரது நிலைமை எவ்வாறிருந்தது என்பதைப் பற்றி, ஒருவர் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார். இவர், மௌலானா அவர்களைப் பயணம் அனுப்புவதற்காக பம்பாய்க்கு வந்து அனுப்பிவைத்தவர். இவர் கூறும் விபரம் வருமாறு :—

"முஹம்மது அலியின் பிரயாணகாட்சி கல்மனதையும் கரையச் செய்வதாக இருந்தது. அவரை

கட்டிலில் படுக்கவைத்து பம்பாய் கடற்கரையிலிருந்து 'வைஸிராய் ஆப் இந்தியா' என்ற கப்பலில் தூக்கிச் சென்றபோது அங்கிருந்தவர்களின் கண்கள் நிறம்ப கண்ணீர் வடிந்தது. அவர் பார்வைக்கு உயிருடனிருந்த ஜனுஸாவாகவே காணப்பட்டார்''

மௌலானா அப்துல்மாஜித் பதாயூனி:-- மௌலானா அப்துல் மாஜித்சாகிப் பதாயூனி நமது மௌலானா அவர்களிடம் "தாங்கள் இவ்வளவு பெரிய நீண்ட பிர யாணத்தை ஏன் ஒப்புக்கொண்டீர்கள் ?'' என்று வின வியபோது, அவர் புன்முறுவல் பூத்தமுகத்துடன் "மரிப்பதற்காக'' என்று பதில் கூறினர். மௌலானா அவர்களின் ஜீவிய சரித்திரமாகிய "ஸிரத்தேமுஹம்மது அலி'' என்ற புத்தகத்தை எழுதிய ரயிஸ்அஹ்மது ஜாபரி என்பவர் மௌலானா அவர்களைக் கண்டு கொள் வதற்காக பம்பாய்க்கு வந்து கிலாபத் மாளிகைக்குச் சென்றபோது அங்கு மௌலானா அவர்கள் இரத்தங் கக்கிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வித நிலைமையில் தேசத்துக்கும் சமூகத்துக் கும் தன்னை அற்பணம் செய்த இந்த தியாகி, திரி கரண சுத்தியாக தேச ஊழியம் புரிந்து தியாகமே உருவா யமைந்த இப் பெரியார், மற்றவர்கள் தங்கள் தோட்களில் தூக்கிச்செல்ல கப்பலில் போய்ச்சேர்ந்தார். இறுதியாகக் கப்பலும் இங்கிலாந்தை நோக்கிச் சென் றது. "முஹம்மதுஅலி லண்டன் செல்ல நேராதிருப் பின் லண்டன் மகாநாடு முஹம்மது அலியின் பாதார விந்தங்களை முத்தியிட இந்தியா வந்திருக்குமன்றோ ?

பாரிஸ்:—மௌலானா அவர்கள் பாரிஸ் நகரம் போய்ச் சேர்ந்தபோது அவரது ஸ்தூல நிலைமை மறுபடியும் சீர்கேடடைந்தது. டாக்டர்கள் அவரை லண்டன் செல்ல வேண்டாமெனத் தடுத்துவிட்டார்கள். ஆனால், அவர் பாரிஸிலிருந்துகொண்டே தமது அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார். அங்குள்ள மாணவர்களுக்கு இஸ்லாம் மதத்தைப்பற்றியும், தேச ஊழியத்தைப்பற்றியும், சமூக ஊழியத்தைப் பற்றியும் பிரசங்கங்களைச் செய்தார்.

பாரிஸில் அவருக்கு அதிக சிரத்தையுடன் சிகிச்சைகள் செய்யப்பட்டன. மூளை, இருதயம், நாடி, காரல், மலம், சிறுநீர் ஆகிய ஒவ்வொரு பரீக்ஷையிலும் நிபுணர்களாகவுள்ளவர்கள் தனித்தனியே ஒவ்வொன்றையும் பரீக்ஷித்தனர். பிறகு, சட்டப்படி சிகிச்சையை ஆரம்பித்தனர். இதன்பலனாக அவர் லண்டன் செல்வதற்குத் தக்கவாறு அவரது தேக நிலைமை கொஞ்சம் குணமாயிற்று. ஆகவே, டாக்டர்களின் அபிப்பிராயத்தின்பேரில் அவர் லண்டன் பயணமானார். லண்டன் சென்றதும் மிகவும் உருக்கமானதும், மனதைக் கரைக்கக்கூடியதுமான ஒரு பிரசங்கம் செய்தார். உடனே, மறுபடியும் நோயாளியாகிவிட்டார். இப்பொழுது வந்த வியாதி இதற்கு முன்னிருந்ததைப்பார்க்கிலும் மிகப் பலமாகவிருந்தது.

மௌலானா முஹம்மது இர்பானுக்குக் கடிதம் :— இந்திய கிலாபத் மகாசபையின் காரியதரிசியான

மௌலானா முஹம்மது இர்பானுக்கு அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பட்டிருப்பதாவது:—

"நான் இங்கு வந்ததிலிருந்து மறுபடியும் படுத்த படுக்கையாக இருக்கிறேன். 19உ நான் பிரசங்கம் செய்தபின் அதிகமாகக் கஷ்டமடைந்தேன். இரவு 12 மணிவரை இடுப்புவலி இருந்தது. இருதயம் கெட்டுப்போய்விட்டபடியால் இரத்த ஓட்டம் சரியாக இல்லை. ஆதலால், இடுப்புக்குக் கீழிலுள்ள தேகம் முழுவதும் வீக்கங் கண்டிருக்கிறது. சுவாசகாச நோயாளிகளைப்போல் இரவு முழுவதும் மூச்சுத் திண றிக்கொண்டிருந்தேன். ஆதலால், படுத்துக்கொள்ளவும் முடியாமல் 24-மணி நேரம் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருக்கும்படி நேர்ந்தது."

பிரசங்கம்:—வட்டமேஜை மகாநாட்டில் மௌலானா அவர்கள் செய்த பிரசித்திபெற்ற பிரசங்கத்தின் மத்தி யில் போப்பால் நவாப் அவர்கள் தம்முடைய மாஜி டியூட் டர் ஸிம்லாவில் நோய் வாய்ப்பட்டு அவஸ்தைப்படுகிற தைப்பார்த்து மனம்பொறுமல் ஸிம்லாவிலிருந்து தம்மை போப்பாலுக்கு அழைத்துச்சென்று, விருந்து மாளி கையை ஆஸ்பத்திரியாக மாற்றித் தமக்குச்செய்த உப சாரத்தையும் பிரஸ்தாபித்தார். அங்கும் அவரது தேக நிலை சரியாக இருக்கவில்லை. ஆயினும், அவர் தமது நன் றியை அவருக்குத் தெரிவித்துக்கொண்டு தமது சுக வீனத்தைப்பற்றிச் சபையினரின் மனம் சந்தோஷப் படத்தக்க விதமாக மிகவும் ருசிகரமான முறையில் எடுத்துக்கூறினார். நோயாளியாக இருக்கிறார். நின்று

பிரசங்கம் செய்யச் சக்தியுமில்லை. ஆனாலும், மழை பொழிவதுபோல் ஒவ்வொருவரும் ஆனந்த பரவசமும், சந்தோஷமும் கொள்ளத்தக்க முறையில் அவர் சொற்பொழி வாற்றுகையில்,

"என்னை ஸிம்லா வைத்திய சாலைக்கு அனுப்பப் பட்டது. அங்கு ஒரு ஐரோப்பிய ஸ்திரீ எனது டாக்டரிடம் "இக்கிழவனுக்கு என்ன வியாதி?" என்று கேட்டனள். அந்த ஸ்திரீக்கு டாக்டர் பதில் கூறுகையில் 'அவருக்கு வியாதி என்ன என்று கேட்காதீர்கள்? அவருக்கு கஷ்டம் கொடுக்காமலிருப்பது எது?' என்று கேளுங்கள் என்பதாகப் பதில் கூறினர் என்று இயற்கையாகவுள்ள தமது ஹாஸ்யப் பேச்சுக்களால் தம்முடைய நோயின் தன்மையை எடுத்துக் கூறினர்.

நோயின் விபரம்:—அப் பிரசங்கத்தில் மேலும் கூறுகையில் "என்னுடைய நிலைமை என்னவெனில், எனது இருதயம் சரியாக இல்லை. பார்வை குன்றிவிட்டது. பாதங்கள் வீங்கிவிட்டன. நீர் ரோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறேன். நோயின் விபரத்தைப்பற்றி நான் நீண்ட ஜாப்தாவைக் கொடுப்பதைப்பார்த்து எனது நண்பர் கர்னல் கிட்னீ ஒரு வைத்தியர் என்ற முறையில் நோயின் தன்மையை விவரித்துக் கூறுகையில் என்னைக் குற்றம்பிடித்து விடுவாரோ என்று என் மனதில் எண்ணம் தோன்றுகிறது. (சிரிப்பு) ஒரு மனிதனுக்கு உணர்வு சரியாக இருக்குமாயின் அவன் இத்தனை |வியாதிகளையும் வைத்துக்கொண்டு சரியாக ஏழு மைல் தூரம் கூடப்பிரயாணம் செய்யமுடியாது.

அவ்வாறிருந்தும் நான் கடல் திடல் ஆகிய பாதையில் ஏழாயிரம் மைல் பிரயாணம்செய்து இங்கு வந்துவிட்டேன். ஏனெனில், எந்த இடத்தில் இந்தியாவைப் பற்றியும் முஸ்லிம்களைப் பற்றியும் உள்ள பிரசினை வருகிறதோ, அந்த இடத்தின்பால் எனது நிலைமை பைத்தியக்காரர்களைப் போலாகி விடுகிறது'' என்று பேசினார்.

எவ்வாறாயினும், இந்தக் கஷ்டமான நிலைமையிலும் மௌலானா அவர்கள் தமது கடமையை, தமது பொறுப்பைச் சரிவர நிறைவேற்றுவதில் பூரண முயற்சியையும் பிரயத்தனத்தையும் காண்பித்தார், என்று நன்கு விளங்குகிறது.

இருபத்தைந்தாம் அத்தியாயம்.

மரணம்

மேலேயுள்ள சில அத்தியாயங்களில் சொல்லப் பட்ட விருத்தாந்தங்களிலிருந்து நமது மௌலானுவின் பிணிகளைப்பற்றி நீங்கள் ஓரளவு தெரிந்து கொண்டிருப்பீர்கள். தொடர்ச்சியாக இத்தனை நோய்களுக்கு உட்பட்டும், டாக்டர்களுடையவும், சுதேச வைத்திய ஆலோசனைக் கர்த்தர்களுடையவும் சொல்லையும் கேட்காமல், தேச சமூகக்காரியத்திலேயே இடைவிடாமல் உழைத்தும், அன்னம், தண்ணீர் முதலிய ஆகாராதிகளையும், உற்றார் உறவினர்களையும், பந்து மித்திரர்களையும் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் இவ்வளவு கடும் உழைப்பைச் செய்தவர் இவ்வளவு தாமதத்தில் மரணமடைந்தது ஏன்? என்று நீங்கள் ஆச்சரிய மடையலாம். அவர் ஸிம்லாவிலேயே மரணம் அடைந்திருக்க வேண்டியவர். ஆனாலும், லண்டன் செல்லும் வரை உயிரோடிருந்து தேசத்துக்கும் சமூகத்துக்கும் ஒப்பற்ற ஊழியம் செய்து அப்பால் மரண மடைந்ததானது ஆச்சரியப் படத்தக்க விஷயமே யாகும். என்றாலும், இது இறைவனின் திருவுள்ளத்தைப் பொறுத்த விஷயம். யாராரிடம் எங்கெந்தக் காரியத்தைச் செய்விக்க அவ்வல்லோன் விரும்புகிறானோ, அவரவரை அவன் குறித்த காலம் வரை தவணை கொடுத்து வைக்கிறான். ஆகவே, அவரவர்கள் காலை நேரத்து விளக்கைப்போல் தூண்டித்தூண்டி எறிந்து தன்னுடைய மங்கலான

வெளிச்சத்தால் ஓரளவு ஒளிதந்து கொண்டிருப்பர். பிறகு வேளை வந்தவுடன் காலை நேரத்துக் காற்றின் ஒரு அலைச்சல் வந்து, மங்கிக் கொண்டிருக்கும் அவ் விளக்கை அணைத்து விடுகிறது. மௌலானா அவர் களின் செயற்கையும் இவ்வாறே இருந்தது.

பிரசங்கத்திற்குப்பின்:—முதலாவது வட்ட மேஜை மகாநாட்டின் பிரசித்திபெற்ற பிரசங்கத்திற்குப் பின், நமது உத்தமத்தலைவர், கிடைப்பதற்கரிய அரும் பொருள் மௌலானா முஹம்மதுஅலி ஜௌஹர் அவர் களது தேக நிலைமை வீழ்ச்சியடைந்தது. அப்பால் அது சரிப்படவே இல்லை. இது சரிப்படும் என்பதற்கான எவ் வித எண்ணமும் எஞ்சி இருக்கவில்லை. அவர் இவ்வுலகை விட்டு மறையும் இரவுக்கு முன் இரவெல்லாம் நித்திரை யின்றி தேச சமூகச் சேவையில் ஈடுபட்டுழைத்தார்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைத் திட்டம்:—ஹிந்துக் களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒற்றுமை ஏற்பட்டு அவ ரவர் உரிமைகளை அவரவர் குறையில்லாமல் அனுப வித்து, பாலும் சர்க்கரையும் போல் ஒன்றுபட்டு பாரத நாட்டில் வாழ்வதற்காக விபரமான திட்டத்தைத் தயார் செய்திருந்தார். அதன் நகல் காப்பியை ஒழுங்கு செய்து சீர்திருத்தி பிரிட்டிஷ் பிரதம மந்திரியிடம் அனுப்பும் கவனத்தில் ஆழ்ந்திருந்தார்.

மரணம்:—அவரது ஸ்தூல நிலைமை வெளிப்பார் வைக்கு அவ்வளவு மோசமானதாகத் தோன்றவில்லை. அவரது உயிருக்கு மோசம் வரப்போகிறது என்பதை ஒருவரும் கருதினரல்லர். அது சமயம் தந்தைக்குப்

பதிலாக அவரைப் பாதுகாத்து வந்த மூத்த சகோதரர், மௌலானு ஷௌகத்அலி ஒரு நண்பரைக் கண்டு பேசுவதற்காக அயர்லாந்து சென்ருர். இவ்வித நிலைமையில், நமது மௌலானு தமது திட்டத்தைச் சீர்திருத்தி முடித்தவுடன் பிரக்ஞையற்ருர். பல மணிநேரம்வரை பிரக்ஞையற்றிருந்தார். காலையில் கொஞ்ச நேரத்துக்குப் பின் கண்திறந்தது. அச்சமயம், களைத்து அலுத்துப் போன தமையனுரும் அங்கு வந்து சேர்ந்தார் யாவரும் பார்த்துக் கொண்டிருக்க, மௌலாவின் இன்னுயிர் மேலுலகம்சென்றது. இன்னு லில்லாஹி வ இன்னு இலைஹி ராஜிஊன்.

அந்நிய தேசத்தில் தன்னந்தனியே மரண மடைவதென்பது எவ்வளவு "வியசனகரமான" தாக இருந்தாலும், அவரது மரணத்தால் நமக்குப் பெரும் படிப்பிணை இருக்கிறது. தன்னுடைய ஆருயிர் காதலரான கணவருடன் தாய்நாடு வந்து சேரலாம் என்ற ஆசையால் தமது கணவருக்கு வைத்திய உதவி செய்ய, லண்டன் சென்றிருந்த அவரது வாழ்க்கைத்துணை நல்லார் பேகம் முஹம்மது அலியின் உள்ளம் எவ்வாறு கலங்கி இருக்கும்? ஆவோ! இப்பொழுது தமது உத்தம கணவரான முஹம்மது அலிக்குப் பதிலாக உயிரற்ற ஓர் உடலத்தின் தலைமாட்டி லமர்ந்துகொண்டு அவ்வம்மையார் தமது கடமையை நிறைவேற்றுகிருர். ஆனல், எவ்வளவு காலம்வரை?

தமது பிரியதந்தையுடன் லண்டன் செல்லக் கொடுத்து வைக்காமல் டில்லியிலேயே இருந்துகொண்டு,

தினந்தோறும் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டு, தமது அரிய தந்தையின் ஸ்தூலசுகத்தைக் கேட்டுச் சீக்கிரத்தில் தந்தையின் தாமரைபோன்ற முகாரவிந்தத்தைக் கண்டு கொள்ளலாம் என்ற அவாவினுல் அனுதினமும் வழிபார்த்துக்கொண்டிருந்த அவரது அருமைப் புதல்வியின் மனம், அன்னே அவரது பிதாவின் மரணச் செய்தியைத் தந்தியெனும் நா உரைக்கும் போது, எவ்வளவு துடிதுடித்திருக்கும்? அச்சமயம் தமது தந்தையின் கமல முகத்தைக் காணக்கொடுத்து வைக்காமல் போனேமே என்ற வருத்தம் எவ்வளவு வியசனத்தைத் தந்திருக்கும். கடைசி நேரத்திலும் கூட கிடைப்பதற்கரிய தந்தையை, அன்புக்குரிய பிதாவை தரிசனம் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் அச்சிறுமியை எவ்வளவு சஞ்சலத்திற்குட்படுத்தி இருக்கும்?

அச்சோ! வாலிப உணர்ச்சியுள்ள அவ்வயோதிகச் சகோதரரின் நிலைமை எவ்வாறிருக்கும்? தமக்கு வலக்கையாகவும், மனதுக்குத் தைரியமாகவும், மனக் கவலையை மாற்ற வல்லவராகவும் இருந்த தமது இளஞ் சகோதரரை அவர் பறிகொடுத்து, எவ்வளவு பரிதவித்திருப்பார்? இவ்விரு சகோதரர்களின் நேசத்தையும் பாசத்தையும் பற்றிய கதைகள் உலகப் பிரசித்தமானவை. ஷௌகத் அலி உண்மையை உரைத்தார். முஹம்மது அலி அவருக்குச் சகோதரராகவுமிருந்தார், தனையனுகவு மிருந்தார், தலைவராகவுமிருந்தார், ஆஷிக்காகவும் இருந்தார், மஃஷூக்காகவுமிருந்தார். இம்

மூத்த சகோதரர் தமது கண்ணின் முன் தமது வாணுள் முழுவதும் சம்பாதித்த அரிய பொக்கிஷம் (மௌலாஞ முஹம்மதுஅலி) கொள்ளையிடப்பட்டதைப் பார்த்து வாய்மூடி மௌனமாக இருந்தார் என்ருல் அவரது மனவேதனை எப்படி இருந்திருக்கும்?

அழுகையும், கூக்குறலும் நடந்தது. மார்பில் போட்டுக்கொள்வர் அனந்தம், முகத்திலடித்துக்கொள்வர் கோடி, தமது சட்டையைக் கிழித்துக் கொள்வர் பலர், அவரது மரணத்தைக் கேட்டு உயிர் விட்டவர் பலர், எல்லாம் நிகழ்ந்தன. நிகழாத காரியமொன்றுமில்லை. முஹம்மது அலி நம்மை விட்டகன்ருர். இதற்கு யாது பரிகாரம்? இனி இம்மண்ணுலகில் இப்பூதக் கண்கள் அவரை என்றுங்காணமுடியாது.

இருபத்தாராம் அத்தியாயம்

வேண்டுகோள்கள்

மரணச் செய்தி:—ஒரு க்ஷணப் பொழுதுக்குள் நமது மௌலானுவின் மரணச்செய்தி உலகமெங்கும் ப்ரவிற்று. லண்டன் மாநகரிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலுமுள்ள பற்பல ஜனங்களும் அபிமானிகளும் கூட்டங் கூட்டமாக கீழ்நாட்டுத் தலைவரைக் கடைசி முறையாகத் தரிசிக்க வந்தனர். அவரது குடும்பத்தாரிடம் துக்கச் செய்தி விசாரித்தனர்.

அல்வார் மகாராஜா:—மௌலானு அவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்தபோது தமது உயிர்த்தோழராம் இவ்விந்தியத் தலைவரின் தேக நிலைமையைச் சகிக்க முடியாமல் கடும்பனி நாடான இங்கிலாந்தில் தலைதிறந்தவராக வெறுங்காலால் தமதிருப்பிடமிருந்து, மௌலானுவின் வாசஸ்தலத்துக்கு அல்வார் மகர்ராஜா பன்முறை ஓடி வந்து கொண்டிருந்தார். மௌலானுவின் ஆவி பிறிந்த பின் அவருக்கு இன்னும் அதிகமான துயரமேற்பட்டு விட்டது. மௌலானு ஷௌகத் அலியை கண்ணுல் பார்ப்பதற்குக் கூட அவரால் சகிக்க முடியவில்லை.

ஒத்திவைப்பு:—ஜனுஸாவை எங்கு அடக்கம் செய்யவேண்டும் என்ற பிரச்னை உண்டாயிற்று. லண்டனிலேயே மௌலானு அவர்களை அடக்கம் செய்துவிட வேண்டுமென்று சிலர் கூறினர். ஆனல், மௌலானு மர்ஹூம் அவர்களது குடும்பத்தார் இதற்குச் சம்மதிக்கவில்லை. பேகம் மௌலானு முஹம்மது அலி தம்

முடன் தமது ஆருயிர் கணவரின் பிரேதத்தை இந்தியாவுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்தார். இந்தியாவிலிருந்து நூற்றுக்கணக்கான தந்திகள் லண்டனுக்கு வந்தன. அவைகளிலெல்லாம் மௌலானு அவர்களது ஜனுஸாவை இந்தியாவுக்குக் கொண்டு வந்து விடுங்கள், முகதரிசனதாகங் கொண்ட எங்களது தாகவிடாயைத் தீர்த்துவையுங்கள் என்று அத்தந்திகளில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தன. இதைப்பற்றி எவ்வித முடிவும் செய்வதற்குள், இந்தியாவின் பற்பல நகரங்களிலிருந்தும் "ஜனுஸாவை எங்கள் நகரத்துக்குக் கொண்டுவாருங்கள். இங்கு அடக்கம் செய்யப்பட இந்நகரம் அதிக அருகதையாயிருக்கிறது" என்ற வேண்டுகோள் தந்திகள் பல வந்தன.

ராம்பூர்:—மௌலானு மர்ஹூம் அவர்களது சொந்த ஊர் என்று சொல்லிக்கொள்ளும் பெருமை ராம்பூருக்கு இருக்கிறது. ஆதலால், அவரை இங்கு தான் மண்ணில் மறைக்கவேண்டும். இம்மண்ணிலிருந்து தான் அவர் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறுர் என்று ராம்பூர் உரிமை கொண்டாடிற்று.

லக்ஷ்மணபுரி:—இங்கு தான் மௌலானு மர்ஹூம் அவர்களது குரு, மௌலானு அப்துல்பாரீ மர்ஹூம் அவர்கள் கடைசி முறையாக நித்திய தூக்கத்திற்சென்ருர். இங்கு தான் மௌலானு முஹம்மது அலி மர்ஹூம் அவர்கள் "கஃபா ஊழியர்" சங்கத்தை ஸ்தாபிதம் செய்ததுடன், "கிலாபத் கமிட்டியை" ஸ்தாபிக்கவும் முயன்ருர். ஆதலால், மௌலானு முஹம்மது

அலி மர்ஹூம் அவர்கள் தம்முடைய குருவினண்டை யில் மண்ணுடன் சேருவது அவசியம். ஆதலால், இந்த அமானிதத்துக்கு அருகதையுள்ள இடம் வேறொன்று மில்லை என்று வற்புறுத்தலுடன் லக்ஷ்மணபுரி தனது சுதந்திரத்தை அறிவித்தது.

அஜ்மீர்:—மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் மர்ஹூம் அவர்களுக்கு சுல்தானுல் ஹிந்து கரீப் நவாஜ் காஜா முயீனுத்தீன் க்ஷிஷ்தி அஜ்மீரி குத்திஸ ஸிர்ருஹூ அவர்களது நிழலில் கடைசிச் சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும். தவிரவும், மௌலானா மர்ஹூம் அவர்க ளுக்கு காஜா அவர்களது தர்பாரின்பால் அதிக பக்தி இருந்தது. அவர் அடிக்கடி இங்கு ஜியாரத்துக்கு வருவ துண்டு. இந்தியாவின் இந்த ஆஸ்தானாவைப் பார்க்கி னும் இவ்விஷயத்தில் பெரியதொரு ஆஸ்தானா வேறொன்றுமில்லை. ஆகவே, மௌலானா அவர்களை அஜ்மீரில் தான் மறைக்க வேண்டும் என்று அது கேட்டுகொண்டது.

கல்கத்தா:—மௌலானா மர்ஹூம் அவர்களது எண்ணங்கள், நோக்கங்கள், கருத்துக்கள், காரியங்கள், தொண்டுகள், கிரியைகள் ஆகிய சகலமும் இங்கிருந்தே உதயமாயின. அவருடைய "காம்ரேட்" பத்திரிகை யும் இங்கிருந்தே ஆரம்பமாயிற்று. அவருடைய பொது வாழ்வும் இங்கிருந்தே தோன்றிற்று. ஆகவே, அவரு டைய எண்ணங்களையும் அவருடைய பூத உடலத்தை யும் மறைப்பதை உதயமான இடத்திலேயே அஸ்தமிக் கச் செய்வதுதான் உசிதமாகும். ஆதலால், அவரது

உடலத்தை இங்கு கொண்டு வரவேண்டும் என்று கல்கத்தா கேட்டுக்கொண்டது.

அலிகார்:—இவ்விஷயத்தில் அலிகார் பின்னடையவில்லை. அந்த நகரமும் முன்வந்தது. மௌலானு முஹம்மது அலி மர்ஹூம் அவர்களது அறிவும், புத்தியும் இவ்விடத்திலேயே வளர்ந்தன. அவர், கல்வி, ஒழுக்கம் ஆகியவைகளை இங்கு தான் கற்றுக்கொண்டார். இங்கிருந்து தான் அவருக்குப் பொது வாழ்விற்குரிய துணிச்சலும், தைரியமும் உண்டாயின. எல்லாவற்றிலும் மௌலானு மர்ஹூம் இவ்விடத்தில் தான் உதயமானுர். ஆதலால், அலிகாரிலேயேதான் அஸ்தமிப்பதும் அவசியமாகும் என்று அலிகார் தன் உரிமையைக் கொண்டாடிற்று.

டில்லி:—மொகலாய சக்கிரவர்த்திகளின் ராஜதானிப் பட்டணமாகிய டில்லிமாநகர் மிகவும் சோகத்துடன் முன்வந்தது. முஹம்மது அலி இங்கிருந்துதான் பிரகாசித்தார். இங்கிருந்துதான் வளர்ச்சியுற்ருர். அவரது வெற்றியும் அவரது வேலை ஸ்தலமும் இங்குதான் இருந்தது. தோல்வியின் வாழ்க்கையையும் இங்குதான் அனுஷ்டித்தார். சுண்டுவாடாவிலிருந்து அவர் விடுதலை அடைந்தபோது டில்லிதான் அவரை நிகரற்ற விதமாக ராஜோபசாரத்துடன் வரவேற்றது. அவர் டில்லியைத் தான் தனது இரண்டாவது பிறப்பிடமாக ஆக்கிக் கொண்டிருந்தார். அவரது பிரிய மாதா ஆபாதிபானூ அவர்களின் மடியானது இங்கு தான் திறந்திருக்கிறது. ஆதலால், அவரை இம்மண்ணிலேயே தான் ஒப்புவிக்க

வேண்டும் என்று டில்லிமா நகர் பாத்தியங் கொண்டா டிற்று.

பைத்துல் முகத்தஸ்:—ஆனுல், பைத்துல் முகத்த ஸின் புண்ணிய பூமியானது தன்னுடைய பரிசுத்த கையை நீட்டிற்று. மௌலானு மர்ஹூம் அவர்க ளிடம் "உனது ஜீவியம் முழுவதும்,உனது பிரயத்தன மனைத்தும், உனது நட்பும் பகையும் அல்லாஹுத் ஆலா வுக்காகவே இருந்தன. இதோ பார்! இது அல்லா ஹுத் ஆலாவால் அனுப்பப்பட்ட நபிமார்கள். முர்ஸல் கள் ஆகியவர்களின் பரிசுத்த உடலங்களும், வலிமார்கள், ஷஹீதுகள் ஆகியவர்களின் கணக்கற்ற திருமேனிக ளும் என்னகத்தில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கின்றன. வா! நான் உனக்கும் இப்புண்ணிய பூமியில் ஒரு இடத்தை ஒதுக்கித் தருகிறேன். நான் கூறுவது உனக் குச் சம்மதமா?' என்று கூறிற்று. மௌலானு மர் ஹூம் அவர்களது ஆவி புன்முறுவல் செய்து முன் சென்றது. மஸ்ஜிது உமர் (றலி) தனது நெஞ்சைப் பிளந்து கொடுத்தது. மௌலானு முஹம்மது அலி மர்ஹூம் அதற்குள் சென்றமர்ந்தார். அவருடைய பாக்கியமே பாக்கியம். இப்பெரும் பேறு கிடைக்கக் கூடியவருக்குக் கிடைத்தது.

இருபத்தேழாம் அத்தியாயம்

நல்லடக்கம்

பைத்துல் முகத்தஸ் அழைப்பு:—கடைசியாக அதிக ஆலோசனைகளுக்குப்பின் பைத்துல் முகத்தஸின் அழைப்பு அங்கீகாரமாயிற்று. குப்றும், இல்ஹாதும் நிறைந்த இங்கிலாந்தை விட்டு, பரிசுத்த பூமிக்கு நமது மௌலானா முஹம்மது அலி ஜௌஹரது பூத உடலத்தை எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஜனாஸாத் தொழுகை:—நமது தலைவர் மௌலானா மர்ஹூம் அவர்கள் தங்கின ஹோட்டலிலிருந்து இரவு 12 மணிக்கு அவரது உடலம் கீழே இறக்கப்பட்டது. மிகவும் ஆரோக்கியமாக நித்திரை செய்வதற்கு ஒப்பாகவே அவரது முகம் பார்வைக்குத் தோன்றிற்று. ஜனாஸாவுக்கு மருந்து போட்டு இன்ஜக்ஷன் செய்யப்பட்டது. 10 வருஷமாயினும் தேகத்துக்கு எவ்வித கெடுதலும் வராவண்ணம் ஏற்பாடு செய்தனர். இரவு பகல் 24 மணி நேரமும் திரு குர்ஆன் ஓத ஏற்பாடு செய்தனர். கடைசியாக 1931-ம் வருஷம் ஜனவரிமீ 5-ம் தேதி மௌலானா ஷௌகத் அலி, அப்துர் ரஹ்மான் ஸித்தீக்கி, முஜப்பர் ஆகிய மூவரும் ஜனாஸாவைக் குளிப்பாட்டினார்கள். மாலை 6 மணிக்கு வீட்பிக்டன் ஹாலில் ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்பட்டது.

இதில் வட்டமேஜை மகாநாட்டுக்கு வந்திருந்த அங்கத்தினர்கள், ஈரான், எகிப்து, அப்கானிஸ்தான் ஸ்தானிகர்கள், இந்தியா மந்திரி, லார்டு சாங்கே, முதல்

மந்திரியின் பிரதிநிதி, இதர பிரபலஸ்தர்கள் ஜனுஸா ஊர்வலத்தில் கலந்துகொண்டு, காலஞ்சென்ற மௌலானு அவர்களிடம் தங்களுக்குள்ள மரியாதையையும் விசுவாசத்தையும் கடைசியாகச் செலுத்தினர்.

போர்ட் ஸயீது:—'நார்குண்டா' என்ற கப்பல் மூலம் டைலரீ என்ற துறைமுகத்திலிருந்து பைத்துல் முகத்தஸுக்கு மௌலானு அவர்களின் பூத உடலம் அனுப்பப்பட்டது. ஜனவரி மாதம் 21-ம் தேதி 'நார்குண்டா' கப்பல், போர்ட் ஸயீது துறைமுகம் வந்து சேர்ந்தது.

எகிப்து அரசாங்கத்தின் வரவேற்பு:—எகிப்து அரசரின் பிரதிநிதி, முதல் மந்திரி, மஷாயிகுகள் முதலிய பிரபலஸ்தர்கள், போர்ட் ஸயீது நகரில் மௌலானு மர்ஹூம் அவர்களது ஜனுஸா ஊர்வலத்தில் சேர்ந்துகொண்டனர். மஸ்ஜிது அப்பாஸில் ஜனுஸாத்தொழுகை நிறைவேற்றப்பட்டது. எகிப்திய போலிஸ், போலிஸ் மரியாதை செய்து, ஜனுஸாவைத் தங்களது தோளின் மீது தூக்கிற்று.

இளவரசர் முஹம்மது அலியின் காணிக்கை:—இளவரசர் முஹம்மது அலி மௌலானு மஹம்மதலி மர்ஹூம் அவர்களின் ஜனுஸா பெட்டியில் வைப்பதற்காக கஃபா கிலாபின் ஒரு துண்டைக் காணிக்கையாக அளித்தார். மர்ஹூம் அவர்களுக்கு கலப்பற்ற கதர் துணியால் கபன் அணிவிக்கப்பட்டிருந்தது.

பைத்துல் முகத்தஸில்:—ஜனவரி 23-ம் தேதி யன்று ஷஹீதே மில்லத் மௌலானு மர்ஹூம் அவர்

களது ஜனுஸாப் பெட்டி எருசலேம் நகரம் வந்து சேர்ந் தது. பொதுஜனத் தலைவர்களைக் கொண்டதொரு பெருங்கூட்டம் நமது மௌலானு அவர்களின் ஜனுஸா வின்நாற்புறத்திலும் புடைசூழ ஊர்வலம் வந்தது. அவ ருக்கு மரியாதை செலுத்தும் அறிகுறியாக அறபியர், அறபியரல்லாதார், முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்துவர் கள் முதலிய சகல மதத்தினரும் தேசத்தினரும் தங்கள் வியாபார ஸ்தலங்களை மூடிவிட்டனர். யூதர்கள் அறபிப் பத்திரிகைகளுக்கு அனுதாபச் செய்திகள் அனுப்பினர். மௌலானு ஷௌகத்அலி அவர்கள் "எனது அருமைச் சகோதரர் எருசலேமில் அடக்கம் செய்யப்படுவது, கீழ் நாட்டின் நிரந்தர ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் அறிவிக்கிறது" என்று செய்தி அறிவித்தார். ஜனுஸா ஊர்வலத்தில் மௌலானு ஷௌகத் அலியும், பைத்துல் முகத்தஸின் பிரதம முப்தியும் எல்லோருக்கும் முன் அணியில் சென்றனர். இவர்களுக்குப் பின் உலக மெங்குமுள்ள லக்ஷக்கணக்கான ஜனங்கள் வாடிய முகத்துடன் தங்கள் தலைவரைத் தூக்கிக் கொண்டு வந்தனர். கைரோ, அம்மான், டுனிஸ் முதலிய இடங்களி லிருந்து வந்தவர்கள் மனதைக் கரையச் செய்யும் வண் ணம் மர்தியாவென்னும் இரங்கற்பாக்களைப் பாடினர். பைத்துல் முகத்தஸ் வந்தபோது பேழையை வண்டியி லிருந்து இறக்கவும் முடியாதபடி அவ்வளவு அபரிமித மான பிரமாண்டமான கூட்டம் சேர்ந்து விட்டது. முஸ்லிம், கிறிஸ்துவ, யூதஸ்திரீகளின் தூதுவக்கூட்டத் தினர் பேகம் சாகிபா மௌலானு முஹம்மது அலியின்

சமூகம்சென்று தங்களது மரியாதையைச் செலுத்தியது இந்த ஊர்வலத்தில் ஸ்திரீ புருஷர் யாவருமாக இரண்டு லக்ஷத்துக் கதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

ரஸ்தாவின் இருமருங்குகளிலும் உள்ள வீடுகளின் ஜன்னல்கள், மெத்தைகள் ஆகியவைகளிலெல்லாம் ஜனங்கள் நிறம்ப நின்று, தலைவர் அவர்களின் ஜனாஸா ஊர் வலத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்து நின்றனர். எப் பக்கம் பார்த்திடினும் மனிதத் தலைகளின் மயமாகவே தோன்றிற்று. ஜனங்கள் ரஸ்தாவில் சாதாரணமாக நடமாடுவது அதிக கஷ்டத்திலாகிவிட்டது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஹறம்ஷரீபுக்கு தாபூத் வந்து சேர மூன்று மணி நேரம் சென்றது. சகல மதத் தலைவர்கள், பிரபலஸ்தர்கள், பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதி, அமீர் அப்துல்லா, ஷாஹ் ஹுஸைன் ஆகியவர்களின் ஸ்தானி கர்கள், அக்கம்பக்கத்து நகரங்களிலுள்ள புரோட்டஸ் டன்ட், கிரீக் சர்ச்சுகளின் மதத் தலைவர்கள் முதலியவர் கள் அங்கு வந்து கலந்து கொண்டனர். ஜும்ஆத் தொழுகைக்குப்பின் ஜனாஸாத் தொழுகை நிறைவேற் றப்பட்டது. ஜனாஸாவின் பேழை மஸ்ஜிது அக்ஸா வுக்கு முன் வைக்கப்பட்டிருந்தது. பிரபலஸ்தர்கள் அனைவரும் இறுதிப் பிரசங்கம் புரிந்தனர். இவ்விதமாக இந்தியாவின் ஒப்பற்ற இத்தலைவர் இவ்வுலகக் குழப்பங் களையும் தொந்தரைகளையும் விட்டு விடுபட்டு என்றென் றைக்குமாக நித்திய சுகம் அடைந்துவிட்டார்.

மௌலானா ஸெய்யித் சுலைமான் நத்வி:—மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் மர்ஹூம் அவர்

களைப்பற்றி மௌலானா ஸெய்யித் சுலைமான் நத்வி முற்றிலும் உண்மை கூறினர். அவர் கூறியது வருமாறு:—

"நீர், சமூகத்துக்காக அழுது பிரலாபித்தீர். உமக்காகச் சமூகம் அனைத்தும் அழுது பிரலாபிப்பது முற்றிலும் சரியே யாகும். நீர், உம்மத்தே முஹம்மதியாவிற்காக சோகம் கொள்பவராயிருந்தீர். உமக்காக அந்த உம்மத்துகளனைத்தும் சோகம் கொண்டாடுவது கடமையாகும். நீர், இஸ்லாமிய உலகுக்காகக் கவலை கொண்டீர். உமக்காக இஸ்லாமிய உலகம் முழுவதும் கவலை கொள்வது பொருத்தமே யாகும். இந்தியாவுக்காகத் துக்கங்கொண்டாடியவ! திருப்போலிக்காக சோக முற்றவா! இராக் தேசத்துக்காக விசனமடைந்தவா! பால்கன் பிரதேசத்துக்காகக் கண்ணீர் விட்டவா! ஷாம் தேசத்துக்காகக் கரைந்தவா! அங்கோராவுக்காக இரங்கற்பா பாடிப்புலம்பியவா! ஹிஜாஸுக்காக கவலைப்பட்டவா! பைத்துல் முகத்தஸுக்காக நோவினை யடைந்தவா! இந்தியாவின் முஸாபிரே! ஆதலின் உமக்குச் செய்யவேண்டிய கடமை இஸ்லாமிய உலகின் ஒவ்வொரு பாகத்தின்மீது மிருக்கிறது. ஆகவே, உமக்காக இஸ்லாத்தின் முதலாவது கிப்லா தனது மார்பைப் பிளந்து அதில், நீர், ஐக்கியமாகி விடவேண்டுமென்று இடங்கொடுப்பது மிகவும் பொருத்தமே யாகும்."

இருபத்தெட்டாம் அத்தியாயம்

அனுதாபக் கூட்டங்கள்

மௌலனா மர்ஹூம் அவர்கள் காலஞ்சென்றது ஸாமான்ய சம்பவமல்ல. அச்சம்பவம் தனது பலனைச் செய்யாமலிருக்க முடியாது. அவரது தலைமைப் பதவியை முழு உலகமும் ஒப்புக்கொண்டிருந்தது. ஆதலால், உலகம் முழுவதும் அவருக்காகத் துக்கம் கொண்டாடிற்று. அந்நிய தேசங்களில் எங்கெங்கு அவரது கீர்த்தி பரவியிருந்ததோ அங்கங்கெல்லாம் அவரது மரணத்துக்காகத் துக்கங் கொண்டாடப்பட்டது.

காபுல்:—இந்தியாவுக்கு அயலகமான அப்கானிஸ்தான் தேசமும் மௌலானா முஹம்மது அலி மர்ஹூம் அவர்களுக்காக மனம் விட்டுக் கதறிற்று. அங்கு குடியேறி இருக்கும் இந்திய முஹாஜிர்கள் அனுதாபக் கூட்டம் கூடினர். அச்சபைக்கு அப்கான் அரசர் மாக்ஷிமை தங்கிய நாதிர்ஷாஹ் அவர்களே நேரில் கலந்து கொள்வதாக ஏற்பாடாகி இருந்தது. பிறகு விசேஷமான ஒரு காரணத்தால் அவர் நேருக்கு நேர் கலந்துகொள்ள முடியவில்லை. அவர் தமது மந்திரி பிரதானிகளையும் உயர்தர உத்தியோகஸ்தர்களையும் தமது பிரதிநிதிகளாக அனுப்பிவைத்தார்.

இந்தியாவில் துக்கம்:—இந்தியாவில் மௌலானா அவர்களது மரணச்செய்தி எட்டியவுடன் இந்தியா முழுவதும் நிசப்தமாகி விட்டது. அக்காலத்தில் ஸிவில் சட்ட மறுப்பு நடந்துகொண்டிருந்த போதிலும், இந்தியா

முழுவதிலும் அவருக்காகப் பலமான துக்கக் கொண்டாட்டங்களும் அனுதாபக் கூட்டங்களும் நிகழ்ந்தன. பிரசங்கங்கள் புரியப்பட்டன. அவர் செய்த அருந் தொண்டுகள் போற்றப்பட்டன. அவர் ஆற்றிய பணிகள் விளக்கிக் கூறப்பட்டன. இத்துக்க விழாவில் ஹிந்து முஸ்லிம் இரு சமூகத்தாரும் சரியாகப் பங்கெடுத்துக் கொண்டார்கள். கிலாபத் கமிட்டிகளும், மௌலானு அவர்களது கக்ஷியினரும் அவருக்காகச் சோகங் கொண்டாடியது போல காங்கிரஸ் கமிட்டிகளும் ஹிந்துக்களும் மௌலானுவின் பிரிவிற்காக வருந்தினர். கடை யடைப்பு முதலிய சகல காரியங்களிலும் அவர்கள் தங்களுக்குரிய பங்கை எடுத்துக் கொண்டனர்.

லக்னௌ மௌலானு ஜுபருல் முல்க் என்பவர் ராஜீய விஷயங்களில் கொஞ்சம் மாறுபட்ட அபிப்பராய முள்ளவர். மௌலானு மர்ஹூம் அவர்கள் உப்பு சத்தியாக்கிரகத்துக்கு எதிராகவுள்ளவர். ஆனுல், ஜுபருல் முல்க் உப்பு சத்தியாக்கிரகம் செய்து சிறைவாசம் அனுபவித்துச் சமீபத்தில் தான் சிறையிலிருந்து விடுதலை யடைந்தவர். அவரிடம் ஒருவர் சென்று மௌலானு முஹம்மதுஅலி மர்ஹூம் அவர்களைப் பற்றிப் பேசப் பிரஸ்தாபித்த போது அவருக்குப் பேச நா எழவில்லை. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓட ஆரம்பித்தது. சென்னை மாகாணத்தைச்சேர்ந்த சேலம் டவுனில் மௌலானு அவர்களது மரணச் செய்தியைக் கேட்டு ஏங்கித்தயங்கி மயங்கி ஒருவர் மரண மடைந்தார்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

பத்திரிகைகளின் அபிப்பராயம்

மௌலானு முஹம்மதுஅலி ஜௌஹர் மர்ஹூம் அவர்களது மரணத்துக்குப்பின் தேசத்திலுள்ள பெரும்பாலான பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அவரது தொண்டுகளையும், ஜீவிய சரித்திரங்களையும் விளக்கி விசேஷ அனுபந்தங்களை வெளியிட்டன. இந்தியப் பத்திரிகைகள் அல்லாமல் எகிப்து முதலிய தேசங்களிலுள்ள அறபிப் பத்திரிகைகளும் மௌலானு அவர்களைப் பற்றிப் பல நீண்ட வியாசங்களெழுதின. இத்துக்க சம்பவத்தைப் பற்றி ஹிந்து, முஸ்லிம், யூதர், கிறிஸ்துவர் என்ற பாகுபாடின்றி எல்லா ஜாதிப் பத்திரிகைகளும் தங்கள் தங்களின் மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டன.

அல்மஸா உ:—எகிப்து வப்து (தேசீய) கக்ஷிப் பத்திரிகையான "அல்மஸா உ" என்ற பத்திரிகை தனது தலையங்கத்தில்:—

"இந்தியாவின் இருதய கமலத்தில் மிகவும் ஆழமான புண் எற்பட்டு இரண்டு நாட்களாகின்றன. இந்தப் புண், பல தலைமுறைகளுக்கு ஆருது. இந்தப்புண் மௌலானு முஹம்மது அலியின் ஆருத்துயரமான மரணத்தால் எற்பட்ட புண்ணுகும். மர்ஹூம் அவர்கள் இந்தியாவில் மிகவும் துணிவுள்ள மா பெருந்தலைவராவார். தேச ஊழியத்தின் நிமித்தம் அவர் கணக்கற்ற துன்பங்களை அடைந்தார். கடைசியாக, யுத்தகளத்தில் யுத்தம்செய்து கொண்டிருக்கும் போதே ஷஹாதத் என்ற பானத்தை அருந்திவிட்டார்.

முஹம்மது அலி பிறவியிலேயே புரட்சிக்காரர். அவர் புரட்சிக்காரராக இருக்கிறுர் என்று நாம் எவரைப்பற்றி

யேனும் கூறுவோமாயின் பிறகு அவர் பிரிட்டிஷாரின் விரோதி என்று கூறுவதற்கு அவசியமிருக்காது. ஏனெனில், பிரிட்டன்தான் எல்லாரையும் பார்க்கினும் அதிகமாகத் தேசம் பிடிக்கும் நாடு. முஹம்மது அலியின் வாணுள் முழுவதும் பிரிட்டனுக்கு மாருக யுத்தம் செய்வதிலேயே கழிந்தது. நிச்சயமாக, இந்தியா இவரை வெகு காலம்வரை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கும். ஏ! மாபெரும் போர்வீர! பிர்தெளஸ் எனும் ஸ்வர்க்கத்தில் நித்திய ஜீவியத்தை அடைவாயாக! உமது தேசமும், கீழ் நாடனைத்தும் சீக்கிரத்தில் சுதந்திரமடையவும், எதற்காக நீர் உயிரைத்துறந்தீரோ அந்த நோக்கம் ஈடேறவும் இறைவனிடம் விண்ணப்பம் செய்வீராக!'' என்று தெரிவித்துக் கொண்டது.

அல் மூகத்தம்:—எகிப்து தேசத்தில் பிரசுரமாகும் அறபிப்பத்திரிகையில் "அல்முகத்தம்'' என்பது ஒரு பிரபலப் பத்திரிகையாகும். இது கிறிஸ்துவர்களால் நடத்தப் பெறுவது. இது தனது தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறது:—

"மௌலாயீ முஹம்மது அலி மரித்து விட்டார் என்ற துக்கக்கரமான செய்தி லண்டனிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது. மௌலாயீ முஹம்மது அலி இந்தியாவில் வதியும் முஸ்லிம்களுள் பெரும் தலைவர். உலகத்திலுள்ள முஸ்லிம் தலைவர்களுள் ஒரு பெரும் அந்தஸ்தை வகித்துவந்தவர். அவர் இஸ்லாம், இந்தியா, கீழ் நாடனைத்திற்கும் ஊழியம் செய்வதற்காகவே தமது வாணுளை அர்ப்பணம் செய்திருந்தார்.''

இவை அறபிப் பாஷையில் பிரசுரிக்கப்படும் பெரிய பத்திரிகைகளின் அபிப்பராயத்தின் நமூனுவாகும்.

இனி ஆங்கிலப் பத்திரிகைகளின் அபிப்பிராயத்தையும் மேலெழுந்த வாரியாகக் கவனியுங்கள்.

டேய்லி எக்ஸ்பிரஸ்:—“ மௌலானா முஹம்மதுஅலி மரணத்தின் மடியிலேயே இங்கிலாந்துக்கு விஜயம் செய்தார். வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொண்டு தனது தேசத்துக்கும் சமூகத்துக்கும் ஆற்றவேண்டிய சிறந்த ஊழியத்தைச் செய்யவேண்டும் என்பது அவரது முக்கியமான எண்ணம். கடைசிநேரம் மிகவும் சமீபத்திலிருக்கிறது என்பது அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. அவர் சில மணிநேரத்துக்கு மேல் அதிகமாக ஜீவித்திருக்க முடியாது என்று அவருக்குக் கூறப்பட்டிருந்தது. ஆயினும், கீழ் நாட்டுக்காரர்களுக் கெனச் சொந்தமாக இருக்கிற ஆத்மீக உணர்ச்சியின் மேலீட்டால் அவர் தனது ஜீவியத்தின் இறுதி இரவிலும் கூட பிரதிநிதிகளுக்கு தம்முடைய இறுதி உபதேசத்தை யும் கடைசி அபிப்பிராயத்தையும் எழுதுவிப்பதில் கழித் தார். எவ்விதத்திலேனும் வகுப்புப் பிரசினையை ஒழுங்கு செய்வதில் தேசத்துக்குத் தமது கடைசி ஊழியத்தைச் செய்யவேண்டு மென்பது அவரது நோக்கமாக இருந்தது. அவர் லண்டன் ஹோட்டலில் தேவ தூதர் அழைப்புக்கு உடன்பட்டார். சமஸ்தான மன்னர்கள் இப்பெரும் தலை வரின் கஷ்டத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தனர். தம்முடயஒருகையைதனது பிரிய மனைவியான பேகம் அவர் களின் கையின்மீதும், மற்றொரு கையை அப்பொழுது தான் சில மணி நேரத்துக்கு முன்பு இரவெல்லாம் அயர்லாந்தி லிருந்து பிரயாணம் செய்து வந்துசேர்ந்த தமது உயிர்த் துணைவரான மூத்த சகோதரரின் கையின்மீதும் வைத்துக் கொண்டு ஆவி துறந்தார். இந்திய இளவரசர்கள் அடிக்கடி அறைக்கு ஓடிவந்து பார்த்துக்கொண்டும், அவருக்காக

இறைவனிடம் பிரார்த்தனை செய்வதற்காக கையை உயர்த்திக்கொண்டு மிருந்தனர்.''

டைம்ஸ் ஆப் இர்தியா—''டைம்ஸ் ஆப் இந்தியா'' பத்திரிகையின் லண்டன் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார். இவர் முன்னர் இப்பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தவர். மௌலானா அவர்களுக்கு அறிமுகமானவர்.—

''காலஞ்சென்ற பெரியாருடன் எனக்குப் பல வருஷங்களாகச் சிநேக மிருந்துவந்தது. இவர் பரோடா சமஸ்தானத்தில் அபினி இலாக்காவில் உத்தியோகம் பார்த்து வந்தபோது குறுகிய இவ்வெளிக்குள் அவருக் கேற்படும் இன்பமற்ற அனுபவத்தை இவ்வியாச மெழுது பவருடன் பேசுவதில் பரிகரித்துக் கொள்வார். அவர் இம்முறை லண்டனுக்கு வந்து, நான் அவரைச் சந்தித்த போது அவருடைய முகத்தைப் பார்த்த எனக்கு அதிக வருத்தமேற்பட்டது. அவர் உண்மையில் மரணத்தின் கரைமீதிருந்தார். இவ்வுண்மையை அவரும் உணர்ந்திருந் தார். ஆயினும், அவர் வட்டமேஜை மகாநாட்டில் மிகவும் நீளமானதும், மனத்தைக் கவரத்தக்கதுமான பிரசங்கம் செய்யும்வரை ஜீவித்திருந்தார். காலஞ்சென்ற பெரியார் என்னுடன் பேசிக்கொண்டிருக்கும்போது ''நான் அமைதி, சமாதானம் ஆகியவைகளை நிலை நிறுத்தவே இங்கு வந் தேன்'' என்று கூறினர்.

முப்பதாம் அத்தியாயம்

தலைவர்கள் அபிப்பராயம்

மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்திப்பெருமான், பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் ராம்ஸே மாக்டனல்டு ஆகியவர்கள் நீங்கலாக இதர பிரபலஸ்தர்கள் மௌலானா மர்ஹூம் அவர்களைப் பற்றிக் கூறின அபிப்பராயங்கள் வருமாறு:—

மௌலானா ஷௌகத் அலி:—என் சகோதரர் வீரர். வீரம்பொருந்திய சிப்பாயாக இருந்தார். போர் முனையில் யுத்தம் செய்துகொண்டே உயிர்விட்டார்.

மௌலானா ஹஸ்ரத் மோஹானி:—இஸ்லாத்தின் சிப்பாய்க்கு இதைப்பார்க்கினும் சிறந்த முடிவு வேறென்ன இருக்கிறது. அவர் யுத்தம் செய்து கொண்டிருக்கும் போதே தமது ஆவியை விட்டார்.

மௌலானா ஹுஸைன் அஹ்மது.—மௌலானா முஹம்மது அலி சுதந்திரக் கொடி தாங்கிய மாபெரும் வீரர்களில் ஒருவராக இருந்தார். தமது தேசத்திற்கு ராஜீய விடுதலை கிடைக்க வேண்டுமென அவருக்கு அளவற்ற அவா இருந்தது. ராஜீயம், மதம், மார்க்கச் சட்டம் ஆகியவைகளில் அவரது அபிப்பராயம், ஒருவருடைய கவனமும் செல்லாத இடங்களுக்கெல்லாம் சென்று கொண்டிருந்தது.

சுபாஷ் சந்திர போஸ்:—(கல்கத்தா கார்ப்பொரேஷன் மேயர்) மௌலானா அவர்கள் மிகவும் உயரிய நோக்கமுள்ளவராகவும், நிகரற்ற தலைவராகவும் இருந்தார். முன்னணியில் நின்று யுத்தம் புரிந்து கொண்டிருந்தார். அவருடைய முயற்சிகள் தாய்நாட்டில் மாத்திரம் இருக்கவில்லை. அவருடைய பார்வை மிக விஸ்தீரணமாக இருந்தது. கீழ்

நாட்டின் ஐக்கியமும் முன்னேற்றமும் அவருடைய வாழ்க்கையின் கனவாக இருந்தன. அவர் எனது அத்தியந்த நண்பர். சமீப காலத்தில்தான் எனக்கும் அவருக்கு மிடையில் அபிப்பிராய பேத மேற்பட்டது. ஆனால், ஜனங்கள் அவரை ஆதரிக்க முடியாத காரியங்களிலும் அவரது அபிப்பிராயம் பொதுஜன ஊழியத்தை அனுசரித்ததாகவே இருந்தது என்பதைத் தைரியமாகக் கூறுவேன். அவரது ஜீவியம் வருகிற சந்ததியினருக்கு எப்பொழுதும் சிறந்தமுன் மாதிரியாக இருக்கும்.

பெடரல் ஸப் கமிட்டி அங்கத்தினர்கள்:—மௌலானா முஹம்மது அலி அவர்கள் தமது கடமையை நிறைவேற்றும் விஷயத்தில் தம்முடைய பலஹீனத்தையும் கஷ்டத்தையும் கொஞ்சமும் லக்ஷியம் செய்யவே இல்லை.

மிஸ்டர் ஜெய்கர்:—இந்திய ராஜீய உலகில் மௌலானா முஹம்மது அலி முக்கிய புருஷராக இருந்தார். அவர் தேச நன்மைக்காக அதிகம் தொண்டாற்றி இருக்கிறார்.

ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்:—மௌலானா அவர்கள் மிகவும் பலமும் செல்வாக்கும் பொருந்திய தலைவராக இருந்தார்.

லார்டு ரீடிங்:—மௌலானா முகம்மது அலி மிகவும் பலம் பொருந்திய ஊழியம் செய்பவராக இருந்தார். தமது கொள்கைகளை மிகவும் உறுதியுடன் கூறுபவர். அவருடைய ஊக்கத்தையும் துணிச்சலையும் பார்த்து நமது இருதயங்கள் அவரைப் போற்றிப் புகழும் உணர்ச்சி ததும்புவனவாக இருந்தன.

ஸர். ஜார்ஜ் ரைனி (இந்தியா அரசாங்க மெம்பர்):—மௌலானா முஹம்மது அலி தமது கஷ்டத்தைப் பார்க்கினும், தேச சமூகக் கஷ்டங்களையே அதிகமாகக் கவனித்

தார். கடைசியாகத் தமது தேசத்திற்காகவும் நாட்டிற் காகவும் தன்னை அற்பணஞ் செய்தார்.

மிஸ்டர் ஆர்தர் மூர்.—மௌலானு முஹம்மது அலி 'புலி' போன்ற மனமுள்ள ஒரு சிப்பாயாக இருந்தார்.

ஸர். ஹரிசிங் கவர்.—மௌலானு முஹம்மது அலி இந்தியாவுக்காக ஆற்றிய தொண்டுகள் இந்தியாவின் சரித் திரத்தில் என்றும் ஞாபகார்த்தமாக இருந்துவரும். அவரது தேசாபிமானத்தை மறுக்கக் கூடியவர் இந்தியாவிலும் சரி, இந்தியாவுக்கு வெளியிலும் சரி, ஒருவரும் இல்லை.

ஸர். தேஜ்பகதூர் சாப்ரு.—நான் மௌலானு முஹம் மது அலியை 30 வருஷங்களாக அறிவேன். அவருடைய அந்தஸ்து எப்பொழுதும் கம்பீரமாகவும் பலமுள்ள தாகவும் இருந்தது. அவர் தமது நாட்டை மிகவும் நேசித்தார் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. இந்தி யாவுக்கு அவர் மிகவும் தேவையாக இருக்கும்போது அவர் மாண்டார்.

ஸர். அக்பர் ஹைதரி.—மௌலானு முஹம்மது அலி தம்முடைய வாழ்நாளின் கடைசி க்ஷணம் வரை தேசத் தொண்டாற்றினர்.

பிரபல ஆசிரியரான எச். ஜி. வேல்ஸ்:—மௌலானு முஹம்மது அலியின் இருதயம் "நெப்போலியனின்" இரு தயமாக இருந்தது. அவருடைய பேச்சு 'பர்க்' என்பவ ரின் பேச்சாக இருந்தது. அவருடைய எழுத்து "மெக் காலே" என்பவரின் எழுத்தாக இருந்தது.

இந்தியா மந்திரி மிஸ்டர் பேன்:—முஹம்மது அலி மிகப் பெரிய அந்தஸ்துள்ள முஸ்லிமாக இருந்தார். பெருந் தேசாபிமானி, பொது ஜனங்களால் மதிக்கத்தக்க தலைவ ராக இருந்தார்.

மாஜி இந்தியா மந்திரி லார்டு பீல்:—மௌலானா முஹம்மது அலி எனது சக ஊழியராக இருந்தார். அவருடைய மரணத்தால் எனக்கு அளவு கடந்த துக்கம் உண்டாகி இருக்கிறது.

பார்லிமெண்ட் அங்கத்தினர் மிஸ்டர் பென்னர் பிராக்குவே:—மௌலானா முஹம்மது அலி முதலிலும் கடைசியிலும் இந்தியாவின் நன்மையையும் க்ஷேமத்தையும் கருதுபவராக இருந்தார்.

ஸர். முஹம்மது ஷாபி:—மௌலானா முஹம்மது அலி தேசாபிமானியும் தியாகியுமாக இருந்தார்.

பண்டிட் மோதிலால் நேரு:—மௌலானா முஹம்மது அலி எனது பழைய நண்பர். பக்கா முஸ்லிம். மிகவும் செல்வாக்கு வாய்ந்தவர்.

கல்கத்தா கார்ப்பொரேஷன் அங்கத்தினர்:—மௌலானா முஹம்மது அலியின் சமாதியின்மீது அபயம், சமாதானம், ஒற்றுமை, ஐக்கியம் என்ற மந்தாரத்தைக் கட்டுங்கள்.

பாலஸ்தீனத்து பிரதம முப்தி அமீனுல் ஹுஸைனி :—தேசத்துக்கும், சமூகத்துக்கும், இஸ்லாத்துக்கும் சகலத்தையும் அற்பணஞ்செய்த பெரியார்களில் மௌலானா முஹம்மது அலியும் ஒருவர்.

பிக்கானீர் மஹாராஜா :—மௌலானாவின் ஒழுக்கம் மிகவும் மேலானதாகவும் விரும்பத்தக்கதாகவும் இருந்தது.

மிஸ்டர் புரோச்சா;—மௌலானா அவர்கள் வசிய சக்தி பொருந்திய பிரசங்கி, ஆசிரியர், வீரத் தளகர்த்தர். இஸ்லாத்தை மிகவும் பலமாகவும் உண்மையாகவும் பின்பற்றுபவர்.

(லண்டன்)டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர்:--முஹம்மதுஅலி சட்டத்துக்காகவே வாழ்ந்தார். சட்டத்துக்காகவே கஷ்டப்பட்டார். சட்டத்துக்காகவே மரித்தார்.

மௌலானா ஸெய்யித் சுலைமான் நதவி :—ஆவோ! 1911-ம் வருஷத்திலிருந்து 1930ம் வருஷம்வரை இந்தியாவுக்கும், இஸ்லாமிய உலகுக்கும் சம்பவிக்கும் ஒவ்வொரு ஆபத்தான காலங்களிலும் எக்காளம்போல் ஓலமிட்டுக்கொண்டிருந்த அந்த அபிமானமுள்ள சப்தம் என்றென்றைக்குமாக அடங்கிவிட்டது. இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் கஷ்டம் உண்டாகும்போதெல்லாம் துடித்துக்கொண்டும், மற்றவர்களையும் துடிக்கச்செய்துகொண்டுமிருந்த அந்த இருதயம் நியாயத்தீர்ப்புநாள்வரை அமைதியாகிவிட்டது. மார்க்கத்துக்கும் சமூகத்துக்கும் சம்பவிக்கும் துக்கத்தின் போழ்தெல்லாம் கண்ணீரை, ஆற்றைப்போல் பெருகியோடச் செய்துகொண்டிருந்த கண்கள் இனி என்றென்றைக்குமாக அடைபட்டுவிட்டன. நமது முஸிபத்துகள் என்ற மலைகளை பிரவாகம்போல் வந்து அடித்துச்செல்லும் அந்த இருதயத்தின் அலைகள் அடங்கிவிட்டன. ஊழியம் செய்வதிலும் போர்புரிவதிலும் இரவுபகலாக ஈடுபட்டுக்கொண்டிருந்த அந்தக் கைகள் இனி எப்பொழுதும் எழுந்திருக்கமுடியாதபடி களைத்துவிட்டன. அந்தோ! தோல்வியடைந்த சேனையின் கடைசிவீரர், பகைவர்களின் போர்கூட்டத்தின் மத்தியில் யுத்தம்செய்துகொண்டிருந்தார். கடைசியாக காயங்களால் பீடிக்கப்பட்டு இனி எழுந்திருக்கமுடியாதபடி வீழ்ந்துவிட்டார். அல்விதாஉ முஹம்மது அலி! அல்விதாஉ வஸ்ஸலாம்.

மிஸ்டர் அப்துல்லா புரைலவி "பம்பாய் கிரானிக்கிள்" ஆசிரியர் :—மௌலானா முஹம்மதுஅலியின் மரணத்தினால் இந்திய முஸ்லிம்களுக்கு மட்டுமில்லாமல் இந்தியா முழுவதற்குமே பெரும்நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அவருடைய ஜீவியம் விலைமதிக்க முடியாத காணிக்கையாக இருந்தது.

மிஸ்டர் ஜீ. கே. நரிமன் :—முஹம்மது அலியின் பட்ட வர்த்தனமான பேச்சும், தாராள மனப்பான்மையும் என் மனத்தைக் கவர்ந்துவிட்டன. முஹம்மது அலி சிறந்த ராஜ தந்திரி. அநேக ராஜீய சபைகளில் அவரது வெற்றிக்கு அவருடைய நிகரற்ற நடவடிக்கைகளே காரணமாக இருந்தன. இதனால் மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்திபெருமானும் அவரைப் பாராட்டி இருக்கிறார். முஹம்மது அலியின் விசேஷித்த அந்தத்தன்மைகள் பால் எனக்கு அளவற்ற பிரீதியுண்டு. மிகவும் பயங்கரமான கடைசித்தருணத்திலும் கூட தன்னுடைய அறிவையும் புத்தியையும் தனது அதிகாரத்திற்குள் வைத்துக்கொண்டிருந்தார். அவரது சக்தி என்ற "களஞ்சியம்" எப்பொழுதும் நிறைந்திருந்தது.

ஹக்கீமுல் உர்மத் மௌலானா அஷ்ரப் அலி தானவி: "முஹம்மது அலியின் மரணத்தால் எனது இருதயத்தில் எற்பட்ட உணர்ச்சியை நான் நாவால் சொல்லமுடியாது. எத்தனைமுறை நான் அவருக்காக பிரார்த்தனை செய்தேன், இன்னமும் செய்துகொண்டிருக்கிறேன் என்பதை இறைவன்தான் அறிவான். அவர் முஸ்லிம்கள்பால் உண்மையாகவும், சுயநலமின்றியும் நேசம் வைத்தார். அவருடைய தன்மைகளில் இதுதான் என்னை அவர்பால் பற்றும், விசுவாசமுமுள்ளதாக ஆக்கிற்று. பாக்கியுள்ள தன்மைகளை அவரை நேரில்பார்த்தவர்கள் தான்அறிவார்கள். நான் அவரை ஒருபோதும் பார்த்ததில்லை. ஆதலால், எனக்கு அவரிடமுள்ள இந்த ஒரே தன்மையின்பால், பற்று அதிகமாக இருக்கிறது. ஆனால், இந்தத்தன்மையானது மற்றைய எல்லாத் தன்மைகளுக்கும் உயிர் என்று கருதுகிறேன்."

முப்பத்தோரும் அத்தியாயம்

சில குறிப்புகள்

பைத்துல் முகத்தஸில் மௌலானா முஹம்மது அலி மர்ஹூமவர்களது ஜனாஸாவைக் கொண்டு வந்து, ஜனாஸாத் தொழுகையும் நிறைவேற்றப்பட்டபின், கீழ் நாட்டிலுள்ள சில பெரியார்கள் ஜனாஸாப் பேழையின் முன் நின்று தங்களது மன உணர்ச்சியை வெளியிட்டனர். அவைகளில் இருவர் கூறியவைகளை மட்டிலும் ஈண்டு குறிப்பிடுவோம்.

அஹ்மது ஜக்கீ பாஷா:—இவர் மஸ்ஜிது அக்ஸாவில் நின்று கொண்டு கூறியதாவது :—

அக்ஸாவிலுள்ள பெரியார்களே! அறபி மக்களே! இஸ்லாமிய உம்மத்துகளே !!

மௌலானா முஹம்மது அலியின் ஜீவியம் ஜிஹாதின் தொடர்ச்சியான ஒரு சங்கிலியாக இருந்தது. இந்தக் காலம் அவரைப் பார்த்தது. சரித்திரம் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டது. இது மட்டுமல்ல. இன்றைக்குப் பிறகு அவர் தியாகத்தின் அழியா ஞாபகார்த்தமாக என்றென்றும் இருப்பார் என்பதை நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள். அவர் எதேச்சாதிகாரத்திற்குக் கடும் பகைவராக இருந்தார். இந்த தியாகி தம் காலத்தவரில் 'லிஸானேஸித்கா'க இருந்தார் என்பதற்கு நாங்கள் சாக்ஷியாக இருக்கிறோம். "இறைவன் அவருக்கு அருள் சுரந்தான். அவர் கடைசியிலும் லிஸானே ஸித்காக இருந்தார்" என்ற விசுவாசம் எங்கள் இருதயங்களில் நிறம்பி இருக்கிறது. இந்த இந்தியத் தலைவர் தமது ஜீவியத்தைத் தேசத்துக்காக அற்பணம் செய்திருந்தார். இவர் தனது தேசத்தின் சுயேச்சைக்காக அநேக ஜிஹாது

களைச் செய்தார். ஜிஹாதுக்குச் செய்யவேண்டிய கடமை நிறைவேற்றிவிட்டார். நிகரற்ற கல்விமான்! இஸ்லாத்தின் தொண்டன்! இவர்மீது இறைவனின் ஸலாமத் உண்டாவதாக.

இளவரசர் முஹம்மது அலி பாஷா:—எகிப்து அரசாங்கத்தின் தர்ம பரிபாலன இலாக்காவின் மாஜி மந்திரியும், எகிப்து சுயேச்சைக் கக்ஷித் தலைவருமான முஹம்மது அலி பாஷா கூறியதாவது :—

"பால்கன் யுத்த காலத்திலும், மகா யுத்தகாலத்திலும், துருக்கி கிரேக்க யுத்தத்திலும் முஹம்மது அலி செய்த காரியங்கள் எப்பொழுதும் இருந்து வரும். இதற்காக அவர் சிறைவாச தண்டனையையும், பொருள் நஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டிய தேற்பட்டது. இவைகள் மறக்கப் படக்கூடியனவன்று. "பலம் சத்தியமாக ஆகிவிடாது. ஆனால், சத்தியம் பலமாக ஆகிவிடும்" என்பது அவரது எண்ணத்திலும் சிந்தையிலும் குடி கொண்டிருந்தது. கண்ணியம் வாய்ந்த வழிப்போக்க! இது பெரிய முஸீபத்தாகும். கஷ்டம் பளுவானது. ஆனால், நாங்கள் பொறுமையினால் பலனுண்டு என்பதைக் கவனித்துச் சகித்துக் கொண்டிருக்கிறோம். உமக்கு சலாம் சொல்வதற்காகவே நான் இங்கு வந்தேன். நீர் மரிக்கவில்லை. மேலும், நீர் ஜீவித்திருக்கிறீர். உமக்குப்பின் எங்களுக்கு ஆறுதலளிக்க வல்லது உமது வேலைகள்தாம். அவை எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும். நீர் செல்வதற்கு முன் உமது கிரியைகள் முன்னால் சென்றிருக்கின்றன. அவைகள் உமக்காகச் சுவர்க்க லோகத்துத் தலைவாசல்களைத் திறந்து வைத்திருக்கின்றன. உமது பந்துக்களுக்காக நீர் பெருமைகளை விட்டுச்சென்றீர்!

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

ஞாபகச் சின்னம்.

அவருக்கு ஞாபகச்சின்ன மேற்படுத்த வேண்டுமென்று இந்தியாவெங்கும் உணர்ச்சி தோன்றிற்று. பற்பல இடங்களிலிருந்தும் பல ஆலோசனைகள் கூறப்பட்டன.

சிலை ஏற்படுத்த யோசனை :—ஜனுப் நியாஜ் பத்தஹ் பூரி, மௌலானா அவர்களது மரணத்துக்காகத் துக்கித்ததுடன் தற்கால முள்ள "ஜீவ" சமூகத்தார் செய்வது போல் முஹம்மது அலிக்காக "சிலை" ஏற்படுத்தி அவருடைய ஞாபகார்த்தமாக வைக்கவேண்டும் என்று கூறினார்.

ராஜீயஸ்தாபனம்:—முஹம்மது அலியின் ஞாபகார்த்தமாக ஒரு ராஜீய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதில் முஹம்மது அலியின் ராஜீய கொள்கைகளைப் போதிக்க வேண்டும் என்றுமௌலானா ஹஸ்ரத் மோஹானியும்இதர தலைவர்களும் கூறினார்கள்.

ஜாமிஆ மில்லிய்யா :— டில்லியிலுள்ள தேசீய முஸ்லிம் சர்வகலாசாலையான ஜாமிஆ மில்லிய்யாவை ஸ்தாபனம் செய்வதில் மௌலானா அவர்களுக்கு அதிக சம்பந்தம் இருக்கிறது. அவரது சம்பந்தத்தால் அக்கலாசாலைக்குத் தனிப்பட்ட உயர்வும் கண்ணியமும் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால், அதனையே மௌலானா அவர்களின் ஞாபகச் சின்னமாக ஏற்படுத்திவிட வேண்டும் என்றும், எல்லா முயற்சிகளையும் இதிலேயே ஈடு படுத்த வேண்டும் என்றும், சில முக்கியஸ்தர்கள் கூறினார்கள். எல்லாத் தலைவர்களும் இதனை ஆதரித்தார்கள். எல்லாப் பெரியார்களின் பெயரையும் இதற்காக ஏற்படும் சபையின் அங்கத்தினராகப் பதிவு செயது கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

பற்பல ஞாபகச் சின்னங்கள் :—பெரிய ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தும் யோசனையை அல்லாமல் பற்பல நகரங்களும், முனிசிபல் சபைகளும் தத்தம்மாலியன்றவரை ஆங்காங்கு ஞாபகச் சின்னங்க ளேற்படுத்தப் பின்வாங்கவில்லை.

டில்லி முனிசிபாலிட்டி :—மௌலானா முஹம்மது அலியின் ஞாபகார்த்தமாக அவருடைய படத்தை முனிசிபல் சபை மண்டபத்தில் தொங்க விடவேண்டும் என்று டில்லி முனிசிபல் சபை தீர்மானித்தது.

பம்பாய் கார்ப்போரேஷன் :—மௌலானா முஹம்மது அலியின் ஞாபகார்த்தமாக பம்பாய் நகரிலுள்ள இரண்டு ரஸ்தாக்களுக்கு பம்பாய் கார்ப்பொரேஷன் "முஹம்மது அலி ரோட்" என்று பெயரிட்டது.

அலஹாபாத் முனிசிபாலிட்டி:--மௌலானா முஹம்மது அலியின் ஞாபகார்த்தமாக யாது செய்யலாம் என்ற ஆலோசனை அல்ஹாபாத் முனிசிபல் சபையில் வந்தது. உடனே, அவரது பெயரில் "முஹம்மது அலி பார்க்" என்று ஒரு பார்க்குக்குப் பெயரிடவேண்டும் என்றும் "முஹம்மது அலி ரோட்" என்று ஒரு ரஸ்தாவுக்குப் பெயர் இட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

முஹம்மது அலி மெமோரியல் ஹைஸ்கூல்: —பிர்ஜா அப்துல் காதிர் எம். ஏ. எல். எல் பீ., முயீனுத்தீன் பி. ஏ, எல்.எல்.பி. ஆகியவர்களின் அறிய முயற்சியின் பேரில் அஜ்மீர் முஸ்லிம்கள் மிகவும் நேர்த்தியான ஞாபகச்சின்னம் ஏற்படுத்தினர் அதாவது பியாதர் என்ற இடத்தில் "முஹம்மது அலி மெமோரியல் ஹைஸ்கூல்" ஒன்று ஏற்படுத்தினர்.

முதல் பாகம் முற்றிற்று.

இரண்டாம் பாகம்

முதல் அத்தியாயம்

உத்தியோகம்

இப் புத்தகத்தின் முதல் பாகத்தில் காலஞ் சென்ற மௌலானா முஹம்மதுஅலி ஜௌஹரின் தன்மை, குணதிசயங்கள் முதலியவைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டது. இவ்விரண்டாம் பாகத்தில் அவராற்றிய தொண்டுகள், உழைப்புகள், முதலியவற்றால் அவரடைந்த கஷ்ட நஷ்டங்கள் கூறப்படும். அவருடைய வேலையில் அவர் அந்தரங்கத் தியாகியாக ஈடுபட்டதும், அதில் அவருக்கேற்பட்ட தடைகளும், இடைவிடாத உழைப்பாலும், குன்றாத ஊக்கத்தாலும் இறுதிவரை முயன்று அவர் வெற்றி பெற்றதும், 'மிஸ்டர் முஹம்மது அலி'யாக இருந்து, 'மௌலானா முஹம்மது அலி'யாக மாறிய விபரமும் தெரியவரும்.

இங்கிலாந்திலிருந்து திரும்புகை :—ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்காக இங்கிலாந்து சென்ற முஹம்மதுஅலி, அதில் தோல்வியடைந்தபின் இந்தியாவுக்குத் திரும்ப அழைக்கப்பட்டார். உடனே, ராம்பூரில் அவருக்கு விவாகமும் செய்விக்கப்பட்டது. இனி அவர் குடும்ப விவகாரங்களி லீடுபட்டு உத்தியோகம் முதலிய தொழில்களில் ஈடுபட வேண்டியவரானார். ஆனால், அவரது மூத்த சகோதரர் மௌலானா ஷௌகத் அலி மறுபடியும் ஒரு முயற்சி செய்து, ஆக்ஸ் போர்டு

சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டப் பரீக்ஷைக்காக அவரை திரும்பவும் அனுப்பினார்.

கல்வி இலாக்காவில் ஊழியம்:—முஹம்மது அலி மறுபடியும் இங்கிலாந்து சென்று, போற்றத்தக்க விதமாக ஆக்ஸ் போர்டு சர்வ கலாசாலையில் பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷையில் வெற்றிபெற்றார். அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தவுடன், ராம்பூர் நவாப் தமது சமஸ்தானக் கல்வி இலாக்காவில் மிகவும் உயர்தர உத்தியோகத்திலமர்த்தினார். அத்துடன், ராம்பூர்நகரத்திலுள்ள ஹைஸ்கூல் பிரின்சிபாலாக இருக்கும் பொறுப்பும் இவரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

சூழ்ச்சிகள் :—தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட இவ்விரு பொறுப்புக்களையும் அவர் மிக திறமையாக நிறைவேற்றிக் கொண்டிருந்தார். ஆயினும், சுதேச சமஸ்தானங்களில் பொதுவாக எங்கும் நடைபெறும் வழக்கத்திற் கேற்ப அவரது உத்தியோகப் பதவியை விட்டு அவரை நீக்கி விடுவதற்கான அநேக சூழ்ச்சிகள் அங்கு நடைபெற்றுக்கொண் டிருந்தன. சமஸ்தான தர்பாரில் நெருங்கிய சம்பந்தமுள்ளவர்கள், சமஸ்தான மன்னர்களை உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு விரோதமாகத் தூண்டிவிட்டுக்கொண்டே இருப்பது அவர்களாற்றும் அருந்தொண்டு போலும்.

நவாப் நாஸிர்அலி :—ராம்பூர் சமஸ்தான நவாப், ஹாமித் அலிகானின் இளைய சகோதரர் நவாப் நாஸிர் அலிகான் அக்காலத்தில் ஆக்ஸ் போர்டில் கல்வி பயின்றுகொண் டிருந்தார். அந்நிய தேசங்களில் இருப்ப

வர்கள் தங்களது சுய ஊரார்களை அங்கு சந்திக்க வேண்டியது ஏற்படின், அவர்களுக் கிடை ல் அதிக அந்நியோன்யம் ஏற்படுவது சகஜமேயாகும். அதற் கேற்ப, மௌலானா முஹம்மது அலிக்கும், நவாப் நாஸிர் அலிக்கும் ஆக்ஸ் போர்டில் அந்நியோன்யம் ஏற்பட்டது. பிறகு, அவர் தமது சுய தேசம் வந்த போது ராம்பூர் நவாபிடம் அவரது இளைய சகோ தரரைப் பற்றி அன்பான வார்த்தைகளைக் கூறினார்.

ராம்பூர் நவாப் தமது இளைய சகோதரர்பால் சந்தோஷமற்றவராகவும், திருப்தியற்றவராகவும் இருந் ததால், அவரிடம் அவரது சகோதரரைப் பற்றிப் போற்றியது சூழ்ச்சிக்காரர்களுக்கு வழிதிறந்து விட் டது போலாயிற்று. "முஹம்மதுஅலி இங்கிலாந்தி லிருந்த காலத்தில் நவாப் நாஸிர் அலிகானுடன் சிநே கிதம் செய்து, தங்களைப் பட்டத்திலிருந்து அகற்றி விட்டு, அவரை அரியணையி லமர்த்த சூழ்ச்சி செய் திருக்கிறார்" என்று ராம்பூர் நவாபிடம் அவர்கள் "கோள்" சொல்ல ஆரம்பித்தனர். நவாப் சாகிப் இதை உண்மையென நம்பி, நமது மௌலானாவின்பால் மன வருத்தமும், வெறுப்பும் கொள்ள ஆரம்பித்தார். தம் முடைய இவ் வெறுப்பை அவர் மனத்தில் வைத்துக் கொண்டாரே அன்றி, மௌலானாவிடம் நேரில் கேட் கவுமில்லை, விசாரணை புரியவுமில்லை. ஆனால், இவ் வெறுப்பைக் காரியத்தில் காட்டிவந்தார். அதாவது, சமஸ்தானத்தில் நடக்கும் விசேஷ காலங்களிலும், விருந்துகளிலும், தோட்டக் கச்சேரிகளிலும், டீ பார்ட்டி

களிலும், சிற்றுண்டி விருந்துகளிலும் சமஸ்தானத்தி லுள்ள முக்கியஸ்தர்களை நவாப் அழைப்பது வழக்கம். இவ்விதமான சந்தர்ப்பங்களில் நமது மௌலானாவை அவர் வேண்டுமென்றே அழைப்பதில்லை. மௌலானாவிற்கு இது அதிகத் துயரத்தைத் தந்தது. தம்மை இவ்வாறு நவாப் நடத்துவதால், தம்முடைய திறமையையும், நாணயத்தையும் காட்டிக்கொள்ளத் தக்க வேறு உத்தியோகத்தைப் பார்த்துக்கொண்டு, ராம்பூர் சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்ப்பதை எவ் வகையிலும் விட்டுவிட வேண்டும் என்று விரும்பினார்.

மௌலானா ஷௌகத் அலிக்கு அழைப்பு :—அக் காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் அபினி இலாக்கா வில் உயர்தர உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த தமது மூத்த சகோதரர் மௌலானா ஷௌகத் அலிக் குத் தந்தி கொடுத்து அழைத்தார். அவர் தமது அரு மைச் சகோதரர் அவசரமாக அழைத்த தந்தியைப் பெற்றவுடன் ராம்பூருக்கு வந்தார். அவரிடம் நமது மௌலானா தமது மனக் கவலையை யுரைத்து, ராம்பூர் நவாப் தம்மீது கொண்டிருக்கும் சந்தேகத்துக்குத் தக்க பரிகாரம் செய்வதற்கான முறையைத் தேட வேண்டுமென்று அறிவித்துக்கொண்டார்.

மௌலானா ஷௌகத் அலியும் ராம்பூர் நவாபும் சம வயதுடையவர்களாகவும், பால்ய காலத்தில் இருவரும் ஒன்றுகூடி விளையாடிய தோழர்களாகவும் இருந்தமை யால் அவரிடம் ராம்பூர் நாவாபுக்கு அதிக அன்பிருந் தது. ஷௌகத்அலிக்கும் நவாபிடம் சங்கோஜமில்லை.

ஆதலால், தமது இளைய சகோதரரின் நிலைமையைப் பற்றி அவர் நவாபிடம் விஷயத்தை விட்டுப் பேசி, அவரது ஐயத்தை அகற்றினர். ராம்பூர் நவாபும் தமது பால்ய நண்பர் மௌலானு ஷௌகத் அலியின் சொற்களின் பேரில் திருப்தியடைந்தார். ஆயினும், சூழ்ச்சிக்காரர்கள் பின்னும் பின்னும் கூறி முயற்சி செய்து கொண்டே வந்ததால், ராம்பூர் நவாப் மறுபடியும் நமது மௌலானு முஹம்மது அலியின்பால் அவநம்பிக்கை கொண்டார்.

மௌலானு ஷௌகத்அலியின் ஆலோசனைகள்:— இறுதியாக, மௌலானு ஷௌகத் அலி தமது சகோதரரின் மனக்கவலையை மாற்றுவதற்கு ராம்பூர் சமஸ்தானத்தில் சேவகம் செய்வதை விட்டுவிட்டு, வேறு எங்கேனும் தனக்குரிய உத்தியோகத்தை பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். ஆகவே, இவ்வேற்பாட்டிற்கேற்ப நமது மௌலானு தமது உத்தியோகப் பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டுத் தமது மூத்த சகோதரரிடம் சிலகாலம்வரை "விருந்தாளி"யாக இருந்தார். இவ்விடைக்காலத்தில், அலகபாத் ஸர்வ கலாசாலையில் சட்டப் பரீக்ஷைக்கும் சென்ருர். ஆனல், ஒரு ஸப்ஜக்டில் அவர் தோல்வியுற்ருர். பின்னர் அவருக்கு வேறு உத்தியோகமும் கிடைத்தது.

கன்வர் பத்தஹ்சிங் :—நமது மௌலானு அவர்கள் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் பரோடா சமஸ்தானத்து குமார ராஜா கன்வர்பத்தஹ்சிங்குடன் அதிகமான அன்பும் சிநேகமும் ஏற்பட்டது.

நமது மௌலானாவைத் தமது சமஸ்தானத்துக்கு அழைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் பரோடா சமஸ்தானத்து குமாரராஜாவுக்கு இருந்து வந்தது. மேலும், அவர் ராம்பூர் சமஸ்தான உத்தியோகத்திலிருந்து விலகிவிட்டதால் அச்சமயம் அவரை அழைத்துக்கொள்வதற்கு நல்ல தருணமாகவும் இருந்தது. ஆகவே, குமாரராஜா தமது தந்தை பரோடா மகாராஜாவிடம் மௌலானாவைப்பற்றிப் பிரஸ்தாபித்து அவரை எவ்விதத்திலாவது சமஸ்தானத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்தார்.

பரோடாவில் உத்தியோகம் : குமாரராஜா நமது மௌலானாவை அதிக அன்புடன் அழைத்து, அபினி இலாக்காவில் ஒரு உயர்தர உத்தியோகப் பதவியை அளித்தார். அவருக்கு உள்நாட்டுப் பாஷை தெரியாததால், அவர் அப்பாஷையைக் கற்றுக்கொள்ளும்வரை, விண்ணப்பம், மனு முதலியவைகளில் சுயமே எவ்விதத் தீர்ப்பும் செய்யக்கூடாது என்றும், அப்பாஷை தெரிந்த மற்றொரு உத்தியோகஸ்தரும் அந்தத் தீர்ப்பில் கையொப்பமிட வேண்டும் என்றும் ஒரு நிபந்தனையை மகாராஜா ஏற்படுத்தினர். நமது மௌலானா தமக்கு அந்நாட்டுப் பாஷை தெரியாததாலேயே இந்த நிபந்தனை ஏற்பட்டது என்பதை நன்குணர்ந்து, அந்நாட்டு பாஷையைக் கற்றுக்கொள்ளும் விஷயத்தில் முக்கிய கவனம் செலுத்தி, சில மாதங்களுக்குள் விண்ணப்பம், மனு முதலியவைகளைத் தாமே நேரில், பிறர் உதவி இன்றிப் படித்தறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவ

ராகி விட்டார். ஆதலால், இந்நிபந்தனை பின்னர் அகற்றப்பட்டது.

மௌலானாவின் உத்தியோகத் திறமை:—அவர் இவ்வுத்தியோகப் பதவியை ஏற்றபின், தமது திறமையைக் காண்பிக்க ஆரம்பித்தார். ஏறக்குறைய ஏழுவருஷ காலம் அந்தச் சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்தார். உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டது முதல் 4—5 வருஷங்களுக்குள் சமஸ்தான வரும்படி அவரது இலாக்காவில் மாத்திரம் 17 லக்ஷம் ரூபாய் முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிகரித்தது. இவருடைய இலாக்காவின் வரவில் 100-க்கு 15 விகிதம் லாபமாக இருந்தது. அவரின் இத்திறமையான ஊழியம் மகாராஜாவைப் பரவசப்படுத்திற்று. அவர்பால் மகாராஜாவுக்கு அதிகப் பற்றும், மதிப்பும் உண்டாயிற்று. ஆகவே, சமஸ்தானத்திலுள்ள நௌஸாரி ஜில்லாவுக்கு மௌலானாவைக் கமிஷனராக நியமித்தார்.

நௌஸாரி கமிஷனர்:—இப் பெரிய பதவியில் அவர் இன்னும் அதிகத் திறமையாகவும், சிரத்தையாகவும் தமது கடமையைச் செய்தார். இங்கு அவர் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அஃதாவது, அதிகக்கிரயங் கொடுத்துப் பணக்காரர்கள் பூமியை வாங்கி வந்ததால், ஏழைகள் அவைகளை அனுபவிக்கமுடியவில்லை. ஆதலால், இவ் வழக்கத்தை அவர் அடியுடன் ஒழித்தார். இதனால், அவருக்கு ஏழைப் பிரஜைகளிடம் அதிகச் செல்வாக்கும், மதிப்பும் ஏற்பட்டது. ஜனங்கள் அனைவரும் இவர்பால் அதிகப்பற்றும் ப்ரீதியுங் கொண்டனர்.

நாணயம் :—அவர் உத்தியோகம் வகித்துவந்த காலத்தில் அதிக நாணயத்தையும நம்பிக்கையையும் காண்பித்தார். ஒருமுறை ஒரு கண்டிராக்ட் சம்பந்த மாக ஒரு பெருந் தொகை வெகுமதியாக அளிக்கப் பட்டது. இது இச்சமஸ்தானத்தில் பூர்வீக காலந் தொடுத்து நடைபெற்று வரும் வழக்கம் என்றும், எல்லா உத்தியோகஸ்தர்களும் இவ்வித வெகுமதிகளை ஏற்றுக்கொள்வது வழக்கம் என்றும், அவருக்குக் கூறப்பட்டது. ஆனாலும், அவர் அதனை ஏற்றுக் கொள்ள கண்டிப்பாக மறுத்துவிட்டதுடன், இதர உத்தியோகஸ்தர்களையும் இவ் வழக்கத்திலிருந்து விலகி இருக்கும்படி நிர்ப்பந்தித்தார்.

நௌஸாரியின் கமிஷனராக இருந்தபோது பணம் படைத்த பாரஸீகர்களின் தூதுவக் கூட்டம் ஒன்று மௌலானா அவர்களின் சமூகத்தில் வந்து "நிர்ப்பந்த மாகப் பூமியை விலைக்கு வாங்கும் பூர்வீக வழக்கத்தை மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டு"மென்று கேட்டுக் கொண்டது. அதற்கு நமது மௌலானா அவர்கள் "ஒரு காரியம் அக்கிரமம் என்று வெளியான பின்னர் அதை அலக்ஷியமாக விட்டுவிடுவது என்னால் ஆகாத காரியம்" என்று கூறிவிட்டார்.

பேர்ஸனல் அஸிஸ்டன்ட் :—இதற்குப் பிறகு, மௌலானா முஹம்மதுஅலி, பரோடா சமஸ்தானப் பட்டத்து இளவரசர் கன்வர்பத்தஹ்சிங்குக்குப் பேர்ஸனல் அஸிஸ்டன்ட் பதவியில் நியமிக்கப்பட்டார். இவ்வுத்தியோகத்திலும் அவர் பல நன்மைகளைச் செய்

தார். பட்டத்து இளவரசர் கன்வர்பத்தஹ்சிங் மதுபானம் அருந்துவதில் அதிகப் பிரியங் கொண்டவர். இதைப்பற்றி இளவரசரிடம் எவ்வளவோ கூறியும் அவர் அதை விட்டுவிட முடியவில்லை. எனவே, நமது மௌலானா இளவரசரின் அத்தியந்த நண்பராக இருந்ததால், தமது செல்வாக்கை உபயோகித்து, இளவரசரின் இக்கெட்ட பழக்கத்தை அகற்றிவிட முடியும் என்பதற்காகவே அவர் பெர்ஸனல் அஸிஸ்டன்டாக நியமிக்கப்பட்டார். இக் கெட்ட பழக்கம் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால், அப்பால் அது அவரது 'கட்டையுடன்' என்பதற்கிணங்க, கடைசியாக, கன்வர்பத்தஹ்சிங், மதுபானத்தின் காரணமாகவே மரணமடைந்தார்.

எழுத்து வேலை:—நமது மௌலானாவின் பிறவிக் குணம் அவர் ஒரு சமஸ்தானத்தில் அபினி இலாக்காவில் உயர்தர உத்தியோகத்தையோ, கமிஷனர் பதவியையோ வகித்துத் தமது காலத்தைக் கடத்துவதற்கு அனுசரணையாக இருக்கவில்லை. இவரைக்கொண்டு அநேக அருமையான காரியங்களைச் செய்விக்கவேண்டும் என்பது இறைவன் சித்தமாக இருந்தது. ஆகவே, இவர் தம்முடைய அபார வேலைகளிலும் சொற்ப நேரத்தை ஒதுக்கிவைத்து இடையிடையே தேசீய, சமூகப் பிரசினைகளைப் பற்றி "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகைக்கு வியாசம் எழுதி வந்தார்.

உத்தியோகத்தில் வெறுப்பு:—அவருக்கு சமஸ்தான உத்தியோகத்திலிருந்து, பிரிட்டிஷ் கவர்ன்மென்ட் உத்தியோகத்தில் வந்துவிட வேண்டுமென்ற எண்ணம்

முன்னரே இருந்தது. இது சம்மந்தமாக ஸிம்லாவி லுள்ள சில பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களும் அவருக்குத் தக்க உத்தியோகப் பதவியை அளிக்கச் செய்வதாக வாக்களித்திருந்தார்கள். அன்றியும், சமஸ் தான உத்தியோக காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள், அவரை உத்தியோகப் பதவி மோகத்தை அடியுடன் வெறுக்கும்படிச் செய்தன. ஆதலால், அவரது மனம் உத்தியோகப் பதவியில் செல்லவில்லை. ஆகவே, அவர் தமக்காகத் திறந்து வைத்திருந்த பெரியதொரு மைதா னத்தை நாடினார்.

உயர்தர உத்தியோகஸ்தர்:—அவர் எண்ணம் மேற்கண்ட விதமாக இருந்துகொண்டிருந்தபோது, எதிர் பாராத வண்ணமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதனால் அவருக்கு உத்தியோகம் பார்ப்பதே வெறுப் பாக ஏற்பட்டு விட்டது. இதைப்பற்றி அவர் தமது பழைய நண்பரான மீர்மஹ்பூஜ் அலி சாகிபுக்கு நௌஸாரியிலிருந்து பின் வருமாறு எழுதினார்:—

"நான் என்னை உயர்தரபதவியில் உயர்த்தவேண்டு மென விண்ணப்பித்துக் கொண்டேன். சால்ஜாப்பு சொல்லப்பட்டுக் கொண்டே வந்தது. ஆனால், இந்த சமயத்தில் மிஸ்டர் தட் என்பவர் வந்தார். அவரது அபிப்பராயம் என்னை உயர்த்துவதற்கு விரோதமாக இருந்தது. ஆதலால், எனக்கு இப் பிரசினையைப்பற்றி எவ்வித மறுமொழியும் கொடுக்கப் படவில்லை. இது சமயம் "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் என் னுடைய சில வியாசங்கள் வெளி வந்தன. அவைகளில்

முஸ்லிம்களின் பாத்தியதைகளைப் பற்றி வற்புறுத்தப் பட்டிருந்ததுடன், மிஸ்டர் கோக்கலேயின் ‘ நண்பனைப் போல் நடித்துப் பகைமை பாராட்டும்’ தன்மையும் வெளிப் படுத்தப் பட்டிருந்தது. இதன் பேரில் மிஸ்டர் தட், என்மீது அதிக அதிருப்தியடைந்து என்னிடம் இவைகளுக்குச் சமாதானம் கூறும்படி கேட்டார். நான் அவருக்குத் தக்க பதில் கொடுத்தேன். என்னை மடக்க அவரால் முடியவில்லை. கௌன்சிலில் என்னுடைய பதில் சமர்ப்பிக்கப்பட்டது. பற்பல சமூகத்தாரிடத்திலும் வெறுப்பு உண்டாக்கத் தகுந்த வியாசங்களை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எழுதப்படாதென்று உத்தியோகஸ்தர்களுக்கு இரகசிய சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்ததைத் தவிர, வேறு ஒரு பலனும் ஏற்படவில்லை. செக்ரடேரியட்டில் ஏதேனும் நல்ல உத்தியோகம் கொடுக்கச் செய்ய, ஸர். ஹாரால்டுஸ்வேர்ட் முயற்சி செய்து கொண்டிருக்கிறார். நான் இஷ்டப்பட்டால் ஒருவேலையும் செய்யாமலிருந்து விடலாம். ஆனால், சோம்பேறியாக இருக்க முடியவில்லை. என்னுடைய இப்பழக்கத்துக்கு நான் என்ன செய்ய முடியும்? ஹராமான உணவைச் சப்பிடவும் சம்மதமில்லை, வேறொரு இலாக்காவில் சென்று வேலை பார்க்கலாம் என்றும் எண்ணமுண்டாகிறது. வேலைக்காக வேண்டி, மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால், இந்த சமஸ்தானத்தில் வெறுப்பு உண்டாகிவிட்டது. உண்மையில் உத்தியோகம் பார்ப்பதுதான் அதிக வெறுப்பாக இருக்கிறது.”

காம்ரேட் பத்திரிகை :—இறுதியாக உத்தியோகம் பார்ப்பதிலேயே தமக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிவித்துவிட வேண்டும் என்ற எண்ணம் மிகைத்தது. ஆகவே, 10-1-1910-ம் வருஷத்தில் மேற்கண்ட கடிதத்தை மீர் மஹ்பூஜ்அலி சாகிபுக்கு அவர் எழுதினார். பின்னர், அவ் வருஷ இறுதிக்குள் அவ் வுணர்ச்சி அவருக்கு உறுதிபட்டு இனி உத்தியோகம் பார்ப்பதில்லை, பத்திரிகையை ஆரம்பித்து அதன் மூலம் தேசத்துக்கும், சமூகத்துக்கும் தொண்டு செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். எனவே, லக்ஷ்மணபுரி மீர் மஹ்பூஜ் அலி சாகிப் இவ்விஷயமாக ஒரு திட்டம் தயார் செய்தார். அத் திட்டத்தின்படி, கல்கத்தாவில் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்றும், அதற்கு நமது மௌலானா ஆசிரியராக இருக்க வேண்டும் என்றும், மீர்மஹ்பூஜ்அலி சாகிப் அதற்கு மானேஜராக இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்தனர். இவ்வாலோசனையில் மௌலவி அஜீஸ் மிர்ஜாவும் சேர்ந்திருந்தார்.

ஜாவ்ரா சமஸ்தான மந்திரிப்பதவி :—அவர் உத்தியோக சேவகத்தை அடியுடன் வெறுத்து, அதைவிட்டு வெளியேறிவிட விரும்பினார். ஆனாலும், உத்தியோக வர்க்கத்தார் அவரை விட்டனரில்லை. அடிஅடிதோறும் தடைகளைச் செய்யத் தலைப்பட்டனர். அக்காலத்தில் அவருக்கும் ஸர். மைக்கேல் ஒட்வியருக்கும் விசேஷச் சம்பந்த மிருந்துவந்தது. அதுபோழ்து, அவர் பஞ்சாபில் ஒரு உயர்தர உத்தியோகப் பதவியிலிருந்தார்.

ஜாவ்ரா சமஸ்தான நவாப் நமது மௌலானுவிற்குத் தமது சமஸ்தானத்தில் மந்திரிப்பதவி அளிக்க விரும்பினர். ஸர். மைக்கேல் ஒட்வியர் நவாபின் அபிப்பராயத்தை ஆதரித்ததுமல்லாமல், அப்பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு நமது மௌலானுவை வற்புறுத்திக்கொண்டு மிருந்தார். மற்ருெருபக்கல், போப்பால் பேகம் ஸாஹிபா அவர்கள் நமது மௌலானுவிற்குத் தமது சமஸ்தானத்தில் சீப் செக்ரடரி பதவி அளிக்க விரும்பினர். அவர் உத்தியோகம் பார்ப்பதையே அடியுடன் வெறுத்துக்கொண் டிருந்தாராதலால், தமக்கு அளிக்கப்பட்ட இவ்விரு உத்தியோகப் பதவி களில் எதையும் ஏற்றுக்கொள்ள மறுத்து "காம்ரேட்" பத்திரிகையை ஆரம்பித்து நடத்தும் ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர்.

ஊழியத்துக்கு வெகுமதி :—அவர் ஏழு வருஷ காலம் வரை பரோடா சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்தபோது மிகவும் கௌரவமாகவும், கண்ணியமாக வும் தமது கடமையைச் செய்துவந்தார். பிறகு, அவ்வுத்தியோகத்தை விட்டு விலகும்போது, அவர் ஆற்றிய அருந் தொண்டுகளுக்குப் பிரதிபலனுக அவருக்குப் பென்ஷன் ஏற்படுத்துவதற்குச் சட்டம் இடங் கொடுக்கவில்லை. ஆகவே உயர்தர உத்தியோ கஸ்தர்கள் இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து அவரது அருந்தொண்டுகளைப் பாராட்டுவதற்கு அறி குறியாக அவருக்கு ஏழு ஆயிரம் ரூபாய்களை வெகுமதி யாக அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

ஆனால், அவர் இந்தத் தொகையைப் பெற்றுக் கொள் வதற்காகச் சுவயமாக எவ்வித முயற்சியும் செய்யவில்லை.

"ஸச்" பத்திராதிபர் அபிப்பிராயம் :—"காம்ரேட்" பத்திராதிபருக்கு உலக முன்னேற்றத்துக்கான சகல வழிகளும் தயாராகத் திறந்திருந்தன. இந்தியாவில் மட்டுமல்ல, இங்கிலாந்திலுள்ள பத்திரிகைத் தொழி லில் மிகவும் உயர்தரமான ஆசிரிய பீடங்கள் அவருக் காக காலிசெய்து வைக்கப்பட்டிருந்தன. சர்க்கார் உத்தியோகப் பதவிகளில் உயர்தரமான அந்தஸ்துக ளெல்லாம் அவரை வழிபார்த்துக்கொண் டிருந்தன. கண்ணியம், செல்வம், செல்வாக்கு, பெருமை ஆகிய வைகளெல்லாம் அவரது காலின்கீழ் விழுந்தன. ஆனால், இறைவனின் பக்தராகிய இவர் அவனையன்றி வேறு பக்கம் கண்ணெடுத்துப் பார்ப்பதைக்கூடப் 'பாபம்' எனக் கருதி சகல பந்தத்துவத்தையும் துறந்து ஒரு வனுக்காகவே ஆகிவிட்டார்."

இரண்டாம் அத்தியாயம்

'காம்ரேட்' பத்திரிகை

அநேக முயற்சிகளுக்கும் சிரமங்களுக்கும் பின்னர் கல்கத்தாவின் ராஜீய வானத்தில் "காம்ரேட்" என்ற சூரியன் உதயமாயினன். அப்பத்திரிகையை வாங்குவதற்காக கைகள் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டிருந்தன. அப்பத்திரிகையின் அலங்காரமான பக்கங்களில் அளிக்கப்பட்டிருந்த இன்பங்களை யடைவதற்காகக் கண்கள் வழி பார்த்த வண்ணமாக இருந்தன. ராஜீய உலகில் விலைமதிக்கமுடியாத இவ்வரும் பொருள் எங்கு நமக்குக் கிடைக்காமல் தவறி விடுகின்றதோ வென்ற எண்ணத்தால் ஜனங்கள் அதை வாங்குவதற்காக ஓடிவந்து கொண்டிருந்தனர். அப்பத்திரிகையைப் படிக்க வேண்டுமென்ற இவ்வாவலும் பிரியமும் இந்தியாவிலுள்ள "கருப்பர்"களில் மாத்திர மில்லாமல், இங்கிலாந்திலுள்ள "வெள்ளையர்"களிலும் இருந்து கொண்டிருந்தது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆசைப்பட்டனர். பெரிய மனிதர்கள் எனப்படுபவர்கள் இதைப் படிக்கப் பிரியங்கொண்டனர்.

மீர் மஹ்பூஜ் அலி சாகிப்:—இப்பத்திரிகைக்கு மானேஜராக இருந்த மீர் மஹ்பூஜ் அலி சாகிப் இப்பத்திரிகையை ஆங்கிலேயர்கள் வாங்கிப்படித்ததைப்பற்றி "ஆங்கிலேயர்களில் ஒரு பெருந்தொகையினர் 'காம்ரேட்' பத்திரிகையை வாங்கிப்படித்தனர். அப்பத்திரிகையில் வெளியிடப்படும் வியாசங்களின் மீது காதல்

கொண்டிருந்தனர். அவைகள் எழுதப்படும் முறையை அவர்கள் சிலாகித்துப் போற்றிக்கொண்டிருந்தார்கள்" என்பதாகக் கூறி இருக்கிறுர்.

லேடி ஹார்டின்ஞ்:—அக்காலத்தில் இந்திய இராஜப்பிரதிநிதியாகவும், கவர்னர் ஜனரலாகவும் இருந்த ஹிஸ் எக்ஸ்லென்ஸி லார்டு ஹார்டின்ஞ்சு அவர்களின் வாழ்க்கைத் துணைவி லேடிஹார்டின்ஞ், அடிக்கடி டெலிபோனில் அழைத்து "காம்ரேட் பத்திரிகை அச்சிடப்பட்டுத் தம்மிடம் எப்பொழுது வந்து சேரும்" என்று விசாரித்துக் கொண்டிருந்தார்.

மௌலானு முஹம்மது அலி ஜௌஹர்:—"காம்ரேட்" பத்திரிகைக்கு தேசத்தில் ஏற்பட்ட ஆதரவைப் பற்றி அதன் ஆசிரியரான நமது மௌலானு முஹம்மது அலி ஜௌஹர் "காம்ரேட் பத்திரிகை அரசாங்க உத்தியோகஸ்தர்களில் ஒரு பெருங்கூட்டத்தினரை தம்பக்கல் ஈந்துக் கொண்டிருந்தது. இந்திய வைசிராயாக இருந்த லார்டு ஹார்டின்ஞ்சுக்கு இப்பத்திரிகையின் ஒரு பிரதி மரியாதைக்காக அனுப்பிவைக்கப்பட்டுக்கெண்டிருந்தது. அவர் இப்பத்திரிகையை அவ்வாரம் முழுவதும் கைதவரவிடாமல் வைத்துக் கொண்டிருப்பார்" ஆதலால், லேடி ஹார்டின்ஞ்சு பிரத்தியேகமாகப் படிப்பதற்காக சந்தா செலுத்தி தனக்குப் பிரத்தியேகமாக அப் பத்திரிகை கிடைக்கும்படிச் செய்து கொண்டார். அக்காலத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தவரும், வைசிராய் தம்பதிகளின்விருந்தாளியுமான ஜெர்மானி தேசத்துப் பட்டத்து இளவரசரும்

ஆதலின், அவர் தன்னந்தனியே பத்திரிகையை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. துணை ஆசிரியர்களை நியமித்துக்கொள்ள அவர் பகீரதப் பிரயத்தனம் செய்தார். ஆயினும், தன் அபிப்பராயத்தை ஒட்டிய அம்சமுள்ள துணை ஆசிரியர்கள் அகப்படுவது சிரமமாக இருந்தது. ஆதலால், "காம்ரேட்" பத்திரிகை சரியான காலத்தில் பிரசுரம் செய்யப்படாமல் அடிக்கடி தாமதித்தே பிரசுரிக்கப்பட்டது. அவர் தம்மாலான சகல முயற்சிகளையும் செய்தார். அதனுடைய பழைய அந்தஸ்து குறையக்கூடாது, அதில் பற்பலவிதமான சுவைகளிருக்க வேண்டும், குறித்த காலத்தில் வெளி வரவேண்டும் என்ற விஷயத்தில் அவர் அதிகம் பாடுபட்டார். ஆனால், தொடர்ச்சியாக நோய் வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிற ஒருவர், ஒற்றுமை மகாநாடுகளில் கலந்து கொண்டும், ஹிந்து முஸ்லிம் கலவரங்களை அடக்கிச் சமாதானப்படுத்துவதிலும், காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்வதிலும், கிலாபத் கமிட்டியைப் பலப் படுத்தி அபிவிருத்தி செய்வதிலும், தப்லீக் தன்ஜீம் என்ற வலைக்குள் முஸ்லிம்களைச் சிக்கவைக்கும் முயற்சியினின்று முஸ்லிம்களை விடுவிப்பதிலும், தேசிய சமூகக் காரியங்கள் ஒவ்வொன்றிலும் முன்னணியில் நின்று, இந்தியா முழுவதையும் சுற்றி வரவேண்டிய பொறுப்பிலும் ஈடுபட்ட ஒருவர், உதவி ஆசிரியரில்லாமல் பத்திரிகையை நடத்துவதாயின், அதில் பழைய உயரிய சிறந்த அம்சம் கொஞ்சமும் குறையாமல் குறித்தகாலத்தில் பிரசுரிக்கப்படவேண்

டும் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியமாகும் என்று எண்ணினர்.

சுய முயற்சி:—இத்தனை அல்லல்களுக்குள்ளிருந்து அவர் தம்மைப் பொறுத்தவரை அஜாக்கிரதையாக இருக்கவில்லை. ஒரு சிக்கலான பிரசினையைத் தீர்த்து வைத்தல், ஏதேனும் மகாநாடுகளுக்கு அக்கிராசனம் வகித்தல் முதலிய காரியார்த்தமாக வெளியிடங்கள் செல்ல நேர்ந்து, 'காம்ரேட்' பத்திரிகையை வெளியிட வேண்டிய காலமும் தலைமீது வந்தெய்துமாயின், அங்கு அவர் இரவில் நித்திரையை நீக்கி, பத்திரிகைக்கு 'லீடிங் ஆர்ட்டிகள்" எழுதுவார். பகலில் வேலை செய்த சிரமத்தையும் பார்க்கமாட்டார். 1924-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் பெல்காமில் காங்கிரஸ் மகாசபை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 'காம்ரேட்' பத்திரிகை வெளியிடப்படவேண்டிய தேதியும் வந்துவிட்டது. தந்தியின் மூலம் லீடிங் ஆர்ட்டிகளான வியாசத்தை அனுப்பினர். ஆனல், அங்குள்ள "பாபூ" அவர்களின் ஆங்கில பாஷைத் திறமையும், இதர சில "பெரியார்களின்" ஒத்தாசையும் கூடியதால் பிரசுர ஆலயத்திலேயே வியாசம் தலைகீழாகப் புறட்டப்பட்டுவிட்டது. பிறகு, "காம்ரேட்" பத்திரிகை வெளிவரும்போது பார்த்தால் அவர் அனுப்பிய வியாசம் நீங்கலாகச் சகல வியாசங்களும் அதில் இருந்தன. மாற்றப்பட்ட வியாசம் தவருமல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பீ அம்மா அவர்கள் வபாத்து:—அவர் தமது மாதாவான பீ அம்மாவின் மீது அளவு கடந்த பாசங்கொண்

டிருந்தார் என்பதை எல்லோரும் அறிவர். அவ்வம்மை யாருக்கு ஏதேனும் அற்பக்கஷ்ட மேற்பட்டால்கூட அதை அவர் சகிக்கமாட்டார். ஆனால், பொறுப்பை உணர்ந்து கடமையை நிறைவேற்றவேண்டும் என்ற உணர்ச்சியால், அவர் தமது அருமை அன்னையார் அவனி துறந்து அவ்வுலகம் சென்ற போழ்து, ஜனங்கள் மௌலானாவைக் கண்டு துக்கம் விசாரிக்க வந்து கொண் டிருந்தனர். இறந்துபோன தனது மாதாவின் உடலத்தை நல்லடக்கம் செய்யவேண்டிய அலுவல்களும் ஒரு பக்கம் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இந்நிலைமையில் அவர் ஒரு மூலையிலிருந்து தமது தாயாரின் பிரிவாற்றாமை யால் வருந்தி அழுதுகொண்டே, குறித்த நேரத்தில் 'காம்ரேட்' பத்திரிகை வெளிவரவேண்டு மென்பதற் காக அதன் புரூப்களை பார்த்துத் திருத்திக் கொண்டு மிருந்தார்.

நிறுத்தம்:—1926-ம்வருஷத்தில் நமது மௌலானா வின் ஸ்தூல நிலைமை மிகவும் சீர்கேடடைந்துவிட்டது. இவ்விதமான கஷ்டம் ஏற்பட்ட போது, இனி தக்க துணை ஆசிரியர் கிடைக்கும் வரை பத்திரிகையை வெளி யிடுவதில்லை என்று முடிவு செய்து பத்திரிகையை நிறுத்திவிட்டார். அப்புறம் அவருக்குப் பிடித்தமுள்ள துணை ஆசிரியரை அவர் கண்டு கொள்ளச் சந்தர்ப்பம் வாய்க்கவுமில்லை. மூன்றும் முறையாக பத்திரிகை வெளி யிட நேரம் வாய்க்கவுமில்லை.

———

மூன்றும் அத்தியாயம்

முஸ்லிம் சர்வகலாசாலே

ஸர். ஸையத் அஹ்மதுக்குப் பின்:—ஸர். ஸையத் அஹ்மது கானின் ஜீவிய காலத்தில் "மத்ரஸத்துல் உலூம்" என்ற பெயரில் இருந்த அலிகார் காலேஜ் அவரது காலம் வரை விசேஷித்த ஒரு முறையிலும் அந்தஸ்திலும் கம்பீரத்திலும் நடைபெற்றுவந்தது. அவருடைய மரணத்துக்குப் பின் அதில் பொறுப்பேற்றுக்கொண்ட அவரது பிரதிநிதிகள் அவருடைய இவ்ஸ்தாபனத்தை நிலே நிறுத்தி, உத்தேச பலன் அடைவதற்காகத் தங்களாலான சகல முயற்சிகளேயும் செய்தனர். தங்களுடைய அருமை வாழ்வேயும் கூட அதற்காக அர்ப்பணஞ்செய்தனர். தங்களுடைய சொந்த லாபத்தைக் கொஞ்சமும் கருதாமல் உழைத்தனர். ஆயினும், ஸர். ஸையத் அஹ்மதுகானுக்குப் பின் அந்த ஸ்தாபனத்துக்கு மதிப்புக்குறைய ஆரம்பமாகிவிட்டது என்பது மறைக்கமுடியாத உண்மையாகும். அக்காலேஜுக்கு இருந்த அந்தஸ்தும் செல்வாக்கும் மதிப்பும் அவருக்குப்பின் உண்மையில் இருக்கவில்லே.

ஆங்கில உத்தியோகஸ்தர்கள்:—நமது மௌலானுவிற்கு முதல் முதலாக எதிர்ப்புச் செய்ய ஆரம்பித்தவர்கள் அலிகார் கல்லூரியில் இருந்த ஆங்கிலேய உபாத்திமார்களேயாவர். ஆதலின், அவர்களுக்கு அங்கிருந்த செல்வாக்கைப் பற்றிச் சிறிது விளக்குவம்.

ஆங்கிலேய உபாத்திமார்கள் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்பவர்கள். அவர்கள் ஆளும் ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தனராதலால், அலிகார் காலேஜில் நிர்வாக சம்பந்தமான காரியங்களில் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி ஆங்கிலேய உபாத்திமார்கள் குறைகூறி முறையிட்டு, அதன் பேரில் காலேஜ் டிரஸ்டிகளுக்கும் ஆங்கிலேய உபாத்திமார்களுக்குமிடையில் கொஞ்சம் தகராறு ஏற்பட்டாலும், அக்காலத்திலிருந்த கவர்னர் அதில் தலையிடுவது வழக்கம். இரண்டாவதாக இந்த உபாத்திமார்களால் அலிகார்காலேஜுக்கு நல்ல கீர்த்தியும் இருந்தது. ஆகவே, அவர்கள் காலேஜ் நிர்வாக விஷயங்களில் தலையிடுவதற்கு உரிமை கொண்டாடி வந்தனர். அவர்கள்பால் அக்காலத்திலிருந்த டிரஸ்டிகளுக்குக் கொஞ்சம் அச்சமுமிருந்தது.

மிஸ்டர் ஆர்ச்சு போல்ட்:—அக்காலத்தில் மிஸ்டர் ஆர்ச்சு போல்ட் என்பவர் அக்கல்லூரியின் பிரின்சிபாலாக இருந்தார். காலேஜ் நிர்வாக சபைக் காரியதரிசி கூறும் கட்டளைகள், ஆலோசனைகளை அவர் லக்ஷியம் செய்வதில்லை. அதை ஒரு விளையாட்டாகவே அவர் மதிப்பது வழக்கம். ஆனால், அது போழ்து காலேஜ் நிர்வாக சபைக் காரியதரிசியாக இருந்த நவாப் வக்காருல் முல்க் ஸர். ஸையத் அஹ்மதுகான் மர்ஹூம் அவர்களது உண்மைப் பிரதிநிதியாகவும், அஞ்சா நெஞ்சம் படைத்தவராகவுமிருந்ததால், பிரின்சிபாலின் இவ்வடங்காமையைக் கண்டித்து, தன் உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வற்புறுத்தினர். காலேஜ் பிரின்சிபால்

ஆங்கிலேயராக இருந்தமையால் அவர் இவ்விஷயத்தை கவர்னரின் கவனத்துக்கும் கொண்டுவந்தார். கவர்னர் இவ்விஷயத்தில் தலையிட்டாராயினும், நீதத்தையும் நியாயத்தையுமே அவர் அடிப்படையாகக் கொண்டிருந்தார். ஆதலால், நவாப் வக்காருல் முல்க் தமது கண்ணியத்துக்குக் குறைவு வரத்தக்க காரியத்தில் இணங்கவே இல்லை. இது 1909-ல் நிகழ்ந்தது. இவ்விதமாக அலிகார் காலேஜின் ஆங்கில உபாத்திமார்களுக்கு கவர்ன்மெண்ட் ஊழியர்களின் உதவி கிடைப்பதற்கு இடமிருந்ததால் நிர்வாக விஷயத்தில் இவர்கள் தலையிட்டுக்கொண்டே இருந்தார்கள்.

மற்றொரு சங்கடம்:—அலிகார் கலாசாலை டிரஸ்டிகளுக்குள்ளும் கக்ஷிப் பிரிவினையும் அதிகார ஆசையும் இருந்து கொண்டிருந்தது. ஒரு கக்ஷியாரை ஒழித்து மற்றொரு கக்ஷியார் நிர்வாக விஷயத்தில் ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் முனைந்து நின்றனர். உண்மையான ஊழியஞ் செய்ய வேண்டுமென்று ஒருவரும் கருதவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் ஸ்திரப்படுத்திக் கொள்ள விரும்பினர்.

பழைய மாணவர் சங்கம்:—பழைய மாணவர்களுக்குள் ஒற்றுமையும் சம்பந்தமும் இருக்கவேண்டும், அவர்கள் அலிகாருக்கு ஊழியஞ் செய்யச் சந்தர்ப்பம் ஏற்படவேண்டும், அதற்கான சந்தர்ப்பத்தை உண்டு பண்ணவேண்டும், அவர்கள் அடிக்கடி அலிகாருக்கு வரவேண்டும், தங்களுக்குக் கல்வி யறிவளித்த கலா

சாலையின் முன்னேற்றத்தையும் அதற்கேற்படுகிற தேவைகளையும், சங்கடங்களையும் நேரில் பார்த்து, அதற்கு ஊழியஞ்செய்யவேண்டும் என்ற உணர்ச்சி அவர்களது மனத்தில் தோன்றவேண்டும் என்பதற்காகவே பழைய மாணவர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டது.

இப்படிப்பட்ட சங்கமுங் கூட சுயநலமிகளின் 'கோதா'வாக (குஸ்தி மைதானமாக) ஆக்கப்பட்டுவிட்டது. இப்பழைய மாணவர் சங்கம் எவ்வகுப்பார் கையிலிருக்கிறதோ அவ்வகுப்பாருக்குக் காலேஜில் விசேஷச் செல்வாக்கும் அதிகாரமும் இருக்குமென்றும், இவர்கள் தாம் காலேஜ் டிரஸ்டிகளிலும் விசேஷ மதிப்புப் பெற்றவர்களாக இருப்பார்களென்றும், இவர்களுக்குக் காலேஜுக்காக அதிகம் ஊழியஞ் செய்யச் சந்தர்ப்பம் வாய்க்குமாதலின், இவர்களுக்குத்தான் தேசத்தில் விசேஷ அந்தஸ்து இருக்குமென்றும் கருதப்பட்டது.

இம்மாதிரியான எண்ணம், பிளவுக்கும் வேற்றுமைக்கும் விதை விதைத்தது போலாயிற்று. ஆகவே, இச்சங்கத்தைக் கைப்பற்றுவதற்காக ஒவ்வொருவரும் முயற்சி செய்ய ஆரம்பித்தனர்.

டிரஸ்டிகளின் நிலைமை :—மூன்றாவதாக, டிரஸ்டிகளின் நிலைமை நாளுக்கு நாள் கேவல ஸ்திதிக்கு வந்து கொண்டிருந்தது. இக்காலேஜின் டிரஸ்டிப் பதவியானது ஒரு விசேஷ கௌரவமாகக் கருதப் பட்டது. ஆதலின், உத்தியோகப் பற்றற்றவர், உத்தியோகப் பற்றுள்ளவர் ஒவ்வொருவரும் டிரஸ்டியாகத்

தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்ற ஆசையுள்ளவர்களாக இருந்தனர். இப்பெரிய பதவியில் தெரிந்தெடுக்கப்பட்டால் தான் அவர்களுக்குச் சமாதானம் ஏற்படுவது வழக்கம். இதில் டிரஸ்டியாகத் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டால் அவர்களை மரண பரியந்தம் அந்தப் பதவியை விட்டு நீக்க மற்றவர்களால் முடியாது; ஆதலால் டிரஸ்டியாகத் தெரிந்தெடுக்கப்பட்டபின் அவர்கள் காலேஜுக்கு ஊழியம் செய்து அந்தப் பதவி தம்மை விட்டுப் போய்விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற கவலை உண்டாகுவதில்லை. ஆதலின், அவர்களுக்குக் காலேஜ் ஊழியம் சம்பந்தமாக ஒருவித அலக்ஷிய புத்தியும் உண்டாகிக்கொண்டிருந்தது. இரண்டாவதாக டிரஸ்டிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமை டிரஸ்டிகளுக்கு இருந்ததால் சுயலநலங் கொண்டவர்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து டிரஸ்டியாக வந்து விடுவதற்கான வழியும் திறந்திருந்தது. ஆகவே, இந்த நிலைமையைச் சீர்திருத்த வேண்டுமென்று நமது மௌலானா முஹம்மது அலி விரும்பினர். இதனால், அவர் டிரஸ்டிகளை எதிர்க்கவேண்டியதாக இருந்தது.

முஹம்மது அலியின் சிரத்தை:—அலிகார் காலேஜின்மீது மௌலானா முஹம்மது அலிக்கு மரண பரியந்தம் சிரத்தை இருந்து வந்தது. அதற்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற ஆசை அவரது உள்ளத்தில் எப்பொழுது மிருந்துகொண்டிருந்தது. எப்பொழுதேனும் அதற்குத் தக்க சந்தர்ப்பம் கிடைக்குமாயின் அதை அவர் தவறவிடாமல் அன்பாகவும் உண்மையாக

வும் உழைத்து வந்தார். தனக்கு அறிவ அமுதூட்டி வளர்த்த தமது தாயைப்போலுள்ள இக் காலேஜுக்குச் சிறந்த கைங்கரியம் தம்மாலானவரை செய்யவேண்டுமென்ற உணர்ச்சியின் மேலீட்டால், தமது ஊழியத்தைக் காலேஜுக்குச் சமர்ப்பித்தார். நவாப் முஹ்ஸினுல் முல்க்கு, அவரைக் காலேஜிலேயே நிறுத்தி அவரிடமிருந்து ஊழியம் வாங்கவேண்டும் என்று விரும்பினுர்.

மிஸ்டர் மாரீஸன் எதிர்ப்பு:—மௌலானு முஹம்மது அலி அவர்கள் மாணவராக இருந்தகாலத்தில் அவரை அதிகப் பிரியமாகவும், அவருடைய முன்னேற்றத்தில் அதிக சந்தோஷமடைபவராகவும், மாணவராக இருந்தகாலத்தில் அவருடைய ஒரு வியாசத்தைப் பற்றி உற்சாக மூட்டிப் போற்றிப் புகழ்பவராகவுமிருந்த மிஸ்டர் மாரிஸன், தம்முடைய மாணவரின் மன நிலையை உணர்ந்தவராகவும், யூனியனில் அவர் செய்த பிரசங்கங்களில் அவரது சுயேச்சையான உணர்ச்சியைத் தெரிந்தவராகவும் இருந்ததால், காலேஜ் உபாத்திமார்களின் ஸ்டாபில் அவரையும் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நவாப் முஹ்ஸினுல் முல்கு விரும்பியதை அவர் பலமாக எதிர்த்தார். அக்காலத்தில் மிஸ்டர் மாரிஸன் காலேஜ் பிரின்சிபாலாக இருந்ததாலும், அவர் ஆங்லேயராக இருந்ததாலும், அவருடைய சொல்லுக்குத் தடை செய்வார் அலிகாரில் இருக்கவில்லை. டிரஸ்டிகளில் ஒருவர் இருவர் அவரை மதிக்காமலிருந்தாலும், அக்காலத்தில் ஐக்கிய மாகா

ணக் கவர்னராக இருந்தவர் மிஸ்டர் மாரீஸனே ஆதரித்துக் கொண்டிருந்ததால், கவர்னருக்குப் பயந்து கொண்டு அவருக்கு மாறுக நடக்கத் தைரியமில்லாத வர்களாகவே அவர்கள் இருந்தனர். ஆதலால், நவாப் முஹ்ஸினுல் முல்க்கின் விருப்பமும், மௌலானுவின் ஆசையும் இதில் ஈடேருமல் போய்விட்டன.

மௌலானு முஹம்மது அலியின் எதிர்ப்பு :—
“டிரஸ்டிகளே டிரஸ்டிகளைத் தெரிந்தெடுக்கக் கூடாது, டிரஸ்டிகளை மற்றவர்கள் தாம் தெரிந்தெடுக்கவேண்டும். டிரஸ்டிகளுக்கு அவர்கள் ஜீவியகாலம்வரை டிரஸ்டியாக இருக்க உரிமை கொடுக்கக்கூடாது. அவ்வாறு அவர் களுக்கு உரிமை அளிப்பதால் அவர்களிடம் ஊழியம் செய்யும் சக்தி குறைந்து விடுகிறது. அவர்களால் எவ் வித வேலையும் நடைபெறுவதில்லை” என்பது நமது மௌலானு முஹம்மது அலியின் அபிப்பராயம்.

இவ்வபிப்பராயம் டிரஸ்டிகளை நேருக்கு நேராக எதிர்ப்பதாக இருப்பதால், மௌலானுவை டிரஸ்டி யாகத் தெரிந்தெடுக்கப்பட விடக்கூடாது என்பது டிரஸ்டிகளின் எண்ணம். ஆதலால், இவ்விஷயத்தில் அவர்கள் முழு முயற்சியும் செய்தனர். ஆயினும், பழைய மாணவர் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட உரி மையின் மூலமாக அவர் டிரஸ்டியாகத் தெரிந்தெடுக்கப் பட்டார். ஆயினும், அவரை நிரந்தர ஜீவிய டிரஸ்டி யாகத் தெரிந்தெடுக்க டிரஸ்டிகள் முன்வரவில்லை. ஆத லால், அவர் தற்காலிக டிரஸ்டியாக இருக்கவேண்டிய தாக ஏற்பட்டது.

உத்தியோக காலத்தில் செய்த முயற்சி:—அவர் பரோடா சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்த காலத்திலும் அலிகார் காலேஜுக்கு ஊழியம் செய்வதை நிறுத்திக் கொள்ளவில்லை. அவ ரால் எவ்வளவு ஊழியம் செய்ய முடிந்ததோ அவை யனைத்தையும்செய்தார். பத்திரிகைகளில் இக்காலேஜைப் பற்றி அவர் வியாசம் எழுதியது மட்டுமல்லாமல் வேறு வகையிலும் தன்னாலானதைச் செய்தார். இது சம்பந்த மாகத் தமது நண்பர் மீர்மஹ்பூஜ் அலி சாகிபுக்கு 27—4—1910-ல் எழுதிய கடிதம் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

மீர் மஹ்பூஜ் அலி சாகிபுக்குக் கடிதம்:—"அலிகார், பெரும் ஆபத்தில் சிக்குண்டிருக்கிறது. நாதிர்ஷா வுடைய அரசாட்சியைப் போல் அங்கு ஆட்சி நடை பெற்று வருகிறது. வகாருல் முல்க் அவர்களுக்குக் பலஹீனம் அதிகமாக இருந்து வருகிறது. அஜீஸ் மிர்ஜா அலிகாருக்கு வந்திருந்தார். அவருக்குக் கிடைத் துக்கொண்டிருந்த கௌரவத்தை அவருக்குக் கிடைக் காமற் செய்வது நல்லதல்லவென்று நவாப் சாகிப் அபிப்பராயப்பட்டு, அவரை அலிகாரிலிருந்து வெளி யேற்றி விட்டார். அவர் இப்பொழுது லக்நௌவில் முஸ்லிம் லீகிற்குத் தலைமை வகித்துக் கொண்டிருக் கிறார். அஜீஸ்மிர்ஸா வருவது ஆப்தாபுக்கு (ஆப்தாப் அஹ்மது கான்) மிகவும் கஷ்டமாக இருந்தது. முஸ்லிம்லீக் லக்நௌவுக்குச் செல்கிறது என்ற செய்தி அவருக்குத் தெரிந்தபோது இந்த கௌரவ உலுத்த

ருக்கு இன்னும் அதிகக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. டில்லி முஸ்லிம் லீக் கூட்டத்திற்கு வந்தபோது இது சம்பந்தமாகக் கிளர்ச்சிசெய்ய முடிவு செய்திருந்தார். ஆனுல், அஜீஸ் மிர்ஜா முஸ்லிம் லீக் காரியதரிசியாகி லக்நௌவுக்குச் செல்கிருர் என்பதைக் கேட்டபோது வாய்பொத்தி இருந்து விட்டார். முஸ்லிம்லீக் அவரது கையைவிட்டுப் போய்விட்டது. ஆனுலும், காலேஜூம், கல்வி கான்பரன்ஸூம் முன்போலவே அவரது சக்திக்குள் கட்டுப்பட்டிருக்கின்றன. அஜீஸ் மிர்ஜாவை அலிகாரிலிருந்து பிரிப்பதை நான் பலமாக எதிர்த்தேன். இது அவருக்கும் கூடப் பிடிக்கவில்லே. இப்பொழுது அலிகார் ஆப்தாபிடம் ஐக்கியமாகிவிட்டது. இந்த நாதிர்ஷா ஆட்சியை எதிர்ப்பதற்கு 'முண்டாசு' கட்டக்கூடியவர் உமது சகோதரர் மட்டும் தான் பாக்கியாக இருக்கிருர். இவருக்குப் பின் இறைவன் தானிருக்கின்ருன். சீர்திருத்தச் சங்கம் தூங்கிக் கொண்டிருந்தவர்களேத் தட்டி எழுப்பி விட்டது. ஆனுல், எல்லா ஜனங்களிடமும் அந்தரங்க சுத்தியுமில்லே, தைரியமுமில்லே, உற்சாகமாக வேலே செய்வதற்கான ஆசை அவர்களில் மிகக் குறைவாக இருக்கிறது. இதனுல், ஆப்தாபுக்கு நல்ல வசதி கிடைத்துவிட்டது. தற்போது உமது உதவி மிகவும் அவசியமாக இருக்கிறது. இப்பொழுது நீர் முன்வந்து சில உர்து பத்திரிகைகளில் இது சம்பந்தமாக வியாசங்களெழுதினுல் மிகப் பிரயோஜனமாக இருக்கும். நான் சென்ற வருஷம் எழுதிய வியாசங்

களின் நகல்களை அனுப்புகிறேன். அவைகளில் என்னுடைய சீர்திருத்தத்திட்டம் விபரமாகத் தெரியவரும்." என்று எழுதினர்.

இதே நண்பருக்கு அவர் எழுதிய மற்றொரு கடிதத்திலுள்ள முக்கிய பாகமும் கவனிக்க தக்கதாகும். அது வருமாறு:—

மற்றொரு கடிதம்:—"காலேஜுக்கு இவ்வளவு கடுமையான ஆபத்து வந்திருந்தும் தாங்கள் இதுவரை அலிகாருக்குச் செல்லாமலிருப்பதும், அதைப்பற்றி வியாச மெழுதாமலிருப்பதும் ஆச்சரியமாக இருக்கிறது. வியாசம் எழுதுவதில் இறைவன் உமக்கு வன்மையை அளித்துளான். நான் இந்தச் சமயத்தில் அலிகார் காலேஜைப் பற்றி "டைம்ஸ் ஆப் இந்தியா"வில் ஒரு வியாசம் எழுதினேன். அவ்வியாசத்தைப் பற்றி அப்பத்திரிகையின் ஆசிரியரும் ஒரு குறிப்பு எழுதியுள்ளார். "நமது நிருபர் இது சம்பந்தமான எல்லா விஷயங்களையும் மிகவும் நீதியாக விவாதித்திருக்கிறார். ஆதலின், இதைப்பற்றி நாம் விசேஷ அபிப்பிராயம் கூற வேண்டியது மில்லை" என்று அக்குறிப்பில் சுட்டிக் காட்டியுமிருக்கிறார். இன்று ஒரு வியாசம் "பைஸா அக்பாரு"க்கு எழுதி அனுப்பி இருக்கிறேன். ஆனல், அதில் விஷயத்தைப் பற்றி விவாதிக்காமல் டிரஸ்டிகளைத் தெரிந்தெடுக்கும் சட்டத்தைச் சீர்திருத்துவதைப்பற்றி மட்டும் எழுதி இருக்கிறேன். நீங்கள் எப்பொழுது உபயோகப்படுவீர்கள்? இரண்டு மூன்று வியாசம் உருது பத்திரிகைகளுக்கு எழுதிஅனுப்பி

இதை ஆதரியுங்கள். "பைசா அக்பார்" தினசரி பதாயூனுக்கு வருவதில்லை என்றால் எனக்குத் தெரிவியுங்கள் நான் அதை அங்கு வரும்படிச் செய்கிறேன். ஆனால் 'துல்கர்னைன்' ஆபிசுக்கு அது அவசியம் வரும். அதை ஆதரிக்கும்படி அவர்களுக்கும் சொல்லுங்கள். அப்துல் ஹக்குக்கும் சொல்லுங்கள் (இவர் தற்போது உதுமானியா சர்வகலாசாலைப் புரொபஸராகவும், உருது அபிவிருத்திச் சங்கக் காரியதரிசியாகவு மிருக்கிறார்). நான் எவ்வளவு காலத்துக்குத்தான் தனிமையாக நின்று சண்டை போட முடியும்? நான் ஆயுதத்தைக் கீழே வைத்து விட்டுச் சரண்புகுந்து விடவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? நான் மெய்யாகவே களைத்துப் போனேன். இந்த வருஷத்துக்குப் பிறகு எல்லாச் சண்டைகளையும் நான் நிறுத்திவிட்டு ஒதுங்கிக் கொள்ளவும் கூடும்."

மௌலானா முஹம்மது அலிக்கு அலிகார் காலேஜின் மீது எவ்வளவு ஆழ்ந்த பற்று இருந்தது என்பதும், அக்கல்லூரியிலிருக்கிற குறைகளை அகற்றும் விஷயத்தில் அவருக்கு எவ்வளவு ஊக்கம் இருந்தது என்பதும், தம்முடைய உத்தியோக அலுவல்களுடன் அக்கல்லூரிக்கு ஊழியஞ் செய்வதற்கான நேரத்தை ஒதுக்கிவைத்து அதில் எவ்வளவு தூரம் ஈடுபட்டார் என்பதும் அதன் டிரஸ்டிகள் அதிகாரம் வகிப்பதற்காக ஒருவரை ஒருவர் எவ்வாறு போட்டி போட்டுக்கொண்டிருந்தனர் என்பதும் இக்கடிதங்களிலிருந்து நன்கு தெரியவரும்.

உத்தியோகத்திற்குப்பின்னர் "இந்த வருஷத்திற்குப்பின் எல்லா சச்சரவுகளையும் விட்டு யான் ஒதுங்கி இருந்துகொள்ளவும் கூடும்" என்று மௌலானா அவர்கள் மேலே எழுதிய ஒரு கடிதத்தில் கூறி இருப்பதற்கேற்ப அப்படியே செய்தார். அதாவது 1910-ம் வருஷத்துக் கடைசியில் தமது உத்தியோகத்தை ராஜீநாமாச் செய்துவிட்டு "காம்ரேட்" பத்திரிகையை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டார்.

இப்பொழுது அலிகாருக்கு ஊழியஞ்செய்யும் விஷயத்தில் அவருக்கு முன்னைவிட அதிகச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. தவிரவும், அவர் உத்தியோகத்தை விட்டுவிட்டு "பொதுஜன ஊழியராக" ஆகிவிட்டார். ஆதலின், அவர் அதிக சிரத்தையுடனும் அக்கரையுடனும் அலிகாருக்கு ஊழியம் செய்தார்.

ஒல்டுபாய்ஸ் (பழைய மாணவர்) சங்கத்தைப் பலப்படுத்தி நிர்மாணவேலையில் அதிக ஊக்கம் காண்பித்தார், ஒவ்வொரு கூட்டத்தின் போழ்தும் அவர் அலிகாருக்குத் தவறாமல் சென்றுகொண்டிருந்ததல்லாமல் "கான்ஸ்டிடியூஷனி"லும், இதர முக்கிய காரியங்களிலும் அதிக பங்கெடுத்துக் கொண்டார்.

டிரஸ்டி பதவி:—அலிகார் காலேஜுக்கு டிரஸ்டிகளை தெரிந்தெடுக்கும் விஷயத்தில் பழைய மாணவர் சங்கம், தன் சார்பாகச் சிலரைத் தெரிந்தெடுக்க உரிமை பெற்றிருந்தது. நமது மௌலானாவைப் பார்க்கினும் அதிக விஷய ஞானமும், சிரத்தையும் உள்ள பிரதிநிதி அச்சங்கத்துக்கு வேறு யாரும்கிடைக்க முடியுமா? ஆகவே,

அச்சங்கம் டிரஸ்டி பதவிக்கு நமது மௌலானாவைத் தெரிந்தெடுத்தது.

அவர் டிரஸ்டிகளைத் தெரிந்தெடுக்கும் முறையிலும், டிரஸ்டிகள் பதவி வகித்துவரும் கால அளவையிலும் சில முக்கிய சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றார் என்று மேலே நாம் கூறி இருக்கிறோமல்லவா? அவரது இம்முயற்சிக்கு அவருக்குக் கைமேல் பலன் கிடைத்தது. அதாவது ஆப்தாப் அஹமது கானைத் தலைமையாகக்கொண்ட கோஷ்டியினரே அலிகார் கல்லூரியில் ஆதிக்கம் பெற்றிருந்ததால் மௌலானாவை நிரந்தரமான டிரஸ்டியாகத் தெரிந்தெடுத்துக்கொள்ள முன் வரவில்லை. ஐந்துவருஷ காலத்துக்குமட்டுமே அவர் டிரஸ்டியாக இருந்தார். அதற்காக நமது மௌலானா கவலைப்படவுமில்லை, இந்த ஐந்து வருஷ காலத்தவணை முடிவடைந்தவுடன்மறுபடியும் டிரஸ்டி பதவிக்கு அபேக்ஷகராக நின்றார்.

ஒரு பழைய மாணவரின் கடிதம்:—அவர் இரண்டாவது முறை அபேக்ஷகராக நின்றதை ஆதரித்து, பழைய மாணவர்களிலொருவர் "ஜமீந்தார்" பத்திரிகைக்கு எழுதிய வியாசம் ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வியாசத்திலிருந்து அவர் முதல் ஐந்து வருஷ காலம் டிரஸ்டியாக இருந்து, அலிகார் கல்லூரிக்குச் செய்ய முயன்ற அருஞ்சேவைகளைப் பற்றிய பிரஸ்தாபம் இருப்பதால், அவ்வியாசத்தின் முக்கிய பாகங்களை இவ்விடத்தில் குறிப்பிடுவது அவசியமாகும். அக்கடிதத்தின் முக்கிய வாசகம் வருமாறு:—

"எனக்குமுன் மூவர் பழைய மாணவர்கள் சார்பாக டிரஸ்டிகளாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். நான்காவது வருஷம் அதாவது சென்ற 1910-ம் வருஷத்தில் புதுச் சட்டப்படி ஐந்து வருஷகாலத் தவணைக்கு மிஸ்டர் முஹம்மது அலி டிரஸ்டியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பழைய மாணவர் சங்கத்தால் இதுவரை தெரிந்தெடுக்கப் பட்டவர்களில் பெரும்பாலரை அவர்களுடைய தவ ணைக் காலம் பூர்த்தியாவதற்கு முன்பே டிரஸ்டிகள், நிரந்தரமான ஜீவிய டிரஸ்டிகளாகத் தெரிந்தெடுத்துக் கொண்டனர். ஆனுல், மிஸ்டர் முஹம்மது அலி சம்பந்தமாக ஒரு டிரஸ்டிகூட 'இவரை நிரந்தர டிரஸ்டியாக்கவேண்டு' மென்று தீர்மானம் கொண்டுவர வில்லே. இந்த ஐந்துவருஷ காலத்தில் காலேஜின் நன் மைக்காகவும், அதன் அபிவிருத்திக்காகவும் அவர் செய்த முயற்சிகளை நான்கு பாகமாகப் பிரிக்கலாம்.

1. டிரஸ்டிகளின் "கான்ஸ்டிட்யூஷனில்" சீர் திருத்தம்.

2. காலேஜின் வரவுசெலவைப்பற்றிய கணக்கு.

3. காலேஜின் பல இலாக்காக்கள்—அதாவது கவர்ன்மெண்ட், டிரஸ்டிகள், புரொபஸர்கள், மாணவர் கள் ஆகியவர்களுக் கிடையிலுள்ள சம்பந்தங்களேச் சரியான முறையில் ஏற்படுத்தி ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொள்ளத்தக்க சந்தர்ப்பம் அளித்தல். டாக்டர், ஸர். ஸையத் அஹ்மத் எந்த நோக்கத்தின் பேரில் இந்தக் காலேஜுக்கு அஸ்திவாரமிட்டாரோ அந்த நோக்கத்தை நன்கு தெளிவுபடுத்தல்.

4. காலேஜைப் பூர்த்தி செய்தல்—அதாவது இதைச் சர்வகலாசாலையாக மாற்றுதல்.

சயன்சு காலேஜ் ஸ்தாபனம். இதை மிஸ்டர் முஹம்மது அலிதான் முதல்முதலாகத் தூண்டியவர்.

காலேஜின் பொருளாதார நிலைமையைப்பற்றிக் கூறுவது மிகவும் ருசிகரமாக இருக்கும். காலேஜின் செல்வ நிலைமையைப் பரிசீலனை செய்வது என்பதற்கு அதனுடைய வரவும் செலவும் சரியாக வருகிறதா அல்லது துண்டு விழுகிறதா என்பதைப்பற்றிப் பரி சீலனை செய்வது என்பது பொருளல்ல; வீணான காரி யங்களில் பணம் செலவாகக்கூடாது என்பதும், ஊதாரி யான விருதா செலவிருக்கக்கூடாது என்பதை கவனித் துக்கொள்ளவேண்டும் என்பதுமாகும். ஆகவே, காலே ஜின் வரவுசெலவுத் திட்டத்தை நன்கு கவனித்துத் தயார் செய்யவேண்டியது அவசியமாக இருந்தது. வரவு செலவைப்பற்றிக் கவனிப்பதற்காக கூட்டப் படும் கூட்டம், வருஷ ஆரம்பத்தில் ஏப்ரில் மாதத் துக்கு முன்பே கூட்டப்படவேண்டும் என்றிருந்தும், ஒருமுறையேனும் குறிப்பிட்ட காலத்தில் கூட்டப் படவே இல்லை. சில சமயங்களில் ஏப்ரில் மாதம் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் மறுவருஷம் ஜனவரி மாதத்தில் தான் கூட்டப்பட்டிருக்கிறது. வருஷாந்திரக் கூட்டத் திற்கும் இதற்குமிடையில் 24 மணிநேர வித்தியாசம் மட்டும் ஏற்படுவதுமுண்டு. வரவுசெலவுக் கூட்டத்தை ஒத்திவைப்பதால், செலவினங்களைத் தடுப்பதற்கு வழி யில்லாமற் போய்விடுகிறது. மிஸ்டர் முஹம்மது அலி

இதைப்பற்றி அடிக்கடி கண்டித்ததன்பலனாக, கொஞ்சங் கொஞ்சமாக இக்கூட்டம் குறிப்பிட்டகாலத்துக்குப் பக்கத்தில் கூட்டப்பட ஆரம்பமாகி இருக்கிறது. கடைசியாக சென்ற வருஷத்தில் ஒரு முடிவு செய்யப் பட்டிருக்கிறது. புதிய பொருளாதார வருஷம் பிறப் பதற்கு முன்பே, வரவுசெலவு திட்டத்தைத் தயார் செய்துவிடுவது அவசியமாகும். அதில் இந்தியா கவர்ன்மெண்ட் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படும் வழக்கத்தைப்போல் ஒன்பது மாதத்தின் அசல் கணக்கும், மூன்று மாதத்தின் மதிப்புக் கணக்கும் சேர்ந்திருக்கவேண்டும். வழக்கம்போல் அடுத்த வரு ஷத்தின் வரவுசெலவு மதிப்புத் திட்டமும் குறிப்பிடப் படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

காலேஜின் சில செலவினங்களைப் பரிசீலனை செய்து பார்த்ததிலிருந்து, வரவு செலவு திட்டத்தில் இந்தச் செலவுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறதா? அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கி வைக்கப்பட்டது? என்பதைக் கூடக் கவனிக்காமல் செலவு செய்யப்பட் டிருப்பதாகத் தெரியவந்தது. ஒரு செலவுக்காகப் பணம் கோரப்படும்போது, அந்தச் செலவு எம்மட்டும் நியாயமானது என்பதைக் கவனிப்பதில்லை. இவ்வித மான குறைகளால் அற்ப காரியங்களுக்காக பணம் செலவாகி விடுவதும், முக்கியமான காரியங்கள் பண மின்மையால் நின்று விடுவதுமாக இருந்தது.

ஆசிரியர்கள் சம்பளம்: காலேஜின் செலவினத் தில் ஆசிரியர்கள் சம்பளம்தான் பெரும் செலவாக

இருந்தது. ஐரோப்பிய ஆசிரியர்களுக்கும், இதர சில உபாத்தியாயர்களுக்கும் சம்பள உயர்வைப் பற்றி ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அத்திட்டத்தின் படி அவர்களுக்குக் குறித்த காலத்தில் சம்பள உயர்வு ஏற்பட்டு விடுகிறது. ஆனால், வேறு சில ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வுக்கான திட்டம் எதுவுமிருக்கவில்லை. ஆகவே, அவர்கள் தங்கள் சம்பள உயர்வுக்காக காலேஜின் முக்கியஸ்தர்களின் உதவியை நாடி, அவர்களைத் தவறான முறையில் வசப்படுத்த வேண்டியதேற்படுகிறது அல்லது சம்பள உயர்வுக்கு வழியில்லாமல், அதைப்பற்றிய சிந்தனைகூட இல்லாமலிருக்கவேண்டியதுதான். ஆகவே, சொந்தச் செல்வாக்கின் மூலமாகச் சம்பள உயர்வுக்கு முயலுவதை மிஸ்டர் முஹம்மது அலி எப்பொழுதும் ஆக்ஷேபித்துக் கொண்டே இருந்தார்.''

அலிகார் பழைய மாணவரின் மேலே கண்ட வியாசச் சுருக்கத்திலிருந்து நமது மௌலானா அலிகார் காலேஜுக்கு டிரஸ்டியாக வந்த பின் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்ய முயன்றார் என்பதும், அலிகார் பழைய மாணவர்களிடம் அவர் எவ்வளவு மதிப்புடன் இருந்தார் என்பதும், அவருக்கு டிரஸ்டி பதவியை அளிக்க பழைய மாணவர்கள் எவ்வளவு அக்கறை செலுத்தினர் என்பதும் நன்கு தெரியவரும்.

சர்வகலாசாலைத் திட்டம் :—அலிகார் காலேஜுக்கு அவர் செய்த ஊழியங்களும், பிரயத்தனங்களும் ஒருவாறு சுருக்கமாக மேலே கூறப்பட்டு விட்டன. இனி

அதைச் சர்வகலாசாலையாக உயர்த்துவதற்காக அவர் இடைவிடாமல் செய்த சலியா உழைப்பைப்பற்றியும் சிறிது கூறுவது இவ்விடத்தில் மிகப் பொருத்தமாக இருக்கும்.

ஜஸ்டிஸ் மஹ்முதின் திட்டம்:—அலிகார் எம். ஏ. ஓ. காலேஜ் என்று பெயர் உண்டாகுவதற்கு முன்னர் மத்ரஸத்துல் உலூம் என்ற பெயரிருந்தது. ஸர். ஸையத் அஹ்மதும், அவரது சகாக்களும் அதற்கு அஸ்திவாரமிட்ட காலத்திலேயே அதனை அபிவிருத்தி செய்து கர்த்தபா, கர்னுத்தா ஆகிய இடங்களிலிருந்த பிரசித்தி பெற்ற சர்வகலாசாலைகளைப்போல் ஆக்க முடியவில்லை என்றாலும், குறைந்தபக்ஷம் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய இடங்களிலுள்ள சர்வகலாசாலைகளின் அந்தஸ்திலேனும் அதைக்கொண்டு வந்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கிருந்து வந்தது.

இவ்வெண்ணத்தினாற்றான் மௌலானா ஹாலீ அவர்கள் பாடிய செய்யுள்களும், நதீர் அஹ்மதின் லெக்சர்களும், முஹ்ஸினுல் முல்க்கின் பிரசங்கங்களும், வக்காறுல் முல்க்கின் முயற்சிகளும், மௌலானா ஷிப்லீயின் மத்னவீகளும், இதர நூல்களும் அலிகார் காலேஜுக்காக ரிஜிஸ்டர் செய்துவைக்கப்பட்டன.

ஆகவே, ஜஸ்டிஸ் ஸெய்யித் மஹ்முது இச்சமயம் ஒரு திட்டம் தயார்செய்து, இனி ஏற்படவேண்டிய சர்வகலாசாலை எம்முறையில் அமைக்கப்படவேண்டும் என்ற விஷயங்களைப் பூரணமாக விபரித்திருந்தார். அத்திட்டத்தின்படி அதைச் சர்வகலாசாலையாக்கி,

தமது அருமைப்பிதா ஸர். ஸெய்யித் அஹ்மதுகான் மர் ஹூம் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற அவரது ஜீவியகாலம் அவருக்கு இடங்கொடுக்கவில்லை. இதைப் பூர்த்திசெய்வது அது சமயம் முடியாமற்போய் விட்ட தென்றாலும், அதைப் பூர்த்திசெய்விக்கும் பாக்கியம் மற்றவர்களின் தலைவிதியில் எழுதப்பட்டிருந்தது என்பது மட்டும் நிச்சயம்.

சர்வகலாசாலை ஏற்படுத்த முயற்சி:—1911—ம் வருஷ ஆரம்பத்தில் அலிகார் எம். ஏ. ஒ. கலேஜை சர்வகலாசாலையாக்கி விடவேண்டுமென்ற பிரேரணை உண்டாயிற்று. அப்பொழுது, நமது தலைவர் மௌலானா முஹம்மதுஅலியின் எழுதுகோலும், நாவும் அலிகார் எம். ஏ. ஒ. காலேஜுக்குச் சாதகமாக அற்பணம் செய் யப்பட்டிருந்தன.

மௌலானா ஷௌகத் அலி:—அவர் தமது மூத்த சகோதரர் மௌலானா ஷௌகத் அலியை லீவு வாங்கிக் கொண்டு, இம்முக்கிய காரியத்தைப் பூர்த்தி செய்யும் வேலையில் இறங்கும்படி தூண்டினார். மௌலானா ஷௌகத் அலி 2 வருஷத்துக்கு லீவு வாங்கிக்கொண்டு ஹிஸ் ஹைனஸ் ஸர். ஆகாகானைத் தலைமையாகக் கொண்டு, இந்தியா முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, தம்முடைய நிகரற்றவேலைத்திறமையைக் காண் பித்தார். அதாவது 30 லக்ஷம் ரூபாய் சேர்க்கவேண் டும் என்ற நிபந்தனையைப் பூர்த்தி செய்வதற்காக, அவர் மட்டிலும் 20 அல்லது 25 லக்ஷம் ரூபாய் வரை நிதி திரட்டினார்.

அபிப்பிராயபேதம்: கவர்னர் பதவியைவகித்து உத்தியோகத்திலிருந்து விலகிச் சென்ற ஸர். ஹார் கோர்ட்பட்லர் என்பவர் அக்காலத்தில் மிஸ்டர் பட்லராக இருந்தார். அது போழ்த்து அவர் நிர்வாக சபையில் கல்வி இலாக்கா மெம்பராக இருந்தார். இப்பிரசினை அவரிடம் வந்தது. சர்வகலாசாலையாக உயர்த்துவதற்காக அக்கலாசாலைக்கு 20 லக்ஷ ரூபாய் மூலதனம் காண்பிக்க வேண்டும் என்று கவர்ன்மெண்டார் நிபந்தனை ஏற்படுத்தினர். அப்பால் 30 லக்ஷ ரூபாப் மூலதனம் வேண்டும் என்றனர். இந்நிபந்தனையைப் பூர்த்தி செய்வதற்காகவே ஸர். ஆகாகான், மௌலானா ஷௌகத் அலி உள்பட முஸ்லிம்கள் நிதிதிரட்டும் வேலையில் ஈடுபட்டு ஒருவாறு பணத்தையும் திரட்டி விட்டனர். வைசிராயும் பூர்த்தியான சர்வகலாசாலையை ஏற்படுத்தும் விஷயத்தில் சிபாரிஷ் செய்துவிட்டார். ஆயினும், இந்தியா மந்திரி இவ்விஷயத்தில் சில நிபந்தனைகளை ஏற்படுத்தி முட்டுக்கட்டை போட்டுவிட்டார். சர்வகலாசாலைக்குப் புரோபஸர்கள் நியமித்தல், சர்வகலாசாலைக் கோர்ட் அதிகாரம், இதர காலேஜ்களை இதனுடன் இணைத்தல், சர்வகலாசாலையின் பெயர் ஆகியவைகளில் இந்தியா மந்திரி கூறிய நிபந்தனைகளை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ள எவ்விதத்திலும் தயாராக இருக்கவில்லை.

மஹ்மூதாபாத் மகாராஜா :—இக்காலத்தில் மஹ்மூதாபாத் மகாராஜா பொதுஜன ஊழியம் புரியும் விஷயத்தில் முன்னணியிலிருந்தார். இப்பிரசினையிலும் அவர் தலையிட்டு உழைத்தார். ஆதலின், அவர்

ஜனத் தலைவரென ஒப்புக்கொள்ளப் பட்டிருந்ததால், கான்ஸ்டிடியூஷனுக்கு அவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார். ஆகவே, அவர் பௌண்டேஷன் கமிட்டி மெம்பர்களின் அபிப்பிராயத்தை மாற்றி விடுவதாகக் கல்வி இலாக்கா அங்கத்தினருக்கு வாக்களித்தார்.

மஹ்மூதாபாத் மகாராஜா அவர்களுடன் அலிகாரிலுள்ள அநேக பெரியார்களும், ஜனத் தலைவர்களும், ஒரு கக்ஷியாகச் சேர்ந்தனர். நமது மௌலானா முஹம்மது அலியுடன் மௌலானா அபுல்கலாம் ஆஜாத், நவாப் வக்காறுல்முல்க் முதலியவர்கள் ஒரு கக்ஷியாகச் சேர்ந்தனர். லக்நௌவிலுள்ள கைஸர் பாகில் சர்வ கலாசாலைத் திட்டத்தை ஒப்புக்கொள்வதா இல்லையா என்பதைப் பற்றி முடிவு செய்வதற்காகக் கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. இதில் இருகக்ஷியினரும் தங்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்துவதாக இருந்ததால், முஸ்லிம்களுக்குள் பலமான பிளவு உண்டாகவும், விதம் விதமான புதுப்பிரசினைகள் தோன்றுவதாகவும் இருந்தது.

மௌலானா முஹம்மது அலியின் விட்டுக் கொடுக்கை :— இக்கூட்டம் நடைபெறுவதற்கு முதல் இரவில், இது சம்பந்தமாக மறுபடியும் ஒருவருக்கொருவர் கலந்தாலோசனை செய்தனர். மௌலானா முஹம்மது அலி தமது கோரிக்கையைக் கொஞ்சம் தளர்த்தி "முஸ்லிம் பொதுஜனங்களுக்குப் பூரண நம்பிக்கையுள்ள ஸ்பெஷல் கமிட்டி ஒன்றை நியமித்து, சர்வகலா

சாலைக்கு, சர்க்கார் ஏற்படுத்தும் நிபந்தனைகளை ஒப்புக் கொள்வதா இல்லையா என்பதை அக்கமிட்டியின் பெரும்பான்மையினர் தீர்மானத்துக்கு விட்டுவிடலாம் என்றும், பௌண்டேஷன் கமிட்டி இத்தீர்மானத்தைச் செய்யவேண்டாம்" என்றும் தீர்மானம் கொண்டு வந்தார்.

அவர் இவ்விதமாக நடந்துகொண்டதைப் பற்றி அவருடைய சில நண்பர்கள் அவரைப் பலமாக ஆக்ஷேபித்தனர். இதனால், அவர் பலமான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியது மேற்பட்டது. ஜனநாயகக் கொள்கையுள்ள அவர், பொதுஜன அபிப்பிராயத்தைப் பொருத்த இவ்விஷயத்தை, குறிப்பிட்ட ஒரு கமிட்டியின் முடிவுக்கு விட்டுவிட முயன்றது ஆச்சரியமான விஷயமுமாகும். விஷயத்தை நன்கு ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் இம்மாதிரி நடந்து கொண்டதற்குக் காரண மில்லாமற்போகவுமில்லை. அதாவது அலிகார் பிரசினை இதுவரை எந்தக் கூட்டத்தாரின் கையில் இருந்து வந்ததோ, அந்தக் கூட்டத்தாருக்கு தேசத்திலும், முஸ்லிம்களிலும், அரசாங்க அதிகாரிகளிலும் அதிக செல்வாக்கிருந்து வந்தது. இதுவரை இப்பிரசினை அக்கூட்டத்தாரின் ஆதிக்கத்தின் கீழிலேயே இருந்து வந்தது. அவர்களிடம் பிடிவாதமாக இருந்தால், அவர்கள் போட்டிபோட்டு விஷயத்தை இன்னும் சிக்கலாக ஆக்கிவிடுவார்கள். ஆதலால், இரு கக்ஷியினரும் திருப்தியடையத் தக்க பொதுவான ஒரு வழியை அவர் உண்டுபண்ணினர். இவ்வாறு செய்

தால், விஷயம் அதிகக் கெடுதலுக்கு வராமல் ஒரு மாதிரியாக முடிவுபெறும் என்று எண்ணினார். ஆதலின், அவர் தமது மனசாட்சிக்கு மாறாகவே இத் தீர்மானத்தைச் செய்யவேண்டியதேற்பட்டது. தம்முடைய இவ் வபிப்பராயத்தை மஹ்மூதாபாத் மகாராஜாவிற்கு எழுதிய கடிதங்களிலும் கூடக்கூறி இருக்கிறார்.

பலன் : கடைசியாக 1913-ஆம் வருஷம் ஜூலை மீ 26, 27 தேதிகளில் பௌண்டேஷன் கமிட்டியின் கூட்டம் அலிகாரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அலிகார் காலேஜின் அதிகாரிகளுக்கு நல்ல தருணம் கிடைத்தது. அலிகார் ஜில்லாவிலுள்ள முக்கிய அங்கத்தினர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கென்று ஸ்பெஷலாக வரவழைக்கப்பட்டிருந்தார்கள். ஆதலால், அலிகார் காலேஜ் அதிகாரிகளின் நோக்கம்போல் தீர்மானம் நிறைவேறுவதற்கு இடமிருந்தது. அவ்வாறிருந்தும் முஸ்லிம் பொதுஜனங்களிடம் எதிர்பார்த்த முடிவே இக்கூட்டத்தில் நிறைவேறிற்று. அவ்வாறு முடிவு செய்தும், அம்முடிவின்படி இக்காரியம் நடைபெறவில்லை.

மகாயுத்தம் : மகாயுத்தம் ஆரம்பமானவுடனேயே மௌலானா முஹம்மது அலியும், அவரது சகோதரரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். இவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டதால், அலிகார் பிரசினையில் இவர்களுக்கு எதிராகவுள்ளவர்களுக்கு நல்ல தருணம் கிடைத்தது. அவர்கள் இதைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டனர். ஆதலால், இவர்

கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டதானது சர்வகலா சாலைக்கு 'சார்ட்டர்' என்ற நற்செய்தி கூறுவதாக இருந்தது.

மறுமுறை பிரயத்தனம்: மகாயுத்தத்தால் அரசாங்கம் கலக்கமடைந்திருந்தது. இது சமயம் இப்பிரசினையை எழுப்புவது உசிதமாகவும் இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் அலிகார் காலேஜை சர்வகலாசாலையாக மாற்றும் பிரசினையை மறுபடியும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

கவர்ன்மேண்ட் தயாராகுதல்: ஹிந்துக்கள் எவ்விதமான சர்வகலாசாலையை ஒப்புக்கொண்டிருக்கிறார்களோ, அவ்விதமான சர்வகலாசாலையை முஸ்லிம்களும் அங்கீகரிப்பதாயின், அவர்களுக்கும் சர்வகலாசாலைத் திட்டம் அளிப்பதாக கவர்ன்மென்டார் கூறினார்கள். முஸ்லிம் பொதுஜனங்கள் இதனை ஒப்புக்கொள்ளவில்லை. சுயேச்சைக் கூட்டத்தார் இதனை எதிர்த்துப் பலமாகப் பிரசங்கம் புரிந்தனர். வியாசங்கள் எழுதினர். ஆயினும், அலிகார் காலேஜ் அதிகாரத்தையும், இவ்வியக்கத்தின் விசையையும் வைத்திருந்தவர்கள் "இவ்விதமான சர்வகலாசாலையை ஒப்புக்கொள்வது நமது சமூகத்திற்கு நன்மையைத் தரும் என்று கருதுகிறோம். ஆதலின், அவசியம் நாங்கள் ஒப்புக்கொள்வோம். இத்திட்டத்திற்கு எதிராக இருப்பவர்கள் இக்கல்லூரியில் கல்வி பயிலாதவர்கள்" என்று கூறினர்.

மௌலானாவின் எதிர்ப்பு: அலி சகோதரர்கள் இக்காலத்தில் அரசாங்கத்தாரால் பாதுகாப்பில் வைக்கப்

பட்டிருந்தபோதிலும், நமது மௌலானு தம்மாலியன்ற வரை இதில் தலையிட்டார். மகாயுத்தம் முடிவடையும் வரை, சர்வகலாசாலைப் பிரசினையைக் கிளப்பாமலிருப்பது நல்லது என்பதும், யுத்தம் முடிவடைந்தபின் இதை மிகப்பலமாகக் கிளப்பவேண்டும் என்பதும் அவருடைய விருப்பம். மகா யுத்தம் முடிவடைந்தபின் இதைக் கிளப்பினுல் இதில் அதிக வெற்றியேற்பட இடமுண்டென்பதும், அதற்கு முன்பே இதை ஆரம்பித்தால், இதில் பல இடையூறுகள் உண்டாகி, கோரிய பலன் கிடைக்காமற் போகக்கூடும் என்றும் கூறினுர்.

மஹ்மூதாபாத் மகாராஜாவுக்குக் கடிதம்: அவர் சுண்டுவாடாவில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த போது, மஹ்மூதாபாத் மகாராஜாவுக்கு இது சம்பந்தமாக ஒரு முக்கிய கடிதம் எழுதினுர். அவர் அரசாங்கத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்ததால், வெளி உலகத்தை விட்டுப் பிரித்து வைக்கப்பட்டிருந்தார். அலிகார் செல்லவோ, இது சம்பந்தமாகச் செய்யவேண்டிய காரியாதிகளை நேரில் செய்யவோ, அவரால் முடியாதிருந்தது. அவ்வாறிருந்தும் அலிகார் கலாசாலையைச் சர்வகலாசாலையாக மாற்றும் விஷயத்தில், தம்முடைய அபிப்பராயத்தைத் தெளிவாகவும், தக்க காரணங்களோடும் விரிவாக எழுதி, சம்பந்தப்பட்ட பிரபலஸ்தர்களுக்கு அறிவிப்பது என்றுல், பொதுஜன நன்மையிலும், பொதுஜன ஊழியத்திலும், அலிகார் கலாசாலையின்மீதும் அவருக்குள்ள ஆர்வத்தை அக்கடிதம் காண்பிப்பதாகவே இருக்கிறது. அக்கடிதம் வருமாறு:—

“என்னுடைய சொற்பகால பொதுஜன வாழ்வில், என்னுடைய பண்டையக் கொள்கைக்கும், பகிரங்கமான நடவடிக்கைகளுக்கும் முற்றிலும் மாறுக, பொது ஜனங்களுக்குப் பாத்தியப்பட்ட ஒரு உரிமையை, ஒரு சிறு கமிட்டியினிடம் ஒப்பிவித்து விடும்படியாகப் பொது ஜனங்களின் முன் நான் தீர்மானங் கொண்டு போன சம்பவத்தைப் பார்க்கிலும், அதிக முக்கியமான சம்பவம் வேருென்றுமில்லே யென்பதாக நான் முழு நம்பிக்கையுடன் கூறமுடியும். சில முக்கிய சம்பவங்களேற்பட்டதால், அபிப்பராய பேதத்தையும், எதிர்ப்பையும் ஒழிப்பதற்காக, மேலே கூறப்பட்ட அந்த கனவான்களுடன் ஒத்துப்போவதற்காக, அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டியதாயிற்று. 1913-ம் வருஷம் மார்ச்சுமீ லக்நௌவில் கூடிய கூட்டத்தில் “பௌண்டேஷன் கமிட்டியை மறுபடியும் கூட்டி, எல்லா விஷயங்களேயும் அக்கமிட்டியின் முன் சமர்ப்பிக்காதவரை, எந்தக் காரியமும் நியாயமான வழியில் நடைபெற முடியாது” என்பதாக ஒப்புக்கொள்ள வேண்டியதேற்பட்டது. ஆனுல், 1915-ம் வருஷம் ஆகஸ்டுமீ தாங்கள், சில கனவான்களே ஸிம்லாவுக்கு அழைத்து, ஹிந்து சர்வகலாசாலேயின் திட்டங்களே அஸ்திவாரமாகக் கொண்ட ஒரு சர்வகலாசாலேயை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதற்காக முயற்சி செய்திருக்கிறீர்கள்.

10-4-1916-உ பௌண்டேஷன் கமிட்டியின் கூட்டம் நடைபெறவேண்டும் என்று மறுபடியும் முடிவு

செய்யப்பட்டது. தாங்கள் இவ்விஷயத்தில் என்னை மறந்து விடாமலிருந்ததற்காக நான் நன்றி செலுத்துகிறேன். இக்கூட்டத்தைக் கூட்டும் நோக்கம் பலருடன் கலந்தாலோசனை செய்வதன்று; என்னைப் பயப்படச் செய்வதுதான் இதன் நோக்கமென்று நான் கூறுவேனாயின், அது தகாத வார்த்தைகளாகா. என்னுடைய பழைய நண்பர் ஸையத் ஸஜ்ஜாத் ஹைதர் சாகிப் இங்கு வந்தார். சர்வகலாசாலை சம்பந்தமாக அவருடன் வெகு நேரம் வரை விவாதம் நடந்தது.

10—4—1916வயில் முஸ்லிம்கள் சந்தோஷமாக இல்லையென்றாலும், நானும் அவர்களும் இன்றுவரை ஒன்றாகச் சேர்ந்திருந்த காரியங்களை நிர்ப்பந்தத்தின் பேரிலேனும் விட்டுக்கொடுத்து ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று என்பது வெளிப்படை. ஷை தேதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் எனக்கு எள்ளளவும் திருப்தியில்லை என்பது தங்களுக்குத் தெரிந்ததே.

இன்று பௌண்டேஷன் கமிட்டி மறுபடியும் கூட்டப்படுகிறது. இன்னொரு சமூகத்தார் தங்களுடைய சமூகத்தின் அவசியங்களைக் கவனித்து சர்வ கலாசாலையை அங்கீகரித்துக் கொண்டதுபோல, நாமும் நம்முடைய சமூகத்தின்நன்மைகளுக்கும் தேவைகளுக்கும் மாறாக, அவர்கள் ஒப்புக்கொண்ட சர்வகலாசாலையைப் போலொரு சர்வகலாசாலையைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவேண்டும் என்று நமது சமூகம் வெகுநாளாகக் கண்டுகொண்டிருந்த கனவுக்குப் பொருள் கூறப்படும். 1912-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 11, 12, 13உகளில் சமர்ப்

பித்துக்கொண்ட கோரிக்கைகளும், தாவாக்களும் எங்கே இருக்கின்றன; இன்றையதினம் நம்முடைய நோக்கங்களும் கருத்துகளும் எங்கே இருக்கின்றன என்பதைக் கவனித்துப் பாருங்கள். இவ்வருஷத்திலேயே அஸ்திவாரமிட்டுவிடுவதால் முஸ்லிம் கல்விக்கு புதிதாக ஏதேனும் நன்மை ஏற்பட்டுவிடப் போகிறதென்றும், இன்னும் இரண்டு வருஷம் பொறுத்திருந்தால் அது தவறிவிடப்போகிறதென்றும் எவரேனும் கூறமுடியுமா?

இவ்வளவு அவசரமாக இக்காரியத்தைப் பார்ப்பதற்கும், தகராறிலுள்ள ஒரு பிரசினையைப் பற்றி, யுத்தகாலத்தில் அதைக் கிளப்புவதற்கும்—அரசாங்கத்தார் கூறிய நிபந்தனைகளுக்கும்கூட மாறான ஒரு பிரசினையை —இவ்வளவு அவசரமாகக் கவனிப்பதற்கும் என்ன காரணம் என்பதுதான் விளங்கவில்லை. கல்வி சம்பந்தப்பட்டவரை இவ்வளவு தீவிரமாகக் காரியம் பார்ப்பதற்கு எவ்விதக் காரணமுமில்லை என்றும், இவ்வாறு அவசரப்படுவது கூடாது என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்றும் நான் தைரியமாகக் கூறமுடியும்.

1916-ஆம் எப்ரில்மீ 10உக்கு முன்புவரை எனது அபிப்பராயத்துக்குச் சாதகமாக இருந்த கனவான்களின் நோக்கம் எவ்வாறிருக்கிறது என்பதையேனும் குறைந்தபக்ஷம் நான் அறிந்துகொள்ளவேண்டுமென்று, நான் ஒருகாலம்வரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். பிறகு, காலம் மிகவும் குறுகிவிட்டதால், நான் மார்ச்சுமீ 25உ ஒரு தீர்மானத்தை விபரமான ஒரு விஞ்ஞாபனத்துடன் செக்ரடரிக்கு எழுதி அஜண்

டாவில் சேர்த்துக்கொள்ளும்படி அனுப்பினேன். ஏப்ரல்மீ 8உ தான் மகாநாடு நடைபெறுமென்று இப்பொழுது தெரியவருகிறது. தவிரவும், தாங்கள் 1912ம் ஆு ஆகஸ்ட் 11, 12உகளிலும் 1913ஆு ஜூலைமீ 26, 27உகளிலும் கூடிய மகாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு மாறாக நடப்பதுமட்டுமில்லாமல், 10-4-1916உ செய்த தீர்மானத்துக்கு விரோதமாகவும் முடிவுசெய்ய விரும்புகிறீர்கள் என்று ஜனங்கள் கருதுகிறார்கள். அவசியமேற்படின் லக்னௌவிலிருந்து 10 ஆயிரம் பேர்களைத் தங்கள் பக்கம் ஓட்டுக்கொடுக்க அழைக்கப்போவதாகத் தாங்கள் பகிரங்கமாகக் கூறுகிறீர்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். தங்களைப்பற்றிய இவ்வபிப்பராயங்கள் என் மனதுக்குள்ளிருக்க நான் விரும்பாததால் இவைகளைத் தங்களுக்கறிவித்தேன்.

தங்களுடைய அபிப்பாரயத்தைப் பூரணமாக உணர்ந்த ஒருவரை, அல்லது ஸெய்யித் ஸஜ்ஜாத் ஹைதர் சாகிபைத், தாங்கள் இங்கு அனுப்பினால் அடியிற் கண்ட எனது வினாக்களுக்குத் தங்கள் சார்பாக என்னிடம் நேரில் பதில் கூறுவார் என்று நம்புகிறேன். அக்கேள்விகள் வருமாறு:—

1. சர்வகலாசாலைப் பிரசினையை யுத்தம் முடியும் வரை என் ஒத்தி வைக்கக்கூடாது? இதற்கிடையிலுள்ள காலத்தில் காலேஜை அபிவிருத்தி செய்வதில், அரசாங்கத்தாருக்குச் சம்பந்தமில்லாத இதர எல்லா நடவடிக்கைகளையும் ஏன் நாம் செய்யக்கூடாது?

2. சர்வகலாசாலே சம்பந்தமாக இப்பொழுதே முடிவு செய்துவிட வேண்டிய அவசரம் எந்த நன்மையை உத்தேசித்து ஏற்பட்டிருக்கிறது? இன்னும் இரண்டு வருஷம் பொறுத்திருந்தால் அந்த நன்மை தவறிவிடுமா?

3. எந்த விதமான சர்வகலாசாலேயாக இருந்தாலும் ஒப்புக்கொள்ளவேண்டியது தான் என்று நாம் தீர்மானம் செய்துவிட்டாலும், அந்தச் சர்வகலாசாலேத் திட்டம் நமக்குக் கிடைக்கும் விஷயத்தில் யுத்தத்தின் காரணமாக தடை ஏற்படாதா?

4. சர்வகலாசாலேயின் அந்தஸ்துக்குத் தகுதியாக ஆசிரியர்களின் ஸடாபை நாம் துரிதத்தில் உண்டு பண்ணி விடமுடியுமா?

5. இப்பொழுது அலிகார் காலேஜை நிர்வகித்து வருபவர்கள் இதைச் சர்வகலாசாலேயாக மாற்றிய பின்பும், சரிவர நிர்வகித்து வருவார்கள் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருக்கிறதா?

6. தங்களுக்கு அந்த கனவான்களின் மீது நம்பிக்கை இருக்குமாயின் தாங்கள் ஏன் இதுவரை அவர்களுடன் போராடிக் கொண்டிருந்தீர்கள்? தங்களே அறிந்தவர்களெல்லோரும் தங்களிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருந்த அலிகார் காலேஜ் விஷயத்தில் தங்களுக்குள்ளிருந்த இவ்வக்கரையை இதுவரை ஏன் வெளிப்படுத்தாதிருந்தீர்கள்? கான்பரன்சுக்குத் தலேவரைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் அலிகார் காலேஜ் நிர்வாகிகள் இவ்வளவு தூரம் எதிர்ப்புச் செய்ததற்குக்

காரணமென்ன? தாங்களும், தங்கள் சகாக்களும் அவர்கள் விஷயத்தில் எதிர்ப்புச் செய்ய நேர்ந்த காரணமென்ன?

தற்போதைய நிலைமையில் சர்வகலாசாலைப் பிரசினையானது மக்கள் இருப்பதா இறப்பதா என்ற பிரசினையாக இருக்கிறது என்பதை, மிக மிக அறியாத ஜனங்களும் கூட இப்பொழுது தெரிந்து கொண்டார்களா? எங்களைப் பாதுகாப்பில் வைத்ததானது தேசிய வேலைகளில் நாங்கள் ஈடுபடக்கூடாது என்று எங்களை நிர்ப்பந்தப்படுத்திவிட்டது. ஆனால், இது கல்வி சம்பந்தமான விஷயமாதலின், ஓரளவுக்கு நாங்கள் இவ்விஷயத்தில் சுயேச்சையளிக்கப்பட்டிருக்கிறோம். அதாவது இது சம்பந்தமாக நாங்கள் கடிதம் எழுதிக் கொள்ளமுடியும். ஆதலால், நாங்கள் கடிதம் எழுதுவதற்கு அசக்தர்களாக இல்லை. ஆகவே, இதனை எழுதி இருக்கிறோம்.

நேற்றுவரை நாங்கள் யாரைப் புகழ்ந்து கொண்டிருந்தோமோ அவர்மீதுதான், இன்று நாங்கள் குறை கூறவேண்டியதிருக்கிறது என்பதுதான் எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அவரை நாங்கள் கெட்டவர் என்று கூற மனம் வரவில்லை. நல்லவர் என்று சொல்லவும் முடியவில்லை.

தற்போதைய காலம் எப்பொழுது மிருக்காது. இன்று நாம் செய்யும் தீர்மானம் நமது குழந்தைகளுடையவும், வருகிற சந்ததியினருடையவும் கல்வியின் மீது பல நூற்றாண்டுகளுக்கு வேலை செய்யும். அவர்

களுக்கு நம்முடைய ஊக்கமின்மையை வாரிசு பாத்திய மாக நாம் கொடுத்துவிட்டுச் செல்வதைத் தாங்கள் சகிக்கிறீர்களா ?"

நமது மௌலானாவின் இக்கடிதம் உண்மையில் வெறுங் கேள்விகளன்று. அரசாங்கத்தார் கூறும் நிபந்தனையின் பேரில் சர்வகலாசாலையை அங்கீகரிக்கக் கூடாது என்பதற்காக அவர் சமர்ப்பித்த ஆதா ரங்களாகும். இது எவ்வளவு முக்கியமான விஷயம் என்பதை இக்கடிதந் தானாக வெளிப்படுத்திக் கொண் டிருக்கிறது.

மற்றொரு முயற்சி: அவரது முயற்சி இத்துடன் முடிந்து விடவில்லை. ஒன்றுஞ்செய்ய இயலாத நிலைமை யில் இருந்தபோதிலும், தம்முடைய மனவிருப்பம் போல் இதை முடிவு செய்வதற்கு மற்றொரு முயற்சி யும் செய்தார்.

சர்வகலாசாலைத் திட்டத்தை ஒப்புக்கொள்வதா ? இல்லையா? என்ற பிரசினையை முடிவுசெய்வதற்காக, அலி காரில் கூட்டப்படும் கூட்டத்திற்குத் தாம் நேரில் சென்று தம்முடைய அபிப்பிராயத்தைக் கூறுதற்காகத் தமக்கு அனுமதி தரவேண்டும் என்பதாகவும், அலிகார் பிரசினை யில் தமக்குள்ள சிரத்தை, தம்மை அதில் கலந்துகொள் ளத்தூண்டுவதாகவும் கல்வி இலாக்கா மெம்பருக்கு மனு கொடுத்துக் கேட்டுக்கொண்டார். அதற்கு கல்வி இலாக்கா மெம்பர், இம்மாதிரியான அனுமதி கொடுக் கத் தம்மால் இயலாமலிருப்பதாகத் தெரிவித்து விட்டார்.

ஊழியத்திற்குத் தக்க கைமாறு: அலிகார் பிரசினையைப் பற்றி ஒருமுறை அவர் தமது "ஹம்தர்த்" பத்திரிகையில் தமது அபிப்பராயத்தை வெளியிட்டுள்ளார். அதனையும் இங்கு குறிப்பிடுவது மிக பொருத்தமாகும். அவர் கூறியிருப்பதாவது:—

"1915-ம் வருஷத்தில் அலி சகோதரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். நானும், எனது சகஊழியர்களும் அலிகார் அதிகாரிகளிடம் பலமாகப் போராடி ஏற்படுத்தி வைத்திருந்த அஸ்திவாரச் சட்டம், நாங்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்ட பிறகு அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் ஒரு முறையல்ல பல முறைகளிலும் கெடுக்கப்பட்டது. ஸர். ஷாபீ அவசரமாக சர்வகலா சாலைச் சட்டத்தைப் பிரயோகித்து விட்டார். வைஸ் சான்ஸலர் என்ற முறையில் மஹ்மூதாபாத் மகாராஜா சர்வகலாசாலையை ஆரம்பித்து விட்டார். இந்த ஸர். ஷாபீதான் இந்தியா மந்திரியின் சார்பாக மிஸ்டர் மாரீஸன் கூறிய நிபந்தனைகளை 1912-ம் வருஷத்தில் ஒப்புக்கொள்வதற்கு எவ்விதத்திலும் தயாராக இல்லாமலிருந்தார். ஆனால், கல்வி இலாக்கா மெம்பர் என்ற முறையில் அதே ஸர். ஷாபீ டாக்டர் ஜியாவுத்தீனின் சமிக்ஞையின் பேரில், அலி சகோதரர்கள் சிறைச்சாலையைவிட்டு வெளிப்பட்ட பிறகும்,அலிகார் வராமலிருப்பதற்கு முயற்சிசெய்ய முன் வந்தார். இவர் 1920-ம் வருஷத்தின் ஆரம்பத்திலேயே ஸர். ஹார் கோர்ட்பட்லர் மூலமாக ஹிஸ் ஹைனஸ் ராம்பூர் நவாபுக்கு "ஒன்று அலி சகோதரர்களை அலிகார் போவதை விட்டுத் தடுத்து

விடவேண்டும் அல்லது அவர்களை ராம்பூரை விட்டுப் பிரஷ்டம் செய்து விடவேண்டும்" என்று தகவல் அறிவித்தார். ஆகவே, நாங்கள் அலிகார் போவதை நிறுத்திக் கொள்ளவில்லை. ஆனால், ராம்பூருக்கு அன்றைய தினம் முதல் இன்று வரை செல்ல முடியவில்லை."

நான்காம் அத்தியாயம்

முஸ்லிம் லீக்

டில்லி சிப்பாய் கலகத்திற்குப் பின்னர், முஸ்லிம்கள் ராஜிய விஷயங்களைவிட்டு முற்றிலும் ஒதுங்கிவிட்டார்கள். தேசச்சகோதரர்களில் முயற்சியுள்ள ஒரு கூட்டம், காங்கிரஸில் உயிரை யுண்டாக்க முயற்சி செய்தது. அக்காலத்தில் காங்கிரசுக்கு எவ்வளவு சக்தியை யுண்டாக்க முடியுமோ, அவ்வளவு சக்தியையும் அந்த வர்க்கத்தார், காங்கிரசுக்கு உண்டுபண்ணி அரசாங்கத்தினிடத்தில் செல்வாக்கை உற்பத்தி செய்து கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் முஸ்லிம்கள் கவர்ன்மென்டாரின் நிழலை தெய்வ நிழலென மதித்துவந்தனர். அரசாங்கத்தார் அதிருப்தியாக நினைக்கக்கூடியதும், அரசாங்கத்துக்கு அவமதிப்பு என்று கருதக்கூடியதுமான எந்த இயக்கத்திலும் முஸ்லிம்கள் சேராமல் இருந்தனர்.

நிலைமையில் மாறுதல்: இந்த நிலைமை எப்பொழுதும் நிலைத்திருக்க முடியாது என்பது தெரிந்தவிஷயம். அரசாங்கத்தாரின் நோக்கத்திலும் மாறுதலேற்பட்டது. "சண்டையை மூட்டிவிடுங்கள், அரசாட்சி புரியுங்கள்" என்ற பழமொழிப்படி பிரித்தாளும் தந்திரம் பகிரங்கமாக வெளியாயிற்று. முஸ்லிம்களிடமும் உணர்ச்சியுண்டாயிற்று. ஆனால், இந்த உணர்ச்சியானது ஒரு முக்கிய திருகூட்டத்தினரால் உண்டாக்கப்பட்டது. அக்கூட்டத்தார் ராஜீய விஷயங்களில் தலையிடுவதை "விலக்

கப்பட்ட மரத்தை''ப்போல் கருதி வந்தனர். ராஜீய விஷயங்களில் தங்களுக்குச் சம்பந்தமில்லை என்றும், அதில் தங்களுக்கு வெறுப்பு என்றும் சொல்லிக்கொள் வதை, தங்களது தேசீய சமூக ஊழியம் என்று கருதி வந்தனர். இப்படிப்பட்ட கூட்டத்தாரிடம் இவ் வுணர்ச்சி தோன்றியது மிகவும் ஆச்சரியகரமான விஷயமாகும்.

முஸ்லிம் லீக் ஸ்தாபனம்: இத்திருக்கூட்டத்தார் நவாப் வக்காறுல் முல்க், நவாப் முஹ்ஸினுல் முல்க் ஆகியவர்களின் முயற்சியால், (1906-ம் வருஷத்தில் டாக்காவில் எஜுகேஷனல் கான்பரன்சு நடைபெற்ற போது) முஸ்லிம்களின் வருங்கால ராஜீய வாழ்க்கை எவ்வாறிருக்கவேண்டும் என்று உருப்படுத்துவதற்காக ஒரு ராஜீய கக்ஷி ஸ்தாபனத்தையும், அஸ்திவாரத்தை யும் ஏற்படுத்தினர். அக்கக்ஷிக்கு முஸ்லிம் லீக் என்ற பெயர் வந்தது.

முஹம்மது அலி: இக்காலம்வரை நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி ராஜீய உலகில் அடி யெடுத்து வைக்காமலிருந்தார். ராஜீய தலைவர் என்ற முறையில் அவரிடமிருந்து ராஜீய உரிமைகள் சம்பந்த மாக எக்காரியமும் எதிர்பார்க்கப்படாமலும் இருந்தது. அவ்வாறிருந்தும் அவர் இதை ஸ்தாபிதம் செய்வதிலும், பலப்படுத்துவதிலும் குறிப்பிட்ட அளவுக்குப் பங் கெடுத்துக்கொண்டார். இதன் மூலம் அவர் "முஸ்லிம் லீக்" ஸ்தாபகர்களில் தனக்கு முக்கிய ஸ்தானத்தை யுண்டு பண்ணிக்கொண்டார்.

அவர் ஆரம்பத்தில் "முஸ்லிம் லீக்" கிற்காகச் செய்த வேலைகளைப்பற்றி, அவருடைய நண்பர் மீர் மஹ்பூஜ் அலி பின்வருமாறு கூறி இருக்கிறார்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய முஸ்லிம்களில் திறமையான அறிவு படைத்தவர்கள் இருந்தும், முஸ்லிம்லீக்கின் திட்டத்தை ஒழுங்கு செய்தல், அதற்குச் சட்டம் ஏற்படுத்துதல் முதலிய சகல காரியங்களையும் முஹம்மது அலிதான் செய்தார்."

ஸர். முஹம்மது யாகூப் கூறும் விபரம்: "அலிகாரின் பழைய பந்தாட்டக்காரர், சீமைக்குப் படிக்கச் சென்று திரும்பிவந்தபோது சிறந்த வியாசமெழுதக் கூடியவராகவும், உக்கிரமான பிரசங்கம் புரிபவராகவும், முன்னேறிவரும் ராஜ தந்திரியாகவும் மாறி வந்தார். முஸ்லிம் லீக்கின் அமைப்பு, அதற்குரிய சட்டதிட்டங்களை அமைத்தல் ஆகிய விஷயங்களில் முஹம்மது அலிக்குப் பெரும் பங்கிருந்தது. அக்காலம்முதல் முஹம்மது அலியின் வாழ்க்கை உச்சிமுதல் உள்ளங்கால்வரை ராஜீய வாழ்க்கையாகவே ஏற்பட்டுவிட்டது."

லீக்கின் முக்கிய கோரிக்கை: முஸ்லிம்களிடம் அக்காலத்தில் ஓரளவு விழிப்பு உண்டாகி இருந்தது. முஸ்லிம்கள் ராஜீய விஷயங்களில் முனைந்து நின்று, பங்கெடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருந்தனர். இதற்குக் காரணம் முஸ்லிம் லீக்கின் முக்கிய கோரிக்கை மிகவும் கீழ்த்தரமானதாகவே ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பதாகவே இருக்கக்கூடும். வருஷத்தில் ஒருமுறை ஓரிடத்தில் வருஷாந்திர மகாநாட்டைக் கூட்டி, அரசாங்

கத்துக்கு ஸ்தோத்திரம்செய்து, ஹிந்துக்களின் கெடுதல்களைக் கூறுவதும், "முஸ்லிம்களுடன் அவர்களுடைய தேசச் சகோதரர்கள் அநீதி செய்கிறார்கள், அரசாங்கத்தார் சிற்சில சமயத்தில் இதர சகோதரர்களுக்குத் தங்களுடைய கிருபாகடாக்ஷத்தைச் செய்துவிடுகிறார்கள், உயர்தர உத்தியோகப் பதவிகள் முஸ்லிம்களுக்குக் கிடைப்பதில்லை, கீழ்த்தர உத்தியோகப் பதவிகளிலும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படவில்லை, ஆதலால், ராஜவிசுவாசிகளாகவும் அநீதி செய்யப்பட்டவர்களாகவுமிருக்கிற எங்களை அரசாங்கம்தான் கிருபைக் கண்ணுடன் பார்க்கவேண்டும்" என்று தீர்மானத்தைச் செய்துவிட்டு, கலைந்துவிடுவதாகவே இருந்தது. அக்காலத்திலிருந்த காங்கிரஸ் மகாசபையின் நிலைமையும் கிட்டத்தட்ட இம்மாதிரியேதானிருந்தது. "ராஜ விசுவாசிகள்" என்று கூறிக்கொள்வதைக் காங்கிரஸ்வாதிகள் தங்களுக்குப் பெருமையாகக் கருதி வந்தனர். வருஷத்தில் ஓரிடத்தில் ஒன்றுகூடி, அநுதாபத் தீர்மானங்களையும், சில வேண்டுகோள்களையும் நிறைவேற்றிவிட்டு, அப்பால் மௌனமாக இருந்துவிடுவதுதான் காங்கிரஸ் மகாசபையின் வேலையாகவும் இருந்தது.

முஹம்மது அலியின் ஊழியம்: ஆனால், மௌலானா முஹம்மது அலி அவர்களுக்கு முஸ்லிம்லீக்கில் சேர்ந்து உழைக்கும் விஷயத்தில் சரியானபங்கு கிடைத்தபோது, முஸ்லிம்லீக் என்ற உயிரற்ற உடலத்தில் புதிய உயிரை உண்டுபண்ண விரும்பினார். மற்றவர்களுக்கு உணர்ச்சி

யையும் விழிப்பையும் உண்டுபண்ணத்தக்க சக்தியை அதில் உற்பத்திசெய்ய விரும்பினார்.

முஸ்லிம் லீக்கின் கோரிக்கை மிகத் தாழ்ந்ததாக இருக்கிறது என்ற உணர்ச்சி அவருக்கு இருந்தது. ஆகவே, அவர் சலியாமல் உழைத்தார். கடைசியாக முஸ்லிம் லீக்கின் நிர்வாகிகளும் இவ்வுண்மையை உணர்ந்தனர். மிக தைரியத்துடனும், துணிவுடனும் "இந்தியாவின் எதிர்கால ஆட்சி அக்காலத்திற்குத் தகுந்தவாறு ஸெல்ப் கவர்ன்மெண்டாக இருக்கவேண்டும் என்பதே முஸ்லிம் லீக்கின் முக்கிய நோக்கம்" என்று அறிவித்தனர்.

ஆனால், முஹம்மது அலியின் முயற்சி இம்மட்டுடன் முடிவடைந்து விடவில்லை. இதில் அவர் சரியாகப் புதிய உணர்ச்சிகளை உண்டாக்கிக்கொண்டே இருக்க விரும்பினார். ஆதலால், அவர் முஸ்லிம்லீக்கைவிட்டு ஒருபோதும் பிரிந்ததே இல்லை. கிலாபத் இயக்க காலத்திலும் சரி, அதற்குப் பின்னுள்ள காலத்திலும் சரி, முஸ்லிம்லீக்கைவிட்டு அவர் வெளிப்படவே இல்லை. அதில் அவர் எப்பொழுதும் கலந்துகொண்டும், அதற்கு வழிகாட்டிக்கொண்டுமே இருந்தார்.

ஐந்தாம் அத்தியாயம்

வைத்திய தூதுவக்கூட்டம்

"பால்கன் யுத்தம்" நடைப்பெற்ற காலத்தில் இந்தியாவிலிருந்து முஸ்லிம்களின் வைத்திய தூதுவக் கூட்டம் துருக்கிக்குச் சென்று, காயமடைந்த துருக்கி வீரர்களுக்கு சிகிச்சை செய்து, அவர்கள் பால் தங்களுக்குள்ள அபிமானத்தைக் கிரியாம்சையில் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்தது நமது மௌலாஞ செய்த அரிய ஊழியங்களில் ஒன்ருகும்.

இந்தியாவிலிருந்து வைத்திய தூதுவக் கோஷ்டியை அனுப்ப வேண்டும் என்று அவர் உறுதி கொண்ட சமயம், இந்தியாவின் நிலைமை அதற்கு அனுசரணையாக இருக்கவில்லை. இம்முயற்சியில் வெற்றி பெறுவதற்குரிய மார்க்கம் எதுவும் தோன்றவில்லை. ஆனல், அவர் தம்முடைய திறமையினுலும், சக்தியினுலும் இக் காரியத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்று முயன்று, உலகம் ஆச்சரியப்படும்படியான முறையில் அதனை நன்கு நிறைவேற்றினுர். அதன் விபரம் வருமாறு:—

பால்கன் யுத்தம்: 1912-ம் வருஷத்தில் பால்கன் யுத்தம் ஆரம்பமாயிற்று. அச்சமயம் இந்திய முஸ்லிம்களிடம் உணர்ச்சியும், ஆத்திரமும், அனுதாபமும் முன் இல்லாத மாதிரியில் உண்டாயின.

அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் கூட்டத்தார்களும் தங்களது 'ராஜ விசுவாசத்தை' ஒரு பக்கம்

வைத்து விட்டு, துருக்கியர் பாலும், உதுமானிய அரச குடும்பத்தார் பாலும் தங்கள் அனுதாபத்தைக் காண்பித்துக்கொள்ளவாரம்பித்தனர்.

இந்திய முஸ்லிம்கள் தங்களுடைய உணர்ச்சியையும் ஆவேசத்தையும் காட்டியது இதுதான் முதல் முறை என்றுங் கூறலாம். இந்திய முஸ்லிம்கள் தங்களது முஸ்லிம் சகோதரர்கள் பால் தங்களுக்குள்ள அனுதாப உணர்ச்சியைப் பகிரங்கமாகக் காண்பித்தனர். ஏழை முதல் பணக்காரர்கள் வரை இவ்வுணர்ச்சி ததும்பியவர்களாக முன் வந்தனர்.

மிஸ்டர் மும்தாஜ் ஹஸன்: லக்நௌவிலுள்ள பிரபல பாரிஸ்டரான மிஸ்டர் மும்தாஜ் ஹஸன் அமீனாபாதில் மிகவும் உருக்கமான அரிய சொற்பொழி வாற்றினார். இக்கூட்டத்திற்கு வந்திருந்த டிப்டி கமிஷனர், மிஸ்டர் மும்தாஜ் ஹஸனின் ஆவேசம் நிறைந்த இந்தப் பிரசங்கத்தைப் பார்த்துப் பிரமித்ததுடன், தம்முடைய ஆச்சரியத்தையும் வெளியிட்டார். அதற்கு மறுமொழியாக மிஸ்டர் மும்தாஜ் ஹஸன் "இது மத விஷயம்; இதில் முஸ்லிம்கள் அஜாக்கிரதையாக இருந்து விடுவார்கள் என்று எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாது" என்று தைரியமாக துணிந்து கூறினார். அதன்பேரில் டிப்டி கமிஷனர் "முஸ்லிம்களின் இவ்வுணர்ச்சியில் தமக்கு அனுதாபம் உண்டு" என்பதாகத் தெரிவித்துக் கொண்டார்.

மௌலானா ஷிப்லீயின் செய்யுள்:—மௌலானா ஷிப்லீபோன்ற கஷ்டப்பட இயலாதவர்களும், சலக

காரியங்களையும் விட்டு ஒதுங்கி இருக்கும் பெரியார்களும் கூட, தங்களுடைய ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. அவர் உக்கிரமான ஒரு செய்யுட்கோவையை இயற்றினார். இச் செய்யுள்கள் கைஸர்பாக் கூட்டத்தில் படிக்கப்பட்டன. இன்றுங்கூட அநேக ஜனங்களின் செவிகளில் அச்செய்யுள்கள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன. பிறகு, பால்கன் பிரதேசத்தில் போர்நடக்கும் மைதானத்திற்கு வைத்தியத் தூதுவக் கூட்டம் சென்று திரும்பவந்தபோது, அதன் நற்பலனைப் பற்றிய செய்யுள்கள் கல்லுங்கரையும் வண்ணமாக இயற்றப்பட்டு வெளியிடப்பட்டன.

இவ்விரு செய்யுட் கோவைகளிலும் மௌலானா ஷிப்லீ, முஸ்லிம்களின் உணர்ச்சியை வெளியிட்டதுமல்லாமல், பிரிட்டிஷ் ஆட்சி முறையையும், முஸ்லிம்களுக்கு விரோதமான அவர்களது போக்கையும் மிகத் தைரியமாகக் கண்டித்துங் கூறி இருக்கிறார்.

டாக்டர் அன்ஸாரியின் நோக்கம்: இவ்வித நிலைமையில் இந்தியாவிலிருந்து வைத்திய தூதுவக் கூட்டம் ஒன்றை அழைத்துச் சென்று, காயம்பட்டவர்களுக்கும், கொல்லப்பட்டவர்களுக்கும் தங்களாலான ஊழியத்தைச் செய்யவேண்டும் என்ற நாட்டம் டாக்டர் அன்ஸாரிக்கு உண்டாயிற்று.

முஹம்மது அலியின் ஆதரவு: நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியிடம் டாக்டர் அன்ஸாரி தம்முடைய இந்நன்னோக்கத்தைக் கூறியபோது அவர் இந்நோக்கத்தை மிகப்பலமாக ஆத-

ரித்து, இந்த புண்ணியக் காரியத்தை அவசியம் செய்து முடிக்கவேண்டும் என்று அவரைப் பூரண மாகத் தயாராக்கினர்.

கஷ்டங்கள்: இப்புண்ணிய கைங்கரியத்துக்குப் பணமில்லாக் குறை எல்லாவற்றிற்கும் பெரிய சங்கட மாக ஏற்பட்டது. போதிய பணமில்லாமல் இக்காரியம் இனிது நிறைவேறுவதற்கில்லை.

டில்லி செம்பிறைச் சங்கம்: இக்காலத்தில் துருக்கி வீரர்களுக்கும், உதுமானிய அரச குடும்பத்தி னருக்கும் உதவி புரிவதற்காக வென்று இந்தியாவி லுள்ள பெரிய நகரங்களில் "செம்பிறைச் சங்கம்" என்ற பெயரால் ஆங்காங்கு பல சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டன. முஸ்லிம்களின் உணர்ச்சியை மதித்து அர சாங்கத்தார் துருக்கியருக்குப் பண உதவிசெய்ய அனு மதி கொடுத்தது மட்டுமில்லாமல், இதற்கு வேண்டிய சௌகரியங்களையும் உண்டுபண்ணினர். ஆதலால், இந்தச் சங்கங்கள் பண வசூல் செய்வதும், துருக்கிக்கு அனுப்புவதுமே இவைகளின் முக்கிய நோக்கமாக ஏற்பட்டன.

ஆகவே, மௌலானா முஹம்மது அலி இவ்விஷ யத்தை டில்லி செம்பிறைச் சங்கத்துக்கு அறிவித்து, இதன் அவசியத்தையும், அவசரத்தையும், முக்கியத்தை யும் எடுத்து விளக்கினர். இச்சங்கத்தின் அங்கத்தினர் களுக்கு, இப்படிப்பட்ட தூதுவக்கூட்டம் செல்லும் முக் கியாம்சத்தைப்பற்றி நன்கு உணர்த்தினர். இதன் பல ஞக,, இச்சங்கம் தூதுவக் கூட்டத்தின் செலவுக்காக

பதினையாயிரம் ரூபாய் நன்கொடை யளிப்பதாக ஒப்புக்கொண்டது.

வாக்குறுதிக்கு மாறு: ஆனால், இவ்வாக்குறுதி இன்னும் சரியாகப் பூர்த்தியாகுவதற்கு முன்பே, இச்சங்கம் தனது அபிப்பராயத்தை மாற்றிக்கொண்டது. வைத்திய தூதுவக்கூட்டத்துக்கு அளிப்பதாகக் கூறிய தொகையை, நேரோகத் துருக்கிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தது. நமது மௌலானா இச்சங்கத்தாருக்கு வேண்டியமட்டுங் கூறினார்; கெஞ்சினார்; அபார முயற்சிகளெல்லாம் எடுத்துக்கொண்டார்; இதனால் ஏற்படும் நற்பயனை அவர்களுக்கு எடுத்துக் கூறினார். ஆயினும், ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. செம்பிறைச் சங்கத்தின் பெரும்பான்மையினர் தங்கள் அபிப்பராயத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

பிரமிக்கத்தக்க துணிச்சல்: இச் சம்பவத்தால் மௌலானாவிற்கு ஏற்பட்ட ஆச்சரியகரமான துணிச்சலைப் பற்றி மீர் மஹ்பூஜ் அலி சாகிப் தம்முடைய பிரத்தியக்ஷ அனுபவத்தைப் பின் வருமாறு கூறுகிறார்:

"நம்மிடம் எத்தனை ரூபாய் இருக்கிறது என்று, செம்பிறைச் சங்கத்துக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே, முஹம்மது அலி என்னிடம் (மீர்மஹ்பூஜ் அலிசாகிபிடம்) கேட்டார். இத்தனை ஆயிரமும் இத்தனை நூறுகளும் இருக்கின்றன என்று நான் கூறினேன். அதற்கவர் "அல்ஹம்து லில்லாஹ், நம்மிடம் போதிய பணமிருக்கிறது. அன்ஸாரி! நான் முடிவு செய்து விட்டேன். இன்ஷா அல்லாஹ், வைத்திய தூதுவக்

கூட்டம் அவசியம் போகவேண்டும். என்னிடம் பத்து ரூபாய் இருந்தாலும் கூட நான் ஊக்கத்தைக் கைவிடேன். நீங்கள் அல்லாஹு தஆலாவின் பெயர் சொல்லி தூதுவக்கூட்டம் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். தொகை சேர்ப்பது எனது பொறுப்பு” என்று கூறினார்.

விண்ணப்பம்: அதே ராத்திரியில் தமது ஊழியரான முஹம்மது ஹுஸைனை அழைத்து, தமது அறையில் விளக்கேற்றி வைக்கும்படி கூறி, அங்கு சென்று தனித்திருந்து, இது சம்பந்தமாக முஸ்லிம்களின் மனதை ஆட்டிவைக்கக் கூடிய விதமாக, மிகவும் உருக்கமான விஞ்ஞாபனத்தை எழுதிக் “காம்ரேட்” பத்திரிகையில் பிரசுரித்தார். இவ்விண்ணப்பம் முஸ்லிம்களுக்குக் கிடைத்தபின் “காம்ரேட்” பத்திரி காலயத்தில் பணமழை பொழிய ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் பதினாயிரம், பதினையாயிரம் ரூபாய்கள் வந்து குவிந்தன. மணியார்டர்களிலும் பார்சல்களிலும் கையெழுத்துப் போட்டுப்போட்டு எனது கையும் கடுப்பெடுத்துக்கொண்டது என்பதற்கு நான் சாக்ஷியாக இருக்கிறேன்”.

கடைசியாக, இவ்விதமான நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கு மிடையில், இம்முக்கியகாரியத்தை நமது மௌலானா முஹம்மது அலி ஆரம்பித்து, இனிது நிறைவேற்றி, துருக்கி வீரர்களுக்கு ஒப்பற்ற ஊழியம் புரிந்தார்.

மௌலானா

பால்கன் யுத்தத்தில் இந்திய வைத்திய தூதுவக்கூட்டத்து ஊழியர்.

(1912)

ஆரும் அத்தியாயம்

டர்னர் மாரிஸன் கம்பெனியும் இதர சம்பவங்களும்

துருக்கியருக்குக் கடன்: துருக்கிக்குப் பொருளாதார நெருக்கடியையும் சங்கடங்களையும் உண்டு பண்ணி, மிகவும் கேவலத்தைத் தரக்கூடிய உடன்படிக்கையில் துருக்கியைக் கையொப்பமிடும்படி நிர்பந்தித்து விடவேண்டும் என்று ஐரோப்பிய வல்லரசுகள் 1913-ம் வருஷத்தில் முயற்சி செய்தன. இம்முறையும் மௌலானு முஹம்மது அலி அவர்கள் முன் நின்று, "துருக்கியருக்குப் பொருளுதவி செய்ய அரசாங்கத்தார் அனுமதி கொடுக்கவேண்டும்" என்று முயற்சி எடுத்துக் கொண்டார். இம்முயற்சியில் அவர் வெற்றி யடைந்தவுடன், அவர் இந்தியாவின் முக்கிய பட்டினங்களிற் சுற்றுப் பிரயாணம் செய்து, துருக்கிக் கடன் பத்திரங்களில் பங்கு வாங்கிக்கொள்ள வேண்டுமென்று முஸ்லிம்களைத் தூண்டினுர். இம்முயற்சியிலும் அவர் பெரும்பாலும் வெற்றியடைந்தார். இதைப்பற்றி,

"இந்தியாவிலுள்ள முஸ்லிம் ஜனங்கள் துருக்கி அரசாங்கத்துக்கு ஒரு பெருந்தொகையைக் கடனுகக் கொடுத்தது இதுதான் முதல் தடவையாகும்" என்று மௌலானுவின் பழைய அபிமானி ஒருவர் கூறி இருக்கிருர்.

மக்துனியாவுக்கு வாருங்கள்: பால்கன் பிரதேசத்திலுள்ள அரசாங்கங்கள் மனிதத் தன்மைக்கு மாருக, மிருகத்தனமாக நடந்து கொண்ட அநியாய

அட்டூழியங்களைப் பார்த்த துருக்கியரின் ஒரு சங்கம் "மக்தூனியாவுக்கு வாருங்கள், எங்களுக்கு உதவி புரியுங்கள்" என்ற மகுடத்தின்கீழ் ஒரு விஞ்ஞாபனம் விடுத்தது. இவ்விஞ்ஞாபனம் உண்மை நிகழ்ச்சிகளை அறிவிப்பதாகவும், அநியாய அக்கிரமங்களை அறிவிப்பதாகவுமிருந்தது.

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி இவ்விஞ்ஞாபனத்தை தம்முடைய பத்திரிகைகளில் பாகம் பாகமாகப் பிரித்துப் பிரசுரம் செய்தார். இதன் பேரில் டில்லி ஜில்லா மாஜிஸ்டிரேட் "ஹம்தர்த்", "காம்ரேட்" பத்திரிகைகளில் இவ்வேண்டுகோள் பிரசுரமான பிரதிகளத்தனையையும் பறிமுதல் செய்துவிட்டார்.

ஜாமின் கட்ட வேண்டும்: இப்பத்திரிகைகளுக்காக இரண்டாயிரம் ரூபாய் ஜாமின் கட்ட வேண்டும் என்றும் உத்தரவு பிறந்தது. இதைப்பற்றி அவரது பழைய நண்பர் பின் வருமாறு கூறி இருக்கிறார்:—

"இவ்வுத்தரவை எதிர்த்து மௌலானா கல்கத்தா ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். கியாதிபெற்ற நியாயவாதியான மிஸ்டர் மார்டின் என்பவர் நமது மௌலானாவின் சார்பில் வெகு பிரயாசையுடன் தனது வாணாள் முழுவதிலும் பெற்ற சட்ட அனுபவத் திறமையைக் காட்டி வாதாடி ஜாமின் கட்ட உத்தரவு செய்தது நியாயமன்று என்பதாக ருஜூப்பிக்க முயன்றார். ஆனால், "அச்சுச் சட்டம் மிகப் பலமானதும் விசாலமானது மாகும். இதன்படி வேதங்களையும் கூட அடக்கிவிட முடியும்" என்று நீதிபதிகள் தீர்ப்புக்

கூறியபோது, வழக்கறிஞரான மிஸ்டர் மார்டினும், கக்ஷிக்காரரான மௌலானு முஹம்மது அலியும், இந்தியாவில் வாழ்பவர்களும் பிரமிப்படைந்தனர்."

டர்னர் மாரிஸன் கம்பெனி: மௌலானு அவர்களின் பழைய நண்பரான அதே கனவான், மேலும் கூறிய இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும்:—

"டர்னர் மாரிஸன் என்ற கப்பற் கம்பெனி ஹிஜாஸுக்குப் போகவர ரிட்டர்ன் டிக்கட் கொடுக்கும் காண்ட்ராக்டைத் தனக்குத் தர வேண்டும் என்று பம்பாய் கவர்ன்மெண்டாரிடம் மனுக் கொடுத்தது. அந்த கவர்ன்மெண்டு டர்னர் மரரிஸன் கம்பெனிக்கு சிபாரிஷ் செய்ததுடன், இந்தியா கவர்ன்மெண்டாரிடம் தந்தியின் மூலம் அனுமதியும் கோரிற்று. இவ்விரகசிய நடவடிக்கையின் விபரம் மௌலானுவுக்குத் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது. உடனே, அவர் "காம்ரேட்" பத்திரிகையில் விசேஷ அனுபந்தம் பிரசுரித்து, இந்த நடவடிக்கையைக் கண்டித்தது மட்டுமில்லாமல், இந்திய வைசிராய் லார்டு ஹார்டிங்கின் கவனத்திற்கும் இப்பிரசினையைக் கொண்டு வந்தார். இம் முயற்சியின் பயனுக டர்னர் மாரிஸன் கம்பெனியின் இவ்வேண்டுகோளை மேன்மை தங்கிய வைசிராய் உடனே ரத்துச் செய்து விட்டார். ஆயினும், மௌலானுவைச் சிறைக் கூடத்திற்கனுப்பிய பின், இவ்வேற்பாடு நல்ல ஏற்பாடு என்பதாக முடிவு செய்யப்பட்டு, அதே டர்னர் மாரிஸன் கம்பெனிக்கு இந்த காண்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது.

ஏழாம் அத்தியாயம்

ஹம்தர்த் பத்திரிகை

கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு: தமது பத்திரிகை அரசாங்கத்தின் தலைநகரிலிருந்து பிரசுரமாகவேண்டும் என்பது மௌலானாவின் விருப்பம். ஆதலால், கல் கத்தா இந்தியாவின் தலைநகராக இருந்தபோது "காம் ரேட்" பத்திரிகையை கல்கத்தாவில் ஆரம்பித்தார். பிறகு, அரசாங்கம் தனது தலைநகரை மாற்றிக்கொண்டு கல்கத்தாவைவிட்டு டில்லிக்கு வந்தவுடன், நமது மௌலானாவும் கவர்ன்மெண்டைப் பின்றொடர்ந்து டில்லிக்கு வந்து சேர்ந்தார். இங்கு வந்தபின் "காம் ரேட்" பத்திரிகையுடன் "ஹம்தர்த்" என்ற உருது பத்திரிகையையும் ஆரம்பித்தார்.

தாமதம்: இப்பத்திரிகையை ஆரம்பிக்கவேண்டு மென்ற எண்ணம் நமது மௌலானாவிற்கு முன்னரே இருந்தது. ஆயினும், நிலைமை ஒத்து வராததால், இதை ஆரம்பித்து நடத்துவது தாமதத்திலேயே இருந் தது. பேருத்திலிருந்து இதற்கு வேண்டிய டைப்பு களை அவர் தருவித்திருந்தார். ஆயினும், "ஹம்தர்த்" பத்திரிகைக்குத் தேவையான அளவிற்கு அவை இல் லாததால், வேண்டிய டைப்புகள் முழுதும் வந்து சேரும்வரை பத்திரிகையை ஆரம்பிப்பது கஷ்டமாக இருந்தது.

ஹக்கீம் அஜ்மல்கானின் ஆலோசனை: இதைப் பற்றி மீர் மஹ்பூஜ் அலிகான்கூறும் விபரம் வருமாறு:—

"ஒருநாள் ஹக்கீம் அஜ்மல்கான் "காம்ரேட்" காரியாலயத்திற்கு விஜயம் செய்தார். அப்பொழுது, "ஹம்தர்த்" பத்திரிகையைப் பிரசுரிப்பதில் என்ன தாமதம் என்று விசாரித்தார். இன்னமும் பத்திரிகைக்கு வேண்டிய டைப்புகள் முழுதும் வந்து சேரவில்லை என்று முஹம்மது அலி கூறினர். அப்போது ஹக்கீம் அஜ்மல்கான் "தற்போது சமாசாரங்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆதலால், போதிய அளவு டைப்புகள் வராவிட்டாலும், ஒன்றிரண்டு பக்கங்களேனும் தினசரி பிரசுரியுங்கள். வரும்படியும் கிடைக்கும். பொதுஜன ஊழியமும் நடைபெறும்" என்று கூறினர்.

ஹம்தர்தின் தூதன்:—மௌலானு அவர்களுக்கு இவ்வாலோசனை நன்ருகத் தோன்றிற்று. உடனே, 1913ஹு பிப்ரவரிமீ 23உ "ஹம்தர்த்" பத்திரிகை பிரசுரமாக ஆரம்பித்துவிட்டது. இதற்குப் பொதுவாக "ஹம்தர்தின் தூதன்" என்பதாக ஜனங்கள் கூறுவர். இப்பத்திரிகை தினசரி ஒருதாள் அச்சிட்டு வெளியிடப்படுவதும், உடனுக்குடன் விற்பனையாகிவிடுவதும் வழக்கம்.

ஹம்தர்த் பத்திரிகையின் ஆசிரியர்கள்: மனிதர்களின் திறமையை யுணர்ந்துகொள்வதிலும் மௌலானுவிற்கு நிபுணத்துவம் இருந்தது என்று தெரியவருகிறது. "ஹம்தர்த்" பத்திரிகையின் ஆசிரியக் கூட்டத்தாரை அவர் பொறுக்கி எடுத்து வைத்திருந்தார். இவரிடமிருந்து அவர்கள் பயிற்சிபெற்றதன் பலனுக

அவர்கள் பல அந்தஸ்துகளில் பொதுஜனங்களிடம் பிரபலஸ்தர்களாகி இருக்கிறார்கள். அவர் தம்முடைய ரசாயன மாறுபாடளிக்கும் சக்தியால் அநேக அணுக்களை சூரியனாக ஆக்கிவிட்டார். இந்தியாவிலுள்ள எந்தப் பத்திரிகையும் இன்றுவரை இவ்வளவு திறமையான ஆசிரியக் கூட்டத்தார்களை ஏககாலத்தில் ஒன்றுசேர்க்கவில்லை. "ஹம்தர்த்" பத்திரிகையின் ஊழியர்கள் ஒவ்வொருவரும் தத்தம் காலத்தில் பெரிய பண்டிதர்களாகவும், பத்திரிகை தொழிலில் நிபுணர்களாகவும் ஆயினர்.

இப்பத்திரிகைக்கு மானேஜராக இருந்த மீர் மஹ்பூஜ் அலி சாகிப் நிகரற்ற இலக்கிய வித்வானாகவும், ஹாஸ்ய வியாசங்களெழுதுவதில் கைதேர்ந்தவராகவுமிருந்தார். ஸெய்யத் ஹாஷிமீ பரீத்ஆபாதி, காஜீ அப்துல் கப்பார், ஸெய்யித் ஜாலிப், மௌலானா அப்துல் ஹலீம் ஷறர், பாறூக் சாகிப் தீவானா ஆகிய பிரபல பத்திராசிரியர்களும், நூலாசிரியர்களும் "ஹம்தர்த்" பத்திரிகையின் காரியாலயத்தில் இருந்தவர்களேயாவர்.

பிறகு, இரண்டாவதுமுறையாக அப்பத்திரிகையை ஆரம்பித்து நடத்தியகாலத்தில் ஆரிப்ஹஸ்வி, டாக்டர் ஸயீத் அஹ்மது போன்றவர்களை ஒரே ஸ்தாபனத்தில் ஒன்றுகூட்டி வைத்ததானது, நமது தலைவர் மௌலானாவின் வச்யசக்தியின் பலனேயாகும். நிகரற்ற வல்லவர்களான இவ்வூழியர்களையும், மௌலானா முஹம்மது அலிபோன்ற ஆசிரியரையும் கொண்டு வெளியிடப்படும் பத்திரிகை, பத்திரிகை உலகில் சந்திர சூரியனாகப்

பிரகாசிக்காமல் இருக்கவும் முடியுமோ? இப்பத்திரிகை பிரகாசித்தது. இதர கிரகங்கள், நக்ஷத்திரங்களின் பிரகாசத்தில் சிறிது மங்கலையும் ஏற்படுத்திற்று.

பத்திரிகை நடத்தும் முறை:—அக்காலத்தில் "ஹம்தர்த்" பத்திரிகையின் ஆசிரிய கூட்டத்தில் ஒருவராக இருந்த காஜீ அப்துல் கப்பார் என்பவர் மௌலானு அவர்கள் பத்திரிகை நடத்தும் முறையைப்பற்றி பின் வருமாறு எழுதுகிறுர்:—

"என்னுடைய வாழ்க்கையில் அந்தக் காலைநேரம் என்றும் ஞாபகமாக இருக்கும். ஆசிரியன், மாணவன் என்ற முறையில் முஹம்மது அலிக்கும், எனக்கும் இடையில் நிரந்தரமான சம்பந்தம் ஆரம்பமாயிற்று. அந்தக் காலத்தை நான் மறக்கமுடியாது. அந்தக் காலத்தில் "ஹம்தர்த்" "காம்ரேட்" பத்திரிகைகளின் காரியாலயத்தில்,காலையிலும் மாலையிலும் பத்திரிகையின் ஆசிரியக் கூட்டத்தார் அனைவரும் ஆலோசனை செய்வதற்காக ஒன்று கூடுவோம். ஷௌகத் அலி, முஹம்மது அலி, ஸெய்யித் மஹ்பூஜ் அலி, ராஜா குலாம் ஹுஸைன், நான், இன்னும் மூன்று நான்கு பேர்கள் ஆகிய எல்லோரும் விஷயங்களைப்பற்றி விவாதிப்போம். முஹம்மது அலி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையைப்பற்றிக் கட்டளையிடுவார். ஒரு சிறிய நோட் எழுதுவதற்கும் அவர் முக்கிய விஷயங்களைப்பற்றிய விபரங்களைக் கூறுவார். பின்னர் அவைகளை எல்லாம் ஒன்றுசேர்த்து எழுதி முடிக்கும்போது "ஹம்தர்த்" பத்திரிகைக்கு 8-10 காலம் நிறைந்துவிடும்.

"ஹம்தர்த்" பத்திரிகையின் நிலைமை:—காஜீ அப்துல் கப்பார் சாகிப் "ஹம்தர்த்" பத்திரிகையின் நிலைமையைப்பற்றி மேலும் கூறுவதாவது:—

"ஹம்தர்த்" பத்திரிகாலயத்தின் கால நிலையும் மிகவும் நூதனமாக இருந்தது. அந்தக் கூட்டுகளும், மனத்திலுள்ள எண்ணங்களைப்பற்றிய உணர்ச்சிகளும், இக்பாலின் செய்யுள்களும், சகோதரர் ஷௌகத் அலியின் ரீங்காரமும், குலாம் ஹுஸைன் மர்ஹூம் அவர்களின் ஹாஸ்யங்களும், சகோதரர் மஹ்பூஜ் அலி அவர்களின் இனிய சம்பாஷணையும் அந்தந்த இடங்களுக்குப் பொருத்தமானவிதத்தில் வெளியாகிக் கொண்டிருந்தன. இது வானலோக யாத்திரைக்குரிய ஒரு பரக்கத்தென்று சொல்லத் தகும்."

பத்திரிகை நடத்தும் முறை:—"ஹம்தர்த்" பத்திரிகையைப்பற்றிய இந்த அத்தியாயத்திலேயே அவர் பத்திரிகை தொழிலில் கையாண்ட ஒழுங்கு முறைகளையும், கொள்கைகளையும் பற்றிக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். இக்கொள்கையின் பிரகாரம்தான் "ஹம்தர்த்" பத்திரிகை இந்திய பத்திரிகை உலகில் அழிவில்லாத ஒரு சித்திரத்தை ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறது.

அவர் பரோடாவில் உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த காலத்தில் செய்யுள் எழுதவும், வியாசம் எழுதவும் அவருக்கு விருப்பமுண்டாகுமாயின், பம்பாயில் பிரசுரமாகும் "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் தம்முடைய பேனா வன்மையைக் காண்பித்து, அதன்

ஆசிரியரிடம் புகழ் மாலையை வாங்கிக் கொள்வார். ஆகவே, இந்த மைதானத்தில் வரவேண்டும் என்ற எண்ணம் அவரது உள்ளத்திலிருந்து வளர்ந்து கொண்டிருந்தது. உத்தியோகம் என்ற சிறையிலிருந்து கூடிய வரை துரிதமாக விடுதலை யடைந்துவிட விரும்பிக் கொண்டிருந்தார்.

அக் காலத்தில் அவருக்கு அறிமுகமானவரான நிஜாமுத்தீன் சாகிப் என்பவர் குஜராத்திலிருந்து ஒரு பத்திரிகையை வெளியிட விரும்பி, நமது மௌலானுவிடம் இது சம்பந்தமாகக் கலந்தாலோசனை செய்தார். அப்பொழுது அவருக்கு நமது மௌலானு எழுதி அனுப்பிய ஆலோசனைகள் வருமாறு :—

"பத்திரிகை வெற்றியுடன் நடைபெற வேண்டுமாயின் இத்தனை அம்சங்கள் அதில் அவசியம் இருக்க வேண்டும்.

1. தனிப்பட்டவர்களைப்பற்றி பத்திரிகை முற்றிலும் விலகி இருக்க வேண்டும் அதாவது எந்த விரோதியைப்பற்றியும்—அவர் விரோதியாக இருக்கிறார் என்பதகாக—ஒன்றும் குறைகூறி எழுதக்கூடாது. எந்த நண்பரைப்பற்றியும்—அவர் நண்பராக இருக்கிறார் என்பதற்காக—புகழ்ந்து எழுதவும் கூடாது.

2. ஒரு மனிதருக்கு விரோதமாகவோ அல்லது ஒரு பத்திரிகைக்கு விரோதமாகவோ எழுத நேர்ந்தால், அவர் அபிப்பராயம் கூறும் விஷயத்தில் மட்டும் அவ்வாக்ஷேபனை இருக்க வேண்டும். அதில் சொந்த விஷயம் எதுவுமிருக்கக் கூடாது.

3. எவ்விஷயத்தை எழுதினாலும் வாக்கியங்களை ஜோடிக்கும் எண்ணத்தின்பேரில் எழுதக் கூடாது. ஜனங்களைக் குத்துப்பாடு செய்யும் நோக்கத்தில் எழுதக் கூடாது. நேர்மையாகவும், கண்ணியமாகவும் எழுத வேண்டும்.

4. ஆங்கில தினசரி பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளையே இயன்றவரை பிரசுரிக்கவேண்டும். உள்ளூர் செய்திகளைப்பற்றி அதிகமாக சமாசாரம் அறிவிக்க வேண்டுமென்றிருந்தால், அச்சமாசாரத்தைக் கூறுபவர் உண்மையாளரா? நம்பத்தகுந்தவரா? என்பதைக் கவனிப்பது மிகவும் அவசியமாகும்.

5. பத்திரிகையின் நோக்கம் தனது சமூகத்துக்கு நன்மை செய்விக்க வேண்டும் என்பதாக மட்டும் இருக்க வேண்டுமே யல்லாது, பிற சமூகத்தாருக்குத் தீங்கு செய்ய வேண்டும் என்பதாக இருக்கக் கூடாது. முக்கியமாக ஹிந்துக்களை அனுவசியமாகத் தாக்கி எழுதக் கூடாது. ஆனல், அவர்கள் தாக்கி எழுதினல் அதனை மறுத்து, தற்காப்புச் செய்து கொள்வது அவசியம்.

6. பத்திரிகை என்பது செய்திகளைச் சேகரித்து வைக்கப்பட்ட ஒரு கத்தையாகும். ஆதலால், கூடியவரை செய்திகளை அதிகமாகப் பிரசுரிக்க வேண்டும்.

7. வியாசங்களில் ஆசிரியரின் வியாசம் ஒன்றிருக்க வேண்டும். அதில் அக்காலத்திலுள்ள சமாசாரங்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றிய விவாதமிருக்க வேண்டும். இந்த வியாசத்தைப் பத்திரிகையில் இடத்தை

நிரப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதக் கூடாது. மிகவும் அவசியமான விஷயங்களையே எழுத வேண்டும். அந்த வியாசம் ராஜீய விஷயம் சம்பந்தப் பட்டதாக இருந்தாலும் சரி, அல்லது கல்வி சம்பந்தப் பட்டதாக இருந்தாலும் சரி, அல்லது வர்த்தகம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரியே.

8. ஆசிரியக் குறிப்புகள் அச்சமயம் நடைபெறும் சம்பவங்களையும், செய்திகளையும் பற்றித் தமது அபிப்பராயத்தை வெளியிடுவதற்காகவே இருக்கின்றன. ஆதலால், அதில் அவ்விஷயங்களே இருக்க வேண்டும்.

9. மற்றவர்கள் எழுதிய வியாசமும் இருக்க வேண்டும்.

10. மாதத்தில் ஒரு முறை அரைப்பத்தி அளவுக்கு தக்க செய்திகளை எழுதி அனுப்ப, பற்பல இடங்களிலும் வியாச நேயர்களையோ அல்லது சம்பளத்துக்கு எழுதுபவர்களையோ ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. வெளியிலிருந்து வரும் வியாசங்களில் அவசியமானவைகளை மட்டிலுமே பிரசுரிக்க வேண்டும். நிருபர்கள் தங்கள் திறமையைக் காட்டி எழுதும் காரியமில்லாத வியாசங்களைப் பிரசுரிக்கலாகாது.

12. மத சம்பந்தமான விவாதங்களிலிருந்து பத்திரிகை முற்றிலும் ஒதுங்கி இருக்க வேண்டும்.

13. பத்திரிகை சம்பந்தமான எல்லா விஷயங்களையும் ஆசிரியரே நேரில் கவனிக்க வேண்டும். இதர பத்தி

ரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகளிலிருந்து விஷயங் களைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். தினசரி பத் திராசிரியர்கள் எவ்வளவு சிரமத்தை எடுத்துக் கொள் கிறார்கள் என்பது தங்களுக்குத் தெரியாது. நான் எகிப்தைப்பற்றி ஏதேனும் எழுத வேண்டியதிருக்கு மாயின், தினசரிப் பத்திரிகைகளின் மூலம் நான் செய்திகளைத் தெரிந்து கொண்டே இருப்பேன். அத் துடன் 3, 4 புத்தகங்களையும் ஆரம்ப முதல் கடைசி வரையில் படித்து முடிப்பேன். அதன் பிறகு தான் ஒன்று, இரண்டு பத்தியுள்ள வியாசமெழுதுவேன். நான் விரும்பினால் பெரிய வியாசங்களை எழுதிவிட முடியும். ஆனால், அவைகளைப் படிப்பவர்களுக்குச் சிரம மேற்படும்."

இவை மௌலானா முஹம்மது அலியின் பத்திரிகை தொழில் முறைகளாகும். இவைகளின்படி "ஹம் தர்த்" பத்திரிகை நடைபெற்றதால், அது எப்பொழு தும் பிறரால் பாராட்டப்பட்டுக் கொண்டே இருந்தது. அவர் அநேக முறைகளில் பெரிய மனிதர்களுக்கு மாறாக பத்திரிகையில் வியாசங்கள் எழுதி, மிகப் பல மாகக் கண்டனமும் செய்திருக்கிறார். ஆனால், மேலே கூறிய முறைகளைவிட்டு அவர் கொஞ்சமும் தவற வில்லை. தம்மால் கண்டிக்கப்பட்ட அந்தப் பெரிய மனிதர்களை வேறு விஷயத்தில் ஆதரிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுங்கால், அவர்களுக்குப் பூரண ஆதரவு அளித்து, தாம் செய்யவேண்டிய கடமையைச் சரிவர நிறைவேற்றியும் இருக்கிறார். டாக்டர் கிச்லு, டாக்டர்

ஆலம் ஆகியவர்களைப் பற்றிய விபரத்தில் நீங்கள் இதன் உண்மையைப் படித்திருப்பீர்கள்.

ஹக்கீம் பர்ஹம் கடிதம்:—"ஹம்தர்த்" பத்திரிகையை இரண்டாம் முறையாக ஆரம்பித்தபோது "மஷ்ரிக்" என்ற பத்திரிகையின் ஆசிரியரும் சொந்தக்காரருமான குர்க்குப்பூர் ஹக்கீம் பர்ஹம் என்பவர் மௌலானா அவர்களுக்கு நேர்மாறான கொள்கையுள்ளவராக இருந்தும், அடியிற்கண்ட கடிதத்தை நமது மௌலானாவிற்கு எழுதினார்:—

"தாங்கள் "காம்ரேட்", "ஹம்தர்த்" பத்திரிகைகளை நடத்த முடிவு செய்திருப்பது ரொம்ப சந்தோஷமாகும். தேசத்துடையவும், சமூகத்துடையவும் ஆட்டமான நிலைமை இனிச் சரிப்பட்டுவிடும் என்பதும், பொதுஜன அபிப்பராயம் சிதறுண்டிருப்பது இனி நீங்கிவிடும் என்பதும் நிச்சயம். முதலாவது பத்திரிகை வெளியானவுடன் எனது பெயரால் இரு பத்திரிகைகளையும் ஒரு வருஷத்திற்கு வி. பி. அனுப்புங்கள்"

"ஹம்தர்த்" பத்திரிகையை நமது மௌலானா நிகரற்ற வண்ணமாகச் சிறந்த முறையில் நடத்தினார். உருது தினசரி பத்திரிகைகளில் அஸோஸியேட்டட் பிரஸ், ராய்ட்டர் ஆகிய தந்தி சமாசாரங்களைத் தாங்கி முதல் முதலாக வெளிவந்த பத்திரிகை "ஹம்தர்த்" பத்திரிகைதான்.

பிரசுரம்:—இந்தச் சில விசேஷ அம்சங்களினால் "ஹம்தர்த்" பத்திரிகை ஜனங்கள் ஒவ்வொருவருடைய கையிலும் சென்று உலாவி வந்தது. யுத்தம் நடை

பெறுங்காலத்தில் இப்பத்திரிகையின் பிரசுரம் இரண்டு மூன்று மடங்கு அதிகமாகப்பெருகி விடுவதுண்டு. பல்லாயிரக்கணக்கான பிரதிகள் வெளியிடப்பட்டன. இன்று வரை உருது தினசரி பத்திரிகைகளில் எதற்கும் இத்தனை அதிகமான பிரசுரங்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் வாய்க்கவே இல்லை.

அரசாங்கத்தின் பாராட்டு:—" ஹம்தர்த் " பத்திரிகையின் இவ்வரிய ஊழியத்தை கவர்ன்மெண்டாரும் பாராட்டினர். அலி சகோதரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டபின்பு, மாகாண சீப் கமிஷனர் உருது பத்திரிகைகளின் மீது, அவைகளின் போக்கைப்பற்றி வருஷாந்திர அறிக்கை வெளியிட்டபோது, உருது பத்திரிகைகளின் பொறுப்பற்ற தன்மைகளைப்பற்றி மிக பலமாகக் கண்டித்துக் கூறி இருந்தார். அதில் "ஹம்தர்த்" பத்திரிகையை விலக்குச் செய்ததுமட்டு மில்லாமல் அதன் வியாசங்களையும், செய்திகளையும்பற்றிப் போற்றிப் புகழ்ந்தும் கூறி இருந்தார்.

தணிக்கை:—"ஹம்தர்த்" பத்திரிகையின் மீது தணிக்கையை ஏற்படுத்தி, அரசாங்கத்தாரின் சம்மதமின்றி எந்த வியாசத்தையும், செய்தியையும் பிரசுரிக்கப்படாது என்றும், அவ்வாறு பிரசுரிப்பது குற்றம் என்றும் உத்தரவு பிறப்பித்தபின், ஒரு ருசிகரமான சம்பவம் நிகழ்ந்தது. அதை மௌலானு பின்வருமாறு கூறி இருக்கிறார்:—

"ஹம்தர்த்" பத்திரிகையின் தணிக்கை ஆபிஸர் ஒரு முறை 'குருவி'க் கதையையும் கூட பத்திரிகையி

லிருந்து அகற்றிவிட்டார். அதைப்பற்றி அவரிடம் ஆக்ஷேபனை செய்தபோது, அவர் "சோதரீர்! இது குருவிக் கதைதான். இதிலுள்ள விஷயங்களும் தெளிவாகத்தானிருக்கின்றன. ஆனால், "ஹம்தர்த்" வாசகர்களிடம் பயமாக இருக்கிறது. இது வயிற்றுப் பிழைப்பு சம்பந்தப்பட்ட விஷயம். இதில் ஏதேனும் 'விஷம்' கலந்திருக்குமோ என்னவோ தெரியாது. இதே பதில் எங்கள் தலைமீதும் வந்துவிடும்" என்று கூறினர்.

நிறுத்தம்:—ஆகவே, கடைசியாக மௌலானா முஹம்மது அலி அவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்ட பின்னர், "ஹம்தர்த்" பத்திரிகை பிரசுரம் நிறுத்திவைக்கப்பட்டது. அதனை நிறுத்தாதிருக்க ஸெய்யித் ஜாலிப் சாகிப் எவ்வளவோ முயன்றார். ஆயினும், அவர் அம் முயற்சியில் வெற்றியடையவில்லை. கடைசியாகப் பத்திரிகைப் பிரசுரம் நின்றது.

இடைக்காலம் :—"ஹம்தர்த்" பத்திரிகை நிறுத்தி வைக்கப்பட்டபின், இரண்டாவது முறை ஆரம்பித்ததற்கு இடையிட்ட காலத்தில், இந்தியாவிலேற்பட்ட ஆபத்துகளையும், முஸ்லிம்களுக்கு நேர்ந்த கஷ்டங்களையும், பிரிட்டிஷாரின் நாடு பிடிக்கும் ஆசையால் முஸ்லிம் உலகுக்கேற்பட்ட சங்கடங்களையும், இந்திய ராஜீய விஷயங்களிலேற்பட்ட ராஜீய மாறுபாடுகளையும், நமது மௌலானாவின் மீதேற்பட்ட தொந்தரைகளையும் பற்றிக் கவனியாமல் "ஹம்தர்த்" பத்திரிகையின் ரிக்கார்டை மறுபடியும் கவனிப்போம்.

இரண்டாம் முறை "ஹம்தர்த்" பிரசுரம்:—அவர் பீஜப்பூர் சிறைக் கூடத்திலிருந்து விடுதலை யடைந்த பின் "காம்ரேட்" பத்திரிகையுடன் "ஹம்தர்த்" பத்திரிகையையும் மறுபடியும் ஆரம்பித்து நடத்தினார்.

இவ்விரண்டாவது முறை, முதல் முறையைப் பார்க்கினும் நேர்த்தியாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஆனால், "ஹம்தர்த்" விஷயம் அவ்வாறேற்படவில்லை. அவரது உணர்ச்சியிலும், மூளையிலும் ஏற்பட்ட தாக்குகளால், அவருக்கு நிம்மதியும் அமைதியும் இருக்கவில்லை. கலக்கமில்லா மனத்துடன், "காம்ரேடு"டன் "ஹம்தர்தை"யும் நடத்த முடியவில்லை. அல்லாமலும், அவர் காங்கிரஸ் தலைவராக இருந்ததால், அவருக்குள்ள கணக்கற்ற அலுவல்கள் இன்னும் அதிகமாயின. தவிரவும், முதற் றடவையில் வாய்த்த உண்மையான சக ஊழியர்கள் அவருக்கு இப்பொழுது கிடைப்பது அருமையாக இருந்தது.

இவ்வளவு குறைகளிருந்தும் "ஹம்தர்த்" பத்திரிகை தனது உச்சஸ்தானத்திலிருந்து வழுவவில்லை. யாசகத் தொழிலையும், கக்ஷிச் சண்டைகளையும் கிளப்பிவிட்டு, தங்களது சுய நலத்தைப் பெருக்கிக்கொள்ளும் பத்திரிகைகளின் அணியில் "ஹம்தர்த்" வரவே இல்லை.

அது தன்னுடைய நேர்மையான, நியாயமான, வசீகரிக்கக்கூடிய நடையின் மீதே சென்று கொண்டிருந்தது. பொது ஜனங்களின் மனப்பான்மை இப்பொழுது மாறுதலடைந்து கலக மனப்பான்மையையே

தேடிக்கொண்டிருந்தது. அம்மாதிரியான தன்மை "ஹம்தர்"தில் எங்கே இருக்கப்போகிறது? ஆதலால், அது அவ்வளவு லாபகரமாக நடை பெறவில்லை. இரண்டாவதாக, இப்பொழுது அதன் கொள்கையிலும் சிறிது மாறுதலேற்பட்டுவிட்டது. முதல் முறையில் அது பத்திரிகை தொழில் முறையின்படி, காலத்திற் கேற்றவாறு நடந்து கொண்டிருந்தது. இப்பொழுதோ அப்பத்திரிகை அம்மாதிரியில் இல்லாமல், சமூகம் என்ற வியாதியஸ்தனுக்கு ஏற்பட்ட மருந்தைப் போலவே இருந்தது. வியாதியஸ்தனுக்கு மருந்தைக் குடிப்பது கசப்பாகவும், பத்தியமிருப்பது வெறுப்பாகவும் இருப்பதுபோல், "ஹம்தர்த்" கூறும் ஆலோசனைகள் சமூகத்திற்கு ருசிகரமானவைகளாக இருக்கவில்லை. அல்லாமலும், ஏக காலத்தில் பல மருந்துகளைக் கொடுத்து, பல பத்தியங்களை ஏற்படுத்துவதாகவுமிருந்தது. ஆகவே, அதற்கு இருக்கவேண்டிய செல்வாக்கு இவ்விரண்டாம் முறையில் இருக்கவில்லை.

இவ்விதமான மாறுதல்களிருந்தும் அது வெளியிட வேண்டிய காலத்திலும், சமயத்திலும் கொஞ்சமும் வித்தியாச மேற்படவில்லை. எவருக்கும் முகஸ்துதி செய்து, பணம் சம்பாதிக்க முயற்சி செய்யவுமில்லை. ஒருவரைப் பயங் காட்டியோ, திட்டியோ சில பத்திரிகைகள் பணம் சம்பாதிக்க முயல்வது போல் இப்பத்திரிகை முயலவுமில்லை.

காஜா ஹஸன் நிஜாமியின் அபிப்பராயம் :—டில்லியிலுள்ள, பிரபல மஷாயிகான காஜா ஹஸன் நிஜாமி

21

என்பவர் தம்முடைய "ரோஸ் நாம்சா"வில் 24-11-1926உ-யில் "ஹம்தர்த்" பத்திரிகையின் உயர்ந்த நோக்கத்தைப்பற்றி பின் வருமாறு எழுதியிருக்கிறார் :—

"முஸ்லிம்களினுடையவும் இந்தியாவினுடையவும் உலகப்பிரசித்தி பெற்ற தலைவர் மௌலானா முஹம்மது அலி சாகிப் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "ஹம்தர்த்" என்ற தினசரிப் பத்திரிகை வெளிவருகிறது. இப் பத்திரிகையின் போக்கு, கண்மூடித்தனமாக இல்லை. ஆங்கிலேயர்களின் உயர்தரமான பத்திரிகைகளின் அந்தஸ்துக் கேற்றவாறு மிகவும் பெருந்தன்மையுடன், தக்க காரணங்களுடன் கூடிய அபிப்பராயங்கள் இப்பத்திரிகையில் எழுதப்படுகின்றன. இஸ்லாமிய உலகம், இஸ்லாமிய உரிமைகள், இந்தியரின் உரிமைகள் ஆகியவைகளைச் சமமாக ஆதரித்து வருகின்றது".

இந்தூர் மகா ராஜா சம்பவம் :—எங்கேனும் ஒரு பெரிய மனிதருக்கு ஒரு ஆபத்து நேர்ந்துவிட்டால், பொதுவாக இந்தியாவிலுள்ள பத்திரிகைகளும், சிறப்பாக உருது பத்திரிகைகளும் அவரை வட்டமிடுகின்றன. இதன் மூலம் ஏதேனும் கொஞ்சம் கைக்குக் கிட்டிவிட்டால், அவருக்காக உழைக்கின்றன. இல்லையேல், அவருக்கு விரோதமாக விஷத்தைக் கக்க ஆரம்பித்து விடுகின்றன. நாபா மகாராஜா, இந்தூர் மகாராஜா, ஹுஜூர் நிஜாம் சம்பந்தமாக நிகழ்ந்த சம்பவங்கள், லக்னௌவிலுள்ள பிரபல வியாபாரி ஒருவரின் வழக்கு,

அலிகாரிலிருந்து டாக்டர் ஜியாவுத்தீன் அஹ்மது விலகியது, இவைபோன்ற பலசம்பவங்கள் ஸ்தல பத்திரிகைகளுக்கும், வெளியிடத்துப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளுக்கும் பணக்கஷ்டத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்குப் போதியனவாக இருந்தன.

இந்தூர் மகா ராஜாவுக்கு மும்தாஜ் பேகம் சம்பந்தமாக ஏற்பட்ட பிரபல சம்பவத்தில் "ஹம்தர்த்" பத்திரிகை விரும்பி இருந்தால், இந்த ஒரு வரும்படியிலிருந்தே தன்னுடைய கடனனைத்தையும் தீர்த்துக் கொண்டிருக்கலாம். இப்பத்திரிகை பிறரிடம் சென்று இதற்காக சிபாரிஷ் செய்ய வேண்டிய அவசியமுமில்லை. இப்பத்திரிகையின் அபிப்பராயத்துக்கு அரசாங்க ஊழியர்களிடத்திலும், இதரர்களிடத்திலும் எவ்வளவு செல்வாக்கிருந்தது என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். "ஹம்தர்த்" பத்திரிகையின்பால் ஹம்தர்த் (அநுதாபம்), உள்ளவர்கள் இந்தூர் மகாராஜாவினிடம் இது சம்பந்தமாகப் பேசவும் விரும்பினர். அவருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட சங்கடத்தை நிவர்த்திப்பதற்கு வழியு மேற்படும்; "ஹம்தர்த்" பத்திரிகைக்கும் இதனுல் நன்மை ஏற்படும் என்பது அவர்களது நோக்கம்.

இச் செய்தி மௌலானு முஹம்மது அலிக்கு எட்டியபோது அவர் செய்த காரியத்தைக் குறித்து, "இந்தச் செய்தியை நான் கேள்விப்பட்ட அதே சமயத்தில், நான் இதற்குச் சம்பந்தப் பட்டவர்களைத் தேடிப் புறப்பட்டு, அவர்களைக் கண்டு, இவ்விதமான எந்த

பிரஸ்தாபத்தையும் தம் சார்பாகவோ அல்லது மற்றவர்கள் சார்பாகவோ பேசக்கூடாது என்று பிரமாண வாக்குறுதி வாங்கினேன்" என்று அவரே கூறி இருக்கிறார்.

ஆல்வார் ஜூபிப்ளி:—"ஹம்தர்த்" பத்திரிகைக்கு அதன் கஷ்டத்தை நிவாரணம் செய்வதற்கு மற்றொரு தருணமும் வாய்த்தது. ஆல்வார் மகாராஜா தமது சொந்தப் பொறுப்பில், தக்க பணம் கொடுத்து, நமது மௌலானாவை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார். அவர் அங்கு சென்று தமது நோய்க்குத் தக்க சிகிச்சை செய்து கொள்ளட்டும் என்பது அவருடைய நோக்கம். மகாராஜாவின் விருப்பத்திற்கேற்ப அவரும் இங்கிலாந்துக்குப் பிரயாணமாகிவிட்டார்.

"ஹம்தர்த்" பத்திரிகையின் பொருளாதார நிலை அது சமயம் மிகவும் சீர்கேடாகவிருந்தது. ஆதலால், அதை நிறுத்தி விட அவர் இஷ்டப்பட்டார். ஆனால், அவரது உண்மைத் தோழர்களிருவர் முன்வந்து, அதனை நிறுத்த விடாமற் காப்பாற்றினார்கள்.

"ஹம்தர்த்" பத்திரிகையின் ஆசிரிய இலாகாவை மேல் பார்க்கும் பொறுப்பை மௌலானா அப்துல் மாஜித்சாகிப் தர்யாபாதியும், பத்திரிகையின் நிர்வாகச்சீர் கேடுகளைத் திருத்தும் பொறுப்பை மௌலானா ஜூப்ருல் முல்க் சாகிப் அலவியும் ("அங்காலிர்" என்ற பத்திரிகையின் ஆசிரியர்) ஏற்றுக்கொண்டனர்.

தற்போது "மில்லத்" பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கிற முஹம்மது ஜஃபரிசாகிப் அக்காலத்தில் "ஹம்

தர்த்" பத்திரிகையில் சப் எடிட்டராக் இருந்தார். அவர் "ஹம்தர்த்" பத்திரிகைக்கு ஆசிரியராக் ஆக்கி விடப் பட்டார். இவ்வித முறையில் நமது மௌலானா இங்கிலாந்துக்குச் சென்றார். பின்னர், அவர் இங்கிலாந்திலிருந்து திரும்ப வந்தபிறகு, சில காலம்வரை இதே ஏற்பாடுதானிருந்து வந்தது. ரெங்கூனிலிருந்து தொடர்ச்சியாகப் பல முறை அழைப்புகள் வந்து கொண்டிருந்த தன் பேரில் அவர் ரெங்கூனுக்குச் சென்றார்.

இதே சமயத்தில் ஆல்வார் மகா ராஜாவின் வெள்ளி ஜூப்ளி சம்பந்தமாக "ஹம்தர்த்" பத்திரிகை ஒரு அனுபந்தம் பிரசுரிப்பதென்றும், அதற்கேற்படும் சகல செலவுகளும், இன்னும் அதிகமாக வேண்டியவைகளும் சமஸ்தானத்தின் பொறுப்பைச் சேர்ந்தது என்றும் மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதி ஒரு யோசனை கூறினார். ஆனால், மௌலானா முஹம்மது அலி இல்லாமலிருக்கும் போது, இவ்வளவு பெரிய விஷயத்தை ஜஃபரீசாகிப் பொறுப்பேற்றுக் கொள்வது பொருத்தமில்லாமற்றோன்றிற்று. ஆகவே, அவர் தர்யாபாத் சென்று, மௌலானா அப்துல் மாஜித் சாகிபுடன் இதை பற்றி நேரிற் கலந்து பேசினார். மௌலானா அப்துல் மாஜித் சாகிபும் தமது சொந்த ஹோதாவில் இது சம்பந்தமாக எவ்வித முடிவும் செய்வது பொருத்தமான விஷயமன்று என்பதை யுணர்ந்து, ரெங்கூனிலிருந்த நமது மௌலானாவிற்கு விபரமாகத் தந்தி கொடுத்து அனுமதி கோரினார். தம்மீது ஆல்வார் மகா ராஜாவுக்கு இருந்த அன்பு, தயாளம் ஆகியவைகளை எல்லாம் நமது

மௌலானா ஒப்புக் கொண்டாராயினும், விசேஷ அனுபந்தம் வெளியிடும் ஆலோசனையை நிராகரித்து "இம்மாதிரியான விசேஷ அனுபந்தம் இதுவரை "ஹம்தர்த்" பத்திரிகை வெளியிட்டதில்லை. ஆதலால், இப்பொழுது புதிதாக இம்மாதிரி வெளியிடமுடியாமலிருக்கிறது. அவசியமேற்படின் "ஹம்தர்த்" அச்சுக்கூடத்திலிருந்து இது சம்பந்தமான பிரசுரம் அச்சிட்டு வெளியிடலாம் என்றுசொல்லிவிடுங்கள்" என்பதாகப் பதில் தந்தி கொடுத்துவிட்டார்.

விளம்பரங்கள்:—இவ்வழிகளைத் தவிர,'ஹம்தர்த்" பத்திரிகைக்குப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கமிருந்தால்,அதில் வெளியிலிருந்து (அட்வர்டைஸ்மென்ட்) விளம்பரங்களை வாங்கி பிரசுரித்திருக்கலாம். இவைகளால் சந்தாதாரர்களுக்கு நன்மை ஏற்படாவிட்டாலும், இவைகளை அச்சிடுபவர்களுக்கு நல்ல லாபம் இருந்தது. "ஹம்தர்த்" பத்திரிகை இவ்வழக்கத்தையும் லக்ஷியம் செய்யவில்லை. ஒழுங்கின் படியே நடந்து, ஒழுங்கின்படியே மரித்தது. தன்னுடைய நன்மைக்காக ஒழுங்கீனமாக நடந்து கொள்ளவில்லை.

எட்டாம் அத்தியாயம்

கான்பூர் மஸ்ஜிது

கான்பூர் மஸ்ஜிது சம்பந்தமாக ஏற்பட்ட சம்பவத்தால், அந்த மஸ்ஜிது மிகவும் பிரக்கியாதி பெற்றுவிட்டது. இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் அங்கு நடந்த உண்மை சமாசாரத்தை நன்கு அறிந்துகொள்ள முடியவில்லை யானாலும், அந்த மஸ்ஜிதை நன்கு கேள்விப்பட்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் அநியாய அட்டூழியங்களை எதிர்த்து, உறுதியுடனும் துணிவுடனும் தங்கள் வீரத்தைக் காண்பித்தனர். அல்லாஹு தஅலாவின் ஆலயத்திற்காகத் தங்களது இன்னுயிரையும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியுடனும் தியாகம் செய்தனர்.

உண்மைச் சம்பவம்:—சென்ற 1913-ம் வருஷத்தில் கான்பூர் முனிசிபாலிட்டி ஒரு ரஸ்தாவைப் புதிதாக ஏற்படுத்திற்று. இந்த ரஸ்தாவின் மத்தியில் ஒரு மஸ்ஜிது குறுக்கிட்டது. இம் மஸ்ஜிதினால் அந்த ரஸ்தா நேராக ஏற்படாமல் கோணலாக ஏற்படுவதாக இருந்தது. மஸ்ஜிது முத்தவல்லிகள் மிகவும் தாராள சிந்தைகாட்டி, ரஸ்தாவுக்காக மஸ்ஜிதின் கம்பொண்டிற்குள் உள்ள ஸ்நான அறை, மலஜல பாதைக்குச் செல்லும் அறை ஆகியவைகளை இடித்து, ரஸ்தாவுடன் சேர்த்துக் கொள்ள முனிசிபாலிட்டிக்கு அனுமதி கொடுத்தார்கள்.

முனிசிபாலிட்டியும் 'சந்தடி சாக்கு' என்றபழமொழிக்கேற்ப அவைகளை இடித்து, ரஸ்தாவை நேராக ஏற்படுத்திக் கொண்டது. முஸ்லிம் பொது ஜனங்களும்,

உலமாக்களும், இந்தியாவிலுள்ள எல்லாப் பெரியார்களும் கான்பூர் முனிசிபாலிட்டியினுடையவும், மஸ்ஜிது முத்தவல்லிகளுடையவும் இச்செய்கையைக் கண்டித்ததுடன், 'முனிசிபாலிட்டியின்பால் முத்தவல்லிகளுக்கு அன்பிருந்தால் அவர்கள் தங்களது சொந்த நிலங்களைக் கொடுக்கவேண்டும்' என்று கூறினர். கடைசியாக மஸ்ஜிதைச் சேர்ந்த இக்கட்டிடங்கள் இடிக்கப்பட்டு ரஸ்தாவுடன் சேர்க்கப்படவே, முஸ்லிம்களின் இருதயங்கள் துண்டு துண்டாக்கப்படுவதுபோலிருந்தது. இது சம்பந்தமாக கான்பூர் முஸ்லிம்களுக்கு விசேஷமாகவும், இந்தியமுஸ்லிம்களுக்குப் பொதுவாகவும் விசேஷ ஆத்திரமும் வருத்தமும் உண்டாயிற்று.

இந்தியாவெங்கும் இதற்காகக் கண்டனக் கூட்டங்கள் நிகழ்ந்தன. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கவர்ன்மெண்டாரின் இச் செய்கையைக் கண்டித்து பிரசங்கங்கள் நடை பெற்றன. ஒன்றும் செவிக்கேறவில்லை. கான்பூரிலுள்ள மார்க்கபக்தி நிறைந்த முஸ்லிம்கள் மஸ்ஜிதுக்காக உயிரைப் பலி கொடுப்போம் என்று சபதஞ் செய்து கொண்டு, கபன் துணிகளை அணிந்து, இடிபட்ட மஸ்ஜிதுக் கட்டிடமுள்ள இடத்திற்கு வந்து, மஸ்ஜிதுக்குச் சம்பந்தப்பட்ட இடத்தில், மறுபடியும் கட்டிடம் கட்ட ஆரம்பித்தனர். போலீஸ் படை வந்தது. முஸ்லிம்களுக்கு விஷயத்தைக் கூறி, அவர்களைத் திரும்ப அனுப்ப போலீஸ் உத்தியோகஸ்தர்கள் முயன்றனர். அவர்களது இம் முயற்சி ப்லித மடையவில்லை.

பிறகு, ராணுவம் வந்து, முஸ்லிம்களைப் பயப்படச் செய்ய முயன்றது, பிரயோஜனப் படவில்லை. ஆகாயத்தில் சுட்டனர். அதிலும் ஒன்றும் நடை பெறுவதற்கில்லை. கடைசியாக ராணுவம் குண்டு போட ஆரம்பித்தது. தோட்டாக்கள் காலியாயின. ஜனங்கள் கட கட வென்று அடிபட்டுக் கீழே விழுந்தனர். குண்டுகள் மார்பில் பாய்ந்தன. ஜனங்கள் ஷஹீதாகியும், குற்றுயிராகியும், காயமடைந்தும் கீழே விழுந்தனர். இவையனைத்தும் நடுப்பகலில், நீதத்தை நிலை நிறுத்துவதாகக் கூறும் அரசாங்க உத்தரவின் பேரில் நிகழ்ந்தன.

இச்சம்பவம் முஸ்லிம்களுக்குத் துக்கத்தையும், கோபத்தையும் இன்னும் அதிகமாகக் கிளப்பிவிட்டது. கண்டனங்கள் மிகவும் சிக்கலான நிலைமைக்கு வந்தன. ஆனால், ஐக்கிய மாகாண அரசாங்கம் அசையவில்லை. முஸ்லிம்களின் கண்டனங்களைக் காதில் போட்டுக் கொள்வதுகூட, தமது அந்தஸ்துக்குக் குறைவு என்பதாக அக்காலத்திலிருந்த கவர்னர் ஸர். ஜேம்ஸ் மெஸ்டன் கருதினர் போலும்.

முஹம்மது அலியின் முயற்சி:—இவ்விஷயத்தில் மௌலானா ஆஜாத் சுப்ஹானீ, மௌலானா அபுல்கலாம் ஆஜாத், மர்ஹூம் மௌலானா மல்ஹருல்ஹக், மஹ்மூதாபாத் மகாராஜா முதலியவர்களும் மதிக்கத்தக்க ஊழியம் புரிந்தனர். இவர்கள் செய்த ஊழியங்கள் மறந்துவிடக் கூடியவைகளல்ல. இவ்வித முயற்சிகளையல்லாமல், நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியும், இவ்விஷயத்தில் பிரவேசித்தார். முதலில்

அவர் ஐக்கிய மாகாண கவர்னர் ஸர். ஜேம்ஸ் மெஸ்டன் துரை அவர்களுக்கு சிநேகப்பான்மையான முறையில் எழுத்துக்குத்துச் செய்தார். ஏனெனில், ஸர். ஜேம்ஸ் மெஸ்டனுக்கும் தமக்கும் உள்ள சொந்த சிநேக முறையில் இதில் ஏதேனும் பலனேற்படும் என்று நினைத்தார். ஆனால், அவர் தலையில் ஏறி இருந்த "போதை" இந்தப் புளிப்புக் கெல்லாம் இறங்கிவிடக் கூடியதாக இருக்கவில்லை.

மிஸ்டர் ராம்ஸே மாக்டனல்டுக்கு தந்தி:—ஐக்கிய மாகாண கவர்னரிடம் மன்றாடுவதில் ஒன்றும் பயனில்லை என்பதை நமது மௌலானா உணர்ந்தபின், நேராக பம்பாய்க்கு வந்து, மிஸ்டர் ராம்ஸே மாக்டனல்டுக்கு தந்தி கொடுத்து, "இவ்விஷயத்தின் உண்மையை உணர்ந்து பார்லிமெண்டில் கேள்வி கேட்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். மிஸ்டர் ராம்ஸே மாக்டனல்டு இத் தந்திக்கு எவ்வித பதிலும் சொல்லவில்லை. இது 1913-ம் வருஷம் செப்டம்பர் மாதம் நடந்த விஷயமாகும். பின்னர், இவர் இங்கிலாந்து சென்று, நேரில்கண்டு விசாரித்த போது, அதற்குக் கூறிய பதிலானது இக் குற்றத்தைப் பார்க்கினும் மிகக் கேடாக இருந்தது. இம்முயற்சியும் வீணாதாகிவிட்டதால், மற்றொரு யுக்தி செய்தார்.

இங்கிலாந்துப் பயணம்:—அக்காலத்தில் அகில இந்திய முஸ்லிம் லீகின் காரியதரிசியாக இருந்த வஜீர் ஹஸன் என்பவரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, செப்டம்பர் மாதத்தில் இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். இப்பிரயாணம் மிகவும் ருசிகரமானது.

இவ்விருவரும் கப்பலில் ஏறும்வரை எவருக்கும் இவ் விஷயம் தெரியாது. ஸர். ஜேம்ஸ் மெஸ்டன் இதில் தலையிட்டு, இதைக் கெடுத்து விடக்கூடும் என்ற சந்தேகத்தினாலேயே இப் பிரயாணம் இவ்வளவு இரகசியமாக ஏற்படுத்தப்பட்டது. அங்கு சென்ற பின் இவ்விஷயத்தைப் பற்றி வேண்டிய பிரசாரம் புரிந்தார். பிரசங்கங்கள் பல நிகழ்த்தினார். அரசாங்க உத்தியோகஸ்தர்களையும், பார்லிமெண்டு சபை அங்கத்தினர்களையும், மந்திரிச் சபையினரையும் கண்டு பேசித் தம்மாலானவரை இவ்விஷயத்தின் உண்மையை அவர்களுக்கு உணர்த்தினார்.

வெற்றி :—கடைசியாக அவருடைய இம்முயற்சிகள் பலிதமடைந்தன. ஐக்கிய மாகாண மாஜீ கவர்னரும், அக்காலத்தில் இந்தியா மந்திரி கௌன்சில் அங்கத்தினருமான ஸர். ஜேம்ஸ் லாட்டுஷ் என்பவர் இதில் போதியளவு கவனம் செலுத்தி, இந்திய வைசிராய் லார்டு ஹார்டிங்குக்கு லண்டனிலிருந்து உத்தரவு அனுப்பும்படிச் செய்தார். இவ்வுத்தரவு கிடைத்தவுடன் வைசிராய் நேராக கான்பூர் வந்து, காயம் பட்டு ஹாஸ்பிட்டலில் இருந்தவர்களைப் பார்வையிட்டு, சிறைச்சாலையில் கைதிகளாக இருந்தவர்களிடம் அன்பாகப் பேசி, யாவருக்கும் விடுதலையளித்தது மல்லாமல், மஸ்ஜிதைத் திரும்பக் கட்டிக்கொள்ள உத்தரவும் செய்தார்.

முஹம்மது அலியின் திரும்புகை :—இப் பெரும் வெற்றிக்குப் பிறகு 1913-ம் வருஷம் டிசம்பர் மாதக் கடைசியில், நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி

இந்தியாவுக்குத் திரும்ப வந்து சேர்ந்தார். இவருக்கு மிக கம்பீரமாகவும், கண்ணியமாகவும் வரவேற்புச் செய்ததுடன், இவருடைய அரிய முயற்சிகளும், அந்தரங்க சுத்தியான ஊழியங்களும் பாராட்டப் பட்டன.

ஒன்பதாம் அத்தியாயம்.

"சாய்ஸ் ஆப் தி டர்க்ஸ்."

1914-ல் மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. அது போழ்து "லண்டன் டைம்ஸ்" பத்திரிகை துருக்கி உதுமானியா அரசாங்கம் சம்பந்தமாக ஆத்திர மூட்டக் கூடிய ஒரு வியாசத்தை வெளியிட்டது. "இந்த யுத்தத்தில் துருக்கியர் எக்கக்ஷியிலும் சேராமல் தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், கிரீஸ் தேசத்தின் மீது கூட அவர்கள் படையெடுக்கக் கூடாது" என்றும் அவ்வியாசத்தில் எழுதி இருந்தது. இவ் வியாசத்தின் தோரணை ஆத்திரமும் கோபமு மூட்டத்தக்கதாக இருந்ததுடன், துருக்கியரைக் கேவலமாகவும், அவமானமாகவும் கூறுவதைத் தவிர வேறு நோக்கம் இதிலிருக்கவில்லை.

அக்காலத்தில் பேகம் முஹம்மது அலி மிகவும் வியாதியாக இருந்தார். தமது வாழ்க்கைத் துணைவி வியாதியால் பீடிக்கப்பட்டு வருந்துவதால், மௌலானாவிற்குக் கவலையும், வருத்தமும் அதிகமிருந்தன. இரவு முழுதும் இக் கவலையால் நித்திரை செய்யாமல் விழித்துக் கொண்டிருப்பார். அவ்வாறிருந்தும் இவ் வியாசத்தைப் பார்த்தபிறகு, அவருக்குண்டான ஆத்திரம் சொல்ல முடியாததாக இருந்தது. அவருக்குள்ள கோபத்தை அடக்க அவரால் முடியவில்லை.

முஹம்மது அலி கூறும் விபரம்:—இவ்வியாசத்தைப் பற்றிய தமது மன உணர்ச்சியை அவர் பினவருமாறுகூறி இருக்கிறார்:—

"நான் இவ்வியாசத்துக்கு மறுப்பாக 40 மணி நேரம் தொடர்ச்சியாக அமர்ந்திருந்து அதிக சிரமப்பட்டு வியாசம் எழுதினேன். இந்த 40 மணி நேரத்தில் ஒரு நிமிஷம்கூட நான் தூங்கவில்லை. நான் எழுதி எழுதிக் களைப்படைந்துவிட்டால், பத்திரிகையின் அஸிஸ்டன்ட் எடிட்டரை அழைத்து அவரிடம் சொல்லுவேன், அவர் எழுதுவார். இவ்விதமாக 40 மணி நேரம் நான் தூங்காமலிருந்தது மட்டுமில்லை, சில கோப்பை காப்பியைத் தவிர உணவருந்தவுமில்லை"

ஜாமின் பறிமுதல் உத்தரவு:—மௌலானா அவர்கள் எழுதிய பதில் வியாசம் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அதிருப்தியை அளித்தது. சில நாட்களுக்குள் இதன் பலனும் வெளிவந்தது. அதாவது "காம்ரேட்" "ஹம்தர்த்" பத்திரிகைகளுக்காகக் கட்டியிருந்த ஜாமின் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

வழக்காடல்:—ஆனால், அவர் அரசாங்க உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் செய்யும் எவ்வுத்தரவையும் சகித்துக் கொண்டு, மௌனமாக இருப்பவரன்று. அவர் இவ்வுத்தரவுக்குச் சுலபமாகக் கீழ்ப்படியவில்லை. இவ்வுத்தரவை எதிர்த்து நீதி மன்றத்தில் அப்பீல் செய்தார். அத்துடன் இவ்வழக்கைத் தாமே நேரில் நடத்தினர். சாக்ஷி விசாரணை, குறுக்கு விசாரணை, ஆர்க்குமென்ட் ஆகியவைகளை எல்லாம் தாமே நேரில்

நின்று நடத்தி, இவ்வுத்தரவை சல்லி சல்லியாக எடுத்துக் காட்டினர்.

விபரம்:—நமது மௌலானா இவ்வழக்கை நடத்திய விபரத்தைப்பற்றி மீர் மஹ்பூஜ் அலி சாகிப் பின் வருமாறு கூறி இருக்கிறார்:—

" 'காம்ரேட்' பத்திரிகையின் ஜாமின் பணம் பறிமுதல் செய்யப்பட்டதைப்பற்றி முஹம்மது அலி கோர்ட்டில் ஆஜராகி ஆர்க்குமென்ட் செய்தார். ஆர்க்குமென்ட் செய்யும்போது கோர்ட்டு நிரம்ப வக்கீல்களும், பாரிஸ்டர்களும் எள் போட இடமில்லாதவாறு கூடி இருந்தனர். ஒவ்வொருவரும் மூக்கில் விரலைவைத்துக் கொண்டு,மௌலானாவின் விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர். விவாதம் முடிந்து, மௌலானா அவர்கள் வெளியில் புறப்பட்டபோது, ஹிந்து முஸ்லிம் வக்கீல்களும் பாரிஸ்டர்களும் கூடிக்கொண்டு, மௌலானா அவர்களைப்பார்த்து "மிஸ்டர் முஹம்மது அலி, நீர் பாரிஸ்டராக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்" என்று ஒரு முகமாகக் கூறினர். அதற்கு, மௌலானா அவர்கள் "இப்பொழுதுதான் என்ன குறைவா? இதற்கு என்ன மதிப்பிருக்கிறது? இப்பொழுதில்லாத மதிப்பு பாரிஸ்டராகிவிட்டால் உண்டாகிவிடவாபோகிறது?" என்று கூறினர்.

கடைசியாக ஜாமின் தொகை பறிமுதலாகவே ஆகிவிட்டது. "காம்ரேட்" பத்திரிகை மரணத்தின் மடிக்கு அனுப்பப்பட்டது.

பத்தாம் அத்தியாயம்.

பாதுகாப்பில் வைக்கப்படல்

மகாயுத்தத்தால் இந்தியாவுக்கும், இஸ்லாமிய உலகுக்கும், இந்திய முஸ்லிம்களுக்கும் அநேக பாதகங்களுண்டாயின.

டாக்டர் அன்ஸாரி, அஜ்மல்கான் ஆகியவர்களின் ஆலோசனை:—ஜாமின் தொகையைப் பறிமுதல் செய்த பிறகு, அவருக்கு அவரது நீர் ரோகமும் கெடுதல்செய்ய வாரம்பிப்பதாகத் தோன்றிற்று. "மூளை சம்பந்தமான சகல வேலைகளையும் தாங்கள் விட்டு விடவில்லையாயின், தங்கள் ஜீவியம் ஆபத்துத்துக்குள்ளாகும்" என்று டாக்டர் அன்ஸாரியும், ஹக்கீம் அஜ்மல்கானும் அவருக்கு ஆலோசனை கூறினார்கள். இவ்வாலோசனைக்குப் பின், அவர் உடனே ராம்பூர் சென்றார். அதாவது தமது சுய ஊருக்குச் செல்லவேண்டும் என்ற ஆவலும், சீதோஷ்ண நிலைமைக்காக இடம்மாறி இருக்கவேண்டும் என்ற எண்ணமும் அவருக்கேற்பட்டது. ஆனால், அவருக்கு அங்கு நடந்த விஷயத்தைப் பற்றி அவருடன் டில்லியில் வேலை செய்த ஒருவர் கூறும் விபரம் வருமாறு:—

"மௌலானா அவர்கள் ராம்பூர் சென்றவுடனேயே ஐக்கிய மாகாண போலீஸ் டைரக்டர் ஜெனரல் ராம்பூர் நவாபிடம் வந்தார். நவாப் சாகிப் மூலமாக மௌலானா அழைக்கப்பட்டார். அங்கு கான்பூர் மஸ்ஜிது சம்பந்தமாக அவரிடம் போலீஸ் டைரக்டர் ஜெனரல் பல

கேள்விகளைக் கேட்டார். இது சம்பந்தமான சம்பாஷணை கடுமையாக நடந்தது".

ராம்பூரில் பாதுகாப்பு :—பிறகு, டைரக்டர் ஜெனரல் ராம்பூரை விட்டுச் சென்று விட்டார். உடனே, "ராம்பூர் நவாப் உத்தரவில்லாமல் தாங்கள் ராம்பூரை விட்டுச் செல்லக் கூடாது" என்ற உத்தரவு மௌலானுவுக்கு அனுப்பப்பட்டது. அதாவது தாங்கள் பாதுகாப்புக் கைதியாக இருக்கிறீர்கள் என்பதுதான் இவ்வுத்தரவின் கருத்து. இவ்வுத்தரவு 14 மணி நேரம் அமுலில் இருந்து, பின்னர் ரத்து செய்யப்பட்டது. இதற்குப் பிறகு அவர் நைனிடாலின் காடுகளில் வேட்டையாடச் சென்றூர். ஆனுல், அங்கிருந்து திரும்ப வரும்போது கடும் ஜுரத்தால் அவஸ்தைப் பட்டார். இதே சமயத்தில், வெய்யிற் காலத்தைக் கழிப்பதற்காக, டாக்டர் அன்ஸாரி நைனிடாலில் தங்குவதற்காக, வீடு முதலிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். நமது மௌலானுவிற்கு ஜுரம் வந்த செய்தியைக் கேட்டதும் அவரது மூத்த சகோதரர் மௌலானு ஷௌகத் அலி டில்லியிலிருந்து ராம்பூர் வந்தார். இவ்விருவரும் ராம்பூரிலிருந்து அஜ்மீர் ஷரீப் சென்று, ஹஜ்றத் காஜா முயீனுத்தீன் க்ஷிஷ்தீ குத்திஸஸிர்ருஹு அவர்களை ஜியாரத்துச் செய்துவிட்டு, நைனிடால் வந்து, வெய்யிற் காலத்தைக் கழிக்கவேண்டும் என்றிருந்தது.

ஆகவே, அவ்விருவரும் அஜ்மீர் ஷரீப் சென்று திரும்பி வருகையில், ஒரு வாரம் டில்லியில் தங்கி இருந்து, நைனிடால் செல்லலாம் என்ற எண்ணத்தின்

பேரில் டில்லியில் இறங்கினார்கள். இருவரும் டில்லியில் இறங்கி இரண்டு நாள் கழிந்தவுடன், டில்லி ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் உத்தரவு வந்தது.

அரசாங்க உத்தரவு:—"தாங்களும், தங்கள் மூத்த சகோதாரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாகக் கருதிக் கொள்ளுங்கள்" என்ற உத்தரவு மேமீ 7வ இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டது. குற்றத் தொழில் புரியும் ஜனங்கள் மீதுகூட விதிக்கக்கூடாத கட்டுத் திட்டங்களெல்லாம் இச் சட்டத்தின்படி இவர்கள் மீது விதிப்பதற்கு முடியும். இவ்வுத்தரவை நமது மௌலானா படித்தவுடன் இறைவனுக்கு நன்றி செலுத்தி "இது நபிமார்களுக்கு விதிக்கப்பட்டு வந்த சுன்னத்தான முறையாகும். இந்த சுன்னத்தை நிறைவேற்றுவதற்காக சர்வ வல்லோனாகிய அல்லாஹு தஆலா என்னைத் தெரிந்தெடுத்திருக்கிறான்" என்று கூறினார்.

காஜீ அப்துல் கப்பார்கான் கூறும் விபரம்:—இவ்வுத்தரவைப் பாத்தவுடன் அலி சகோதரர்களுக்கு எவ்வளவு சந்தோஷமுண்டாயிற்று என்பதையும், அவர்களது முகத்தில் எவ்வளவு சந்தோஷக்குறி தோன்றிற்று என்பதையும் காஜீ அப்துல் கப்பார் கான் கூறுவதிலிருந்து நீங்கள் யூகித்தறிந்து கொள்ளலாம். அவர் கூறும் விபரம் வருமாறு:—

"பாதுகாப்பு உத்தரவு வந்தபோது, நான் பத்திரிகை காரியாலயத்தில் இல்லை. உடனே, கூப்பிட்டனுப்பப்பட்டேன். நான் முஹம்மது அலி இருக்கும்

அறைக்குள் நுழைந்தபோது வாழ்த்துச் செய்தி கூறும் சப்தத்தைக் கேட்டேன். ஏதோ நல்ல செய்தி எங்கிருந்தோ வந்து இருக்கிறது போலும் என்று நான் நினைத்தேன். ஆனால், பார்க்கும்போது, அறையின் மத்தியிலுள்ள மேஜையின்மீது பாதுகாப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட கடிதம் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. இதைப்பற்றி மங்களோபசார வார்த்தைகள் முழங்குகின்றன. இரு சகோதரர்களும் ஒருவருக்கொருவர் நன்றாகச் சப்தமிட்டு வாழ்த்துக் கூறிக்கொள்கிறார்கள்."

மஹர் வலிக்குப் புறப்பாடு:—இவ்வுத்தரவுக்குப் பின், அரசாங்கத்தாரின் கட்டளைப்படி மஹர் வலிக்குச் செல்ல அலி சகோதரர்கள் முடிவு செய்தனர். வெள்ளிக் கிழமையன்று அவர்கள் டில்லி ஜாமிஆ மஸ்ஜிதில் ஜும்ஆத் தொழுகைக்காக வந்தனர். டில்லி வாசிகளுக்கு இவ்வுத்தரவைப்பற்றிய செய்தி முன்னரே தெரிந்திருந்ததால், இவ்விரு சகோதரர்களையும் கண்டுகொள்வதற்காகக் கும்பல் கும்பலாக ஜும்ஆ மஸ்ஜிதுக்கு வந்தனர்.

காஜீ அப்துல் கப்பார் கான் கண்ட காட்சி:—இவ்விரு சகோதரர்களும் ஜாமிஆமஸ்ஜிதின் படிக்கட்டின் மீது நின்றுகொண்டு, டில்லி வாசிகளிடம் விடைபெற்றுக்கொண்ட அந்தக் கடைசி ஜும்ஆ எனக்கு இன்னமும் ஞாபகமிருக்கிறது. தங்களது மனத்துயரம் பொறுக்கமாட்டாமல் கண்ணீர்விட்டுக் கதரிய முஸ்லிம்களுக்கு ஷாஜஹான் மஸ்ஜிதின் படிக்கட்டின்மீது இவ்

விருவரும் இரு கற்றூண்களைப்போல் நின்று, உறுதியாகவும் பொறுமையாகவும் இருக்கும்படி உபதேசம் செய்துகொண்டிருந்தனர்.''

மஹர்வலியில் தடைகள்:—மஹர் வலியில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தபோது அலி சகோதரர்களுக்குச் சில வசதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அதாவது நமது முஹம்மது அலி எழுத்து வேலையை முன்போலவே செய்து கொண்டிருந்தார். அதனைப் பிரசரிப்பதில் அதிகக் கஷ்ட மேற்படவில்லை. "காம்ரேட்" பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு ராஜா குலாம் ஹுஸைனும், "ஹம்தர்த்" பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு காஜீ அப்துல் கப்பார் சாகிபும், ஸெய்யிது ஜாலிபும் போதுமானவர்களாக இருந்தனர்.

இங்கு வந்து சேர்ந்தபின், ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தைப்பற்றி முஹம்மது அலி விசாரித்தார். "இம்மாதிரியான கேள்விகளுக்கு மாஜிஸ்டிரேட் பதில் கூறவிரும்பவில்லை" என்று சர்க்கார் பதில் கிடைத்தது.

ஜனக்கூட்டம்:—மௌலானா அவர்கள் மஹர் வலியில் பந்தோபஸ்துக் கைதியாக இருந்தார். ஆயினும், டில்லி வாசிகள் டில்லியில் பந்தோபஸ்துக் கைதிகளாக இருக்கவில்லை. ஆதலால், டில்லி வாசிகள் மஹர் வலிக்குச் சென்று, நமது மௌலானாவைத் தரிசிக்கச் சௌகரிய மேற்பட்டிருந்தது. டில்லி வாசிகளின் இச்செய்கை அரசாங்கத்திற்கு அதிருப்தியாகத் தோன்றிற்று. ஆதலால், இந்தப் பயங்கரமான மனிதர்களிரு

வரையும் மஹர்வலியிலிருந்து அகற்றி, லீண்டோனுக்கு அனுப்பிவிட்டனர்.

லீண்டோனில் பாதுகாப்பு :—அலி சகோதரர்கள் லீண்டோனுக்குச் சென்ற பின்னர், அவர்களுக்கு மஹர்வலியிலிருந்த பாதி சுதந்திரமும் பறிக்கப்பட்டு விட்டது. அவருடைய எழுத்துக்களுக்கு தணிக்கை ஏற்படுத்தப் பட்டது. முதலில் "ஹம்தர்த்" பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதச் சுதந்திர மிருந்தது. இப்பொழுது அதுவும் செய்யமுடியாமல் தடை செய்யப் பட்டு விட்டது. தவிரவும் அப் பத்திரிகையின்மீது தணிக்கையும் ஏற்படுத்தப்பட்டது.

இது சம்பந்தமாக குருவிக் கதையைப் பற்றிய சமாசாரம் முன்னர் கூறப்பட்டிருக்கிறது. லீண்டோன் போய்ச் சேர்ந்தபின்,மௌலானா அவர்கள் தமது பழைய நண்பரும், புதிய விரோதியுமான, ஐக்கிய மாகாண கவர்னர் ஸர். ஜேம்ஸ் மெஸ்டனிடம் தம்மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றம் யாது என்பதைப் பற்றி எழுதிக் கேட்டார். இப்பொழுதும் முன்னர் அளிக்கப்பட்ட பதில்தான் கொடுக்கப்பட்டது. அதாவது "கவர்னர் தமது உத்தரவு சம்பந்தமாக அதிகம் சம்பாஷணைசெய்ய முடியாமலிருக்கிறார்" என்று பதில் கொடுக்கப்பட்டது.

குற்றம் யாது :—அலி சகோதரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்ட பின், அவர்கள் செய்த குற்றம் யாது? அவர்களுக்கு கால வரையறையில்லாத சிறை வாசம் விதிப்பானேன்? என்ற வினா இவ்விடத்தில் உண்டாகிறது.

கவர்ன்மென்டார் இதைப் பற்றிச் சிந்திக்காமலிருக்கும்போதுதான், இதைப் பற்றிய கேள்விகள் அரசாங்கத்தாரிடம் கேட்கப்பட்டன. கேள்வி கேட்கப்படும் போதெல்லாம் அரசாங்கத்தார் இதற்குத் தயாராக இல்லாமலே இருந்தனர். கௌன்சிலிலுள்ள "ஆனரபில் மெம்பர்" இக் கேள்வியை பிடிவாதமாகக் கேட்டால், ஏதேனும் ஒன்றைக் கூறி, அதனை மழுப்பி விடுவதே வழக்கம்.

ஆனரபில் ரிஜா அலியின் கேள்வி :—இதைப்பற்றி ஆனரபில் ரிஜா அலி கேள்வி கேட்டபோது, "இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் 3-வது பிரிவின்படி இவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்" என்று பதில் கூறப்பட்டது. பிறகு 1916-ம் வருஷத்தில் டில்லி நிர்வாக ரிப்போர்டு பிரசுரிக்கப்பட்டது. அதில் அலி சகோதரர்களைப் பற்றி, "இந்த மாதத்தில் முஹம்மது அலி, ஷௌகத் அலி ஆகியவர்களைப் பாதுகாப்பில் வைத்துக் கொள்வது அவசியமாகத் தோன்றிற்று. ஏனெனில், அரசாங்கத்துக்கு விரோதமாக அவர்கள் செய்யும் கடுமையான நடவடிக்கைகள் முஸ்லிம்களின் ஒரு கக்ஷியினரிடம் தீய உணர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது" என்று எழுதப்பட்டிருந்தது.

மிஸ்டர் மல்ஹருல் ஹக், மிஸ்டர் ஜின்னாவின் கேள்விகள்:—இம்பீரியல் கௌன்சிலில் மிஸ்டர் மல்ஹருல் ஹக்கும், மிஸ்டர் ஜின்னாவும் அலி சகோதரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டதைக் குறித்துக் கேள்விகள் கேட்டபோது "அவர்கள் அரசாங்கத்துக்கு விரோதமா

கப் பகிரங்கமான நடவடிக்கைகளைச் செய்ததால், அவர்கள் பாதுகாவலில் வைக்கப்பட்டனர். இனிமேல் அவர்கள் இம்மாதிரி செய்வதில்லை என்று வாக்குறுதி செய்தால், அவர்களை விடுதலை செய்யும் விஷயமாக அரசாங்கம் கவனிக்கும்" என்று பதில் கூறப்பட்டது.

பிறகு, ராஜீய கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பதைப்பற்றி, 1917-ம் வருஷத்தில் நடந்த கிளர்ச்சியின் பலனாக மிஸஸ் பெஸன்ட் முதலியவர்கள் விடுதலை செய்யப்பட்டபோது, அலி சகோதரர்களின் விடுதலையைப் பற்றிய பிரசினையும் கிளம்பிற்று. ஆனால், இப்பொழுது அவர்கள் செய்த குற்றத்தின் தன்மை வேறுவிதமாக மாறிவிட்டது. இதைப்பற்றி இனிமேல் எழுதுவோம்.

லீண்டோனிலிருந்து சுண்டுவாடா:—மஹர் வலியிலிருந்து லீண்டோனுக்கு அலி சகோதரர்கள் அனுப்பப்பட்டபோது, இன்னும் கொஞ்சகாலம் அவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தாலும், முன்னர் இருந்ததைப் பார்க்கினும் கொஞ்சம் சுகமாகவும், ஆரோக்கியமாகவும் காலங்கழிப்பர் என்று கருதப்பட்டது. ஆனால், அவர்களுடன் அரசாங்கம் விளையாடிக் கொண்டிருந்தது. இம்மாதிரி அவர்கள் வசிப்பதுகூட அரசாங்கத்துக்குத் திருப்தியளிக்கவில்லை. சுன்டுவாடா போன்ற தூரமான இடத்துக்கு அவர்களை மாற்றிவிட்டது. அலி சகோதரர்கள் சுண்டுவாடாவுக்குச் சென்ற விபரத்தைப் பற்றி, மௌலானா முஹம்மது அலி தம்முடைய அஸிஸ்டென்ட் காஜீ அப்துல் கப்பார் சாகிபுக்கு எழுதிய கடிதம் வருமாறு:—

"வழியில் நடந்த விபரத்தைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுகிறேன். மஹர்வலியிலிருந்து லீண்டோன் செல்லும்போது ஏற்படுத்தப்பட்டிருந்த நிபந்தனைகளே இப்பொழுதும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வழியில் நடந்த சங்கதிகளைப்பற்றிக் கேளுங்கள். முதலாவது எச்சரிக்கை நவம்பர்மீ ஆரம்பத்தில் "தயாராக இருங்கள்" என்று கிடைத்தது. பிறகு "நவம்பர் 20உ சுண்டுவாடாவுக்குச் செல்லவேண்டிய தேறபடும்" என்று நவம்பர்மீ 13உ திடீரென்று உத்தரவு கிடைத்தது. இவ்வறிக்கை கிடைத்தபின், நாங்கள் சில நண்பர்களுக்கு, "இன்னதேதியில் இன்னவழியாக சுண்டுவாடாவுக்குச் செல்வோம்" என்று சில கார்டுகள் எழுதினோம். தணிக்கையதிகாரி அவைகளனைத்தையும் அனுப்பிவிட்டார். ஏனெனில், இதில் எவ்விதத்தவறு மிருக்கவில்லை. அலஹபாதில் வண்டி 7 மணிக்குப் பிறகு கிடைப்பதாக இருந்தது. ஆதலால், சகோதரர் ஜுஹுர் அஹ்மதுக்கு (மிஸ்டர் ஜுஹுர் அஹ்மத் பாரிஸ்டர்) எழுதிய கடிதத்தில் "உங்களுடன் உணவருந்துவோம். தாயார், குழந்தைகள் முதலியவர்களுக்கு வண்டிக்கு ஏற்பாடு செய்யுங்கள். அவர்கள் அலஹபாதைச் சுற்றிப் பார்த்துக் கொள்ளட்டும்" என்று எழுதினேன். சிந்தாமணிக்கு எழுதிய கடிதத்தில் "தங்களையும், ஸப்ருவையும், பண்டிட்ஜீயையும் சந்தித்துப் பேசுவேன்" என்று எழுதினேன்.

புறப்படுவதற்கு ஒருநாளைக்கு முன்னதாக எங்களுடன் வருகிற சப்இன்ஸ்பெக்டருக்கு "எங்கள் கூட்

டத்தைச் சேர்ந்த எவரும் எந்த ஸ்டேஷனிலும் வெளியிற் செல்லக்கூடாது" என்ற உத்தரவு கிடைத்தது. ஆனால், எங்களுக்குக் கிடைத்த உத்தரவில் இந்த நிபந்தனை இல்லை. ஆதலால், "எங்களைத்தான் கவர்ன்மென்ட் பாதுகாப்புக் கைதிகளாக வைத்திருக்கிறதே அன்றி, எங்களைச் சேர்ந்தவர்களையும் பாதுகாப்புக் கைதிகளாக வைக்கவில்லை. நாங்கள் மட்டிலும் அலஹபாத் ஸ்டேஷனில் இருப்பதென்றும், வெளியிற் செல்வதில்லை என்றும் முடிவு செய்திருக்கிறோம்' என்று அவரிடம் தெளிவாகக் கூறிவிட்டோம்.

நாங்கள் 20உ காலை 10 மணிக்குப் பிரயாணமாகி, அந்தி வேளையில் கோட்துவார் வந்தோம். மாலை 6 மணிக்கு அங்கிருந்து ரயில் புறப்பட்டது. 7 மணிக்கு எங்கள் வண்டி நஜீப் ஆபாதுக்கு வந்து சேர்ந்தது. காலை 2 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு முராதாபாத் வந்தோம். அங்கு ஆனரபில் ஸெய்யித் ரிஜா அலி, யாக்கூப் (ஸர். முஹம்மது யாக்கூப்), மஸ்ஊத், அப்துஸ் ஸலாம் முதலிய எல்லா அன்பர்களும் வந்திருந்தனர். ராம்பூரிலிருந்து எனது மனைவி, ஹமீதா, குல்னூர், ஜாஹித் ஆகியவர்களும் வந்து, எங்களுடன் பிரயாணத்தில் கூட்டாகிக் கொண்டனர். இவர்களைத் தவிர ராம்பூரிலிருந்து ஏராளமான நண்பர்களும், பந்துக்களும் வந்திருந்தனர்.

கோட்துவாரத்திலிருந்தே சாப்பாடுகளும், காப்பிகளும் வர ஆரம்பித்துவிட்டன. முராதாபாதில் இன்னும் அதிகமாக வந்தன. பரேலியில் அலிகார் நண்பர்

களிடம் விடைபெற்றுக்கொண்டோம். அன்ஸாரி (டாக்டர் அன்ஸாரி) ராம்பூரிலிருந்து முராதாபாதுக்கு வந்திருந்தார். டாக்டர் அப்துர் ரஹ்மானும் வந்திருந்தார். பரேலியில் சகோதரர் தாவூத் முதலியவர்கள் தேத்தண்ணீர் முதலியவைகள் கொண்டுவந்திருந்தனர்.

லக்நௌவுக்குச் சென்றவுடன் வண்டி வழக்கத்திற்கு மாறாக, பாலத்திற்கு இந்தப் பக்கத்திலேயே பிளேட் பாரத்தில் நின்றது. ஆனால், அது நின்றபின், கண்ணியம் பொருந்திய மௌலானா அப்துல் பாரீ சாகிப் கிப்லா, மௌலானா முஹம்மது இப்ராஹீம் சாகிப் சியால்கோட் ஆகியவர்களும், அநேக நண்பர்களும் வந்து சேர்ந்தனர். மௌலானாக்களின் முலாக்காத்தும் கதம்போஸியும் கிடைத்தன. கான்பூர், அலிகார், பாரா பங்கி முதலிய இடங்களிலிருந் தெல்லாம் நண்பர்கள் வந்திருந்தனர். வழியில் சாப்பிடுவதற்காகச் சாப்பாடும், பழங்களும், மிட்டாய்களும் ஏராளமாக வந்து குவிந்தன. எங்களுக்கு உட்காருவதற்குக்கூட இடம் கிடைக்கவில்லை. சுமார் முன்னூறு நானூறு பேர் தாராளமாகப் புசிப்பதற்குத் தகுந்த சாமான்கள் வந்து சேர்ந்திருந்தன.

மௌலானா அப்துல் பாரீசாகிப் கிப்லாவும், மற்றுஞ் சில நண்பர்களும் ராய்பரேலிவரை எங்களுடன் வந்தனர். இப் பெரியார்கள் எங்களைப் பாராட்டியது எங்களை வெட்கப் படுத்திக் கொண்டிருந்தது. நாஜிர் (இப்பொழுது நாஜிர் யார் ஜங்), வஸீம் (மிஸ்டர் வஸீம் பாரிஸ்டர்), விலாயத் (விலாயத் அலி பம்பூக்) ஆகியவர்

களை நாங்கள் அலஹபாத் வரை அழைத்துச்சென்ருேம். தற்செயலாக வழியில் டாக்டர் ஸப்ரூவுடன் சந்திப்பு ஏற்பட்டது. அவரும் அதே வண்டியில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். ஆதலால், அவரைப் பார்ப்ப தற்காக அலஹபாதுக்கு நாங்கள் செல்லவேண்டிய கஷ்டம் ஏற்படவில்லை. ஜுஹுரும், லக்நௌ ஸெய்யித் ஜுஹுர் அஹ்மத் சாகிபும் எங்களைச் சந்தித்தனர்.

அலஹபாத் ஸ்டேஷன் சென்றவுடன் பறவை களின் மயிர்களைப்போல் கறிந்து விழுகிருர்கள் என் பது தெரிய வந்தது. பிளேட்பாரம் டிக்கட் கொடுப் பது நிறுத்தப்பட்டு, ஸ்டேஷன் காலியாக இருந்தது. எங்களை 7 மணிக்கு முன்பே, அங்கிருந்து வேறு எங் கேனும் அழைத்துச் செல்வார்கள் போல் தோன் றிற்று. 100—120 போலீஸாரும் அங்கு பாரா இருந் தார்கள். அலஹபாத் வாசிகள் எங்களுக்கு ஸ்டேஷனில் தோட்டக் கச்சேரி விருந்தளிக்க உத்தரவு கேட்டதாக வும், அதற்கு அனுமதி கொடுக்கவில்லை யென்றும் கேள்விப்பட்டோம். ஜுஹுர் கொஞ்சம் பழங்களை யும், சாப்பாட்டையும் ஸ்டேஷன் மாஸ்டர், போலீஸார் ஆகியவர்களிடத்தில் கொடுத்து, "இவைகளை நன்ருய்ப் பார்த்துக்கொள்ளுங்கள், சட்ட விரோதமான சாமான் கள் ஒன்றும் இதிலிருந்து அகப்படவில்லையாயின், பாதுகாப்புக் கைதிகளிடம் இவைகளைக் கொடுத்துவிடுங் கள்" என்று கூறிப் போய்விட்டார். அலஹபாத் ஸ்டே ஷனில் போலீஸாரைத் தவிர வேறு யாருமிருக்கவில்லை. இரு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களு மிருந்தனர். இவ்

விருவரும் ஷௌக்கத்துக்கு அறிமுகமானவர்கள். அவர்களிலொருவர் அவருக்குச் சிநேகிதராகவு மிருந்தார்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு 'ஒரு பெருந்தன்மைக்'காரர் வந்தார். முதலில் ஸ்டேஷன்மாஸ்டரிடம் சென்று, இந்த ஜனங்களை வெளியேற்றிவிடவேண்டும் என்று கூறினார். டாக்டர் நாஜிருத்தீன் ஹஸன், பாரிஸ்டர்களான மிஸ்டர் முஹம்மதுவஸீம், மிஸ்டர் ஜுஹூர் அஹ்மது, ஸெய்யித் ஜுஹூர் அஹ்மது சாகிப் பி. ஏ. வக்கில் ஆகியவர்களைக் குறித்து அப்படிக் கூறினார். இவர்களுக்குக் கடுங்கோப மேற்பட்டும், வருத்தமுண்டாகியும் ஒன்றுங் கூறாமல், பேசாமல் பொறுமையுடன் சென்று விட்டனர். இறைவன் இவர்களை நீடூழி காலம் க்ஷேமமாக வைக்கவேண்டும். இவர்கள் செல்வதற்குமுன், தாயார் இவர்களை ஆலிங்கனம் செய்து "மகனே! இவர்கள் இம்மாதிரி கூறிவிட்டதற்காக துக்கப்படக் கூடாது" என்று கூறி அனுப்பினார்.

பிறகு, அந்தப் பெருந்தன்மைக்காரர் எங்களிடம் வந்து, "உங்கள் வண்டியில் நீங்கள் உட்கார்ந்து கொள்ளவேண்டும்" என்று கூறினார். இதற்குக் காரணமென்னவென்று ஷௌக்கத் கேட்டார். "தாங்கள் இம்மாதிரிதான் செய்ய வேண்டும் என்று நான் கூறுகிறேன்" என்று அதிகாரமாகப் பதில் கூறினார். அதற்கு நாங்கள் "கவர்ன்மென்ட் உத்தரவு எங்களுக்கு எந்த அளவுக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்குத் தான் நாங்கள் அனுசரித்து நடக்க முடியும். அதற்கு மேல் நாங்கள் சுயேச்சையுள்ளவர்களே. நாங்

கள் இங்கு 7 மணி வரை தங்கி இருக்கவேண்டும்" என்று கூறினேன். அதற்கு அவர் "இல்லை, நீங்கள் 5½ மணிக்கு ஒரு வண்டியில் சட்னுவுக்குச் செல்ல வேண்டும். அங்கு சில மணிநேரம் தாமதித்திருந்து, இராத்திரி இங்கிருந்து நேராக ஜபல்பூர் செல்லும் வண்டியை எதிர்பார்க்க வேண்டும்" என்று கூறினார்.

அதற்கு நாங்கள் "எங்களுக்குக் கிடைத்த உத்தரவில் இந்தக் கட்டளைகள் இல்லை. 3 மணிக்கு அலஹபாத் வந்து சேர்ந்து, ராத்திரி 10 மணிக்கு நேராக ஜபல்பூர் செல்ல வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது" என்று கூறினோம். அதற்கவர் "இல்லை, அரசாங்கத்தார் தங்கள் உத்தரவை மாற்றிக்கொண்டார்கள். தாங்கள் இப்பொழுதே செல்லவேண்டும்" என்று கூறினார். அதற்கு நாங்கள் "இம்மாதிரியான உத்தரவு எதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. எங்களுக்குக் கிடைத்த உத்தரவுக்கு மாருக நாங்கள் நடந்து கொண்டால், நாங்கள் 3 வருஷ கடினகாவல் தண்டனைக்குள்ளாவதுடன், ஒரு ஆயிரம் ரூபாய் அபராதமும் கொடுக்க வேண்டியதிருக்கும்" என்று கூறினோம். அதற்கவர் "நான் தங்களிடம் சாந்தமாகக் கூறிக் கொண்டிருக்கிறேன். இதுதான் கவர்ன்மென்ட் உத்தரவு" என்று கூறினார். அதற்கு நான் "கனவான் அவர்களே! தாங்கள் இன்னார் என்றுகூட எங்களுக்குத்தெரியாது. அப்படியிருக்க, அரசாங்க முத்திரையுடன் எங்களுக்கு வந்த உத்தரவுக்குப் பதிலாக, தங்களுடைய வாய்மொழியான உத்தரவை

நாங்கள் எங்ஙனம் ஒப்புக்கொள்ள முடியும்?" என்று கூறினேன்.

அதற்கவர், "நான் இந்த ஸ்டேஷனின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்." என்று கூறினார். அதற்கு நான் "தங்களைச் சந்தித்தது ரொம்ப சந்தோஷம். தங்களைச் சந்தித்த பிறகும் கூட நாங்கள் சர்க்கார் உத்தரவுக்கு மாறாக, தங்கள் உத்தரவை மதிக்கமுடியாது" என்று கூறினேன்.

இதன் பேரில் அவர் அதிகாரத் தோரணையில் "வண்டியில் உட்கார்ந்து கொள்ளுங்கள் என்று நான் சாந்தமாகக் கூறிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என் அதிருப்தியை உண்டாக்குகிறீர்கள்" என்று கூறினார். அதற்கு நான் "இதில் அதிருப்திகரமான விஷயம் ஒன்றுமே இல்லை. சர்க்கார் கட்டளைக்குமாறாக ஒன்றுமே செய்யமுடியாது என்று நான் மிகவும் சாந்தமாகக் கூறிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினேன். இதன் பேரில் அவருக்கு ஆத்திரமுண்டாகிவிட்டது "ஏன்? இந்தப் பாட்டையே திரும்பத் திரும்பப் பாடுகிறீர்கள்" என்று கூறினார். இதற்கு, ஷௌகத் நன்றாக அவரை உற்றுப்பார்த்து "போதும்! இந்தத் தோரணையில் பேசாதீர்" என்று கூறினார். இதற்குப் பிறகு அவருக்குச் சிறிது புத்தி வந்தது. "வண்டியில் உட்கார்ந்து கொள்ளுங்கள் என்று நான் சாந்தமாகக் கூறுகிறேன். நீங்கள் என் அதிருப்தியுண்டாக்குகிறீர்கள்?" என்று மறுபடியும் கூறினார். அதற்கு, ஷௌகத் "தாங்கள் கூறுவது நியாயமானதன்று. எங்களிடம் வந்து குறுக்

கிட வேண்டாம். இவ்விடத்தைவிட்டுச் சென்று விடுங்கள் என்று நான் தங்களிடம் சாந்தமாகக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறினர்.

இதன்பேரில் அவர் அதிகாரத்துடன் "எனது கட்டளையை நிறைவேற்றும் விஷயத்தில், உங்களை நான் நிர்ப்பந்திக்க வேண்டுமென்று என்னை நீங்கள் நிர்ப்பந்தப் படுத்துகிறீர்கள்'' என்று கூறினர். அதற்கு ஷௌகத் "இஷ்டம்போல் செய்து கொள்ளலாம். தாங்கள் அவசியம் முயற்சி செய்துபாருங்கள். ஆனல், 3½ மணு எடையுள்ள ஸ்தூலமும், 6½ அடி உயரமும், 1½ முழ நெஞ்சு முள்ள ஒருவனை; நிர்ப்பந்தப்படுத்தி உமது கட்டளைக்குக் கீழ்ப்படியும்படிச் செய்வது சுலபமன்று'' என்று கூறினர். அதற்கவர் "நீங்கள் ஜென்டில்மான்கள் என்று நான் நினைத்திருந்தேன்'' என்று கூறினர். அதற்கு நான் "தாங்கள் ஜென்டில்மான் என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனல்........'' என்று கூறினேன். இந்த "ஆனல்'', என்ற வார்த்தைக்குப் பின்னுள்ள வாக்கியம் அந்த உத்தியோகஸ்தரை கிருகிருக்கும்படிச் செய்துவிட்டது. பிறகு, அவர் "இனி நான் நிர்பந்தப் படுத்திக் கீழ்ப்படிய வைப்பேன்'' என்று சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் ஷௌகத் "இஷ்டம்போல் செய்து பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறினர். இந்த அளவிற்கு சம்பாஷணை செய்து கொண்டபின், வேறொரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார்.

இவ் விஷயத்தை என்னிடம் விட்டு விடுங்கள் என்று முந்திய பேர்வழியிடம் கூறினர். அவர் இதுதான் சமயம் என்று வந்தவழியே சென்று விட்டார். பிறகு, போலீஸ் இன்ஸ்பெக்டர் எங்களிடம் "தாங்கள் அவரது சொல்லைக்கேட்டால் ஏதாவது குற்றம் வந்துவிடுமா?" என்று கேட்டார். இவர் ஷௌகத்துக்கு அறிமுகமானவர். அதற்கு ஷௌகத் "முதலில் கூறிய பதிலையே இவரிடமும் திரும்பக்கூறி, இவ்விஷயம் பஞ்சாயத்துச் செய்து முடிவு செய்யப்படும் காரியமல்ல. சர்க்கார் உத்தரவு சம்பந்தப்பட்டது" என்று கூறினர்.

பிறகு, நாங்கள் ஸ்டேஷனிலுள்ள வெய்ட்டிங் ரூமுக்குச் சென்று, உலுச்செய்து, லுஹர் தொழுதோம். அதான் சொன்ன பிறகு அஸரும் தொழுது கொண்டோம். தொழுது முடிந்தபின் ஷௌகத்தின் பழைய நண்பரும், எனக்கு நெருங்கிய அறிமுகமுள்ளவருமான அலஹபாத் கலெக்டர் மிஸ்டர் பிரிமென்டல் எங்களைப்பார்க்க விரும்புகிறார் என்று எங்களுக்குத் தகவல் சொல்லப்பட்டது. நாங்கள் அவரிடம் சென்றோம். அவர் எங்களைப்பார்த்து "இது என்ன தகராறு" என்று வினவினர். அவருக்கு, ஷௌகத் எல்லா சமாசாரத்தையும் சொல்லிக் காண்பித்தார். அதன்பேரில் கலெக்டர் "உங்களுடைய பிரயாணத் திட்டம் மாற்றி வைக்கப்படும்" என்று எனக்கு 2-3 நாட்களுக்கு முன்பே தகவல் தெரியும். நான் பர்ன் போனபோது சீப் செக்ரடரியிடம் கேட்டுவந்தேன்.

"நீங்கள் 5½ மணி வண்டியில் போகவேண்டும் என்று அவர் கூறினார்" என்பதாக எங்களிடம் சொன்னார்.

இதன் பேரில் ஷௌகத் "சட்டப்படி சீப் செக்ரடரியின் கட்டளை எங்களுக்குக் கிடைக்கவேண்டும். ஆனால், நான் தங்களை அறிந்திருக்கிறேன். எதற்கும் தாங்கள் இதை எழுதிக்கொடுத்து விட்டால், எங்களுக்கு ஆதாரமாகிவிடும். அவசியமேற்பட்டால் அது எங்களுக்கு உபயோகப்படும்" என்று கூறினார். அதன் பேரில் எழுத்து மூலம் உத்தரவு கிடைத்தது. உடனே, தாயாருக்கும், குழந்தைகளுக்கும் வண்டி இப்பொழுது போகும் என்று அறிவிக்கப்பட்டது.

வண்டியில் பிரயாணமாகி இரவு 12 மணிக்கு நாங்கள் சட்னா வந்து சேர்ந்தோம். இந்த வண்டி அதுவரைதான் செல்லும். அலஹபாதிலிருந்து 10 மணிக்குப் புறப்படும் வண்டி வந்தபின், நாங்கள் மறுபடியும் பிரயாணமானோம். காலையில் ஜபல்பூர் வந்தது. பிறகு இராத்திரியில் இங்கு (சுண்டுவாடா) வந்து சேர்ந்தோம்."

பதினொன்றாம் அத்தியாயம்

சுண்டுவாடா

சுண்டுவாடாவுக்கு அலி சகோதரர்களை மாற்றிய பின், அங்கு அவர்கள் மிகவும் பொறுமையுடனும், நன்றியுடனும் காலங் கடத்தி வந்ததுமல்லாமல், அங்கிருந்து கொண்டே தேசத்திற்கும், சமூகத்திற்கும் தாங்களாலானவரை தொண்டாற்றிக் கொண்டிருந்தனர்.

மஸ்ஜிது கட்டியது :—இவர்கள் பாதுகாப்புக் கைதிகளாக இருந்தபோது, அங்கு ஒரு முக்கிய கைங்கரியத்தைச் செய்தனர். சுண்டுவாடாவில் முஸ்லிம்கள் போதியளவிருந்தனர். ஆனால், தங்களுக்காக ஒரு வணக்க ஸ்தலம் இருக்கவேண்டும் என்ற விஷயத்தில், அங்குள்ள முஸ்லிம் பொது ஜனங்களுக்குச் சிரத்தையுண்டாகவில்லை. இவ்விரு சகோதரர்களும் அங்கு சென்றபின், அவர்களிடம் மத பக்தியை யுண்டுபண்ணினர். அங்குள்ள முஸ்லிம்கள் தங்கள் தலைகளை ஸஜ்தாச் செய்து, இறைவனின் திரு சமூகத்தில் தங்கள் வணக்கத்தைச் சமர்ப்பித்துக் கொள்வதற்காக அங்கு ஒரு மஸ்ஜிது கட்ட ஏற்பாடு செய்து, அதனைக் கட்டி முடித்தனர். பின்னர், அதில் முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாக வந்து தொழுது கொண்டிருந்தனர்.

விடுதலை முயற்சி :—இந்திய முஸ்லிம்கள் தங்கள் அருமைத் தலைவர்கள் கைதிகளாக இருப்பதைப் பற்றி அளவில்லா வருத்த மடைந்தனர், துடித்தனர், தங்களாலியன்ற முயற்சிகளையுஞ் செய்தனர். மிஸ்டர் மல்

ஹருல்ஹக்கும், மிஸ்டர் ஜின்னுவும் இம்பீரியல் கௌன் சிலில் கேள்விகள் கேட்டனர். அவர்களுக்கு அரசாங்கத் தார் அளித்த பதில்கள் முந்திய அத்தியாயத்தில் சொல் லப்பட்டிருக்கின்றன.

மஹ்முதாபாத் மகாராஜாவின் முயற்சி :—இது சம் மந்தமாக மஹ்மூதாபாத் மகாராஜா செய்த முயற்சிகள் மறக்கத் தக்கவைகளாகா. சத்திய வழியில் உழைக்கும் இவ்வீரர்களின் விடுதலைக்காக அவர் தமது செல் வாக்கை உபயோகித்து, தம்மாலான சகல முயற்சிகளை யும் செய்தார். அவர் நேராக சுண்டுவாடாவுக்குச் சென்று, அலி சகோதரர்களிடம் பேசி, இதனை முடிவு செய்ய முயன்ருர். ஆனுலும், எதிர் பார்த்த தற்கு விரோதமாக, இம் முயற்சிகளும் பிரயோஜனமற் றனவாக முடிந்தன என்பது தெரிய வந்தது.

முஸ்லிம் லீக் தலைமை :—1917-ம் வருஷம் செப் டம்பர் மீ அதாவது அலி சகோதரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுச் சுமார் $2\frac{1}{2}$ வருஷங்களுக்குப் பிறகு, அவர்கள் பால் முஸ்லிம்களுக்கு இருந்த அன்பின் மேலீட்டால், மௌலானு முஹம்மது அலிக்கு அகில இந்திய முஸ்லிம் லீக் தலைமைப் பதவியை அளித்துக் கௌரவித்தனர். அக்காலத்தில் அம்மகா சபைதான் முஸ்லிம்களின் ஒரே ராஜீய பொதுச் சபையாக இருந் தது. ஆனுல், அரசாங்கம் இம்மகா நாட்டில் கலந்து கொள்ள முஹம்மது அலிக்கு அனுமதி கொடுக்காதது மட்டு மில்லாமல், அதனுடைய நடவடிக்கைகளில் சமிக் ஞையாகக் கூட, கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை.

இம் மகாநாட்டில் கலந்து கொள்ள அரசாங்கம் அனுமதிக்காததால், அவருடைய அன்னை பீ அம்மா அவர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு, தமது மைந்தருக்குப் பதிலாக நடவடிக்கைகளை நடத்தி வைத்தார். அதுபோழ்து மௌலானாவின் புகைப் படம் அக்கிராசன பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. பீ அம்மா அவர்கள் இம் மகாநாட்டில் அவருடைய செய்தியை அறிவித்தார். இப்பிரசங்கத்தைப்பற்றி டில்லி நண்பர் ஒருவர் "பீ அம்மாவுடைய ஒவ்வொரு வார்த்தையும் பசு மரத்தாணி போல் பதிவனவாக இருந்தன. இவ்வார்த்தைகள் லீக் மகா நாட்டுக் கூட்டத்தை துக்கச் சபையாக மாற்றி விட்டன" என்று கூறி இருக்கிறார்.

மிஸ்டர் திலகரின் தீர்மானம் :—இவ்வருஷம் நடைபெற்ற காங்கிரஸ் மகா நாட்டில், இந்தியாவின் பிரபல ராஜீய தலைவரான மிஸ்டர் திலகர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அலி சகோதரர்களை உடனே விடுதலை செய்யும் விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இந்த முயற்சியும் பயனற்றதாகவே முடிந்தது.

இந்தியாவில் மிஸ்டர் மாண்டேகு :—இதே சமயத்தில் இந்தியா மந்திரியான மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு விஜயம் செய்தார். தேசத்திலுள்ள ராஜீய கக்ஷிகளின் பிரதிநிதிகள் அவரைப் பேட்டி கண்டனர். மிஸ்டர் காந்தி, மிஸஸ் பெஸண்ட், மிஸ்டர் ஜின்னா, பண்டிதர் மாளவியா, மிஸ்டர் சிந்தாமணி, ஜாமிஆ மஸ்ஜிது இமாம், போப்பால் பேகம் சாகிபா, மஹ்மூதாபாத்

மகாராஜா ஆகிய அனைவரும் பேட்டி கண்டு பேசினர். இந்திய சீர்திருத்தம் சம்பந்தமாக மிஸ்டர் மாண்டேகு எல்லாரிடத்திலும் மிகவும் விரிவாகக் கலந்து பேசினர். எல்லாருடைய அபிப்பிராயத்தையும் கேட்டுத் தெரிந்தார். தம்முடைய நோக்கத்தை எல்லாருக்கும் அறிவித்தார்.

மிஸ்டர் மாண்டேகு இயற்கையிலேயே அதிகமதி நுட்பமுள்ளவர். அவர் ஒவ்வொருவருடைய முறையீட்டையும் கேட்பவராக இருந்தார். சுயேச்சையான உணர்ச்சியுள்ளவர். அவருக்கு இயன்றிருக்குமாயின், அவர் காங்கிரஸ் மகாநாட்டிற்கு விஜயம் செய்து, நடவடிக்கைகளை நேரிற் கவனித்திருப்பார். ஆயினும், இந்திய அரசாங்கம் அதற்கு இடங் கொடுக்கவில்லை.

நமது மௌலானா முஹம்மது அலி அவர்களும் மிஸ்டர் மாண்டேகுவைப் பேட்டி கண்டு, இந்தியாவையும் முஸ்லிம்களையும் பற்றிய தமது உணர்ச்சிகளையும், இந்தியர்களின் அபிலாஷைகளையும் பற்றி அவரிடம் நேரில் பேச விரும்பினர். ஆனல், அரசாங்கம் அவருக்கு அனுமதி கொடுக்கவில்லை.

முஸ்லிம்களின் தூது:—அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர் ஒருவர் வந்தால், அவருக்கு விருந்தளிப்பதும், உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதும், ஒரு தூதுவக் கூட்டம் அவரைப் பேட்டி கண்டு பேசுவதும் இந்தியாவில் வழக்கமாகவே ஏற்பட்டுவிட்டது. இவ்வழக்கத்திற்கேற்ப நவாப் முஹம்மது இஸ்ஹாக் கானின் தலைமையில் முஸ்லிம்களின் தூதுவக்

கூட்டம் ஒன்று மிஸ்டர் மாண்டேகுவைப் பேட்டி கண்டு பேச வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இத்தூதுவக் கூட்டம் தயார் செய்திருந்த உபசாரப் பத்திரத்தில், இந்திய முஸ்லிம்களின் உணர்ச்சி அறிவிக்கப்பட்டிருந்தது. என்றாலும், அலி சகோதரர்களின் விடுதலையைப்பற்றியும் பிரஸ்தாபமிருந்தது. இத்தூதுவக் கூட்டம் மிஸ்டர் மாண்டேகுவைப் பார்ப்பதற்காக டில்லிக்கு வந்தபோது "அலி சகோதரர்களைப் பற்றிய பிரஸ்தாபத்தை உபசாரப் பத்திரத்திலிருந்து அகற்றி விட்டால்தான், இந்தியா மந்திரியைப் பார்க்க முடியும்" என்று தகவல் கொடுக்கப்பபட்டது.

இத்தூதுவக் கூட்டத்தினர், தங்களது சொந்த ஹோதாவில் இந்தியா மந்திரியைக் காண வரவில்லை என்றும், முஸ்லிம்களின் பிரதிநிதி என்ற ஹோதாவிலேயே வந்திருப்பதாகவும், உபசாரப் பத்திரத்தில் தங்கள் இஷ்டப்படி ஒன்றைச் சேர்க்கவோ, ஒன்றை அகற்றவோ முடியாது என்றும் பதில் கூறினர். இப்பதில் அரசாங்கத்துக்குத் திருப்தி யளிக்காததால், இந்தியா மந்திரியை அவர்கள் பேட்டி காண்பதும் நின்றது.

வாக்குறுதி எழுதி வாங்க முயற்சி:—1914-ம் ஸு செப்டம்பர்மீ 7உ பிரபல இரகசிய போலீஸ் சூப்ரின்டன்டான மிஸ்டர் அப்துல் மஜீத் என்பவர் சுண்டுவாடாவுக்கு அனுப்பப்பட்டார். ஸர். சார்லஸ் கிலோலாண்டின் சார்பாக ஒரு உறுதிமொழிப் பத்திரமும் கொண்டு போகப்பட்டது. அதில் அவர்கள் கையொப்ப

மிட்டால் அவர்களுக்கு விடுதலை கிடைப்பதாக இருந்தது.

"யுத்த காலத்தில் அரசாங்கத்தின் விரோதிகளுக்கு எவ்விதமான வாய் உபகாரமும், காரிய உபகாரமும் கிடைக்கக் கூடிய எந்தக் காரியத்தையும் அலி சகோதரர்கள் செய்யமாட்டார்கள். பூரண அமைதியுடனிருப்பார்கள். சக்கரவர்த்தி பெருமானின் பகைவர்களுக்குத் தைரியம் உண்டாகக் கூடிய எந்தக் காரியமும் செய்யமாட்டார்கள்" என்று அவ்வுறுதிமொழிப் பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தது. இதற்கு மறுமொழியாக அலி சகோதரர்கள் "எங்களுடைய மத நன்மைக்கு அரசாங்கம் பங்கம் விளைவிக்காமல் இருக்கும் வரை, இம்மாதிரி நாங்கள் நடந்து கொள்ள முடியும். மத விஷயம் பாதிக்கப் படுமாயின், அதற்கப்புறம் நாங்கள் எவ்வித உறுதி மொழியும் கூற முடியாது. எவ்விதமான கட்டுத் திட்டத்தையும் நாங்கள் அங்கீகரிக்கவும் முடியாது" என்று கூறிக் கையொப்பமிட மறுத்து விட்டார்கள்.

ஸர். சார்லஸுக்கும் முஹம்மது அலிக்குமுள்ள சம்பந்தம் :—இதனால், அலி சகோதரர்களின் விடுதலை விஷயம் ஒத்தி வைக்கப்பட்டது. அவர்கள் விடுதலையடைவார்கள் என்று தேசத்தில் ஏற்பட்டிருந்த சந்தோஷ உணர்ச்சி திடீரென்று மழுங்கிவிட்டது. இதற்கு முக்கிய காரணம் ஸர். சார்லஸின் தலையீடாகும். மௌலானா முஹம்மது அலியின்மீது ஸர். சார்லஸுக்கு ஏன் இவ்வளவு புழுக்கம் என்பதைக் குறித்து,

அலி சகோதரர்களின் சட்ட ஆலோசனை நிபுணரான மிஸ்டர் காட்டே என்பவர் மிஸஸ் அனிபெஸண்டுக்கு எழுதிய கடிதம் வருமாறு:

மிஸஸ் பெஸண்டுக்கு மிஸ்டர் காட்டேயின் கடிதம்:—"ஸெய்யித் வஜீர் ஹஸனுடன் மிஸ்டர் முஹம்மது அலி இங்கிலாந்துக்குச் சென்றிருந்த சமயம், முஹம்மது அலி" ஆங்கிலோபிரிட்டிஷ் அஸ்ஸோஸியேஷனில் சேர்ந்துகொள்ளவேண்டும் என்றும், இந்திய அரசாங்கத்திலுள்ள ஆங்கிலோ இந்திய ஊழியர்களுடன் சேர்ந்து, 1911-ம் வருஷத்திய தர்பாரில் டில்லிக்குத் தலைநகரை மாற்றும் விஷயமாக லார்ட் ஹார்டிங்கும், ஸர். அலி இமாமும் சேர்ந்து செய்த ஏற்பாட்டை எதிர்த்து அதை மறுபடியும் கல்கத்தாவுக்கு மாற்றிவிட முயற்சி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டது. இச் சதியாலோசனையில் சேர்ந்து கொள்ள முஹம்மது அலி மறுத்து விட்டதிலிருந்து ஸர். சார்லஸின் போக்கு தமக்கு விரோதமாக இருப்பதை முஹம்மது அலி உணர்ந்தார். அது போழ்து ஸர். சார்லஸ் ஸி. ஐ. டி. டைரக்டர் ஜெனரல் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார்.

விசாரணைக் கமிஷன்:—பிறகு 1918-ம் வருஷத்தில் சர்க்கார் விசாரணைக் கமிஷனை நியமித்தது. அலி சகோதரர்களைப் பாதுகாவலில் வைத்தது நியாயமா அல்லவா என்பதை விசாரணை செய்து ரிப்போர்ட் அனுப்ப வேண்டும் என்பது அக்கமிஷனின் வேலை. பஞ்சாப் ஹைகோர்ட் ஜட்ஜுகளில் ஒருவரான ஸர். அப்துர்

ரஊப் என்பவரும் அக்கமிஷன் அங்கத்தினர்களில் ஒருவர். 1918-செப்டம்பர்மீ 15உ இந்த கமிஷன் சுண்டுவாடா சென்று, அலி சகோதரர்களை தனித் தனியே அழைத்து விசாரணை செய்தது.

அலி சகோதரர்களின் வாக்குமூலம்:—இக் கமிஷனர்கள் இவர்களை விசாரணை புரிந்தபோது, அரசாங்கத்தின் அநியாய அக்ரமங்களை இவர்கள் தக்க ஆதாரத்துடன் ருஜூப்படுத்தினர். தங்களுடைய மதக் கடமைகளை விளக்கிக் கூறியதுடன், மத விஷயத்தில் அரசாங்கத்துக்குக் கீழ்படிதல் மிகவும் குறைந்த அளவுக்குத்தானிருக்கு மென்றும், மத விஷயத்திலும், புண்ணிய க்ஷேத்திரங்கள் விஷயத்திலும் அரசாங்கம் தலையிடுவதை விட்டுவிடும் பக்ஷத்தில், நாங்கள் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிவோம் என்றும், அரசாங்கம் அதை விட்டுவிடாமல் அதில் ஸ்திரமாக இருக்குமாயின், தங்களைப் பார்க்கினும் பெரிய விரோதி வேறு யாரும் இருக்க முடியாதென்றும்; தாங்கள் இம்மாதிரி கூறுவதற்கு விக்டோரியா மகாராணியின் சரித்திரப் பூர்வமான அறிக்கைதான் ஆதாரமென்றும், தாங்கள் நியாயமான கக்ஷியிலேயே இருப்பதாகவும், அரசாங்கத்தார் நியாயமில்லாமல் இம்மாதிரி நடந்து கொள்வதைப்பற்றி ஆச்சரியப்படுவதாகவும் கூறினார்கள்.

தங்களுடைய அபிப்ராயப்படி தாங்கள் குற்றமற்றவர்களென்றும், அரசாங்கத்தார்தான் அநீதி செய்தவர்கள் என்றும் ருஜூச் செய்துவிட்டதால், அநியாயமாக தங்களைப் பாதுகாவலில் வைத்ததால், தங்கள் வியா

பாரத்திலும்; பத்திரிகைத் தொழிலிலும் ஏற்பட்ட நஷ்டத்திற்கு, அரசாங்கத்தார் தங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

கமிஷன் சிபாரிஷ்கள்:—விசாரணைக் கமிஷனர்கள் அலி சகோதரர்களைப் பாதுகாவலில் வைத்தது நியாயமென்றும், அவர்கள் நஷ்ட ஈடு கேட்பது சரியல்லவென்றும் தீர்ப்புக்கூறியதுடன், அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று ஏகமனதாகச் சிபாரிஷ்செய்தனர்.

கவர்ன்மெண்டார் செய்தது சரியென்றும், அலி சகோதரர்கள் குற்றவாளிகள் தாம் என்றும் தீர்ப்புச் செய்திருக்கும்போது, அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று சிபாரிஷ் செய்வதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா? ஆகவே, அவர்களது சிபாரிஷ் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அலி சகோதரர்கள் வழக்கம்போல் பாதுகாவலிலேயே இருந்தனர்.

மிஸஸ் பேஸண்ட் விடுதலை:—இந்தியரின் பலமான கண்டனத்தின் பேரில், 1918-ம் வருஷம் நவம்பர்மீ மிஸஸ் அனிபெஸண்ட் விடுதலை செய்யப்பட்டார். இவர் விடுதலை செய்யப்பட்டதால், இனி அலி சகோதரர்களும் விடுதலை செய்யப்படுவர் என்று கருதப்பட்டது. பின்னர், இந்த எண்ணமும் வீண் என்றாயிற்று.

மிஸஸ் பேஸண்டின் முயற்சி:— இந்த இடத்தில் மிஸஸ் பெஸண்ட் செய்த முயற்சிகளைப் பாராட்டாமலிருப்பது பெரும் அநீதியாகும். அவர் விடுதலையடைந்தவுடன் அலி சகோதரர்களை விடுதலை செய்விக்க அதிக முயற்சி செய்தார். சகலவித முறையிலும் அரசாங்கத்

துக்கு அறிவுறுத்த விரும்பினர். அலி சகோதரர்களைப் பாதுகாவலில் வைப்பதைப் பார்க்கினும், அவர்களை விடுதலை செய்வதுதான் மிகவும் உசிதமாகும் என்பதை அரசாங்கத்துக்கு விளக்க முயன்றார். ஆயினும், அரசாங்கம் இதைக் காதில்கூடப் போட்டுக்கொள்ளவில்லை.

வைசிராயைப் பேட்டி காணல் :—மிஸஸ் பெஸன்ட் தம்முடைய முயற்சியைக் கடைசி வரை செய்து பார்த்து விட வேண்டுமென்ற எண்ணத்தால், வைசிராயைப் பேட்டி கண்டு பேசினர். ஆயினும், பலன் ஒன்றுமில்லை. எனவே, அவர் வைசிராய் மாளிகையிலிருந்து திரும்பி வந்ததும் பத்திரிகைகளுக்கு அளித்த ஸ்ரீமுகத்தின் ஒரு பாகம் வருமாறு :—

“நான் டில்லியில் ஹிஸ் எக்ஸலன்ஸி வைசிராயைப் பேட்டி கண்டு பேசி விட்டு, இப்பொழுதுதான் வந்தேன். நான் கூறியவைகளனைத்தையும் ஹிஸ் எக்ஸலன்ஸி வைசிராய் கவனமாகக் கேட்டார். மிகவும் தாராளமாக என்னுடன் பேசினர். வைசிராயும், அவரது சபையினரும் அலி சகோதரர்களை விடுதலை செய்வதைப் பற்றி அதிக கவனம் செலுத்தி இருக்கிறார்கள் என்றும், இவர்களை விடுதலை செய்யப்படாது என்று ஏக மனதாக முடிவுசெய்யப்பட்டிருக்கிறது என்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் என்னிடம்கூறினர்”.

காரணங்கள் :—மிஸஸ் அனிபெஸன்ட் 3 மாதம் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்க, அலி சகோதரர்கள் மாத்திரம் 3½ வருஷ காலம் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தும், விடுதலை செய்யப்

படாததற்கு என்ன காரணம்? என்பது மிகவும் ருசிகரமான விஷயமாகும். இக்கேள்விக்குரிய பதில் இதைப் பார்க்கினும் இன்னும் அதிக வேடிக்கையானதாகும்.

இவர்களை இவ்வாறு பாதுகாப்பில் வைத்ததற்குக் காரணம் அரசாங்கத்திற்கு இவர்கள்மீது பயமிருந்தது. ஆதலால், இவர்களைச் சுயேச்சையாக விட்டு வைக்காமலிருப்பதே உசிதமென நினைத்தது. ஆனால், இவர்களைப்பாதுகாப்பில் வைப்பதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டியது அவசியமல்லவா? இதற்காக, ஒரு காரணத்தைக் கூறுவதற்குக் கூட அரசாங்கம் பூரணமாக சிந்தித்துக் கொள்ளவில்லை. இதனாற்றான், இவர்களைப் பாதுகாப்பில் வைத்ததற்கு யாது காரணம் என்று கேள்விகள் கேட்கும்போதெல்லாம், தலை காலில்லாத பதில்களையே அரசாங்கம் கூறிற்று. இவர்கள் அப்கானிஸ்தானைப் படையெடுத்து வரும்படி அழைத்து, சதியாலோசனை செய்தார்கள் என்று சில சமயம் அரசாங்கம் கருதிற்று. ராணுவ உத்தியோகஸ்தருக்கு ராஜ துரோகம் செய்யும்படி தூண்டிக் கடிதம் எழுதினார்கள் என்று சில சமயம் கூறப்பட்டது. சக்கிரவர்த்தி பெருமானின் விரோதிகளுக்கு ஊக்கமளித்தனர் என்ற குற்றத்தைச் சில சமயம் சுமத்தினர். அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட உறுதி மொழிப் பத்திரத்தில் அவர்கள் கையொப்பமிட மறுத்து விட்டார்கள் என்று சில சமயம் கூறப்பட்டது. எனவே, கேள்வி கேட்கப்படும் சமயம் அரசாங்கத்திற்கு எது தோன்றிற்றோ அதை யெல்லாம் கூறிற்று. இக் கேள்விக்

குரிய பதில் என்ன என்ற விஷயத்தை அரசாங்கத்தார் கொஞ்சமும் கவனிக்கவில்லை.

புரோபஸர் இல்யாஸ் பர்னியின் கடிதம்:—அலி சகோதரர்களைப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த போது, அவர்களுடைய நண்பர்களின் உணர்ச்சி எவ்வாறிருந்தது என்பது அடியிற்கண்ட இரு கடிதங்களாலும் தெரியவரும். புரோபஸர் இஸ்யாஸ்பர்னி தம்முடைய ஒரு கடிதத்தில் பின் வருமாறு எழுதி இருக்கிறார்:—

"பிரிய முள்ள சோதரீர்,

இப்பொழுது காலை மணி 4. திக்கற்ற நிலைமையில் இக்கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். நேற்றைய தினம் ஹயாத்திடமிருந்து தங்களுடைய புதிய பாடல்கள் கிடைத்தன. அவைகளைப் படித்த எனது மன நிலைமை எவ்வாறாயிற்று என்பதைச் சொல்லமுடியாது. இரவு முழுதும் அவைகளை மடக்கி மடக்கிப் படித்துக் கொண்டே தூங்கி விட்டேன். இவ்வளவு அதிகாலையில் கண் விழித்தவுடன், இருதயம் மறுபடியும் அதே நிலைமையில் இருந்தது. நான் அவைகளைப் படிக்கப் படிக்க, சந்தோஷத்தினாலோ அல்லது துக்கத்தினாலோ எதனால் என்று நான் சொல்லமுடியாது, இளஞ் சூடான கண்ணீர்கள் பொட்டுப் பொட்டென விழுந்து கொண்டிருந்தன. தங்களுடைய பாடல்கள் இருதயத்தில் பதிந்துவிட்டன. மனம் பொறுமல் இக்கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். சகோதரர்களாகிய உங்களிருவரையும் நமது சமூகம் மறந்து விடுவதெங்ஙனம்? இருதயங்களில் உங்களது ஞாபகம் தானிருக்கிறது. வாய்கள் உங்களுக்காகப்

பிரார்த்தனை புரிந்த வண்ணமாக இருக்கின்றன. வீடுகள் தோறும் உங்களது பேச்சுதான். உங்களுடைய பெயர்களைக் கேட்டவர்களெல்லாம் உங்களுக்கு அற்பணமாகத் தானிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மௌனமாக இருக்கிறார்களென்றால், அதற்குக் காரணம் வேறு. மறந்து விடவில்லை. சமூகத்தியாகிகளாகவும், தேசவீரர்களாகவு முள்ள உங்களிருவர்களையும் இறைவன் க்ஷேமமாகவும், சௌக்கியமாகவும் காப்பாற்றுவானாக"

அப்துல் ஹக் கடிதம்:—இரண்டாவது கடிதம் உதுமானியா சர்வகலாசாலையின் புரோபஸரும், உர்தூ அபிவிருத்திச் சங்கக் காரியதரிசியுமான மௌலவி அப்துல் ஹக் எழுதியது. அது வருமாறு:—

"நான் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன். உங்கள் சொல்லிலும், செய்கையிலும் நீங்கள் உறுதியாக இருந்ததற்காக இறைவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். நீங்கள் இந்தியா என்ற இந்த ஸ்கூலில் சிறந்த மாணவர்கள் என்பதிற் சந்தேகமில்லை."

அச்சமயம் முஸ்லிம்களினுடையவும், அலி சகோதரர்களை அறிந்தவர்களினுடையவும் நிலைமை எவ்வாறிருந்திருக்கும் என்பது இவ்விரு கடிதங்களிலிருந்தும் தெரியவரும். கண்ணியத்தைக் காப்பவர்களும், சுயமரியாதைக் காரர்களும், சுதந்திர வீரர்களுமான இவ்விருவர்களும் இவ்வளவு உறுதியுடனும், மற்றவர்கள் பொறாமை கொள்ளக்கூடிய பொறுமையுடனும் இருந்து, தங்கள் நிலைமையைக் காப்பாற்றுவது அவர்களையல்லாமல் வேறெவராலும் முடியாது. இவ்விருவரும் தங்க

ளுக்கேற்பட்ட இக்கஷ்டங்களை எல்லாம் சகித்துக் கொண்டு, சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவுமே தங்கள் காலங்களைக் கடத்தினர்.

சுண்டுவாடாவிலிருந்து மாற்றம்:—பல வருஷங்கள் வரை சுண்டுவாடாவின் காற்றையும் தண்ணீரையும் அனுபவித்து வாழ்ந்து வந்ததன் பின்னர், சுண்டுவாடாவையும் விடவேண்டிய தேற்பட்டது. மற்றொரு ஜெயிலுக்கு இவர்கள் அனுப்பப்பட்டனர்.

இவ்விரு சகோதரர்களின் முயற்சியின் பலனாக, சுண்டுவாடாவில் ஒரு மஸ்ஜிது கட்டப்பட்டு ஐந்து நேரத்துத் தொழுகைகளும், தராவீஹ், ஜும்ஆத் தொழுகைகளும் முறைப்படி நடைபெற்று வந்தன.

பிரசங்கம்:—வெள்ளிக்கிழமை யன்று ஜும்ஆ தொழுகைக்குப்பின், நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி உருக்கமான பிரசங்கம் புரிந்து, முஸ்லிம்கள் மறந்து விட்ட பாடத்தை மறுபடியும் அவர்களுக்கு ஞாபக மூட்டினார். பிரசங்கம் வழக்கம்போல் உருக்கமாகவும் மத பக்தி நிறைந்ததுமாக இருந்தது. சபையினருக்கு இதன் பேரில் விசேஷ உணர்ச்சி யுண்டாயிற்று. கவர்ன்மென்டாருக்கு இச் செய்கை சகிக்க முடியவில்லை. ஆதலால், இவர்களை சுண்டுவாடாவிலிருந்து மாற்றிப் பேத்தூல் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டனர். இனி, பாதுகாவலில் இருந்ததற்கு பதிலாக சிறைவாசம் செய்யும் நிலைமை ஆரம்பமாயிற்று. பெயருக்கு மாத்திரம் இருந்த அற்ப சொற்ப சுயேச்சையும் அபகரிக்கப்பட்டது.

பன்னிரண்டாம் அத்தியாயம்

சுண்டு வாடாவிலிருந்து பேத்தூல்

நமது மௌலானா முஹம்மது அலி ஜும்ஆ தொழுகைக்குப் பின் செய்த பிரசங்கத்தினல் அலி சகோதரர்களைப் பாதுகாப்பில் வைப்பதுங்கூட அபாய கரமானதென்றும், அவர்களை வெளியில் வைக்காமல் சிறைக் கூடத்தில் அடைத்து வைப்பதுதான் உசிதம் என்றுங் கருதப்பட்டது. ஆகவே, அவர்களை அரசாங் கத்தார் கைதி செய்து சிறைச்சாலைக்குள் அடைத்து விட்டார்கள்.

ஷௌகத் அலி டைரி:—அலி சகோதரர்கள் சுண்டு வாடாவில் கைதி செய்யப்பட்டு, பேத்தூல் சிறைச்சாலையில் வைக்கப்பட்டது சம்பந்தமான விபரங் கள் நமக்குக் கிடைக்கவில்லை. அலி சகோதரர்களால் எழுதப்பட்ட கடிதங்கள், டைரிகள் முதலியவைகளி லும் இது சம்பந்தமாக எந்த ரிக்கார்டும் கிடைக்க வில்லை. எனினும், மௌலானா ஷௌகத் அலியின் டைரியில் இவ்விஷயம் காணப்படுகிறது. எனினும், அவ ருடைய இந்த டைரியும் பரிபூரணமாக எழுதப்பட வில்லை. ஆயினும், சுண்டுவாடாவிலிருந்து கைதி செய்யப்பட்டு, பேத்தூல் சிறைக்குச் சென்ற விபரம் மாத்திரம் இதில் தெளிவாக எழுதப்பட்டிருப்பதால், அவ்விவரத்தை மட்டிலும் ஈண்டு குறிப்பிடுவோம்.

கைதி செய்யப் படல் :—"(சுண்டுவாடாவில்) நாங்கள் வழக்கம் போல் சுமார் 11 - மணிக்கு தூங்கச் சென்றோம். 2 அல்லது 2½ மணிக்கு நித்திரையிலிருந்து எழுந்து, நோன்பு நோற்பதற்காக ஸஹர் செய்தோம். அன்றையதினம் தற்செயலாக தாயார் அவர்கள் முஹம்மது அலியின் குழந்தைகளுடன் உணவருந்தச் செல்லவில்லை. கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டே இரண்டு நிமிஷத்தில் பாலை மட்டிலும் அருந்திவிட்டுத் தூங்கி விட்டார்கள்.

சுமார் 4 மணிக்கு பங்களாவின் சிறிய தலைவாசலின் அண்டையில் காலடிச் சப்தங்களைக் கேட்டேன். நான் மிகவும் ஜாக்கிரதையாகத் தூங்குபவனாதலின், இந்தச் சப்தங்களைக் கேட்டவுடன் விழித்துக் கொண்டேன். அநேக ஜனங்கள் வருவதைப் பார்த்து, நான் ஆங்கிலத்தில் "யார்?" என்று வினவினேன். டிப்டி கமிஷனரான புஹாட்டன் என்ற ஆங்கிலேயர் "தாங்கள் தானா மிஸ்டர் ஷௌகத் அலி?" என்று கூறினார். இந்த ஜனங்கள் நமக்கு "கௌரவ" மளிக்கவே வருகிறார்கள் என்று நான் உணர்ந்துகொண்டு, "ஆம்! நான்தான் வாருங்கள்" என்று கூறினேன். இதற்குள் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் மிஸ்டர் ரைட் என்ற ஆங்கிலேயர் என்னைப் பார்த்து "நாங்கள் உம்மை அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறோம்" என்று கூறினார்.

அதற்கு நான் "கூட வருவதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று கூறினேன். இதற்குள்ளாக 6 அல்

லது 7 ஆங்கிலேயர்களும், அநேக சிப்பாய்களும் என் கட்டிலைச் சூழ்ந்து கொண்டனர். நான் பனியனும், கால் சராயும் மாத்திரம் தான் அணிந்திருந்தேன். ரைட் எனக்குப் பக்கத்தில் வந்து, நாங்கள் தங்களுடன் மிகக் கண்ணியமாக நடந்து கொள்வோம். நீங்கள் எங்களுக்கு எவ்விதக் கஷ்டமும் கொடுக்கலாகாது என்று கூறினார். அதற்கு நான் "கஷ்டம் கொடுப்பது என்பது எப்படி? வாருங்கள் போகலாம். நான் தயாராக இருக்கிறேன்" என்று கூறினேன். நான் அது சமயம் கட்டிலின் பக்கம் நின்று கொண்டேன். எனது நான்கு பக்கங்களிலும் போலீஸார் சூழ்ந்து கொண்டனர்.

சோதனை:—ரைட் கொஞ்சம் வெட்கப்பட்டுக் கொண்டே, என்னுடைய கால்களிலிருந்து என் தேகம் முழுவதிலும் கைவைத்துத் தடவிப் பார்த்தார். ஏதேனும் துப்பாக்கி அல்லது மெஷின் பீரங்கி என் பனியனுக்குள் இருக்கிறதா என்று கவனித்தார். இதற்குப் பிறகு, ஹோடன் என்பவர் மிஸ்டர் முஹம்மது அலி எங்கே இருக்கிறார்? என்று விசாரித்தார். "அவர் உள்ளே தூங்குகிறார். நான் கூப்பிடுகிறேன் என்று கூறி, ஜாஹிதுக்குச் சப்தம் கொடுத்தேன். அதன் பேரில் அவனும், பந்தன் கானும், அக்தர் அலியும் வந்து விட்டார்கள். ஜாஹித் வெளியில் நின்றுகொண்டே முஹம்மது அலிக்குச் சப்தம் கொடுத்தான். பல சப்தங்கள் கொடுக்கப்பட்டபின், அவர் வெளியில் வந்த போது,

பனியனையும், கால்சராயையும் மட்டிலுந்தான் அணிந்திருந்தார். அவருடைய கையில் எவரோ ஒரு ஆங்கிலேயர் கைபோட்டு விட்டார். அவர் சுண்டுவாடாவிலுள்ள அஸிஸ்டன்ட் சூப்பிரின்டன்டன்ட் ஆப் போலீஸ் பிக்காக இருக்கவேண்டும். இச்செய்கை முஹம்மது அலிக்கு மிகக் கெடுதலாகத் தோன்றிற்று. இந்த கனவான்கள் தம்மை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறார்கள் என்ற விஷயம் முஹம்மது அலிக்குத் தெரியாது. அறைக்குள் சென்று சட்டையணிந்து கொள்ள விரும்பினர். ஆனால், அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. முஹம்மது அலி புதிதாக உற்பத்தி செய்த ஆயுதங்களிலெதையும் தமது அறையிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து விடுவாரோ என்று அவர்கள் பயந்தனர் போலும். இவர்களிலுள்ள புலாட்டன் என்பவர் "நாங்கள் உம்மை அழைத்துக் கொண்டு செல்ல வந்திருக்கிறோம்" என்று கூறினர். அதற்கு, முஹம்மது அலி "தயாராக இருக்கிறேன். ஆனால், ஸ்நானஞ்செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று கூறினர். இதற்கு, அனுமதி கொடுக்கப்படவில்லை. இதற்குள்ளாக எங்களது வேலைக்காரர்கள் முதலியவர்களும் வந்து விட்டார்கள். யுத்தம் செய்கிற இந்தப் பட்டாளத்துக்கு, கமாண்டராக இருந்த மிஸ்டர் ரைட் மிக அவசரப்பட்டுக் கொண்டிருந்தார். "நாங்கள் உங்களுக்கு 5 நிமிஷச் சாவகாசம் அளிக்கிறோம். நீங்கள் தயாராகிவிட வேண்டும்" என்று கூறினர். நான் ஸூட், கமிஸ்

ஆகியவைகளைத் தருவித்து அணிந்து கொண்டேன். என்னுடைய உடைகளையும் 'மியான்' ரைட் சோதனை செய்து பார்த்தார். ஆனால், கொஞ்சம் வெட்கமடைந்த வராக, முஹம்மது அலி கோட்டுப் போடுவதற்குள்ளாகவே, அவரது கையுடன் தமது கையையும் சேர்த்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

தாயாரின் அன்பு:-இதற்குள்ளாக புர்க்கா அணிந்து கொண்டு தாயாரும் வந்து, எங்களுடன் வருவதாகக் கூறினார். அதற்கு புலாட்டன் என்பவர் "இவ்விருவரையும் அழைத்துச் செல்லத்தான் எங்களுக்கு உத்தரவு கிடைத்திருக்கிறது" என்று கூறினார். முஹம்மது அலி வாரண்டைப் பார்க்கவேண்டுமென்று அவர்களிடம் கேட்டார். இதற்குள்ளாக நாலைந்து மோட்டார்களும் பங்களாவுக்கு எதிரில் வந்துநின்றன. நாங்கள் கார்களை நோக்கிச் சென்றோம். தாயாரும் எங்களுடன் வருவதாகப் பிடிவாதம் செய்துகொண்டு கூடவேவந்தார்.

போலீஸ் ஆபீஸரின் ஒழுங்கின்மை :—" அந்தப் பெரிய அம்மாவை யாராவது கொஞ்சம் தடுத்து விடுங்கள்" என்று ரைட் கூறினார். தாயாரிடம் அவமரியாதையாகவோ, ஒழுங்கீனமாகவோ நடந்துகொள்வதை நாங்கள் விரும்பவில்லை. எங்களுடன் தாயார், சரியாக இந்த இருட்டுக்குள், விருத்தாப்பிய தசையில் கால்களை வேகமாக எடுத்து வைத்துக் கொண்டு, மோட்டார் வரை வந்தார். எங்களுடன் வரவேண்டாம் என்று நாங்கள் அல்லாஹ் றஸூல் மீது ஆணையிட்டுத் தாயாரைக் கேட்டுக்கொண்டோம்.

உறுதி :—முஹம்மது ஹுஸைன் பாவம் என்னுடன் ஆலிங்கனம் செய்யும்போது அழுதுவிட்டான். பாவம் அவன் அழுவதைப் பார்த்து எனக்குச் சகிக்க முடியவில்லை. அதன் பேரில், நான் பலமாக அவனது கன்னத்தில் ஓர் அறை கொடுத்து "ஜாக்கிரதை! காபிர்களுக்கு முன் கண்ணீர் வடிக்கலாகாது" என்று சப்தமிட்டுக் கூறினேன். உடனே, அவன் தைரியங்கொண்டான்.

புறப்பாடு :—நாங்கள் புறப்படும்போது எங்கள் குடும்பத்தார்களோ, எங்களைச்சேர்ந்தவர்களோ எவரும் பலஹீனத்தை வெளிப்படுத்தவில்லை. எல்லாருடைய முகத்திலும் கோபக்குறியும், பிரிட்டிஷாரைக் கேவலமாக மதிக்கும் அடையாளங்களுமே காணப்பட்டன. நாங்கள் தாயாரிடத்திலோ, அல்லது ஜாஹித், ஸாதிக் ஆகியவர்களிடத்திலோ, அல்லது வேறு பந்துக்களிடத்திலோ எங்களுடைய வாஞ்சையை வெளிப்படுத்திக் கொள்ளவுமில்லை. இவ்வித நிலைமை ஏற்பட்டதற்கு நாங்கள் சந்தோஷமும், பெருமையும் கொள்வதுடன் இறைவனுக்கு நன்றியும் செலுத்துகிறோம். எங்களது ஜீவியத்தில் அநேக உலக இன்பங்களை அனுபவித்தோம். இன்று எங்களுக்குக் கிடைத்த இவ்வாத்ம இன்பத்தில் பத்திலொருபங்கு கூட எங்களுக்கு எப்பொழுதும் கிடைத்ததே இல்லை என்பதை இறைவன் அறிந்திருக்கிறான்."

இந் நிகழ்ச்சிகளுக்குப் பின் இருவரும் பேத்தூல் ஜெயிலில் அடைக்கப்பட்டனர்.

பதின்மூன்ரும் அத்தியாயம்

பேத்தூலிலிருந்து அமிர்தசரஸ்

விடுதலை :—கடைசியாக 30-5-1915-ம் ஹூ அலி சகோதரர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டு 1919-ம் வருஷம் டிசம்பர் மீ'த்தில், அதாவது கிட்டத் தட்ட 5 வருஷ காலத்திற்குப் பிறகு, திடீரென யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாக விடுதலை செய்யப்பட்டனர். எவ்விதமெனில், 1919-ம் வருஷம் ஏப்ரில் மீ' காந்திஜீ ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். இதனுல், தேசம் முழுவதும் பிரிட்டிஷாரின் நீண்ட கைகளுக்கு இரையாயிற்று. குண்டுகள் சுடப்படாத பெரிய பட்டணம் எதுவும் இந்தியாவில் எஞ்சி இருக்கவில்லை. ஏழை இந்தியர்கள் இரக்கமற்று அநீதி செய்யப் பட்டனர்.

இச்சமயத்தில்தான் அமிர்தசரஸில் ஜலியன் வாலாபாக் படுகொலைச் சம்பவம் நிகழ்ந்தது. இதனுல், பிரிட்டனுக்கு விரோதமாக இந்தியா வெங்கும் கோப மும் ஆத்திரமும் உண்டாயின. இந் நிலைமை இந்தி யாவில் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந் தது. இதை அடக்கு முறையின் மூலம் ஒடுக்குவது நல்லதல்ல வென்பதாக அரசாங்கம் நினைத்து 1919-ம் வருஷம் டிசம்பர்மீ' பொது மன்னிப்பளித்து, ராஜீயக் கைதிகளனைவரையும் நிபந்தனையில்லாமல் விடுதலைசெய் தது. இவ்வாறு விடுதலையடைந்தவர்களில் இந்தியாவின்

செல்வப் புதல்வர்களும், மதிப்புவாய்ந்த தலைவர்களு மான அலி சகோதரர்களும் சேர்ந்திருந்தனர்.

அமிர்தசரஸ்:—ஜலியன் வாலாபாக் படுகொலைச் சம்பவம் நிகழ்ந்த இடமாகிய அமிர்த சரஸில், காங்கிரஸ் மகாசபையின் வருஷாந்திர மகாநாடு அது போழ்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. முஸ்லிம்லீக், கிலாபத் கமிட்டிகளின் மகாநாடுகளும் அங்கு நடந்துகொண்டி ருந்தன. ஆதலால், அலி சகோதரர்கள் விடுதலையடைந் தவுடன் காங்கிரஸ், முஸ்லிம் லீக் மகாநாடுகளில் கலந்து கொள்வதற்காக நேராக அமிர்தசரஸ் சென்றனர்.

நிகரற்ற வரவேற்பு:—அலி சகோதரர்கள் பாது காப்பில் வைக்கப்பட்டு விடுதலையடைந்த பின், அவர்க ளது ஜீவிய சரித்திரங்கள் சுருக்கமாகப் பலபாஷைகளி லும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றில், அமிர்தசரஸில் அவர்கள் வரவேற்கப்பட்ட விபரம் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—

"இவர்கள் டிசம்பர்மீ 29உ அமிர்தசரஸ் வந்து சேர்ந்தனர். வழியில் எங்கெந்த ஸ்டேஷன் வழியாக இவ்விரு சகோதரர்களும் சென்றார்களோ அங் கெல்லாம் ஹிந்து, முஸ்லிம் ஆகிய இரு வகுப்பாரும் இவர்களை மிகக் குதூகலமாக வரவேற்றனர். இவ்விரு சகோதரர்களும் வந்த வண்டி அமிர்தசரஸ் ஸ்டேஷன் வந்து சேர்ந்தபோது, பல்லாயிரக்கணக்கான ஹிந்துக் களும், முஸ்லிம்களும் ஜெயகோஷத்துடன் இவர்களை வரவேற்றனர். ஸ்டேஷனிலிருந்து ஊர்வலம் நேராக அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டுக் கொட்டகையை

நோக்கிச் சென்றது. அமிர்தசரஸ் நகரவாசிகள் இவர்களை வரவேற்ற முறையும், உணர்ச்சியும் அமிர்தசரஸ் நகரின் தேசீய சரித்திரத்தில் தங்க மை கொண்டு எழுதப்படத்தகும்.

காங்கிரஸில் வரவேற்பு:—காங்கிரஸ் மகாநாட்டுப் பந்தலின் வாசற்படியில் மகாத்மா காந்தி, பண்டிதர் மதன் மோகன மாளவியா முதலிய பல தலைவர்கள் இவ்விரு சகோதரர்களையும் வரவேற்றனர். காங்கிரஸ் பந்தலுக்குள் கால் வைத்தவுடன் ஹிந்து முஸ்லிம்களனைவரும் எழுந்து நின்று, மரியாதை செய்ததுடன் 15 நிமிஷ நேரம்வரை கரகோஷம் செய்தனர். பின்னர், முஸ்லிம் லீக் மகாசபைக்குச் சென்றனர். அங்கும் இவர்கள் மிகப் பிரீதியாகவும், குதூகலமாகவும் வரவேற்கப்பட்டனர்."

காங்கிரஸில் பிரசங்கம்:—நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் அமிர்தசரஸ் காங்கிரஸ் மகாநாட்டில் மிகக் கம்பீரமாகவும் உருக்கமாகவும் பிரசங்கம் செய்தார். அதில், "இந்த சுதந்திரத்திற்காக மிஸ்டர் திலகர் மறுபடிபடியும் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும். என்னை மறுபடியும் சிறைச்சாலையில் ஆயுள் பரியந்தம் அடைத்து வைக்கவேண்டும். மிஸஸ் பெஸன்டுக்குத் தூக்கு தண்டனை விதிக்கவேண்டும். ஆனால், இதன்மூலம் பஞ்சாபில் நடைபெற்றதுபோன்ற அநியாயங்கள் என்றென்றைக்கும் இல்லாதொழிய வேண்டும் என்று நான் கூறுகிறேன்" என்று கூறினார்.

பதினுன்காம் அத்தியாயம்

டில்லி

வரவேற்பு:—அமிர்தசரஸ் ராஜீய மகாநாடுகளில் கலந்துகொண்டபின், அலி சகோதரர்கள் டில்லிக்கு வந்தனர். இங்கு அவர்களுக்கு ராஜோபசார வரவேற்புச் செய்யப்பட்டது. அதன் விபரம் வருமாறு:—

"டில்லி 100 வருஷங்களுக்குப் பின் மணப் பெண்ணுக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய சிறிய பெரிய எல்லா பஜார்களிலும் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. வரவேற்புக் கமிட்டியின் கம்பீரமான தலைவாசலையல்லாமல், சிறிய பெரிய பஜார்கள், தெருக்கள், வீதிகள் ஆகியவைகளின் ஆரம்பங்களில் அழகான வளைவுகளும் தலைவாசல்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

சுதந்திரக்கப்பல்:—சாந்தினி சௌக் பஜாரில் மணிக் கூண்டுக்குக் கீழில் ராஜபிரதிநிதிகள், இளவரசர்கள் காலஞ்சென்ற நமது சக்கிரவர்த்தி மாக்ஷிமைதங்கிய 5-ம் ஜார்ஜ் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. இந்த இடத்தில் இரும்புத் தகடுகளால் மிக அழகான ஒரு கப்பல் தயார் செய்யப்பட்டது. மிகவும் பெரிய கொட்டை எழுத்துகளில் "சுதந்திரக் கப்பல்" என்று அதன்மீது எழுதப்பட்டிருந்தது. அக்கப்பலில் தேசீயக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. இதில் ஒரு டஜன் ஜனங்கள் உட்கார இடமிருந்தது. இக்கப்பலுக்குக் கீழில் நாற்காலிகள் வைக்கப்பட்டிருந்தன. இந்த நாற்காலியில்

உட்காருவதற்கு டிக்கட் ஏற்படுத்தப்பட்டிருந்தது. சரியாக 11 மணிக்கு இவ்விரு சகோதரர்களும் இங்கு விஜயம் செய்தனர். சபையினர் 'அல்லாஹு அக்பர், வந்தேமாதரம்' என்ற கோஷங்களால் வரவேற்றனர். பூமாரிகள் பொழிந்தன.

அஜ்மல்கான்:—ஹக்கீம் அஜ்மல்கான் இச்சமயம் வெளியிடம் சென்றிருந்தமையால், அங்கு வந்து இவ்விழாவில் நேரில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆதலின், தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவிக்கும்படி டாக்டர் அன்ஸாரிக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் அலி சகோதரர்களின் தேச சமூக ஊழியங்களைப் பாராட்டியும், அவர்கள் விடுதலையடைந்தது பற்றித் தமக்கேற்பட்டுள்ள சந்தோஷத்தைத் தெரிவித்தும், இவ்விழாவில் கலந்துகொள்ள முடியாமற்போனது பற்றி தமக்கேற்பட்டுள்ள வருத்தத்தைத் தெரிவித்தும் இருந்தார்.

வரவேற்புப் பத்திரம்:—பிறகு, டில்லி வாசிகள் சார்பாக வரவேற்பு உபசாரப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இப்பத்திரத்தில், அலி சகோதரர்களின் தேசியசமூக ஊழியங்களைப் பாராட்டியும், அவைகளை வெகுவாகச் சிலாகித்தும், அவர்களுடைய தியாக உணர்ச்சிகளைப் போற்றியும் எழுதப்பட்டிருந்தது. பிறகு, அலி சகோதரர்கள் டில்லி வாசிகளின் உபசாரத்துக்கு தனித்தனியே நன்றி செலுத்தி விட்டுத் தங்களது சிறைவாச அனுபவத்தைப்பற்றிப் பேசினர்.

பதினைந்தாம் அத்தியாயம்

வைசிராயிடம் தூது.

தீர்மானம் :—முஸ்லிம்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு தூதுவக்கூட்டம் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய அந்நிய நாடுகளுக்குச் சென்று, அங்கு முஸ்லிம்களின் மதக்கடமைகளை மிகத் தெளிவாக அவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று அமிர்தசரஸ், டில்லி ஆகிய நகரங்களில் கூடிய கிலாபத் கான்பரன்சுகளில் தீர்மானிக்கப்பட்டது.

அந்நியநாடுகளுக்குத் தூதுவக் கூட்டம் செல்ல கவர்ன்மெண்டார் அநுமதி அளிக்கவில்லை. ஆனால், இங்கிலாந்துக்குச் செல்ல மட்டும் அநுமதிகொடுத்தனர். இத் தூதுவக் கூட்டம் செல்வதற்கு முன் இந்தியாவிலுள்ள ஹிந்து முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளடங்கிய ஒரு தூதுவக் கூட்டம், மௌலானா முஹம்மது அலியின் தலைமையின் கீழில், இந்திய ராஜப்பிரதிநிதி லார்டு செம்ஸ்போர்டைப் பேட்டி கண்டு பேசி, அரசாங்கத்தின் வாக்குறுதிகளை ஞாபக மூட்டியதுடன், ராஜபக்தியுள்ள முஸ்லிம் பிரஜைகளுக்குச் செய்துள்ள வாக்கு தத்தங்களை நினைவிற்கு கொண்டுவந்தது.

தூதுவக் கூட்ட அங்கத்தினர்கள் :—இத் தூதுவக்கூட்டத்தில் ஹிந்து முஸ்லிம் இரு சமூகங்களிலும் அதிகச் செல்வாக்குள்ள கண்ணியவான்கள் அங்கத்தினராக • இருந்ததுடன், இந்தியாவிலுள்ள எல்லா

வகுப்பினருக்கும் இதில் தக்க பிரிதிநிதித்துவமு மளிக்கப்பட்டிருந்தது.

வைசிராய்க்கு அட்ரஸ் :—வைசிராயிடம் தூதுவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய அட்ரசை நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியே தயார் செய்தார்.

"பிரிட்டிஷாரின் வாக்குறுதிகள் ஒவ்வொரு அக்ஷரமும் பிசகாமல் நிறைவேற்றப்படாவிடில், அவர்களுக்கு எவ்வளவு செழிப்பான தங்கம் விளையும் பூமி கிடைத்த போதினும், அவர்களுக்கு ஏற்படுகிற ஒழுக்க நஷ்டத்திற்கு அதனை ஈடு செய்யமுடியாது என்பதை நாங்கள் அறிவித்துக்கொள்ள விரும்புகிறோம். துருக்கி யுத்தம் ஆரம்பமானபோது தங்களுக்கு முன்னிருந்த இராஜப் பிரிதிநிதி அளித்துள்ள ராஜ ஸ்ரீ முகத்தின் அந்தரங்கம் இப்பொழுது வெளியாகிவிடுவதால், ஒழுக்கத்தின் தன்மை வீழ்ச்சி யடைவது இன்னும் அதிகப் பளுவாக இருக்கும்." என்று தூதுவக் கூட்டத்தினர் தெரிவித்துக் கொண்டனர்.

பதினாறும் அத்தியாயம்

ஐரோப்பாவுக்கு கிலாபத் தூதுவர்கள்

தீர்மானம் :—இந்தத் தூதுவக் கூட்டத்தைப் பற்றித்தான் டில்லி, அமிர்தசரஸ் ஆகிய இடங்களில் கூடிய கிலாபத் மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஐரோப்பாவிலுள்ள ராஜதந்திரிகள், அரசியல் தலைவர்கள் ஆகியவர்களைச் சந்தித்து, மந்திரி பிரதானிகள், கூடுமானால் முதல் மந்திரி, அரசர் பெருமான் ஆகியவர்களையும் பேட்டி கண்டு, இந்திய முஸ்லிம்களின் உணர்ச்சிகளையும், கோரிக்கைகளையும் எடுத்துக் கூறி, அவைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைச் செய்வதற்காக இந்தத் தூதுவக் கூட்டம் ஐரோப்பாவுக் கனுப்பப்பட்டது. இத்தூதுவக் கூட்டத்தினர் மிகவும் மதிக்கத்தக்க ஊழியம் செய்தனர் என்பது உண்மை.

அங்கத்தினர்கள் :—இத்தூதுவக் கூட்டத்திற்கு மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் தலைவராகவும், போப்பால் சட்டசபையின் காரியதரிசியாகவும், பப்ளிசிட்டி ஆபீசராகவும் தற்போதிருந்து வருபவரான மிஸ்டர் ஹஸன் முஹம்மது ஹயாத் காரியதரிசியாகவும், மிஸ்டர் ஸெய்யித் ஹூஸைன், மௌலானா ஸெய்யித் சுலைமான் நத்வி, அபுல் காசிம் சாகிப் ஆகியவர்கள் அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். அப்பொழுது, ஆக்ஸ்போர்டில் கல்வி கற்றுக்கொண்டிருந்த மிஸ்டர் ஷூஐப் குறைஷி, மிஸ்டர் அப்துர் ரஹ

மான் ஸித்தீக்கி ஆகிய இருவரும் தங்களது படிப்பைத் தற்காலிகமாக நிறுத்தி விட்டு, இத்தூதுவக் கூட்டத்துடன் வேலை பார்த்தனர்.

தூதுவர்கள் முயற்சி:—இத் தூதுவக் கூட்டம் முதலில் இங்கிலாந்துக்குச் சென்று, அங்கு பொறுப்பு வாய்ந்த கனவான்களைப் பேட்டி கண்டதுடன், இது சம்பந்தமாக மார்க்கச் சட்டங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறமுயன்றது. பிறகு, நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி இத்துடன் நின்றுவிடாமல், பல இடங்களுக்கும் சென்று, பிரசங்கம் செய்து, தம்மால் செய்யக் கூடிய அத்தனையையும் குறையில்லாமற் செய்தார். இதனைப்பற்றி நமது தலைவர் மௌலானா,

"1920-ம் வருஷம் நான் கிலாபத் தூதுவக் கூட்டத்தை அழைத்துக் கொண்டு ஐரோப்பாவுக்குச் சென்றபோது, மிஸ்டர் ராம்ஸே மாக்டனல்டு பார்லிமெண்டில் அங்கத்தினராகக்கூட இருக்கவில்லை. லாயிட் ஜார்ஜ் சென்ற தேர்தலில் எல்லோருக்கும் மகத்தான தோல்வியை அளித்து, பார்லிமென்ட் சபையில் அவரது ஸ்தானத்தையுங்கூடப் பிடுங்கிக் கொண்டார்.

எங்களது கப்பல் வெனிஸ் நகரில் சூரியாஸ்தமன நேரத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. அதே தினத்தில் எங்களுக்கு லண்டனிலுள்ள பத்திரிகைகள் படிக்கக் கிடைத்தன. துருக்கி சமாதான கான்பரன்ஸ் சில நாட்களுக்குள் தன்னுடைய தீர்ப்பைக் கூறிவிடும் என்று எங்களுக்குத் தெரிய வந்தது. அதே இரவில் நாங்கள் தந்தி ஆபீஸ் சென்று, நேசக் கக்ஷி

யின் அரசாங்கங்களுக்கும், அவைகளின் பத்திரிகைகளுக்கும், முக்கியமாக லாய்ட் ஜார்ஜ், மிஸ்டர் மாண்டேகு ஆகியவர்களுக்கும் தந்தி கொடுத்தோம். பிரான்சில் ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருந்தும், நாங்கள் அதே இரவில் லண்டன் போய்ச் சேர்ந்தோம். அப்பொழுது கான்ஸ்தாந்திநோபிளை வாபீஸ் பெறுவதைப் பற்றி பார்லிமென்ட் சபையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மிஸ்டர் மாக்டனால்டின் எதிர்ப்பு:— நேரமும் நெருக்கடியா இருந்தது. எங்கள் அலுவல்கள் மிக அவசரமானவைகளாக இருந்ததால், நாங்கள் மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்டைத் தேடிக் கண்டு பிடிக்க எங்களுக்குச் சாவகாசம் கிடைக்கவில்லை.

தொழிற் கக்ஷியின் வருஷாந்திர மகாநாடு கூடும் தேதி வந்தது. நாங்கள் அங்கு சென்றோம். அங்கு சென்றதும் கர்னல் வெட்ஜ்வுட், மிஸ்டர் ஸ்னோடன் முதலிய தொழிற் கக்ஷித் தலைவர்களைக் கண்டு பேசினோம். அதற்கு முன்னர் மிஸ்டர் லான்ஸ்பரியையும் கண்டு பேசி இருந்தோம். அவர் எங்களுக்காக காங்கோயே ஹாலில் ஒரு சிறப்பான மகாநாடு நடத்தினார். அதற்கு அவரே தலைமையும் வகித்தார். அவருடன் விசேஷ நட்பும் ஏற்பட்டு விட்டது. ஆதலால், நாங்கள் அவருடன் கலந்து பேசி, தொழிற் கக்ஷியின் வருஷாந்திர மகாநாட்டில், துருக்கி சமாதான உடன்படிக்கை நிபந்தனைகளைப் பற்றிப் பேச, எங்களுக்குச் சந்தர்ப்பமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம், பின்

னர், நாங்கள் பெரும்பாலும் பாரிஸ் நகரிலேயே இருந்ததால், இம் மகாநாடு கூடும் தேதி எங்களுக்குப் பிந்தித்தான் தெரியவந்தது. ஆதலால், அவர்கள் "இப்பொழுது புரோகிராம் பூர்த்தியாகிவிட்டது. மிஸ்டர் ராம்ஸே மாக்டனுல்டு காரியதரிசியாக இருக்கிருர். அவருக்கு உரிமை இருக்கிறது. அவர் இஷ்டப்பட்டால் சந்தர்ப்ப மேற்படுத்திக் கொடுக்க முடியும். அவர் உமது பழைய நண்பர்தான். அவர் உமக்காக கொஞ்ச நேரத்தை உண்டாக்கிக் கொடுப்பார்" என்று கூறினர். ஆகவே, நான் சந்தோஷமாக அவரிடம் சென்றேன்.

மிஸ்டர் மாக்டனுல்டின் தன்மை:— இந்த மனிதர் எவ்வளவு கசப்புடன் எனக்குப் பதில் கூறினர் என்பதை நான் சொல்ல முடியாது! "ஒருபோதும் முடியாது! முடியாது! எங்கள் புரோகிராம் நிறைந்துவிட்டது. அவைகளைக் கவனிப்பதற்கு நேரம் உண்டாக்குவதே கஷ்டமாக இருக்கிறது" என்று அவர் கூறி விட்டார். அவர் இம்மாதிரி மறுத்து விட்டது எனக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்ததுடன், அவர் இம்மாதிரி நிராகரித்ததற்குள்ள முக்கிய காரணம் தெரிந்தபோது எனக்கேற்பட்ட ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை.

கோபத்துக்குக் காரணம்:—அவருக்கு அடக்கிக் கொள்ள முடியவில்லை. அதே இடத்தில் என்னைப் பார்த்து "நீங்கள் என்னை முற்றிலும் மறந்து விட்டீர்கள். இன்று என்னை வந்து காண்கிறீர்களோ? இத்

தனை நாட்களாக எங்கே இருந்தீர்கள் ?" என்று கூறினர். "நாங்கள் லண்டனுக்கு வெளியிலிருந்தோம்" என்று பதிற்கூறினேன். அதற்கு அவர் (லண்டனிலுள்ள சில தலைவர்களையும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களையும் பற்றி) "நீங்கள் அந்த வெளிநடிப்புக்காரர்களிடம் சென்றீர்கள். என்னை முற்றிலும் மறந்துவிட்டீர்கள். இன்று என்னை நினைத்தீர்கள். உங்களுக்காக நான் நேரத்தை உண்டாக்கிக் கொடுக்கமுடியாது" என்று கூறினர். ஒரு தினம் பிரிட்டனின் முதல்மந்திரியாக வரக்கூடிய ஒருவர் இவ்வளவு குறுகிய மனப்பான்மையுள்ளவராக இருக்கிறார் என்பதை நான் உணர்ந்தபோது, எனக்கு மிகவும் ஆச்சரியமுண்டாயிற்று. தொழிற்கக்ஷித் தலைவர்களிடம் அவருக்கு இவ்வளவு மனஸ்தாபமிருந்திருக்கிறது. நான் அவர்களைச் சந்தித்துப் பேசியதைக்கூட அவர் சகிக்கமுடியவில்லை. பொறுமையாலும், புழுக்கத்தாலும் இவ்வளவுதூரத்திற்கு மூழ்கி இருப்பவர் இந்தியாவுக்கும், துருக்கிக்கும், பிரிட்டனுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணங்கொள்ள முடியாது. அவ்வாறு எண்ணங்கொண்டாலும், தொழிற் கக்ஷித் தலைவர்களில் இன்னின்ன மனிதரை இவர் பார்த்துப் பேசி இருக்கிறாரே, இவர் ஏன் நம்மைப் பார்க்கவில்லை ? என்று நினைக்கிறார். இப்படிப்பட்டவரிடமிருந்து எந்த நன்மையையும் எதிர்பார்க்க முடியுமா ?

லான்ஸ்பரியின் முயற்சி:—இவருடைய மறுப்புக்குப் பிறகு, மிஸ்டர் கிளேயன்ஸும், லான்ஸ்பரியும் கான்பரன்சுத் தலைவரிடம் சொல்லி 5 நிமிஷம் பிர

சங்கம் செய்வதற்கு எனக்கு அனுமதி வாங்கிக் கொடுத்தனர்.

பிரசங்கம்:—நான் பிரசங்கம் செய்த முறை சபையினரைப் பரவசப்படுத்திவிட்டது. தலைவர் மூன்று முறை மணி அடித்தார். ஆனால், ஒவ்வொரு முறையிலும் சபையினர் "இன்னும் பிரசங்கம் செய்ய அனுமதியுங்கள். அவரைத் தடுக்காதீர்கள். நீங்கள் சொல்லிக்கொண்டே போங்கள். பிரசங்கத்தை நிறுத்திக் கொள்ளாதீர்கள்" என்று கூச்சலிட்டுக் கூறிக் கொண்டே இருந்தனர். நான்காவது முறை தலைவர் மணி அடித்தபோது 'இப்பொழுது பிரசங்கம் 20 நிமிஷமாகிவிட்டது. இன்னும் அலுவல்கள் அதிகமிருக்கின்றன. கண்ணியம் பொருந்திய பிரசங்கியிடமிருந்து இன்னும் நான் கேட்கவே விரும்புகிறேன். ஆனால், நான் என் செய்தல் சாலும்' என்று கூறி மணியடித்தார்."

அந்த நாள் முதல் மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்டு மௌலானா முஹம்மது அலி அவர்கள்மீது மரண பரியந்தம் கோபமாகவே இருந்தார். எவ்வாறாயினும், அவரது தூதுவக் கூட்டத்தின் முயற்சிகளைப்பற்றி இன்னும் அநேக விஷயங்கள் தெரிய வருகின்றன.

பிரான்சில் பிரசங்கங்கள்:—பிரான்சிலும் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியும், மிஸ்டர் ஸெய்யித் ஹுஸைனும் பல பிரசங்கங்கள் புரிந்து, குறைந்த பக்ஷம் பிரான்சின் அநுதாபத்தையேனும் அடையலாம் என்று முயற்சி செய்தனர். இதில் பெரும் அளவிற்கு வெற்றியும் அடைந்தனர்.

போப்பைப் பேட்டி கண்டது:—பிறகு, அவர் ரோமாபுரியிலுள்ள போப்பைப் பேட்டி கண்டார். அவரிடத்திலும் தம்முடைய நோக்கங்களையும், கோரிக்கைகளையும் சுருக்கமாக எடுத்துக்கூறியதுடன், துருக்கி அரசாங்கத்துடன் முஸ்லிம்களுக்கு இருந்து வரும் சம்பந்தத்தையும், முஸ்லிம்களிடத்தில் கலீபத்துல் முஸ்லிமீன் அவர்களுக்கு இருக்கிற அந்தஸ்தையும் அவரிடம் விளக்கிக் கூறினார்.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ்:—பிறகு, மௌலானா அவர்கள் மறுபடியும் இங்கிலாந்துக்கு வந்து, பிரிட்டிஷ் முதல் மந்திரியான மிஸ்டர் லாய்ட் ஜார்ஜைப் பேட்டி கண்டார். அக்காலத்தில் அவருடைய கக்ஷிதான் மிகைத்திருந்தது. அவர் மிகக் கம்பீரத்துடன் தம்முடைய மந்திரிப் பதவியையும், அந்தஸ்தையும் காண்பித்தார். அக்காலத்தில் அவருடைய ராஜ தந்திரம், அவருடைய திறமை, அவரது சமூக ஊழியம் ஆகியவைகளை ஐரோப்பா முழுவதும் ஒப்புக்கொண்டிருந்தது.

நமது தலைவர் அவரைப் பேட்டிகண்டு முஸ்லிம்களின் கோரிக்கைகளை எடுத்துக் கூறினார். கவர்ன்மெண்டாரின் வாக்குறுதிகளை ஞாபக மூட்டினார். பிரிட்டனுக்கு வர இருக்கிற பலாபலன்களைப் பற்றி எச்சரிக்கை செய்தார். கலீபாவையும், கிலாபத் பீடத்தையும்பற்றிய இஸ்லாமியக் கொள்கைகளை எடுத்துக் கூறினார். பிறகு, இந்திய முஸ்லிம்களின் ராஜபக்தியை விபரித்ததுடன், பிரிட்டிஷாரின் வாக்குறுதிகளை அவர்கள் எவ்விதம் நம்பி இருந்தார்கள் என்பதையும், அர

சாங்கம் எவ்விதம் தனது வாக்குறுதிகளுக்கு மாறு செய்கிறது என்பதையும் பற்றி விபரமாகப் பேசினார்.

தோல்வி :—ஆனால், நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியின் சகல முயற்சிகளும், எல்லா பிரசங்கங்களும், பிரசாரங்களும் பிரயோஜன மற்றவைகளென்றேற்பட்டது. பிரிட்டிஷ் சமூகம் வாக்குறுதியை நிறைவேற்றும் சமூகமாக இல்லை. அது எப்பொழுதும் "சக்தி" என்ற தேவதைக்கு சாஷ்டாங்கம் செய்வதாகவே இருந்துவருகிறது. பலஹீனம் என்ற பதுமையை அது அலக்ஷியமாகவே கருதி வந்தது. தூரதிருஷ்டியுள்ளதாகவோ, உசிதானுசிதங்களைக் கவனிப்பதாகவோ இல்லை. ஆனால், சமயத்தை யுணருவதில் முதல் தரமானது. சமயத்தில் எல்லாவற்றையும் செய்யும்.

திரும்புகை:—கடைசியாக 8 மாதம் பூர்த்தியாக ஐரோப்பாவிலிருந்துவிட்டு 9 வது மாதத்தில் தூதுவக் கூட்டம் இந்தியாவுக்குத் திரும்பிற்று. பம்பாயில் தூதுவக்கூட்ட அங்கத்தினர்களுக்கு சிறப்பான வரவேற்பு நடந்தது. அக்காலத்தில் இந்தியாவின் நிலைமையில் மாறுதலேற்பட்டு, பிரிட்டிஷாருக்கு விரோதமான உணர்ச்சி ஜாதிமத பேதமின்றி எல்லோரிடத்திலும் பரவி இருந்தது. இப்பொழுதும் பிரிட்டிஷாருக்கு விரோதமான ஆர்பாட்டங்களும் கூட்டங்களும் நடைபெறுகின்றனவாயினும், அப்பொழுது தேசத்திலேற்பட்டிருந்த உணர்ச்சி இன்றுவரை உண்டானதில்லை.

தூதுவக் கூட்டத்தார் தோல்வியுற்றுத் திரும்பி வந்தது முஸ்லிம்களுக்கு இன்னும் அதிகமான மன வருத்தத்தையும், கோபத்தையும் உண்டாக்கிற்று. முஸ்லிம்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு மாறு செய்து, அவர்களை ஏமாற்றிய அரசாங்கத்துடன் இனியும் ஒத்துழைப்பதா என்பதைப்பற்றி ஆலோசனை செய்வதைத்தவிர வேறு வழியில்லை. ஆகவே, ஒத்துழையாமை இயக்கம் மிக வேகமாகப் பரவ ஆரம்பித்தது. சர்க்கார் பள்ளிக்கூடங்கள் காலியாயின. காலேஜ் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பலர் ராஜினாமாச் செய்தனர். பெரும் பெரும் பதவிகளை வகித்தவர்கள் தங்கள் பதவிகளை மலர்ந்த முகத்துடன் துறந்தனர். "கான்சாகிப்" களும், "கான்பகதூர்"களும் தங்கள் கௌரவப் பட்டங்களை வாபஸ்செய்தனர். ஆகவே, ஒத்துழையாமை இயக்கத்திற் சேர்ந்தவர்களிற் பலர் நாட்டுக்கும், சமூகத்துக்கும் தலைவர்களாயினர். அதிற் சேராமல் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தவர்களிற் பலர் "ஸர்"களாகவும் "பகதூர்"களாகவும் அரசாங்கத்தாரால் ஆக்கப்பட்டனர்.

பதினேழாம் அத்தியாயம்

ஜாமீஆ மில்லியா அல்லது தேசீய சர்வகலாசாலை

நமது மௌலானாவின் அரும் பெரும் ஊழியங்களில், இப்பொழுது டில்லியிலிருக்கிற தேசீய முஸ்லிம் சர்வகலாசாலை ஸ்தாபிதமும் ஒன்றாகும்.

கிலாபத் தூதுவக் கூட்டம் ஐரோப்பாவில் தோல்வியுற்றுத் திரும்பி வந்தபோது, நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் மிகப்பலமாக வேரூன்றி இருந்தது என்பதையும், பகிஷ்காரங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன என்பதையும் இதற்கு முந்திய அத்தியாயத்தில் நீங்கள் படித்து விட்டீர்கள். சங்கைவான்களான உலமாக்களும் நீண்ட காலம் செயலற்றிருந்தபின், இப்பொழுது புத்துணர்ச்சி பெற்று, காரிய உலகில் பிரவேசித்து விட்டனர். அரசாங்கத்துக்கு எதிராக அநேக உலமாக்கள் உண்மையுடனும் உணர்ச்சியுடனும் அணிவகுத்து நின்றனர்.

அலிகாருக்கு அழைப்பு:—நமது தலைவர் மௌலானா இந்தியா வந்ததும் எல்லாவற்றிற்கும் முதலில், தமக்கறிவமுதை அளித்த அன்னையாம் அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையை நேர்வழியில் அழைத்தார். இக்கலாசாலையின்பால் அவருக்கிருந்த அசைக்க முடியாத அன்பும், அதைப் பலப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தையும், அது சம்பந்தமாக அவர் செய்த முயற்சியையும் குறித்து இதற்கு முந்தியதோரத்தியாயத்தில் படித்

திருப்பீர்கள். ஆதலின், அவர் அக்கலாசாலையை நேர்வழியில் அழைக்க முன்வந்தது முற்றிலும் நியாயமேயாகும்.

"முஸ்லிம்களை அரசாங்கம் எவ்வாறு நடத்துகிறது? முஸ்லிம்கள் இனி இந்தியாவில் வசிப்பதற்கு என்னென்ன மார்க்கங்களைச் செய்திருக்கிறார்கள்? இந்திய முஸ்லிம்கள் எத்தகைய சங்கடநிலைமையில் இருக்கிறார்கள்? இக் கஷ்ட காலத்தில் முஸ்லிம்கள் தங்களுக்குள்ள ராஜ பாட்டையை எவ்வாறு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்? வெகுநாளாக இந்திய முஸ்லிம்கள் எதிர்பார்த்துக்கொண்டும், அதிகம் நினைத்துக்கொண்டு மிருந்த அலிகார், இப்பொழுது மத அழைப்புக்கு இணங்கிப் போர்க்களத்திற்கு வரவேண்டும், அதன்நிர்வாகம் இனி வருங்காலத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களிடம் இருக்கக்கூடாது, இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் காரியங்களைக் கவனிப்பவர்களிடமே இருக்க வேண்டும், அலிகார் மாணவர்கள் இஸ்லாத்தின் சிப்பாய்கள், பிகில் ஊதியவுடன் அவர்கள் போர்க்களம் வந்து யுத்தத்தை ஆரம்பித்து விடவேண்டும், அவர்கள் ஏன் இன்னமும் துயில் புரிந்துகொண்டிருக்கின்றனர்?" என்று அழைப்பு விடுத்தார்.

இச்சத்திய அழைப்புக்கு அலிகார் மாணவர்களில் ஓரளவு ஆதரவேற்பட்டது. ஆனால், அலிகார் சர்வகலாசாலை நிர்வாகிகள் இதனை நிராகரித்தார்கள். முஸ்லிம்கள் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்க மறுத்துத் தங்கள் கையைத் திரும்ப எடுத்துக் கொண்டிருந்தனரென்

ரால், அலிகார் நிர்வாகிகள் கவர்ன்மெண்டாரிடம் பிச்சை வாங்குவதற்காகக் கையை நீட்டிக் கொண்டிருந்தனர். ஆகவே, கர்னுத்தா, கர்த்தபா ஆகிய இடங்களிலிருந்த முஸ்லிம் சர்வகலாசாலைகளுக்கு அடுத்தபடியாக இச்சர்வ கலாசாலையைக் கொண்டுவந்து விடவேண்டுமென்று நினைத்திருந்த நினைப்புகள் ஈடேறுமா? அலிகார் சர்வகலாசாலை நிர்வாகிகளிடம் இஸ்லாமிய அபிமானம் எம்மாத்திரம் இருக்கிறது? என்ற விஷயங்கள் அப்பால் வெளியாகிவிட்டன.

சர்வகலாசாலைக் கோர்ட்டில் பிரசங்கம்:—ஹக்கீம் அஜ்மல்கான், டாக்டர் அன்ஸாரி முதலிய தமது சக ஊழியர்களுடன் நமது தலைவர் மௌலானா அலி கார் சர்வகலாசாலைக் கோர்ட்டுக்குச் சென்று, அதன் அங்கத்தினர்களுக்கு இவ்விஷயத்தைப்பற்றிப் பிரசங்கித்து, இஸ்லாத்திற்கேற்பட்டுள்ள இந்தச் சிக்கலான சமயத்தில் முஸ்லிம்களிடம் செல்வாக்குள்ள நீங்கள், உங்களது துணிச்சலினாலும், ஊக்கத்தினாலும் முஸ்லிம்களுக்குத் தலைமை வகியுங்கள், அலிகார் சர்வகலாசாலைக்கு அரசாங்கத்துடன் இருக்கும் சம்பந்தத்தை அறுத்துக் கொள்ளுங்கள் என்று உபதேசித்தார்.

அச்சமயம் சர்வகலாசாலைக் கோர்ட்டில்மௌலானா அவர்களின் ஆலோசனைக்கு விரோதமான உணர்ச்சி அதிகமிருந்து கொண்டிருந்தது. சான்ஸலர், வைஸ் சான்ஸலர், புரோ வைஸ் சான்ஸலர் முதலிய யாவரும் எதிராக இருந்தனர். இத் தீர்மானத்தைப்பற்றி ஆலோசனை செய்ய அவர்கள் எவ்விதத்திலும் தயாராக இருக்கவில்லை.

முடிவு:—ஆகவே, அலிகார் சர்வகலாசாலை நிர்வாகிகளிடம் எதிர்பார்க்கப்பட்ட தெதுவோ, அதுவே இறுதியாக முடிந்தது. அதாவது முஸ்லிம் தலைவர்களின் இவ்வழைப்பை மறுத்துவிட்டதுடன் மௌலானா முஹம்மது அலி, மௌலானா ஷௌகத் அலி, டாக்டர் அன்ஸாரி, ஹக்கீம் அஜ்மல்கான் ஆகியவர்கள் மீது கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

எனவே, இம்முயற்சியில் அவர்கள் வெற்றிபெற முடியாததால், அங்குள்ள மாணவர்களிடம் முறைப்படி நேருக்கு நேராக அழைப்புவிடுப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இம்முயற்சி வெற்றி பெறுமென்பதற்கு இலேசான ஒரு வெளிச்சமும் தோன்றிற்று.

யூனியனில் பிரசங்கம் :—ஆகவே, சகல விதத்தாலும் மாணவர்களுக்கு, அவர்கள் மறந்து விட்ட பாடத்தை ஞாபகமூட்டி, பிரத்தியேகக் கூட்டங்களிலும், ஜாமிஆ மஸ்ஜிதின் கூட்டங்களிலும் உபதேசம் செய்து “இஸ்லாத்தின் இந்த நுணுக்கமான சமயத்தில் உண்மையாக உழைக்கும் சிப்பாய்கள்தாம் இஸ்லாத்திற்குத் தேவை. அவசியம் ஏற்படும்போது போர்க்களத்தில் நீங்கள் வரவேண்டும் என்பதற்காகவே உங்களுக்கு கல்வி போதிக்கப்படுகிறது. நீங்கள் ஊக்கங்குன்றி, தைரியத்தைக் கைவிட்டு அந்நியர்கள் கேவலமாக நினைப்பதற்கு இடங்கொடுப்பதற்காக உங்களுக்குக் கல்வி கற்பிக்கவில்லை. ஆதலால், இக்கஷ்டமான சமயத்தில் நீங்கள் வீருடன் எழுந்

திருங்கள். ஊழியம் செய்ய முன் வாருங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

மௌலானா அவர்கள் அலிகார் காலேஜ் யூனியனிலும் இதனைக் குறித்துப் பிரசங்கம் செய்தார். பிறகு, இதர தலைவர்களும் மௌலானா ஷௌகத் அலியும் உருக்கமாகப் பேசினர். இதன் பலனாக அச் சமயம் யூனியனின் வைஸ் பிரஸிடெண்டாக இருந்தவரான டாக்டர் ஜாக்கிர் ஹுஸைன் (தற்போது தேசிய முஸ்லிம் சர்வகலாசாலைத் தலைவராக இருக்கிறார்) பள்ளி பகிஷ்காரத்தைப் பலமாக எதிர்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்திருந்தார். இவர் இப்பிரசங்கங்களைக் கேட்டபின், மௌலானா அவர்களை ஆதரித்துப் பொன்னேபோல் போற்றத்தக்க பிரசங்கம் செய்ததுடன், தாம் இவ்வூழியத்திற்கு முற்றிலும் தயாராக இருப்பதாகவும் வாக்களித்தார்.

வேலை செய்யும் தருணம்:—ஆனால், கிரியாம்சையில் வேலைசெய்து காண்பிக்கும் சந்தர்ப்பம் அதாவது, அலிகார் சர்வகலாசாலையைவிட்டு வெளியேற வேண்டிய காலம் வந்தபோது, இவ்வுறுதிமொழியை அளித்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது. ஆயினும், ஒரு கூட்டத்தார் தங்களது உறுதிமொழியில் ஸ்திரமாக நின்றதுமல்லாமல், தேசிய முஸ்லிம் சர்வகலாசாலையை ஸ்தாபிதம் செய்வதற்கு முக்கிய அங்கமாகவும் ஏற்பட்டனர்.

பழைய மாணவர் விடுதி:—அலிகார் சர்வகலாசாலையைப் பகிஷ்கரித்து வெளியேறிய மாணவர்களை, நமது மௌலானா அழைத்துக்கொண்டு, பழைய

மாணவர் விடுதியில் வந்து தங்கினர். இவ்விடுதி முஸ்லிம் சர்வ கலாசாலைக்குச் சொந்தமல்ல. பழைய மாணவர்களுக்குமட்டிலுமே சொந்தமாகவுள்ளது. அல்லாமலும், இது மௌலானா முஹம்மது அலியுடையவும், அவரது மூத்த சகோதரர் மௌலானா ஷௌகத் அலியினுடையவும் முயற்சியின் பலனாக உண்டாக்கப்பட்டதுமாகும்.

வெளியேறு:—ஆனால், இங்குங்கூட சத்தியத்திற்காக உழைக்கும் இவ்வீரர்கள் தங்கி இருக்க முடியவில்லை. "பழைய மாணவர் விடுதியைக் காலி செய்க" வென்று காலேஜ் அதிகாரிகள் இவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். இதற்கு "பழைய மாணவர் விடுதியில் அலிகார் காலேஜ் அதிகாரிகளுக்கு எவ்வித உரிமையுமில்லை. அது பழைய மாணவர்களுக்குச் சொந்தமானது. பழைய மாணவர்களுக்குத்தான் அதில் ஆதிக்கம் செய்யப் பாத்தியமுண்டு. அவர்களை வெளியேற்றுவதற்கான உரிமை உங்களுக்கு இல்லை" என்று பதில் கூறப்பட்டது.

அதற்கு, காலேஜ் நிர்வாகிகள் "பழைய மாணவர் விடுதி காலேஜின் எல்லைக்குள்ளிருக்கிறது. நீங்கள் அலிகார் சர்வகலாசாலைக்கு அடங்காதவர்கள் என்பதும், அதற்கு விரோதமாகக் கலகஞ் செய்பவர்கள் என்பதும் ருஜுவாகிவிட்டது. நீங்கள் காலேஜை விட்டு வெளியேறியும் விட்டீர்கள். இப்படி வெளியேறியதாலேற்பட்ட தீயபலனும் வெளியாகிக் கொண்டிருக்கிறது. ஆதலின், பொது ஜன சமாதானத்தை நிலைநிறுத்தும் சட்டப்படி நீங்கள் உடனே பழைய மாணவர் விடுதியைக் காலி

செய்து விடவேண்டுமென்று கட்டளையிடப்படுகிறது" என்பதாக அதிகார முறையில் பதிலளித்தனர்.

மறுப்பு:—ஆனால், நமது மௌலானாவின் கோஷ்டியினர் இம் மிரட்டல்களுக்குப் பயப்படவில்லை. "உங்கள் கட்டளையைத் தலைமீது வைத்துக் கொள்கிறோம். ஆனால், வெளியேற முடியாது" என்று மரியாதையாகப் பதில் கூறினர்.

இந்த மறுப்புக்கு அலிகார் சர்வகலாசாலை நிர்வாகிகள் வாய்மொழியாகப் பதிற் சொல்லாமல், செய்கையின் மூலம் பதிற் கூறினார்கள். அதாவது ஒரு துளி ஜலம் கூட பழைய மாணவர் விடுதிக்குச் செல்லக்கூடாது என்றும், ஒரு பல்பு (எலக்டிரிக் விளக்கு) கூடக் கொடுக்கப்படாது என்றும், பழைய மாணவர் விடுதியிலுள்ளவர்களுக்குத் துணி வெளுத்துக்கொடுக்கக் கூடாது என்றும், வீட்டைக் கூட்டக்கூடாது என்றும், எல்லோருக்கும் கட்டளையிட்டு, இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட வேலைக்காரர்களையும் தடுத்து விட்டார்கள். ஆனால், தேசத்திற்காகவும் மதத்திற்காகவும் பகிஷ்காரம் செய்து, வெளியேறிய இவர்கள் அவ்வளவு சுலபமாகப் பணிந்து விடுபவர்களாக இல்லை. இக்கட்டளைகள் மூலமாகத் தங்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை மலர்ந்த முகத்துடன் சகித்துக் கொண்டனர். இருட்டிலேயே இருந்தனர். ஆயினும், அக்கட்டளைகளுக்கு மாறு பேசினரல்லர்.

போலீஸ் தடையீடு:—இக்கட்டளையினால் எவ்வித நிலைமை ஏற்படுகிறதென்பதை அலிகார் சர்வ கலாசாலை

அதிகாரிகள் இரண்டொரு நாள் காத்திருந்து பார்த்த னர். இக்கஷ்டங்களைச் சகிக்க முடியாமல் இவர்கள் தாங்களாகவே வெளியேறி விடுவார்கள் என்பது அவர்கள் நினைப்பு. ஆயினும், அவர்கள் எதிர்பார்த்த காரியம் கைகூடுவதற்கான அறிகுறியைக் காணவில்லை. பிறகு, போலீஸ் உதவியை நாடவேண்டிய தேற்பட்டது. போலீஸார் வந்து பழைய மாணவர் விடுதி என்ற இக் கோட்டையை முற்றுகையிடவும், இவர்களுக்குத் தோல்வி ஏற்படும்படிச் செய்யவும் வேண்டியதா யிற்று.

துப்பாக்கிகள், சனியன்கள், ரிவால்வர்களுடன் போலீஸார் அணிவகுத்து வந்தனர். பழைய மாணவர் விடுதி முற்றுகை யிடப்பட்டது. விடுதியைக் காலி செய்யுங்கள் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அர சாங்கத்தின் இவ்வுத்தரவுக்கு இவர்கள் பணிந்தனர். 'கலகக்காரர்'களின் ஸர்தார் மௌலானா முஹம்மது அலி முன்னும், அவரது சிஷ்யர்கள் பின்னுமாகவும், போலீஸ் படையினர் தங்களது ஆயுதங்களுடன் அவர்களின் நான்கு பக்கங்களிலும் புடை சூழ, பழைய மாணவர் விடுதியை விட்டு வெளியேறினர்.

நேற்று வரை கண்ணியமும், மரியாதையும், தலை மைத்தனமும் அளிப்பதற்கு உலகம் காத்துக்கொண் டிருந்தது. பாராட்டுகளும், போற்றுதல்களும், வர வேற்புகளும், உபசாரங்களும் நிகழ்ந்து கொண்டிருந் தன. ஜனங்கள் யாவரும் அன்புடனும், பக்ஷத்துட னும் நேசித்து வந்தனர். இன்று, அந்த நிலைமை

மாறி, எந்த இடத்தில் இவைகள் நிகழ்ந்தனவோ, அதே இடத்தில் போலீஸார் பகிரங்கமாக இவர்களை வெளியேற்றுகிறார்கள். இதனைப் பார்த்து எவரும் உதட்டைக்கூட அசைக்க முடியாத அவ்வளவு அசக்தர்களாக இருக்கின்றனர். இப்படிப்பட்ட காட்சி எவ்வளவு ஆச்சரியமான காட்சியாகும்! இதனைப்போல் எத்தனை காட்சிகளை உலகம் கண்டானந்தித்திருக்கும்?

அஸ்கர் சாகிப் :—ஸர். வஜீர்ஹஸனின் இளைய சகோதரரான ஜனாப் அஸ்கர் சாகிப் அவர்களைப்பற்றி முன்னொரு அத்தியாயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவர் அது சமயம் அங்கிருந்தார். சமாதானத் தூதுவராக அவர் மௌலானாவிடம் சென்றார். அவர் இது சம்பந்தமாகக் கூறிய விபரத்திலிருந்து நமது மௌலானாவின் உயர்ந்த சற்குணம், ஒழுக்கம், உறுதி, நண்பர்களுடன் பழகுதல் முதலிய தன்மைகள் வெளியாகின்றன. அவர் கூறிய விபரம் வருமாறு:—

"கடைசி முறையாக ஏற்பட்ட சந்திப்பானது இருதயப் பலகையில் அழியாத அக்ஷரமாகப் பதிந்துவிட்டது. அலிகார் சர்வகலாசாலையை தேசீய சர்வகலாசாலையாக ஆக்கவேண்டும் என்பது சம்பந்தமான காரியாதிகள் 1920-ம் வருஷம் நவம்பர் மாதம் நடைபெற்றபோது, நான் அலிகாரில் இருந்தேன். இம்மாதிரியாக ஏற்படவேண்டுமென்பதே முஹம்மது அலியின் நோக்கமாக இருந்தது. அது சமயம் டாக்டர் ஜியாவுத்தீன் சாகிப் என்னையும், ஸையித் ஸஜ்ஜாத் ஹைதர் சாகிபையும் மர்ஹூம் மௌலானா அவர்களுடன் சம்

பாஷணை செய்யும்படி அனுப்பி வைத்தார். மர்ஹூம் அவர்கள் தீவிர உணர்ச்சியுள்ளவராக இருந்தும், எங்களுடன் அவர் அன்பாகவும், பிரியமாகவும் சம்பாஷணை செய்ததானது, அவருக்கும் எங்களுக்கு மிடையில் அபிப்பராய வித்தியாச மிருந்தும், பழைய கால நேசத்தின் இன்பத்தைப் புதுப்பித்தது. இரவு வெகு நாழிகையாகிவிட்டது. மர்ஹூம் அவர்கள் தங்கி இருந்த பழைய மாணவர் விடுதியிலிருந்து நாங்கள் எங்களது விடுதிக்குத் திரும்பியபோது, மர்ஹூம் அவர்கள் என்னைப் பார்த்து "அஸ்கர்! உம்மைச் சந்தித்து ஆசை தீரவில்லை. காலையில் வந்து என்னுடன் தேத் தண்ணீர் அருந்தவேண்டும். அப்பொழுதும் நாம் பேசுவோம்" என்று கூறினர்.

அந்தக் காலையில்தான், போலீஸ் படையினரால் அவர்கள் முற்றுகை போடப்பட்டு வெளியேற்றப்பட்டனர். நான் வருவதை அவர் பார்த்து, தூரத்திலிருந்தே "அஸ்கர்! நீங்கள் என்னிடம் வரவேண்டாம். நீங்கள் கவர்ன்மெண்டில் உத்தியோகம் பார்த்துக்கொண்டிருப்பதால், உங்களுக்கு நன்மை என்னிடம் வராமலிருப்பதிலேயே இருக்கிறது" என்று இந்த வார்த்தைகளை அவர் கண்களிலிருந்து நீர்வடியக் கூறிச் சென்றார்.

கூடாரவாசம்:—பழைய மாணவர் விடுதியிலிருந்து இவ்வளவு கம்பீரமாகத் தோல்வியுற்று. வெளியேறிய நமது தலைவர் மௌலானா மர்ஹூம் அவர்கள், சர்வ கலாசாலைக் கட்டிட எல்லைக்கு வெளியில் கொஞ்ச தூரத்திற்கப்பால் சில கூடாரங்களை ஏற்படுத்தி, அவ்விடத்தி

லேயே வாசம் செய்யத் தொடங்கினர். மரங்களுக்கடியில் கல்விப் போதனை நடந்து கொண்டிருந்தது. கிளாஸ் ரூமும் இல்லை. ஹாலுமில்லை. கிரௌண்டுமில்லை, பணமுமில்லை, காசுமில்லை. ஆனால், அவர்களிடம் உறுதி மட்டுமிருந்தது. ஆதலால், கையிலொன்றுமில்லாத இக்காலத்திலும், இவ்வாசம் அதிக இன்பந் தந்தது. ஆனால், அத்தேசிய சர்வ கலாசாலைக்கு ஷெய்குல் ஹிந்து மௌலானா மஹ்மூது ஹஸன் தேவுபந்தி அவர்கள் ஸ்தாபகராகவும், மௌலானா முஹம்மது அலி தலைவராகவும், ஜனுப் தஸத்துக் அஹ்மதுகான் ஷேர்வானி ரிஜிஸ்டிரராகவும் இருந்தனர். தேசிய முஸ்லிம் சர்வகலாசாலையும் ஸ்தாபிதமாயிற்று.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு, வெளியிடங்களில் பள்ளி பகிஷ்காரம் செய்த மாணவர்கள் தேசீய முஸ்லிம் சர்வ கலாசாலையில் சேர்ந்துகொள்ளக் கூட்டங் கூட்டமாக வந்தனர். ஆதலால், இக்கூடாரங்கள் போதியனவாக இருக்கவில்லை. பக்கத்திலுள்ள சில வீடுகள் வாடகைக்கு வாங்கப்பட்டன. ஆகவே, மாணவர்கள் தங்குவதற்குக் கொஞ்சம் வசதி ஏற்பட்டது.

மௌலானா அவர்களின் தலைமைப் பதவி:— இக்காலத்தில் இக்கலாசாலையில் கல்வி பயிலும் பாக்கியம் பெற்றவர்கள் எப்பொழுதேனும் தங்கள் கல்விப் பயிற்சியையும், முக்கியமாகத் தங்கள் கலாசாலைத் தலைவர் மௌலானா முஹம்மது அலியின் போதனையையும் பற்றிக் கூறும்போது, ஆச்சரியமான சமாசாரங்கள் வெளியாகின்றன. மௌலானா முஹம்மது அலிக்கு

மௌலானா
ஜாமியாமில்லிய்யா தேசீய சர்வகலாசாலைத் தலைவர்.
(1922)

கல்வியில் இருந்த நிபுணத்துவத்தை உலகம் நன்கறியும். இந்த இயக்கக் காலத்தில் அவரிடத்தில் மத உணர்ச்சியும் மிகைத்திருந்தது. ஆதலால், அது சமயம் அவருடைய பிரசங்கங்கள் பெரும்பாலும் மத உணர்ச்சி ததும்பியன வாகவே இருந்தன.

அக்காலத்தில் "அவர் காலை 8 மணிக்கு தேசீய முஸ்லிம் சர்வ கலாசாலைக்கு வந்து, பெரிய வகுப்புகளில் பிரசங்கம் செய்ய ஆரம்பிப்பார். அவருடைய பிரசங் கம் முழுவதும் இஸ்லாம் சம்பந்தமாக விலைமதிக்க முடி யாத அறிவுக் களஞ்சியமாகவே இருந்தன. சிற்சில நாட்களில் 12 மணி வரை இஸ்லாமியச் செய்திகளைப் பற்றித் தொடர்ச்சியாக அவர் பிரசங்கம் செய்வார். பிறகு, இடை வேளை போஜனம், தொழுகை முதலி யவைகளுக்குப் பிறகு, மறுபடியும் பிரசங்கத்தை ஆரம் பித்து விடுவார். அஸர் தொழுகைக்கு நேரம் வந்து விடும். அஸருக்குப் பிறகு பிரசங்கம் செய்ய ஆரம் பித்தால், மகுரிப் தொழுகை வரை பிரசங்கம் நடை பெறும்" என்று அக்காலத்தில் அங்கு கல்வி பயின றவர்கள் கூறுகிறார்கள்.

ஜாமிஆ மில்லிய்யாவின் திட்டம்:—மௌலானா முஹம்மது அலி தம்முடைய இடைவிடாத அபார அலுவல்களுடனும், 1920-ம் வருஷத்தில் அவ ருக்கிருந்த தொடர்ச்சியான காரியங்களினுடனும், தேசீய முஸ்லிம் சர்வ கலாசாலையைப் பற்றிய திட் டத்தையும் சுருக்கமாக எழுதி வெளியிட்டார். இதில் போதனா முறைகளைப் பற்றியும், இக்கலாசாலை ஏற்படுத்

தப்பட்டதன் நோக்கத்தைப் பற்றியும் அவர் சமிக்ஞை யாகவே கூறி இருந்தார். ஏனெனில், அவர் விபரமாக எழுதுவதற்கு அவருக்குச் சாவகாசம் கிடைக்கவில்லை. அதில் அவர் கூறி இருப்பதாவது :—

“ நமது வாலிபர்கள் காலத்துக்கேற்றவாறு கல்வி பயின்றவர்களாக இருப்பதுடன், உண்மை முஸ்லி மாக இருக்கவேண்டும் என்பதும், அவர்களில் இஸ்லாத் தின் ஜீவநாடி இருந்து கொண்டிருக்க வேண்டும் என் பதும், இஸ்லாமியப் பிரசாரப் பட்டாளத்தில் இதரர் களின் உதவியில்லாமல் தங்கள் சொந்த பலத்தின் பேரில் உறுதியாக இருக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதும், இப்படிப்பட்ட வாலிபர்களை நம் மில் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதும் நமது நோக் கம். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு திருகுர் ஆனை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். இதற்காகவே நம்முடைய கலாசாலைக்கு அஸ்திபாரக்கல் நாட்டி இருக் கிறோம். ஆகவே, பொருளாதார நிலைமையின் காரண மாக ஆரம்பப் படிப்புக்குமேல் அதிகயாகப் படித்துக் கொள்ள இயலாதவர்கள், திருகுர் ஆனின் சாரத்தை யேனும் தெரிந்து கொள்ளட்டும் என்பதற்காக, எல்லா வகுப்புகளிலும் திருகுர்ஆனைப் போதிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

இஸ்லாமியக் கொள்கைகளின் உண்மைத் தன் மையையும், இஸ்லாமியக் கட்டளைகள் பிரயோஜன முள் ளவைகளாக இருக்கின்றன; அவைகளைப் பலமாகப் பின் பற்றி நடந்ததனால்தான் முஸ்லிம்கள் ஆரம்பகாலத்தில்

வெற்றியடைந்தனர் என்பதையும் நமது குழந்தைகளின் இருதயத்தில் பசுமரத்தாணிபோல் பதியச்செய்து விட வேண்டும். இழந்துபோன நம்முடைய அருமை பெருமைகளை நாம் திரும்ப அடையவேண்டுமாயின், இஸ்லாமியக் கொள்கைகள், கட்டளைகள் ஆகியவைகளின்படி நடப்பதும், றஸூலே மக்பூல் (ஸல்) அவர்களுடையவும், குலபாயே ராஷிதீன்களினுடையவும் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பது மட்டுமே அதற்கேற்ற வழி என்பதை நமது குழந்தைகளின் இருதயங்களில் உரம் பெறச் செய்யவேண்டும் என்பதும் நமது நோக்கம்.''

இதுதான் முஸ்லிம்களின் கல்வி சம்பந்தமாக மௌலானா முஹம்மது அலியின் திட்டம். தம்முடைய இந்தக் கொள்கையை தேசீய முஸ்லிம் சர்வகலாசாலையிற் பயிலும் மாணவர்களுள்ளத்திற் புகுத்தி, அவர்களை மதபக்தியுள்ளவர்களாக்கி விடவேண்டும் என்று கண்டிப்பாக உழைத்து வந்தார்.

தேசீய முஸ்லிம் சர்வகலாசாலையுடன் சம்பந்தம் விலகுதலும் சம்பந்த மேற்படுதலும்:—கொஞ்ச காலத்திற்குப்பின், மௌலானா அவர்களுக்கு ஏற்பட்ட ராஜீய தேசீய அலுவல்கள் அவரை, தேசீய முஸ்லிம் சர்வகலாசாலையில் பிரவேசிக்கவிடவே இல்லை. அவரும் தம்மாலானவரை முயன்றாரெனினும், சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. தமக்குச் சமயம் வாய்க்குமாயின், தம்முடைய அருமையான அவகாசத்தை தேசீய சர்வகலாசாலையில் கழிக்கவேண்டுமென்றும், அவர்களில் மத உணர்ச்சியை உண்டாக்கவேண்டுமென்றும் விரும்பிக்

கொண்டே இருந்தார். அவருக்கு நீண்டகாலமாக இருந்த இவ்வெண்ணம் நிறைவேறவே இல்லை. ஆனாலும், அவருக்கு ஸ்தூல விஷயத்தில் தேசிய முஸ்லிம் சர்வகலாசாலையுடன் சம்பந்தம் இல்லாமற் போய்விட்டாலும், அவரது ஆத்துமம் அக்கலாசாலை யிலேயே எப்பொழுது மிருந்து கொண்டிருந்தது. ஹக்கீம் அஜ்மல்கான் அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தபோது, மௌலானா அவர்கள் தமது "ஹம்தர்த்" பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பல வியாசங்களெழுதி, இக்கலாசாலைக்குப் பொது ஜனங்கள் உதவிசெய்ய வேண்டுமென்பதை அறிவுறுத்தினார்.

இதுபோலவே, அக்கலாசாலை டில்லிக்கு மாற்றப் பட்டபோது, அவர் தொடர்ந்து இடைவிடாமல் பிரசாரம் செய்தார். ஜாமிஆ மஸ்ஜிதில் பிரசங்கங்கள் பல புரிந்தார். தங்கள் பாலர்களை இக்கலாசாலைக்கே அனுப்பவேண்டும் என்று ஜனங்களைத் தூண்டினார்.

பதினெட்டாம் அத்தியாயம்

நாகப்பூர் காங்கிரஸ்

1920-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் தேசீய முஸ்லிம் சர்வகலாசாலையை ஸ்தாபித்து, அதை நிர்வகிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து விட்டு, நமது தலைவர் மௌலானா அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவு தேடும்பொருட்டு தேசமெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்தார்.

நாகப்பூர் காங்கிரஸ் :—அவ்வருஷம் டிசம்பர் மாதத்தில் நாகப்பூரில் காங்கிரஸ் மகா நாடு கூடிற்று. இம்மகா நாட்டில்தான் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அபிப்பிராய பேதம் :—நாகப்பூரில் மகா நாடு கூடும் வரை காங்கிரஸ் மகா சபையை விட்டு மிதவாதிகள் ஒதுங்கி இருக்கவில்லை. அவர்களும் இம்மகா நாடுகளிற் கலந்து கொண்டே இருந்தார்கள். சட்டத்துக்கு மீறிய இப்போக்கு அவர்களுக்கு அதிருப்தியாக இருந்ததால், அவர்கள் இம்மகா நாட்டிற்கு வந்து, ஒத்துழையாமைத் தீர்மானத்தைக் கட்டுப்பாடாக முழு பலத்துடன் எதிர்க்க வேண்டுமென்று விரும்பினார்கள். இவ்விஷயத்தில் ஹிந்துக்களில் பண்டிதர் மதன்மோகன மாளவியாவும், முஸ்லிம்களில் ஜனுப் முஹம்மது அலி ஜின்னாவும் தலைமையாக முன்னணியில் நின்றனர். மிஸ்டர் ஸி. ஆர். தாஸ் இக்காலத்தில் வக்கீல் தொழில் நடத்திக்கொண்

டிருந்தார். உதவி மறுத்தல் தீர்மானத்தை இவரும் பலமாக எதிர்த்தார். ஆதலால், இம்மகா நாட்டின் முடிவு எவ்விதமாகிறதென்பதைப் பார்ப்போம் என்று ஒரு கலக்கம் ஏற்பட்டிருந்தது.

மௌலானா அவர்களின் முயற்சி:—இத் தீர்மானத்தை நிறைவேற்றுவிக்க நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி அரும்பாடுபட்டார். இதற்காக காந்திஜீ, மாளவியா, ஜின்னா, ஸி. ஆர். தாஸ் ஆகியவர்களிடம் தனித்தனியே சென்று, அவர்களது அபிப்பராயத்தைத் தெரிந்து கொள்வதும், அவர்கள் கூறும் ஆக்ஷேப சமாதானங்களைத் தெரிந்து, அவர்களை ஒருமனப்பட்ட அபிப்பராயத்தில் திருப்ப முயற்சிப்பதும் நமது மௌலானாவின் முக்கிய வேலையாக ஏற்பட்டது. இம் முயற்சியில் அவர் தமது நித்திரையையும், உணவையும் மறந்து பூரணமாக ஈடுபட்டிருந்தார்.

ஸி. ஆர்.தாஸின் திரும்புகை:—நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி அவர்களது கவனம் ஸி. ஆர். தாஸைப்பற்றியே அதிகம் சென்றிருந்தது. இவர் தமது சொற்படி வழிக்கு வந்துவிட்டால், இவ் வியக்கம் வெற்றிபெற்று வளர்ந்தோங்கு மென்பதை உணர்ந்திருந்தார். ஆதலால், தர்க்கம், சமாதானம், கோபம், சாந்தம், முகஸ்துதி ஆகிய சகல உபாயங்களின் மூலமாகவும் ஸி. ஆர். தாஸிடம் விவாதம் செய்து, அவர் வருஷந்தோறும் லக்ஷக்கணக்காகச் சம்பாதிக்கும் திரவியத்தைக் காலால் உதைத்துத் தள்ளும்படிச் செய்துவிட முயன்று வெற்றி பெற்றார்.

தாஸ்போன்றவர்களை இம்ஸமதானத்தில் கொண்டு வரும் காரியத்தில் வெற்றி பெற்றமைக்காக நமது மௌலானு சந்தோஷமும், பெருமையு மடைந்தார். மிஸ்டர் முஹம்மது அலி ஜின்னு, பண்டித மதன் மோகன மாளவியா ஆகியவர்களை அவர் கவனிக்கவில்லை. அவர்களின் எதிர்ப்பைப்பற்றியும் கவலைகொள்ளவில்லை. ஆகவே, காங்கிரஸ் மகாநாட்டில் பெரும் விவாதத் திற்குப்பின் இத் தீர்மானம் நிறைவேறிற்று.

பலன் :—இதன் பலனுக இந்தியா முழுவதிலும் புத்துணர்ச்சி யுண்டாயிற்று. ஒவ்வொருவருள்ளத்தி லும் சுதந்திர தாக முண்டானதுடன், அவர்களின் மூளையில் சுயேச்சையுணர்ச்சி பைத்தியம் போலேற் பட்டுவிட்டது. சிறுசிறு குழந்தைகளும்கூட சுதந்திரக் கொடியை நாட்டுபவர்களாகிவிட்டனர்.

இயக்கத்தின் ஆரம்பம் :—உதவி மறுத்தல் தீர் மானம் ஒப்புக்கொள்ளப்பட்டபின், காந்திஜீயும், அலி சகோதரர்களும் இந்தியா முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இவர்களது அபார முயற்சியாலும், இடைவிடா உழைப்பாலும் ஆங்கிலேயர்கள்பால் பொது ஜனங்களின் உள்ளத்திலிருந்த பயம் அகன்றது. சிறைச்சாலை செல்வது ஒரு விளையாட்டாக மாறிவிட்டது. கைது செய்யப்படுவது வெறும் தமாஷாகிவிட்டது. இந்த இயக்கத்தினுல் ஆங்கிலேயர்களின் செல்வாக்கு ஒழிந்தது. இந்தியர்கள் சாகவும் துணிந்து விட்டனர்.

வாலன்டைல் ஷரால் அபிப்பராயம்:—பிரபல ராஜ தந்திரியும், தத்துவ விற்பன்னருமான மிஸ்டர் வாலன்டைல் ஷரால் என்பவர் (Unrest in India) "இந்தியாவில் அமைதியின்மை" என்ற தமது புத்தகத்தில், "இந்திய முஸ்லிம்களை ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகத் தூண்டிவிட்டதன் பொறுப்பு அலி சகோதரர்கள்மீதுதான் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் காங்கிரஸில் சேர்ந்து, சமாதானமாக இருக்க விரும்பும் ஹிந்துக்களிடமும் துணிச்சலை உண்டாக்கி விட்டனர். இன்னும், முஸ்லிம் சைனியத்தைக் கலகம் செய்யும்படியும் தூண்டினர்" என்று எழுதி இருக்கிறார்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

கிலாபத் பிரசினை

நாகப்பூர் காங்கிரசுக்குப் பிறகு, மௌலானா முஹம்மது அலியின் சக்தியையும், தலைமை வகிக்கும் திறமையையும், துணிச்சலையும் அவருடைய சிநேகிதர்களும், விரோதிகளும் ஒப்புக்கொள்ளும் பாகம் ஆரம்பமாகிறது. இக்காலத்தில் அவர் இந்தியா முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, புதிய உணர்ச்சியையும், புதிய மாறுதலையு முண்டாக்கினார். இதனால், அரசாதிபத்தியம் என்ற வானளாவிய மாளிகைக்குங்கூட ஆட்டங் கண்டு விட்டது.

உணர்ச்சி:—சிகப்புத் தலைப்பாகையைக் கண்டவுடன் பயந்து நடுங்கும் பட்டிக்காட்டு ஜனங்களும் கூட, வீர தீரத்துடன் முன் வந்து, தேசீய மகா நாடுகளில் கலந்துழைத்து, போலீஸார், பட்டாளத்தார் முன்னிலையில் அல்லாஹு அக்பர், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு ஜே என்று ஆரவாரம் செய்தனர். தடியடிகளையும், துப்பாக்கிக் குண்டுகளையும் தங்கள் மார்பில் தாங்கினர். மரணத்தைப்பற்றிய அச்சமோ, சிறைச்சாலையைப் பற்றிய பீதியோ, மனைவிமக்களைப் பற்றிய கவலையோ அவர்களுக்கு எள்ளளவு மிருக்கவில்லை.

அவர்கள் ஜெயிலுக்குச் செல்லும்போது, அவர்களுடைய குடும்பத்தார் அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவர். அவர்களுடைய சினேகிதர்களும், நண்பர்களும் சந்தோஷமடைவர். அவர்களுடைய மனைவி மக்

கள் அவர்களுடைய செய்கையால் பெருமை கொள்வர். சிறு குழந்தைகள் கிலாபத்தைப்பற்றியோ, கலீபாவைப்பற்றியோ அதிகம் தெரிந்திருக்கமாட்டார்கள். இஸ்லாம் என்றால் என்ன? அதன் கருத்தென்ன? என்பதைப்பற்றி ஒன்றும் உணர்ந்திருக்கமாட்டார்கள். இவ்வியக்கத்தின் நோக்கமென்ன? இவ்வியக்கத்தை உண்டு பண்ணியவர்கள் யாவர்? என்பதை அறியமாட்டார்கள். ஆயினும், காந்திஜீ, மோமலீ, ஷௌகத்லீ (முஹம்மது அலி ஷௌகத் அலி) ஆகிய நாமங்களை அறிந்திருப்பார்கள்.

பொழுது விடிந்தால், பிள்ளைகளின் கூட்டம் தெருத்தெருவாகச் செல்வதும், காந்திக்கு ஜே, அலி சகோதரர்களுக்கு ஜே என்று கூறுவதும்தான் அவர்களது வேலையாக இருக்கும். கைது செய்யும் நேரம் வந்து விட்டால், சிரித்த முகத்துடன் போலீஸ் சேவகர்களிடம் சென்று, எங்களையும் கைது செய்யுங்கள் என்று வற்புறுத்துவர். அவர்களைக் குழந்தைகளென மதித்து, போலீஸ் சேவகர்கள் அவர்களைக் கைது செய்யாமல் விட்டு விட்டால், அவ்விடத்திலேயே நின்று கொண்டு அழ வாரம்பித்து விடுவார்கள். அவர்களைக் கைது செய்தால்தான் அவர்களது அழுகை நிற்கும்.

கைது செய்யப்படுவதில் ஆசை:—சில முக்கிய பட்டணங்களில் போலீஸார் அல்லது பட்டாளத்தார் மோட்டார் லாரிகளைக் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டு கைது செய்யவாரம்பித்தால், அந்த லாரிகளில் உட்காருவதற்குக்கூட இடமில்லாதவாறு, அவ்வளவு அபரிமித

மாக ஜனங்கள் சிறைக்கூடம் செல்வதற்கு முன்வந்து, மோட்டார் லாரிகளின்படியில் நின்று கொண்டு, தங்களையும் கைது செய்யும்படி கூறுவர். இவர்களுடைய நோக்கம் நிறைவேறும்வரை இவர்களது நிலைமை பைத்தியக்காரர்களது நிலைமையைப் போலிருக்கும்.

சந்தா :—திலகர் சுயராஜ்ய நிதி, கிலாபத் நிதி, ஸமர்ணு பண்டு ஆகியவைகளுக்காக சந்தா வசூல் செய்யும் பிரசினை இக்காலத்தில் உண்டாயிற்று. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் திலகர் சுயராஜ்ய நிதிக்கு ஒரு கோடி ரூபாய் சேர்க்கவேண்டுமென்று கோரப்பட்டது. மிகவும் சுருக்கமான இக் காலவரையறைக்குள் கோரிய தொகைக்கு அதிகமாகவே வசூலாகிவிட்டது. மூல தனம் படைத்த முதலாளிமார்கள் இக்காலத்தில் விசேஷமாக உதவி புரியாவிடினும், நடுத்தரவகுப்பாரும், ஏழைகளும், தரித்திரர்களும், ஸ்திரீகளும், தொழிலாளரும் தங்களாலானவரையில் தன சகாயஞ் செய்தனர். நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பலர் உத்தியோகங்களைத் துறந்தனர். பட்டினி கிடந்தனர். அழுக்குத் துணிகளைக் கட்டிக்கொண்டு காலங் கடத்தினர். ஆயினும், அவர்கள் தங்கள் உத்தியோக மறுப்பைவிட்டு மாறினரில்லை.

பள்ளி பகிஷ்காரம் :—மாணவர்கள் தங்களது கல்விச்சாலைகளையும், கல்லூரிகளையும் காலி செய்தனர். மலர்ந்த முகத்துடன் அல்லாஹுதஆலாவின் பாதையில் அநேக கஷ்டநஷ்டங்களைச் சகித்தனர். அவர்கள் பட்டினி பசியென்று பயப்படவுமில்லை, கஷ்டங்களும், துன்பங்களு முண்டாகுமென்று அஞ்சவுமில்லை. அவர்

களுக்கிருந்த தெல்லாம் ஒரே உறுதிதான். அந்த உறுதி அவர்களை இவைகளை எல்லாம் லக்ஷியம் செய்யாமற் றடுத்துவிட்டது.

இக்காரியங்களனைத்திற்கும் ஒரு பெரியார்தான் காரணஸ்தராக இருந்தார். அவர்தான் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி. அவர் எவரையேனும் நோக்கிச் சிறிது சமிக்ஞை செய்தால், உடனே அவர் வக்கீல் தொழிலை விட்டுவிடுவார். ஒருவரை உற்று நோக்கினால், உடனே அவர் உத்தியோகத்தைத் துறந்து விடுவார். ஒருவரைப்பார்த்து அவர் கூறுவாராயின், உடனே அவர் சிறைக்கூடம் சென்றுவிடுவார்.

ஒற்றுமை:—ஒரு காலத்தில் ஹிந்துக்கள் முஸ்லிம் களைப் பார்த்து வெறுப்புறுவர். முஸ்லிம்கள் ஹிந்துக் களைப்பார்த்துக் கோபமடைவர். இஃது ஒரு காலத்தின் நிலைமை. இந்நிலைமை மாறி புதியதொரு நிலைமை ஏற் பட்டது. இக்காலத்திலோ ஹிந்துக்களும், முஸ்லிம் களும் உடன் பிறந்த சகோதரர்களைப்போற் காணப் பட்டனர். முஸ்லிம்களுக்கு ஈதுப் பெருநாள் வந்தால், ரஸ்தாக்களில் பந்தல்போட்டு, முஸ்லிம்களுக்கு ஹிந் துக்கள் ஷர்பத் முதலிய பானங்களை அளித்தனர், மிட்டாய்கள் கொடுத்தனர், வெற்றிலை பாக்குத் தந்து மரியாதை செய்தனர். ஹிந்துக்களுக்கு ஹோலி பண் டிகை வந்தபோது, முஸ்லிம்களிற் பலர் தங்கள் ஹிந்து சகோதரர்களுக்கு விருந்தளித்து உபசரித்தனர். இப் படிப்பட்ட காலம் காற்றைப்போல் வந்து, மேகத்தைப் போல் மறைந்துவிட்டது.

இருபதாம் அத்தியாயம்

மன்னிப்புக் கேட்ட கதை

இக்காலத்தில் முஹம்மது அலிக்குப் பக்ஷி அடித்துக்கொண் டிருந்தது. ஒவ்வொருவரும் அவரைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தனர். அவர் இந்தியா வில் வெற்றிக்கொடி நாட்டிக்கொண்டிருந்தார். இச் சமயத்தில் "அலி சகோதரர்கள் அரசாங்கத்தாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்" என்ற செய்தி தேசமெங்கும் பரவிற்று. இதனைக்கேட்ட ஒவ்வொரு வரும் "அலி சகோதரர்களாவது மன்னிப்புக் கேட்கு வாவது" என்று தங்கள் விரல்களைக் கடித்துக் கொண் டனர். ஆயினும், விரோதிகள் இச் செய்தியை மிகப் பலமாகப் பிரசாரம் செய்தனர்.

அலி சகோதரர்களுக்கு ஏற்பட்டுவரும் செல் வாக்கைக் குறைத்து, பொது ஜனங்களுக்கு அவர்கள் மீது ஆத்திரம் உண்டாகும்படிச் செய்ய வேண்டு மென்பதே இச் செய்தியைக் கிளப்பிவிட்டதன் அந்தரங்க நோக்கம். பொது ஜனங்களிடம் அவர்களுக் கிருக்கிற மதிப்புக் குறைந்துவிடுமாயின், அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள நோக்கம் சித்தியாகாது போய் விடும் என்பது அவர்கள் கருத்து.

இவ்வதந்தி எவ்வளவு சாதுர்யமாகப் பரவச் செய்யப்பட்டதோ, அவ்வளவு துரிதமாக அச் செய்தி பொய்யாயிற்று. இச் செய்தியைச் செவி

மடுத்துக் கேட்டவர்கள் அனந்தம் பேர். ஆனால், ஒரு வருக்கும் அதில் நம்பிக்கையுண்டாகவே இல்லை. இச் செய்தியைக் கேட்டவர் ஒவ்வொருவரும் சிரித்துக் கொண்டே "சமாசாரமறிவித்தவர் பொய்யர்" என்று கூறி, அதை நிராகரித்துவிட்டனர். அலி சகோதரர் களின் செல்வாக்கில் எவ்விதப் பங்கமு மேற்படவில்லை. அவர்கள் இந்தியா முழுவதற்கும் கிரீடமாகவே இருந் தனர். அவர்களுக்குத் தகுதியான விதமாகவே அவர் களுக்கு மதிப்பும், கண்ணியமும் அளிக்கப்பட்டுவந்தது.

மௌலானா முஹம்மது அலி கூறும் விபரம்:— இது சம்பந்தமாக மௌலானா அவர்கள் எழுதிய நீண்ட வியாசத்தின் முக்கிய பாகம் வருமாறு:—

"தற்போது புதிதாக வந்திருக்கும் ராஜபிரதிநிதி லார்டு ரீடிங்கை மகாத்மாஜீ சிம்லாவில் கண்டு பேசினார். இந்தியாவுக்கு சுயராஜ்யம் வாங்கிக் கொடுப்பதிலும், துருக்கி கிலாபத்தை மறுபடியும் செல்வாக்கில் கொண்டு வருவதிலும் லார்டு ரீடிங் உதவி செய்யவேண்டுமென் பதும், இதற்குக் கைமாறாக ஒத்துழையாமை இயக்கம் ஹிம்சையில் இறங்கக்கூடா தென்பதும் இச்சம்பா ஷணையின் பயனாக முடிந்தது.

அப்கானிஸ்தான் அரசர் அனுப்பிய ஒருவர் எங்களிடம் வந்தரென்றும், இந்தியாவில் அப்கானிஸ் தானத்தின் ஆதிக்கத்தை ஏற்படுத்த நாங்கள் விரும்பு கிறோமென்றும் எங்களைப்பற்றி ஒரு செய்தி பிரபலப் படுத்தப்பட்டது. அப்கானிய பூச்சாண்டிக்கு பயப் படுகிறவர்கள் மகாத்மா காந்தியிடம் "நீங்கள் இவ்

விரு சகோதரர்களையும் ஏன் நம்புகிறீர்கள்'' என்று தொந்தரை செய்துகொண்டிருந்தனர். இவர்களைத் திருப்தி செய்விக்கும் நோக்கத்துடன் மகாத்மா காந்தி "இண்டிப்பெண்டன்ட்'' பத்திரிகைப் பிரதிநிதியை என்னிடம் அனுப்பிவைத்து, அவரைக்கொண்டு பல கேள்விகளைக் கேட்கச்செய்து, அவைகளுக்கு நானளித்த பதிலை, பத்திரிகையில் பிரசுரிக்கும்படிச் செய்தார்.

எங்களுடைய பிரசங்கங்களிலிருந்து சில பொய் யானவும், தவருனவுமான வாக்கியங்களை மாளவியாவும், சப்ரூவும் எடுத்துவைத்துக்கொண்டு, காந்திஜீயைத் திருப் பிவிடமுயன்றனர். இதே மேற்கோள்களைத்தான் லார்டு ரீடிங் மகாத்மாஜியிடம் காண்பித்தார். ஆதலின், இவை சம்பந்தமாக எங்களுடைய அறிக்கை ஒன்று பிரசுரிக் கப்படுவது நல்லதென்று மகாத்மாஜீக்குத் தோன்றிற்று. இம்மாதிரியான ஒரு அறிக்கையை வெளியிடவேண்டு மென்று நாங்கள் விரும்பவில்லை. ஆனுல், எங்களது ஹிந்து விரோதிகள் மகாத்மாஜீயைத் தொந்தரை செய் வர்; "முஸ்லிம்களுக்கு சுயராஜ்யத்தின்பால் விருப்பம் எங்கே இருக்கப் போகிறது? அவர்களுக்கு முஸ்லிம் ராஜ்யம்தான் விருப்பம்; அவர்கள் ஹிம்சையின் மூல மாகவும், அப்கானியர்களின் உதவியின் மூலமாகவும் இந்தியாவை அடிமைப்படுத்த விரும்புகிருர்கள்; இத ஞற்ருன், அவர்கள் இம்மாதிரியான அறிக்கை வெளி யிட மறுக்கிருர்கள்'' என்று மகாத்மாவிடம் ஹிந்துக் கள் கூறவும் இடமுண்டு. தவிரவும், "நாங்கள் அறிக்கை வெளியிட, மறுத்ததனுலேயே லார்டு ரீடிங் இந்தியா

வுக்கு சுயராஜ்யம் வாங்கிக்கொடுப்பதில் தடை ஏற்பட்டு விட்டது'' என்று மகாத்மாஜீயே பிறிதொரு காலத்தில் சொல்லவும் கூடும். ஆதலால், நான் ஒரு அறிக்கையை வெளியிடச் சம்மதித்தேன். ஆயினும், எங்கள்மீது சொல்லப்படும் குறைகளுக்கு ஆதாரமாக வைத்துக் கொண்டிருக்கிற அந்த மேற்கோளை நான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினேன். மகாத்மாஜீ இதற்குச் சம்மதித்தார். ஆகவே, அந்த மேற்கோள் களை பம்பாய்க்கு அனுப்ப வேண்டும் என்று லார்டு ரீடிங்குக்கு அவர் தந்தி கொடுத்தார். மாளவியாஜீக்கும் அம்மாதிரியான மற்றொரு தந்தி கொடுக்கப்பட்டது.

அந்த மேற்கோள்களை மாளவியாஜீ அனுப்பி வைத் தார். ஆனால், இராஜப் பிரதிநிதி லார்டு ரீடிங் அவை களை அனுப்பிவைக்க மறுத்துவிட்டார். அவைகளை நான் பார்த்தவுடன், எனது பிரசங்கத்தைத் தவறாக எண்ணிக் கொண்டதனாலும், தவறாக எழுதிக்கொண்டதனாலும் இவைகளில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன வென் றும், சிலவற்றிற்குத் தவறான அர்த்தம் செய்யப்பட் டிருக்கின்றனவென்றும் நான் கூறி, அவர்கள் கருது வது போன்ற அறிக்கையை வெளியிட முடியாது என்று மறுத்துவிட்டேன். ஆயினும், “ இவ்விதமான நோக்கம் எங்களுக்கு இல்லை, சில பிரபலஸ்தர்கள் இம் மாதிரியாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் இம்மாதிரி நினைக்க இட மேற்பட்டதற்கு வருந்து கிறோம், ஒத்துழையாமை இயக்கத்தில் ஹிம்சை செய் யும்படி நாங்கள் யாரையும் தூண்டமாட்டோம் என்று

உறுதி கூறுகிறோம் என்று மட்டிலும் நாங்கள் கூற முடியும்" என்று கூறி இதுபோன்ற ஒரு அறிக்கையும் நான் வெளியிட்டேன்.

இது வெளியான பின், இராஜப் பிரதிநிதிக்கு மகாத்மாஜீ இதைப்பற்றி தகவல் தெரிவித்தார். இதை வெளியிடுவதற்குமுன் இதைப்பற்றித் தகவல் தெரிவிக்கவில்லை. ஏனெனில், "இவ்வறிக்கை உங்களது சொந்த அறிக்கை. உங்கள் மனம்போல் எழுதுங்கள். இராஜப் பிரதிநிதியின் உத்தரவின்பேரில் இது எழுதப்படவில்லை. அம் முறையில் இதை எழுதினுற்ருன் அவருக்கு முற்கூட்டியே அறிவித்துச் சம்மதம் தெரிய வேண்டும். இராஜப் பிரதிநிதியைத் திருப்தி படுத்துவதற்காக இந்த அறிக்கையை நீங்கள் வெளியிடவில்லை. உங்களது இந்திய சகோதரர்களின் திருப்திக்காகவே நீங்கள் இதை வெளியிடுகிறீர்கள். அவர்கள் திருப்தியடைவதுடன் இராஜப் பிரதிநிதிக்கும் திருப்தி ஏற்பட்டுவிடும்" என்று காந்திஜீ எங்களிடம் கூறினுர். நாங்கள் தண்டனை யடையாமல் தப்பித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக, இவ்வறிக்கையை நாங்கள் வெளியிடவுமில்லை. இப்படிப்பட்ட எண்ணம் எனக்கோ மகாத்மாஜீக்கோ இருக்கவுமில்லை.

மகாத்மாஜீ யிடத்தில் ராஜப் பிரதிநிதி இம் மேற்கோள்களைக் காட்டுவதற்கு முன்பே மாளவியாவும், டாக்டர் சப்ரூவும் இவைகளை மகாத்மாஜீயிடம் காண்பித்துவிட்டனர். இதன் பேரில் எங்களிடம் கூறி இம்மாதிரியான ஒரு அறிக்கையை வெளியிடச் செய்வதாக

காந்திஜி கூறி இருந்தார். அவ்வாறு செய்வது மிகவும் நன்மையாகும் என்று காந்திஜீக்கு இராஜப் பிரதிநிதி கூறி இருந்தார். "இதற்காக அலி சகோதரர்கள்மீது வழக்கு நடத்தவேண்டும். ஆனால், இவ்வறிக்கை வெளியாகிவிட்டால், பிறகு வழக்கு நடத்துவதற்கு அவசியமில்லை என்று இந்தியா கவர்ன்மெண்ட் முடிவு செய்திருக்கிறது" என்றுங் கூறினர்.

அதற்கு காந்திஜி "வழக்குத் தொடருவதும், வழக்குத் தொடராதிருப்பதும் தங்களுடைய வேலை. அதில் எங்களுக்கு எவ்விதச் சிரத்தையுமில்லை. நாங்கள் இம்மாதிரியான ஒரு அறிக்கை வெளியிடுவது அவசியம். அது நம்மீது எச்சமயத்திலும் கடமையாகவுள்ள காரியமாகும்" என்று கூறினர். இது இராஜப் பிரதிநிதியை அவர் கடைசியாகச் சந்தித்தபோது நிகழ்ந்த சம்பாஷணை.

வழக்குத் தொடரும் விஷயம் இதற்கு முன் பிரஸ்தாபிக்கப்படவே இல்லை. இராஜப் பிரதிநிதியின் இப் பயமுறுத்தலுக் கஞ்சி, எங்களைக் காப்பாற்றுவதற்காக, காந்திஜீ இந்த யுக்தியைச் செய்தார் என்ற சந்தேகம் கூட உண்டாகுவதற்கில்லை. எனினும், எங்களது அறிக்கை வெளியானபோது, அதை வைசிராய் கருணையுடன் அங்கீகரித்துக் கொண்டதாக, வைசிராயிடமிருந்து மகாத்மாவுக்குத் தந்தி வந்தது. நாங்கள் அது சமயம் புரோச்சுக்குச் சென்று கொண்டிருந்தோம். மகாத்மா மௌன தினத்தை அன்று ஆரம்பித்திருந்தார். அவர் பேசுவதற்கில்லை. ஆயினும், தந்தியைப்

பார்த்து, நான் இதற்கு வேறு அர்த்தம் கற்பிக்க முடியாதல்லவா? வைசிராய் வேறு ஒரு சங்கதியை யல்லவா கூறிக் கொண்டிருக்கிறார் என்று கூறினேன். அதற்கு மகாத்மாஜீ புன்சிரிப்புடன் தலையை அசைத்தார். அவரும் நாங்கள் கூறுவதையே அங்கீகரித்தார் என்று புலப்பட்டது. எவ்வாறாயினும், என்னுடைய நண்பர் ஒருவர் பம்பாயிலிருந்து இரவு 10-11 மணிச் சுமாருக்கு, புரோச்சிலிருந்த என்னிடம் வந்தார். அதுவும் அவர் எனக்கு "பம்பாய் கிரானிக்கல்" பத்திரிகையைக் காண்பிப்பதற்காகவே வந்தார்.

மகாத்மாஜீ இராஜப் பிரதிநிதியைப் பேட்டி கண்ட விபரங்களையும், எங்களுடைய அறிக்கையையும் பற்றி செம்ஸ்போர்டு கிளப்பில் வைசிராய் செய்த பிரசங்கம் அப்பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது. இப்பிரசங்கத்தில் மகாத்மாஜீ மிகவும் இழிவு படுத்தப்பட்டிருந்தார். பேட்டி காண்பதற்காக வைசிராயிடம் அவர் வலிய வந்தார் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால், உண்மை என்னவென்பதை ஒவ்வொருவரும் அறிவர்.

இந்த நூற்றாண்டில் லார்டு ரீடிங்கைப் பார்க்கினும், அதிக தந்திரமுள்ள இராஜப்பிரதிநிதி வந்திருக்க முடியாது என்று கூறலாம். 6-7 முறை வைசிராய்க்கும், மகாத்மாஜீக்கு மிடையில் நடைபெற்ற சம்பாஷணையை, அவர் மிகச் சாதுர்யமாக உருட்டித் திரட்டிக் கூறிவிட்டார். அதாவது எங்கள்மீது வழக்குத் தொடுக்க வைசிராய் முடிவு செய்திருப்பதாகக் கூறியது போலவும், மகாத்மாஜீ அவ்வாறு செய்யவேண்டாம், அவர்

களிடம் மன்னிப்புப் பிரசுரிக்கும்படி செய்து விடு கிறேன் என்று கூறியது போலவும், இதன் மூலம் எங் கள் இருவருக்கும் மன்னிப்பு வாங்கிக் கொடுத்தது போலவும், ஜனங்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்பது வைசிராயின் எண்ணம்.

அவசர புத்தியுள்ள எனது சகோதரர் மௌலானா ஹஸ்றத் மோஹானி இப்பிரசங்கத்தைப் படித்தவுடன் எனக்கு ஒரு கார்டு எழுதி "வைசிராய் உங்களை இந்த நிபந்தனையின்பேரில் மன்னிப்புச் செய்கிறார் என்ற விஷயத்தை மகாத்மாஜீ உங்களுக்கு முன்னதாகவே தெரிவித்திருப்பாராயின், உங்களைப் பார்க்கிலும் பெருங் கோழையர்கள் வேறு எவருமில்லை. அவர் உங்களுக்கு இதைத் தெரிவிக்காதிருந்தால், அவரைப் பார்க்கிலும் துரோகி வேறு யாருமில்லை" என்று அதில் குறிப்பிட்டிருந்தார். தம்மை காந்திஜீ பேட்டி கண்டு பேசிய விபரத்தை வைசிராய் தவறாகக் கூறி இருக்கவும் கூடும் என்பதை ஆத்திரமடைந்துள்ள என்னுடைய இச் சகோதரர் சிந்தித்தாரில்லை. எவ்வா றாயினும், செம்ஸ்போர்ட் கிளப் பிரசங்கத்தை நான் கேள்விப்பட்டபோது, என் தேகம் முழுவதும் பிளந் தது போலிருந்தது. உத்தரவு கொடுத்தால், இதற்கு நான் பதில் கூறுகிறேன் என்று மாத்திரம் நான் மகாத்மாவிடத்தில் கூறினேன்.

மகாநாடு கிலாபத் மகாநாடாக இருந்தது. அதற்கு நான் தலைவனாக இருந்தேன். தலைமைப் பிரசங்கம் வேறு விஷயத்தைப்பற்றியதாக இருக்கவேண்டிய

நிருந்தது. ஆனல், இதனைப் பார்த்தபிறகு, அம் மகா நாட்டில், லார்டு ரீடிங் குழப்பி வைத்திருந்த விஷயத்தை நான் வெவ்வேருகப் பிரித்துவைத்தேன். என்னுடைய வயது முழுவதிலும் இதைப் பார்க்கிலும் கடுமையான வார்த்தைகளடங்கிய பிரசங்கத்தை நான் செய்திருக்கமாட்டேன்.

1921-ம் வருஷம் ஜூன்மாதத்தில் "பம்பாய் கிராணிக்கல்" பத்திரிகையில் முழு விபரமும் வெளியாகி இருந்தது. இதற்குப் பிறகு, லார்டு ரீடிங்கும் பதில்கொடுக்க வேண்டியதாயிற்று. ஹிம்சையிலிறங்கும்படி தூண்டாமல், அரசாங்கத்தின்மீது ஜனங்களுக்கு வெறுப்புண்டாகும்படிச் செய்த ஒரு காரியத்திற்காக இந்தியன் பீனல் கோடு, 124 ஏ பிரிவின்படி வழக்குத் தொடுப்பதில்லை என்று லார்டு ரீடிங் வாக்குறுதி செய்திருந்தும், கராச்சி கிலாபத் கான்பரன்சில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தை ஆதாரமாகக் கொண்டு, என்மீது வழக்குத் தொடரும்படி பம்பாய் மாகாண கவர்ன்மெண்டை அவர் நிர்பந்தப் படுத்தினர். முன் ஜாக்கிரதைக்காக கராச்சியில் செய்த வேறொரு பிரசங்கத்தின்மீது 124 ஏ செக்ஷன்படி வழக்குத் தொடரும்படியும் கட்டளையிட்டார். லார்டு ரீடிங் வாக்குறுதிக்கு மாறு செய்தார் என்ற குற்றச் சாட்டை விட்டுத் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு அப் பிரசங்கத்தில் ஹிம்சை செய்யும்படித் தூண்டாவிட்டாலும், கராச்சிக் கான்பரன்சின் தீர்மானம், ஆயுதத்தைக் கீழே வைத்துவிடும்படி முஸ்லிம் சிப்பாய்களைத் தூண்டுவதாக

இருந்தது என்றும், இது ஹிம்சையைப் பார்க்கினும் மிகக் கெடுதலானது என்றும் புகல் கூறப்பட்டது.

ஸர். சப்ரூவின் முயற்சி:—டாக்டர் ஸர். சப்ரூ பம்பாய்க்கு எவ்விதம் சென்றார்? என்பதையும், எங்கள் மீது வழக்குத் தொடரும்படி பம்பாய் அட்வகேட் ஜெனரலை எவ்வாறு ஆயத்தம் செய்ய விரும்பினார் என்பதையும், கடைசியாக அலஹாபாதி லிருந்தே ஆங்கிலேய பாரிஸ்டர் ஒருவருக்கு 18 ஆயிரம் ரூபாய் கொடுத்து, எங்களுக்கு ஆயுள் பரியந்தம் சிக்ஷை வாங்கிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் என்பதையும், ஜூரிகள் கிறிஸ்துவர்களாகவும் ஆங்கிலேயர்களாகவு மிருந்தும், உண்மையை எங்ஙனம் ஆதரித்து எங்களை விடுதலை செய்தனர் என்பதையும், வேறு ஒரு குற்றத்திற்காக ஜூடிஷியல் கமிஷனர் எங்களுக்கு 2 வருஷ தண்டனையை அளித்தார் என்பதையும் எல்லோரும் அறிவர்.

இந்த வழக்கு ஏற்படுவதற்கு முதலிலேயே மகாத்மாஜீ இராஜப் பிரதிநிதிக்கு விஷயத்தை விளக்கிவிட்டார். "அலி சகோதரர்களின் பேச்சுகள் உங்களைக் கருதி அல்லவென்றும், தங்கள் தேசமக்களைக் கருதியே அவைகள் வெளியிடப்பட்டனவென்றும், அவர்கள் வருத்தம் தெரிவித்ததற்கு தங்களிடம் அவர்கள் மன்னிப்புக் கேட்கிறார்களென்பது அர்த்தமல்ல வென்றும் கூறிவிட்டார்."

இதுதான் அலி சகோதரர்கள் அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்ட விருத்தாந்தத்தின் அகமியம். அக்

காலத்தில் கிராமங்களிலும், பட்டிக்காடுகளிலும் கூட அலி சகோதரர்கள் மன்னிப்புக் கேட்டதாகவும், கைதி செய்யப்படுவதற்கு அவர்கள் பயந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இம்மாதிரியாக ஏமாற்ற முயன்ற தன் பலன் எவ்வாருயிற்று என்பதை உலகம் நன்கறிந்திருக்கிறது. இதற்குப் பின்னும், அலி சகோதரர்களுக்கு கண்ணியம் அதிகமானதே யன்றி குறையவில்லை என்பது தெரிந்த விஷயம்.

இருபத்தொன்றும் அத்தியாயம்

கராச்சி கிலாபத் கான்பரன்சும் அலி சகோதரர்கள் கைது செய்யப்படலும்

மன்னிப்புக் கேட்டதாகக் கூறிய கதைக்குப் பின், நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி ஜௌஹர் கராச்சி கிலாபத் மகாநாட்டிற்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, அம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக கராச்சி சென்றார்.

கராச்சியின் நிலைமை:—கிலாபத் இயக்கம் கராச்சியிலும் பூரணமாக வலுவடைந்தது. ஹிந்து முஸ்லிம், வயோதிகர் வாலிபர் அனைவரும் ஒரேவித உணர்ச்சியுள்ளவர்களாக இருந்தனர். ஒத்துழையாமை, அஹிம்சை என்ற கீதம் ஒவ்வொருவருடைய நாவிலிருந்தும் தோன்றிக்கொண்டிருந்தது. அலி சகோதரர்களின் கண்ணியமும், பெருமையும் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் நிறைந்திருந்தன.

உலமாக்கள் பத்வா :—இச் சமயத்தில் கண்ணியவான்களான உலமாக்கள் ஒரு பத்வா வெளியிட்டனர். அதில் லக்ஷ்மணபுரியிலுள்ள பரங்கி மஹல்லா, தேவுபந்து முதலிய இடங்களிலுள்ள பிரபல உலமாக்களில் 500 பேர்கள் கையொப்ப மிட்டிருந்தனர். சர்க்காருடன் ஒத்துழைப்பதும், அவர்களுடன் நேசங் கொள்வதும் ஹறாம் என்றும், ஸ்கூல்களையும் காலேஜ்களையும் பகிஷ்கரிப்பது பர்லு என்றும், கச்சேரிகளில் வேலை செய்வதும், வக்கீல் தொழிலை நடத்துவதும் ஹறாம் என்

றும், கௌரவப் பட்டங்களை ஏற்றுக்கொள்ளுதல் காபிர் களின் தொழில் என்றும், இவ் வியக்கத்திற் சேராதவர் கள் போர்க்களத்தில் புறங் காட்டுபவர்களுக்குச் சமம் என்றும், உயிராலும் பொருளாலும் தியாகம் செய்வது இஸ்லாத்தின் அடையாள மென்றும் அதில் சொல்லப் பட்டிருந்தது.

கிபலாத் கான்பரன்சு:—கராச்சி கிலாபத் கான்ப ரன்சில் இந்தியாவில் பொறுக்கி எடுக்கப் பட்டவர்கள் கலந்து கொண்டனர். ஹிந்து முஸ்லிம் பொது ஜனங் களில் பிரம்மாண்டமான கூட்டத்தினரும், முஸ்லிம் தலைவர்களின் ஒரு கூட்டதினரும் இதற்கு வந்திருந் தனர்.

கான்பரன்சில் செய்யப்பட்ட பல தீர்மானங்களில் "ராணுவத்தில் ஊழியம் செய்யும் முஸ்லிம்கள் தங்கள் முஸ்லிம் சகோதரர்களையே தங்கள் குண்டுகளுக்குக் குறியாக வைக்கவேண்டிய திருப்பதாலும், பரிசுத்த ஸ்தலங்களைக் காப்பதற்காக தங்கள் உயிர்களைத் தியா கம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கும்போது, சில ரூபாய் சம்பளத்தின் நிமித்தம் அப்புண்ணிய ஸ்தலங்களின்மீது குண்டு போடவும், பீரங்கிப் பிரயோ கம் செய்யவும் நிர்ப்பந்தமிருப்பதால், முஸ்லிம் சிப்பாய் கள் இஸ்லாம் மதத்தின் இவ்வழைப்புக்குச் செவி சாய் த்து, கவர்ன்மென்ட் உத்தியோகங்களை விட்டுவிடவேண் டும்" என்ற கருத்தில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. இதனை மகா நாட்டுத் தலைவரான நமது மௌலானா பிரரேபித்தார். மௌலானா ஹுஸைன் அஹ்

மது சாகிப், பீர்குலாம் முஜத்தித் சாகிப், மௌலானா நிஸார் அஹ்மது சாகிப், மௌலானா ஷௌகத் அலி, டாக்டர் கிச்லு, சங்கராச்சாரியார் முதலிய பிரபலஸ்தர்கள் இதனை ஆமோதித்தும், ஆதரித்தும் பேசினர். இறுதியாக இத் தீர்மானம் மிக ஆரவாரத்துடன் நிறைவேறிற்று.

கைது செய்யப்படல் :—இம் மகாநாட்டிற்குப் பின், நமது தலைவர் மௌலானா, காந்திஜீயுடன் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, 14-12-921-ல் வால்டேரில் கைது செய்யப்பட்டு, காராச்சிக்கு அழைத்துச் செல்லப் பட்டார். இத் தீர்மானத்தை ஆதரித்த, மேற் கண்ட இதர தலைவர்களும் ஆங்காங்கு கைது செய்யப்பட்டு, கராச்சிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

கராச்சி வழக்கு

கராச்சியில் இவ் வழக்கு மாஜிஸ்டிரேட் கோர்டில் விசாரணைக்கு வந்தது. கோர்ட்டின் காக்ஷி எப்படி இருந்தது? வழக்கு எதிரிகள் கோர்ட்டுக்கு எவ்விதம் வந்தார்கள்? என்ற விபரம் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும் "கராச்சி வழக்கு" என்ற புத்தகத்திலிருந்து சில முக்கிய விபரத்தை ஈண்டு குறிப்பிடுவோம்:—

"ஹாலைச் சுற்றிலும் முட்கம்பி வேலி போடப் பட்டது. நான்கு பக்கங்களிலும் ஆயுதந் தரித்த போலீஸ் படையினரும், ராணுவச் சிப்பாய்களும் காவல் புரிந்தனர். காம்பௌண்டுக்குள் 250 இந்திய சிப்பாய் களும், 250 ஆங்கிலேய சிப்பாய்களும் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். ஒரு மெஷின் பீரங்கியும் ஹாலுக்கு வடக்குப்பக்கத்தில் தயாராக வைக்கப்பட் டிருந்தது. ஹாலுக்குள் நடவடிக்கைளைப் பார்க்கச் சென்றவர்களில் பெரும்பாலர் வக்கீல்களும், பாரிஸ்டர் களும், மாணவர்களும், பிரபலஸ்தர்களுமாவார்கள்.

எதிரிகளின் வருகை:—எதிரிகளான தலைவர்கள் மூடப்பட்ட மோட்டார் லாரியில் கொண்டுவரப் பட்டனர். அவர்களுடைய மோட்டாருக்கு முன்னல் ஆயுதந்தரித்த இந்திய போலீஸ் படையினரைக் கொண்ட ஒரு லாரியும், பின்னல் வெள்ளை ராணுவச் சிப்பாய்தள் நிறைந்த இரண்டு லாரிகளும் வந்தன.

இவர்களுடைய மோட்டார் ரஸ்தாவில் வந்தபோது, பொது ஜனங்கள் அல்லாஹு அக்பர் என்று கோஷித்தது வானைப் பிளப்பது போலிருந்தது.

சரியாக 11 மணிக்கு எதிரிகள் காலிக் தீனா ஹாலுக்குள் நுழைந்தனர். அங்கிருந்தவர்களனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்து, சலாமும் நமஸ்காரமும் செய்தனர். தலைவர்கள் சிரித்தமுகத்துடன் அவர்களுக்குப் பதில் கூறினார்கள். எல்லாருக்கும் முதலில் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி ஒரு கையில் திரு குர்ஆனையும், மற்றொரு கையில் மைக் கூட்டையும் வைத்துக்கொண்டு கோர்ட்டுக்குள் வந்தார். அவருக்குப் பின், மௌலானா ஷௌகத் அலி சிரித்துக்கொண்டு, தலையாலும் கையாலும் சமிக்ஞை செய்து, ஜனங்களின் சலாமுக்கு பதில் கூறியவராக வந்தார். பிறகு, மௌலானா ஹுஸைன் அஹ்மது சாகிப் வந்தார். பிறகு, ஜகத்குரு சங்கராச்சாரியார் கையில் தடி வைத்துக்கொண்டு வந்தார். பிறகு, டாக்டர் ஸைபுத்தீன் கிச்லுவும், மௌலவி நிசார் அஹ்மது சாகிபும் பேசிக்கொண்டும், புன்சிரிப்புடன் சலாமுக்கு பதில் கூறிக்கொண்டும் வந்தனர். எல்லாருக்கும் பின்னால், பீர்குலாம் முஜத்திது சிரித்துக்கொண்டும், திரு குர்ஆனை ஓதிக்கொண்டும் வந்தார். தலைவர்கள் தங்களுக்குரிய ஆசனங்களில் அமரும்வரை, எல்லா ஜனங்களும் நின்றுகொண்டிருந்தனர்.

மாஜிஸ்டிரேட்டின் கேள்வி :—மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு வந்ததும், எதிரிகள் பிறந்த இடம் முதலிய

வைகளைப் பற்றி விசாரித்தார். அதற்கு, நமது தலைவர் மௌலானா அவர்கள் "இவைகள் வாரண்டில் எழுதப் பட்டிருக்கின்றன" என்று கூறினர். இதற்குப் பிறகு வழக்கு விசாரணை நடைபெற்றது. தலைவர்கள் அதில் கலந்து கொள்ள வில்லை. தலைவர்கள் மீது கடுமையான இரண்டு குற்றங்கள் சுமத்தப் பட்டன.

பிராசிகியூஷன் சாக்ஷிகளைக் குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறீர்களா? என்று மாஜிஸ்டிரேட் தலைவர்களை விசாரித்தபோது, நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி அவர்களும், அவருடைய துணைவர்களும் வழக்கு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள மறுத்ததுடன், ஸ்டேட்மென்ட் மாத்திரம் தாக்கல் செய்வதாகக் கூறினர்கள். அவ்விதமாகவே, மாஜிஸ்டிரேட்டிடம் இவர்கள் தனித் தனியே ஆளுக்கொரு ஸ்டேட்மென்டைத் தாக்கல் செய்தனர். அவைகளின் முழு விபரங்களையும் இங்கு எடுத்தெழுதுவது சாத்தியமில்லையாதலின், மௌலானா அவர்கள் அளித்த ஸ்டேட்மென்டின் முக்கிய சாரத்தை மட்டிலும் ஈண்டு சிறிது குறிப்பிடுவோம்.

மாஜிஸ்டிரேட்டை நோக்கி மௌலானா அவர்கள் கூறிய ஸ்டேட்மென்டின் சாரம் வருமாறு:—.

"இஸ்லாம் மதத்தில் ஒருவனுடைய அரசாதிபத்தியம்தான் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதுதான் அல்லாஹு தஆலாவின் அரசாதிபத்தியம். அது விதி விலக்குச் செய்யப் படாதது. பங்கு வைக்கப் படாதது. பிறர் கைக்கு மாருதது. இந்தி

யாவிலுள்ள முஸ்லிம்களிடம் அரசாங்கப் பிரசினையைப் பற்றி முடிவு செய்வதற்கு, கொஞ்ச மேனும் பிரயோ ஜனப்படக்கூடிய சக்தி இருக்குமாயின் இஸ்லாமிய சட் டப் பிரகாரம் தற்போதிருக்கிற அரசாங்கத்திற்கு விரோதமாக ஜிஹாது செய்யும்படி அவர்கள் நிர்ப்பந்திக் கப் பட்டவர்களாக இருப்பார்கள். இப்பொழுது நடை பெற்றுவரும் இவ் வழக்கு காலிக் தீனு ஹாலில் நடை பெறுமல், வேறு ஒரு இடத்தில் நடை பெற்றிருக்கும். இம்மாதிரியான சக்தி இல்லாதது வருந்தத் தக்க விஷ யம். ஆதலின், முஸ்லிம்கள் தங்களது மதக் கொள்கைப் படி தங்களைத் தொந்தரை செய்யாத வேறு ஒரு இடத் திற்கு ஹிஜ்றத் செய்து சென்றுவிடவேண்டியதுதான்''.

இந்த ஸ்டேட்மெண்டுக்குப் பின் ஒவ்வொரு குற் றத்தைப் பற்றியும் மாஜிஸ்டிரேட் குற்றப் பத்திரிகை படித்து எல்லோரையும் செஷன்ஸுக்கு கமிட் செய்தார்.

சேஷன்ஸ் விசாரணை :—இதற்குப் பிறகு இவ் வழக்கு விசாரணை; செஷன்ஸ் கோர்ட்டில் நடைபெற் றது. அங்கும் வழக்கு விசாரணை நடவடிக்கைகளில் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. கடைசியாக அங் கும் ஒரு ஸ்டேட்மென்டை வாய் மொழியாக தாக்கல் செய்தனர். அதன் சாரம் அனுபந்தத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தலைவர்கள் குற்றவாளிகளல்ல வென்று ஜூரிகள் ஏக மனதாகக் கூறியதை ஜட்ஜ் அங்கீகரித்து, இந்தியன் பீனல் கோடு 124-ஏ பிரிவுப்படி குற்றவாளிக ளல்ல வென்று அவர்களை விடுதலை செய்தாராயினும், மற்ருெரு குற்றத்தின்படி அஸெஸர்களிற் பெரும்பாலர்

களின் அபிப்பிராயத்தை ஜட்ஜ் ஏற்று, நமது தலைவர் மௌலானு அவர்களுக்கு கி. பி. கோ. 505-வது பிரிவுப்படி 2 வருஷம் கடினகாவல் தண்டனையை விதித்தார். இக் குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததாக மற்றவர்கள்மீது குற்றஞ் சாட்டி, ஒவ்வொருவருக்கும் 2 வருஷம் கடினகாவல் தண்டனை விதித்தார். ஜகத்குரு சுவாமி சங்கராச்சாரியார் மாத்திரம் விடுதலை யடைந்தார்.

நமது தலைவர் மௌலானு முஹம்மது அலி அவர்களும், அவரது துணைவர்களும் தங்கள்மீது சாட்டப்பட்டிருந்த குற்றத்தின்படி தண்டனை அடைவதாக இருப்பின், தூக்கு அல்லது ஆயுள் பரியந்தம் சிறைவாச தண்டனையைச் சுலபமாக அடைய முடியும். அவ்வாறிருந்தும், அக்காலத்தில் அவர் மாஜிஸ்டிரேட்டிடமும், ஜட்ஜிடமும் காட்டிய அஞ்சாத மனப்பான்மை ஆச்சரியப்படத்தக்கதாகும். அவர் காட்டிய இவ் வஞ்சாமையானது அப்புறம் தேசமெங்கும் பரவி இக்காலத்தில் சர்வ சாதாரணமானதாக ஏற்பட்டுவிட்டது.

தண்டனையின் பயன் :—நமது தலைவர்கள் தண்டனை அடைந்தது நாட்டில் பெரும் உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. இவ்வியக்கமும் வெகு சீக்கிரத்தில் நாடெங்கும் பரவி எதிர்பார்த்ததற்கு மேலதிகமாகச் செல்வாக்கடைந்தது. அக்காலத்தில் ஒவ்வொரு வீடும் கிலாபத் காரியாலயமாகவும், ஒவ்வொருவரும் கிலாபத் அங்கத்தினராகவும் இருந்தனர். மௌலானு அவர்களின் தாயார் பீ அம்மாவும், அவருடைய வாழ்க்கைத்

துணைவியான பேகம் முஹம்மது அலியும் ஆச்சரியப் படத்தக்க உறுதியுடன், இந்தியா முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்து கிலாபத் நிதி திரட்டினர்.

நமது தலைவர் மௌலானா எவ்வளவு சுகமாக வாழ்ந்துவந்தார் என்பது அவருடைய நண்பர்களுக்குத் தெரியும். ஆதலால், அவர்களுக்குக் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டதாக, சமாசாரம் எட்டியவுடன் அவர்களுக்கேற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. ஆகவே, அவர்களுடைய நண்பர்களிலொருவர், தண்டனை விதிக்கப்பட்ட செய்தி கிடைத்ததிலிருந்து கட்டிலின் மீது தூங்குவதை நிறுத்திவிட்டார். மதம் அனுமதித்த ஒரு காரியத்தை நாமாக ஹறுமாக ஆக்கிக் கொள்வது நல்லதல்லவாதலால், சமயா சமயத்தில் அவர் கட்டிலை உபயோகித்துக் கொள்ளும்படி நேர்ந்தது. ஆயினும், அவர் அத்தண்டனை காலம் முடிவடையும் வரை பெரும்பாலும் தரையிலேயே நித்திரை செய்து வந்தார்.

மௌலானாவைப்பற்றி அப்துல்மாஜித்தர்யாபாதி :- இவ்விதமாக நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி ஜௌஹரும், அவர் துணைவர்களும் தண்டிக்கப் பட்டபின், ஒரு சந்தர்ப்பத்தில் மௌலானா அவர்களைப் பற்றி "ஸச்" பத்திரிகையின் ஆசிரியரான மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதி பின்வருமாறு தமது அபிப் பராயத்தை வெளியிட்டிருக்கிறார் :—

"நீராவிகளுக்குள் மின்சார சக்திகள் மறைந் திருக்கின்றன. பச்சைப் பசும் மரங்கள் ஒன்றோ

டொன்றுரைவதால் நெருப்புப் பற்றிக்கொள்கிறது. விக்கிரகத்தை உடைப்பவரான கலீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் விக்கிரகத் தொழும்பர்களின் மத்தியிலேயே பிறந்து, அவ்விடத்தில்தான் ஏக தெய்வ வணக்கத்திற்கு ஜெய பேரிகை கொட்டினர். சுதந்திரம் என்ற சூரியன் கொடுங் கோன்மை என்ற அடர்ந்த இருளுக் குள்ளிருந்துதான் உதயமாகின்றனன். ஒன்றுக் கொன்று நேர் விரோதமான காரியங்கள் அவைகளிலிருந்தே உண்டாகும்படிச் செய்வது இவ்வகிலத்தைப் படைத்தாளும் றஹ்மானின் அற்புதங்களாகும்.

இதே மாதிரியாக இறைவன் இந்த 20-வது நூற்றுண்டில், நவநாகரீகமும், மார்க்கப் புரட்டும், தலை விரித்தாடுகிற இவ்வுலகில், 1350 வருஷங்களுக்கு முன்னிருந்த கண்யவான்களான ஸஹாபிகளின் உண்மைக்கும், அந்தரங்க சுத்திக்கும், அகத்துறவுக்கும், உறுதியான நம்பிக்கைக்கும் முன்மாதிரிகளை யுற்பத்திசெய்து காண்பித்தனன். அலிகார் முஸ்லிம் கலாசாலையில் படித்து, நவ நாகரீக உணர்ச்சியில் மூழ்கி இருந்தவர் லக்ஷ்மணபுரியிலுள்ள பரங்கி மஹல்லாவின் "மௌலவி" ஒருவரிடம் பைஅத்துச் செய்வதும், ஆங்கில பாஷையில் மனதைக் கவரத்தக்க விதமாகச் செய்யுள் எழுதுவதைத் தன்னுடைய முக்கிய வேலையாகக் கொண்டிருந்தவர் திருகுர்ஆனை மனம் செய்வதற்காக தன்னுடைய பெரும்பாலான காலத்தை ஒதுக்கி வைப்பதும், ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் ஆனர்ஸ் பட்டம் பெற்றவர் காதிரிய்யா ஸில்ஸிலாவில் சேர்ந்து

கொண்டு, அதற்காக ஆனந்தமடைவதும், நேர்த்தியானதும், மிருதுவானதும், விலையுயர்ந்ததுமான சூட் பூட்ஸ்களை எப்பொழுதும் அணிந்துகொண்டிருந்தவர் சிறைச்சாலையிலுள்ள முரட்டுப் பழைய கம்பளியை பிரீதியாக அணிந்து கொள்வதும், மாகாண கவர்னர்கள், பார்லிமென்ட் அங்கத்தினர்கள், இந்தியாவிலுள்ள சமஸ்தானாதிபதிகள், பிரபுக்கள் முதலியவர்களின் நெருங்கிய நண்பனாக இருந்து, எந்நேரமும் விருந்துண்டு கொண்டிருந்த ஒருவர், அவர்களுடைய நாய் கூடத் திரும்பிப்பாராத சிறைச்சாலை உணவுகளை அருந்தி, வல்லோனுக்கு நன்றி செலுத்துவதும் இவ்வையகத்தில் இறைவனளித்த அற்புதமாகும்."

என்வே, இம்மாதிரியான நிலைமை நமது தலைவர் முஹம்மது அலி ஜௌஹருக்கு ஏற்பட்டதால்தான் "மிஸ்டர் முஹம்மது அலி" என்றழைக்கப்பட்டவர் "மௌலானா முஹம்மது அலி" என்று பொது ஜனங்களால் போற்றப்பட்டார்.

இருபத்துமூன்றும் அத்தியாயம்

தண்டனைக்குப் பிறகு

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியும், அவர் தம் துணைவர்களும் தண்டிக்கப்பட்டபின், இவ் வியக்கம் குன்றவில்லை என்றும், அது முன்னிருந்த நிலைமையைப்பார்க்கினும், இன்னும் அதிக வேகமாகவே பரவிற் றென்றும் இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்டது.

எந்தத் தீர்மானத்தைக் குற்றமெனக்கூறி, சர்க்கார் அலி சகோதரர்களைத் தண்டித்தார்களோ அந்தத் தீர் மானத்தை நாடெங்கும் சகல வகுப்பாரும் பல முறை நிறைவேற்றினார்கள். காந்திஜீ, காங்கிரஸின் இதர தலைவர்கள், மௌலானா அபுல்கலாம் ஆஜாத், கிலாபத் தின் இதர தலைவர்கள் இத்தீர்மானத்தைப் பல முறை மடக்கி மடக்கி நிறைவேற்றியதுடன், "அலி சகோதரர் களை மட்டிலும் ஏன் சர்க்கார் தண்டித்தது? எங்களை ஏன் தண்டிக்கக்கூடாது? இந்தியா முழுவதும் இந்தத் தீர்மானத்தைத் திரும்பத்திரும்ப நிறைவேற்றிக்கொண் டிருக்கும்போது ஏன் கைது செய்யாமல் இருக்கவேண் டும்?" என்று அரசாங்கத்தை அறைகூவி அழைத்தனர்.

அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்ட காலத் தில் சுமார் 2 லக்ஷம் ரூபாய்தான் கிலாபத் நிதிக்கு வசூ லாகி இருந்தது. ஆனால், அவர்கள் தண்டனை அடைந்த பின் மிகவும் சொற்ப காலத்திற்குள் ஏறக்குறைய முப் பது (30) லக்ஷம் ரூபாய் வசூலாகி விட்டது. இந்நிதி

திரட்டும் விஷயத்தில் அலி சகோதரர்களின் அன்னை பீ அம்மாவிற்கும், பேகம் முஹம்மது அலிக்கும் அதிகச் சம்பந்தமுண்டு.

சட்ட மறுப்பு :—அலி சகோதரர்கள் கைது செய்யப்படும் வரை, காந்திஜீ ஒத்துழையாமையைப் பற்றி மட்டிலும்தான் அதிகமாகப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். பிறகு, அவர் பார்டோலியில் சிவில் சட்ட மறுப்பை ஆரம்பிப்பதற்காக முற்றிலும் தயாராகி விட்டார். தேசமும் சட்ட மறுப்புச் செய்யத் தயாராக இருந்தது.

சௌரி சாரா சம்பவம் :—இந்தச் சமயத்தில் சௌரி சாராவில் துக்ககரமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சில இந்திய போலீஸ்காரர்கள் தங்களுக்குச் செய்த கொடுமையைச் சகிக்க மாட்டாமல், அங்குள்ள போலீஸ் தாணுவையும், போலீஸ் சேவகர்களையும் ஜனங்கள் நெருப்புக் கிரையாக்கி விட்டனர். இதனுல், சர்க்காருக்கும் அதிக வருத்த முண்டாகி விட்டது.

மாளவியா முயற்சி :—பண்டித மதன்மோகன மாளவியா ஆரம்பத்திலிருந்தே இவ்வியக்கத்திற்கும், அலி சகோதரர்களின் செல்வாக்கிற்கும், முஸ்லிம்கள் இதில் கலந்து கொள்வதற்கும் விரோதமாக இருந்தார். இந்தப் படுகொலைச் சம்பவம் அவருக்கு அதிக சந்தர்ப்பத்தை அளித்து விட்டது. காந்திஜியிடம் இவ்வியக்கத்தைப்பற்றிக் கூட்டிக் குறைத்துச் சொல்லவும், ஆரம்ப முதற்கொண்டு அவர் எவ்விஷயத்தை அங்கீகரிக்காமலிருந்தாரோ, அவ்விஷயத்தை ஒன்று திரட்டி

அவர் முன் கொண்டு வந்து வைத்துவிடவும் சமயம் கிடைத்தது. இதனை காந்திஜீயும் ஒப்புக்கொண்டு விட்டார். "சட்ட மறுப்பியக்கத்தை ஆரம்பித்தால், அது அஹிம்ஸா தர்மத்திலேயே நிற்கமாட்டாது" என்ற உறுதி அவருக்கு நிச்சயமாக ஏற்பட்டு விட்டது. ஆகவே, அவர் பார்டோலிக்குச் சென்று, சிவில் சட்ட மறுப்புத் திட்டத்தை ஒத்தி வைத்து விட்டார். மௌலானா ஹஸ்றத் மோஹானி ஆரம்ப முதற் கொண்டே காந்திஜீக்கு தலைமைப் பதவி அளிப்பதை எதிர்த்துக்கொண்டே வந்தார். ஆயினும், நகரா அடிக்குமிடத்தில் குருவிச் சப்தத்தைக் கேட்பவர் யார்?

சட்டமறுப்பு நின்றதன் பயன்:—சட்டமறுப்பியக்கம் ஒத்தி வைக்கப்பட்ட பிறகும் கூட, தேசத்தில் உணர்ச்சி குன்றவில்லை. இயக்கத்தை நிறுத்தி வைத்தது நல்லதல்லவென்று காந்திஜீக்கு, அகில இந்திய காங்கிரஸ் சபைகளும், மாகாண காங்கிரஸ் சபைகளும் எச்சரிக்கை செய்ய ஆரம்பித்தன. ஆயினும், சௌரி சாரா சம்பவத்தால் காந்திஜீ அதிகம் பீதியடைந்திருந்ததால், தம்முடைய முடிவைப் புனராலோசனை செய்யத் தயாராக இருக்கவில்லை. ஆயினும், ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்க ஏற்பாடு செய்தார்.

விசாரணைக் கமிட்டி:—சிவில் சட்ட மறுப்பை ஆரம்பிப்பதற்குத் தேசம் தயாராக இருக்கிறதா? இல்லையா? அவ்வாறு சட்டமறுப்புச் செய்வதற்குத் தகுந்த சக்தி இருக்கிறதா? ஹிம்சை செய்யும் உணர்ச்சி வேறு இடங்களுக்கும் பரவி இருக்கிறதா? இல்லையா? என்ற

விஷயங்களை விசாரித்து ரிப்போர்ட்டு செய்யும்படி நிய மிக்கப்பட்ட கமிட்டி இந்தியா முழுவதும் சுற்றுப் பிர யாணம் செய்து, விசாரணை செய்வதற்குள், தேசத்தி லிருந்த உணர்ச்சி அமர்ந்துவிட்டது. இவ்வியக்கம் நாளுக்கு நாள் பலஹீனமடைந்து சில மாதங்களுக்குள் இவ்வியக்கம் முற்றிலும் ஒழிந்து விட்டது.

காந்திஜீ கைது செய்யப்படல்:—இவ்விதமான வீழ்ச்சி ஏற்பட்டும் காந்திஜீ, தம்மாலானமட்டும் வேலை செய்து கொண்டே இருந்தார். அவருடைய சுற்றுப் பிரயாணங்களும், பிரசங்கங்களும் நிறுத்தப்படவில்லை. ஒரு முறை அவர் அஜ்மீரில் பிரசங்கம் செய்து சபர் மதிக்குத் திரும்பிய பின், அவரும் கைது செய்யப்பட் டார். ஆதலால், நாட்டிலிருந்த அற்ப சொற்ப உணர்ச்சி யும் அவர் சிறைப்பட்ட பின் அணைந்து விட்டது.

சுவாமி சிரத்தானந்தர் விடுதலை:—இந்த இயக்கத் தில் சம்பந்தப்பட்டு, தண்டனையடைந்து, சிறை வாசத்தை யனுபவித்துக் கொண்டிருந்த சுவாமி சிரத் தானந்தர் தம்முடைய தண்டனைக் காலம் முடிவடை வதற்கு முன்பே, திடீரென நிபந்தனையின்றி விடுதலை யடைந்தார். முஸ்லிம்கள் இவரை டில்லி ஜாமிஆ மஸ் ஜிதின் மின்பரின் மீது அமரச் செய்து, இவரது பிரசங் கத்தை ஒரு காலத்தில் வெகு ஆவலுடன் கேட்டனர். இவர் இப்படி விடுதலையடைவதற்கு யாது காரண மென்பது பின்னர் வெளியாயிற்று.

மலபார் கலகம்:—துர் அதிர்ஷ்ட வசமாக இதே காலத்தில் மலபாரிலுள்ள மாப்பிள்ளை முஸ்லிம்களிடம்

புத்துணர்ச்சியும், துணிச்சலு முண்டாயின. சர்க்காருக்கு விரோதமாகக் கலகஞ் செய்யும்படி சில விரோதிகள் தூண்டியதன்பேரில் அவர்கள் சர்க்காருக்கு விரோதமாகக் கலகஞ் செய்ய ஆரம்பித்து விட்டனர். இதனால், மாப்பிள்ளை முஸ்லிம்களுக்கும் சர்க்காருக்கு மிடையில் பெருத்த போராட்ட மேற்பட்டு, இறுதியாக நூற்றுக் கணக்கான மாப்பிள்ளை முஸ்லிம்கள் தேசப் பிரஷ்டஞ் செய்யப்பட்டனர். ஆயிரக் கணக்கானவர்கள் பல வருஷங்கள் வரை தண்டனை யடைந்தனர். அவர்களுடைய சொத்துக்கள் பறி முதல் செய்யப்பட்டன. இறுதியாக அவர்களுடைய கண்ணியமும், பொருளும், பலமும் அழிந்தொழிந்தன.

சுத்தி இயக்கம்:—சுவாமி சிரத்தானந்தர் நிபந்தனையின்றி விடுதலை யடைந்த விபரம் இதற்கு முன் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் விடுதலை யடைந்தவுடன் மல்கானாவிலுள்ள ராஜபுத்திர முஸ்லிம்களிடம் தமது பிரசாரத்தை ஆரம்பித்தார். அவர்கள் பெயரளவிலேயே முஸ்லிம்களாக இருந்தனர். இஸ்லாமியக் கொள்கைகள், இஸ்லாமியக் கட்டளைகள் ஆகியவைகளைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுந் தெரியாது. இஸ்லாத்தின் திரு கலிமாவுங் கூட அவர்களுக்கு நன்றாகத் தெரியாது. அவர்கள் மிகச் சுலபமாக சிரத்தானந்தரின் வலைக்குள் சிக்கி, சுத்தி செய்யப்பட்டு, ஹிந்து மதத்தில் சேர்க்கப்பட்டனர்.

“மல்கானா முஸ்லிம்களிற் பல்லாயிரக் கணக்கானவர்கள் சுத்தி செய்யப்பட்டு விட்டனர்; இனியும் சுத்தி

செய்யப்படுவர்'' என்ற செய்தி முஸ்லிம்களில் நெருப்பை வைத்தது போலாயிற்று. இவர்களிலும் புத்துணர்ச்சி யுண்டாயிற்று. உடனே, முஸ்லிம்களும் இதற்குப் போட்டியாக "தப்லீக்" இயக்கத்தை ஆரம்பித்தனர்.

எனவே, முஸ்லிம்களின் இருதயத்தில் சுதந்திர உணர்ச்சி அகன்றது. இந்தியாவில் சுகமே இருந்து வாழ்வதற்கான ஏற்பாட்டைச் செய்துகொள்ளவேண்டு மென்றும், சுத்தி, சங்கடன் இயக்கங்களை எதிர்த்துப் போராடுவதற்குரிய சக்திகளை தங்களில் உண்டாக்கிக் கொண்ட பிறகுதான் சுதந்திரம் வேண்டுமென்றும் எண்ணம் தோன்றிற்று. தவிரவும், பிரசார மதமாகிய இஸ்லாம் மதம் பிரசார வேலையைச் செய்யாமல் இருக் கிறது என்றும், சமுத்திரத்தைக் கடந்து செல்வது பெரும் பாவமென்றும், மதத்துக்கு மாறு செய்வதாகு மென்றும் கருதிக்கொண்டிருக்கும் ஹிந்து மதம், பிரசார வேலை செய்கிறதென்றும் முஸ்லிம்களிடம் உணர்ச்சி தோன்றிற்று.

மாறுதல் :—போட்டி போட்டுக் கொண்டு தோன் றிய இவ்வியக்கங்களின் பலனால், தேசத்தில் பெரும் மாறுதலேற்பட்டது. பாலுஞ் சீனியும்போல ஒரே இடத்தில் கூடி இருந்த ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் சண்டை போடுவதற்காக, ஓரிடத்தில் ஒன்று கூடுபவர்களாகி விட்டனர். சர்க்காருக்கு விரோ தமாக ஒன்று சேர்ந்து அணிவகுத்து நின்ற ஹிந்துக் களும் முஸ்லிம்களும், இப்பொழுது அவர்கள் ஒரு வரை ஒருவர் எதிர்த்து அணிவகுத்து நிற்பவர்களாகி

விட்டனர். முதலில் காங்கிரஸ்காரராகவும், தேச விடு தலைக்காகச் சகலத்தையும் தியாகம் செய்பவராகவு மிருந்த ஹிந்துக்கள், இப்பொழுது ஹிந்து மகாசபைக் காரர்களாக மாறிவிட்டனர். கிலாபத் இயக்கத்தில் சேர்ந்து சகலத்தையும் அற்பணஞ் செய்யச் சித்தமாக இருந்த முஸ்லிம்கள், தப்லீக் இயக்கத்திற்காகச் சகலத் தையும் துறக்க ஆயத்தமாகி விட்டனர்.

ஆனல், இங்கு ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. இந்தியாவின் சரித்திரத்தில் இவ்விஷயம் என்றும் அழி யாத ஞாபகமாக இருந்து வரும். இந்தியாவின் சுதந் திர யுத்தத்தில் பெரும்பான்மை வகுப்பைச் சேர்ந்தவர் களே முதல் முதலாகப் பிணங்கினர். ஹிந்து முஸ்லிம் களுக்கிடையில் வேற்றுமை வித்தை யுண்டு பண்ணிய வர்கள் பெரும்பான்மை வகுப்பைச் சேர்ந்தவர்களே யாவார்கள். பெரும்பான்மை வகுப்பைச் சேர்ந்தவர் களே முதல் முதலாக சுத்தி சங்கடன் இயக்கங்களை உண்டாக்கினர். அதிலும் காங்கிரஸில் சேர்ந்திருந்த பெரும்பான்மை வகுப்பினரே சுத்தி சங்கடன், இயக்கங் களில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர் என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

காங்கிரஸின் கொள்கை, அதன் திட்டம் ஆகியவை களின்படி உறுதியாக நின்ற கோஷ்டியினர் கிலாபத் கோஷ்டியினரே யாவர். இவர்கள் சுத்தி இயக்கத்தைக் கண்டோ, அல்லது சங்கடனைக் கண்டோ அஞ்சவு மில்லை, நிலை தவறவுமில்லை. தன்ஜீம், தப்லீக் இயக் கங்களைக் கண்டு மயங்கவுமில்லை. ஆனல், 1928-ம்

வருஷத்தில் தோன்றிய நேரு சுயராஜ்ய திட்டத்தைப் பார்த்துக் கோபமடைந்தனர். பொறுமைக்கும் எல்லை யுண்டல்லவா ?

கிலாபத் நிதி :—நாம் மேலே கூறிய புதிய இயக் கங்கள்தாம் தேசத்தின் சுதந்திர இயக்கம் வீழ்ச்சி யடைவதற்குக் காரணமாயின. இவ்வியக்கம் வீழ்ச்சி யடைந்தபின், தேசத்தில் வேறு வேலையில்லை. ஆகவே, கிலாபத் நிதியை சேட் சோட்டானி மோசம் செய்து விட்டார் என்று அவர் மீது தோஷங் கூறும் கூட்டம் கிளம்பிற்று. எனவே, நமது மௌலானா தண்டனை யடைந்து சிறைக் கூடஞ் சென்ற பின், தேசத்தில் இத்தகைய இயக்கங்களும், மாறுதல்களும் தோன்றின.

இருபத்துநான்காம் அத்தியாயம்

விடுதலையும் காங்கிரஸ் தலைமைப் பதவியும்

தமக்கு விதிக்கப்பட்ட இரண்டு வருஷகால தண்டனையைப் பூரணமாக அனுபவித்தபின், நமது மௌலானா ஜான்ஷீ ஜெயிலிலிருந்து விடுதலை யடைந்தார். இவர் சிறையிலிருக்கும்போதே தமது செல்வப் புதல்வி ஆமினா பேகம் நோயுற்றிருக்கும் செய்தி கிடைத்திருந்தது. ஆகவே, தமது அருமைப் புதல்விக்கு ஜெயிலிலிருந்து எழுதிய கடிதத்தில்

> "நீ தேகசுவாத்தியம் அடைவது எங்களுக்குத் திருப்திதான். ஆனால், அவனுக்கு அது திருப்தி இல்லாதிருந்தால், எங்களுக்கும் திருப்தி இல்லைதான்"

என்று கூறி இருந்தார். பின்னர், அவர் ஜெயிலிலிருந்து விடுதலை யடைந்தவுடன், டில்லியில் நடைபெற்ற ஸ்பெஷல் காங்கிரஸுக்குச் சென்று விட்டு, பவானி மலையில் சானிடோரியமில் இருந்த, தமது புதல்வியைப் பார்க்கச் சென்றார்.

விடுதலைக்குப் பின் :—நமது தலைவர் விடுதலை யடைந்தவுடன் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அளித்த செய்தியில் "நான் சிறிய ஜெயிலிலிருந்து வெளியேறி, பெரிய ஜெயிலுக்கு வந்திருக்கிறேன். நான் காந்திஜீயை விடுதலை செய்விப்பதற்காக ஏரவாடா ஜெயிலின் சாவியைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அந்தச் சாவி

யை அடைவது சுயேச்சை யடைவதைப் பொறுத்திருக்கிறது" என்று கூறினர்.

காங்கிரஸ் தலைமைப் பதவி:—இவ் வருஷத்தில் மாகாண காங்கிரஸ் கமிட்டிகளெல்லாம் மௌலானாவைக் காங்கிரஸ் மகா நாட்டிற்குத் தலைவராக ஏக மனதாகத் தெரிந்தெடுத்தன. இவர் தெரிந்தெடுக்கப் பட்டதற்கும், காங்கிரஸ் மகா நாடு கூடியதற்கு மிடையில் வெகு சொற்ப காலமே இருந்த போதிலும், அவர் மிகவும் திறமையான அக்கிராசனப் பிரசங்கம் தயார் செய்திருந்தார். அப்பிரசங்கம் காங்கிரஸ் பிரசங்கங்களில் மிகவும் முக்கியமான அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

மௌலானா அவர்கள் காங்கிரஸுக்குத் தலைமை வகித்திருந்த காலம் மிகவும் குழப்பமான காலமாக இருந்தது. ஹிந்து மகா சபை, சுத்தி, சங்கடன், தப்லீக், தன்ஜீம் ஆகிய இயக்கங்கள் இக்காலத்தில் மிகப் பலமாக வேலை செய்துகொண் டிருந்தன. இவைகளின் முரண்பட்ட வேலைகளினல் சுதந்திரம் என்ற முக்கிய ஸ்தலம் மிகத் தூரத்திலாகிக் கொண்டிருந்தது. காங்கிரஸின் நோக்கம் வெற்றி பெறும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருந்தது. காங்கிரஸுக்கு வெளியிலுள்ள நிலைமை இவ்வாறிருககை, காங்கிரஸுக்குள்ளிலேயே மாறுதல் வேண்டா கக்ஷியென்றும், சுயராஜ்ய கக்ஷியென்றும் பிளவு ஏற்பட்டிருந்தது. கவர்ன்மெண்டாரிடம் சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல், காங்கிரஸ் விதித்த நிர்மாணத் திட்டத்தைப் பலமாக

நிறைவேற்றவேண்டும் என்று மாறுதல்வேண்டா கக்ஷி யினர் விரும்பினர்.

ஒரு காலத்தில் காங்கிரஸ் ஆணைக்குக் கட்டுப்பட்டு அரும் வேலைகள் செய்த மற்றொரு கூட்டத்தாரான சுயராஜ்ய கக்ஷியார், சட்டசபைகளைக் கைப்பற்றி, அரசாங்கத்தின் வேலைகளுக்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்று விரும்பினர். இக்கக்ஷியில் பண்டித மோதிலால் நேரு, லாலா லஜபதிராய், ஸி. ஆர். தாஸ் போன்ற தலைவர்கள் சேர்ந்திருந்தனர்.

இவ்விதமான குழப்பமான சமயத்தில் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி, காங்கிரஸ் மகா நாட்டிற்குத் தலைமை வகித்து, அதை வெற்றியுடன் நடத்துவது மிகச் சிரமமான காரியமாகவே இருந்தது. அப்படி யிருந்தும், அவர் இவ்விரு கக்ஷியினருக் கும் விஷயத்தை விளக்கிக்கூறி, காங்கிரஸைவிட்டு வெளியேறவிடாமல் இரு கக்ஷியினரையும் தடுத்து வைத்தார்.

காந்திஜீயின் விடுதலை:—காந்திஜீ 6 வருஷ காலத் திற்கு சிறைவாச மனுபவிக்க வேண்டுமென்று தண்டிக் கப்பட்டிருந்தார். ஆனால், எதிர்பாராத வண்ணமாக கடும் வியாதியில் அவர் பீடிக்கப்பட் டிருந்ததால், தண் டனைக்காலம் முடிவடைவதற்குள் விடுதலை யடைந்தார். இவர் எதிர்பார்த்ததுபோல் மாறுதல் வேண்டா கக்ஷியின் கொள்கையையே பலமாகக் கடைப் பிடிப்பவ ராகவும், சட்டசபைகளுக்குச் சென்று, அரசாங்க வேலை களில் முட்டுக்கட்டை போடவேண்டுமென்ற க்கக்ஷியின்

கொள்கைகளை அதிகம் வெறுப்பவராகவும் இருந்தார். நமது தலைவர் மௌலானு அவர்களும் இதே விதமாக மாறுதல் வேண்டா கக்ஷியைச் சேர்ந்தவராகவிருந்தார். ஆயினும், சுயராஜ்ய கக்ஷியினரின் நோக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கவில்லை. அவர்களைக் காங்கிரஸை விட்டு வெளியேற்ற விரும்பவில்லை. காந்திஜீயின் அபிப்பிராயத்தை ஆதரிக்கும் மாறுதல்வேண்டா கக்ஷிக்காரர்கள் சுயராஜ்ய கக்ஷிக்காரர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தபோது, நமது தலைவர் மௌலானு மிகச் சாந்தமாக இருந்து, விஷயத்தை முற்றவிடாமல் தடுத்ததுடன், சுயராஜ்ய கக்ஷிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் விடவில்லை. பிறகு, இவர் காந்திஜீயின் ஆசிரமத்திற்குச் சென்றபோது, இவர் இப்படி நடந்துகொண்டதைப்பற்றி அங்குள்ளவர்கள் பலமாக ஆக்ஷேபித்தனர். அவர்களுக்கும் நமது மௌலானு சாந்தமான முறையில் பதில்கூறி, அவர்களைச் சமாதானப்படுத்தி, இரு கக்ஷியின்பாலும் தம்முடைய அனுதாபத்தைக் காண்பித்து வந்தார்.

கிலாபத் கமிட்டியின் முயற்சி:—காங்கிரஸ் மகா சபையிலுள்ள மாறுதல் வேண்டா கக்ஷிக்கும், சுயராஜ்ய கக்ஷிக்கு மிடையில் ஒப்பந்தம் ஏற்பட்டு, ஜனங்கள் காங்கிரஸ் சுயராஜ்ய கக்ஷியின் டிக்கட்டின் பேரில் மாகாண சட்டசபைகளுக்கும், இந்தியா சட்டசபைக்கும் அபேக்ஷகர்களாக நின்றபோது, கிலாபத் கமிட்டியின் சார்பாகவும் மாகாண சட்ட சபைகளுக்கும், இந்தியா சட்ட சபைக்கும் அபேக்ஷகர்களை நிறுத்த வேண்டும்

என்று பஞ்சாப் மாகாண கிலாபத் கமிட்டியும், அஹ்ரார் சபையும் வற்புறுத்தின.

நமது தலைவர் மௌலானா அவர்கள் இதனைப் பலமாக எதிர்த்து, விஷயத்தை நாம் நன்கு ஆராய்ந்து, அதிலுள்ள குறைகளையும் கெடுதிகளையும் நன்கு உணர்ந்து, வேண்டாம் என்று தள்ளிவிட்ட பின், காங்கிரஸ் மகா சபையைப் பின்பற்றி, நாம் அதைத் திரும்பச் செய்வது புத்திசாலித்தனமாகாது என்று அறிவுறுத்தினார். கடைசியாக "கிலாபத் கோஷ்டியினர் தங்களது சொந்த ஹோதாவில் சட்ட சபைகளுக்குச் செல்லலாம். ஆனால், கிலாபத் கமிட்டியின் பெயரால், கிலாபத் கமிட்டியின் டிக்கட் பெற்று, சட்ட சபைகளுக்கு அபேக்ஷகர்களாக நிற்கக்கூடாது" என்று அனுமதித்தார். காங்கிரஸைப் பின்பற்றும் உணர்ச்சியால் கிலாபத் கமிட்டியையும் இந்தத் தவறைச் செய்யவிடாமற் றடுத்தது நமது தலைவர் அவர்களின் ஒப்பற்ற ஊழியமாகும். அதிக காலம் தண்டனை யடைந்தவர்கள் அரசாங்கத்திடம் அனுமதி பெற்று, சட்ட சபைக்கு அபேக்ஷகராக நிற்க முடியும். மௌலானா அவர்கள் சட்ட சபைக்கு அபேக்ஷகராக நிற்பதாகப் பத்திரிகையில் பிரகடனப் படுத்தி விடுவது ஒன்றே, அவருக்கு அனுமதி பெறுவதற்குப் போதுமானதாக இருந்தது. அவ்வாறிருந்தும், அவர் சட்ட சபைக்கு அபேக்ஷகராக நிற்க முன் வராமற் றமது கொள்கையில் கடைசி வரை உறுதியாக இருந்தார்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

சோர்வு காலம்

நமது தலைவர் மௌலானு சிறையிலிருந்து விடுதலையடைந்த காலத்தில் தேசம் அடைந்திருந்த நிலைமையை ஒருவாறு சுருக்கமாகக் கூறி இருக்கிறோம். இவ்வித நிலைமைக்கு தேசம் வந்ததற்கு முக்கிய காரணம், தேச மக்கள் கடைப்பிடித்தொழுகத் தக்க திட்டமெதுவும் அது சமயம் இருக்கவில்லை. இது தான் இந் நிலைமைக்கு முக்கியமான காரணமாகும். பொது ஜனங்களின் கவனத்தைத் தன் பக்கல் ஈர்த்துக்கொள்ளத் தக்க திட்டமில்லாததால், அவர்கள் ஹிந்து முஸ்லிம் பிளவுக்கு இடங்கொடுத்து விட்டனர். காங்கிரஸ், கிலாபத் என்ற எண்ணத்திலேயே இருந்த ஜனங்கள் சங்கடன், தப்லீக் என்ற கவலையில் இறங்கி விட்டனர்.

இச்சோர்வு காலத்தில் நமது மௌலானு மிக உறுதியாக இருந்து, இவ் வியக்கங்களனைத்தையுஞ் சமாளித்தார். அவர் இஷ்டப்பட்டிருந்தால் தப்லீக் இயக்கங்களில் சேர்ந்தோ, அல்லது காங்கிரஸை எதிர்த்தோ, தேசத்தில் தமக்கொரு அந்தஸ்தைத் தேடிக் கொள்ளலாம். ஆனல், அவர் பொதுஜன அபிப்பிராயத்தைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யவில்லை. சமூகத்துக்கு நன்மை பயக்கக் கூடியது எது என்று அவர் கருதினரோ அதனையே அவர் செய்துகொண்டிருந்தார்.

துணைவர்கள் பிரிதல்—நமது மௌலானுவின் இப் போக்கினல், அவருடைய சக ஊழியர்கள் ஒவ்

வொருவராக அவரை விட்டுப் பிரிந்தார்கள். அத்துடன் நில்லாமல் அவருக்கு எதிர்க் கக்ஷியிலும் சேர்ந்தனர். பண்டிட் மோதிலால் நேரு வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். ஸி. ஆர். தாஸ் சுயராஜ்ய கக்ஷிக்கு சர்வாதிகாரிபோல் வீற்றிருந்தார். அலகாபாத், லக்ஷ்மணபுரி முதலிய இடங்களிலுள்ள துணைவர்கள் வக்கீல் தொழிலிலும், பாரிஸ்டர் தொழிலிலும் ஈடுபட்டனர். இஸ்லாம் மத அறிஞர்களான உலமாக்கள் கூட்டத்தைச் சேர்ந்த பலர் மௌலானாவை விட்டுப் பிரிந்து தன்ஜீம், தப்லீக் இயக்கங்களில் முக்கிய அங்கம் பெற்றிருந்தனர். மூன்றாவதாக டாக்டர் கிச்லு, தன்ஜீம் இயக்கத்தைப் போட்டியாக ஏற்படுத்தினார். மௌலானா அப்துல் மாஜித் பதாயூனி, மௌலானா நிஸார் அஹ்மது முதலிய பெரியார்கள் கிலாபத் இயக்கத்தை விட்டுப் பிரிந்து தன்ஜீம் இயக்கத்தில் சேர்ந்தனர்.

மௌலானா அவர்கள் இஷ்டப்பட்டிருந்தால், மிஸ்டர் தாம்பே, ஸர். சுரேந்திரநாத் பானர்ஜீ, பிபின் சந்திரபால், ஸர். சங்கரன் நாயர் போன்றவர்களின் போக்கை அநுசரித்து அரசாங்கத்தில் தமக்குச் செல்வாக்கை உண்டாக்கிக்கொள்ள முடியும். இப்படிப் பல வழிகளிலும் தமக்குச் செல்வாக்கையும், கௌரவத்தையும் உண்டாக்கிக்கொள்ள இடமிருந்தும், அவர் அம்மாதிரி ஒன்றும் செய்யாமல், காங்கிரஸில் உறுதியாக நின்று, செல்வாக்கிழந்த மாறுதல் வேண்டாக் கோஷ்டியில் ஒருவராகத் திகழ்ந்தார்.

29

இந் நிலைமையைக் குறித்து அவர் தமது அபிப்பராயத்தைப் பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"இரண்டு வருஷம் வரை இந்தியா காட்டிய சிரத்தை பிரான்சு தேசத்துப் புரட்சியைப் புதுப்பிப்பதாக இருந்தது. இது ஆங்கிலம் கற்றவர்கள், மௌலவிகள், பண்டிதர்கள் ஆகிய அனைவரிலும் 30 அல்லது 40 ஆயிரம் சிறிய பெரிய ஹிந்து, முஸ்லிம், சீக்கிய தலைவர்களை சிறைக்கூடத்திலடைத்துவிட்டது. பொது ஜனங்கள் தலைவனில்லாச் சேனையைப் போலாகி விட்டனர். ஆகவே, அரசாங்கத்தின் நரிகளும், தலைமைத்தனம் மங்கிப்போயிருந்த லீடர்களும் வெளிக் கிளம்பி, சிறைச்சாலைகளில் அடைபட்டுக்கிடந்த அவர்களின் உண்மை வழிகாட்டிகளின்மீது அவர்களுக்குக் கெட்ட எண்ணம் உண்டாகும்படிச் செய்து, அவர்களை வழி தவறச் செய்ய ஆரம்பித்துவிட்டனர். ஒரு பக்கம் சுத்தி, சங்கடன் இயக்கங்கள் பலம் பெற்றன. சோதனைக் காலத்தில் மூலைக்குள் உட்கார்ந்திருந்தவர்கள் இப்போது பெரும்பாலும் காணப்பட்டனர். இவர்கள் தாம் இப்பொழுது பெருந்தலைவர்களாயினர். இவர்களுக்கு ஜெயகோஷங்கள் கிளம்பின. இவர்களது கழுத்தில் மலர்மாலைகள் விழுந்தன. ஒத்துழையாமைச் சோதனையில் சிறைசென்றவர்கள் வெளிவந்து இவர்களைச் சீர்திருத்த எவ்வளவோ முயன்றனர். ஆனால், அராஜகம் தலைவிரித்தாடுங் காலமாக இருந்தது. ஒவ்வொருவரும் "லீடரா"கவிருந்தனர். தலைவர்கள் ஏராளமாக இருந்தனர். அவர்களைப் பின் பற்றுபவர்

களைக் காண்பது மிகவும் கஷ்டமாகிவிட்டது. யாரைத் தலைவரென்று சொல்வது என்று தெரியாமல் பொது ஜனங்கள் திண்டாடினர். ஒவ்வொருவரும் வெவ்வேறு பாதையில் பொது ஜனங்களை அழைத்துச் செல்ல விரும்பினர். ஒரு தலைவர் இன்னொரு தலைவரை வழிப் பறி திருடன் என்று கூற ஆரம்பித்தனர். எல்லாரும் தனித்தனியே விலகி நின்றனர். மகாத்மாஜீ வாய் பொத்திக் கொண்டார். எங்களுடைய சில துணைவர்கள் வாய் பொத்தி மட்டும் இருக்கவில்லை. அவர்களும் ஒரு நகராவை எடுத்துக்கொண்டு நகரா அடிப்பவர்களாகி விட்டனர். ஆனால், நாங்கள் வாய்பொத்தி இருக்கவு மில்லை. புதிய ஒரு வழியை எடுத்துக்கொள்ள ஆரம் பிக்கவுமில்லை. எங்களது பிரசங்கத்தைக் கேட்க வருப வர்கள் குறைந்துவிட்டார்கள் என்பதை நாங்கள்கொஞ்ச மும் லக்ஷியம் செய்யவில்லை. உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும்ஒரே பந்தத்துவத்தில்இணைக்கப்படுவதற் காக, மற்றொரு முறை கிலாபத்தே ராஷிதாவின் பக்கல் அவர்களைத் திருப்பி விடவும், கிராமம், நகரம், மஹல்லா, ஜில்லா, மாகாணம், தேசம், கண்டம் ஆகிய எல்லா இடங்களிலும் கிலாபத் கமிட்டிகளை ஏற்படுத்தவும், ஐரோப்பாவின் ஏகாதிபத்தியம் அல்லது இம்பீரியா லிஸமின் வேரைப் பிடுங்கி எறியவும், இந்தியாவை மட்டுமில்லாமல் பொதுவாக கீழ் நாடு முழுவதையும், சிறப்பாக இஸ்லாமிய நாடுகளை, அதன் பிடியிலிருந்து விடுவித்துச் சுயேச்சை யுள்ளனவாக்க விரும்பு கிறோம்.”

இதுதான் மௌலானா முஹம்மது அலியின் உண்மைத் திட்டம். அதை அவர் தாமே வெளிப் படுத்திக் கூறிவிட்டார். வாழ்நாள் முழுவதிலும் தம்முடைய இந்தத் திட்டத்தின்படியே உழைத்து வந்தார். அவரில் எவ்வித மாறுதலு மேற்படவில்லை. ஆனால், அவரைச் சுற்றியுள்ள நிலைமைகள் அவரை நிர்ப்பந்தப்படுத்தி இத் திட்டத்தை மேல் நடத்துவதற் காக, தமது சகோதரர்களிடத்திலேயே போர் செய் யவும், அவர்களுடன் சமாதானமாக இருப்பதற்குரிய வாசலை அடைத்துக் கொள்ளவும் செய்து விட்டது.

இருபத்தாறும் அத்தியாயம்

காங்கிரஸ் அபிமானம்

காங்கிரஸ் அபிமானிகளிடம் இப்பொழுது சுதந்திர உணர்ச்சி உண்டாகி இருந்தது. ஆனால், சத்தி சங்கடன் இயக்கங்கள் தோன்றி நிலைமை வேறு விதமாக மாறிவிட்டது. ஹிந்து முஸ்லிம்களுக்கிடையில் கலகத்தை மூட்டி விடுபவர்களுக்குத் தலைமைப் பதவி கிடைப்பதும், ஒற்றுமை, ஐக்கியம் ஆகியவைகளைப் போதிப்பவர்களுக்கு அவமதிப்பும், கேவலமும் உண்டாகுவதுமாக இருந்தது. நெருக்கடியான இக் காலத்தில் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி தமது நோக்கத்தைவிட்டுக் கொஞ்சமும் பிரளாமல் உறுதியாக நின்றார்.

இந்தியாவிலுள்ள தப்லீக் சபைகள் மௌலானாவை அழைத்தன. அவரும் தப்லீக் மைதானத்தில் ஈடுபட்டுழைக்க வேண்டுமென அவருடைய நண்பர்கள் அவரை நிர்ப்பந்திக்க முயன்றனர். ஆனால், அவர் அதில் பிரவேசிக்கவில்லை. அவர் மத பக்தராக இருந்தும் ஏன் அம்முறையில் அவர் ஈடுபடவில்லை? என்ற வினா இவ்விடத்தில் உண்டாகிறது.

அவர் இதில் தலையிடாமலிருந்ததற்குக் காரணம் என்னவெனில், அது சமயம் வெளியிடப்பட்ட தப்லீக் பிரசுரங்களும், சுவரொட்டி விளம்பரங்களும், தப்லீக் ஸ்தாபனங்களும் இருந்த முறை, கண்ணியமுள்ள முஸ்லிம்களின் அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரியில் இருக்க

வில்லை. தப்லீகின் அசல் கருத்து விலகிச் சென்று கொண்டே இருந்தது. வெறுங் கூச்சலும், தலைமைத் தனத்துக்கு ஆசைப்பட்டவர்களின் போட்டா போட்டியுமே அங்கு நிறைந்திருந்தன. ஆகவே, இக் காரியங்களை விட்டு நமது மாபெருந் தலைவர் விலகி இருந்தார். அல்லாமலும், வேறொருவருடன் போட்டிக்காக ஆரம்பிக்கப்பட்டு, அந்த முறையில் செய்யப்பட்டு வந்த தப்லீகை அவர் விரும்பவில்லை. ஆனால், அம்பாலாவில் ஏற்படுத்தப்பட்ட தப்லீக் சபை மௌலானா அவர்களுக்குத் திருப்தியான முறையில் நடைபெற்று வந்தது. அதற்கு அவர் பல முறைகளிலும் உதவிபுரிந்து வந்தார். அச் சபையின்பால் எப்பொழுதும் அவர் அபிமானங்கொண்டிருந்தார்.

பெல்காம் கிலாபத் மகாநாட்டுத் தலைவர்:—பெல்காமில் நடைபெற்ற கிலாபத் மகாநாட்டிற்கு, கராச்சியில் தண்டனை யடைந்தவர்களில் ஒருவரான டாக்டர் கிச்லு தலைமை வகித்தார். அச்சமயம் அவர் ஹிந்துக்கள்பால் அதிக வருத்தங் கொண்டிருந்தார். ஆகவே, அவர் "தன்ஜீம்" என்ற துவஜத்தைத் தாங்கி முஸ்லிம்களை ஒன்று சேர்த்து, ஹிந்துக்களுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதில் முனைந்து நின்றார்.

அக்காலத்தில் கூடிய மகா நாடுகளில் அக்கிராசனப் பிரசங்கங்கள் ஜனங்களைத் தூண்டி விடுவனவாகவும், உஷ்ணமானவைகளாகவும் இருந்தன. ஹிந்து மகாசபை, ஆரியா லீக், தன்ஜீம் மகா சபை, முஸ்லிம் லீக் இவைகளின் பிரசங்கங்கள் பெரும்பாலும் இம்மாதிரியிலேயே

இருந்துகொண் டிருந்தன. பெல்காம் கிலாபத் கான்ப ரன்சுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்த தலைவரும் இதே உணர்ச்சி யுள்ளவராக இருந்தார். ஆதலின், அவரது பிரசங்கமும் கடின வார்த்தைகளால் அலங்கரிக்கப்பட் டிருந்தது. ஹிந்துக்களின் துவேஷமான போக்கைக் கண்டித்து, முஸ்லிம்களும் இவர்களுக்குப் போட்டியாக முன்வர வேண்டுமென்று தூண்டப்பட் டிருந்தது. இவ் விஷயத்தைச் சாந்தமான வார்த்தைகளால் கூறி இருந்தால், நன்ருக இருந்திருக்கும். ஆனல், கடினமான முறையில் அதனைக் கூறி இருந்தார்.

நேரம் மிகக் குறைவாக இருந்தது. மறுநாட் காலையில் அக்கிராசனப் பிரசங்கம் படிக்கப்பட வேண் டும். நமது மௌலானு கிலாபத் கான்பரன்சை யுத்த களமாக ஆக்க இஷ்டப்படவில்லை. ஆதலால், நித்திரை செய்யாமல், இரவு முழுதும் விழித்திருந்து, அவ்வக்கிரா சனப் பிரசங்கத்தில் இருந்த கடும் பதங்களை அகற்றினுர்.

கோஹாட் கலகம் :—காந்திஜீக்கும், அவரது ஜெனரலான மௌலானு ஷௌகத் அலிக்கும் அபிப் பிராயபேத மேற்பட்டதில் கோஹாட் ஹிந்து முஸ்லிம் கலகம்தான் முதல் சம்பவம். ஹிந்துக்கள் பொதுவாக வும், ஹிந்துக்களது பத்திரிகைகள் முக்கியமாகவும் அலி சகோதரர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய் தது இதுதான் முதல் தினமாகும். கோஹாட்டில். ஹிந்து முஸ்லிம் கலகம் ஏற்பட்டது. ‘முஸ்லிம்கள் தாம் அக்கிரமஞ் செய்தனர்’ என்பது ஹிந்துக்களின்

வாதம். 'ஹிந்துக்கள்தான் முதல் முதலாக விஷமஞ் செய்தனர்' என்பது முஸ்லிம்களின் தாவா.

இதனை விசாரிப்பதற்காக காங்கிரஸ் மகாசபை ஒரு கமிட்டியை நியமித்தது. இக்கமிட்டியில் காந்திஜீயும், மௌலானு ஷௌகத் அலியும், இதரர்களும் அங்கத்தினர்களாக இருந்தனர். ஆனுல், இக் கமிட்டியினரை கோஹாட் செல்லவிடாமல் கவர்ன்மென்டார் தடுத்துவிட்டனர். ஆகவே, விசாரணைக் கமிட்டி தனது விசாரணையை ராவல்பிண்டியிலேயே நடத்திற்று. முஸ்லிம்கள் இக்கமிட்டியின் முன் சாக்ஷியம் சொல்ல வரவில்லை. ஒருவர் இருவர் மட்டிலும்தான் வந்தனர். ஹிந்துக்களில் பெருங்கூட்டத்தினர் சாக்ஷியங் கூறினர். ரிப்போர்ட் பிரசுரமானபோது காந்திஜீ முஸ்லிம்களைக் குற்றஞ் சுமத்தினுர். மௌலானு ஷௌகத் அலி இக்குற்றச் சாட்டை ஒப்புக்கொள்ள மறுத்து, இரு கக்ஷியினரும் சமமான முறையிலும், ஒப்புக்கொள்ளத் தக்க முறையிலும் சாக்ஷியங்கூறவில்லை என்று கூறினுர். காந்திஜீ இந்த அபிப்பிராய பேதத்தைக் கௌரவமாகச் சகித்துக் கொண்டார். ஷௌகத் அலி நேர்மையுடன் அபிப்பிராய பேதங் கொண்டார். ஆனுல், ஹிந்து பத்திரிகைகள் தீ கொளுத்திவிட்டன.

மௌலானுவின் கருத்து:—வகுப்புத் தலைவர்கள் தங்கள் வகுப்பு குற்றமற்றதென்றும், எதிர் கக்ஷியினர் தான் குற்றவாளிகள் என்றும் கூறி வந்தனர். இதனுல், இரு சமூகத்திலும் வேற்றுமையும், பிளவும் அதிகப்

படுவதற்கான வழியே மிகுந்திருந்தது. ஆதலால், நமது தலைவர் முஹம்மது அலி காந்திஜீ, மௌலானா ஷௌகத் அலி ஆகிய இருவருடைய அபிப்பிராயத்தையும் ஆதரிக்காமல், மூன்றாவது வழியொன்றைக் கூறினார். அதாவது இரு சமூகத் தலைவர்களும் தங்கள் தங்கள் சமூகத்தாரைக் கண்டித்து அடக்க வேண்டும் என்று கூறினார். இச்சம்பவம் நிகழ்ந்தபிறகு பஞ்சாப் மாகாண கிலாபத் கான்பரன்சு நடைபெற்றது. அக்கான்பரன்சில் மௌலானா அவர்கள் பிரசங்கம் செய்தபோது,

> "ஒவ்வொரு சமூகமும் பிறசமூகத்தாரின்மீது குற்றஞ் சாட்டுவதற்கு இது நேரமல்ல. ஒவ்வொருவரும் தத்தம் சமூகத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டித்துணர்த்துவதுதான் உசிதமானது. ஆதலால், கோஹாட் ஹிந்து முஸ்லிம் கலகத்தில் முஸ்லிம்கள் மீது எவ்வளவு பொறுப்பு ஏற்படுகிறதோ அந்தப் பொறுப்புக்காக நான் அவர்களைக் கண்டிக்கிறேன்"

என்று கூறினார். இவ்வொரு சமயத்தில் மாத்திரம் இவ்வித அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அநேக சந்தர்ப்பங்களில் நமது தலைவர் இதே விதமான அபிப்பிராயத்தையே தெரிவித்து வந்தார். இதனால், மௌலானா அவர்களுக்கு முஸ்லிம்களிடம் செல்வாக்குக் குறைந்துகொண்டே வந்தது. ஹிந்துத் தலைவர்கள் இப்படிப்பட்ட தருணங்களில் மௌனம் சாதித்து வந்தார்கள். மௌனம் சாதிக்காமல் ஏதேனும் அபிப்பிராயங் கூறுவதாக இருந்தால், முஸ்லிம் சமூகத்தின்மீதுகுறை கூறுவதையே தங்கள் தொழிலாகக்கொண்டிருந்தார்கள்,

சீதிலால் தர்மசாலே மகாநாடு :— 13-4-1925-ஆ இரவில் தேசிய வாரம் சம்பந்தமாக சீதிலால் தர்மசாலே யில் காங்கிரஸின் சார்பாக ஒரு மகாநாடு நடைபெற்றது. கூட்டத்திற்கு மிகச் சொற்ப ஜனங்களே வந்திருந் தனர். அதில் நமது தலைவர் முஹம்மது அலி பிர சங்கம் செய்தபோது,

"இன்றைய கூட்டத்திற்கு மிகவும் சொற்ப ஜனங்களே வந்திருக்கின்றனர். தங்கள் கொள்கை யில் அசையாத உறுதியுள்ளவர்கள் இவ்விதமான அயர்வைக் கண்டு மனந்தளர்ந்து விடமாட்டார்கள். தங்களுடைய கொள்கையும், அபிப்பிராயமும் சரி யென மதிக்கும்வரை அவர்கள் தங்களது கொள் கையில் உறுதியாக இருப்பார்கள். சுயேச்சை இயக்கத்தில் இன்று ஏற்பட்டுள்ள அயர்வும் சோர் வும் புதிய சம்பவமல்ல. எல்லா தேசங்களிலும் சுயேச்சை இயக்கங்களுக்கு இப்படிப்பட்ட நிலே மை ஏற்பட்டுத்தான் இருக்கிறது"

என்று கூறி தமது உறுதியை வெளியிட்டார்.

மோதிலால் நேரு :— நமது தலைவர் மௌலானா அவர்கள் தமக்கும், மோதிலால் நேருவுக்குமிடையி லுள்ள அபிப்பிராய பேதத்தைப்பற்றிப் பின் வருமாறு கூறி இருக்கிருர் :—

"முதலாவதாக அவர் மகாத்மா காந்தி சிறை யில் இருந்த காலத்தில் அவருக்கு விரோதமாகக் கலகஞ் செய்து, காங்கிரஸை இரண்டு துண்டாக்கி விட்டார். இரண்டாவதாக காங்கிரஸுக்கு விரோத

மாகக் கலகஞ் செய்த லாலா லஜபதிராயின் உதவியைப் பெறுவதற்காக எல்லைப்புற மாகாணம், சுயராஜ்ய கக்ஷி ஆகிய இரண்டிலும் முஸ்லிம்களுக்கிருந்த பாத்தியதைகளையும், உரிமைகளையும் அபகரிப்பதற்கு இடங்கொடுத்து, சத்தியத்தின்மீது உறுதியாக நிற்கவில்லை. இதுதான் எனக்கும், அவருக்குமிடையில் பேதகம் ஏற்பட்டதற்குக் காரணமாக இருந்தது"

மௌலானா அவர்களின் இவ்வியாசம், 1924-ம் வருஷத்தில் இந்தியா சட்டசபையில் எல்லைப்புற மாகாணத்திற்கு இதர மாகாணங்களுக்கிருக்கிற சுய உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கொண்டுவரப் பட்ட தீர்மானத்திற்கு விரோதமாக மோதிலால் நேரு முயற்சி செய்தபோது எழுதப்பட்டது.

முஸ்லிம் அல்லாதாரின் பத்திரிகை :—நமது தலைவர் மௌலானா அவர்களை ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறி, எப்பொழுதும் குறைகூறி எழுதிவருவதையே தனது தொழிலாகக் கொண்ட முஸ்லிம் அல்லாத பத்திரிகை ஒன்று, காங்கிரஸைவிட்டு ஜனங்கள் விலகிக் கொண்டிருந்தபோது,நமது தலைவர் அப்படிச்செய்யாமல் தம்முடைய சம்பந்தங்களைக் காங்கிரஸுடன் இன்னும் அதிகமாகப் பலப்படுத்திக் கொண்டிருந்ததைக் கண்டு பின் வருமாறு எழுதிற்று:—

"இன்று, ஒத்துழையாமை இயக்கம் பல ஹீனமாகிவிட்டதன் காரணமாக இந்தியாவின் ராஜீயவானில் மகாத்மா காந்தியுடையவும், அவ

ரது துணைவர்களினுடையவும் துவஜம் உயராம லிருந்து கொண்டும், சுத்தி, தப்லீக் இயக்கங் களின் தற்போதைய கார்மேகங்கள் இந்தியாவைச் சூழ்ந்துகொண்டு மிருந்தபோதினும், நமது தேசத் தின் கண்ணியம் மிகுந்த தலைவர் மௌலானா முஹம்மது அலியின் திறமை, உண்மை, அந்த ரங்க சுத்தி, தேசிய ஊழியம் ஆகியவைகளின் ஞாப கம், இந்தியாவில் வாழும் ஜனங்களின் உடலில் சுதந்திரத்தின் ரத்தம் ஒரு சொட்டு இருக்கும் வரை, ஜனங்களின் இருதயத்தில் என்றும் ஞாபக மாக இருந்துவரும்"

ஒரு முக்கியமான அபிப்பிராய பேதம்:—இந்திய முஸ்லிம்களின் பிரபல கவிச்சக்கிரவர்த்தியும், பஞ்சாப் மாகாணத்திலுள்ள தலைவருமான ஒருவர் பஞ்சாப் சட்டசபையில் பேசியபோது, ஒருமுறை "நான் ஹிந்து முஸ்லிம் உத்தியோகஸ்தர்களுக்கு பதிலாக ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை வரவேற்கின்றேன்" என்று கூறினர். இவ்வபிப்பிராயத்தை மௌலானா அவர்கள் எதிர்த்துத் தமது "ஹம்தர்த்" பத்திரிகை யில் பிரசுரித்த தலையங்கங்களில்,—

"சிறுபான்மையினருக்கு அநீதி செய்யாதீர்கள். அவர்களை இணக்கப்படுத்திக் கொள்ளாத வரையில் நீங்கள் சுயராஜ்யம் அடையமுடியாது. சிறுபான்மை யினரை ஒழித்துவிடவேண்டும் என்றெண்ணுவது முட்டாள் தனம் என்பதுமட்டுமில்லாமல், பைத்தியக் காரத்தனமுமாகும் என்று ஹிந்துக்களுக்கு அறி

வுறுத்த முயற்சி செய்வதுதான் இன்று நமக்கேற்பட்டுள்ள வியாதிக்குச் சரியான சிகிச்சையாகும் என்பதை அவர் உணரவில்லை.

முஹம்மதுப்னுகாஸிம்(றஹ்)ஒரு சில முஸ்லிம்களை அழைத்துக்கொண்டு சிந்தில் பிரவேசித்தபோது, அவர்களைக் கருவறுத்துவிட நல்ல சந்தர்ப்ப மிருந்தது. நீங்கள் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டீர்கள் மஹ்மூது கஜ்னவீ (றஹ்) 17 முறை இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். இந்தியாவின் பல பாகங்களிலும் ஜெயபேரிகை முழக்கிக்கொண்டிருந்தார். அவரிடம் சில ஆயிரம்பேர்களைக் கொண்ட போர்வீரர்கள் தானிருந்தனர். சிறு பான்மையோரைக் கருவறுப்பதற்கு அப்பொழுதும் நல்ல தருணமிருந்தது. அந்தச் சமயத்தில் நீங்கள் அப்படிச் செய்யவில்லை. அவருக்குப் பின், ஷஹாபுத்தீன் கோரி வந்தார். அந்தச் சமயத்தையும் நீங்கள் தவரவிட்டுவிட்டீர்கள். அடிமைகளின் குடும்பம்கூட இங்கு அரசு செலுத்திற்று. அவ்வரசாங்கத்தையும் நீங்கள் அங்கீகரித்துக்கொண்டீர்கள். பிறகு, அக்கிரமஸ்தர்களுக்குப் பயந்து, ஓட்டமெடுத்த பாபர் இந்தியாவுக்கு வந்தார். நீங்கள் உங்களது வீடு வாசலனைத்தையும் அவருக்குக் கொடுத்து விட்டீர்கள். அவருடைய புதல்வரை இங்கிருந்து நீங்கள் வெளியேற்றினீர்கள் என்று கூறமுடியாது. அவருடைய சகோதரர்கள் அல்லது பட்டாணியர்கள்தான் அவரை வெளியேற்றினார்கள். அந்தப் பட்டாணியர்களின் கையைவிட்டு அரசாங்கம் மாறிற்று என்றால், உடனே அது மறுபடியும்

ப்பருடைய மகன் கையிலேயே வந்தது. அதற்குப் பிறகு, பனியாக்களும், பயிர்க்காரர்களும் இத்தேசத்தர சாங்கத்தை அந்த மொகலாயர்களின் கையிலிருந்து பிடுங்கிக் கொள்ள முடியவில்லை. ராணசாங்காவைப் போன்ற ராஜபுத்திரர்கள் இவர்களை மிகைத்திருந்தார் களென்றால், அக்பர் என்ற மற்றொரு மொகலாயர், இத் தேசத்தை மறுபடியும் ஆட்சி செய்தார். இஸ்லாத் திற்கு கிட்டத்தட்ட ஒத்தவர்களாக இருந்த சீக்கியர் களை, நீங்கள் மொகலாயருக்கு விரோதமாகத் தூண்டி விட்டீர்கள். மதசம்பந்தமான இரண்டு பெரிய கக்ஷி இருந்ததற்கு பதிலாக, மூன்று வகுப்புக் கக்ஷி தோன் றியதைத் தவிர வேறொன்று மேற்படவில்லை. மராட்டி யர்களின் சக்தியை ஒடுக்கி, தமக்குக் கீழ்ப்படுத்து வதற்காக டில்லியைவிட்டு தக்ஷணத்திற்குச் சென்ற ஔரங்கசேப், அதற்கப்புறம் அவர் ஜீவித்திருந்த 26 வருஷகாலம் வரை, இதே அலுவலில் ஈடுபட்டுக் கடைசி யாக அச்சக்தியை அடக்கிவிட்டுத்தான் அமர்ந்தார். அவர் மரித்த பின்பு, அச்சக்தி மறுபடியும் பலம் பெற் றுக் கிளம்பிற்று. ஒரு சிவாஜிக்கு பதிலாக, நான்கு மராட்டிய ராஜாக்களும், பிராமண பேஷ்வாக்களும் உண்டாயினர். நாதிர்ஷாஹ் மொகலாய அரசாங்கத்தைப் பலஹீனமாக ஆக்கிவிட்டுச் சென்றபின், நீங்கள் எல் லோரும் சேர்ந்துகொண்டு டில்லியின்மீது படையெடுத் தீர்கள். அப்பொழுதுங்கூட பரதேசியாக வந்த பட் டாணியான அஹ்மதுஷாஹ் அப்தாலீ, பானிப்பட்டில், பஹாவ்ஜி சிந்தியாவைப் பலமாகத் தோற்கடித்தார். இங்

தத் தோல்விக்கு அப்புறம் மராட்டியர்கள் வட திசையைத் திரும்பியும் பார்க்கவில்லை. தவிரவும், பகாவ்ஜீ சிந்தியா தமது வாழுள் முழுவதிலும் தம்மைத் தோற்கடித்துப் பின்றொடர்ந்துவந்த பட்டாணியரை மறக்கவே இல்லை. அவருடைய குள்ளமான குதிரை சிந்தியாவைத் துரத்திக்கொண்டு சரியாகப் பின்றொடர்ந்து வந்தது. அதனுடைய நாசிகளிலிருந்து வெளிக்கிளம்பிக் கொண்டிருந்த ஆவிகளை, சிந்தியா திரும்பித் திரும்பிப்பார்த்து நடுங்கிக் கொண்டிருந்தார். அவர் வயது முழுவதும் இந்தக் கனவைகண்டு, நடுங்கிக் கொண்டே இருந்தார். சிறுபான்மையினரை வேரறுத்துவிடுவதற்கு இது கடைசிச் சமயமாக இருந்தது. இதையுங் கூட நீங்கள் கைநழுவ விட்டுவிட்டீர்கள். அஹ்மது ஷாஹ் அப்தாலி உங்களையும் அழித்தார். ஆனுல், தானும் இங்கு தங்கவில்லை. இதன் பலனுக முஸ்லிம்களின் கையைவிட்டு அரசாங்கம் போய்விட்டது. உங்களுக்கும் அரசாங்கம் கிடைக்கவில்லை. 7000 மைல்களுக்கு அப்பாலிருந்து 7 சமுத்திரங்களையும் தாண்டி, ஜஹாங்கீர் சக்கிரவர்த்தியின் தர்பாருக்கு வியாபார அனுமதி கோரிவந்த சில வியாபாரிகள், ஜிஹாங்கீர் சக்கிரவர்த்தியின் வாரிசுக்காரரான ஷாஹ் ஆலம் என்ற அந்தகரை 200 வருஷங்களுக்குப் பிறகு, தங்களது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டனர். உங்களுக்கும், அவர்களுக்கும் இருந்த அற்பசொற்ப சக்தியையுங் கூட அழித்து, தங்களுடைய அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

இப்பொழுது, அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமாயின், நீங்களும் நாமும் ஒருவருக்கொருவர் நீதியாகவும், சகிப்புத் தன்மையாகவும் நடந்துகொள்வதும், ஒருவருக்கு மற்றவராலேற்படும் நோவினையைச் சகித்துக் கொள்வதும், இந்த அடிமைத் தனத்தை ஒருபோதும் சகியோம் என்று உறுதிகொள்வதும்தான் சரியான மார்க்கமாகும். இந்த அடிமைத் தனத்தில் கிட்டத்தட்ட 150 வருஷ காலமாக நீங்களும், நாமும் அவதிப்பட்டிருக்கிறோம். இவ்வடிமைத்தனம் ஹிந்து ராஜ்யத்தையும், முஸ்லிம் ராஜ்யத்தையும் பார்க்கினும் அதிகக் கஷ்டங் கொடுப்பதாக இருக்கிறது.

பொறுமையாக இருக்கும்படி முஸ்லிம்களுக்கு உபதேசம் செய்வதையும், அல்லாஹு தஆலாவுக்காக நீங்கள் எல்லா அதிகார வர்க்கத்தினருடனும் போர் செய்வது அவசியம். ஆனாலும், ஒரே சமயத்தில் உலகம் அனைத்தையும் எதிர்த்து, யுத்தம் செய்ய வியலாது. பகைவர்களில் மிகக் கொடியவர் யார்? என்பதைப்பார்த்து, அவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஹுஜூர் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்த யூதர்களுடன் உடன்படிக்கைசெய்து கொண்டு, மக்கத்து முஷ்ரிக்குகளை எதிர்த்ததுபோல், உங்களாலியலுமாயின் கொடிய விரோதியை எதிர்ப்பதற்காக, சொற்ப விரோதமாகவுள்ள இதர விரோதிகளுடன், நீங்கள் உடன்படிக்கை செய்துகொள்ளுங்கள். உங்களுடைய ராஜ தந்திரத்துக்கு வசப்பட்டு, உங்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள ஒருவரும்

முன் வரவில்லையாயின், நீங்கள் எல்லா யுத்த களங்களி லும் ஒன்றுபோல் பலத்தைச் செலவிடாமல், முடிவான யுத்தம் செய்ய வேண்டிய போர்க்களத்தில் அதிக பலத் தைச் செலவு செய்து, பாக்கியுள்ள போர்க்களங்களில் தடுப்பு யுத்தம் மாத்திரம் செய்யுங்கள். பெரிய போர்க் களத்தில் உங்களுக்கு வெற்றி ஏற்பட்டுவிட்டால், இதர போர்க் களங்களிலும் நீங்களே ஜெயசீலர்களாக இருப் பீர்கள். அப்பொழுது, நீங்கள் பகைவர்களை ஒவ் வொருவராகப் பழிவாங்க முடியும். இம்மாதிரி செய்வது கோழைத்தனமன்று. இதுதான் துணிச்ச லாகும் என்று கூறுவதையும் நமது நோய்க்கு ஏற்ற பரிகாரமாகும் என்று டாக்டர்........சாகிப் கருதுகிறு ரில்லை.

சீனுவும், அரபியும் உங்களுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, இந்தியாவும் உங்களுடையதாக இருந் தாலும் சரி, நீங்கள் யாவரும் முஸ்லிம்கள்தாம். உலகம் முழுவதும் உங்களது குடியிருப்பு நாடுதான். ஆகவே, உலகம் முழுவதையும் அடக்கிக்கொள்ள வேண்டும் என்று விரும்புபவர்களைத்தான் கடும் விரோதிகளாகப் பாவியுங்கள். அப்படிப்பட்ட விரோதி ஹிந்துக்களல்ல. இவர்களுடைய ஆட்டமெல்லாம் சமுத்திரக்கரை வரை யிலும்தான். நீங்கள் இவர்களைக் கண்டு அஞ்சுகிறீர் களா? என்பதைச் சத்தியமாகக் கூறுங்கள். ரயில் வண்டியில் ஒரு டப்பாவில் 6-7 ஹிந்துக்கள்மட்டும் இருக்கும்போது, நீங்கள் ஒருவர்மட்டும் தனித்து அந்த டப்பாவிற்குள் சென்று உட்கார்ந்தால், உங்களுக்கு

அவர்கள்மீது பயமுண்டாகிறதா? சில சமயங்களில் அவர்கள்தாம் உங்களைக் கண்டு பயந்து விடுகிறார்கள். ஆனால், அந்த டப்பாவில் 5-6 வெள்ளையர்களிருந்தால், உங்களுக்கும், ஹிந்துக்களுக்கும், பயமுண்டாகிறது. இந்த வெள்ளையர்கள் சாமான்களை எடுத்தெறிந்து விடுவார்கள், திட்டுவார்கள், அடிப்பார்கள், உதைப்பார்கள் என்று நீங்கள் நினைப்பீர்கள் என்பது நிச்சயம். ஹிந்துக்கள் உங்கள்மீது அநியாயம் செய்கிறார்கள்; உங்களது ராஜீய உரிமைகளை அபகரிக்கிறார்களென்றால், அதற்கு அரசாங்கம் உங்களது உரிமைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் அலக்ஷியமாக இருப்பதே காரணமாகும். நீங்கள் அவர்களுடன் யுத்தம் செய்தே தீரவேண்டுமென்றிருந்தால், எந்த ஆயுதத்தைக்கொண்டு நீங்கள் யுத்தம் செய்வீர்கள்? இன்று, ஆங்கிலேயர்கள் குறுக்கிடவில்லையாயின், இப்பொழுதுங்கூட நீங்கள்தான் ஜெயிப்பீர்கள். இன்றுவரை எந்த இடத்திலும் ஒருநாள் முழுவதும் சண்டைபோடச் சமயம் வாய்க்கவில்லை. சண்டை ஆரம்பமானவுடன் போலீஸ், ராணுவம் முதலியவைகள் வந்துவிடுகின்றன. கடைசியாக வீடடங்கி விடுகிறீர்கள். பிறகு; அரஸ்டுகளும் தண்டனைகளும் ஆரம்பமாகி விடுகின்றன.

எந்த முஸ்லிம்களுக்காக நீங்கள் தொண்டை கிழிய கத்தி, சர்க்கார் உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டுமென்று கூறுகிறீர்களோ, அவர்கள் "தங்களை மத வைராக்கியம் கொண்டவர்கள். ஒரு தலைப்பக்ஷமானவர்கள்" என்று நினைத்து, தங்களை சர்க்கார் உத்தியோகத்தை

விட்டு நீக்கி விடுமோ என்றஞ்சி, சில சமயங்களில் குற்ற மற்ற முஸ்லிம்களைச் சிக்கவைத்து விடுகிறார்கள். ஸஹ ரன்பூரில் நடந்ததென்ன? அலிகாரில் நிகழ்ந்ததென்ன? அவர்கள் ஹிந்துக்கள்தாம். உங்களுடைய சொற்படி குற்றவாளிகளையுங்கூட விடுவித்துவிடுகிறார்கள். (ஹிந்து போலீஸ் உத்தியோகஸ்தராக இருக்கிற) அவர் பக்ரீத் பெருநாளின் காலையில், ஹிந்து மகாசபைத் தலைவருடன் எந்த மஹல்லாவில்? எந்த தெருவில்? எந்த பஜாரில்? போலீஸ் படையை அதிகமாக வைக்கவேண்டும்? எந்த இடத்தில் குறைவாக வைக்கவேண்டும்? என்று டெலி போனில் கேட்டு, அவரிடமிருந்து கட்டளைகளைப் பெறு கிறார். வழக்குகள் கோர்ட்டுக்குச் சென்றுவிட்டால், உங் களுக்கு வக்கீல் பஞ்சமேற்பட்டு விடுகிறது. அப்துர் ரஷீதுடைய வழக்கில், தினசரி 400 ரூபாய் பீஸ் கொடுப் பதாக ஒரு பாரிஸ்டரை நியமித்ததாகவும், முதல் நாள் இரவிலேயே பணம் கொடுபடவில்லையானால், மறுநாட் காலையில் மூட்டை கட்டிக்கொண்டு ஊருக்குச் செல்வ தாகஅவர் பயங்காட்டிக்கொண்டிருந்ததாகவும்,செஷன்ஸ் கோர்ட்டிலும் சரி, பீஸ் முழுவதையும் வாங்காமல் கேஸ் நடத்த, பிரபல முஸ்லிம் பாரிஸ்டர்களில் எவரும் முன் வரவில்லை? என்று நீங்களே கூறுகிறீர்கள். மிஸ்டர் ஆஸிப் அலியின் தேர்தலில் அவர் வெற்றி பெறுவதற் காக வயோதியர்களையும், பக்கவாத ஜன்னியால் பீடிக் கப்பட்டு, நடக்க இருக்க முடியாத நிலைமையிலிருப்பவர் களையுங்கூட கட்டில்களில் படுக்க வைத்து, வோட் போடு மிடத்திற்குக் கொண்டுபோனீர்கள். அப்படிப்பட்ட

ஆஸிப் அலி, இன்று இந்தூரில் ஏழை மில் தொழிலாள ரிடம் தனக்காக 10 ஆயிரம் ரூபாயும், தன்னுடைய ரைட் டருக்காக 1 ஆயிரம் ரூபாயும் பீஸ் பேசிக்கொண்டு, பங்க ளாவுக்காக மாதம் 1–க்கு வாடகை ரூ. 70-ம், சாப்பாட் டுச் செலவுக்காக மாதம் 1-க்கு ரூ. 250-ம், இதற்கு மேல் அதிகமாக மாதம் 1-க்கு மோட்டார் செலவு ரூ. 150-ம் வாங்கிக்கொண்டு வேலை செய்கிறார். இவ்வித மான நிலைமையில், இயன்றவரை கலகங்கள் வராமற் றடுத்து விடுவது மேல் இல்லையா ?" என்று குறிப்பிட் டிருந்தார்.

காங்கிரஸை ஆதரித்து, ஆங்கிலேயரை எதிர்த்து, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தும் விஷயத் தில் இதனைப் பார்க்கினும் வேறு ஏதேனும் சொல்ல முடியுமா? வேறு ராஜதந்திர நிபுணர் இம்மாதிரியான சமாதானங்களைக்கூறி இருக்கிறாரா ?

பம்பாய் விசாரணைக் கமிட்டி:—1929-ம் வரு ஷத்தில் பம்பாயில் நடைபெற்ற ஹிந்துமுஸ்லிம் கலகத் தின்போழ்து, நமது தலைவர் மௌலானா நோயுற்றிருந் தும், கலகத்தை அடக்கும் விஷயத்தில் செய்த அபார முயற்சிகளைப்பற்றி நீங்கள் முன் ஒரு அத்தியாயத்தில் படித்திருக்கிறீர்கள். அக்கலகம் அமர்ந்து விசாரணைக் கமிட்டி ஏற்பட்டபோது, அதில் சாக்ஷியம் கொடுக்க காங்கிரஸ் சபை மறுத்தும், மௌலானா அதில் சாக்ஷியம் கொடுத்தார். காங்கிரஸ் மகாசபை ஹிந்து முஸ்லிம் களுக்குப் பொதுவான சபையென்றும், பம்பாயில் நடைபெற்ற வகுப்புக் கலகம் வீட்டுச் சண்டையென்

றும், லாகூர் காங்கிரஸ் மகாசபைக்குச் செல்லச் சித்தமாக இருப்பதாகவும் சாக்ஷியங் கூறினர். அவர் ஒரு வகுப்புக்கு மட்டிலும் தலைவராக இருந்திருந்தால், தமது சமூகத்தினர் குற்றமற்றவர்களென்றும், பிறசமூகத்தார் குற்றவாளிகளென்றும் அல்லவா சாக்ஷியங் கூறி இருப்பார்?

மிஸ்டர் பட்டேலின் தொப்பி:—மிஸ்டர் வி. ஜெ. பட்டேல் சுயராஜ்ய கக்ஷியின் அங்கத்தினர் என்ற முறையில் இந்தியா சட்டசபையில் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, அப்பால் இந்தியா சட்டசபைத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டபின், அவர் சர்க்கார் உடையை முழுதும் அணிந்து தலையிலும் "வுக்" அணிந்துகொண்டு வந்தார். இதன்பேரில் எல்லோரும் ஆச்சரியமடைந்ததுடன் அவர் இம்மாதிரி செய்ததை ஒத்துழைப்பதற்கு முதற்படியாகவுள்ள வேலை என்றுங் கூறினர்.

ஆனால், நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி அவருடைய போக்கைக் கண்டித்தது மட்டுமில்லாமல், தலைவராகி விடுவதால் மனிதனின் கொள்கையில் மாறுதலேற்படக்கூடாது என்றும், தேசிய உடை தான் அவருடைய ஸ்தூலத்தை அலங்கரிக்கவேண்டும் என்றும், "வுக்"குப் பதிலாக, அதற்குமுன் அவருக்குப் பிரியமாக இருந்த தேசிய தொப்பியையே அவர் அணியவேண்டுமென்றுங் கூறினர். ஆகவே, மிஸ்டர் பட்டேல் இந்த உபதேசத்தின்படி நடக்கவும் செய்தார்.

இருபத்தேழாம் அத்தியாயம்

ஒற்றுமை மகாநாடு

தேசத்தின் பொதுவான நிலைமை:—ஒத்துழை யாமை இயக்கத்தை ஒத்திவைத்ததன் பிறகு காந்திஜீ கைது செய்யப்பட்டதும், தேசத்தின் ராஜீய நிலைமை யில் ஏற்பட்ட மாறுதலும், ஹிந்து முஸ்லிம் இரு வகுப்பினரும் ஒருவரை ஒருவர் வெல்வதற்காகச் செய்த முயற்சியும் இதற்கு முந்திய அத்தியாயங்களின் மூல மாக உங்களுக்குத் தெரிய வந்திருக்கலாம். ஹிந்துக் களின் கோழைத்தனத்தைப் போக்கி துணிச்சலையும், மனோ தைரியத்தையும் உண்டாக்குவதற்காகவும், முஸ் லிம்களை இந்தியாவைவிட்டுத் ஹிஜாஸுக்குத் துரத்தி விடுவதற்காகவும் சங்கடன் இயக்கம் உண்டாக்கப்பட் டது. இதற்காக ஆங்காங்கு குஸ்திப் பள்ளிக்கூடங் களை ஏற்படுத்தி, சிலம்பம், கத்திவீச்சு, மல் யுத்தம் முதலிய பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. இவை களெல்லாம் தற்காப்பின் நிமித்தமாகவே செய்யப்படுவ தாகவும் வெளிக்குச் சொல்லிக்கொள்ளப்பட்டது.

முஸ்லிம்கள் இதனைக் கண்டு சும்மா இருந்து விடுவார்களா? இதற்குத் தக்க பதில் செய்யவேண்டும் என்ற உணர்ச்சி அவர்களிடமும் உண்டாயிற்று. ஆனல், ஹிந்துக்கள் முஸ்லிம்களைப் பயமுறுத்துவான் வேண்டி வெளியில் செய்த ஆர்ப்பாட்டங்களைப்போல் முஸ்லிம்கள் செய்யவில்லை. இருசமூகத்தாரும் இப் படிச் செய்ததால் தேசத்தில் கலகம் உண்டாகுவதற்

கான நிலைமை ஏற்பட்டது. பல இடங்களிலும் கலகங்களும் உண்டாயின. ஆனால், இவைகளில் அதிகமாகச் சேதமடைந்து நஷ்டமடைந்தவர்கள் முஸ்லிம்கள் தாம். ஏனெனில், கோர்ட்டுகளில் நடைபெறும் வழக்குகளை மேல் நடத்த முஸ்லிம்களுக்கு வக்கீல்கள் கிடைப்பதில்லை. ஏராளமான பணங் கொடுத்து வக்கீல்களை நியமித்து, தங்களைக் காத்துக்கொள்ள அவர்களால் முடியுமென்றிருந்தால், அவர்கள் தங்களது உயிர்களை கையில் வைத்துக்கொண்டு ஜிஹாது செய்ய முன் வந்திருக்கமாட்டார்கள்.

லக்ஷ்மணபுரி கலகம் :—இச் சமயத்தில் லக்ஷ்மணபுரியில் திடீரென்று வகுப்புக் கலகம் உண்டாயிற்று. முஸ்லிம்கள் வசிக்கும் பகுதியில் ஹிந்துக்கள் வர முடியாது. ஹிந்துக்கள் வசிக்கும் பகுதியில் முஸ்லிம்கள் வரமுடியாது. இவ்வித நிலைமையில் வெளியூரார் விஷயம் தெரியாமல் இந்தப் பிரதேசங்களுக்கு வந்தால், அவர்களில் அநேகர் இரக்கமற்றுக் கொல்லப்பட்டனர். இவ்வித கலகத்திற்கெல்லாம் பள்ளிமுன் மேளமும், பசு பலியும், தஸராவும், ஹோலி பண்டிகையும் தான் காரணங்களாக இருந்தன.

ஒற்றுமை மகா நாடு :—இந் நிலைமையைப் பரிகரிப்பதற்காக டில்லியில் ஒற்றுமை மகா நாடு கூட்டப்பட்டது. ஆனால், இந்த முயற்சி பிரசங்கத்தில் முடிந்ததே யல்லாமல் காரியத்தில் முடிவு பெறவில்லை. பல தினங்கள் வரை பிரசங்கங்கள் நிகழ்ந்தன. சமாதானத்திற்கான முறைகளைப் பற்றிச் சிந்திக்கப்பட்டன.

ஆனால், ஒரு முடிவு மில்லாமல் ஒற்றுமை மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

மௌலானா அவர்கள் முயற்சி:—நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி இம் மகா நாட்டில் கலந்து கொண்டார். இரு கக்ஷியினருக்குமிடையில் ஒற்றுமை யேற்படுவதற்காகத் தம்மாலான சகல முயற்சிகளையும் செய்தார். இது சம்பந்தமாக அவர் செய்த பிரசங்கத்தின் மத்தியில் "ஒரு ஹிந்து என் மனைவியை அவமதித்தாலும், நான் அந்த ஹிந்துவுக்கு விரோதமாகக் கையை நீட்டமாட்டேன். என் அருமைத் தாயைக் கொலை செய்துவிட்டால், அதற்காக நான் கோர்ட்டில் வழக்குத் தொடரமாட்டேன். ஆனாலும், மிகவும் துரதிர்ஷ்டம் வாய்ந்த இங்கிலைமை மாறவேண்டும். அற்ப விஷயங்களுக்காக நாம் ஒருவருக்கொருவர் வாளேந்தி வெளியில் வரக்கூடாது. அவ்வாறு நாம் வந்து கொண்டிருந்தால், சுயேச்சையின் மைதானத்தை விட்டு நாம் வெகு தூரத்திற்கு விலகிச் சென்று விடுவோம். அந்நியர் நம்மைப் பார்த்துச் சிரித்து ஏளனம் செய்வர்" என்று கூறினார். ஆனால், அக்கூட்டத்திற்கு வந்திருந்த ஹிந்துக்களிடம் இப்பிரசங்கம் எவ்விதப் பயனையும் செய்யவில்லை. மௌலானாவிற்கு விரோதமாக இருந்த முஸ்லிம்களுக்கு அவரைப் பற்றிக் குறை கூற இடமேற்பட்டுவிட்டது. சிரத்தானந்தர் ஒரு விஷயத்தில் கொஞ்சம் இணங்கி வந்தால், பண்டிதர் மாளவியா தமது கோபாவேசத்தால் அவரை அடக்கிவிடுவார். பண்டிதர் மாளவியாவுக்குக் கொஞ்

சம் இரக்கமுண்டானல், பஞ்சாப் லாலா லஜபதிராய்க்குக் கோபம் வந்து விடும். இவ்வித நிலைமையால். ஹிந்துக்கள் கடைசிவரை இணக்கத்திற்கு வரவில்லை. ஆகவே, ஒற்றுமை மகாநாட்டை ஒத்திவைக்க வேண்டியதாயிற்று.

மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டபின், தேசத்தில் வேற்றுமையுணர்ச்சி குன்றவில்லை. மகாநாட்டில் கலந்து கொண்ட வகுப்புத் தலைவர்களே தத்தம் வகுப்பினரைத் தூண்டிவிடும் முறையில் இருந்தனர். இந்நிலைமையில் நமது தலைவர் மௌலானா மௌனமாக இருக்காமல் தேசமெங்குஞ் சுற்றுப் பிரயாணம் செய்து, பல இடங்களிலும் ஒற்றுமையைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். பத்திரிகைகளில் பல வியாசங்களெழுதினர், தனிப்பட்டவர்களைக் கண்டு பேசினர். காந்திஜீயைக் கெஞ்சினர். மாளவியாவிடம் மன்றாடினர். கடைசியாக இம்முயற்சிகள் தோல்வியேயடைந்தன.

சிம்லாவில் ஒற்றுமை மகாநாடு :— வகுப்புக் கலகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந்தன. ஹிந்து முஸ்லிம் சம்பந்தங்கள் வரவரச் சீர்கேடடைந்துகொண்டேயிருந்தன. 'இப்பொழுது என்னுடைய பேச்சை ஒருவரும் மதிப்பதில்லை' என்று காந்திஜீ கூறி தமது ஆசிரமத்தில் அமர்ந்துவிட்டார். ஆனல், நமது தலைவர் மௌலானா அவர்களின் முயற்சிகளுக்கு மட்டிலும் முடிவு வரவில்லை.

இது சமயம் சிம்லாவில் இந்தியா சட்ட. சபைக் கூட்டம் நடை பெற்றுக்கொண்டிருந்தது. மத்திய கிலா

பத் கமிட்டியின் மகாநாடும் அங்கு நடந்தது. மகா சபையின் கூட்டமும் நடைபெற்றது. கிலாபத் கமிட்டி அங்கத்தினர்களில் பெரும்பாலர் "ஹிந்துக்கள் கலகம் செய்வதைப் பார்த்துக்கொண்டு எத்தனை நாளைக்குத்தான் மௌனமாக இருக்கமுடியும்? நாமும் குறைந்த பக்ஷம் தற்காப்புக்காக வாயினும் ஏதேனும் ஒன்றைச் செய்யவேண்டும்" என்று வற்புறுத்தினர். ஆயினும், இந்த தீவிரவாதிகளை மீறவிடாமல் மத்திய கிலாபத் கமிட்டி அடக்கி வைத்துக்கொண்டது. அத்துடன், மௌலானா ஷௌகத்அலி மத்திய கிலாபத் கமிட்டியின் சார்பாக மிஸ்டர் ஷுஐப் குறைஷியையும், டாக்டர் அன்ஸாரியையும் தூதுவர்களாக நியமித்து, ஹிந்து மகாசபைத்தலைவரான டாக்டர் மூஞ்சேயிடம் அனுப்பி "வெள்ளம் தலைக்குமேல் ஓடிவிட்டது. நிலைமை வரவர மோசமாகிக்கொண்டு வருகிறது. சுதந்திரமடைய வேண்டுமென்ற நோக்கத்தின் காரணமாக தற்காப்பின் நிமித்தமாகக்கூட எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை. ஆகவே, ஹிந்து முஸ்லிம்களுக் கிடையிலுள்ள வித்தியாசத்தை ஒழித்து, சகல விஷயத்தையும் பற்றி மனம் விட்டுக் கலந்தாலோசனை செய்வோம். பிறகு, நாம் சுயேச்சையடைந்ததற்கப்பால் உங்கள் இஷ்டம்போல் சண்டைபோட்டுக்கொள்ளுங்கள்" என்று கூறினர்.

இதன்பேரில், சிம்லாவில் மறுபடியும் "ஒற்றுமை மகாநாடு" கூடிற்று. ஜனாப் முஹம்மதுஅலி ஜின்னா தலைமை வகித்தார். கிலாபத் கமிட்டியும், ஹிந்து மகா

சபையும், வேறு சில சங்கங்களும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பின. இதர பிரபலஸ்தர்கள் சொந்த ஹோதாவிற் கலந்துகொண்டனர். அச்சமயம் போபால் பேகம் சாகிபா அவர்கள் ஒற்றுமை மகாநாட்டை ஆதரித்து "தேசத்திலுள்ள பிளவையும், வேற்றுமையையும் ஒழிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது" என்று மிகவும் வேண்டிக்கொள்வதாக தந்தி கொடுத்தார். இதரர்களும் மகாநாட்டை ஆதரித்துத் தந்திகள் கொடுத்தனர். மகாநாடு நடைபெற்றது.

இக் கான்பரன்ஸை வெற்றியடையச் செய்வதற்காக, நமது தலைவர் மௌலானா செய்த முயற்சிகள் அபாரமானவைகளாகும். இதர தலைவர்கள் இவ்வளவு முயற்சி எடுத்துக்கொள்ள வில்லை என்றும் கூறலாம். தீர்மானங்களுக்கு நகல் எழுதுதல், தீர்மானங்களிலுள்ள பதங்களைக் குறைத்தல், அவைகளை மாற்றி அமைத்தல் முதலிய சகல காரியத்திலும் நமது தலைவர் தமது முழு திறமையையும் உபயோகித்தார். மத்திய கிலாபத் கமிட்டியின் மகா நாடு முடிவு பெற்றது. அதன் அங்கத்தினர்களும் தங்கள் தங்கள் இருப்பிடம் திரும்பினர். மௌலானா ஷௌகத்அலியும் திரும்பினார். ஆனால், ஒற்றுமை மகாநாடு மட்டிலும் முடிவடையவில்லை.

ஷாஹித் மரணம்:—நமது தலைவர் சிம்லாவில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக முயற்சி செய்துகொண்டிருக்கும்போது, டில்லியில் அவருடைய சகோதரரின் ஃமைந்தர் ஷாஹித்அலி மரணப் படுக்கையில்

இருந்தார். அவருடைய நிலைமை மிக மோசமான ஸ்திதிக்கு வந்திருந்தது. கடைசிநேரத்திலேனும் தமது சிறியதந்தையைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் ஷாஹித்அலிக்கு அதிகமாக உண்டாயிற்று. தமது சகோதரரின் மைந்தரைக் கடைசிமுறையாகக் கண்டு, தமது பிரியத்தைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நமது தலைவர் மௌலானா அவர்களுக்கும் இருந்தது. ஆயினும், தேசத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்யும் முயற்சியில் தமது சகோதரரது மைந்தரின் ஜனஸாவைக்கூடப் பார்க்க அவரால் முடியவில்லை.

பல வாரங்களாகக் கூடிப் பேசிய இம் மகாநாடு எவ்வித முடிவுக்கும் வராமல் ஒத்தி வைக்கப்பட்டது. முஸ்லிம்கள் சிறு பான்மையினராக இருந்துங்கூட, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக எவ்வளவு முயற்சி செய்து, சரியான ஒரு வழியைக் கண்டுபிடிக்கப் பாடு பட்டார்கள் என்பதற்கு சரித்திரத்தில்கூட உதாரணங் கிடைப்பது அரிதாகும். ஆனால், ஹிந்துக்கள் பெரும் பான்மையினராக இருந்தும், சமாதானம் என்ற முயற்சியை விட்டு விலகிக்கொண்டே இருந்தார்கள். அந்த வார்த்தையைக் காதால் கேட்கவும் கூட அவர்கள் இஷ்டப்படவில்லை.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

ஹிஜாஸ் பிரச்னைகள்

நமது தலைவர் மௌலானு முஹம்மதுஅலி ஜௌஹர் அவர்களுக்குப் பொதுவாக இஸ்லாமிய உலகத்திலும், சிறப்பாக ஹிஜாஸிலும் நெருங்கிய சம்பந்தமிருந்தது. இஸ்லாமிய உலகில் சிக்கலான நிலைமை ஏற்படும்போதெல்லாம், அவருடைய கால்கள் பின் வாங்குவதில்லை. எப்பொழுதும் அவர் இஸ்லாமிய சமூகத்திற்கு வழி காண்பித்துக்கொண்டே இருந்தார்.

ஷரீப்ஹுஸைன்:— ஐரோப்பிய மகா யுத்தத்தில், துருக்கியரின் மக்கா கவர்னரான ஷரீப் ஹுஸைன் துருக்கியரிடம் மட்டுமில்லாமல், இஸ்லாத்திற்கும் கிப்லாவிற்கும்கூட துரோகம் செய்த வரலாற்றை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

மகாயுத்த காலத்தில் ஐரோப்பிய ராஜ தந்திரிகள் இவரைத் தங்களது வலையில் சிக்க வைத்து, தங்களது இஷ்டம்போல் நடத்திக்கொள்ள விரும்பினர். அறபி ஒற்றுமையையும், ஹிஜாஸில் ஐக்கிய அறபி அரசாங்கத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கூறி, துருக்கியருக்குத் துரோகம்செய்யும்படி அவரைத்தூண்டினுர்கள். அவரும் இதை மெய்யென்று நம்பி, துருக்கியருக்கு துரோகம்செய்து, தக்க சமயத்தில் துருக்கியரின்மீது படையெடுத்துக் கலகமுஞ் செய்தார். எனவே, ஐரோப்பிய ராஜ தந்திரிகளின் நோக்கம் நிறைவேறிற்று. துருக்கிய

ருக்குப் பெருந் தோல்வி ஏற்பட்டது. யுத்தமும் முடிவடைந்தது. ஷரீப் ஹுஸைனுக்குச் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. கடைசியாக ஐரோப்பியர் அவரைத் தங்களது பாதுகாப்புக்குள் வைத்துக்கொண்டனர். இது மிகவும் நூதன விருத்தாந்தமாகும். கடைசியாக அறபிதேசம் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டது. சிரியா தேசம் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டது. இராக், டிரான்ஸ்ஜார்டோனியா ஆகியவைகளின்மீது பிரிட்டிஷாருக்கு ஆதிக்கமேற்படுத்தப்பட்டது. ஆனால், யமன், நஜத் ஆகிய இரு தேசங்களும் இந்த அரசாங்கங்களுடன் சம்பந்தப்படாமல் பூரண சுயேச்சையுள்ளனவாக இருந்தன. அறபி தேசம் இவ்வாறு சின்னபின்னப் படுவதை அவ் விரு தேசங்களும் விரும்பவில்லை.

யுத்தம் :— கடைசியாக நஜத் சுல்தான் அப்துல் அஜீஸிப்னுஸஊத் பரிசுத்த ஹிஜாஸில் நடைபெறுகிற இவ்வசங்கிதங்களை அகற்ற விரும்பினார். இஸ்லாமிய உலகத்தின் அபிமானம் ஷரீப் ஹுஸைனுக்கு விரோதமாக இருந்தது. ஹிஜாஸில் இருந்த ஜனங்களும் கூட ஷரீப் ஹுஸைனின் அநியாய அக்கிரமங்களால் நெருக்குண்டிருந்தனர். ஆகவே, உறுதியான கொள்கையுள்ள ஒருவர் ஹிஜாஸின்மீது படையெடுத்து, அங்கு நடைபெறும் அசங்கிதங்களைப்போக்க விரும்புவது யாவருக்கும் சந்தோஷமாக இருந்தது.

எனவே, நஜதுக்கும் ஹிஜாஸுக்கும் யுத்தம் தொடங்கிற்று. பிரிட்டிஷாருக்கு ஷரீப்ஹுஸைன்மீது அனு

தாப மிருந்தது. ஆனால், பகிரங்கமாக முன்வந்து அவருக்கு உதவிசெய்யவோ, நஜத்சுல்தானுக்கு விரோதம் செய்யவோ முடியாத நிலைமையிலிருந்தனர். ஏனெனில், பிரிட்டன் அவ்வாறு செய்யும் பக்ஷத்தில், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் பெருங் கிளர்ச்சியையுண்டுபண்ணி விடுவர். ஆதலின், அவ் வருஷத்தில் அதாவது 1925-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து ஹாஜிகளை அங்கு செல்லவிடாமற் றடுத்துவிட பிரிட்டன் ஆலோசனை செய்து, அதைப்பற்றிய சுற்றறிக்கையும் வெளியிட்டது. ஹிஜாஸின் நிலைமை அபாயகரமானதாக இருப்பதால் இவ் வருஷம் ஹிஜாஸுக்குச் செல்ல வேண்டாம் என்றும், அவ்வாறு செல்பவர்களின் உடல் பொருள்களுக்கு பிரிட்டிஷ் சவர்ன்மெண்டார் பொறுப்பாளிகளல்லர் என்றும் இவ் விளம்பரத்தில் கூறப்பட்டிருந்தது.

நமது தலைவர் :—இவ்வறிக்கை பிரசுரமானபின், நமது தலைவர் மௌலானா முஹம்மதுஅலி அவர்கள் எங்ஙனம் சும்மா இருக்க முடியும்? சவர்ன்மெண்டை முற்றிலும் எதிர்த்து "இவ்வருஷம் அவசியமாக ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டும்" என்று ஹாஜிகளைத் தூண்டினார். ஷரீப்ஹுஸைன், அவரது புதல்வர் அலி, நஜத்சுல்தான் ஆகியவர்களைக் கண்டு நிலைமையை ஒழுங்குபடுத்துவதற்காக கிலாபத் கமிட்டியின் சார்பாக ஹிஜாஸுக்குத் தூதுவர்களை அனுப்பினார். இவ்வாறு முயற்சி செய்ததன் பலனாக எதிர்பாராத வண்ணமாக இவ்வருஷம் ஹிஜாஸுக்கு ஏராளமான ஹாஜிகள் சென்றனர்.

ஜித்தாவில் குண்டுப் பிரயோகம் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், சுல்தான் இப்னுஸஊதின் அரசாங்கம் ஹாஜிகளுக்காக ராபிக், கன்புதா, லீத் ஆகிய புதிய துறைமுகங்களைத் திறந்துவிட்டது. அத்துடன், ஹாஜிகளின் உயிர் பொருள்களைக் காக்கும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இக்காலத்தில் ஸர். முஹம்மது ஹபீபுல்லா வைசிராய் நிர்வாக சபையில் அங்கத்தினராக இருந்தார். அவருடன் மௌலானு அவர்கள் கடிதப் போக்குவரத்துச் செய்து ஹிஜாஸுக்குச் செல்வதைத் தடை செய்வது கூடாது என்றும், முக்கியமான மதக் கடமையை நிறைவேற்றச் சந்தர்ப்ப மளிப்பது மிகவும் அவசியமென்றும் அவருக்கு அறிவுறுத்தினர். ஆகவே, ஒரு பக்கம் வைசிராய் நிர்வாகசபை அங்கத்தினருடன், கடிதப் போக்குவரத்துச் செய்வதுடன், தேசமெங்கும் ஹஜ்ஜுக்குப் போகும்படி பிரசாரமும் செய்யப்படுகிறது. மறுபக்கத்தில் சுல்தான் இப்னுஸஊதின் அரசாங்கம் ஹாஜிகளின் உயிர் பொருளுக்குப் பொறுப் பேற்றுக் கொண்டு, அவர்களுக்காக புதிய துறைமுகங்களையும் திறந்துவிட்டிருக்கிறது. இதன் பலனுகப் பல்லாயிரக் கணக்கான ஹாஜிகள் பம்பாய் வந்து சேர்ந்தனர். அவர்களை ஹஜ்ஜுக்குச் செல்ல அனுமதி கொடுக்க வேண்டியதாகிவிட்டது.

எதிர்ப்பு:—ஒரு பக்கம் நமது தலைவர்களான அலி சகோதரர்கள் இம்முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கும்போது, மறு பக்கம் அரசாங்க பக்தர்கள் என்று தங்

களைக் கூறிக் கொள்ளும் ஒரு கூட்டத்தார் இந்தியா சட்ட சபையிலும், பத்திரிகைகளின் மூலமாகவும் இம் முயற்சியைப் பலமாக எதிர்த்தனர். நமது மௌலானாவின்மீது கேவலமான படர்களையும் சுமத்தினர். காங்கிரஸுக்கும், காங்கிரஸ் தலைவர்களுக்கும் நாட்டில் செல்வாக்கில்லாமல் ஒழிந்து போயிற்று. ஆதலால், இதன் மூலமாகவேனும் தங்களது செல்வாக்கை நிலை நிறுத்திக் கொள்ள அலி சகோதரர்கள் விரும்புகிறார்கள் என்றுங் கூறினர். நமது தலைவர் இவர்களுடைய எதிர்ப்புக்கு அஞ்சவில்லை. இவர்களுக்கும் தக்க பதில் கொடுத்தார். "செல்வாக்கிழந்த லீடர் என்பது மெய்யாயின் நாமிருவரும் ஜாமிஆ மஸ்ஜிதுக்குச் செல்வோம். அங்கு நீங்களும் பிரசங்கம் செய்யுங்கள். நானும் பிரசங்கம் செய்கிறேன். பொது ஜனங்களின் அபிப்பராயம் எவர் பக்கம் சாதகமாக இருக்கிறதோ, அவரே செல்வாக்குள்ள தலைவர் என்றும், எவருடைய அபிப்பராயத்தைப் பொது ஜனங்கள் ஆதரிக்கவில்லையோ அவர் 'செல்வாக்கிழந்த லீடர்' என்றும் முடிவு செய்து கொள்வோம்" என்று அறை கூவி அழைத்தார்.

வெற்றி :—எவ்வாறாயினும், அலி சகோதரர்களின் சொல்லின்பேரில் ஆயிரக் கணக்கானவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்று, தங்களது மதக்கடமையை இனிது நிறைவேற்றினர்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

நஜ்த் ஹிஜாஸ் யுத்தம்

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலீ ஜௌஹர் அவர்களது ஜீவியம் முழுவதும் சண்டை போடுவதும், பல நண்பர்களின் மனஸ்தாபத்திற்காளா வது மாகவே இருந்தது. இப்போராட்டங்களிலெல் லாம் அவர் உலகம் பிரமிக்கத் தக்க உறுதியைக் காண்பித்தார்.

ஷரீப் ஹுஸைனின் அக்கிரமங்கள் :—துருக்கி யரின் கவர்னராக மக்காவிலிருந்த ஷரீப்ஹுஸைன் மகா யுத்தத்தின் போழ்து துருக்கிக்குச் செய்த துரோகத்தையும், நேச தேசத்தாரின் கையாளாக இருந்ததையும் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக் கிறது. அவர் செய்த அக்கிரமமான நடத்தைகளால் உலகம் அவர் மீது வெறுப்படைந்திருந்தது. இஸ் லாமிய ஒற்றுமையைத் துண்டு துண்டாக ஆக்கி விட்ட தன் காரணமாக உலகத்திலுள்ள முஸ்லிம்களனைவரும் வருத்த முற்றிருந்தனர். ஆயினும், இந்தியாவிலுள்ள ஒரு பெரும் கூட்டத்தினர் ஹிஜாஸில் ஷரீப்ஹுஸைன் ஆதிக்கம் வகிப்பதை அங்கீகரித்துக் கொண்டிருந்தனர். ஷரீப்ஹுஸைனின் பெற்றோர்களிருவரும் ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களது வம்சத்தினராக இருந்ததே இதற்குக் காரணம். சுல்தான் இப்னுஸஊது வஹ்ஹாபி யாக இருக்கிறார். ஆதலால், அவர் ஹிஜாஸில் அரசு

புரிய அருகதை யற்றவர் என்பதும் அவர்களது அபிப்பராயம்.

ஸூபிகள், பீர்கள், முர்ஷிதுகள் மூலமாகவே இந்தியாவில் இஸ்லாம் பரவிற்று. இவர்களால் இஸ்லாத்திற்கு அநேக நன்மைகள் உண்டாயின. இப் பெரியார்களுக்கு அதிக செல்வாக்கும் கண்ணியமு மேற்பட்டிருந்தன. ஆனால், அவர்களது வம்சத்திலுதித்தவர்கள் அப்பெரியார்களின் அடிச் சுவட்டினை சரியாகப் பின்பற்ருமல், தங்கள் மூதாதையரின் அரிய பெரிய ஊழியங்களைப்பற்றித் தற்பெருமை கொள்வதிலும், தங்களது வம்சம் உயர் வம்சமென்று கர்வமாக நினைப்பதிலுமே காலங் கடத்தி விட்டனர். நமது இந்தியா நாட்டிலுள்ள ஒரு சில வர்க்கத்தார் அப் பெரியார்களின் பரிசுத்தத் தன்மையை மதித்து, அவர்களது வம்சத்தில் வந்தவர்களுக்கு அதிக கண்ணியத்தையும் மதிப்பையுங் கொடுத்து, அவர்களை இன்னும் அதிகமாக அகம்பாவம் கொள்ளும்படிச் செய்து விட்டனர். இவ்விதமான உணர்ச்சி இந்தியாவிலிருந்ததால், ஷரீப் ஹுஸைனை ஹிஜாஸை விட்டு அப்புறப்படுத்தி, அவருடைய ஸ்தானத்தில் நஜத் சுல்தான் வர முயலுகிறுர் என்ற சமாசாரம் இந்தியாவுக்கு எட்டியபோது, ஷரீப்ஹுஸைன் செய்த துரோகத்தையும், அவர் செய்த கெடுதல்களையும் ஜனங்கள் மறந்து, ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களது வம்சத்தில் தோன்றியவர்தான் ஹிஜாஸில் அரசு செலுத்த அருகதையுள்ளவர் என்ற ஒரே எண்ணத்தை மனதில் கொண்டு, அவரை ஆதரிக்கத் தொடங்கினர்.

இந்த நிலைமையில், "சுல்தான் இப்னுஸஊதுடைய போர் வீரர்கள் மக்கா, தாயிப், மதீனா முதலிய இடங்களிலுள்ள பெரியார்களின் மஜார்களையும், ஞாபகச் சின்னங்களையும் இடித்து தகர்த்தெறிந்து விட்டார்கள்" என்ற செய்தி இக் கூட்டத்தினரை அதிகமாகக் கிளப்பி விட்டது. ஆகவே, இந்தியாவில் சுல்தான் இப்னுஸஊதுக்கு விரோதமாகப் பெருங் கூட்டம் கிளம்பிற்று.

இவ்வாறு கிளம்பிய கூட்டத்தில் இரண்டு வர்க்கத்தினர் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். ஒருவர் புரைலிக் கூட்டத்தினர். மற்றொருவர் லக்நௌ பரங்கி மஹல்லாவினர். புரைலிக் கூட்டத்தார் கிலாபத் கிளர்ச்சியின் போழ்து இந்திய முஸ்லிம்களின் கக்ஷியில் சேர்ந்து உழைக்காததால், பொது ஜனங்களிடம் தங்களுக்கிருந்த செல்வாக்கை இழந்துவிட்டனர். தவிரவும் அவர்கள் சில பிரசுரங்களையும் பத்வாக்களையும் மட்டில் பிரசுரித்துவிட்டு, காரியத்தில் இறங்கி வேலை செய்யும் பழக்கமில்லாதவர்கள். ஆதலால், அவர்கள் தங்களது வழக்கத்திற்கேற்ப இப்பொழுதும் பத்வாக்களை அச்சிட்டுப் பிரசுரித்ததுடன் காரியத்தில் ஈடுபட்டு உழைக்காமல் வீட்டிலேயே இருந்துகொண்டனர். இவர்கள் செல்வாக்கை இழந்திருந்ததால், இவர்களது பத்வாக்களுக்கு மதிப்பில்லாமலும் இருந்தது. ஆதலால், இவர்களது கிளர்ச்சி நாட்டில் உறம் பெறவில்லை.

லக்நௌபரங்கி மஹல்லாவிலுள்ளவர்கள் வெகு காலமாக இஸ்லாத்திற்கு உழைத்தவர்கள். கிலாபத்

கிளர்ச்சியின் போழ்து அதில் அதிக பங்கெடுத்து அரிய பெரிய ஊழியங்கள் செய்தவர்கள். ஆதலால். அவர்களுக்கு ஏற்கனவே இருந்த செல்வாக்கிற்கும், கண்ணியத்திற்கும் மேல் அதிகமான கண்ணியமும் செல்வாக்கும் நாட்டில் ஏற்பட்டிருந்தன. சுல்தான் இப்னுஸஊதின் ஆட்கள் கப்றுகளையும், மஜார்களையும், ஞாபகச் சின்னங்களையும் இடித்தது இக் கூட்டத்தினருக்குக் கோபத்தையும், வெறுப்பையும் உண்டாக்கிவிட்டது. இவர்கள் இப்னுஸஊதிற்கு விரோதமாகக் கிளம்பியதால், நாட்டில் பெருங் கிளர்ச்சியும் ஆர்ப்பாட்டமும் ஏற்பட்டன.

மௌலானா முஹம்மது அலி:—இப்பொழுது நமது தலைவர் தர்ம சங்கடமான நிலைமைக்கு வந்து விட்டார். ஷரீப் ஹுஸைன் ஹிஜாஸில் அரசராக இருப்பதால், உண்மையான முஸ்லிம் அரசாங்கமில்லை. அவர் கிறிஸ்துவ ஏகாதிபத்தியம் கூறுகிறபடி ஹிஜாஸை ஆட்சி புரிபவராக இருக்கிறார். தவிர, ஷரீப்ஹுஸைன் ஆட்சியானது மறைமுகமான கிறிஸ்துவ ஆட்சியாக இருக்கிறது. ஆதலால், அவரது ஆட்சி ஒழிந்து இஸ்லாமிய ஆட்சி ஏற்படவேண்டும் என்பது அவரது விருப்பம். ஆதலால், அவர் ஷரீப்ஹுஸைனை ஆதரிக்க முடியவில்லை. தவிர, ஹிஜாஸிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்கள் ஹனபி, ஷாபி, ஹன்பலி, மாலிக்கி, ஷியா, சுன்னி, வஹ்ஹாபி ஆகிய சகல முஸ்லிம் வகுப்பினருக்கும் பொதுவானவை. ஆதலால், அங்கு அரசாங்கம் ஏற்படுவதானது எல்லா வகுப்பினரின் மத உணர்ச்சியையும்

புண் படுத்துவதாகவோ அல்லது ஒரு கக்ஷியினரின் கொள்கையையும் உணர்ச்சியையும் மட்டும் மதித்து, ஏனைய கக்ஷியினரின் உணர்ச்சியை அலக்ஷியம் செய்வ தாகவோ இருக்கக் கூடாது. இன்று வஹ்ஹாபி ஆட்சி ஏற்பட்டு, கப்றுகளையும் மஜார்களையும் தகர்த்துத் தரை மட்டமாக்கினால், நாளை ஷியா வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தினால், ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களது ரௌலாவில் நித்திய ஜீவிகளாக இருந்து நித்திரை செய் யும் ஹஜ்றத் அபூபக்கர்ஸித்தீக் (றலி), ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) ஆசிய இரு பெரியார்களின் மஜார்களையும் அப்புறப்படுத்த முயலுவார்கள். ஆதலால், வகுப்புக் கொள்கைக்கு இடம் பெறாத ஆட்சிமுறை ஹஜாஸில் ஏற்படவேண்டும் என்பது அவரது கருத்து. ஆதலால், கப்றுகளையும், மஜார்களையும் இடித்ததாகத் தகவல் எட் டியவுடன் மௌலானா அபுல்கலாம் ஆஜாதின் தலைமை யின்கீழ் கிலாபத் கான்பரன்ஸைக் கூட்டினார். இக்கான் பரன்சுக்கு பஞ்சாப் அஹ்றார் பார்ட்டியினரும் வந் திருந்தனர். இம் மகாநாட்டில் "ஹிஜாஸில் முடியாட்சி ஏற்படக் கூடாது. அங்கு ஒரு மகாநாடு கூட்டப்பட வேண்டும். அம் மகாநாட்டிற்கு இஸ்லாமிய உலகி லிருந்து பிரதிநிதிகள் அங்கத்தினர்களாகத் தெரிந் தெடுக்கப்படவேண்டும். இடிக்கப்பட்ட மஜார்களையும் கப்றுகளையும் திரும்பக் கட்டவேண்டுமென்று இதில் முடிவு செய்யப்பட்டால், சுல்தான் இப்னுசுஊத் அவை களைத் திரும்பக் கட்டித் தரவேண்டும்" என்ற கருத் துள்ள தீர்மானங்களை நிறைவேற்றி, சுல்தான் இப்னு

சுஊதுக்கனுப்பினர். இதற்கு மறுமொழியாக சுல்தான் இப்னுசுஊது "பொது அறிக்கை" களின் மூலமாக இக் கோரிக்கைகளை ஒப்புக்கொள்வதாக வாக்குத் தத்தம் செய்ததுடன், தம்முடைய உத்தரவுக்கு மீறியே தமது சைன்யங்கள் இம்மாதிரி செய்துவிட்டதாகவும், தலைவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் இவைகள் இடிக்கப்பட்ட சமாசாரம் தமக்குத் தெரிய வந்ததென்றும், தவறு ஏற்பட்டதற்கு வருந்துவதாகவும், அகில உலக முஸ்லிம் மகாநாடு தீர்மானம் செய்யும் பக்ஷத்தில் அவைகளை மராமத்துச் செய்யத் தயார் என்றும் அறிக்கைகள் விடுத்தார்.

சுல்தான் இப்னுசுஊத் இம்மாதிரி விடுத்த அறிக்கைகளை மௌலானா முஹம்மது அலியும் மற்றவர்களும் அங்கீகரித்ததுடன், அவர் மன்னிக்கப்படத் தகுந்தவர் என்றுங் கருதினர். லக்ஷ்மணபுரி, பரேலி முதலிய பார்ட்டியினர் இவ் வறிக்கைகளை ஒப்புக்கொள்ளாமல் கிளர்ச்சி செய்தனர்.

நமது தலைவர் மௌலானா தமது நோக்கம் நிறைவேறுவதற்கான காலம் வந்துவிட்டது என்றுணர்ந்ததுடன், ஹிஜாஸின் ஆட்சிமுறையை இஸ்லாமிய உலக மகாநாட்டின் முடிவுக்கு விட்டுவிடுவதாக சுல்தான் இப்னுசுஊத் கூறியதை நம்பி, அவரை ஆதரிக்கும் கக்ஷியில் சேர்ந்தார். எனவே, அவர் தமது ஞானாசிரியரான மௌலானா அப்துல் பாரீ சாகிப், தம்முடைய சக ஊழியரும் நண்பருமான மௌலானா அப்துல் மாஜித் புதாயூனீ, கராச்சி வழக்கில் தம்முடன் தண்டனை

யடைந்த மௌலானு நிஸார் அஹ்மது சாகிப், தமது உபகாரியான மஹ்மூதாபாத் மகாராஜா போன்றவர்களுக்கு விரோதமாக வேலைசெய்ய வேண்டியதாயிற்று. இப் பிளவு சாதாரணமானதல்ல. மத உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. மத உணர்ச்சியில் தகப்பன் தனது பிள்ளையையும், தனயன் தனது தந்தையையும் தயவு தாட்சண்யம் பாராட்ட மாட்டான். மௌலானு அவர்கள் தகப்பனுமல்லர், தனயனுமல்லர். ஆகவே, பிளவு பலமாக உண்டாயிற்று. தூஷணைகளும் கேவலமாகப் பேசுவதும் அதிகரித்தன. அவரது உயிருக்கு ஆபத்தை உண்டாக்கவும் கூட முயற்சி செய்யப்பட்டது. எனவே, தமது மார்க்க உணர்ச்சியின் மேலீட்டால் இவைகளொன்றையும் பாராட்டாமல் தமது குருவையும், நண்பர்களையும், உபகாரிகளையும் எதிர்ப்பதில் அவர் கொஞ்சமும் பின்வாங்கவில்லை.

ஹறம் ஊழியர் சங்கம்:—மௌலானு அவர்களின் ஞான குருவான லக்ஷ்மணபுரி பரங்கிமஹல்லாவிலுள்ள மௌலானு அப்துல்பாரீ சாகிப், ஸெய்யித் ஜாலிப்சாகிப் மர்ஹூம், டாக்டர் நவாப் அலி, ஷெய்கு முஷீர் ஹுஸைன்கித்வாயி, பரங்கிமஹல்லாவிலுள்ள பிரபலஸ்தர்கள் முதலியவர்களைக்கொண்டு "அஞ்சுமனே குத்தாமுல்ஹறமைன்" (ஹறம் ஊழியர் சங்கம்) என்ற பெயரால் ஒரு சங்கத்தை நிறுவி; மௌலானு ஹஸ்ரத் மோஹானியின் தலைமையின் கீழ் ஒரு மகா நாட்டைக் கூட்டினார்கள். இம்மகா நாட்டிற்கு எதிர் கக்ஷியினர் அனுமதிக்கப்படவில்லை. மிகவும் உக்கிரமான பிரசங்

கங்களும் நடந்தன. கண்டனத் தீர்மானங்களும் செய்யப்பட்டன.

நமது தலைவர் மௌலானா தம்மாலானவரை இக்கிளர்ச்சியை அடக்க முயற்சி செய்தார். "சுல்தான் இப்னுசஊத் செய்து கொடுத்த வாக்குறுதி நிறைவேற அவருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்; அவர் அகில உலக முஸ்லிம் மகா நாட்டைக் கூட்டட்டும்; அம்மகா நாட்டிற்குச் செல்லுங்கள்; அங்கு உங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்; சுல்தான் இப்னுசஊத் உங்களது கோரிக்கையை அங்கீகரிக்கவில்லையானால், நானும் உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன்; அவரை எதிர்த்து வேண்டிய முயற்சிகளைச் செய்கிறேன்" என்று கூறி இக்கிளர்ச்சியைத் கொஞ்சம் தணிக்க முயன்றார்.

இது குறையாமல் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஆகவே, சுல்தான் இப்னு சஊதை ஆதரித்து பரீக்ஷார்த்தமாக லக்ஷ்மணபுரியில் ஒரு மகாநாட்டைக் கூட்டலாம் என்று நமது மௌலானாவின் கக்ஷியார் முடிவு செய்தனர். "அந்நாஸிர்" பத்திரிகையின் ஆசிரியரான மௌலானா ஜுபருல்முல்க் அலவீ, சௌத்ரீ கலீகுஸ்ஸமான், மௌலானா அப்துல் மாஜித் தர்யாபாதி ஆகியவர்கள் மகாநாட்டைக் கூட்டினர். தங்களை ஆதரிக்கும் கக்ஷிக்காரர்கள், எதிர்க்கும் கக்ஷிக்காரர்கள் யாவருக்கும் பொதுவான அழைப்பு விடுக்கப்பட்டது. இக் கூட்டத்திற்கு எல்லோரும் வந்தனர். எதிர் கக்ஷியின் தலைவர்களான மௌலானா அப்துல் பாரீ சாகிப், நவாப் டாக்கர்அலி,

ஷெய்கு முஷீர் ஹுஸைன் கித்வாயி, மௌலானா ஷாஹ் சுலைமான் சாகிப் புல்வாரீ முதலியவர்களும் வந்தனர்.

எதிர் கக்ஷியினர் பலவந்தமாக மௌலானா ஷாஹ சுலைமான் சாகிப் புல்வாரீயைத் தலைவராகத் தெரிந்தெடுத்தனர். மௌலானா முஹம்மது அலியின் கக்ஷியைச் சேர்ந்த மௌலவி அப்துர் ரஜ்ஜாக் சாகிப் மலீஹ அபாதி பிரசங்கம் செய்தார். இவர் சில வார்த்தைகளைக் கூறியவுடனேயே கூட்டத்தில் குழப்பமுண்டாயிற்று. இதன்பேரில் இக் கக்ஷியார் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியைத் தருவித்து, ஹறம் ஊழியர் சங்கத்திற்கு தலைமை ஸ்தானமான லக்ஷ்மணபுரியிலேயே பலமாகப் பிரசாரம் செய்து பார்த்துவிட வேண்டும் என்று முடிவு செய்து, அச்சமயம் சீதாபுரியில் நடைபெற்ற மாகாண காங்கிரஸுக்குச் சென்றிருந்த நமது தலைவரை லக்ஷ்மணபுரிக்கு அழைத்துவந்தார்கள். சௌத்ரீ கலீகுஸ்ஸமான் தலைமையின் கீழில் கூட்டம் நடைபெற்றது. மௌலானாவுடன் தௌபீக் ஷரீப் என்பவரும் வந்திருந்தார். அவரை நமது மௌலானா சபையினருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிறகு, அவர் அறபியில் பிரசங்கம் செய்தார், அதனை மௌலானா அப்துர் ரஹ்மான் உருதுவில் மொழி பெயர்த்துக் கூறினார்.

தௌபீக் ஷரிப் பிரசங்கம் செய்யும் வரையில் கூட்டத்தில் அமைதி நிலவி இருந்தது. பிறகு, நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி பிரசங்கம் செய்ய

எழுந்தார். எதிர் கக்ஷியினர் குழப்பம் செய்ய ஆரம்பித்தனர். "நாங்கள் கேட்கமாட்டோம், உட்கார்ந்து விடுங்கள், மௌலானா ஹஸ்ரத் மோஹானி முதலில் பிரசங்கம் செய்யட்டும்" என்று கூச்சலிட்டனர். மௌலானா அவர்கள்மீது அபிமானங் கொண்டவர்களும் பதிலுக்குக் கூச்சலிட வாரம்பித்தனர். ஆனால், அக் கூட்டத்தின் அக்கிராசனர் அப்படிச் செய்யவேண்டாமென்று இவர்களை அடக்கினார். பிறகும், எதிர் கக்ஷியினர் கூச்சலிட்டுக்கொண்டே இருந்தனர். இவ்விதமாக 15-20 நிமிஷங்கள் வரை இக் கூச்சலிருந்தது. இறுதியாக அக்கிராசனர் பிறர் உதவிகொண்டு கூட்டத்தை அடக்க இஷ்டப்படாமல் கூட்டத்தைக் கலைத்து விட்டார்.

இம்மாதிரி கூட்டங் கலைந்தது நமது தலைவர் மௌலானா அவர்கள் பால் அபிமானங் கொண்டவர்களுக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்தது. இவர்களை அக்கிராசனர் அடக்கி வைத்திராவிடில் கூட்டத்தில் பெருங் கலகம் ஏற்பட்டிருந்திருக்கும். இக் கூட்டத்தைக் கூட்டியவர்கள் வெகு சமர்த்தாகக் கலகம் உண்டாகவிடாமல் சமாளித்துக் கொண்டனர். இதனால், சுல்தான் இப்னுசுஊதைக் கடைசிவரை பலமாக ஆதரிக்கவேண்டும் என்ற உணர்ச்சி சில தலைவர்களுக்கு உண்டாயிற்று. ஆதலால், மற்றொரு கூட்டத்தைப் பகலிலேயேகூட்டவேண்டுமென்றும், எல்லா கக்ஷியினரையும் இக் கூட்டத்திற்கு வர அனுமதிப்பதுடன், எதிர் கக்ஷியின் சூழ்ச்சியைப் பலிக்கவிடாமற் செய்துவிடவேண்டு

மென்றும் முடிவு செய்து, மற்றொரு மகாநாடு கூட்டப் படுவதற்கான ஏற்பாடுகளைப் பலமாகச் செய்தனர்.

மௌலானா முஹம்மதுஅலி அவர்கள் அவசர மான பல அலுவல்களை விட்டுவிட்டு இம் மகா நாட்டிற்கென லக்ஷ்மணபுரிக்கு வந்ததால், உடனே டில்லிக்குத் திரும்பவேண்டியதாயிற்று. ஆனால், அடுத்த முறை கூடும் மகாநாட்டிற்கு அவசியம் வருவதாக வாக்களித்துவிட்டுச் சென்றார்.

இரண்டாவது மகாநாடு:—மறுபடியும் மகாநாடு கூட்டுவதற்கான ஏற்பாடுகளை மௌலானா ஜுபருல் முல்க் சாகிப் அலவி துரிதமாகச் செய்ததுடன், நகரிலும் போதியளவு விளம்பரங்களையும் செய்து, மௌலானா முஹம்மதுஅலி அவர்களுக்கு அழைப்பு அனுப்பினர். மௌலானா அவர்களும் லக்ஷ்மணபுரிக்கு வந்து சேர்ந்தார். எதிர் கக்ஷியினர் இம் மகாநாட்டைக் கூட விடாமற் கலைத்துவிடுவதற்காகப் பலமாக எதிர்ப் பிரசாரமும் முயற்சியும் செய்தனர்.

அசர்த் தொழுகைக்குப் பின் மும்தாஜ் அனாதச் சாலையில் மகாநாடு கூடிற்று. பதினாயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடினர். ஆனால், கைத்தடிகளுடன் வந்தவர்களைக் கூட்டத்திற்குள் வர அனுமதிக்கவில்லை. தடி இல்லாமல் வந்தவர்களெல்லோரும் அனுமதிக்கப் பட்டனர். "ஹறம் ஊழியர்கள்" என்ற பில்லை போட்டவர்கள் தடிகளுடன் பெருந் திரளாக வந்து, மகாநாடு கூடுமிடத்திற்குட் செல்ல விரும்பினர். இவர்களைத் தடியுடன் செல்ல அனுமதிக்கவில்லை.

கலகம் வரும் தருவாயிலிருந்தது. இதற்குள்ளாக அலிசகோதரர்களும் சௌத்ரீ கலீக்குஸ்ஸமான் சாகிபுடன் வந்து சேர்ந்தனர். அலிசகோதரர்களை தரிசிக்க அபிமானிகள் கூட்டமாக வந்தனர். அவர்களை அடிப்பதற்காக எதிர் கக்ஷியினர் தடிகளுடன் நெருங்கினர். ஆனால், அவ் விரு சகோதரர்களும் புன்னகையுடன் இரு கக்ஷியினரையும் வரவேற்றனர். ஆகவே, எல்லா கக்ஷியினரும் ஒன்று கூடிக்கொண்டு "அலிசகோதரர்களுக்கு ஜே!" என்று ஜெயகோஷமும் தக்பீரும் முழங்கினர். எதிர் கக்ஷியைச் சேர்ந்தவர்களும் அலிசகோதரர்களுக்குப் பணிந்தனர்.

ஆனால், எதிர்கக்ஷி தலைவர்கள் தங்கள் எதிர்ப்பு வேலையை விடவில்லை. மகாநாடு நடைபெறு மிடத்திற்கு, தடிகளுடன் செல்ல விரும்பினர். இம் மகாநாட்டைக் கூட்டிய மௌலானா ஜுபருல்முல்க் சாகிப் அலவீ எதிர் கக்ஷியின் பிரபலஸ்தரான ஷெய்குமுஷீர் ஹுஸைன் கித்வாயியை நோக்கி "அமைதியை உண்டாக்குவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். கூட்டத்தில் சந்தடி யுண்டாக்கக் கூடாது. இதற்கு நீங்கள் ஜவாப்தாரியாக இருப்பின், தடிகளுடன் ஜனங்கள் வருவதற்கு ஆக்ஷேபனை இல்லை" என்று கூறினர். ஆனால், அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். பிறகு இம் மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.

மூன்றாவது மகாநாடு:—ஆனால், மறுநாள் அமீனுத் தௌலா பார்க்கிலும், அதற்குமுன் மும்தாஜ்

ஹஸன் வீட்டிலும் மகாநாடுகள் நடைபெற்றன. இம் மகாநாடுகளில் மௌலானா முஹம்மதுஅலி பல மணிநேரம்வரை பிரசங்கம் செய்தார். ஜனக் கூட் டம் சமுத்திரம்போல் பெருகி இருந்தது. எவ்வித மான கூச்சலும் குழப்பமும் நடைபெறவில்லை. அலி சகோதரர்களுக்கு ஜெய கோஷமும், தக்பீர் முழக்கமும் வானைப் பிளந்தன. இதற்குப்பிறகு 2 நாட்கள்வரை நமது தலைவர் மௌலானா லக்ஷ்மணபுரியில் தங்கி, பிரசங்கங்கள் பல புரிந்தார். லக்ஷ்மணபுரியிலுள்ள முஸ் லிம்களிற் பெரும்பாலர் மௌலானாவின் கக்ஷியின ராயினர்.

இவ்விதமாக நமது தலைவர் பெரும் வெற்றியடைந்து, இந்தியாவில் தோன்றிய இப் பிரிவினையை அகற்றி, யாவரையும் ஒன்றுபட்ட அபிப்பராயத்திற்கு வரும்படிச் செய்தார்.

கிலாபத் கமிட்டியின் திட்டம்:—இதற்குள்ளாக கிலாபத் கமிட்டியும் ஒரு திட்டத்தைத் தயார்செய் தது. சுல்தான் இப்னுசுஊதிடமிருந்து விபரமான தகவல்களைத் தெரிந்ததுடன் "ஹிஜாஸில் முடியரசேற் படுவதையும், தனிப்பட்ட நபர் அரசாங்கம் செலுத் துவதையும் கிலாபத் கமிட்டி விரும்பவில்லை; இடிக்கப் பட்ட கப்றுகளையும் குப்பாக்களையும் திரும்பக்கட்டு வதை ஆதரிக்கிறது என்று தீர்மானம் செய்ததுடன் அகில உலக முஸ்லிம்மகாநாட்டில் இவைகளைத் திரும்பக் கட்டிக்கொடுக்கவேண்டும் என வற்புறுத்த வேண்டும்" என்பதாக்வும் முடிவு செய்தது.

சுல்தான் இப்னுசுஊதின் முடிசூடு:—சுல்தான் இப்னுசுஊதை ஹிஜாஸ் வாசிகள் "நிர்ப்பந்த"ப் படுத்தியதன்பேரில் அவர் ஹிஜாஸுக்கு அரசர் என முடிசூட்டிக் கொண்டார் என்று கொஞ்ச காலத்திற்குப் பின் ஹிஜாஸிலிருந்து செய்தி வந்தது. இச்செய்தியை "ஹம்தர்து" பத்திரிகை கருப்புக் கட்டத்துக்குள் பிரசுரித்தது. நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி பிறவியாலும், கொள்கையாலும் முடியாட்சிக்கு விரோதமாக உள்ளவராதலால், சுல்தான் இப்னு சுஊதின் இக்காரியத்தைக் கண்டனம் செய்வதில் முன்னணியில் நின்றார்.

மௌலானாவின் எதிர்ப்பு: எனவே, இப்பொழுது நமது தலைவர் சுல்தான் இப்னு சுஊதை எதிர்ப்பவராகவும், அரசரென்று தம்மைப் பிரகடனஞ் செய்து கொண்டதை வெறுப்பராகவும் மாறி விட்டார். இது வரை தம்முடைய ஞான குரு, சகஊழியர்கள், நண்பர்கள் முதலியவர்களைக் கொண்ட ஹறம் ஊழியர்களை எதிர்த்து வேலைசெய்து கொண்டிருந்ததும், அவர்களது எதிர்ப்பும் விரோதமும் இன்னமும் அமராமலும் ஒடுங்காமலுமிருக்கிற நிலைமையில், இப்னுசுஊதையும் எதிர்க்க வேண்டியதாயிற்று. எனவே, நமது தலைவர் தமது வாணுள் முழுவதும் சத்தியத்தை மீறிநடப்பவர்கள், உசிதானுசிதத்தைக்கவனியாமல் நடப்பவர்கள் முதலியவர்களை எதிர்ப்பதிலும், அவர்களுடன் போராடுவதிலுமே கழிவதாக ஏற்பட்டு விட்டது.

சுல்தான் இப்னுசுஊதின் செய்கையை நமது தலைவர் கண்டிக்க ஆரம்பித்ததிலிருந்து, ஹறம் ஊழியர்களை எதிர்த்துப் போராடியபோது தமக்கு பக்கபலமாக இருந்த தமது கக்ஷிக்காரர்களே தம்மை எதிர்க்க முன்வந்து விட்டனர். இப்பொழுது தமது படைக்குள்ளாகவே பிளவு ஏற்பட்டுவிட்டது. பஞ்சாப் மாகாண கிலாபத் கமிட்டி சுல்தான் இபனுசுஊதின் பட்டாபிஷேகத்தை ஆதரித்தது. அதன் மகாநாட்டில்தான் ஹிஜாஸின் முடியாட்சியை எதிர்த்தும், இடிந்த கப்றுகளை திரும்பக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இத்தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றிய கூட்டத்தினரே இப்பொழுது இத்தீர்மானத்திற்கு விரோதமாக சுல்தான் இப்னுசுஊதை ஆதரித்து மௌலானா அவர்களுக்கு விரோதமாகப் போர் தொடுத்து விட்டனர்.

ஆகவே, இத்தகைய எதிர்ப்புகளைப் பொறுமையுடன் சகித்ததுடன், தமது நண்பர்கள் செய்யும் தூஷணைகளையும் தம்மைப் புகழ்ந்துகொண்டும், தம் மீது அபிமானம் செலுத்திக்கொண்டு மிருந்தவர்கள் செய்த ஏசல்களையும் மலர்ந்த முகத்துடன் ஏற்றுக்கொண்டு, சத்தியத்தை ஆதரித்தல், அசத்தியத்தை வெறுத்தல் என்ற தமது கொள்கையினின்றும் கொஞ்சம்கூடப் பிரளாமல் உறுதியாக நின்றார். இம்மாதிரியான உறுதியாளர்கள் உலகத்தில் மிகச் சிலரே இருப்பர் என்பது உண்மை.

அகில உலக முஸ்லிம் மகாநாடு :— 1926-ல் சுல்தான் இப்னுசுஊது மக்கா முஅல்லமாவில் அகில உலக முஸ்லிம் மகாநாட்டைக் கூட்டுவதாக பொது அறிக்கை விடுத்தார். நமது தலைவர் மௌலானா தமது கக்ஷியை எடுத்துக்கூறும் பொருட்டு தம் முடைய சொந்த செலவின்பேரில் மக்கா முஅல்லமா விற்குப் பிரயாணமானார். கிலாபத் கமிட்டியும் தனது பிரதிநிதிகளை அனுப்பிற்று. இதனையல்லாமல் இந்தியாவிலிருந்து ஜமியத்துல் உலமா முதலிய பல ஸ்தாபனங்களும் தனது பிரதிநிதிகளை அனுப்பின. உலகத்தின் பலதேசங்களும் இம்மகா நாட்டில் கலந்துகொண்டன.

நமது தலைவர் பிறவியிலிருந்தே நோய்க்காளானவர். ஹிஜாஸுக்கு வந்தபின், இங்குள்ள சீதோஷ்ண நிலைமை ஒத்துக்கொள்ளாததால், சுகவீனமானார். இலகுவான பக்ஷவாதம் ஏற்பட்டது. ஆயினும், அதனையும் கவனியாமல் மகாநாட்டில் கலந்துகொண்டார். இம் மகாநாட்டை சுல்தான் இப்னுசுஊது திறந்து வைத்தார். மகாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளிற் பலர் சுல்தான் அவர்களின் சக்தியையும் வல்லமையுங் கண்டு பயந்து போயிருந்தனர். ஆனால், நமது மௌலானா சுல்தானைக் கொஞ்சமும் லக்ஷியஞ் செய்யவில்லை. அம்மகாநாட்டில் சுல்தான் அவர்களை நோக்கி உருக்கமாகப் பிரசங்கம் செய்து, பூரண சுயேச்சையுடன் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். அவர் தமது பிரசங்கத்தை ஆரம்பிக்கையில் “சுல்தானே! இந்த அரசாதிபத்தியம் எப்படி ஜாயிஸாகும்? இஸ்லாம் மதம் தனிப்பட்ட

வர்கள் அதிகாரம் செலுத்துவதை வேரறுத்திருக் கிறது. ஷூரா (கலந்தாலோசனை செய்தல்), ஜும்ஹூரி யத் (ஜன நாயக தத்துவம்) ஆகியவைகளுக்குத்தான் இஸ்லாத்தில் ஆதரவிருக்கிறது. நீங்கள் திருகுர்ஆனை யும், ஹதீதையும் பின்பற்றி நடப்பதாக தாவாச் செய் கிறீர்கள். அவ்வாறிருக்க கைஸர், கிஸ்ரா ஆகியவர்களைப் பின்பற்றுவ தெங்ஙனம் ?" என்று கூறி நீண்ட பிரசங் கம் செய்தார்.

நமது தலைவர் கொஞ்சமும் அஞ்சாமல் சத்தி யத்தை எடுத்துக் கூறியது எல்லா ஜனங்களுக்கும் உணர்ச்சியை யுண்டாக்கிற்று. " இன்னமும் உலகில் சத்தியவான்களும் சத்தியவாதிகளும் இருந்துகொண் டிருக்கின்றனர்; இக்காலம் கண்ணியவான்களான ஸஹாபிகள் காலமாக இல்லாவிடினும், சத்தியத்திற்காக ஏழுலகத்தையும் விரோதித்துக் கொள்ளவும், எந்த அரசரையும் சக்கிரவர்த்தியையும் லக்ஷியம் செய்யா மலும் இருக்கக்கூடிய ஜனங்களும்கூட இன்று நமது மத்தியில் இருக்கின்றனர் " என்பதை உணர்ந்தனர்.

சுல்தான் இப்னுசுஊதை நமது மௌலானு பலமாக ஆதரித்ததுபோல் அவரைப் பலமாக எதிர்த்துக் கண்டனமும் செய்தார். இதற்குக் காரணம் என்ன வென்பதை முந்திய அத்தியாயத்தின் மூலம் அறிந் திருப்பீர்கள். ஆயினும், இவ்விடத்தில் அதனைப் பற்றிச் சிறிது கூறுவது அவசியமாகும்.

கப்றுகளையும் மஜார்களையும் இடித்தது சம்பந்த மாகக் கிடைத்த செய்திகளை சுல்தான் இப்னுசுஊது

மறுத்து, இவைகள் மிகைப்படக் கூறும் சமாச்சாரங்களென அறிக்கை வெளியிட்டு, அகில உலக முஸ்லிம் மகாநாட்டின் தீர்மானப்படி நடந்து கொள்வதாக வாக்குறுதிகள் அளித்தார். ஹிஜாஸில் முடியாட்சியை ஏற்படுத்துவது தமது நோக்கமல்லவென்று அவர் பன்முறையும் கூறினர். இவ் வாக்குறுதிகள் கிலாபத் கமிட்டிக்கும், நமது தலைவர் மௌலானு அவர்களுக்கும் பிரத்தியேகமாகவும் அனுப்பப்பட்டன.

ஆனல், இம் மகாநாடு கூடுவதற்குமுன் கிலாபத் கமிட்டி அனுப்பிய தூதுவக் கூட்டத்தினர் அங்கு சென்று நேரில் விஷயங்களைக் கவனித்து, சுல்தான் இப்னுசுஊதின் அநியாய அட்டூழியங்களை ஒப்புக்கொண்டதுமல்லாமல் கப்றுகளையும், மஜார்களையும் இடித்திருப்பதைப் புகைப்படமும் எடுத்துவந்தனர். அதற்குப்பிறகு, அகில உலக முஸ்லிம் மகாநாட்டிற்குச் சென்ற, நமது தலைவர் இவைகளை அங்கு நேரில் பார்த்தார். தவிரவும், சுல்தான் இப்னுசுஊது இவைகளுக்குத் தக்க பரிகாரம் செய்வதற்குத் தயாராக இல்லாததையும் உணர்ந்தார். ஆகவே, அவருடைய பொறுமை அடக்கமுடியாததாகி விட்டது. வாக்குறுதியை நிறைவேற்றும்படி அவரைக் கேட்டார். அதுவும் நிறைவேற்றப்பட வில்லை. ஆதலின், சுல்தான் இப்னுசுஊதின் செய்கைகளைக் கண்டிக்கத் தொடங்கினர்.

எனவே, நமதுமௌலானு அவர்கள் அகில உலக முஸ்லிம் மகாநாட்டில் கலந்து கொண்டபின் இந்தியாவுக்குத் திரும்பவந்தபோது டில்லி முஸ்லிம்கள் சார்பாக

காஜா ஹஸன் நிஜாமி உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார். இதைப்பற்றி அவர் தமது "ரோஸ் நாம்சுஷா"வில் "மகுரிப் தொழுகைக்குப் பின் கூட்டம் நடைபெற்றது. ஜாமிஆ மஸ்ஜிதில் இவ்வளவு பெரிய கூட்டத்தை நான் இதற்குமுன் பார்த்ததில்லை. 15 அல்லது 20 ஆயிரம் பேர்களிருக்கும். மௌலானா முஹம்மது அலி சாகிபின் பிரசங்கம் சபையினரைக் கவர்ந்து விட்டது. 'அலி சகோதரர்கள் இஸ்லாத்தின் மீது உண்மையான ஆஷிக்கு (காதலர்)கள்' என்பது எனது நம்பிக்கை. இப்னுசுஊதை முதலில் ஜனங்கள் எதிர்த்தபோது அவர்கள் அவரை ஆதரித்தனர். இதற்குக் காரணம் இப்னுசுஊத் கெட்ட மனிதரல்லர் என்றும், மஜார்களும் கப்றுகளும் இடிக்கப்பட்டதாக வந்த செய்திகள் அளவுக்கு மீறிச் சொல்லப்பட்டவைகளென்றும், தவறானவைகளென்றும் நினைத்ததேயாகும். அந்தப் போராட்டத்தில் அவர்கள் உறுதியாக நின்றனர். இவ்விஷயத்தில் தங்களுடைய குருவான மௌலானா அப்துல் பாரீ சாகிப் றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுடனும் ஒத்திருக்க அவர்கள் சம்மதப்படவில்லை. இப்பொழுது அவர்கள் ஹிஜாஸுக்கு நேரடியாகச் சென்று, தங்கள் நேத்திரங்களால் எல்லா சம்பவங்களையும் பார்த்துக் கொண்டார்கள். ஆதலால், உண்மையுடன் இப்னுசுஊதுக்குமாறு செய்கிறார்கள்." என்றெழுதி இருக்கிறார்.

முப்பத்தொன்றும் அத்தியாயம்

காஜாஹஸன் நிஜாமியும் ஹைதராபாதும்

டில்லியிலுள்ள காஜாஹஸன் நிஜாமீ என்பவர் மஷாயிக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது சிஷ்யர்களும் இவருமாக மாதப்பத்திரிகை, வாரப்பத்திரிகை, தினசரிப்பத்திரிகை ஆக 5, 6 பத்திரிகைள் நடத்துகின்றனர். அநேக புத்தகங்களை இயற்றியவர். "ஜமீந்தார்" பத்திரிகைக்கு சொந்தக்காரரும், லாகூரிலுள்ள பிரபல தலைவர்களில் ஒருவருமான மௌலானா ஜுபர் அலிகான் முன்னர் "விடிவெள்ளி" என்ற பெயரால் ஒரு பத்திரிகையை நடத்திவந்தார். அதில் பிரசுரமாகும் வியாசங்கள் ஸுபி வேஷம் போடும் கள்ள ஞானிகளைக் கண்டிப்பனவாக இருந்தன. ஆதலால், மஷாயிக் குடும்பத்தைச் சேர்ந்த காஜாஹஸன் நிஜாமிக்கு இவைகள் வருத்தத்தைக் கொடுத்தன. ஆதலால், மௌலானா ஜுபர் அலிகானை அவர் தமது விரோதிகளில் ஒருவராகக் கருதி இருந்தார்.

மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் அலி சகோதரர்கள், டாக்டர் அன்னி பெஸன்ட் ஆகியவர்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டது போல், மௌலானா ஜுபர் அலிகானும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருந்தார். மூன்று வருஷ காலத்திற்குப்பின், ஸர். மைக்கேல் ஒட்வியரை அதிகச்சிரமத்துடன் திருப்தி படுத்தியபின், இவர் விடுதலையடைந்து ஹைதராபாது சென்று வசித்து வந்தார்.

இஃது இப்படி இருக்க துருக்கியர்கள் பிரிட்டிஷாருக்கு விரோதியான ஜெர்மானியருடன் சேர்ந்து கொண்டபோது "டைம்ஸ ஆப் இந்தியா" பத்திரிகையின் மாஜி ஆசிரியர் இங்கிலாந்திலுள்ள "டெய்லி மெயில்" பத்திரிகையில், துருக்கியிலிருந்து டில்லி நகரம் வரை முஸலிம்களின் ஆட்சியும், முஸ்லிம் பெரும்பான்மையும் -இருப்பதைச் சுட்டிக் காட்டி, ஒரு முக்கியமான வியாசமெழுதி இருந்தார். இதன் பேரில் அக்காலத்தில் இந்திய ராஜ பிரதிநிதியாக இருந்த லார்டு செம்ஸ்போர்டு ஹிந்து தலைவர்களை மட்டிலும் அழைத்துக் கலந்தாலோசனை செய்தார். எனவே, முஸ்லிம்கள்மீது அரசாங்கத்திற்கு விசேஷமான பீதியும் கண் காணிப்புமிருந்து வந்தது.

இவ்வித நிலைமையில் காஜா ஹஸன் நிஜாமி டில்லி போலீஸ் கமிஷனரிடம் "மௌலானா ஸூபர் அலிகான் ஹைதராபாத் நவாபுக்கு "பான் இஸ்லாமிஸம்" என்ற இயத்தைப் பற்றி போதித்து வருகிறார். தற்போது அவர் ஹைதராபாதில் நவாபின் ஆதரவில் இருந்து வருகிறார்" என்று தெரிவித்துக் கொண்டார். உடனே போலீஸ் கமிஷனர் பஞ்சாப் கவர்ன்மெண்டுக்கு இதையறிவித்தார். ஆகவே, இதைப் பற்றி சர்க்கார் அதிகக் கவனம் செலுத்திற்று. இதன் பயனாக லார்டு ரீடிங் இந்திய வைசிராயாக இருந்த காலத்தில் ஹைதராபாத் நவாப் அவர்களுக்கும் சில சங்கடங்கள் உண்டாயின.

காஜாஹஸன் நிஜாமி இப்படிக்கூறிய விபரத்தைத் தமது நண்பர் ஒருவருக்கு கடிதத்தில் எழுதி அறிவித்-

திருந்தார். ஹைதராபாத் சமஸ்தானத்திற்குக் கஷ்டம் வந்ததால், அந்த நண்பர் அக் கடிதத்தைக் கொண்டு வந்து, நமது தலைவர் மௌலானு அவர்களிடம் கொடுத்து விட்டார். சத்தியவாதியான நமது தலைவர் காஜா ஹஸன்நிஜாமியுடன் தமக்கிருந்த இஷ்டத்தையும், சிநேகத்தையும் பாராமல் அவர் எழுதிய கடிதங்களை எல்லாம் தமது பத்திரிகையில் பிரசுரித்து, இதுசம்பந்தமாக எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைளை எடுத்துக்கொண்டார். காஜாஹஸன் நிஜாமியும் தம் மீது குற்றம்வராமலிருப்பதற்காகச் செய்ய வேண்டிய காரியங்களைத்தவருமல் செய்ததுடன் நமது தலைவரைப் பற்றி எவ்வளவு கேவலமாக எழுதமுடியுமோ, அவ்வளவையும் எழுதினர்.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

ஸ்பேஷல் கிலாபத் கான்பரன்சு

நமது தலைவர் மௌலானு முஹம்மதுஅலி கராச்சி வழக்கில் தண்டிக்கப்பட்டபின் தேசத்தின் நிலைமை எவ்வாருயிற்று? தேசிய இயக்கம் எவ்வித மாகச் சீர்குலைக்கப்பட்டது என்ற விபரங்கள் இதற்கு முந்திய அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. சமாதானம், அமைதி, சத்தியம், ஒற்றுமை, உண்மை, அந்தரங்க சுத்தி ஆகியவைகளுக்காக உழைத்து வந்த ஹிந்து முஸ்லிம் தலைவர்கள் மௌனமாக ஒதுங்கி விட்டனர். இவர்கள் தேசத்தில் நடக்கும் காரியத்தை கவனித்துக்கொண்டு வாய் பேசாதிருந்த னர். ஆனல், நமது தலைவர் மௌலானு அவ்வாறு இருக்காமல் முஸ்லிம்களுக்குள் ஏற்பட்ட தன்ஜீம், தப் லீக் சபைகளை அடக்கி ஒடுக்கிவைத்து "சுயேச்சைதான் முதன்மையானது; அடிமைத்தனம் நீங்கிவிட்டால், அப்புறம் எல்லாக் காரியங்களும் தாளுகவே நீங்கிவிடும்" என்று போதித்து வந்தார். இதில்ஓரளவு வெற்றிபெற்ற பின் மகாத்மாகாந்தி முதலிய ஹிந்துத் தலைவர்களைக் கண்டு ஹிந்து மகாசபை, சுத்தி சங்கடன் இயக்கங் களை அடக்கி வைக்கும்படியும், சுயேச்சைக்கான வழியை ஒழுங்குபடுத்தும்படியும் கேட்டுக்கொண்டார். ஒரு வரும் இவ்விஷயத்தில் செவி சாய்க்கவில்லை. போதாத தற்கு மகாத்மா காந்தி, சுவாமி சித்தானந்தரை ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக அதிகம் பாடுபட்டவர்

என்றும், அபிமானி என்றும், அந்தரங்க சுத்தியுள்ள வர் என்றும் போற்றினர். மாளவியாவின் பரிசுத்தத் தன்மையை அவர் போற்றியதுடன் தமது குரு வென்றும் இந்தியாவின் மாபெரும் தலைவர் என்றும் கருதிக்கொண்டிருந்தார்.

அமிர்த சரஸில் நடைபெற்ற மாகாண காங்கிரஸ் மகாநாட்டின் போழ்து, மாளவியா முஸ்லிம்களைப் புண்படுத்தி, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு விரோத மாகச் செய்யுங் காரியங்களைப் பற்றி மௌலானா ஜுபர் அலிகான் வருந்திப் பிரசங்கம் செய்தார். இதனைப் பார்த்து மகாத்மா வருந்தியது மல்லாமல் மௌலானா ஜுபர் அலிகானை நோக்கி "தாங்கள் இன்று என் நெஞ்சைப் பிளந்துவிட்டீர்கள். மாளவியாவின் மீது இம்மாதிரியான கடுங்குற்றம் சுமத்துவதா?" என்று கூறினர். பண்டிட் மோதிலால் நேரு ஹிந்து மகா சபைக்குப் பயந்து, அச்சபை சொல்வதுபோல் நடப் பவராகவும், அச்சபையின் இஷ்டத்திற்கு மாருக நடக் கத் துணியாதவராகவும் ஆகிவிட்டார்.

இவ்வித நிலைமையில் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி தேசிய இயக்கத்தைச் சீர்குலைத்த ஹிந்து மகாசபைத் தலைவர்களையும் சும்மாவிட்டு விடவில்லை. பண்டிதர் மாளவியா, லாலா லஜபதிராய், மூஞ்சே முதலியவர்கள் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு விரோதமாகச் செய்து வருங் காரியங் களையும், சுதந்திரப் போராட்டத்தில் இவர்களால் ஏற் பட்டு வரும் நஷ்டத்தையும் பற்றி வியாசங்கள் எழுதி

அவர்களின் போக்கை அம்பலத்திற்குக் கொண்டுவந்தார். இவர் தன்ஜீம், தப்லீக் இயக்கங்களைக் கண்டித்துக் கொண்டிருந்த காலத்தில் காங்கிரஸும், ஹிந்துத் தலைவர்களும் இவரைக் கொண்டாடினர். ஆனால், ஹிந்துத் தலைவர்களின் போக்கைக் கண்டித்தபோது, காங்கிரஸ் ஹிந்து மகாசபைகளின் பத்திரிகைகள் இவருக்கு விரோதமாக கேவலமான முறைகளில் வியாசங்களெழுதி இவரை வகுப்புவாதி என்று தூற்றின.

இவ்வித நிலைமையைப் பற்றிச் சிந்தித்து, முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு திட்டம் தயார் செய்வதற்காக 1926-ம் வருடம் மே மீ-த்தில் டில்லியில் ஸ்பெஷல் கிலாபத் கான்பரன்சைக் கூட்ட ஏற்பாடு செய்தார். இக் கான்பரன்சின் வரவேற்புக் கமிட்டிக்கு ஹக்கீம் அஜ்மல்கான் தலைவராக இருந்தார். மகா நாட்டிற்கு மௌலானா செய்யித் சுலைமான் சாகிப் நத்வீ தலைமை வகித்தார். இதனைப் பற்றி நமது மௌலானா பின்வருமாறு கூறி இருக்கிறார்.

"பண்டிட் மோதிலால் நேரு மகா சபைக்காரர்களைக் கண்டித்து ஒரு அக்ஷரம்கூடச் சொல்லமறுத்து விட்டபோது, ஹக்கீம் அஜ்மல்கான் அவரை நோக்கி, இனி, நீங்கள் முஸ்லிம்களிடத்தில் எதையும் எதிர்பார்க்கவேண்டியதில்லை என்று கூறிவிட்டார். நமது முயற்சிகள் பலனளிக்காமலாகிவிட்டதுடன் ஹிந்து மகாசபைக்காரர்களைக் கண்டித்து ஹிந்துத் தலைவர்களில் ஒருவர்கூட வாய் திறக்காமலாகிவிட்ட பின்னர்தான் நாங்கள் டில்லியில் ஸ்பெஷல் கிலாபத் கான்பரன்சைக்

கூட்டினேம். இக் கான்பரன்சின் வரவேற்புக் கமிட்டித் தலைவராக ஹக்கீம் அஜ்மல்கான் தெரிந்தெடுக்கப் பட்டார். மகா நாட்டுத் தலைவராக மௌலானு ஸெய்யித் சுலைமான் சாகிப் நத்வீ தெரிந்தெடுக்கப் பட்டார்"

இறுதியாக டில்லியில் கிலாபத் கமிட்டியின் ஸ்பெஷல் கான்பரன்சு கூடிற்று. மகா நாட்டுத் தலைவர் பிரசங்கம் ஹிந்துமகாசபைத் தலைவர் பிரசங்கத்தைப் போல் துவேஷ மூட்டக் கூடியதாக இருக்கவில்லை. தேசத்தின் நிலைமையைப் பற்றிக் கூறி ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்தப்பட்டிருந்தது. பிறகு, மைதானத்தில் வந்து கையை நீட்டுவதாகவும் இந்தக் கையை ஒரு நண்பன் மற்றொரு நண்பனிடம் கைலாகு செய்வதற்காக நீட்டப்படும் கையென்று ஹிந்துக்கள் மதித்தாலும் சரி அல்லது ஒரு மல்யுத்த வீரன் மற்றொரு மல்யுத்த வீரனிடம் குஷ்தி செய்வதற்காக நீட்டும் கையென்று மதித்தாலும் சரியென்று அப்பிரசங்கத்தில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

அதில் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொருதீர்மானமும் நேர்மை, நியாயம், ஒற்றுமை, ஐக்கியம் ஆகியவைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இம்மகாநாடு கூடியதற்குப் பின், ஹிந்துப் பத்திரிகைகள் நமது தலைவரைப் பற்றி மறுபடியும் கூச்சலிட்டன. மௌலானு முஹம்மது அலியினிடமும், கிலாபத் கமிட்டியினிடமும் வகுப்புவாதம் உண்டாகி விட்டது; ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு விரோதமாக அவர் வேலை செய்து ஐக்கியத்தைக் குலைத்து வருகிறுர் என்று எழு

தின. இதற்குப் பிறகு, நமது மௌலானா முஸ்லிம் தூதுவக் கூட்டத்தினரை அழைத்துக்கொண்டு ஹிஜாஸுக்குப் புறப்பட்டார். அவர் புறப்படும்போது முஸ்லிம்களை நோக்கிப் பின் வருமாறு உபதேசித்தார்.

"இது நமது தேசத்திற்குச் சோதனைக் காலம். ஆகவே, நீங்கள் ஆத்திரமடையக் கூடாது. உங்களுடைய செய்கையாலும், சொல்லாலும் ஹிந்துக்களை ஆத்திர மூட்டாதீர்கள். அவர்கள் உங்கள் மீது கையை நீட்டினால், நீங்கள் தலைவணங்கிக் கொடுங்கள். அவர்கள் கத்தியை உருவினால், உங்களது மார்பை அவர்களிடம் காண்பியுங்கள். அவர்கள் அக்கிரமஞ் செய்தால், நீங்கள் பொறுமையாக இருங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்"

நமது தலைவர் மௌலானாவை ஹிந்துமகா சபையினர் "தேசத்துரோகி" என்று அழைத்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் தமது சமூகத்தினரிடம் மேற்கண்டவாறு உபதேசித்தார். இவ்வளவு தாராள மனப்பான்மையும், சகிப்புத் தன்மையும் வேறு சமூகத்தாரிடமிருந்து ஒருபோதும் உண்டானதே இல்லை யென்பது பிரத்தியக்ஷம்.

முப்பத்திமூன்றும் அத்தியாயம்

ஹஜ்ஜுச் சட்டம்

ஹிஜாஸுக்குக் கப்பல் விடும் காண்ட்ராக்டை டர்னர் மாரிஸன் கம்பெனிக்கு பம்பாய் சர்க்கார் கொடுக்க விரும்பியதையும், ஹிஜாஸிலிருந்து திரும்பி வரும் டிக்கட் கட்டணத்தை ஹாஜிகள் முற்கூட்டியே கட்டிவிட வேண்டுமென்று கட்டாயச் சட்டமாக்கி விட முயன்றதையும், நமது தலைவர் மௌலானு ஆக்ஷேபனை செய்ததையும், அக்காலத்தில் இந்திய இராஜப் பிரதிநிதியாக இருந்த லார்டு ஹார்டிஞ்சு அதை நிறுத்தி வைத்ததையும் பற்றி முன்னொரு அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒரு சட்டத்தினுல் சர்க்காருக்கு மறைமுகமாக லாபங் கிடைப்பதாகவோ அல்லது பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு லாபங் கிடைப்பதாகவோ இருக்கிற பிரசினையை அரசாங்கம் ஒத்திவைப்பதில்லை.

ஆகவே, 1926-ம் வருஷத்தில் சர்க்காரின் சார்பாக இப்பிரசினை மறுபடியும் கொண்டுவரப்பட்டு, இச்சட்டத்தால் பல நன்மைகளேற்படுவதாகவும் வியாக்யானஞ் செய்யப்பட்டது. இதை நமது மௌலானு மறுபடியும் எதிர்த்து ஆக்ஷேபனை செய்து, இது ஹாஜிகளுக்குக் கஷ்டங் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. கஷ்டத்தை நிவர்த்தி செய்ய சர்க்கார் முயலாமல், ஒருதலை பக்ஷமான இச்சட்டத்தை இயற்றக்கூடாது என்பதை எடுத்துக் கூறினுர். இதைப்பற்றித் தம்முடைய 'காம்ரேட்' 'ஹம்தர்த்' பத்திரிகைகளில் இந்தியாவிலுள்ள

ஹாஜிகள் ஏழைகள் என்பதும், இவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பிவரப் பணமில்லாமல் கஷ்டப்படுகிறார்களென்பதும் பொய். ஹாஜிகள் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்கள் திரும்பிவரப் பணமில்லாமல் கஷ்டப்படுகிறார்களென்றால் அதற்கு சர்க்கார்தான் ஜவாப்தாரி. இவர்களுடைய தரித்திரத்தை நீக்குவதற்கு சர்க்கார் முயலவேண்டும். பம்பாயில் ஹாஜிகளிடம் கப்பல் கம்பெனிக்காரர்களும், மற்றவர்களும் பணத்தைக் கொள்ளையடிப்பதை நிறுத்த ஏற்பாடு செய்யவேண்டும். எகிப்து சர்க்கார் பிரதி வருஷமும் ஹஜ்ஜுக்குச் செல்ல இருப்பவர்களின் தொகையை ஒருவாறு மதிப்பிட்டுக் கொண்டு, குறைந்த கட்டணத்திற்கு ஹாஜிகளை ஏற்றிச் செல்வதற்காக கப்பல் கம்பெனிகளிடம் டெண்டர் கேட்கிறது. குறைந்த கட்டணத்திற்கு ஏற்றிச்செல்ல எக் கம்பெனி ஒப்புக் கொள்கிறதோ, அக் கம்பெனிக்கு அவ்வருஷத்திற்கு காண்ட்ராக்ட் விடுகிறது. இதனால், அரசாங்கத்திற்கும் கஷ்டமில்லை; ஹாஜிகளுக்கும் அதிகச் செலவேற்படுவதில்லை. இம்மாதிரியானமுறையையும் இந்தியாவிலே ஏன் ஏற்படுத்தக் கூடாது? என்பதாகப் பல வியாசங்களெழுதினார். ஆயினும்; சர்க்கார் அச்சட்டத்தை நிறைவேற்றாமலிருக்கவில்லை.

முப்பத்திநான்காம் அத்தியாயம்

மாப்பிள்ளைக் குழந்தைகளின் பெருநாள்

கிலாபத் இயக்க காலத்திலும், அதற்குப் பின்னரும் மலையாள மாப்பிள்ளை முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் ஆபத்துகளும் எவ்வளவு என்பதும், அச்சமூகத்தினரை அழித்துவிடச் செய்யப்பட்ட முயற்சிகளும் யாவருக்கும் தெரிந்த விஷயம். வீரர்களின் உயிர் சீக்கிரத்தில் நீங்கி விடுவதில்லை என்றபடி அந்தச் சமூகத்தார் சிறைக்கூடங்களுக்கும், தூக்கு மேடைகளுக்கும் அனுப்பப்பட்டதுடன், ஜங்கம சொத்துகளும், பூஸ்திதிகளும், வீடு வாசல்களும் பறிமுதல் செய்யப்பட்டன. தேசப் பிரஷ்டமும் செய்யப்பட்டனர். ஆயினும், அவர்கள் அழிவதற்கில்லை. ஆனால், அவர்கள் ஏழைகளாக தரித்திரர்களாக ஆக்கப்பட்டதால் வெய்யிலாலும், பனியாலும், மழையாலும் கஷ்டப்பட்டனர். பெருநாட்களில் ஏனைய ஜனங்கள் நல்ல நல்ல பதார்த்தங்களைச் செய்து அருந்தியும், அறுசுவையுணவுகளைத் தயார்செய்து இஷ்டமித்திர பந்துகளுக்கு விருந்தளித்துபசாரம் செய்துகொண்டும், தங்கள் குழந்தைகளுக்கு நேர்த்தியான உடைகள் அணிவித்துக்கொண்டும், பெருநாளை வேடிக்கையிலும், தமாஷிலும் கழிப்பதற்காக பணங்காசுகளைக் கொடுப்பதும்போல், அந்த ஜனங்களும் தங்கள் குழந்தைகளுக்குச் செய்ய முடியவில்லை. அவர்களை ஆதரித்து, அவர்களது நிலைமையைப் பற்றி விசாரிப்பவர்களுமில்லை. இதைப் பற்றி பிர

பலஸ்தர்களோ, தலைவர்களோ கவனஞ் செலுத்துவது மில்லை. ஆனால், நமது மௌலானா அத்துணை சீமானு மல்லர். ஆயினும், இவ்விஷயத்தில் தமது அனுதாபத் தைக் காண்பித்துக் கொள்ளப் பெரிதும் முயன்று, இதைப்பற்றித் தமது பத்திரிகைகளில் பல வியாசங் களை எழுதினார். வியாசங்கள் எழுதியது மட்டுமில்லா மல், றமலான் மாதத்தில் தமது நண்பர்கள் தம்மை விருந்துக்கழைத்த போதெல்லாம் அவர்களிடமிருந்து மாப்பிள்ளைக் குழந்தைகளுக்காகப் பணவசூல் செய்தார். பெருநாள் தொழுகையின் பிறகு, ஈதுகாவின் வாசற்படி யில், வெய்யிலில், பல மணி நேரங்கள் நின்று கொண்டு காலணா, அரையணா, ஒரு அணா, ஒரு தம்படி முதல் அவரவரால் இயன்ற அளவு தர்மங் கொடுக்கவேண்டு மென்று மகாஜனங்களிடம் யாசகங் கேட்டு, சுமார் 1100 ரூபாய் வரையில் வசூல் செய்து மாப்பிள்ளைக் குழந்தைகளுக்கனுப்பினார்.

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

கிலாபத் நிதி மோசடி

நமது தலைவர் மௌலானாவிற்கு ஹிந்து முஸ்லிம்கள் அனைவரும் எதிர்ப்பும் போட்டியும் செய்தபோது, அவர் மீது அநேக குற்றங் குறைகள் கூறப்பட்டன. மனத்திற் றோன்றாததும், நினைப்பில் வராததுமான குறைகளெல்லாம் கூறப்பட்டன. வீண் செலவுக்காரர், பொதுப் பணத்தைக் கொள்ளையிட்டு ஜீரணிப்பவர் என்றுங்கூட அவர் மீது தோஷங் கூறப்பட்டது. பம்பாய் மத்திய கிலாபத் கமிட்டிக்கு வசூல் செய்யப்பட்ட நிதிகளை அவர் மோசஞ் செய்துவிட்டார் என்றுங் குற்றஞ் சாட்டப்பட்டது. ஆதலால், இதன் உண்மை விபரத்தைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

மத்திய கிலாபத் கமிட்டி அரசாங்கத்தை எதிர்த்து, அதன் அக்கிரமச் செய்கைகளைக் கண்டிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டது. ஆதலால், அதனை ரிஜிஸ்டர் செய்யவில்லை. தவிரவும், அரசாங்கத்தாருக்கு அக்கமிட்டியின் மீதோ, அதன் வேலைதிட்டத்தின் மீதோ நல்லெண்ணமுமில்லை. ஆதலால், கிலாபத் கமிட்டிக்குச் சேரும் பணத்தைபாங்கிகளில் போட்டுக் கணக்கேற்படுத்துவது நன்றன்று; உசிதமுமன்று. எனவே, பம்பாயிலுள்ள பிரபல வர்த்தகரும், கிலாபத் ஊழியத்தில் சிரத்தையுள்ளவருமான சேட் சோட்டானியை மத்திய கிலாபத் கமிட்டிக்குப் பொக்கிஷதாரராகத் தெரிந்தெடுத்து, அவரிடம் பணத்தைக் கொடுத்து வைக்கப்பட்டது. இவரைப்

பொக்கிஷதாரராக நியமித்துப் பணத்தைக் கொடுத்து வைத்ததை தேசத்தாரில் எவரும் அப்பொழுது ஆக்ஷேபனை செய்யவில்லை. சேட் சோட்டானி கிலாபத் நிதியை மோசம் செய்யவுமில்லை. அவர் தமது வியாபாரத்தில் அந்நிதியைப் போட்டு வைத்திருந்தார். தெய்வாதீனமாக அவருக்குப் பெரு நஷ்ட மேற்பட்டதால், கிலாபத் நிதியும் நஷ்டத்துடன் சேர்ந்து விட்டது. பிறகு, கணக்குப் பார்த்து, 16—17 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள தமது சோட்டானி மில்லையும் கிலாபத் நிதிக்கு ஈடாகக் கொடுத்தார். ஆயினும், கிலாபத் நிதியின் முழுத்தொகையும் வசூலாகவில்லை. இதைப்பற்றி நமது மௌலானா பின் வருமாறு எழுதிஇருக்கிறார் :—

1921ம்ஹூ இதனைக்குறித்து அவர் கூறும்விபரம் வருமாறு :—

“ எங்களைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டாம். இறைவன் இதற்கு முந்தியும் ரஸ்ஸாக். அவனே இப்பொழுதும் ரஸ்ஸாக்காக இருக்கிறான்” என்று எனது மனைவி என்னிடம் கூறினள். எங்களது மாதாவும் எனது மனைவியும் நாங்கள் 2 வருஷகாலம் சிறைவாசத்திலிருந்தபோது சுமார் 40-45 லக்ஷம் ரூபாய்வரை கிலாபத் நிதிக்கு வசூல்செய்தனர். அதன் கணக்கு வகையறாக்கள் ஆடிட் செய்யப்பட்டு கிலாபத் காரியாலயத்தில் இருக்கின்றன. இது சந்தா வசூல் செய்த விபரம். ஆனால், தங்கள் வீடுவாசல்களில் மனைவி மக்களுடன் வாழ்ந்து வந்தவர்களும், எங்களைப்போல் சிறைவாசத்தையும், என்னைப்போல் சட்ட விரோதமாக தனியறையில்

விசேஷ தண்டனையையும் அனுபவிக்காமலிருந்தவர்க ளும்இந்நிதி செலவானதற்கு விபரம் காண்பிக்கவேண் டும். நாங்கள்கிலாபத்தின் பொக்கிஷத்தில் 3 லக்ஷம் மாத்திரம் தான் விட்டுச் சிறைக்குச் சென்றோம் என் பதும், எங்களுக்குப் பின் எங்களது மாதாவும், எனது மனைவியும், எங்கள்பால் அபிமானங்கொண்ட இதர சோதர சோதரிகளும் 40-45 லக்ஷம் வரை சேகரித் தனர் என்பதும் உண்மை.

ஆனால், இவ்வளவு பெருந்தொகையை நாங்கள் ஒன்று சேர்க்காததுபோல், அதிலிருந்து ஒரு தம்படியும் நாங்கள் செலவுசெய்யவுமில்லை. சேட்சோட்டானி செய்த காரியத்திற்கு அவர்தான் முதல் ஜவாப்தாரி. பிறகு சிறைவாச தண்டனை அனுபவிக்காமலிருந்த கனவான் கள் தான் ஜவாப்தாரிகள். அதற்கு, நாங்கள் ஜவாப்தாரி களன்று. அதன் ஒரு காசையுங்கூடச் செலவு செய்ய எங்களுக்கு அனுமதியில்லை. நாங்கள் சிறைச் சாலையிலிருந்து விடுதலை யடைந்தபோது, எங்களுக்கு கிலாபத் பொக்கிஷம் காலியாகவே அகப்பட்டது. சேட் சோட்டானியைத் தவிர்த்து, அதனுடைய எல்லா ஊழி யர்களும் பூரண நாணயத்துடன் அதிகக் கஷ்டப்பட்டு முயன்றும், கிலாபத் ஸ்தாபனம் சீர்குலைந்தே கிடந்தது. இதற்கு ஜவாப்தாரி அவர்களே யல்லாமல் நாங்களல்ல.”

அலி சகோதரர்கள்மீது பொதுவாகவும் மௌலானா முஹம்மது அலி மீது முக்கியமாகவும் குற்றங் கூறு பவர்களுக்கு மௌலானாவின் மேற்கண்ட அறிக்கை சமாதானத்தை அளிக்கவல்லதாக இருக்கிறது.

முப்பத்தாறும் அத்தியாயம்

ராஜ்பால் பிரசுரம்

ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களைப் பற்றி மிகவும் அற்பத்தனமும், ஆபாசமும் நிறைந்த அபிப்பராயங்களை பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த ராஜ்பால் என்ற ஒரு ஆரிய சமாஜி எழுதி வெளியிட்டு அதற்கு "ரங்கேலா ரஸூல்" (வேஷக்காரத் தூதுவர்) என்று பெயரிட்டுமிருந்தான். இப்பிரசுரம் வெளியானவுடன் இந்திய முஸ்லிம்களுக்கு ஆத்திரமும் கோபமுமுண்டாயிற்று. தேசமெங்கும் பலமான கிளர்ச்சியும் கொதிப்புமுண்டாயிற்று. முஸ்லிம்களொவ்வொருவரும் இப்புத்தகத்தை அல்லது இதில் சொல்லப்பட்ட விஷயத்தின் சாரத்தைப் படித்துப் பார்த்து, இஸ்லாத்திற்காகவும், ஹுஜூர் அக்ரம் (ஸல்) அவர்களது கண்ணியத்தை நிலை நிறுத்துவதற்காகவும் தங்களது இன்னுயிரையும் தத்தம் செய்யத் தயாராகி விட்டனர்.

இதனை யுணர்ந்த பஞ்சாப் சர்க்கார் ராஜ்பாலின் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். கீழ்க் கோர்ட்டில் தண்டனை விதிக்கப்பட்டதாயினும், ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் துலிப்சிங் என்பவரால் ராஜ்பால் விடுதலையடைந்தனன். ராஜ்பாலைத் தண்டிக்க சட்டத்தில் இடமில்லை என்பது ஷை நீதிபதியின் தீர்ப்பு. இவன் விடுதலை செய்யப்பட்ட செய்தி தெரிந்தவுடன் நாட்டில் பெருங் கிளர்ச்சி தோன்றி, ஜஸ்டிஸ் துலிப் சிங்கின் தீர்ப்பைக் கண்டித்துப் பத்திரிகைகள் எழுதின. சட்

டத்தை மீற வேண்டுமென்று பொதுஜனங்கள் முன் வந்தனர். சர்க்கார் பல பத்திராசிரியர்களையும், தலைவர்களையும் கோர்ட்டை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டி சிறைக்கனுப்பினர். காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு அகில இந்திய தலைவர்களெனப் பெயர் வாங்கிய முஸ்லிம் தலைவர்கள் இக்கிளர்ச்சியையும், கண்டனத்தையும் பற்றி வாய்திறக்கவே இல்லை. ஹிந்து மகாசபைத் தலைவர்கள் மௌனம் சாதித்தனர். மத துவேஷ மற்றவர்களென்றும், உண்மை தேசாபிமானங் கொண்டவர்களென்றும் கருதப்பட்ட காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்கள் இப்பிரசுரத்தை எழுதிய ஆசிரியரையும், அதனை அச்சிட்டு வெளிப்படுத்தியவரையும் குறைந்த பக்ஷம் "வெறுத்"தேனும் அபிப்பிராயந் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர்களும் இவ்விஷயத்தில் வாய்திறக்காதிருந்து விட்டனர். இப்புத்தகம் வெளியிடப்பட்ட சமயம் காந்திஜீ தமது அதிருப்தியை வெளியிட்டார் என்பது உண்மை. ஆனால், சர்க்கார் வழக்குத் தொடர்ந்து, ஹைகோர்ட்டில் ராஜ்பால் விடுதலையடைந்த பின், வாய் மூடிக்கொண்டார். இதர தலைவர்களும் இதனைப்பற்றி ஒரு அக்ஷரம்கூடக் கூறினார்களில்லை. இதனைப்பற்றி அபிப்பிராயம் கூறும்படி பண்டித மோதிலால் நேருவை அஸோசியேட்டட் பிரஸின் பிரதிநிதி பேட்டிகண்டு கேட்டபோது, இதைப்பற்றித் தாம் ஒன்றுங் கூறுவதற்கில்லை என்று கூறித் தமது அபிப்பிராயத்தைக் கூற அவர் மறுத்து விட்டார்.

மௌலானா முஹம்மது அலி:—ஆனால், நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி வாய்மூடி இருக்க வுமில்லை. தமது சமூகத்தாரையும், மதத்தையும் 'சகிப் புத் தன்மை' என்ற பெயரால் அழிவுறச் செய்ய இஷ் டப்படவுமில்லை. காங்கிரஸ்காரர்களிடம் இதற்காக விருதுவாங்க வேண்டுமென்ற விருப்பம் அவருக்கில்லை. ஹிந்து மகாசபைக்காரர்களின் திருப்தியைப் பெற வேண்டுமென்பது அவருடைய நாட்டமாக இருக்க வில்லை. படைத்தவனும், ரக்ஷகனும், வணக்கத்திற்குரிய வனுமான அல்லாஹு சுப்ஹானஹு வதஆலாவின் திருப்தி ஒன்றே அவருக்குத் தேவையாக இருந்தது. ஆகவே, அவர் அப்புத்தகத்தைப் படித்தவுடன் பயித் தியம்பிடித்தவரே போல் உணர்ச்சியடைந்தார். ஆத் திரங்கொண்டார். தமது அபிப்பராயத்தை வெளியிட் டார். "ஜஸ்டிஸ் துலிப் சிங்கைக் கண்டிக்கக் கூடாது. சட்டத்தைத் திருத்தி இனிமேல் இம்மாதிரியான தவறு நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று பிரசாரம் செய்யத் தொடங்கினார். ஜஸ்டிஸ் துலிப் சிங் ராஜிநாமாச் செய்துவிட வேண்டுமென்பது பொது ஜனங்களின் அபிப்பராயம்.

பொது ஜன அபிப்பராயத்துக்கு விரோதமாக நடந்து கொள்வதும், அதனைப் பகிரங்கமாக எதிர்ப்ப தும் எவ்வளவு பெரிய கஷ்டத்திற்கும் சங்கடத்திற்கும் உள்ளான விஷயமாகும் என்பதை அறிஞர்கள் நன்கறி வார்கள். நமது தலைவருக்கும் இவ்விஷயம் தெரியாம லில்லை. அவர் அறிந்துகொண்டே தைரியமாக இவ்

விஷயத்தில் தலையிட்டார். இப்பிரசுரக் கிளர்ச்சியில் அவரும் தலையிட்டார் என்று கேட்ட மாத்திரத்தில் பொது ஜனங்களுக் கேற்பட்ட சந்தோஷத்திற்களவில்லை. ஆயினும், அவர் பொது ஜன அபிப்பிராயத்தை ஆதரிக்கவில்லை என்று தெரியவும் அந்தச் சந்தோஷம் அவர்களுக்கு வெறுப்பாகவும், விசனமாகவும் மாறிற்று. அவர் பொது ஜனங்களின் ஆதரவின் பேரில் தலைவரானவருமல்லர். இப்படிப்பட்ட முறையில் தலைமைப் பதவி வகிக்க ஆசைப்பட்டவருமல்லர். அதலால், பொது ஜனங்களில் திருப்தியையும், அதிருப்தியையும், சந்தோஷத்தையும், விசனத்தையும் லக்ஷியம் செய்யாமல், தமது அபிப்பிராயத்தில் உறுதியாக இருந்தார்.

இச் சமயம் நமது தலைவர் அவர்களின் பழங்கால நண்பரும், உண்மை தேச ஊழியரும், அம்பாலாவிலுள்ள பிரபல கவிஞருமான ஒருவர் ஒரு கடிதம் எழுதி, மிஸ்டர் துலிப்சிங் தவறு செய்யவில்லை என்று தாங்கள் எழுதி இருப்பதை, தங்களது நண்பர்கள் படித்தும் கேள்விப்பட்டும் அலுத்துப் போயினர். இது சம்பந்தமாகப் பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ, நேருக்கு நேராகவோ, சமிக்ஞையாகவோ, தெளிவாகவோ, விவரமில்லாமலோ, விரிவாகவோ, சுருக்கமாகவோ எழுதுவதை அல்லாஹு தஆலாவுக்காக விட்டு விடுங்கள். இவ்வாறு எழுதுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்” என்று நமது தலைவரை வேண்டிக்கொண்டார்.

இதற்கு நமது மௌலானா பதில் எழுதுகையில் "தாங்கள் ஸர். முஹம்மது ஷாபீக்காக, டாக்டர் ஸர். இக்பாலுக்காக நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டிருந்தால், இது சம்பந்தமான வியாசத்தை நான் நிச்சயமாக நிறுத்திக்கொள்வேன். ஆனால், ஏழை பஞ்சாப் முஸ்லிம்களை பஞ்சாப் தலைவர்கள் தவறான வழியில் இட்டுச் செல்கிறார்கள். இவர்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்வதைப் பார்த்துக்கொண்டு, அல்லாஹு தஆலாவின் பெயரைக் கொண்டு வருகிறீர்கள்" என்று பதில் கூறினார். இக்கடிதம் நண்பர் ஒருவர் சிநேக வாஞ்சையின் பேரில் எழுதியது. இதனை அல்லாமல் அவரைத் தூஷித்தும், திட்டியும், ஏசியும், பேசியும் அநேக கடிதங்கள் வந்தன. அவைகளை எல்லாம் பார்த்து அவர் அசையவில்லை; பஞ்சாபிலும், இந்தியாவின் முக்கிய சில இடங்களிலும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்து, தமது அபிப்பராயத்தைக் கூறிப் பொது ஜனங்களைத் தமது பக்கம் திருப்பினார்.

லக்ஷ்மணபுரி மகாநாடு :—1927-ம் வருஷம் ஜூலைமீ லக்ஷ்மணபுரியில் இது சம்பந்தமாக பிரம்மாண்டமான மகாநாடு நடை பெற்றது. நமது மௌலானா இம் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். மஹ்மூதாபாத் மகாராஜா, டாக்கர் நவாப் அலி, இதர தாலுக்காதார்கள், வக்கீல்கள், பாரிஸ்டர்கள் அனைவரும் இம்மகாநாட்டிற்கு விஜயம் செய்தனர். மௌலானாவின் அக்கிராசனப் பிரசங்கம் முடிந்தபின் பலரும் பிரசங்கஞ் செய்தனர். தீர்மானமும் நிறைவேற்றப்படும்

தருவாயிலிருந்தது. அதற்குள் சபையில் சிலர் மௌலானா ஜுபருல்முல்க் பிரசங்கம் செய்யவேண்டு மென்று கேட்டுக் கொண்டனர். மகாநாட்டுத் தலைவ ரான நமது மௌலானாவும் அவருக்குப் பிரசங்கம் செய் யச் சந்தர்ப்பம் அளித்தார். அவருடைய பிரசங்கத் தைக் கேட்டபின், சபையில் என்று மில்லாத ஆத்திர மும் கோபமும் ஏற்பட்டது. என்று மில்லாத முறை யில் அவ்வளவு உக்கிரமாக அன்று மௌலானா ஜுபருல் முல்க் பிரசங்கம் செய்தார். உண்மையில் அங்கு நிகழ்த்தப்பட்ட பிரசங்கங்களில் அவருடைய பிரசங்கம் தான் சிறந்த தாகவு மிருந்தது.

சபையினரின் ஆத்திரத்தையும் கொதிப்பையும் நமது தலைவர் மௌலானா உணர்ந்து, மிகச் சாதுர்ய மாகக் கூட்டத்தை அடக்கி, மிகவும் உணர்ச்சியுடனும் அனுதாபத்துடனும் மறுபடியும் பிரசங்கம் செய்து, இதற்காகத் தமது உயிரையும் தத்தம் செய்யச் சித்தமாக இருப்பதாகவும் கூறி, "சட்டத்தை மாற்றி அமைப்பதுதான் இதற்குச் சரியான வழி" யென்று வற் புறுத்தினார். சபையினரும் ஒருவாறு சாந்தியடைந் தனர். மௌலானா ஜுபருல் முல்க்கும் தமது திருப்தி யைச் சபையினருக்கு அறிவித்துக் கொண்டார்.

அச் சட்டத்தைத் திருத்தி, புதுச்சட்டம் இயற்று வதிலும், இனிமேல் இவ்விதமான பிரசுரங்களை எழுதுப வர்கள் தண்டனையை விட்டுத் தப்பித்துக் கொள்ளாம லிருப்பதற்கான திட்டத்தை ஏற்படுத்துவதிலும் பூரண மாக முயற்சி செய்தார். இதற்காகச் சட்ட சபையில்

கொண்டுவர வேண்டிய சட்ட மசோதாவையுங் கூடத் தாமே எழுதி முடித்தார். இது சீக்கிரமாக நிறைவேற வேண்டும் என்பதற்காக சுயமே தமது சொந்தப் பதங்களைச் சேர்க்காமல் சட்டப் புத்தகங்களிலுள்ள பதங்களையே பல சட்டப் பிரிவுகளிலிருந்தும் பொறுக்கி எடுத்து ஒரு சட்டமாக ஆக்கினார். இம் மசோதாவை இந்தியா சட்டசபையில் நவாப் துல்பகார் அலிகான் பிரரேபித்ததார். அங்குள்ள அங்கத்தினர்கள் அனைவரும் ஜாதிமத பேதமின்றி இதனை ஆதரித்தனர். ஆனால், அங்கு செய்த சில திருத்தங்கள் இச் சட்டத்தில் இருந்த விசேஷ அம்சங்களைக் குறைத்து விட்டன. ஆயினும், இச்சட்டம் முற்றிலும் சத்துக் குறைந்ததாக இல்லை.

இவ் விஷயத்தில் நமது தலைவர் பொது ஜன அபிப்பராயத்தை எதிர்க்கவும், அவர்களைத் தமது பக்கல் திருப்பவும் வேண்டியதிருந்ததால், அநேக கஷ்டங்களையும் சங்கடங்களையும் அடைய வேண்டியதிருந்தது. இதுவுமல்லாமல் அவரது முயற்சி நல்ல எண்ணத்தையும், அந்தரங்க சுத்தியையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததால், அவருக்கு இம் முயற்சியில் வெற்றி ஏற்பட்டது. இதனால், அவரை எதிர்த்தவர்களும் கூட அப்புறம் அவரது சக ஊழியர்களாகவும் துணைவர்களாகவும் மாறினர்.

முப்பத்தேழாம் அத்தியாயம்

ஆல்பார்ட்டீஸ் கான்பரன்சு

ஒற்றுமை மகாநாட்டின் விபரத்தில், சமூகம் என்ற கப்பல் மூழ்குவதைக் கரைசேர்க்கும் மாலுமிகள் தங்கள் கடமையை உணராமல் எவ்வாறு மௌனமாக பார்த்துக் கொண்டு இருந்தார்கள் என்ற விபரமும், ஹிந்து முஸ்லிம் இரு சமூகமும் ஒன்றுக்கொன்று பேதகப் படுவதாலும், வேற்றுமை கொள்வதாலும் இந்தியாவின் அடிமைத்தனம் எல்லையில்லாமல் அதிகரித்துக்கொண்டே போவதை குறைத்து, எவ்விதத்திலேனும் இரு சமூகங்களும் ஒற்றுமையடைந்து விட வேண்டுமென்றும், அதற்காக ஒரு வழியைக் கண்டு பிடித்து விடவேண்டுமென்றும் நமது மௌலானா தமது சுகவீனத்தையும் குடும்பக் கஷ்டங்களையும் பாராமல் இடைவிடாமல் உழைத்தார் என்ற விபரமும் கூறப்பட்டிருக்கின்றன.

1927-ம் வருஷத்தில் ஆல்பார்ட்டீஸ் கான்பரன்ஸ் என்ற பெயரால் மறுபடியும் சமூக ஒற்றுமை காணும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க எல்லாச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன. பிணக்கும் வேற்றுமையும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற பிரசினையில் இருதரப்பாரும் ஒத்துப்போகக் கூடிய நடுத்தரமான ஒரு வழியைக் கண்டுபிடித்து விடவேண்டுமென விரும்பப் பட்டது. சட்டத்தை விவாதிப்பதுபோல் இப்பிரசினைகளை

விவாதிக்காமல், நமது குடும்பத்திற்கு ஏற்படுகிற சில முக்கிய விஷயங்களைப்பற்றி விவாதிக்கும் தோரணையி லேயே இப்பிரசினையை விவாதிக்க வேண்டும் என்றும், இதனை முடிவு செய்யாமல் கலைவதில்லை என்ற உணர்ச்சி யுடன் கூடவேண்டும் என்றும் பேசிக்கொள்ளப் பட்டது.

முதல் கூட்டம்:—இக் கான்பரன்சுக்கு ஹிந்து முஸ்லிம் தலைவர்களில் போதி யளவுக்கு விஜயம் செய் திருந்தார்கள். பிறகு விவாதம் நடந்து தங்கள் தங்கள் அபிப்பராயங்களை வெளியிட்ட பின்னர், ஒவ்வொரு வரும் ஒவ்வொரு புகல் கூறிக்கொண்டு வந்த வழியை நோக்க ஆரம்பித்தனர். இவ்வாறு கொஞ்சங் கொஞ்ச மாக ஹிந்து தலைவர்களில் பெரும்பாலர் சென்றனர். ஆயினும், மத்திய கிலாபத் கமிட்டியும், நமது தலைவர் மௌலானாவும் கடைசிவரை இம்மகா நாட்டில் கலந்து கொண்டனர்.

இக் கான்பரன்சுக்கு மகாத்மா காந்தி வரவில்லை. இவருக்குப் பல முறை அழைப்பனுப்பி, இவரை வேண் டிக்கொண்டும், இவர் இக் கான்பரன்சிலும் சேரவில்லை. இதற்கு முன் கூட்டப்பட்ட இரண்டு கான்பரன்சுகளி லும் சேரவில்லை. பிறகு, இம் மகாநாடு மற்றொரு சம யத்திற்காக ஒத்திவைக்கப் பட்டதுடன் 1928-ஸு மே மாதத்தில் இம் மகா நாட்டை பம்பாயில் கூட்டவேண் டும் என்றும் முடிவு செய்யப் பட்டது.

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

14 கோரிக்கைகள்

இவ்விதமான முயற்சிகள்செய்து, நமது மௌலானு விற்குக் களைப்பும் ஏற்பட்டது. எவ்விதப்பிரயோஜன மும் ஏற்படுவதற்கான எம்மார்க்கமும் காணப்படவில்லை. ஆதலால், "முஸ்லிம்கள் எல்லோரும் ஒருமனப்பட்டு ஒரு முடிவுக்குவரலாம், அப்பால் அம்முடிவைக் காங் கிரஸில் கூறி நிறைவேற்றிக் கொள்ளலாம், காங்கிரஸ் அம்முடிவை அங்கீகரித்துவிட்டால் அப்புறம் கவலை யில்லாமல் தேச விடுதலைக்கான முயற்சிகளில் ஈடுபட லாம்" என்று நமது மௌலானு நினைத்து, இந்தியா சட்டசபைக் கூட்டம் டில்லியில் நடைபெற்றுக் கொண் டிருந்தபோது, இதற்கான முயற்சிகளைச் செய்ய ஆரம் பித்தார். ஜனுப் முஹம்மது அலிஜின்னுவையும் இதில் சேர்த்துக்கொண்டார். வேறு பல பிரபலஸ்தர்களுக் கும் அழைப்புவிடுத்து, பலவாரங்கள்வரை கலந்துபேசி, எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தக்க 14 கோரிக்கைகளைத் தயார்செய்தனர். இவைகளில் பலுச்சிஸ்தானத்தை யும், சிந்தையும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப் படவேண்டும் என்ற கோரிக்கைகளும் அடங்கி இருக் கின்றன. முஸ்லிம் பொது ஜனங்களும் இக் கோரிக்கை களை அங்கீகரித்தனர்.

பிறகு, இக் கோரிக்கைகளைக் காங்கிரஸ் மகா சபையில் பிரஸ்தாபித்து, இவைகளை அங்கீகரிக் கும் படிச் செய்யவேண்டும் என நமது மௌலானு

வேண்டினார். காங்கிரஸ் மகாசபை அவைகளை ஒப்புக் கொண்டது. பிறகு, ஹிந்து மகாசபைக்காரர்களை யும் அங்கீகரிக்கும்படி செய்துவிடவேண்டும் என்று முயற்சிசெய்து, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார். இதைப்பற்றி நமது மௌலானா கூறியிருப்பது வருமாறு:—

"ஐந்து மாகாணங்களில் முஸ்லிம்களுக்குப் பெரும்பான்மை இருக்கும் விஷயத்தில் ஹிந்து சகோதரர்களும், அரசாங்கமும் சம்மதப்பட்டு, இவ்வைந்து மாகாணங்களிலும் ஹிந்துக்கள் சிறு பான்மையோராக இருக்கமுன்வந்து விடுவார்களாயின், 9 மாகாணங்களில் ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக இருப்பதை முஸ்லிம்களும் ஒப்புக்கொண்டு, அந்த 9 மாகாணங்களிலுள்ள பெரும்பான்மையினர் செய்யும் நீதியையும், தயவு தாட்சண்யத்தையும் முஸ்லிம் சிறுபான்மையினர் ஒப்புக்கொண்டிருக்கத் தயாராக இருக்கிறார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இதனைச்சென்ற மே மாதத்தில் அங்கீகரித்துவிட்டது. இக்கூட்டத்தில் டாக்டர் மூஞ்சே, மிஸ்டர் கெல்கார் ஆகியவர்களும் இருந்தனர். மிஸ்டர் ஜெயகர் சொற்ப விவாதம் செய்த பின், டில்லித் தீர்மானத்தை அங்கீகரித்துக்கொண்டார். எல்லைப்புற மாகாணத்திற்கு சீர்திருத்தங்கள் வழங்கப்படுவதை எதிர்த்து, ஹிந்து மகாசபையில் அபிப்பராயங் தெரிவித்திருப்பதால், அது ஒரு விஷயத்தை மட்டிலும் தாம் அங்கீகரிக்கவில்லை என்றும்

பாக்கியுள்ளவைகளனைத்தையும் அங்கீகரிப்பதாகவும் டாக்டர் மூஞ்சே கூறினர். சிந்துவிலுள்ள சில மத வைராக்கியங்கொண்ட ஹிந்துக்கள் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் மாஜி ஆசிரியரான ஜெயராம் தாஸ் தௌலத்ராமின் தலைமையின் கீழ் காங்கிரஸுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள்.

ஹிந்துக்களின் எதிர்ப்பு:—காங்கிரஸ் மகாசபை இப்பதினான்கு கோரிக்கைகளை ஒப்புக்கொண்ட பிறகும் கூட, ஹிந்துக்கள் இவைகளை மிகப் பலமாக எதிர்த்தனர். சிந்து தனி மாகாண மாகுவதும், எல்லைப்புற மாகாணத்திற்கு இதர மாகாணங்களுக்குள்ள சீர்திருத்தங்கள் வழங்கப்படுவதும், 5 மாகாணங்களில் முஸ்லிம்களுக்குப் பெரும்பான்மை அந்தஸ்திருப்பதும், மத்திய சட்டசபையில் நூற்றுக்கு 33 விகிதம் பிரதிநிதித்துவமிருப்பதும் ஹிந்துக்களுக்கு மிகப்பளுவாக இருந்தன."

அலிகாரில் கூடிய மாகாண காங்கிரஸ் கமிட்டியில் இது சம்பந்தமாக ஹிந்துக்கள் காட்டிய மனப்பான்மயைக் கண்டு நமது மௌலானு விசனமடைந்தார். ஆயினும், தமது முயற்சியைக் கைவிடாமல் அங்கும் உருக்கமாக ஒரு பிரசங்கம் செய்தார். இந்த 14 நிபந்தனைகளையும் ஹிந்துக்கள் எதிர்ப்பது, இந்தியாவின்மீதும் முஸ்லிம்கள்மீதும் ஹிந்துக்களுக்குப் பகையுண்டு என்பதை அறிவிக்கக்கூடியதாக இருக்கிறது என்றும், ஹிந்துக்கள் தாராள மனப்பான்மை காட்ட வேண்டுமென்றும், குறுகிய மனப்பான்மை காட்டக் கூடாது என்றும் தமது பிரசங்கத்தில் விளக்கிக் கூற

முயன்றதுடன் "இன்று நாம் ஒருவருக்கொருவர் எழுதிக் கொடுக்கும் முச்சலிக்கையும் உத்திரவாதங்களும், நமக்கு அந்நியரான அரசாங்க வர்க்கத்தார் நம்மைக் குற்றவாளி என முடிவு செய்து, நம்மிடத்தில் கோரும் முச்சலிக்கை யையும் உத்திரவாதங்களையும் போலில்லை. 'மற்றவர்கள் உங்களை எவ்வாறு நடத்தவேண்டுமென்று நீங்கள் எதிர் பார்க்கிறீர்களோ அதுபோல நீங்களும் மற்றவர்களை நடத்துங்கள்' என்று உண்மை மதங்களின் பொன் விதிகள் கூறி இருக்கும் எச்சரிக்கைகளும் உத்தர வாதங்களுமேயாகும்" என்றுங் குறிப்பிட்டார்.

பிறகு, சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டி லும் இப் பதினான்கு கோரிக்கைகள் அங்கீகரிக்கப் பட்டன. இதனை ஆதரித்து மாளவியாஜீயுங்கூட உருக்கமான பிரசங்கம் செய்தார். காங்கிரஸ் மகா சபையும்கூட ஒப்புக்கொண்ட பிறகு, ஹிந்துக்கள் இதனை மேலும் மேலும் எதிர்த்துக் கொண்டே இருந் தனர். இதனைப்பற்றி மௌலானா அவர்கள் அடிக்கடி வியாசங்கள் எழுதிக் கொண்டும், ஆக்ஷேபனை செய்யும் ஹிந்துக்களுக்கு பதில் கூறிக்கொண்டு மிருந்தார். இது சம்பந்தமாக அவர் எழுதிய இரண்டொரு வியா சத்தின் முக்கிய சாராம்சம் வருமாறு :—

"இன்றுவரை இந்தியாவில் பெரும்பான்மை யினர் ஆட்சி ஏற்படவில்லை. அசோகாவின் காலத்திலு மில்லை; விக்கிரமாதித்தன் காலத்திலுமில்லை. மஹ் மூது கஜ்னவியின் காலத்திலுமில்லை. கோரியின் காலத் திலுமில்லை. பிரதிவிராஜனின் காலத்திலிருந்த அர

சாங்கமும் பெரும்பான்மையினருடையதல்ல. அக்பர் ஔரங்கஜேப், சிவாஜி, ரஞ்ஜித்சிங் ஆகியவர்களின் அரசாங்கங்களும் பெரும்பான்மையின ருடையவை களல்ல. இன்று லார்டு இர்வின் ஆட்சியும் பெரும்பான் மையினரின் ஆட்சியில்லை.

இனி, முதல் முறையாக பெரும்பான்மையின ரின் ஆட்சி முறை ஏற்படப் போகிறது. இந்தப் புது வழக்கத்தை இந்தியாவில் ஜாரி செய்யும்போது பிரிட் டிஷ் இந்தியாவில் 66% விகிதமுள்ள ஒரு ஜாதி இந்தத் திட்டத்தில் பூரணமாகத் திருப்தி யடைந்து, இந்தப் பெரும்பான்மையைப் பார்க்கினும் மிகவும் குறைவாக வும் பல நூற்றுண்டுகளாக இந்தியாவை ஆட்சி புரிந் தும் இருக்கிற 25% விகிதமுள்ள ஒரு ஜாதியார் இத் திட்டத்தில் அதிருப்தியாகவும் இருந்தால் அது ஆச் சரியப்படத்தக்க விஷயமன்று."

மற்றொரு வியாசத்தில் அவர் கூறி இருப்ப தாவது:—

"ஹிந்து ஜாதி உலகம் முழுவதிலும் தன்னுடைய குறுகிய மனப்பான்மையில் முன்னணியில் நிற்கிறது என்பது உண்மை. உலகம் முழுவதிலுமுள்ள எச் சமூகமும் இவ்வளவு குறுகிய மனப்பான்மையைக் காண்பித்ததில்லை. வேறு எச்சமூகமும் தனக்குள் உள்ள ஒரு வகுப்பைத் தீண்டத்தகாதவர் என்று கருத வில்லை. ஒருவர் மற்றொருவருக்குப் பெண் கொடுத்துக் கொள்ளும் வழக்கம் ஹிந்துக்களிடம் பல நூற் றுண்டுகளாக இல்லை. ஒருவரோ டொருவர் சேர்ந்

திருந்து உணவருந்துவதில்லை. இது மட்டுமன்று, எல்லா ஹிந்துக்களும் ஒரு கோவிலுக்குள் ஒரு இடத்தில் ஒன்று சேரவும் முடியாது. எல்லா இடங்களிலும் எல்லாருக்கும் பொது ரஸ்தாக்கள் இல்லை. எந்த ஜாதி இவ்வளவுக்கு சுயநலங் கொண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஜாதியின்மீது இதர சமூகத்தாருக்கு எங்ஙனம் நம்பிக்கை ஏற்படமுடியும்? ஹிந்துக்களின் வகுப்புவாதம், பிரிவினைக்கு எவ்வளவு முக்கிய காரணமாக இருக்கிறதோ அவ்வளவிற்கு தனித்தொகுதி வகுப்புவாதமாக இல்லை''

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி அவர்கள் காங்கிரஸிலும், ஹிந்துக்களிலும் மாத்திரம் இம்முயற்சி செய்யவில்லை. முஸ்லிம்களிடத்திலும் இதற்காக அபார முயற்சி செய்து முஸ்லிம் லீகையும் இப்பதினான்கு கோரிக்கைகளை ஒப்புக் கொள்ளும்படிச் செய்து வெற்றி பெற்றார்.

ஆயினும், ஹிந்து மகா சபைக்காரர்கள் பின்னர் வகுப்புவாதத்தை யுண்டுபண்ணி, முஸ்லிம்களின் ஒத்துழைப்பை இழந்துவிட்டனர். இதன் முழு விபரத்தை 41-ம் அத்தியாயத்தில் காண்க.

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

ஸைமன் கமிஷன்

ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒற்றுமையில்லாதிருப்பதை, இந்தியா கவர்ன்மெண்டும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் நன்கறியும். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்றபடி மாண்போர்டு சீர்திருத்தத்தினல், இந்தியா எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கிறது? இந்தியாவுக்குப் புதுச்சீர்த்தம் எப்படி அளிக்கலாம்? என்பதைப்பற்றி விசாரணை செய்வதற்கு இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஒரு கமிஷனை நியமித்தது. இக் கமிஷனுக்கு பார்லிமெண்டின் இருசபைகளிலிருந்தும் அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இதற்கு இங்கிலாந்திலுள்ள பிரபல சட்ட நிபுணர் ஸர். ஜான் ஸைமன் தலைவராக நியமிக்கப்பட்டார். இதில் இந்தியருக்கு ஒரு ஸ்தானம் கூட அளிக்கப்படவில்லை.

இக்கமிஷனல் எவ்விதப் பிரயோஜனமுமேற்படப்போவதில்லை. ஆதலால், இதனை பகிஷ்கரிக்கவேண்டும் என்று காங்கிரஸ் மகாசபை ஏற்கனவே முடிவு செய்திருந்தது. இந்தியர்களில் எவரையும் இக் கமிஷனில் நியமிக்காததால், இந்திய மிதவாதிகளுக்கும் சர்க்கார்மீது கோபமுண்டாகி விட்டது. ஆதலால், அவர்களும் இக்கமிஷனைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துவிட்டனர். பண்டிதர் மாளவியா, லாலா லஜபதிராய் முதலிய வகுப்பு வாதிகளும், இக்

கமிஷனை பகிஷ்கரிக்கும் வேலையில் மும்முரமாக ஈடு பட்டனர்.

எனவே, அரசாங்கத்தார் இவ்வுணர்ச்சியைத் தடுப் பதற்காகவும், இந்தியாவிலுள்ள மிதவாதிகளையேனும் தங்கள் சார்பில் சேர்த்துக் கொள்வதற்காகவும் இந்தியா சட்டசபையிலும், ராஜாங்க சபையிலுமிருந்து சிலரைப் பொறுக்கி எடுத்து, மற்றொரு கமிஷனை ஏற்படுத்தினார் கள். இதற்கு ஸர். சங்கரன் நாயர் தலைவராக நியமிக் கப்பட்டார். இதனையல்லாமல் ஒவ்வொரு மாகாணத் திற்கும் தனித்தனியே அந்தந்த மாகாணச் சட்டசபையி லிருந்து ஒரு கமிட்டியையும் நியமித்தனர். இவ்வாறு செய்தும் ஸைமன் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற உணர்ச்சி மட்டிலும் குன்றவில்லை.

முஸ்லிம்கள் நிலை :—முஸ்லிம்களது நிலைமை இதற்கு நேர்மாறாக இருந்தது. சட்டசபை அங்கத் தினர்களும், கௌரவப்பட்டம் பெற்றவர்களும் கமி ஷனை ஆதரித்தனர். அரசாங்கத்திற்கு எதிராக இருந் தவர்களிலுங்கூடச் சிலர், ஹிந்துக்களின் மனப்பான்மை யைக் கண்டிக்கும் முகத்தான் இக்கமிஷனை ஆதரிக்கத் தயாராக இருந்தனர். ஆனால், முஹம்மது அலி ஜின்னா, மௌலானா ஹஸ்ரத் மோஹானி முதலியவர்கள் ஸைமன் கமிஷன் நியமனத்திற்கு எதிராக உள்ளவர்களாயிருந் தும், நமது மௌலானா தான் இக்கமிஷனைப் பகிஷ் கரிக்கவேண்டுமென்று முதல் முதலாகக் கூறி, அதற் கான பிரசாரத்தையுஞ் செய்தார். இப்பிரசாரத்திலும் அநேக பெரிய மனிதர்களின் எதிர்ப்புக்கு ஆளாக

வேண்டியதேற்பட்டது. ஆயினும், அதனை லக்ஷியம் செய்யாமல் தமது கருத்திலேயே கண்ணாக இருந்து உழைத்தார்.

ஸர். முஹம்மது ஷாபீ:—இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக சபை அங்கத்தினராக இருந்து விலகியவரும், இக்கமிஷனை ஆதரிப்பவருமான ஸர். முஹம்மது ஷாபீ அகில இந்திய முஸலிம் லீகின் மகா நாட்டிற்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். ஆகவே, முஸ்லிம் லீக் கவுன்சில்தலைவரான மிஸ்டர் முஹம்மதுஅலி ஜின்னாவின் அபிப்பிராயமும், மகாநாட்டுத் தலைவராகத்தெரிந்தெடுக்கப்பட்டவரின் அபிப்பிராயமும் ஒன்றுக்கொன்று நேர் முரணாக இருந்தன. ஆதலின், ஸர். முஹம்மது ஷாபீ தமது தலைமைப் பதவியை வாப்பஸ் வாங்கிக் கொள்ளும்படி கேட்கப் பட்டார். அவர் அப்படிச் செய்யவில்லை, ஆகவே, முஸ்லிம் லீகில் கக்ஷிப்பிளவு ஏற்பட்டது. இம்மகாநாட்டை கல்கத்தாவில் கூட்ட வேண்டும் என்று ஒரு பார்ட்டியினர் கூறினர். ஸர். முஹம்மது ஷாபியின் பார்ட்டியினர் இம்மகாநாட்டை லாகூரில் கூட்ட வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தனர். ஆகவே, இரண்டு கக்ஷியினரும் தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப தனித்தனியே பிரிந்து கல்கத்தாவிலும், லாகூரிலும் மகாநாட்டைக் கூட்டி அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாடு என்று பெயரும் வைத்துக் கொண்டனர். லாகூரில் நடந்த மகாநாட்டிற்கு ஸர். முஹம்மதுஷாபியும், கல்கத்தாவில் நடந்த மகாநாட்டிற்கு ஸர். முஹம்மது யாக்கூபும் தலைமை வகித்தனர்.

மௌலானாவின் முயற்சி :—நமது தலைவர் மௌலானா முஹம்மதுஅலி மிஸ்டர் முஹம்மதுஅலி ஜின்னாவைப் பலமாக ஆதரித்து, கல்கத்தா முஸ்லிம் லீக் மகாநாட்டிற்கு விஜயம் செய்தார். அச் சமயம் ஹக்கீம் அஜ்மல்கான் மரணமடைந்ததால் நமது மௌலானா அதிகக் கவலையுற்றிருந்தாலும், ஸைமன் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்தை முஸ்லிம் லீகில் நிறைவேற்றி விட வேண்டும் என்பது அவரது பேரவாவாக இருந்ததால், சென்னை காங்கிரஸ் மகாநாடு முடிவடைவதற்கு முன்பே, குறித்த காலத்தில் கல்கத்தா வந்து சேர்ந்து, அதற்கான முயற்சிகளைச் செய்தார். சென்னை காங்கிரஸ் மகாநாட்டுத்தலைவர் டாக்டர் அன்ஸாரியும், மௌலானா அபுல் கலாம் ஆஜாதும் பின்னர் உதவிக்கு வந்து சேர்ந்தனர். எனவே, ஸைமன் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானம் முஸ்லிம் லீக் மகாநாட்டில் நிறைவேறிற்று. டில்லித் தீர்மானங்களாகிய முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளையும் இம்மகா நாட்டிலேயே கொண்டுவந்து அங்கீகரிக்கச் செய்துவிட வேண்டுமென்று நமது தலைவர் விரும்பினார். ஆனால், மிஸ்டர் முஹம்மதுஅலி ஜின்னா முஸ்லிம்களுக்குள் பிளவிருப்பதால், அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதிக வேற்றுமையை உண்டுபண்ணிக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தால், இத்தீர்மானத்தைப் பிரரேபிக்க வேண்டாமென்றார். ஆனால், நமது தலைவர் மிஸ்டர் முஹம்மது அலி ஜின்னாவுக்கு வேண்டியதைக் கூறி அவரை ராஜிப்படுத்திக் கொண்டதுடன் முஸ்லிம் லீக் மகாநாட்டிலும் அதனை அங்கீகரிக்கச் செய்தார்.

ஸர். ஷாபிக்கு அறைகூவல் :—ஸர். முஹம்மது ஷாபியின் தலைமையில் லாகூரில் கூடிய முஸ்லிம் லீக் மகாநாட்டில் ஸைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. அவரும், அவரது சகாக்களும் ஸைமன் கமிஷனை மிகக் கம்பீரமாக வரவேற்க வேண்டுமென்றும், ஒரு கருப்புக் கொடிகூட கண்ணுக்குத் தென்படாமற் செய்துவிட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்திருந்தனர். இறுதியாக நமது தலைவர் மௌலானுவிற்கு லாகூரிலிருந்து அழைப்பு வந்தது. அவர் அவ்வழைப்பை ஒப்புக்கொண்டு "நானும் லாகூருக்கு வந்து பொது ஜனங்களிடம் எனது அபிப்பராயத்தை அறிவிக்கிறேன். நீங்களும் பொது ஜனங்களிடம் உங்களது அபிப்பராயத்தைக் கூறுங்கள். பிறகு, இருவரும் பொது ஜனங்களின் தீர்மானத்திற்கு விஷயத்தை விட்டுவிடுவோம்" என்று ஸர். முஹம்மது ஷாபியை அறை கூவி அழைத்ததுடன் லாகூருக்கும் சென்றுர்; இதர பல இடங்களுக்கும் சென்றுர். எல்லா இடங்களிலும் வாகைமாலே சூடினுர். இதன் பலனுக ஸைமன் கமிஷன் பலமாகப் பகிஷ்கரிக்கப் பட்டது. இப் பகிஷ்கார ஊர்வலத்தில் லாலா லஜபதிராய் அடிபட்டு சில நாட்களுக்குள் மரணமடைந்தது நேயர்களுக்கு ஞாபக மிருக்கும்.

லக்ஷ்மணபுரி மகாநாடு :—நமது மௌலானு லக்ஷ்மணபுரிக்குவந்து, ஸைமன்கமிஷன்பகிஷ்காரம் சம்பந்தமாக தமது அபிப்பராயங்களைக் கூறவேண்டும் என்று மஹ்மூதாபாத் மகாராஜா அழைத்தார். அச் சமயம்

அமீனபாக் மீலாத் பிரசினையினால் அங்குள்ள முஸ்லிம்கள் ஹிந்துக்களின்மீது அதிக வெறுப்புக் கொண்டிருந்தனர். ஆதலால், அங்குள்ள முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்குப் போட்டியாக ஸைமன் கமிஷனை வரவேற்க எண்ணங்கொண்டிருந்தனர். அவர் அங்கு சென்று ஸைமன் கமிஷன் பகிஷ்காரப் பிரசாரம் செய்தார். அக் கூட்டத்திற்கு ஜவாஹர்லால் நேரு, மௌலானா ஹஸ்ரத் மோஹானி, மௌலானா அபுல் கலாம் ஆஜாத் முதலியவர்களும் வந்திருந்தனர். இக்கூட்டத்தைக் கலைக்க சில முஸ்லிம்கள் முயன்றனர். ஆயினும், இறுதியில் நமது மௌலானாவிற்கே வெற்றி யேற்பட்டது. அதற்கு மறுநாள் அமீனபாக் பார்க்கில் மகாநாடு கூடிற்று. இதனைப் பற்றி அங்கும் பிரசங்கங்கள் செய்தார்.

இதன் பலனாக ஸைமன் கமிஷன் முதல்முறை வந்தபோது ஹிந்து முஸ்லிம் இருவகுப்பினரும் மிக ஒற்றுமையுடன் பலமாகப் பகிஷ்காரம் செய்தனர். பிறகு 2-வது முறை இந்தியாவுக்கு ஸைமன் கமிஷன் வந்தபோது நேரு ரிப்போர்ட்டின் காரணமாக ஹிந்து முஸ்லிம்களுக்குள் பிளவேற்பட் டிருந்தது. ஆகவே, அதுபோழ்து பகிஷ்காரம் அவ்வளவு வெற்றி கரமாக இருக்கவில்லை.

நாற்பதாம் அத்தியாயம்.

ஐரோப்பா யாத்திரை.

அவர் தேசீய சமூகத் தொண்டிலீடுபட்டு அளவுக் கதிகமாக உழைத்ததால், அவருடைய தேக நிலை மிகக் கேவலமாகிக்கொண்டே இருந்தது. அவருக்கு இயற்கையாக வுள்ள வியாதி நாளுக்கு நாள் அதிகரித் துக்கொண்டிருந்தது. அவர் சில காலத்திற்கு தேசீய சமூக வேலைகளை விட்டு விலகிப் பூரண ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும் என்று டாக்டர்கள் அவருக்கு ஆலோசனை கூறியும், அவருடைய பொதுநல உணர்ச்சி அவரை கவலையற்றிருக்க விடவுமில்லை. அவருக்கு ஓய்வு கிடைக்கவுமில்லை.

தம்முடைய ஸ்தூல நிலைமை வர வரக் கேவல மாகிக்கொண் டிருப்பதை அவர் உணர்ந்து, சில மாத காலத்திற்கேனும் ஓய் வெடுத்துக் கொள்ளவேண்டு மென்று பல முறை விரும்பினர். கொஞ்சம் சிரம பரி காரம் எடுத்துக்கொண்டால் புது ஊக்கத்துடனும், புது பலத்துடனும் இன்னும் அதிகமாக தேசீய சமூக வேலைகளைச் செய்ய முடியும் என்று நினைத்தார். அதற் கான முன்னேற்பாடுகளையும் அவர் அநேக தடவை களிற் செய்தது முண்டு. எனினும், ஏதேனும் ஒரு சம்பவம் அல்லது குழப்பம் எங்கேனும் உண்டாகி விடு மாயின், அதனைச் சகித்துக்கொண்டு சும்மா இருக்க அவரால் முடிவதில்லை. அவ் விஷயத்தைக் கவனிக்க முன்னணியில் இறங்கிவிடுவார். அவர் அதில் பிர

வேசிப்பதற்குக் கொஞ்சம் தாமதஞ் செய்தாலும், அவருக்கு அழைப்பின்மீதழைப்பு விடுத்து அக் காரியத்தில் தலைமை வகிக்கும்படி அவரைப் பொது ஜனங்கள் கேட்டுக்கொள்வர். ஆதலால், அவர் செய்துவைத்த முன்னேற்பாடுகளெல்லாம் குழம்பிவிடும். தவிரவும், இந்தியாவில் பல சிறந்த வைத்தியர்கள் எவ்வளவோ முயன்றும், அவரது நீர் ரோகம் அதிகமாகிக்கொண்டிருந்ததேயன்றி குறைவதற்கான வழியில்லை. ஆகவே, அவர் இந்தியாவை விட்டு எங்கேனும் வெளியிற் சென்று தக்க சிகிச்சை செய்துகொள்வதும், ஓய்வெடுத்துக் கொள்வதும்தான் சிறந்த மார்க்கமெனத் தோன்றிற்று. ஆனால், இவ்வாலோசனைக் கேற்ப வெளி நாடு செல்வதற்கான பணம் அவரிடம் எங்கே இருக்க முடியும்?

தெய்வாதீனமான உதவி:—எல்லாம் வல்ல ஏகப் பரம்பொருளாகிய கருணாகரன் ஒவ்வொரு காரியமும் நடை பெறுவதற்கு இக் குவலயத்தில் புறக் காரணத்தை ஏற்படுத்தி வைத்திருப்பவனன்றோ! ஒரு தேக் கச்சேரி விருந்தின் போழ்து அல்வார் மகாராஜாவுக்கும் நமது மௌலானா அவர்களுக்கும் நட்பும், உறவும், அந்நியோன்யமும் ஏற்பட்டது. நமது தலைவர் சுகவீனமாக இருப்பதை சில தினங்களுக்குப் பின் அவர் அறிந்து, வைத்திய சிகிச்சைக்காகவும், சிரம பரிகாரம் செய்து கொள்வதற்காகவும், காற்று மாற்றிக் கொள்வதற்காகவும் ஐரோப்பாவுக்குச் செல்லவேண்டும் என்றும், இந்தப் பிரயாணத்திற் கேற்படும் சகல செலவு

களையும் தாம் கொடுப்பதாகவும் தெரிவித்துக்கொண்டார். ஆயினும், மௌலானு ஷௌகத் அலி, டாக்டர் அன்ஸாரி ஆகியவர்களிடம் அவர் கலந்து கொள்ளும்வரை அல்வார் மகாராஜாவின் இவ்வுதவியை ஒப்புக்கொள்ள முன்வரவில்லை. இவ்விரு பெரியார்களும் அவரை இவ்விஷயத்தில் வற்புறுத்திய பின், 1928-ம் வருஷம் ஜூன்மீ 1௳ ஐரோப்பாவிற்குப் பிரயாணமானுர். ஐரோப்பாவுக்குக் கப்பல் ஏறுவதற்குமுன் அஜ்மீர் ஷரீப் சென்று ஹிந்துல்வலி அத்தாவுர் ரஸூல் ஹஜ்ரத் காஜாமுயீனுத்தீன் கூஷிஷ்தீ றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களை ஜியாரத்துச் செய்துவிட்டு, அஹ்மதாபாத் சமர்பதி ஆசிரமத்தில் மகாத்மாகாந்தியைக் கண்டுபேசி, அபூமலையிலிருந்த அல்வார் மகாராஜாவையும் கலந்து கொண்டு, பம்பாய்க்குவந்து கப்பலேறினுர்.

பாரிஸ்மா நகரம்:—நேராக பிரான்சின் தலைநகரான பாரிஸ்நகருக்குவந்து, அங்குள்ள பிரபல டாக்டர்களிடம் வைத்திய சிகிச்சையின் முறைகளைப்பற்றியும், நோயின் தன்மையைப்பற்றியும் ஆலோசனை செய்தார். கடைசியாக சில நண்பர்களின் ஆலோசனையின் பேரில் ஒரு டாக்டரிடம் வைத்திய சிகிச்சை செய்து கொள்வதாக முடிவு செய்யப்பட்டது. இந்த டாக்டர் அதிகமாக பட்டினிகள் செய்விப்பார் என்றும், கஷ்டமான தேகப் பயிற்சிகளைச் செய்யும்படி கூறுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல், எதிர்பார்த்தபடி எதுவும் நடைபெறவில்லை. பட்டினி இருப்பதை அவர் சொற்பமாக ஏற்படுத்தியதுடன் வேகவைத்த

உணவை உட்கொள்ளவேண்டாமென்று தடுத்து, சில குறிப்பிட்ட உணவுகளை மட்டிலும் உட்கொள்ளும்படி கட்டளையிட்டார். சில தினங்கள்வரை தமது வழக்கத்திற்கு மாறாகப் படுக்கையிலேயே இருந்தார். பிறகு, அவருடைய தேக நிலைமை மிகக் கேவலமான ஸ்திதிக்கு வந்தது. தமது மாமனார் அஜ்மத் அலி கான் இதே வயதில், இதே வியாதியால் மரணமடைந்திருப்பதால், தமக்கும் இதுகடைசித் தருணம் என்றும், தாம் இவ்வியாதியிலிருந்துமீளுவதற்கில்லை என்றும் அவர் நினைத்து, தமது சகோதரர் மௌலானா ஷௌகத் அலியையும், தமது மனைவியையும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற அவாவுண்டாகி, அவர்களை வரும்படி தந்தி கொடுத்தார். ஆயினும், தம்முடைய தேக நிலைமையைப் பற்றி அவர்களுக்குத் தெரிவித்தால், அவர்கள் கவலைகொள்வார்கள் என்று நினைத்துத் தமது சுகவீனத்தைப்பற்றி ஒன்றுங் கூறவில்லை. ஆதலால், அவர்கள் ஐரோப்பா செல்வதை அவசரமாகக் கருதவில்லை.

எனினும், முன் ஜாக்கிரதையாக இருந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அக்காலத்தில் அங்கிருந்த (பாரிஸில்) முஜப்பர்சாகிப் முதலிய இந்திய சகோதரர்களுக்கு ஜனாஸாத் தொழுகையை நடத்தும் விதம், ஜனஸாவைக் குளிப்பாட்டுதல், கபன் செய்து கப்ரில் வைக்கும் முறை, பிறகு மண் போடும் விதம் முதலியவைகளை எல்லாம் கற்றுக் கொடுத்தார். ஏனெனில், குப்ரு நிறைந்த இத்தேசத்தில் ஆவி துறக்க

வேண்டியதேற்படின், இஸ்லாமிய ஆசாரத்தின்படி தமக்கு கபன் தபன் முதலிய காரியங்கள் நடைபெற வேண்டும் என்பது அவரது எண்ணம். இவ்விள வாலி பர்கள் இஸ்லாமிய ஆசார மில்லாத தேசத்தில் இருந்த தால், இவர்களுக்குத் தொழுகையை நிறைவேற்றுவது கூடத் தெரியாதிருந்தது. இப்படிப்பட்டவர்கள் அபூர்வ மாக ஏற்படும் ஜனஸாத் தொழுகையை எங்கு கற்றுக் கொண்டிருக்கப்போகிறார்கள்? ஆகவே, அவர் ஜனஸாத் தொழுகைக்குப் பின், தபன் செய்துவிட்டு ஓதவேண்டிய பிரார்த்தனைகளையுங்கூட அவர்களுக்குக் கற்பித்துக் கொடுத்து, மரணமடைவதற்குத் தயாராகி விட்டார். ஆயினும், இறைவனுக்கு அது நாட்டமாக இல்லை. ஆதலின், அவர் விரைவில் குணமடைந்தார். நீர் ரோகத்திலிருந்த அநேக கெடுதல்கள் நீங்கின.

தேசத்திற்கும், சமூகத்திற்கும் ஊழியம் செய் வதற்குத் தம்மை அற்பணஞ் செய்திருக்கிற நமது தலைவர் எங்ஙனம் சும்மா இருக்கமுடியும்? தேசம், சமூகம் என்ற கவலையிலும், சிந்தனையிலும் மூழ்கி இருந்த அவர், இன்னுஞ் சில நாள் ஓய்வெடுத்துத் தமது சுகவீனத்திற்குப் பூரணமாகச் சிகிச்சை செய்து கொள்ள முடியவில்லை. இந்தியாவில் அது சமயம் நேரு சுயராஜ்ய திட்டம் வெளியாகி, ஹிந்து முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பிளவு உண்டாகிவிட்டது. நோய் வாய்ப்பட்டு, அந்நிய தேசத்தில் படுத்த படுக்கை யாக இருக்கிற அவருக்குத் இச்செய்திகள் தவ றாமல் அறிவிக்கப்பட்டுக் கொண்டே இருந்தன.

எனவே, அவர் சொற்ப சுகம் அடைந்து, இந்தியாவுக்குச் செல்லத் தமக்குச் சக்தி கிடைத்ததே பெரும் பாக்கியம் என நினைத்து, இந்தியாவுக்குச் செல்ல முடிவு செய்து விட்டார். இதற்குள்ளாக ஜனுப் ஷுஐப் குறைஷியும் இது சம்பந்தமாகவுள்ள முக்கிய ரிக்கார்டுகளை எடுத்துக் கொண்டு மௌலானா அவர்களிடம் வந்து சேர்ந்தார். உடனே டாக்டர்களின் அபிப்பிராயங்களை மீறி இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டார்.

இங்கிலாந்து :— இவ்வாறு நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்தபோழ்தும் அவர் பாரிஸிலிருந்து இங்கிலாந்திற்கு இரண்டொரு முறை சென்றார். அங்கு பிரசங்கம் செய்வதற்கு மிஸ்டர் சக்ளத்வாலா ஏற்பாடு செய்தார். நோய்வாய்ப்பட்டிருக்கும் அச்சமயத்திலுங்கூட ஸைமன் கமிஷனைப்பற்றி அங்கு பிரசங்கம் செய்தார். இதன் பலனாக "ஸைமன் கமிஷன் எதிர்ப்புச் சங்கம்" என ஒரு சங்கமும் ஏற்பட்டது. அதற்கு அவர் சந்தாக் கொடுத்தது மட்டுமில்லாமல், சகல விதத்திலும் உதவி புரிவதாகவும் வாக்களித்தார்.

எனவே, தமக்குப் பூரண சவுக்கியமேற்படுவதற்கு முன்னரே இந்தியாவுக்குப் புறப்பட்டு வருகையில் கான்ஸ்தாந்திநோபில், பைத்துல்முகத்தஸ், பகுதாது முதலிய இஸ்லாமிய தேசங்களிலுள்ள பிரதான பட்டினங்களுக்கும் சென்று காட்சி வந்திறங்கினர்.

நாற்பத்தோராம் அத்தியாயம்

நேரு ரிப்போர்ட்டு

ஒற்றுமை மகாநாடு, சர்வ கக்ஷி மகாநாடுகளை சிம்லா, டில்லி ஆகிய நகரங்களில் கூட்டப்பட்ட விபரமும், அவைகள் ஒத்திவைக்கப்பட்ட விபரமும் இதற்கு முந்திய அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன. டில்லி சர்வகக்ஷி மகாநாட்டை ஒத்திவைக்கும்போது, மே மாதத்தின் கடைசி 10 தினங்களில் அம்மகாநாட்டை மறுபடியும் பம்பாயில் கூட்ட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். ஏற்கனவே, அறிவிக்கப்பட்டபடி பம்பாயில் சர்வகக்ஷி மகாநாடு கூட்டப்பட்டது. இந்தியாவிலுள்ள பொறுப்பு வாய்ந்த முக்கிய சங்கங்களிற் பல இதில் கலந்து கொள்ள இஷ்டப்படவில்லை. முஸ்லிம் லீக், முஸ்லிம் பெடரேஷன் முதலிய முஸ்லிம் பொது ஸ்தாபனங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்ப கண்டிப்பாய் மறுத்து விட்டன. அச்சபையிலுள்ள பிரபலஸ்தர்கள் தங்கள் சொந்த ஹோதாவிலும்கூட சர்வகக்ஷி மகாநாட்டில் கலந்து கொள்ள மறுத்து விட்டார்கள். இதுபோல ஹிந்து மகாசபை முதலிய ஹிந்துக்களின் பொது ஸ்தாபனங்கள் இதில் கலந்துகொள்ள முடியாமலிருப்ப தாகத் தெரிவித்து விட்டன. பண்டிதர் மாளவியா, லாலா லஜபதிராய், டாக்டர் மூஞ்சே, மிஸ்டர் ஜெயகர் முதலியவர்கள் சொந்த ஹோதாவிலுங்கூட இதில் கலந்துகொள்ள மறுத்து விட்டனர். காங்கிரஸ் வர்கி

களில் ஹிந்து மகாசபை யுணர்ச்சியுள்ள மிஸ்டர் ஜெயராம்தாஸ் தௌலத்ராம் முதலியவர்களும்கூட இதில் கலந்து கொள்ளவில்லை.

எனவே, இம்முறை கூட்டப்பட்ட சர்வகக்ஷி மகாநாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே கலந்து கொண்டனர். காந்திஜீ, பண்டிதர் மோதிலால் நேரு, டாக்டர் அன்ஸாரி, மௌலானு ஷௌகத்அலி, மிஸஸ் அனிபெஸன்ட் முதலியவர்கள் இம் மகாநாட்டில் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த நிலைமையைப் பார்த்து சிலர் சர்வகக்ஷி மகாநாட்டைக் கலைத்துவிடலாம் என்றபிப்பராயப்பட்டனர். ஆனுல், மகாநாட்டைக் கலைத்துவிடுவதால் தேசத்தில் நம்பிக்கையின்மை ஏற்பட்டுவிடுமாதலால், மகாநாட்டை ஒத்திவைப்பது நல்லது என்றும், எல்லாக் கக்ஷியினரும் ஒன்றுசேருவதற்கான ஒரு திட்டத்தைத் தயார்செய்யும்படி ஒரு கமிட்டியை நியமித்துவிட்டு மகாநாட்டைக் கலைத்துவிடலாமென்றும் காந்திஜீ முதலியவர்கள் கூறினுர்கள்.

கமிட்டி நியமனம்:—இவ்வாலோசனைக்கேற்ப அம் மகாநாட்டிலேயே ஒரு கமிட்டியும் நியமனஞ் செய்யப்பட்டது. அக் கமிட்டிக்கு பண்டிதர் மோதிலால் நேரு தலைவராகவும், மிஸ்டர் ஷுஐப் குறைஷி, மிஸ்டர் ஆனே, மிஸ்டர் ஜெயகர், மிஸ்டர் சுபாஸ் சந்திர போஸ், ஸர்தார் மங்களசிங் ஆகியவர்கள் அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டதுடன், அவசியத்திற்குத் தகுந்தவாறு இதரர்களையும் சேர்த்துக்கொள்ள இக் கமிட்டிக்கு அதிகாரமுங் கொடுக்கப்பட்டது.

இக்கமிட்டியினர் ஒரு திட்டத்தைத் தயார் செய்தனர். இதற்கு "நேரு சுயராஜ்யத் திட்டம்" என்றும் "நேரு அறிக்கை" என்றும் பெயர்.

லக்ஷ்மணபுரியில் சர்வகக்ஷி மகாநாடு:—இவ்வறிக்கை தயாரானவுடன் சர்வகக்ஷி மகாநாட்டுத் தலைவருக்கு இது சமர்ப்பிக்கப்பட்டது. அவர் 1928ஆு ஆகஸ்டுமீ 28-29-30௳களில் லக்ஷ்மணபுரியில் மகாநாட்டைக் கூட்டினர். ரிப்போர்ட்டின் சுருக்கம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. எதிர்பாராத வண்ணமாக இம்மகாநாட்டிற்கு இந்தியாவிலுள்ள அநேக சபைகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைத்தன. ஹிந்து மகாசபையின் முப்பெருந் தலைவர்களான லாலா லஜபதிராய், பண்டிதர் மாளவியா, டாக்டர் மூஞ்சே முதலியவர்களும் வந்திருந்தனர். இம் மகாநாட்டுக்கு அக்காலத்தில் காங்கிரஸ் தலைவராக இருந்த டாக்டர் அன்ஸாரீ தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இந்த ரிப்போர்ட்டில் கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களில் காங்கிரஸ் செய்த தீர்மானங்கள் அலக்ஷியம் செய்யப்பட்டன. முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளில் பெரும்பாலானவை நிராகரிக்கப்பட்டிருந்தன. சிந்து தனி மாகாண மாக்கப்படுவதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டது. முஸ்லிம்களின் ஸ்தானங்கள் பாதுகாக்கப்படவில்லை. தற்போது மாகாணங்களுக்கு இருந்துவரும் சுயேச்சைகள்கூடப் பறிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்குப் பூரண ஆதிக்கம் கொடுக்கப்பட்டது. பூரண சுயேச்சைக்குப் பதிலாக "டொமினியன் ஸ்டேட்ஸ்" அந்தஸ்து

ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வித நிலைமையில் மகாநாடு கூடியவுடன், இந்த ரிப்போர்ட்டைத் தயார் செய்ததற்காக கமிட்டியினருக்கு நன்றி செலுத்தும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தை மௌலானா ஹஸ்ரத் மோஹானீ எதிர்த்தார். அவர் ஏழையானதால் அவருடைய ஆக்ஷேபனையை மற்றவர்கள் லக்ஷியம் செய்யாமலிருப்பது இயற்கையேயாகும். இதற்கேற்ப அவரது எதிர்ப்பு சில சிரிப்புகளுடன் நிராகரிக்கப்பட்டது.

பிறகு, இத்திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத் தீர்மானத்தை மௌலானா ஷௌகத் அலி ஆக்ஷேபித்தார். இவரை இப்படிச் செய்ய வேண்டாமென்று சுபாஷ் சந்திரபோஸும், மிஸ்டர் ஸென்குப்தாவும் வேண்டிக் கொண்டனர். ஆயினும், "முஸ்லிம்கள் அநியாயமாக அறுக்கப்படுவதை நான் பார்த்துக்கொண்டிருக்க என்னால் முடியாது" என்று அவர் கண்டிப்பாகக் கூறி, தமது ஆக்ஷேபனையை சர்வ கக்ஷி மகாநாட்டில் தெரிவித்துக்கொண்டார். இக்காலம் நமது தலைவர் மௌலானா வைத்திய சிகிச்சை செய்து கொள்வதற்காக ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தசமயம். அவர் அங்கிருந்து இவ்விஷயங்களை எல்லாம் உணர்ந்து இந்தியாவுக்குத் திரும்ப வந்ததும் இந்த ரிப்போர்ட்டை நிராகரிக்கும் விஷயத்தில் மும்முரமாக ஈடுபட்டார். ஆகவே, இந்தியாவில் மறுபடியும் வகுப்பு வித்தியாசமும், பிளவும் தோன்றின.

"நேரு ரிப்போர்ட்டு வேதமல்ல, அதில் எவ்வித மாறுதலோ திருத்தமோ ஏற்படமுடியாது என்று கூறுவதற்கில்லை. அது மனிதர்களால் உண்டாக்கப் பட்ட திட்டம்தான். அது தவறில்லாதது என்று சொல்ல முடியாது. அதிலுள்ள தவறுகள் இன்னின்னவை என்று நீங்கள் எங்களுக்குக் கூறினால் அவைகளை நாங்கள் நிவர்த்தி செய்யமுடியும்" என்று அந்த ரிப்போர்ட்டை ஆதரிப்பவர்கள் கூறினார்கள். "அந்த ரிப்போர்ட்டில் இன்னின்ன தவறுகளிருக்கின்றன. இன்னின்ன விதத்தில் முஸ்லிம்களின் பெரும்பான்மை அந்தஸ்து சிறுபான்மையாக மாற்றப்பட்டிருக்கிறது. இவைகளை மாற்றிவிடவேண்டும்" என்று அந்த ரிப்போர்ட்டை ஆக்ஷேபிப்பவர்கள் கூறினால், இவர்களது தாவாக்களை ஹிந்துக்கள் காதில்கூடப் போட்டுக்கொள்வதில்லை. இதனால், நேரு ரிப்போர்ட்டில் திருத்தம் செய்வதற்கே இடமில்லாமலாகிவிட்டது.

இந்த ரிப்போர்ட்டை எல்லா ஹிந்துக்களும் ஆதரித்தனர். ஹிந்து மகாசபைக்காரர்கள், காங்கிரஸ் வாதிகள், லஜபதிராய், பண்டிதர் மாளவியா, டாக்டர் மூஞ்சே முதலிய அனைவரும் ஒப்புக்கொண்டனர். தமக்குச் செல்வாக்கில்லை என்று சொல்லிக் கொண்டு டில்லி, சிம்லா ஆகிய நகரங்களில் கூடிய ஒற்றுமை மகாநாட்டிலும், சர்வகக்ஷி மகாநாட்டிலும் கலந்து கொள்ளமறுத்த காந்திஜீயுங்கூட இந்த ரிப்போர்ட்டைப் பலமாக ஆதரித்தார். ஆனால், முஸ்லிம்களில் இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டன. இரண்டு கக்ஷியினரும் ஒருவரை

ஒருவர் நன்ருகத் தாக்கி எழுதவும், பேசவும் செய்தனர். முஸ்லிம்கள் தங்ளுக்குள்ளாகவே சண்டைபோட்டுத் தாக்கிக் கொள்வதை ஹிந்துக்கள் கைகொட்டி, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதமாக அன்று ஏற்பட்ட பிளவு அப்பொழுதே தீர்ந்துவிடாமல் முஸ்லிம்களுக்குள் இன்றுங்கூட இருந்து வருவது வருந்தத்தக்க விஷயமாகும்.

முஸ்லிம்களிற் பெரும்பாலர் இதனை எதிர்க்கிருர்கள் என்பதையும், டில்லி சிப்பாய் கலகத்திற்குப்பின் இருசமூகங்களுக்குமிடையில் ஏற்பட்டிருந்த பெரும் அணையை உடைத்தெறிவதில் அதிகம் பாடுபட்டுழைத்து, அதில் ஓரளவு வெற்றிபெற்ற காங்கிரஸ் முஸ்லிம்களில் முக்கியஸ்தர்கள் இந்த ரிப்போர்ட்டை எதிர்த்து விலகிப் போகிருர்கள் என்பதையும் ஹிந்துக்கள் நன்கறிந்திருந்தார்கள். இவர்கள் இப்படிப் பிரிந்து போவது காங்கிரஸின் நோக்கத்திற்குப் பெருந்தடையென்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆயினும், அவர்களனைவரும் இவ்விஷயத்தில் எவ்விதச் சிரத்தையுங் கொள்ளவில்லை. இவ்வித நிலைமையில் ஹிந்து மகா சபைக்காரர்கள் நேரு ரிப்போர்ட்டை எதிர்த்தவர்களை வகுப்புவாதிகளென்றும், தேசாபிமானமற்றவர்களென்றும், குறுகிய புத்தியுள்ளவர்களென்றும், தாராள மனப்பான்மை கொண்டவர்களல்லவென்றும் கூறித் தாக்கி வந்தனர்.

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி இந்த ரிப்போர்ட்டை எதிர்க்கும் விஷயத்தில் எவ்விதத்திலும்

தயங்கவில்லை. ஹிந்து முஸ்லிம் இரு சமூகத்தின ருக்கு மிடையில் ஒற்றுமையும், நட்பும் இருக்க வேண்டும் என்பதற்காக குற்றமற்ற முஸ்லிம்களையே அவர் பல முறை குறைகூறி இருக்கிறார். ஹிந்து முஸ்லிம் கலகம் ஏற்பட்ட சமயங்களில் ஹிந்துக்களே தவறுசெய்திருந்த போதிலும், அவர் முஸ்லிம்களையே கண்டித்திருக்கிறார். முக்கியமான சமயத்தில் ஹிந்து மகா சபையும், தப்லீக் இயக்கமும் காங்கிரஸின் செல் வாக்கைக் குலைக்க முயற்சி செய்தபோது, அவர் காங் கிரஸில் உறுதியாக இருந்து, அதன் செல்வாக்கைக் குறையவிடாமல் காப்பாற்றினர். காங்கிரஸிலுள்ள பெரும்பெரும் தலைவர்கள் மௌனவிரதம் பூண்டு ராஜீய விஷயங்களில் தலையிடுவதில்லை என்று ஒதுங்கி இருந்தபோது, அவர் தன்னந்தனியே காங்கிரஸுக் காக உழைத்தார். இப்படிப்பட்ட ஒருவர் நேரு ரிப் போர்ட்டை எதிர்த்தபோது குறைந்த பக்ஷம் பெயருக்கு மாத்திரமேனும் "முஹம்மது அலி சொல் வது ஒரு விதத்தில் சரிதான்" என்றேனும் ஒரு வார்த்தையை எவரேனும் ஒரு ஹிந்துத் தலைவர் கூறி விடலாகாதா? இவ்வுபசார வார்த்தையைக் கூறுவதற்குக் கூட எவரும் துணியவில்லை.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

கல்கத்தா காங்கிரஸ்

சர்வகக்ஷி மகாநாட்டிற்குப் பிறகு காங்கிரஸ் மகா சபையின் வருஷாந்திர மகாநாடு கூடும் கெடு வந்தது. இம்மகாநாட்டைக் கூட்டுவதற்காக கல்கத்தா தெரிந்தெடுக்கப்பட்டதுடன், சுயராஜ்யத் திட்டத்தை வகுத்ததற்குக் கைமாருக பண்டிதர் மோதிலால் நேரு காங்கிரஸுக்குத் தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். அதே வருஷத்தில் கிலாபத் கமிட்டியின் வருஷாந்திர மகாநாடும் கல்கத்தாவிலேயே கூட்டப்பட்டது. அதற்கு நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார். அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாடும் இங்கு கூட்டப்பட்டது. எனவே, இந்தியாவிலுள்ள முக்கிய சபைகளின் மகாநாடுகள் யாவும் கல்கத்தாவிலேயே கூட்டப்பட்டன என்று கூறுவது மிகையாகாது.

டொமினியன் ஸ்டேட்ஸ் உரிமையே காங்கிரஸின் கொள்கை யென்றும், இதற்கு அரசாங்கம் இணங்காவிடில் அதற்கப்புறம் ஆலோசனை செய்வது என்றும் காங்கிரஸ் மகாநாட்டில் முடிவு செய்ய உத்தேசிக்கப்பட்டதால், அதற்கப்புறம் நமது தலைவர் மௌலானா காங்கிரஸ் மகாநாட்டிற்குச் செல்லவில்லை. ஆனால், அதுபோழ்து சர்வகக்ஷி கன்வென்ஷனும் கல்கத்தாவிலேயே நடைபெற்றது. அக் கன்வென்ஷனில் எல்லாச் சபைகளுக்கும் பிரதிநிதிகளை அனுப்ப உரிமை அளிக்கப்

பட்டிருந்ததால், கிலாபத் கமிட்டியும், ஜமிய்யத்துல் உலமாவும் தங்களது சபைகளின் ஏகப் பிரதிநிதியாக மௌலானா முஹம்மது அலியைத் தெரிந்தெடுத்தன. ஆகவே, அதில் அவர் கலந்து கொண்டார்.

விவாதம் ஆரம்பமாயிற்று. முதல் முதலாக மிஸ்டர் ஸென்குப்தா "டொமினியன் ஸ்டேட்ஸ் உரிமையை இப்பொழுது ஒப்புக்கொள்வோம். இதற்குப் பிறகு பூரண சுயேச்சைக்காக முயற்சி செய்வோம்" என்ற கருத்துள்ள தீர்மானத்தைப் பிரேரித்துப் பிரசங்கம் செய்தார். நமது தலைவர் மௌலானா அத்தீர்மானத்தை எதிர்த்துப் பிரசங்கம் செய்கையில் பூரண சுயேச்சையே தமது லக்ஷியம் என்று காங்கிரஸ் முடிவு செய்திருப்பதை மாற்றக்கூடாது என்று வற்புறுத்திப் பேசினார். அது போழ்து "பூரண சுயேச்சைக்கு எதிராகவும், குடியேற்ற நாட்டந்தஸ்துக்கு ஆதரவாகவும் இருப்பவர்கள் வீரர்களல்ல, கோழையர்கள்" என்றுங் கூறினார். இதனைக் கேட்ட மாத்திரத்தில் சபையினரில் ஒரு பெருங் கூட்டத்தினர் "முஹம்மது அலி உட்காரும், உட்காரும்; நாங்கள் உமது பிரசங்கத்தைக் கேட்கமாட்டோம்" என்று கூச்சலிட்டனர். நமது தலைவர் இப்படிப்பட்ட கூச்சல்களைத் தமது வாணாள் முழுவதிலும் கேட்டுப் பழக்கமுள்ளவராதலின், இதனை லக்ஷியம் செய்யாமல், தமது பிரசங்கத்தைக் கூறி முடித்தார். பிறகு, மற்றவர்களும் பேசினர். இறுதியாக மகுரிப் தொழுகைக்கு நேரமாயிற்று. ஆதலால், நமது தலைவர் தொழுகைக்காக மகாநாட்டுப்

பந்தலை விட்டு வெளியில் வந்து, மகுரிபு தொழுதுவிட்டு மறுபடியும் கூட்டத்திற்கு வந்தார். அதற்குள்ளாக ஷெ தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது. இச்செய்தியை நமது தலைவர் கேள்விப் பட்டு மகாநாட்டிற்குச் செல்லாமல் திரும்பி விட்டார். அதற்கப்புறம் அங்கு செல்லவே இல்லை.

கிலாபத் மகாநாடு:—ஹாலிடே பார்க்கில் கிலாபத் மகாநாடு நடைபெற்றது. கிலாபத் கமிட்டிக்கு எதிராகச் செய்யப்பட்ட பிரசாரத்தின் பலனாக கிலாபத் மகா நாட் டிற்கு மிகவும் சொற்ப ஜனங்களே வருவார்களென்று சிலரால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்த தற்கு விரோதமாக மகாநாட்டுப் பந்தல் நிறைய ஜனங் கள் குழுமி இருந்தனர். இந்தியா முழுவதிலுமிருந்து ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

மௌலானாஅவர்கள் ஐரோப்பாவிலிருந்து திரும்ப வந்ததும், நேரு சுயராஜ்ய அறிக்கை சம்பந்தமாக தொடர்ச்சியாகப் பல கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் பேசவேண்டியதாகவும், சுற்றுப்பிரயாணஞ் செய்ய வேண்டியதாகவும் ஏற்பட்டதால், அவர் தம்முடைய அக் கிராசனப் பிரசங்கத்தை முற்கூட்டியே எழுதி அச்சிட முடியவில்லை. ஆதலால், வாய்மொழியாகவே தமது அக்கி ராசனப் பிரசங்கத்தைக் கூறி முடித்தார். இப்பிரசங்கத் தில் இஸ்லாமிய உலகில் அவர் செய்த சுற்றுப்பிரயாணத் தில் அவருக்கேற்பட்ட அனுபவம், தற்போதுள்ள இந்திய ராஜீய நிலைமை, நேரு ரிப்போர்ட்டு, காங்கிரஸை விட்டுத் தாம் விலகியது, அதனுடன் ஒத்துழைக்காமல்

இருப்பதற்குரிய காரணங்கள் ஆகியவைகளைப்பற்றி விபரமாகப் பேசினர்.

அதுபோழ்து கல்கத்தாவில் நமது தலைவர் மௌலானாவிற்கு எதிர்கக்ஷியாகவுள்ளவர்கள் குழுமி இருந்தனர். காங்கிரஸ் மகாநாடு அவ்விடத்திலேயே நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவரது அபிப்பிராயத்திற்கு நேர்மாருகவுள்ள இதர தலைவர்கள் கல்கத்தாவிலேயே அச்சமயம் இருந்தனர். கல்கத்தாவில் செல்வாக்குள்ள வேறு பலரும் இருந்தனர். பொதுஜன சேவை செய்து, நன்மதிப்பு வாங்கி இருந்த மற்றவர்களும் இருந்தனர். இக் கூட்டத்தார் கிலாபத் மகாநாட்டில் வந்து குழப்பம் விளைவித்தால், அது பெருங் குழப்பமாக ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் 8-10 ஆயிரம் பேர்களைக்கொண்ட ஒரு பெருங் கூட்டத்தில் ஏகமனதான அபிப்பிராயமில்லாமல் சிற்சில திருத்தங்கள் ஏற்படுவதும் சகஜம். ஆயினும், நமது மௌலானாவின் பிரசங்க வன்மையால், கூட்டத்தில் எவ்விதச் சந்தடியுமில்லாமல், ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேறின.

ஒரு ஆக்ஷேபணை:—“சர்வகக்ஷி கன்வென்ஷனில் குடியேற்ற நாட்டந்தஸ்துத் தீர்மானம் நிறைவேறிய பின், நமது தலைவரும் அவரது சகாக்களும் கன்வென்ஷன் கூட்டத்திற்கு செல்லாமலிருந்தது தவறு. அவர்கள் அங்கு சென்று முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடி இருந்தால், அவர்கள் வெற்றிபெற்றிருக்கலாம். அவர்கள் அங்கு செல்லாதிருந்தது

பிளவை அதிகப்படுத்திவிட்டது,'' என்று சிலர் நினைக்கக்கூடும். இவ்வாறு நினைப்பது தவறு. அச்சமயம் ஹிந்துக்களுக்கிருந்த மனப்பான்மை மௌலானா அவர்களையும் அவரது சகாக்களையும் அங்கு செல்ல அனுமதிக்கவில்லை. தவிரவும், முஸ்லிம் லீக் மகாநாடு தனது பிரதிநிதிகளாகச் சிலரைத் தெரிந்தெடுத்து, மிஸ்டர் முஹம்மது அலி ஜின்னாவை அப்பிரதிநிதிகளுக்குத் தலைவராக நியமித்து, சர்வகக்ஷி கன்வன்ஷனுக்கு அனுப்பிற்று. மிஸ்டர் ஜின்னா முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளையும் கன்வன்ஷனில் சமர்ப்பித்து, சிநேக உணர்ச்சியில் இவைகளைக் கவனித்து ஒப்புக்கொள்ளும்படி வேண்டினார். முடிவில், ஜின்னாவின் தீர்மானம் தோல்வியுற்றது. இதைப்பற்றி ஜனாப் சாக்ளா கூறி இருப்பது வருமாறு :—

"முஸ்லிம்கள் சம்பந்தமான சில முக்கிய திருத்தங்களைச் செய்தபின், நேரு ரிப்போர்ட்டை அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காகவே முஸ்லிம் லீக் தன்னுடைய பிரதிநிதிகளை சர்வகக்ஷி கன்வன்ஷனுக்கு அனுப்பிற்று. சர்வகக்ஷி கன்வன்ஷன் ஹிந்து மகாசபையின் செல்வாக்கிற்குப் பணிந்து, அதனுடைய பயமுறுத்தல்களைக்கண்டு, இம்முறையைக் கையாண்டதற்கு பதிலாக முஸ்லிம்களின் கோரிக்கைகளை தாராள மனப்பான்மையுடன் கவனித்திருக்க வேண்டும் என்று நான் வருத்தத்துடன் கூறுகிறேன். முஸ்லிம் லீக் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் சர்வகக்ஷி கன்வன்ஷன் கூட்டத்திற்கு வந்திருந்தனர். முஸ்லிம்களின் நியாயமான

கோரிக்கைகளை அவர்கள் சமர்ப்பித்தனர். அவர்கள் நேரு ரிப்போர்ட்டை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று தங்களது சமூகத்தாரிடம் சண்டை போட்டவர்கள். தெரிந்தெடுக்கப்பட்ட 23 பிரதிநிதிகளுடன் கன்வன்ஷன் சம்பாஷணை செய்ய முடியவில்லையென்றால், இந்தியாவிலுள்ள எந்த முஸ்லிமுடனும் இது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்ய அதற்குச் சக்தி இல்லை என்றுதான் நினைக்கவேண்டும். இந்த 23 பிரதிநிதிகளையும் வகுப்பு வாதிகள் என்று நினைத்து, அவர்களுடன் இம்மாதிரி நடந்து கொண்டிருப்பதால், இந்தியாவில் ஒரு முஸ்லிம்கூட தேசியவாதியல்லவென்று அவர்கள் நினைப்பதாகக் கருதவேண்டியதிருக்கிறது. முஸ்லிம் லீக் ஸர். ஷாபி பார்ட்டியினரை அப்புறப்படுத்தியது போல், கன்வன்ஷனும் தைரியமாக டாக்டர் மூஞ்சே, மிஸ்டர் ஜெயகர் இவர்களுடனும் இம்மாதிரி நடந்து கொண்டிருக்கவேண்டும். இவர்கள் கன்வன்ஷன் கூட்டத்தில் "நாங்கள் சபையைவிட்டுச் சென்றுவிடுவோம்" என்று ஒவ்வொரு பேச்சிலும் மூச்சிலும் கூறிப் பயங் காட்டிக் கொண்டே இருந்தார்கள்"

மிஸ்டர் முஹம்மது அலி ஜின்னு மனமுடைந்து நேரு ரிப்போர்ட்டை எதிர்ப்பவராக மாறிவிட்டார். இதுபோலவே நமது தலைவர் மௌலானு முஹம்மது அலி ஜௌஹர் அவர்களும் ஹிந்துக்களிடத்தில் நம்பிக்கை யிழந்து விலகிக் கொண்டார்.

நாற்பத்தி மூன்றும் அத்தியாயம்

முஸ்லிம் சர்வகக்ஷி மகா நாடு

காங்கிரஸ், சர்வகக்ஷி கன்வன்ஷன் ஆகிய மகாநாடுகளில் நமது தலைவர் நம்பிக்கை இழந்தபின், முஸ்லிம்களின் சர்வகக்ஷி மகாநாட்டைக் கூட்டி முஸ்லிம்களுக்கென ஒரு திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று ஆயத்தமானார். எனவே, டில்லியில் 1929-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் முஸ்லிம் சர்வகக்ஷி மகாநாட்டைக் கூட்டுவதற்கான வேலைகள் ஆரம்பமாயின. டாக்டர் அன்ஸாரீ, ஸர். அலி இமாம், மிஸ்டர் ஹஸன் இமாம், மௌலானா அபுல்கலாம் ஆஜாத் முதலிய பல தலைவர்களுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டன. மாகாணச் சட்டசபைகளிலும், இந்தியா சட்டசபையிலும், ராஜாங்க சபையிலும் உள்ள முஸ்லிம் அங்கத்தினர்களுக்கும், இதர சங்கங்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன. இக்கான்பரன்சுக்கு ஹிஸ். ஹைனஸ் ஸர். ஆகாகான் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இக் கான்பரன்சு மாகாணச் சட்டசபை அங்கத்னர்கள், ராஜாங்க சபை அங்கத்தினர்கள், முஸ்லிம் லீக், கிலாபத் கமிட்டிகளின் பிரதிநிதிகள், ஜமியத்துல் உலமாவின் முக்கிய தலைவர்களான மௌலானாமுப்தி முஹம்மது கிபாயத்துல்லாசாகிப், மௌலானா அஹ்மது ஸயீது சாகிப் முதலிய உலமாக்களும் இதில் கலந்து கொண்டனர். இக்கான்பரன்சுக்கு வந்திருந்த ஸர். முஹம்மது ஷாபீ இக்கான்பரன்சைப் பற்றிக் கூறும்

போது "அலி சகோதரர்களும், ஜமிய்யத்துல் உலமா வின் தலைவர்களும் இதில் கலந்து கொண்டிருப்பதால், லௌகீகம், வைதீகம் ஆகிய இருவகையிலும் இக்கான்பரன்சு சரியான பிரதிநிதித்துவமுள்ளதாக இருக்கிறது" என்று கூறினர்.

இக்கான்பரன்ஸின் முக்கிய நோக்கம் என்ன? என்பதைப் பற்றிய பிரசினையுண்டாயிற்று. ஸர். முஹம்மது ஷாபிக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் "முஸ்லிம்களின் லக்ஷியம் டொமினியன் ஸ்டேட்ஸ் என்பதுகூட இல்லை" என்று ஏற்படுத்தினுல், அதனைக் கூட அங்கீகரித்துக் கொள்வது சம்மதமாக இருந்தது. சில ஜனங்கள் 'குறைந்தபக்ஷம் குடியேற்ற நாட்டந்தஸ்து' என்பதில் திருப்தியடைபவர்களாக இருந்தனர். நமது தலைவர் மௌலானு முஹம்மது அலி பூரண சுயேச்சையே முக்கிய லக்ஷியம் என்ற கொள்கையுள்ளவராக இருந்தார். கான்பரன்சின் லக்ஷியம் பூரண சுயேச்சைதான் என்று பிரேரணை கொண்டுவருவதாக இருந்தால், இக்கான்பரன்சுக்கு ஹிஸ். ஹைனஸ் ஆகா கான், ஸர். முஹம்மது ஷாபீ முதலிய தலைவர்கள் கலந்து கொள்ளவே மாட்டார்கள். குடியேற்ற நாட்டந்தஸ்து, டொமினியன் ஸ்டேட்ஸ் என்று பிரேரணை கொண்டுவந்தால் நமது தலைவர் மௌலானு போன்றவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆதலால், கான்பரன்சின் முடிவான லக்ஷியம் இன்னது என்று வரையறை செய்யவேண்டாமென்றும், முஸ்லிம்களின் வாத்தியதைகளை மட்டிலும்தான் நாம் வற்

புறுத்த வேண்டுமென்றும், யார் யார் எந்த கக்ஷியி லிருந்தாலும் முஸ்லிம்களின் பாத்தியதையை வற் புறுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறை வேறின. அவை வருமாறு :—

1. இந்தியாவின் விஸ்தீரணம், ஜனத் தொகை, பாஷை முதலியவைகளைக் கவனிக்குமிடத்து இந்தியா விற்கு "சமஷ்டி அரசாங்கம்" தான் ஏற்றது. இதில் சுதேச சமஸ்தானங்களும் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால், அச்சமஸ்தானங்களுக்குத் தங்கள் உள்நாட்டு விஷயங்களில் பூரண சுயேச்சை இருக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரம் எல்லா மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் பொதுவாக வுள்ள காரியங்களில் மட்டிலும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அதுவும் அரசியல் திட்டத்தின் மூலமாக அவ்வரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்க வேண்டும்.

2. மத சம்பந்தமான காரியங்களில் தலையிடக் கூடிய எந்தத் தீர்மானத்தையும், மசோதாவையும், திருத்தத்தையும் மாகாணச் சட்டசபைகளிலும் மத்திய சட்டசபைகளிலும் கொண்டுவரவும் கூடாது, விவாதித்துச் சட்டமாக்கவும் கூடாது. அவ்வாறு கொண்டுவந்தால், அந்தச் சட்டம் அல்லது தீர்மானம் பாதிக்கிற மதத்தைச் சேர்ந்தவர்கள் அதாவது முஸ்லிமானாலும் சரி அல்லது ஹிந்துவானாலும் சரி அச்சட்டசபையிலுள்ள அச்சமூக அங்கத்தினரில்

முக்கால்வாசிப் பேருக்கு அதிகமானவர்கள் அதனைப் பிரேரிப்பதை அல்லது விவாதிப்பதை அல்லது சட்டமாக்குவதை எதிர்த்தால், அதனை விட்டுவிட வேண்டும்.

3. இந்தியாவிலுள்ள சட்டசபைகளில் முஸ்லிம்கள் தனித் தேர்தல் தொகுதியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். இது தற்போதுள்ள சட்டம். முஸ்லிம்கள் இந்த பாத்தியதையைத் தாங்களாக வேண்டாம் என்று விட்டுக்கொடுக்காத வரையில் இதனை விட்டு அவர்களை மாற்றக் கூடாது.

4. தற்போதைய நிலைமையில் இந்தியாவிலுள்ள பற்பல சட்டசபைகளிலும், சட்டப்படியுள்ள இதர சபைகளிலும் முஸ்லிம்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித் தேர்தல் முறையும் இருப்பது அவசியமாக இருக்கிறது. அவ்வாறிருந்தால்தான் சரியான ஜனநாயக அரசாங்கம் ஏற்படமுடியும்.

5. வருகிற புதுச் சீர்திருத்த அரசியல் திட்டத்தில் முஸ்லிம்களுடைய உரிமைகளும் பாத்தியதைகளும் போதுமான அளவிற்குப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி முஸ்லிம்களுக்குத் திருப்தி ஏற்படாதிருக்கும் வரையில், நிபந்தனையுடன் அல்லது நிபந்தனை இல்லாமல் கூட்டுத் தொகுதியின் மூலமாகத் தேர்தல் நடைபெறுவதை முஸ்லிம்கள் ஒரு போதும் அங்கீகரிக்க மாட்டார்கள்.

6. ஆகவே, மேற்கண்ட நோக்கம் நிறைவேறுவதற்காக மத்திய சர்க்காரிலும், மாகாண சர்க்கார்களி

லும் ஏற்படும் மந்திரிச் சபைகளில் முஸ்லிம்களுக்கு நியாயமான பங்கிருக்க வேண்டும்.

7. முஸ்லிம் ஜனத்தொகை பெரும்பான்மையாக வுள்ள விடங்களில், அவர்களது பெரும்பான்மை அந்தஸ்துக்குப் பங்கம் வராத முறையில், அங்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தையும், தனித் தேர்தல் முறையையும் ஏற்படுத்த வேண்டும். சிறுபான்மையினராக வுள்ள மாகாணங்களில் தற்போது முஸலிம்கள் அடைந்துவருகிற விகிதாசாரம் குறையக் கூடாது.

8. மத்திய சட்டசபையில் முஸ்லிம்களுக்கு $33\frac{1}{2}$ சதவிகிதம் பிரதிநிதித்துவமளிக்க வேண்டும்.

9. சிந்து மாகாணம் பம்பாயுடன் சேர்ந்திருப்பதற்கு பாஷை, ஆசாரம், பழக்கம், சாதி முதலிய எவ்விதத்திலும் ஏற்றதாக இல்லாதிருப்பதால், பம்பாயை விட்டு சிந்தைத் தனி மாகாணமாகப் பிரித்து, இந்தியாவிலுள்ள இதர சிவில் மாகாணங்களைப்போல் அதற்கு சட்டசபை முதலியவைகளெல்லாம் ஏற்படுத்த வேண்டும். சிறு பான்மையினரான ஹிந்துக்களுக்கு, ஹிந்துக்கள் பெரும்பான்மையினராகவுள்ள மாகாணங்களில் முஸ்லிம்கள் அடையும் சுயேச்சை விகிதாசாரத்தைப் பார்க்கினும் அதிகமாகவே கொடுக்கப்பட வேண்டும்.

10. பலுச்சிஸ்தானம், எல்லைப்புறம் ஆகிய மாகாணங்களுக்கும் சீர்திருத்தத்தை அமலில் கொண்டு வருவது அவசியமாகும். அங்குள்ள சிறுபான்மை வகுப்பினருக்கு முஸ்லிம்கள் சிறுபான்மையினராக

இருக்கும் மாகாணங்களில் அனுபவித்து வருகிற உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

11. இந்தியாவிலுள்ள தற்போதைய ராஜீய நிலைமையையும், வாழ்க்கை முறைகளையும் கவனிக்குமிடத்து முஸ்லிம்களுக்கு அவர்களது பாஷை, கல்வி, மதம், (Personal law) பெர்ஸனல் லா, முஸ்லிம் வக்புச் சொத்துக்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தல் முதலிய காரியங்களில் பாதுகாப் பேற்பட வேண்டும். அத்துடன் முஸ்லிம்களது ஜனத்தொகை விகிதாசாரத்திற் கேற்றவாறு அரசாங்க உதவியும் இவைகளுக்குக் கிடைக்கவேண்டும்.

12. இந்தியாவின் சமஷ்டி அரசியல் திட்டம் அமலுக்கு வந்தபின், அதில் சேர்ந்துள்ள சமஸ்தானங்களும் "அதனைத் திருத்தவேண்டும்" என்று ஏகமனதாகக் கேட்டுக்கொள்ளாதவரை அதனை மாற்றக்கூடாது.

13. மேலேகண்ட பாதுகாப்புகளை அங்கீகரிக்காத எந்த அரசியல் திட்டத்தை, எவர் இயற்றிய போதினும், அதனை இந்திய முஸ்லிம்கள் அங்கீகரிக்க மாட்டார்கள்.

இவைகள் தாம் முஸ்லிம்களின் 14 நிபந்தனைகள் என்று பிறகு விளங்கின. இவைகளை ஹிந்துக்கள் ஒப்புக்கொண்டு முஸ்லிம்களுக்குரிய பங்கைக் கொடுக்கத் தயாராக இருப்பார்களாயின், அவர்களுடன் முஸ்லிம்கள் ஒத்துழைத்துக் குடியேற்ற நாட்டந்தஸ்தை அடைய முயலுவதற்குத் தயாராக இருந்தனர். ஆனால், ஹிந்துக்கள் முஸ்லிம்களின் இக்கோரிக்கை

களை அங்கீகரிக்கத் தயாராகவே இல்லை. இறுதியாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு இவைகளை முஸ்லிம்கள் சமர்ப்பித்தனர். பிரிட்டிஷ் பிரதம மந்திரியளித்த வகுப்புத் தீர்ப்பில் முஸ்லிம்களின் பெரும்பாலான கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள சில உரிமைகளுக்கு முஸ்லிம்கள் முயற்சி செய்ய வேண்டும்.

நாற்பத்து நான்காம் அத்தியாயம்

வைசிராய் அறிக்கை.

1924-ம் வருஷத்தில் ஸர். மால்கம் ஹெய்லி இந்தியா கவர்ன்மெண்டின் ஹோம் மெம்பராக இருந்தார். அவர் அக்காலத்தில் டொமினியன் ஸ்டேட்ஸ் என்பதற்கு வியாக்யானம் செய்கையில் தப்பருத்தம் உண்டாகும்படிச் செய்துவிட்டார். இதனால், மிதவாதிகளுங்கூட சர்க்காரிடத்தில் நம்பிக்கை யிழந்தனர். இராஜப் பிரதிநிதியாக இருந்த லார்டு இர்வின் இத்தப் பபிப்பராயத்தை நீக்க இது நல்ல தருணமென்றும், தேசத்திலேற்பட்டிருக்கும் கிளர்ச்சியும் குறையுமென்றும், காங்கிரஸ்வாதிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கக்கூடுமென்றும் நினைத்து, இங்கிலாந்து சென்று, மந்திரிச் சபையைக் கலந்துகொண்டபின் இந்தியாவுக்கு வந்து, இந்தியா சட்டசபையில் டொமினியன் ஸ்டேட்ஸ் என்பதற்கு, பூரண குடியேற்ற நாட்டந்தஸ்து தான் என்று வியாக்யானம் செய்தார்.

இராஜப் பிரதிநிதி இதைப்பற்றி இந்தியா சட்டசபையில் பிரசங்கம் செய்யும் தினத்தன்று காங்கிரஸிலுள்ள தீவர வாதிகளும், முக்கிய தலைவர்களும் பற்பல இடங்களிலிருந்து டில்லிக்கு விஜயம் செய்து, இராஜப் பிரதிநிதியின் நாவிலிருந்து வெளியாவதென்னை? என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இராஜப் பிரதிநிதியின் பிரசங்கம் வெளியான பின்னர், காங்கிரஸ் தலைவர்கள் இராஜப் பிரதிநிதிக்கு ஒரு மகஜர் அனுப்பி அவ

ருடைய பிரசங்கத்திற்கு நன்றி செலுத்தியதுடன், வட்ட மேஜை மகாநாட்டுக்கு வரச் சம்மதப்படுவதை யும் தெரிவித்துக்கொண்டனர். அத்துடன் தங்களது கோரிக்கைகளேயும்வட்டமேஜைமகாநாட்டில்அங்கீகரிக்க வேண்டுமென்றும் பணிவாகக்கேட்டுக்கொண்டனர்.

இதன்பேரில் மேன்மைதங்கிய இராஜப் பிரதிநிதி மற்றெரு அறிக்கையில் "டொமினியன் ஸ்டேட்ஸ்" உரிமைகள் படிப்படியாகத்தான் அளிக்க முடியும் என்றும், இப்பொழுது நீங்கள் அதற்கான நிலைமையை அடையவில்லை என்றும் விளக்கிக் கூறினர். இதன் பேரில் காங்கிரஸ் வாதிகள் அதிருப்தி யடைந்து தங்களது லக்ஷியம் பூரண சுயேச்சைதான் என்பதாக அறிக்கை வெளியிட்டனர்.

காந்திஜீ, ஜௌஹர்லால் நேரு முதலிய காங்கிரஸ் தலைவர்கள் கையொப்பமிட்டு மேன்மைதங்கிய இந்திய வைசிராய்க்கு அனுப்பிய மகஜர் நமது தலைவர் மௌலானா முஹம்மது அலியிடமும் கையொப்பத்திற் காக வந்தது. அதில் நமது தலைவர் கையொப்ப மிட்டாராயினும் "எனது சமூகத்திற்கு தக்க பிரதி நிதித்துவமளிப்பதாயின், வட்டமேஜை மகாநாட்டிற்கு நான் வரச் சித்தமாக இருக்கிறேன். இதல்லாமல் ஒத்துழைப்பது சிரமம்" என்று நிபந்தனையு மேற் படுத்தினர்.

காந்திஜீ அல்லது காங்கிரஸ் மகா சபை விடுத்த இவ்வறிக்கையை ஹிந்து முஸ்லிம் பத்திரிகைகள் வர வேற்றன. ஆனல், நமது தலைவர் மௌலானா அவர்

களுக்கு இதிலுங்கூட போராட்டஞ் செய்யும் பாக்கிய மேற்பட்டது. "காங்கிரஸ் மகா சபை குடியேற்ற நாட்டந்தஸ்தைத் தனது லக்ஷியம் என்பதாகத் தீர்மானித்திருப்பதால், டொமினியன் ஸ்டேட்ஸ் அந்தஸ்தை காங்கிரஸ் ஒப்புக்கொண்டு, வைசிராயின் அறிக்கைக்கு இசைந்து, வட்டமேஜை மகாநாட்டிற்குச் செல்லத் தயாராக இருப்பது பொருத்தமான காரிய மாகும். ஆனால், மௌலானா முஹம்மதுஅலி பூரண சுயேச்சையே லக்ஷியமாகக் கொண்டவர். கல்கத்தா கிலாபத் கான்பரன்சில் இதையே வற்புறுத்தினர். சர்வ கக்ஷி கன்வென்ஷனிலும் குடியேற்ற நாட் டந்தஸ்து என்பதை மிகப் பலமாக எதிர்த்தவராயிற்றே, அப்படிப்பட்டவர் அவ்வறிக்கையில் எவ்வாறு கை யொப்பமிட்டார்?" என்று பரிகாசமாகவும், கேவலமாக வும் எழுதி ஆக்ஷேபனை செய்தன.

"பூரண சுயேச்சையென்று பலமாக வற்புறுத்தும் இவர் இதில் கையொப்பமிட்டு வட்டமேஜை மகா நாட்டிற்குங்கூடச் செல்லச் சித்தமாகி விட்டதற்குக் காரணம் அவருக்குள்ள நீர் இழிவு வியாதியின் குணமேயாகும். அவருடைய மூளையும் அறிவும் அவ் வியாதியால் கெட்டுப்போய் விட்டன. முஸ்லிம்கள் அவரைக் கைகழுவி விட்டுவிட வேண்டியதுதான்" என்றும் எழுதின. இதன்பேரில் கொஞ்சகாலம்வரை ஹிந்து முஸ்லிம் பத்திரிகைகளில் ஆதரித்தும் எதிர்த்தும் வியாசங்கள் வெளியாகிக் கொண்டிருந் தன.

இப்பத்திரிகைகள் செய்த ஆக்ஷேபனைகளும் ஒரு விதத்தில் சரியானவை தான். ஆயினும், நமது தலைவர் அவர்களும் காரணமில்லாமல் இதில் கையொப்பமிடவுமில்லை. வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ளச் சம்மதிப்பதாகத் தெரிவித்துக் கொள்ளவுமில்லை. இவர் ஏன் இப்படிச் செய்தார்? என்பதும், இவரது லக்ஷியம் பூரண சுயேச்சையை விட்டு மாறவில்லையென்பதும் வட்டமேஜை மகாநாட்டில் அவராற்றிய பிரசித்தி பெற்ற சொற்பொழிவில் நன்கு தெரியவரும். ஆயினும், இவ்விடத்தில் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டிவிடுவது மிகப் பொருத்தமாகும்.

பண்டிட் ஜௌஹர்லால்நேரு மாஸ்கோவுக்குச் சென்று திரும்பிவந்ததும் "காங்கிரஸின் லக்ஷியம் பூரண சுயேச்சைதான்" என்று சென்னை காங்கிரஸில் தீர்மானம் கொண்டுவந்தார். அதை நமது தலைவர் தான் பலமாக ஆதரித்து நிறைவேறும்படிச் செய்தவர். அக்காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் காங்கிரஸ் மாஜி தலைவர்களிலொருவரான பண்டிதர் மாளவியா இத்தீர்மானத்தை எதிர்த்தபோதும் நமது தலைவர்தான் அவரை வாயடங்கும்படிச் செய்தார். கல்கத்தாவில் நடைபெற்ற கிலாபத் கான்பரன்சிலும் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நமது தலைவர்தான் நிறைவேற்றுவித்தார். முஸ்லிம் சர்வ கக்ஷி மகாநாட்டிலும் கூட "குடியேற்ற நாட்டந்தஸ்து தான் நமது லக்ஷியம்" என்ற தீர்மானம் வராமலிருந்ததும் நமது தலைவர் அவர்களால் தான். ஆயினும், லக்ஷியம் என்ற

விஷயம், விளையாட்டுத் தீர்மானத்தைப்போலவே காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டு வந்தது. சர்க்காரைப் பயங்காட்டிக் காரியத்தைச் சாதிக்க நினைக்கும்போது காங்கிரஸின் லக்ஷியம் பூரண சுயேச்சை யென்றும், அரசாங்கம் செய்யும் காரியம் நல்லதாகத் தோன்றிவிடுமாயின், உடனே "குடியேற்ற நாட்டந்தஸ்து" என்றும் தீர்மானங்கள் நிலையில்லாமல் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. ஆதலின், நமது மௌலானா தமது சமூகத்தாரின் நன்மையை நாடி, இந்தியாவினுடையவும், முஸ்லிம் சமூகத்தினுடையவும் கதிமோட்சத்தைப்பற்றி முடிவு செய்யப்படும் மகாநாட்டில் கலந்து, நாட்டிற்காகவும் சமூகத்திற்காகவும் தம்மாலானவரை போராட முன் வந்தார். இவ்விஷயம் அவரது பிரசங்கத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

தென் ஆப்பிரிக்கா

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி "ஜௌஹர்" ஒவ்வொரு காரியத்திற்கும் தலைமைவகித்து நடத்தும் கீர்த்தி இந்தியாவில் மாத்திரம் இருக்கவில்லை. இந்தியாவுக்கு வெளியிலுங்கூட அவரது கீர்த்தி பரவி இருந்தது. இந்தியாவில் அவரை வழிகாட்டி யென்பதாக ஜனங்கள் ஒப்புக்கொண்டு இருந்ததுபோல, இந்தியாவுக்கு வெளியிலும் ஜனங்கள் அவருடைய தலைமைத்தனத்தை ஒப்புக்கொண்டிருந்தனர். அவர் இதுவரை தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றதில்லை. ஆயினும், அவருடைய கீர்த்தி அங்கெல்லாம் பரவி இருந்ததால், அங்கிருந்து தொடர்ச்சியாக அவருக்குப் பல அழைப்புகள் வந்தன.

அவைகளை அவர் நிராகரிக்க முடியவில்லை. தம்முடைய சுகவீனத்திற்காக, சில காலம்வரை புதிய இடஞ்சென்று காற்று மாற்றிக்கொள்வது நல்லது என்றும் நினைத்தார். ஆதலால், தென் ஆப்பிரிக்காவின் அழைப்பை அங்கீகரித்து, தமது வாழ்க்கைத் துணைவியையும் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பினர். ஆதலின், அவரது மூத்த சகோதரர் மௌலானா ஷௌகத் அலி தென் ஆப்பிரிக்காவுக்கு முதலில் செல்வதென்றும், சில நாட்களுக்குப் பின் நமது மௌலானா குடும்பத்துடன் புறப்படுவதென்றும் முடிவு செய்யப்பட்

டது. இம் முடிவிற்கேற்ப மௌலானு ஷௌகத் அலி தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்ருர்.

பிறகு, நமது மௌலானு பயணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து பம்பாய்க்கு வந்து கப்பல் டிக் கட்டும் வாங்கிவிட்டார். இதற்குள்ளாக தென் ஆப் பிரிக்காக கவர்னர் மிகவும் கேவலமாக ஒரு நிபந்தனையை ஏற்படுத்தினுர். "சில தங்க பவுன்களை ஜாமினுகக் கட்டி ஞல்தான் தென் ஆப்பிரிக்காவுக்குள் வர முடியும். இதனை யல்லாமல் வேறு எவ்விதத்தாலும் தென் ஆப் பிரிக்காவின் தலை நகருக்குள் வர கவர்னர் அனுமதிக்க மாட்டார்" என்று நிபந்தனை அறிவிக்கப்பட்டது. அவ மதிப்புக் கலந்துள்ள இந்நிபந்தனையை நமது மௌலானு நிறைவேற்ற மறுத்ததுடன், ஜாமின்கட்டி தென் ஆப் பிரிக்கா செல்ல முடியாது என்றுங் கூறிவிட்டார். தவிர வும். இவ்விதமான வீணுன நிபந்தனை இல்லாமலே தம்மை அனுமதிக்க வேண்டும் என்றும், தம்முடைய தென் ஆப்பிரிக்கா விஜயம் ராஜீய விஷயத்திற்காக வல்லவென்றும், தம்முடைய முஸ்லிம் சகோதரர்களைக் கண்டு பேசுவதற்காகத்தான் என்றும் கூறி, பின் வரு மாறு தென் ஆப்பிரிக்கா கவர்னருக்குத் தந்தி கொடுத் திருந்தார் :—

"வீரர்கள் எந்த இடத்திலும் வீரத்தன்மையையே விரும்புவார்கள். தனக்கு மரியாதைசெய்பவர்கள் மற்றவர்களுக்கும் மரியாதை செய்வார்கள். போயர் மகா ஜனங்களின் வீரத்தன்மையை நாங்கள் பாராட்டு கிறேம். இந்த நிபந்தனைகளைப்பார்த்து எங்களுக்கு

அதிக சங்கட மேற்பட்டது. இவைகள் போயர் மகாஜனங்கள் விதித்த நிபந்தனைகள் என்று எந்த மனிதனும் ஒப்புக்கொள்ளமாட்டான். தயவுசெய்து எனது சகோதரரின் கோஷ்டியினரை அவ்விடத்திலும், என்னையும் எனது கவலையுற்ற மனைவி மக்களையும் இவ்விடத்திலும் தற்போதேற்பட்டுள்ள தகராறிலிருந்து விடுவியுங்கள். நாங்கள் கூறிய உறுதி மொழியையே ஆதாரமாகக்கொண்டு எங்களை அங்கு வருவதற்குத் தந்தி மூலம் அனுமதியளியுங்கள். இந்த வேண்டுகோள் ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதருக்கு விடுக்கப்பட்டுள்ளது.''

இத் தந்திக்கு தென் ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டின் உள்நாட்டு மந்திரி,

"தங்கள் தந்தி கிடைத்தது. நிபந்தனைகளில் எவ்வித மாறுதலும் செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன்''

என்று பதில் அளித்தார். இத்தந்தி கிடைத்தபின் பிரிட்டிஷ் கவர்ன்மென்ட் தனது குடியேற்ற நாட்டரசாங்கத்தின் போக்கைத் திருத்தவேண்டும் என்று நமது தலைவர் கருதினர். எனவே, தென் ஆப்பிரிக்கா கவர்னரின் கௌரவமற்ற இப்போக்கில் ஏதேனும் மாறுதல் செய்விக்க முயலவேண்டும் என்றும், இவ்விஷயத்தில் இயன்றவரை முயற்சி செய்யவேண்டும் என்றும் இந்திய ராஜப் பிரதிநிதிக்கும், அக்காலத்தில் இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் அங்கத்தினராக இருந்த தமது நண்பர் ஸர். பஸ்லீ ஹுஸைனுக்கும் தந்தி

கொடுத்தார். கொஞ்ச காலத்திற்குப்பின் "இந்தியா கவர்ன்மென்ட் இவ்விஷயத்தில் தலையிடுவதற்கில்லை" என்ற பதில் கிடைத்தது. ஸர். பஸ்லீ ஹுஸைனும் இது போன்ற ஒரு பதிலறிவித்தார். இறுதியாக நமது மௌலானு தமது பிரயாணத்தை ரத்துச்செய்துவிட்டார்.

காங்கிரஸ் தீர்மானம்:—1929-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் லக்ஷ்மணபுரியில் கூடிற்று. அதில் அடுத்த காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைவராக பண்டிட் ஜௌஹர் லால்நேரு தெரிந்தெடுக்கப்பட்டார். அதே கூட்டத்தில், மிஸஸ். சரோஜினி நாய்டு ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். "அலி சகோதரர்கள் தென் ஆப்பிரிக்காவில் பிரவேசிப்பதற்காக அவர்கள்மீது ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளை காங்கிரஸ் மிகவும் வெறுக்கிறது" என்பது அத்தீர்மானத்தின் கருத்து. மிஸ்டர் வல்லபாய் பட்டேலும், இதர காங்கிரஸ் வாதிகளும் இதனை ஆதரித்தனர். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அவர் தென் ஆப்பிரிக்காவுக்குச் செல்லாமல் நின்று, தன் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொண்டார். அவருக்கு எவ்விதப் பங்கமும் நேரவில்லை. ஆனல், கிலாபத் கமிட்டிக்கு அதனல் பெருத்த நஷ்டமேற்பட்டது. எவ்விதமெனில், மத்திய கிலாபத் கமிட்டியின் செல்வநிலை வரவர மோசமாகிக் கொண்டே இருந்தது. அவர் அங்கு சென்றிருப்பாராயின், மத்திய கிலாபத் கமிட்டியின் செல்வநிலையில் ஓரளவு சரிப்படக்கூடிய நிலைமைக்குப் போதிய பணம் அங்கு வசூலாகி இருக்கும்.

நாற்பத்தாறும் அத்தியாயம்

சாரதா சட்டம்

சாரதா பில்: அஜ்மீர் ஷரீபைச் சேர்ந்த மிஸ்டர் ஹரி விலாஸ் சாரதா என்பவர் இந்தியா சட்ட சபையில் பால்ய விவாகத்தைத் தடை செய்வதற்காக ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். ஹிந்து சமூகத்தில் பால்ய விவாகம் செய்யும் வழக்கம் பொதுவாக இருந்து வருவதாலும், பால்ய விவாகத்தின் பயனுல் சிறுவர் சிறுமிகளின் ஸ்தூல வலிமையும் மூளை விருத்தியும் கெட்டுப் போவதாலும், ஒரு சட்டத்தின்மூலம் இதனைத் தடுக்க வேண்டும் என்பது அவர் விருப்பம்.

பிறகு, இந்த பில் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. கடைசியாக இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பினருக்கும் பொதுவான சட்டமாக இது ஆக்கப்பட்டது. எனவே, இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் எவ்விடத்திலும் எவ்வகையிலும் பால்ய விவாகம் செய்வது சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது.

நமது தலைவர் அவர்களின் ஆக்ஷேபனை.—இந்த பில் சட்ட மாக்கப்பட வேண்டுமென்று இந்தியா சட்ட சபையில் முதல்முதலாகக் கொண்டுவரப் பட்டபோதே நமது மௌலானு இதனை ஆக்ஷேபித்தார். ஆயினும், அப்பொழுது எவருக்கும் இது செவியிற் றைக்கவில்லை. ஆனுலும், அவர் தமது "ஹம்தர்த்" பத்திரிகையில் இது சம்பந்தமாகப் பல வியாசங்களைத் தொடர்ச்சியாக எழுதி, இதனைக் கண்டித்தார். "ஹிந்துக்களுக்கு

இப்படிப்பட்ட சட்டம் தேவையாக இருந்தால், அதற்கு யாமொன்றுந் தடையாக இல்லை. ஆனால், முஸ்லிம்களுக்கு இப்படிப்பட்ட சட்டம் தேவையில்லை'' என்று வற்புறுத்தினர். முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் தூங்கிக் கொண்டிருந்தனர். எவரும் இதனை ஆக்ஷேபிக்கவில்லை. இந்த பில் செலக்ட் கமிட்டியில் ஒப்புக்கொள்ளப் பட்டு, அப்பால் இதனைப்பற்றி ஒரு விசாரணைக் கமிட்டியும் நியமிக்கப்பட்டது. அவ்விசாரணைக் கமிட்டி இந்தியாவில் பல முக்கிய இடங்களுக்குச்சென்று சாக்ஷியங்களைப் பதிவு செய்தது. அதில் முஸ்லிம்களும் சாக்ஷியங் கொடுத்தார்கள். அகில இந்திய ஜமிய்யத் உலமா சபையின் காரியதரிசி மௌலானா அஹ்மது ஸயீது சாகிபும் சாக்ஷியங் கூறினர். இந்த பில் இரு முறை வாசிக்கப்பட்ட பிறகுதான் இதனைப்பற்றிய கூச்சல் தேசத்தில் கிளம்பிற்று. அகில இந்திய ஜமிய்யத்துல் உலமா சபையும், அதன் காரியதரிசியான மௌலானா அஹ்மது ஸயீது சாகிபும்கூட இதனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர்.

இனி மூன்றுவது முறை வாசித்துச் சட்டமாக்கப்படும் கெடு நெருங்கியது. இதுசமயம் நமது தலைவர் மௌலானா மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆயினும், இது சட்டமாகி விட்டால் பிசகு நேர்ந்து விடும் என்பதற்காக, மறுபடியும் இது சம்பந்தமாக பிரசங்கமும் செய்தார். வியாசங்களெழுதிப் பிரசாரமும் செய்தார். ஆயினும், பிரயோஜனப்படவில்லை. மூன்றும் முறை இந்த பில் வாசிக்கப்பட்டு இந்தியா சட்டசபை

யில் அங்கீகாரமாயிற்று. அச் சமயம் ஆக்டிங் வைசிராயாக இருந்த லார்டு கோஷன் (சென்னை கவர்னர்) இதற்கு அங்கீகாரமும் கொடுத்தார். ஆயினும், முஸ்லிம்கள் இதைப்பற்றிப் பெருங் கிளர்ச்சி செய்தனர். என்றாலும், இதனை மாற்றுவது இனி அவ்வளவு சுலப மான காரியமல்ல.

இக்காலத்தில் நமது தலைவர் மௌலானா முஹம் மது அலி நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையில் இருந்தார். தம்முடைய தேக நிலைமையை லக்ஷி யம் செய்யாமல் இராஜப் பிரதிநிதிக்கு நீண்ட கடிதம் எழுதி, இஸ்லாமியச் சட்டத்தை விளக்கிக் கூறி, முஸ் லிம்களை இதில் சம்பந்தப்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொண்டார். ஆக்டிங் வைசிராய் நமது தலைவர் கூறிய காரணங்களைக் கவனியாமல், சட்டத்தை மாற்ற தமக்கு உரிமை இல்லையென்று கூறிவிட்டார்.

பிறகு, ரஜாவில் சென்ற இராஜப் பிரதிநிதியான லார்டு இர்வின் இங்கிலாந்திலிருந்து திரும்ப வந்தார். மௌலானாவும் கொஞ்சம் குணமடைந்திருந்தார். இராஜப் பிரதிநிதியைப் பேட்டி கண்டு, இச்சட்டத்தை முஸ்லிம் களிடமும் அமல் நடத்துவது, இஸ்லாம் மார்க்க சம்பந்த மாக முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை யைப் பறித்துக் கொள்வதாகுமென்றும், இதனை மாற்றி விடவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டார்.

இராஜப் பிரதிநிதி இதற்கு பதில் கூறுகையில் "ஒரு விஷயத்தில் மதமும், வாழ்க்கை முறையும் முரண்படுமாயின், மதத்தைக் கவனியாமல் வாழ்க்கை

முறையைக் கவனிப்பது தான் நாகரீக முன்னேற்ற மடைந்த அரசாங்கத்தின் கடமையாகும். என்னுடைய இவ்வபிப்பராயத்தை தாங்கள் இனியொரு சமயம் ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறினர். இந்த பதில் நமது தலைவருக்கு ஆத்திரத்தையுண்டாக்கி விட்டது. ஆகவே, அவர் இராஜப்பிரதிநிதியைப் பார்த்து "தாங்கள் எங்களைத் தவருன முறையில் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். தங்களது அபிப்பராயத்தை நாங்கள் ஆதரிக்கவுமில்லை. இனிமேல் ஆ த ரி க் க ப் போவதுமில்லை. தாங்கள் விசேஷ அதிகாரத்தை உப யோகித்து இச் சட்டத்தை ரத்துச் செய்யாவிடில், அல்லது குறைந்த பக்ஷம் முஸ்லிம்களை இச்சட்டத்திலிருந்து விலக்குச் செய்யாவிடில், உங்களுக்கும் நமக்கும் போராட்டம் தான். நான் இங்கிருந்து சென்றவுடன் இச்சட்டத்தை மீறுவேன். ஜனங்களையும் அவ்வாறு செய்யும்படித் தூண்டுவேன்" என்று கூறினர்.

அதற்கு, லார்டு இர்வின் நமது தலைவரை நோக்கி "தாங்கள் இச்சட்டத்தை எதிர்த்து என்ன வேண்டுமானுலும் செய்து கொள்ளலாம். ஆனல், சட்ட வரம்புக்கு உட்பட்டு, நீங்கள் கோரிய காரியம் சித்தியடைவதற்காக முயற்சி செய்வதுதான் நன்மையாயிருக்கும்" என்ருர். இதற்கு, நமது தலைவர் "மத விஷயத்தில் எந்தச் சட்டமும் எனக்குத் தடையாக நிற்க முடியாது. ஆதலால், நான் அம்மாதிரியான வாக்குறுதி எதுவும் செய்ய முடியாது" என்று கூறி விட்டு வந்தார். ஆயினும், அப்புறம் அதிக காலம் அவர் ஜீவித்திருக்க முடியவில்லை.

நாற்பத்தேழாம் அத்தியாயம்

உலமா கான்பரன்சு

நமது மௌலானா நம்மைவிட்டுப் பிரிவதற்கு ஓராண்டிற்கு முன்னர், கான்பூர் அகில இந்திய ஜமிய்யத்துல் உலமா சபை ஸ்தாபனத்தை ஏற்படுத்த நேர்ந்தது. அவர் ஏன் இவ்வாறு செய்தார்? என்பதற்குரிய காரணங்களை நீங்கள் அறிய விரும்புவீர்கள். அதன் விபரம் வருமாறு:—

நமது தலைவர் மௌலானாவின் குருவான மௌலானா அப்துல் பாரீ சாகிப் மர்ஹூம் அவர்கள் தாம் அகில இந்திய ஜமிய்யத்துல் உலமா சபையை ஆதியில் ஸ்தாபிதம் செய்தவர். இச்சபை கொஞ்சங் கொஞ்சமாக இந்தியாவில் செல்வாக்கடைந்தது. இந்திய முஸ்லிம்கள் இதற்குத் தக்க கண்ணியத்தை அளித்தனர். மார்க்கக் கல்வியைக் கற்ற உலமாக்கள் பெரும்பாலும் துறவிகளைப்போல் லௌகீக விஷயங்களில் அதிகம் ஈடுபடாமல் ஒதுங்கி இருந்தார்கள். மார்க்கக் கல்வியைப் போதிப்பதும், மதசம்பந்தமான உபதேசம் செய்வதும்தான் அவர்களது முக்கிய வேலைகளா யிருந்தன. ஆதலால், அவர்களில் பெரும்பாலர் ராஜீய விஷயம் சம்பந்தமாகவோ அல்லது தேசிய வியவகாரம் சம்பந்தமாகவோ போதியளவுக்கு ஆற்றலில்லாமலிருந்தனர். கிலாபத் பிரசினையின் காரணமாக அவர்களுக்குப் புத்துணர்ச்சி யுண்டாகி, டில்லியில் ஜமிய்யத்துல் உலமா என ஒரு சபையை ஏற்படுத்தி தேசீய ராஜீயவியவகாரங்

களி லீடுபட்டபோது, அவர்களுக்கு இவ் விஷயங்களில் வழி காட்டுவதற்கு, திறமையும், மார்க்க பக்தியுமுள்ள ஒரு முஸ்லிம் ராஜீயவாதி தேவையாக இருந்தது. ஆகவே, மௌலானா அப்துல் பாரீ மர்ஹூம் அவர்களது சிஷ்யரான நமது மௌலானுவிடம் இத் தன்மைகள் பொருந்தியிருந்தமையான், ஜமிய்யத்துல் உலமா சபை, ராஜீய தேசிய விஷயங்களில் அவரது கொள்கைகளேயும் போக்கையும் அனுசரித்து, அவரைப் பின் பற்றியே நடந்து வந்தது.

அவர் மார்க்கபக்தி நிறைந்தவராதலால் மதசம்பந்தமான விஷயங்களில் தமது குரு மௌலானு அப்துல் பாரீ சாகிப் அவர்களிடத்திலும், ஜமிய்யத்துல் உலமா சபைத்தலேவர் முப்தி முஹம்மது கிபாயத்துல்லா சாகிப், காரியதரிசி மௌலானு அஹ்மது ஸயீது சாகிப் முதலிய பிரபல மார்க்க அறிஞர்களிடத்திலும் தமது சந்தேகங்களேக் கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். ஆனுல், அவரது ராஜீய விரோதிகளிற் சிலர் ஜமிய்யத்துல் உலமாவைப்பற்றிக் கேவலமாகப் பேசவும், பிரசாரம் செய்யவும் தலேப்பட்டனர். "அந்தச் சபை முஹம்மது அலியைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறது. அவரைக் கண்டால் அச் சபையின் கண்ணியம் மிகுந்த அங்கத்தினர்கள் நடுங்குகின்றனர். அவர் கூறுவதை அச்சபை மறுப்பதே இல்லே. அவர் அச்சபையில் சர்வாதிகாரியைப்போலிருந்து அதிகாரஞ் செய்கிறுர். உலமாக்கள் களங்கமற்றவர்களாதலால், முஹம்மது அலி கூறும் சகல விஷயங்களேயும் அவர்

கூறுவது சரியா தப்பா? உசிதமா அனுசிதமா? என்றுங் கூடக் கவனியாமல் ஒப்புக் கொள்கின்றனர்" என்று பிரசாரம் புரிந்தனர். எறும்பூரக் கற்குழியும் என்றபடி இப்பிரசாரம் தொடர்ச்சியாகவும் கட்டுப்பாடாகவும் செய்யப்பட்டதால் ஜமிய்யத்துல் உலமாசபையிலுள்ள சில அங்கித்தினர்கள் இப்பிரசாரத்தினுல் நமது தலைவர் பால் கொண்டிருந்த அபிமானத்தைக் கைவிட்டனர்.

இப்படிப்பட்ட சமயத்தில் ஜமிய்யத்துல் உலமா சபையின் வருஷாந்திர மகாநாடு கூடும் கெடுவும் வந்தது. இம்மகாநாட்டிற்கு யாரைத் தலைவராகத் தெரிந்தெடுக்கலாம் என்ற பிரசினையுந் தோன்றிற்று. உலமாக்களிற் சிலர் நமது தலைவர் மௌலானுவைத் தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றனர். எதிர் கக்ஷிக்காரர்கள் அவரைத் தலைவராகத் தெரிந்தெடுப்பதை எதிர்த்து, அறபி தெரியாதவர் உலமாக்கள் சபைக்குத் தலைமை வகிக்க கூடாது; உலமாக்களைச் சேர்ந்த ஒருவர்தான் உலமாக்கள் சபைக்குத் தலைமை வகிக்க வேண்டும் என்று கட்டுப்பாடாக வாதித்தனர். இறுதியாக அஜ்மீரிலுள்ள மௌலானு முயீனுத்தீன் சாகிபைத் தலைவராகத் தெரிந்தெடுத்தனர். ஆயினும், அவர் ஜமிய்யத்துல் உலமாசபையின் இப்புதிய போக்கை வெறுத்து, அதற்குத் தலைமை வகிக்க மறுத்ததுடன் அதில் அங்கத்தினராக இருப்பதையும்கூட ராஜினாமாச்செய்துவிட்டார்.

நமது மௌலானு கொஞ்சங்கூட அறபி தெரியாதவரன்று. அவரும் ஏகதேசமாக அறபி கற்றவர்

தாம். ஆயினும், முறைப்படி ஒரு மத்ரஸாவிலிருந்து அறபிப் பாஷையையும், மார்க்கக் கல்வியையும் கற்று, ஸன்னது பெறவில்லை. இந்த ஒரு காரணத்திற்காக, தலைமைப் பதவியை அளிக்கும் விஷயத்தில் சில உலமாக்கள் நடந்துகொண்ட எதிர்ப்புமுறை அவரைப் புண்படுத்திற்று. தவிரவும், எதிர்ப்புக் கோஷ்டியிலுள்ள சில தீவரவாதிகள் அவருக்கு திரு குர்ஆன் கூட சரியாகத் தெரியாது என்றுங் கூறினர். இதனால், அவரை ஆதரிக்கும் கோஷ்டியினருக்கு தங்கள் நோக்கத்தை நிறைவேற்றும் விஷயத்தில் பிடிவாத முண்டாயிற்று. எனவே, டில்லி ஜமிய்யத்துல் உலமா சபையில் பெரும் பிளவுண்டாகிவிட்டது.

ஆகவே, நமது மௌலானாவை ஆதரிக்கும் கோஷ்டியினர் எவ்விதத்திலேனும் அவரது தலைமையின்கீழ் ஜமிய்யத்துல் உலமா கான்பரன்ஸை நடத்த வேண்டுமென்று முடிவு செய்து, கான்பூரில் உலமா கான்பரன்ஸைக் கூட்டினர். இக்கான்பரன்சு 1929-ம் வருஷம் டிசம்பர் மாதம் நடைபெற்றது. இக்கான்பரன்சுக்குப் பிரவேசக் கட்டணமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. கான்பரன்சு கூடும் தேதிகளில் காற்றும் மழையும் பலமாக இருந்தும், 5000 பேருக்கு அதிகமான பிரதிநிதிகளும் விஸிட்டர்களும் பற்பல இடங்களிலிருந்து வந்திருந்தனர்.

மௌலானா அப்துல் மாஜித் சாகிப் பதாயூனி அவர்கள் நமது மௌலானாவைத் தலைமைப் பதவிக்கு பிரேரணை செய்து, இந்தப் பதவிக்கு அவர் அருகதை

யுள்ளவர் என்பதைப்பற்றியும், அவருடைய பாத்தியதைகளைப் பற்றியும் பிரசங்கம் செய்ததுடன் இதரர்களைப் பார்க்கினும் இவருக்கு அதிக பாத்தியதை இருக்கிறது என்றும் வற்புறுத்திப் பேசினார். மௌலானா அப்துல்காபீ, அல்லாமா திக்கத்துல் இஸ்லாம் (பம்பாய்), குத்துபுத்தீன் அப்துல்வாலீ, மௌலானா இஃஜாஸ் ஹுஸைன் (லக்ஷ்மணபுரி மத்ரஸத்துல் வாயிஜீன் பிரின்ஸிபால்), மௌலானா பாகிர், முதலிய இந்தியாவின் பிரபல அறிஞர்களில் இருபதுக்கு அதிகமானவர்கள் ஆதரித்துப் பேசினார்கள். முதல்நாள் கூட்டம் தலைமைப் பதவிக்குப் பிரேரணை செய்வதிலும், ஆதரிப்பதிலுமே முடிந்தது.

பிறகு, நமது தலைவர் மௌலானா அறபி முறையில் அபா அணிந்து, தலைப்பாகை கட்டி, தலைமைப் பீடத்திலமர்ந்தார். கூட்டத்திலிருந்தவர்களனைவரும் "அல்லாஹு அக்பர்" என்ற முழக்கத்துடன் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டனர். அச் சமயம் அவர் மிகவும் பலஹீனமாக இருந்ததால், வேறொருவரின் உதவியினால் தலைமைப் பீடத்தில் அமரவேண்டியதாக இருந்தது. அவர் தமது அக்கிராசனப் பிரசங்கத்தைப் படிக்கச் சக்தியற்றிருந்ததால், அவருடைய பிரசங்கத்தை வேறொருவர் சபையில் படித்தார். பிறகு, ஜமிய்யத்துல் உலமா சபையின் கொள்கையை விசால நோக்கமுள்ளதாகச் செய்து தேசத்திலுள்ள பற்பல வகுப்பாருக்கும் பிரதி நிதித்துவம் கிடைக்கும்படிச் செய்வதற்காக ஜமிய்யத்துல் உலமா சபையின்

அமைப்புத் திட்டத்தைத் திருத்தவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இத்தீர்மானத்தின்படி மௌலானா அப்துல் மாஜித் சாகிப் பதாயூனி, மௌலானா ஷாஹ் சுலைமான் சாகிப் புல்வாரீ, மௌலானா குத்துபுத்தீன் அப்துல்வாலீ சாகிப் முதலியவர்கள் கான்பூரில் "அகில இந்திய ஜமிய்யத்துல் உலமா" சபையைப் புதிதாக ஏற்படுத்தினர். இச்சபை தற்போது முஸ்லிம் லீகை ஆதரிக்கிறது. மத சம்பந்தமான விஷயங்களில் முஸ்லிம் லீக் இச்சபையின் ஆலோசனையைக் கேட்டுக் கொள்கிறது.

நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

லாகூர் தேசீய வாரம்

கான்பூரில் நடைபெற்ற உலமாக்கள் கான்பரன்சுக்குப் பிறகு, அதே 1929 டிசம்பர்மீ இறுதியில் லாகூரில் பண்டிட் ஜௌஹர்லால் நேருவின் தலைமையின்கீழ் காங்கிரஸ் மாகாசபை கூடிற்று. கிலாபத் மகாநாடும் இதர பல மகாநாடுகளும் அங்கு நடைபெற்றன.

கல்கத்தா காங்கிரஸ் மகாநாட்டில் காங்கிரஸின் லக்ஷியம் குடியேற்ற நாட்டந்தஸ்து என்று ஏற்படுத்தப்பட்டபோது, சர்க்காருக்கு ஒரு வருஷ காலம் தவணை ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒரு வருஷத்துக்குள் குடியேற்ற நாட்டந்தஸ்துக் கிடைக்காவிடில் பூரண சுயேச்சைதான் காங்கிரஸின் லக்ஷியம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த ஒரு வருஷத் தவணைக்குள் குடியேற்ற நாட்டந்தஸ்துக் கிடைக்காததால், பூரண சுயேச்சைக் கொடியை இந்த லாகூர் மகா நாட்டில் ராவி நதிக்கரையில் உயர்த்துவதாக இருந்தது. ஆதலால், இம் மகாநாடு முக்கிய மகா நாடாக இருந்தது.

ஆகவே, காங்கிரஸ் மகா சபை தனது கொள்கையை நிர்ணயிப்பதற்கும், கிலாபத் கமிட்டி தனது நடவடிக்கையை நிஷ்கரணம் செய்வதற்கும் முன், காந்திஜீயிடத்தில் கடைசி முறையாகப் பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்று நமது தலைவர் நினைத்தார். லாகூரில் காந்திஜீயைக் கண்டு பேசி முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளை அங்கிகரிக்கும்படியும், முஸ்லிம்களின் ஒத்து

ழைப்பை ஏற்றுக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். காந்திஜீ பூரண சுயேச்சை என்று கூறிக்கொண்டு தமது போக்கிலும், வேலைத்திட்டத்திலும் எத்தகைய பந்தத்தையும் ஏற்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஆதலால், அவரது கோரிக்கையை நிராகரித்ததுடன், நிபந்தனை யில்லாமல் ஒத்துழைக்கவேண்டுமென்றும், பூரண சுயேச்சை யடைந்த பின் முஸ்லிம்களின்கோரிக்கைகளைப் பற்றி யோசிக்கப்படுமென்றுங் கூறினார்.

நிபந்தனையில்லாமல் காங்கிரஸுடன் ஒத்துழைக்க நமது மௌலானா இஷ்டப் படவில்லை. ஏனெனில், பூரண சுயேச்சை என்றும், குடியேற்ற நாட்டந்தஸ்தென்றும் பல காலமும் மாறி மாறி சர்க்காரை அரற்றுவதெல்லாம், குடியேற்ற நாட்டந்தஸ்துக் கிடைத்தால், அதனை ஒப்புக் கொள்வதற்காகத்தான் என்பதை அவர் நன்கறிந்திருந்தார். ஆதலால், அவர் காங்கிரசுடன் தமக்கிருந்த சம்பந்தத்தை முற்றிலும் அறுத்துக் கொண்டதுடன், முஸ்லிம்களுக்குள் ஒற்றுமை ஐக்கியம் ஆகியவைகளை ஏற்படுத்தி, முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்.

லாகூரில் நடைபெற்ற கிலாபத் கான்பரன்சு காங்கிரஸை விட்டு விலகிக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்ததால், காங்கிரஸில் ஒட்டிக் கொண்டிருந்த சில முஸ்லிம்களுக்கு அதிக கோபத்தை யுண்டாக்கிற்று. இதனால், அவர்கள் "நமது மௌலானா மிதவாதியாகிவிட்டார்" என்றும் கூறினர்.

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

வட்டமேஜை மகாநாடு

இந்தியா சட்டசபையில் இராஜப்பிரதிநிதி செய்த பிரசங்கத்திற்கேற்ப லண்டனில் வட்டமேஜை மகாநாடு கூட்டப்பட்டது. பற்பல சமூகத்தினரிலும், ராஜீய கக்ஷியினரிலுமிருந்து இம்மகாநாட்டுக்கு சர்க்காரால் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். காங்கிரஸ் மகா சபை இக்கான்பரன்சை பகிஷ்கரித்ததால், அச் சபைக்கு இதில் பிரதிநிதித்துவ மளிக்கவில்லை. ஆயினும், காங்கிரஸ்வாதிகளான ஹிந்துக்களும், ஹிந்து மகாசபையினரும் இக்கான்பரன்சுக்குச் செல்லச் சித்தமாக இருந்தனர். சர்வகக்ஷி கன்வென்ஷனில் நேரு ரிப்போர்ட்டை ஆதரித்த பிரபலஸ்தர்களான டாக்டர்மூஞ்சே, மிஸ்டர் ஜெயகர் முதலியவர்களெல்லாம் வட்டமேஜை மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். அக்காலத்தில் நமது தலைவர் மௌலானா கடுமையாக நோய்வாய்ப்பட்டு உயிர் பிழைப்பதுகூட சங்கடமான நிலைமையாக இருந்தது. ஆனாலும், தமது நோக்கங்களையும், கொள்கைகளையும் லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் திறமையாக எடுத்துக் கூறி, முஸ்லிம்களின் உரிமைக்குப் போராடும் ஆற்றலுள்ளவர்கள் முஸ்லிம் பிரதிநிதிகளில் இல்லை என அவர் நினைத்து, இந்தியாவினுடையவும், முஸ்லிம் சமூகத்தினுடையவும் எதிர்கால நிலைமையை நிர்ணயிக்கும் மகாநாட்டில் தம்மால் கூடுமான ஊழியத்தை

ஆற்றவேண்டும் என்ற எண்ணத்தால், வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்வதாக உறுதிகொண்டு, படுத்த படுக்கையாக இருக்கும் ஸ்திதியில் லண்டனுக்குப் புறப்பட்டார்.

பாம்பாயிலுள்ள சுயேச்சைவாதிகள் வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்லும் பிரதி நிதிகளை கருப்புக் கொடி பிடித்து வழியனுப்ப வேண்டும் என்று முடிவு செய்து, அதற்கான முன் ஏற்பாடுகளையும் தொண்டர்களையும் சேர்த்துக்கொண்டு, பிரதிநிதிகள் புறப்படும் தேதியை எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். இச் செய்தி பம்பாய் முஸ்லிம்களுக்கு எட்டிற்று. தங்களுடைய ஒப்பற்ற தலைவரைக் கருப்புக்கொடியுடன் வழி யனுப்புவதைச் சகிக்க அவர்கள் மனம் இடங் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்கள் தங்கள் தலைவர் மௌலானா அவர்களுக்கு புஷ்பங்களும், மாலைகளும் சூட்டி "அல்லாஹு அக்பர்" என்ற தக்பீர் முழக்கத்துடன் வழியனுப்பவேண்டும் என்றும், இப்படி அனுப்பும் விஷயத்தில் சுயேச்சை வாதிகளுக்கும், தங்களுக்கு மிடையில் கலகம் நேர்ந்தாலும் லக்ஷியமில்லை என்றும் முடிவு செய்து, இதற்காக விசேஷ ஏற்பாடுகளைச் செய்ததுடன் தொண்டர் படையையுந் திரட்டினர்.

இவ்விபரம் எதிர் கக்ஷியினருக்கு எட்டவே, அவர்களுக்குப் பயம் ஏற்பட்டது. கருப்புக்கொடி ஊர் வலம் வருவதையும், மௌலானா முஹம்மது அலியை கருப்புக் கொடியுடன் வழியனுப்புவதையும் கைவிட்டனர். இறுதியாக அவர் அநேக அபிமானிகளினுடைய

வும், அன்பர்களினுடையவும் இருதயங்களிலிருந்து வெளியான உண்மைப் பிரார்த்தனைகள், துஆக்கள் ஆகியவைகளுடன் லண்டன் புறப்பட்டார். அன்பர்களும் நண்பர்களும் நமது தலைவர் செல்லும் கப்பலுக்குப் பெருந்திரளாக வந்து வழியனுப்பி, தங்கள் கண்ணுக்கு மறையும் வரை கப்பலைப் பார்த்தவண்ணமே நின்று கொண்டிருந்தனர்.

அவர் கப்பலுக்கு வரும்போது அவரைச் சாய்வு நாற்காலியில்வைத்துத் தூக்கி வரவேண்டிய நிலைமையில் இருந்தார். ஆயினும், லண்டன் வந்தபின் தமது ஸ்தூல நிலைமையையும் பாராமல் மிகச் சுறுசுறுப்பாகவும், தீவரமாகவும் தமது அலுவல்களைக் கவனித்தார். மந்திரிகள், பிரதானிகள், லார்டுகள், பத்திராசிரியர்கள், ராஜீய கக்ஷி தலைவர்கள் முதலியவர்களைக் கண்டு பேசி, இந்தியாவின் நிலைமையையும், ராஜீய பிரசினையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களையும், ஹிந்து முஸ்லிம் வேற்றுமையையும், இதனுல் ராஜீய விஷயங்கள் பாதிக்கப்படுவதையும்பற்றி விபரமாகக் கூறி, அவைகளுக்குள்ள பரிகார முறைகளையும் எடுத்துரைத்தார். இவைகளைப்பற்றி அவர் தமது நண்பர் மௌலானு இர்பான் சாகிபுக்கு எழுதிய கடிதத்தில் பின் வருமாறு கூறி இருக்கிறுர்.

மௌலானு இர்பானுக்கு வந்த கடிதம்:— இக்கடிதத்தின் ஆரம்பத்தில் தமது ஸ்தூல நிலைமையையும், தாம் வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கும் விதத்தையும் பற்றிக் கூறிவிட்டு மேலும் எழுதுகையில்,

“இவ்விதமிருந்தும் யாரும் செய்யாததும், எவ

ரும் செய்ய நினைக்காததுமான வேலைகளைச் செய்து வருகிறேன். செல்வாக்குள்ளவர்களுடன் சம்பாஷணை செய்து அவர்களுக்கு விஷயத்தை விளக்கி வருகிறேன். டெலிபோன் மூலம் இரவு பகல் எல்லா நேரங்களிலும் மணிக்கணக்காகச் சம்பாஷணை நடந்து வருகிறது. "டைம்ஸ்" பத்திரிகையின் அந்நிய நாட்டு ஆசிரியர், ஜார்ஜ் பர்னுடுஷா முதலிய எல்லோருடனும் டெலி போனில் பேசி வருகிறேன்.

இந்தியா மந்திரி மிகவும் பெருந்தன்மையாக என்னை மறுபடியும் அவரிடம் வரும்படி வற்புறுத்தினர். அவருடன் ஒருமணி நேரம் சம்பாஷணை நடைபெற்றது. "தாங்கள் கூறும் விபரங்கள் அபூர்வமானவைகளாக இருக்கின்றன. புத்தியிலேயே எட்டாத அவ்வளவு சிக்கலான பிரசினைகள் இன்று மிகத் தெளிவாகி விட்டன" என்று இந்தியா மந்திரி என்னிடம் கூறினர். இதுபோல் "ஸ்பெக்டேட்டர்" பத்திரிகையின் ஆசிரியருடன் இரண்டு மணி நேரம் சம்பாஷணை நிகழ்ந்தது. "டைம்ஸ்" பத்திரிகையின் அந்நிய நாட்டு ஆசிரியருடன் இரவு 10-30 மணியிலிருந்து 12 மணி வரை டெலிபோனில் சம்பாஷணை நடந்தது. பிறகு, அவரே என்னை வந்து நேரில் பார்ப்பதாகக் கூறினர். பிறகு, நேருக்கு நேராக இந்தியாவைப்பற்றி $1\frac{1}{4}$ மணி நேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, நமது தலைவரது ஆவி இருந்தவரை கட்டிலில் படுத்தபடி டெலிபோன் மூலமாகவும், முக்கிய

மான விஷயங்களேற்பட்டபோது-மௌலானா ஷௌகத் அலி தடை செய்வதையும் பொருட்படுத்தாமல்-லார்டு சாங்கே, இந்தியா மந்திரி மிஸ்டர் பென், ஸர். அக்பர் ஹைதரீ, ஸர். அஹ்மது ஸயீது முதலியவர்களிட மெல்லாம் பேசிக் கொண்டும் விவாதித்துக் கொண்டு மிருந்தார். இறுதியாக அவருக்குப் பிறவியிலேயே தோன்றிய வியாதி தனது மன விருப்பத்தைப் பூர்த்தி செய்து, அவரை நம்மை விட்டுப் பிரித்து விட்டது. இனி நாம் அவரை இவ்வுலகில் என்றென்றைக்கும் காண முடியாதவாறு 1931ஆம் ஜனவரிமீ 4உ ஞாயற் றுக்கிழமை காலை 9-30 மணிக்கு அவர் நம்மை விட் டகன்றார். (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜி ஊன்).

அவர் வட்டமேஜை மகாநாட்டிற்குச் செல்ல முடிவுசெய்தபோது, அவருடைய காங்கிரஸ் துணைவர் கள் அவரைப் பலமாக ஆக்ஷேபித்தனர். அவரை தேசத் துரோகி என்றும், சமூகத்தைக் காட்டிக்கொடுத்தவர் என்றும் ருஜூப்படுத்தும் முயற்சியில் எள்ளத்தனையும் குறைவுசெய்யவில்லை. ஆனால், வட்டமேஜை மகாநாட் டில் அவர் செய்த கம்பீரமான பிரசங்கம் ராய்ட்டர் தந்திமூலம் பத்திரிகைகளுக்குக் கிடைத்து, பொது ஜனங்களின் பார்வைக்குவந்தபோது, எல்லா ஜனங்களும் தங்கள் விரல்களைக் கடித்துக்கொண்டு ஆச்சரியமுற் றனர். அவருடைய மிகக் கடுமையான விரோதிகளும் கூட தங்களை யறியாமல் "அவர் ஏன் இவ்வாறு பிரசங் கஞ் செய்யமாட்டார்? எப்படியிருந்தாலும் அவர்

முஹம்மது அலி அல்லவா?" என்று பாராட்டிப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அப்பிரசங்கம் அனுபந்தம் 2-ல் விபரமாக எழுதப்பட்டிருக்கிறது.

இந்தியாவினுடையவும், முஸ்லிம்களினுடையவும், ஹிந்துக்களினுடையவும், காங்கிரஸினுடையவும் லக்ஷியத்தை இதைப் பார்க்கினுந் தெளிவாக எடுத்துக் கூறி இருக்க முடியாது. 1920-ம் வருஷத்தில் நல்ல திடகாத்திரராக இருந்தபோது அவர் எவ்வளவு பேசமுடியுமோ, அவ்வளவு பேச்சையும் அவர் இப்பொழுது கூறினார். அப்பொழுது கூறி இருந்தாலும், தமது ராஜீய அபிப்பராயத்தை "மாற்றிக்கொண்ட" பின், இப்பொழுது கூறிய அளவுக்குமேல் அதிகமாக அவர் கூறி இருக்கமுடியாது. ஆகவே, அவர் வட்டமேஜை மகாநாட்டில் எவரும் சொல்லாத விஷயத்தை தைரியமாகத் துணிந்து கூறினார்.

முடிவுரை

நமது தலைவர் மௌலானா முஹம்மது அலி "ஜௌஹர்" அவர்களின் ஜீவிய சரித்திரச் சுருக்கமும், அவராற்றிய அருந்தொண்டுகளில் சிலவும் உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவருடைய அருந்தொண்டுகளைப் பற்றியும், ஜீவிய சரித்திரத்தைப் பற்றியும் இந் நூலில் விரிவாகவும், ஒன்றுந் தவறாமலும் கூறி

விட்டதாக யாம் கூறமுடியாது. இன்னும் எத்தனையோ அருங் காரியங்கள் எஞ்சி இருக்கக்கூடும். இச்சிறு நூல் அவையனைத்திற்கும் இடந் தராதாகையால், இம்மட்டுடன் முடித்துக் கொண்டனம். இனி அவருடைய ஜீவிய விருத்தாந்தத்தில் நாம் காணும் ஒரு விஷயத்தை மட்டிலும் சுருக்கமாகக் கூற விரும்புகிறோம்.

யதார்த்த வாதி வெகுஜன விரோதி என்பது பழமொழி. இப் பழமொழிக்கேற்ப நமது தலைவர் எவருடைய தயவு தாட்சண்யத்தையும் பாராமல் உண்மை விஷயங்களைக் கூறுபவராக இருந்தமையான், அவர் பொதுஜன சேவையில் ஈடுபட்ட காலம் முதல் கடைசிவரை அவரை ஒரு கக்ஷியினர் எதிர்த்துக் கொண்டும், தூற்றிக்கொண்டும் இருந்திருக்கிறார்கள் என்பதையும், அவருடைய இருதயம் களங்கமற்றதாகவும், அந்தரங்க சுத்தியாகவும் இருந்தமையான், அவர் புகழையும் இகழையும் லக்ஷியம் செய்யாமல் பகைவர்களுடனும், நண்பர்களுடனும் ஒன்றுபோல் ஒத்துழைத்து கீர்த்தி பெற்று விளங்கினார் என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம். இறைவன் இவருக்கு தனது கருணை எனும் நிழலில் இடந்தந்து, மறுமைப் பேற்றினை அளிப்பானாக. ஆமீன் வஸல்லல்லாஹு தஆலா வஸல்லம அலா கைரி/கல் கிஹி முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன்.

கராச்சி விசாரணை

மௌலானு முஹம்மது அலி அவர்கள் ஜூரர்களை நோக்கிப் பிரசங்கஞ் செய்யுமுன் நீதிபதியைப் பார்த்து "இவர்கள் இப்பக்கம் வந்து அமர்ந்தால் ஸௌகர்யமாக விருக்கும். அவர்களுடைய முகங்களை நான் இன்னம் பார்த்ததில்லை. ஸைன்யங்களின் மனதைக் கலைத்ததுபோல் அவர்களையும் நான் கலைத்துவிட எண்ணங்கொண்டுளேன்" என, நீதிபதியும் அவ்வாறே அவர்களை அமரச்செய்து, தானும் இடதுபுறம் திரும்பி, மௌலானு அவர்களை எதிர் முகமாக நோக்கி அமர்ந்துகொண்டார்.

நீதிஸ்தலம் இருந்த நிசப்தம்தான் என்ன! ஊசி விழுந் தால்கூட கேட்கும். அப்போது மௌலானு அவர்கள் எழுந்து, ஜூரர்களை நோக்கிப் பின்வருமாறு உபந்யாஸம் செய்யலானுர்:—

ஜூரர்களாய் விளங்கும் கனவான்களே, தங்கள் முகங்களைப் பார்வையிட எனக்கு அனுமதி வேணுமென்று நான் இப்போதுதான் நீதிபதியவர்களைக் கேட்டுக்கொண் டேன். ஏனெனில், உங்களில் ஒருவரது முகம் நீங்கலாக நான் இதுவரை மற்றவர் முகங்களைப் பார்க்கக்கூடுமா யில்லை. மேலும், உங்களது மனதைக் கலைத்துவிட நான் எண்ணங்கொண்டுளேன் என்றும் சொன்னேன். ஆனுலும், அந்தரங்கத்தில் இன்னமொரு எண்ணம் உண்டு. பப்ளிக் ப்ராஸிக்யூடர் சொல்வதுபோல், ஒருக்கால் அது கடைசி நோக்கமாகாது; அகஸ்மாத்தாய் ஏற்பட்டுள்ளது தான். அதாவது, இப்போது தங்களுக்குப் பின்னுல் அமர்ந்துள்ள ஸ்ரீமதிகளுக்கு முன்புறம் நீங்கள் ஒரு தடுப்பாக அமர வேணுமென்பதே. இல்லையேல், ஸ்திரீவச்யம் என்னும்

மற்றொரு குற்றத்தை பப்ளிக் ப்ராஸிக்யூடர் என்மீது சுமத்துவார். எனினும், என் வச்யயத்தனத்தின் பயனாய், இன்று நீதிபதியைக்கூட என்னை நோக்கி நான் திருப்பி அமரவைத்துவிட்டேன்.

கனவான்களே, என்னால் எவ்வளவு நேரம் பிரசங்கம் செய்ய முடியுமோ அவ்வளவு நேரமும் பிரசங்கித்தே தீர உத்தேசம்; ஆகையால், முன்னாடியாகவே நான் உங்களுக்குச் சொல்லிவிடவேண்டிய விஷயம் யாதெனில், என்பொருட்டாவது அல்லது என் சிநேகிதர்கள் பொருட்டாவது எதிர்வாதாடி, ஆயுள்பரியந்தம் தீவாந்தரசிக்ஷை, அல்லது தூக்குத் தண்டனை, அல்லது சிறைவாஸம்—எனக்கு எந்த தண்டனை நீதிபதி விதிக்கிறாரோ யான் அறியேன்—இவைகளிலிருந்து தப்புவதற்கு நான் எண்ணியிருந்தால், அது சுத்தமாய் மன்னிக்கத் தகாததாகவே இருந்திருக்கும் என்பதே. நான் அவ்வாறானவன் அல்ல, கனவான்களே; அந் நோக்கங்கொண்டு என்னுடைய அல்லது உங்களது காலத்தின் ஒரு க்ஷணங்கூட நான் வீணாக்கி இரேன்.

முடிவுகட்டவேணடிய விஷயம் தெளிவுவாய்ந்தது, மனதிற் பதியக்கூடியது.

என் கட்சியை எவரும் எடுத்துப் பேசவேண்டுவதில்லை. அவ்வாறு பேசுவதற்கும் ஒரு விஷயமுமில்லை, அவசியமுமில்லை. ஏனென்றாலோ, விசாரணையிலிருக்கிறது நாங்களாகவிருந்தால் தானே. ஸர்க்காரேதான் விசாரணையிலிருக்கின்றனர்; நீதிபதியவர்களே விசாரிப்பிலிருக்கின்றனர்; ராஜாங்கவழக்குகள் தொடக்கும் முறைபூராவுமே விசாரிப்பிலிருந்துவருகிறது; இச்சட்டத்தின் ஷரத்துக்கள் அத்தனையுமே விசாரிப்புத் தோரணையிலிருந்துவரு

கின்றன. என் கட்சியை எடுத்துப் பேசவேணும் என்ப தற்கே இடமில்லை. முடிவுக்கு வரவேண்டிய விஷயமோ மிகத் தெளிவானது. பகிரங்கமாய் முதன்முதல் இது வெளிவந்து, மிக ஸ்பஷ்டமானதும், யாவர் மனதிலும் பதியக்கூடியதுமான இவ்விஷயம் முடிவுபெறச் சந்தர்ப்பம் ஏற்படுத்தியதற்கு கீழ்க்கோர்ட்டில் நான் ஸர்க்காருக்கு வந்தனம் அளித்துளேன். அத்துணை ஸ்பஷ்டமும், தீக்ஷண மும் வாய்ந்த விஷயந்தான் என்னவோவெனில், ஆண்ட வன் சட்டத்திற்கும், அரசன் சட்டத்திற்கும்—அதாவது ஒரு மனிதன் சட்டத்திற்கும்—முரண்பாடு ஏற்படுகையில், பிரிட்டிஷ்குடிகள் எச்சட்டத்திற்குப் பிரதான்யம் கொடுக்க வேண்டியது; எதை நிராகரித்து, எதைச் சிறப்பிக்கவேண் டியது என்பதே.

நீங்கள் அவ்வரசரை, மாட்சிமைவாய்ந்தவர் என்றாலும் சரி, மகிமைபொருந்திய சக்கரவர்த்தி என்றழைத்தாலும் சரி, உங்கள்மனம்போல் அன்னாரை எத்துணை உயர்த்திவை த்தாலும் சரி, எல்லாப் பணிவுபசாரங்களையும் அவருக்குக் காட்டினாலும் சரி, அவர்மீது எவ்வளவு விசுவாசமாகவிருந் தாலும்சரி, சகல மரியாதைகளையும் அவருக்குக்கொடுங்கள். அவரைக்குறித்து மூட நம்பிக்கைகளுங்கூட உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால்மட்டும், இம்மரியாதைகளும், குருட்டு நம்பிக்கைகளும் ஆண்டவனி டம் ஒவ்வொரு மனிதனும் செலுத்தக் கடமைப்பட்டுள்ள விசுவாசத்திற்குத் தடையாய் ஒரு சிறு கணமேனும் நிற்கலா குமா என்பதுதான் கேள்வி. கனவான்களே, என் நிமித் தம் எனக்கு ஒரு யோசனையுமில்லை; என் சகாக்கள் கார ணமாகவும் நான் ஆலோசிக்கவில்லை. உங்கள்பொருட்டுத் தான் எனக்கு யோசனையாயிருக்கிறது. அதாவது, தங்கள்

மத்தியில் ஒரு தனி முஸ்லிம் இல்லாதது துர்பாக்யமே. உங்களில் மூவர் கிறிஸ்தவர், இருவர் ஹிந்து; ஆனாலும் சற்றும் பரவாயில்லை. நீங்கள் யாவரும் மானுடர்களன்றோ? அதிலும், அநேகமாய் இந்தியர்கள்—ஒருக்கால், உங்களில் ஒருவர் அப்படிக்கில்லை போலும்; அவர் ஆங்கிலராயிருப்பினும் இந்தியாவில் ஸ்திரவாஸியாக இருந்துவருகிறதால், இந்நாட்டைத் தனது ஜனன பூமியாகக் கருதலாகும், ஆதலால், அவரையும் இந்தியராகப் பாவிக்கலாம். உங்களின் பெரும்பான்மையினரது இத்தேசம், மதாபிமானம் ஊறியது, தொன்றுதொட்டு தெய்வீகம் வாய்ந்தது, சரீரத்தைச் சற்றும் பொருட்படுத்தாது, ஆத்மாவையே பிரதானமாக விளங்கச்செய்வதில் யுகக் கணக்காய்ப் பாடுபட்டுள்ளது. இப்பேர்ப்பட்ட நாட்டிலுதித்த உங்களிடந்தான் நான் இப் பிரசங்கம் நிகழ்த்துகிறேன்.

அபிப்பிராயபேதங்களுக்கு இடங்கொடுத்தல் என்பது என்ன?

கனவான்களே, விவேகம் நிரம்பிய இக்காலத்தில் இவ் வார்த்தை நம் செவிகளில் அதிகமாய் விழுகிறது. நாம் எல்லோருமே இக்குணத்தைக் கையாளவேணுமென்று நான் சொன்னால், பப்ளிக் ப்ராஸிக்யூடர்கூட அதற்குத் தலையசைப்பாரென்றே நினைக்கிறேன். பிரிட்டிஷ் ராஜாங்கம் அபிப்ராய பேதங்களுக்கு இடங்கொடுக்கும் ராஜாங்கம் என்றும், பிரிட்டிஷ் ஆட்சிக்கு இக்குணமே பலத்த அடிப்படை என்றும், பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் ஒருபோதும் சளைக்காமலே சொல்லிவருகின்றனர். இந்த இருபதாவது நூற்றாண்டில் எந்த நாகரீக தேச ராஜாங்கமும் இக்குணத்திற்குத் தாங்கள் விரோதமாயிருப்பதாக எப்போதும்

சொல்லார்கள். ஆனாலும், கடைசியாக, 'அபிப்பராயபேதங் களுக்கு இடங்கொடுத்தல்' என்கிற இக்குணம்தான் என்ன? பிரஸித்திவாய்ந்த ஒருவர் கூறுகிறார்:—"ஐயா, நீங்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு முற்றிலும் மனப் பூர்வமாய் அஸம்மதமே; ஆனாலும், அதை ஒருபுறம் தள் ளுங்கள். உங்களுக்கு அவ்வாறு பேச உரிமையுண்டென் பதை நிலைநாட்ட என் சரீரத்தில் கடைசியாக ஒரு சொட்டு ரத்தம் உள்ளளவும் சண்டையிடுவேன்." 'அபிப்பராய பேதங்களுக்கு இடங்கொடுத்தல்' என்பது இதுதான். ஒற் றுமையின்மை ஏற்படும்போது இக்குணம் விளங்கவேண்டும்; எங்கே ஜனங்கள் ஒரே அபிப்பராயம் கொள்ளவில்லையோ, எங்கே அவர்கள் மிகவும் வெவ்வேறான கொள்கைகளை அனுஷ்டிக்கிறார்களோ, எங்கே மக்கள் நேர் விபரீதங்களைக் கையாள்கிறார்களோ, அங்கே இக்குணம் விளங்கத் தேவை; இல்லையேல், இக்குணத்திற்கு அவசியமே கிடையாது. ஆனால், இக்குணம் வாய்ந்தவன் இவையெல்லாம் பொறுத் துக்கொண்டு, இக்குணத்தை நிலைநாட்ட எதையும் தொலைத்து விடுகிறான். இப்போது நீங்கள் சொல்லலாம்— ஒருவன் மிகவும் மூடத்தனமான அபிப்பராயங்கள் கொண் டிருக்கலாம் என்று—அநேகர் அவ்வாறு இருக்கிறார்களென எனக்கு வருத்தமாயிருக்கிறது—பப்ளிக் ப்ராஸிக்யூடர் மிக வும் முட்டாள்தனமான சில அபிப்பராயங்கள் கொண்டுளார் போலும்—நீதிபதியவர்களின் அபிப்பராயம் எவ்வாறோ என்பது இனி நமக்கு விளங்கும்—எனக்கு வாய்ப்பூட்டு போட்ட பின்னரே தான் அது தெரியலாகும். ஆனால், ஒருவருடைய தீர்மானம், சரி தப்பு என்கிற கேள்வியே இல்லை. மனிதர்களுடைய தீர்மானங்கள் முட்டாள்தன மாயிருக்கலாம். ஏதோ ஒரு மனிதன் அல்லது ஒரு கூட்

டத்தார் உங்களுடைய சொந்த அபிப்பிராயங்களுக்கு இடங் கொடுப்பதாய் உங்களுக்குச் சுதந்தரமோ, வாக்கோ கொடுத்து, அதையும் காப்பாற்றி வந்தால், அவ்வாறே அவர்கள் நடந்துவரவேண்டுவதுதான் அன்னாரது கடமை யாகும் என்பது என் அபிப்பிராயம்.

இவ்வழக்கில் வாதி பிரதிவாதிகள் ஆண்டவனும் மனிதனும்

கனவான்களே, இப்போது எங்கள்மீது தொடரப்பட் டிருக்கும் வழக்குத்தான் என்ன? உலகத்தினர் யாவரும் இதை அறிந்துகொள்ளவேணுமாய்க் கேட்டுக்கொள்ளு கிறோம். இந்தத் தீர்ப்பின் முடிவு இச்சபையோர்களோ டாவது, கராச்சியிலுள்ள பல்லாயிரவர்மட்டோடாவது நின்றுவிடாது. இவ்விடத்தில் நடந்தேறிய தீர்மானம் சில உலமாக்களும், சில ஆயிர ஜனங்களும் கூடிய கூட்டத்திற்கு மாத்திரம் சம்பந்தப்பட்டதன்று, இக் கூட்டத்தைவிட பெருத்ததொரு கூட்டத்திற்கும் சம் பந்தித்ததாகு மென்கின்றனர். அவ்வாறே, இவ்விசா ரணையும் இம் மண்டபத்துள்ளமைந்த சபையோர்கள் மட்டில் சம்பந்தித்தது அன்று. உங்கள் ஐவரைவிட அதிகப்பட்ட பேருக்குச் சம்பந்தமுள்ளதென்பது நிச்சயம். உலகம் பூராவுக்குமே இது சம்பந்தப்பட்டதென்பது உண்மை. எங்களது மத நம்பிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் சட்டத்தின் ஆதரவு உண்டென்று ஒப் புக்கொள்ளவேண்டுமென்பதுதான் எங்கள் கட்சி. (மிஸ்டர் ராஸ் அல்ஸ்டன் பக்கம் திரும்பிக்கொண்டு) "நாங்கள் வழி பிசகி நடந்துவிட்டோம்" என்று சர்க்கார் அனுதாபப்பட் டுச் சொல்லிவிட்டுமே. இவ்வார்த்தைகளைத்தான் கடைசி வார்த்தைகளாக என் நண்பர் மிஸ்டர் ராஸ் அல்ஸ்டன்

என்னைக் கூறவேண்டுகிறார். அவைகள் என் அந்தியகால வார்த்தைகளாகத்தானிருக்கும். ஆனால், சர்க்காருக்குப் பொருத்தமான நடத்தையைப்பற்றிலோ, சர்க்கார் அப்படிச் சொல்லப் போகிறார்களா? மத விஷயங்களில் தலையிடுகிற தில்லை என்னும் உறுதிமொழிப்படி அவர்கள் நடந்து கொள்ளப் போகிறார்களா? அல்லது, எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது, பலம் இருக்கிறது, யுத்தக்கப்பல்கள் இருக்கின்றன, ஆகாய விமானங்கள் இருக்கின்றன, இந்த யுத்தவீரர்கள் இருக்கின்றனர், யந்திரத்தால் இயங்கும் பீரங்கிகள் இருக்கின்றன, நிர்மூலம் விளைவிக்கும் இந்த உபகரணங்கள் எல்லாம் எங்களிடம் இருக்கின்றன, ஐரோப்பாவிலுள்ள நாடுகள் யாவற்றிலும் பலம் வாய்ந்த நாட்டை நாங்கள் அடித்து உதைத்துவிட்டோம்—இதற்கு 26 லக்ஷங்கள் வேண்டியிருந்தது, இந்தியாவின் ஜனங்கள், பணம், இன்னம் மற்ற சாதனங்கள்தான் என்ன—அது வேறு கதை—உங்களது மதசம்பந்தமான அபிப்பராயங்களுக்கும், கிரியைகளுக்கும் நாங்கள் இடங்கொடோம்" என்று சொல்லப் போகிறார்களா? அவர்கள் அப்படிச் சொன்னால், எங்களுக்கும் விளங்கும். ஆகையால், எங்கள் பொருட்டன்று எதிர்வாதம். விவாதாம்சத்தைத் தெளிவுறச் செய்வதற்கே பிரதிவாதம் செய்வது. இவ்விவாதாம்சமோ நாட்டை ஒட்டியதாகும். நாட்டையும்விட பெரியதும் ஆகும். உலக சரித்திரத்திற்கே பெரிதும் சம்பந்தப்பட்ட விவாதாம்சம் எனலாம். நாகரீகம் வாய்ந்த இந்த நூற்றாண்டில், ஆண்டவன் வாக்கு மனிதன் வாக்கு, ஆகிய இரண்டனுள் எதற்கு மதிப்பு அதிகம் கொடுப்பது என்பதுதான் கேள்வி. இந்த விசாரணையில், முஹம்மது அலியும் மற்ற அறுவரும், வாதிகளாகவும், அரசன் பிரதிவாதியாகவும்

விளங்கவில்லை; ஆண்டவனும் மனிதனுமே வாதிபிரதி வாதிகளாய் திகழ்கின்றனர். ஆண்டவனுக்கும் மனிதனுக்கும் தான் இவ்வழக்காகும். இதுதான் விசாரணை. ஆண்டவனுக்கு மனிதன் அடக்கமா? மனிதனுக்கு ஆண்டவன் அடக்கமா? என்பதுதான் கேள்வியெல்லாம்.

ஆபத்தான ஓர் சமயம்

கனவான்களே, நீதிபதி எங்களை எழுந்து நிற்கவேணுமென்று கேட்டுக்கொண்ட சமயம் நாங்கள் மறுக்கையில், நீங்கள் இங்கிருக்க நேர்ந்தது. அவர்களுடன் நாங்கள் எப்போதும் கலந்துகொள்ளாமலே இருந்துவருகிறோம்; அவருக்கு எவ்வித அவமரியாதையும் காட்டவேணுமென்கிற எண்ணமே எங்களுக்குக் கிடையாது. அனுவசியமான எவ்வித அப்பிரீதியையாவது, தொந்தரவு, கோபம் முதலியவற்றையாவது அவருக்கு விளைவிக்க நாங்கள் அவ்வளவு மூடர்களல்ல. எங்களுக்கும் அவருக்கும் யாதொரு விரோதமும் கிடையாது. ஆனாலும், மரியாதை அளிக்கிற விஷயத்தில், ஆண்டவன் முதன்மையா மனிதன் முதன்மையா, என்பதுதான் கேள்வி எல்லாம். கீழ்க்கோர்ட்டில் என் சகோதரர் கூறியவாறே, நானும் உங்கள் முன்னர் கூறுகிறேன்--அதாவது, அரசனை இனி எங்கள் அரசனாக நாங்கள் ஒத்துக்கொள்ளோம்—ஆண்டவனிடத்து விசுவாசங் காட்டுவதான எங்களது உரிமையை மறுக்கும் எம் மனிதனிடத்தும் நாங்கள் விசுவாசம் காட்டக் கடமைப்பட்டில்லோம். அரசனுக்கு விரோதமாய் நான் ஒரு வார்த்தையும் கூறவில்லை—அரச குடும்பத்தினருக்கு விரோதமாகவும் கூற ஒரு வார்த்தையேனும் எனக்குக் கிடையாது. ஆனாலும்; ராஜாங்கம், ஆண்டவன் என்கிற கேள்வி எழும்

போது, அவ்வரசாங்கம் "முதன்மரியாதை ஆண்டவனுக்கும் அவனுடைய சட்டங்களுக்குமன்று, தங்களுக்குத்தான்" என்று என்னிடம் கேட்டால், அவ்வரசாங்கத்தினருக்கு நான் எவ்வித மரியாதையும் காட்டமுடியாது. ஆகையினாலேதான் நான் கூறியுள்ளபடி விவகாரமெல்லாம் உண்மையில், ஆண்டவன், மனிதன் ஆகிய இவர்கள் இருவரைப்பற்றியேதான். பப்ளிக் ப்ராஸிக்யூடர் அவரது கட்சியை மிகச் சாமர்த்தியமாகக் கூறிவிட்டார். எங்களது மத நம்பிக்கையும், ஆண்டவனது கட்டளைகளையும்பற்றிப் பேசவரும்போது, அவர் அதை எவ்வளவு சீக்கிரத்தில் முடிவித்துவிடலாமோ அவ்வளவு சீக்கிரத்தில் கூறிவிட ஆவல்கொண்டது ஆபத்தானதோர் சமயமாகும். அதையெல்லாம் அவர் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டார். இப்போது அவருக்கு நான் அறைகூவுவதாவது:—இவ்விஷயத்தில் ஒரு தீர்மானம் கூற, நீதிபதிக்குச் சாமர்த்தியம் உண்டானால் கூறுமாறு வேண்டுகிறேன். ஜூரிகளாய் விளங்கும் கனவான்களே! நீங்கள் வியவகரிக்கவேண்டுவது நடந்தேறிவிட்ட சங்கதிகளைப்பற்றியே அல்ல. நீதிபதியவர்கள் யாவற்றையும் தொகுத்து, சட்டத்தை விவரித்துப் பேசுகையில்—நீங்கள் ஜூரர்களாய் விளங்கும் இவ்வழக்கில், உங்களது அபிப்பராயம் எங்களுக்கு விரோதமாய் முடிந்தால், நீங்கள் மதிப்பாளர்களாய் (அஸெஸர்களாய்) மட்டும், வழக்குகளில் மதிப்பாளர்களாய் நீங்கள் உங்களது அபிப்பராயத்தைக் கொடுத்த பின்னர், சட்டப்படிக்கும், நடந்தேறிய சங்கதிகள் பிரகாரமும், நீதிபதி தனது தோரணையில் தீர்மானம் செய்யும் உரிமையைச் செலுத்தி எங்களைத் தண்டித்தால்—எங்களது மதக் கடமைகளை அசட்டை செய்து எங்களைத் தண்டித்தால்—அப்போது நாங்கள் நடந்து

கொள்ளும் வழி தெளிவுற விளங்கும். எங்களுக்கு எத்தண்டனை கிடைத்தாலும், பீனல்கோடின் எந்த ஸெக்ஷன் படி கிடைத்தாலும் பரவாயில்லை. பீனல் கோடில்தான் ஸெக்ஷன்களுக்கு குறைவில்லையே—120 B, 131, 109, 505, 117 முதலியன உள்ளன. இந்த ஸெக்ஷன்களைப் பற்றியும், என்மீது சுமத்தியிருக்கும் குற்றங்களைப்பற்றியும் எனக்கு ஒன்றும் புரியவே இல்லை. எல்லாமாகச் சேர்ந்து எனக்கு எத்தனை வருஷம் கிடைக்குமென கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு இந்த ஆயுள் ஒன்று தான் உண்டு. என்மீது சுமந்துள்ள குற்றங்கள்படி எனக்குத் தண்டனை கிடைத்தால், அத்தனை வருஷங்களுக்கும் இந்த ஆயுள் போதுமா என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனாலும், அது சற்றேனும் பரவாயில்லை.

ஆண்டவனும் மனிதனும்

நான் செய்துள்ளதைச் செய்யும் எவனையும் இந்தியாவிலுள்ள நியாயஸ்தலங்கள் ஆதரிக்காவிடினும், அதே தான் அவனது மார்க்கச் சட்டமென்றும், ஆண்டவன் அவனிடம் அதையேதான் பலவந்தமாய் வேண்டுகிறான் என்றும் ஒப்புக்கொள்ளுகின்றன. இவ்வரசாங்கத்தின்பொருட்டாக இந்த நீதிஸ்தலமிருந்து இந்த ஒரு தீர்மானத்தை நான் பெறவேண்டுகிறேன். விஷயம் பூராவும் இவ்வளவு தான். வீட்டுக் கூரை மீதிருந்து ஆண்டவன் கூக்குரலிடவில்லை; சாசுவதமான உன்னத—அவனது ஸிம்மாஸனமிருந்தே—அவன் கூறுகிறதுதான் யாதெனில், "ஒரு துளி ரத்தம் கொண்டு யான் படைத்தவனுகும் மனிதன் என்பான். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் எந்த அதிகாரமும், பெருமையும் நானே அளித்ததாகும்; உங்கட்குண்டா

யுள்ள எப்பொருளும், எவ்வித யோக்கியதையும் நானே உங்கள் பொருட்டு ஏற்படுத்தியதுமாகும், உங்களுக்கும் கொடுத்ததுமாகும்—உங்களது தொண்டு எனக்கே உரித்தாதும், என் படைப்பிலடங்கிய எந்தப் பிராணிக்கும் அன்று''—என ஓலமிடுகிருன். அரசனிடம் எனக்கு எவ்வளவு மரியாதை இருந்திடினும், ஆண்டவனுக்கும் அவனது கட்டளைகளுக்கும் நான் வணங்கலாகாதென அவ்வரசன் கூறினுல், நான் அவ்வரசனுக்கு வணங்காமலுமிருக்கலாகும்.

மகாராணியவர்களின் பிரகடனை—மதாபிமானங்களுக்கு ரட்சிப்பு

சில வகுப்பினர்களது நம்பிக்கைகளைப் பற்றி நீதிபதி ஏதோ குறிப்பிட்டிருந்தார். ஹிந்துக்களின் ஒரு பிரிவினர் நரபலி வேண்டுமென்கிருர்கள் என வைத்துக்கொள்வோம் என்று அவர் கூறினுர். இந்தியாவிலுள்ள எம்மதத்திலும் நரபலி விதித்துள்ளதாக எனக்குத் தெரியாது. எங்கள் வழக்கில் ஸம்பந்தப்பட்டிருக்கிறது ஒரு தனி மனிதனது நம்பிக்கையல்ல. எங்களுக்குள்ளேயே வெவ்வேருன பிரிவினைகள் உண்டென்றும், இவைகளில் யாவர் சரி, யாவர் தப்பு என்று எங்களுக்குள்ளேயே நாங்கள் சண்டையிட்டதாகவும், பப்ளிக் ப்ராஸிக்யூடர் ஏற்கனவே சொல்லியிருக்கிருர். நல்லது, எந்த வகுப்பினர் கூறுவது சரி என்பது பற்றி விவகாரம் அன்று. எந்த மதம் பிசகு என்பது நமக்குத் தெரியுமா? எங்களது நம்பிக்கைமட்டும் இதில் வியவகரிக்கப்பட வேண்டுவதல்ல. ஒவ்வொரு முஸ்லிமது நம்பிக்கைதான் இவ்வியவகாரத்துக்கு வந்திருக்கும் விஷயமாகும். குறிப்பிட்ட ஒரு பிரிவினரது நம்பிக்கையைப்பற்றி இவ்வியவகாரம் இருந்தாலுங்கூட—

மண்ணும், விண்ணும், கிரகங்களும், சந்திரலோகத்தில் வாழும் ஜனங்களும், செவ்வாயிலுள்ளோரும் சாட்சியாக— இந்திய மக்கள் முப்பத்து முக்கோடியில் ஒவ்வொருவரும் இது ஒன்றுதான் சரியானதும், உண்மையானதுமான மதம் என்று ஒப்புக்கொள்ளவேணும், பிறகுதான் மகாராணியின் 1858-ம் ஆண்டு பிரகடனை ரட்சிப்பு அளிக்கிறது என்கிறீர்களா? அவ்வாறான ஸர்வ ஜன ஸம்மதம் பெற்ற மதத்திற்கு ரட்சிப்பே வேண்டியிருந்திருக்காது. பீனல் கோடு தான் என்னத்திற்கு? நான் வேண்டுகிற ரட்சிப்புக்காகத்தான்—நான் தங்களுடைய மதாபிமானங்களைப் புண்படுத்தக் கூடாதென்பதற்காகவே. இன்று "ந்யூ டைம்ஸ்" பத்திரிகையில் கல்கத்தாவில் சிலர்மீது—கிலாபத் கட்சியினர்மீது—வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது கண்டிருக்கிறது. காரணம், ஒரு போலீஸ்காரனை ஸர்க்கார் வேலையிலிருந்து விலகுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டதில் அவனது மதாபிமானத்திற்குப் பங்கம் வந்துவிட்டதாம். இவர்கள் தண்டனை அடைவார்கள் என்பதில் எனக்குச் சற்றும் சந்தேகமில்லை. ஆனாலும், கவனியுங்கள், ஒரு போலீஸ்காரனது மத அபிமானத்தைக் காப்பதற்குக்கூட சட்டத்தில் ஆதாரமுண்டு. மற்றொரு விஷயம் எடுத்துக் கொள்வோம்: ஒரு சிறு கல்லைச் சிலர் பூஜிக்கின்றனர். மனப்பூர்வமாகவே பூஜனை செய்கிறார்கள். நான் என் தொழுகைகளை நடத்துவதில் எவ்வளவு தீவிரமாய் இருக்கிறேனோ அத்துணை தீவிரமாயுமெனலாம். அதைவிட இன்னும் அதிக பக்தியாயுக்கூட இருக்கலாம். உங்களுக்கு அவ்வாறான ஆராதனை பிடிக்கவில்லை; மனமாறச் சம்மதியில்லை; அச்சிலையை எடுத்துவிடலாமென்கிறீர்கள். ஆனால், உங்களால் அது முடிவுபெறுங் காரியமா? முடியவே முடியாது.

சிலையை வணங்குகிறவர்களுக்குச் சட்டத்தில் ஆதரவுண்டு. எப்படியென்ருலோ, அம்மதம் நல்லது என்பதன் பொருட்டன்று. அவர்களின் மதாபிமானம்தான் காரணம். நன் மத ரட்சிப்பு அன்று, மதாபிமான ரட்சிப்பே எங்களது நோக்கமாகுமென சட்டத்தை உண்டாக்கினவர்கள் கூறுகிருர்கள். ரட்சிப்பு வேண்டுவது பகிர்முகமான மதமன்று. மனிதனின் அந்தர்முகமாய் விளங்கும் மதாபிமானமேயாகும். மெக்காலே பிரபுவும், இதரர்களும், ரட்சிக்க நோக்கம் கொண்டது இதுதான்—ஒரு சகோதரனது மதாபிமானங்கள்—அவை எத்துணை மௌட்டியமாயிருந்தாலும், குருட்டு நம்பிக்கை வாய்ந்துள்ளதாயிருந்தாலும், தவருயிருந்தாலும் சரிதான். இவற்றையேதான் நீங்களும் மரியாதையாய்க் காப்பாற்றவேண்டுவது; சட்டத்தில் இதற்கு இடமிருக்கிறது. ஆனுலும், மகாராணியின் பிரகடனையும், அரசனின் பிரகடனைகளும்தான் எனக்கு ஆதாரம். ஆனதுபற்றி, இப்பிரகடனைகளுக்கு நீதிஸ்தலத்தில் மதிப்புண்டா, இல்லையா, என்பதைத் தான் நீதிபதி பகிரங்கமாய்க் கூறவேண்டியிருக்கிறது. அரசனது சட்டத்தின் ஆதரவை எங்களுக்கு அளிக்கவேணுமென்று நீதிபதிக்கு நினைவு மூட்டுவதற்காகவே ஏழாம் எட்வர்ட் அரசனின் படம் அதோ வைத்திருக்கிறது. அவ்வரசனிடமிருந்தே நீங்கள் சட்டத்தை ஏற்கவேண்டும்; என்னிடமாயினும், பப்ளிக் ப்ராஸிக்யூடரிடமாயினும் நீதிபதியவர்கள் ஏற்கலாகாது. அவ்வாறு ஏற்ருல், தங்களது நிலைமைக்குத்தான் ஆபத்து—உண்மையிலேயே கஷ்டம்தான்.

ஆனல், இவ்வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறது எந்த ஒரு தனி மனிதனது அபிப்பிராயமல்ல. முஸ்லிம்களின் ஒரு சிறு தொகையினரின் அபிப்பிராயமுமல்ல; இவர்

களுடைய மதாபிமானங்களைக்கூட நீங்கள் ஊறுசெய்ய முடியாது. இங்கு ஒருபிரிவினரைப்பற்றியே விவகாரமில்லை, ஒரு மதத்தைக்குறித்தே தான் விவகாரம். முஸ்லிம் எனச் சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவனும் இந்த குர்ஆன் வேதபுத்தகத்திற்கு வெளியே போகமுடியாது. ஆங்கிலத்தில் இந்த மொழிபெயர்ப்பைப் பாருங்கள். இவ் வேதபுத்தகம் கூறியதுகூறல் நிரம்பியுள்ளது. எல்லாம் சேர்ந்து அது சுமார் ஐந்நூறு பக்கங்கள் தான் உள்ளது. எங்களது மதச் சட்டங்களுக்கு முக்கிய மூலம் இந்நூல் தான். எந்த தப்பெண்ணமும் இருக்கலாகாதென்பதன் பொருட்டே, நான் இதை விவரித்துக்கூற நோக்கங்கொண்டுளேன். எனது மதம் எங்கே காணலாகும் என்பது உங்களுக்குத் தெரியவேண்டுவது முறையாகும். எந்தத் தனி மனிதனது நம்பிக்கைள் மூலம் நான் என் மதத்தைக் கிரகிக்கவில்லை. என்னுடைய மதமெல்லாம் முதன்மையாக இச் சிறு நூலில் அடங்கியிருக்கிறது; பிறகு எங்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களது ஹதீதுகள். ஆனால், இந்த ஆதியான மூலமாய் விளங்கும் குர்ஆனைப் பற்றியோ, ஒரு தனி அசையைக் குறித்துங்கூட முரண்படுகிற ஒரு தனித்த முஸ்லிம்களின் பிரிவே கிடையாது. ஆதலால், எங்களது நம்பிக்கையாய் விளங்குகிற மதத்திற்கு இது ஒரு கனத்த அஸ்திவாரப் பாறை என்பது உங்களுக்குத் தெரியவரலாம்; இதைப்பற்றி அபிப்பராய பேதமே கிடையாது. நபி நாயகம் (ஸல்) அவர்கள் சம்பந்தமான ஹதீதுகளிலோ, அவர்கள் இம்மாதிரி சொன்னார்கள் என அவர்களது தோழர்களில் ஒருவர் சொன்னாலுங்கூட, அவரது தோழர்களிடமிருந்து பாரம்பர்யமாய் கிடைத்த அந்த ஹதீதும் இப்புத்தகத்துள்ள எதற்கும் மாறாகவும்

விரோதமாகவும் இருந்தால், எந்த முஸ்லிமும் அந்த ஹதீதை ஒவ்வான். நபிநாயகம் (ஸல்) அவர்களின்மீது ஆரோபணமாகும் எதுவும் குர்ஆனுக்கு விரோதமாயிருப்பின் நாங்கள் நம்போம். ஆனால், அது குர்ஆனுக்கு வியாக்யானமாகவாவது, அனுபந்தமாகவாவது விளங்கினல், நாங்கள் அதை ஒப்புக்கொள்ளலாம். அருவருப்பான ஒப்புமைகள் எதையும் நான் செய்ய எண்ணங்கொள்ளவில்லை. ஆனால், நான் எதை எடுத்துக்காட்டவேண்டுகிறேன் என்றால், கிறிஸ்துவ வேதங்களின் நான்கு சுவிசேஷங்களின் உண்மைகளை நாம் பரீட்சிக்கவேண்டிவரின்—இங்கு நீதிபதி குறுக்கிட்டார்.

நீதிபதி:—இம்மாதிரி நீங்கள் நெடுகப் பேசிக்கொண்டே போவதற்கு நான் இடங்கொடுக்கமுடியாது. உங்களது பிரசங்கத்திற்கும் வழக்குக்கும் சற்றேனும் சம்பந்தமேயில்லை. உங்களுடைய கட்சியை எடுத்துப்பேசுகிறீர்களா, இல்லையா? நீங்கள் சொல்லிக்கொள்ளவேண்டுகிற விஷயந்தானென்ன ?

மௌ. மு. அலி:—என் விஷயம் என்னவென்றால்:—நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஹதீதுகள்கூட அதிசுலபமாகவே உண்மையென ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; ஆனாலும் அவைகளின் சாட்சியமும் குர்ஆனது கட்டளைக்கு மீறமாட்டாது; இஸ்லாத்தின் எல்லாப் பிரிவினருக்கும் குர்ஆன் பொதுவானது. அப்படியிருக்க, எங்களுக்குள் பிரிவினைகள் இருக்கின்றனவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. நல்லது, பிரிவினைகளின் பேதங்களுக்கு இடமாகும் எதையும் என் வழக்குக்கு நான் ஆதாரமாகக் கொள்ளப்போவதில்லை. குர்ஆன். என்னும் கனத்த அஸ்திவாரப் பாறைதான் என் வழக்குக்கு ஆதா

ரம். பப்ளிக் ப்ராஸிக்யூடர் அத்துணை இலேசாக இதை முழுதும் ஒதுக்கித் தள்ளியதை நான் ஜூரர்களுக்கு விளங்குமாறு எடுத்துக்கூறச் சந்தர்ப்பம் எனக்கு நீங்கள் கொடுத்தால்,

நீதிபதி:—இவ்விசாரணையை நான் மதச் சண்டையாக மாற்ற முடியாது. இது பொருத்தமற்றது. இந்த மூலங்களை நீங்கள் உதாகரித்தல் கூடாது.

மௌ. மு அலி:—கீழ்க் கோர்ட்டிலுள்ள என் ஸ்டேட்மென்டில் இவை கண்டிருக்கின்றன. அவைகள் என் ரிகார்டில் உள்ளன. அவைகளது சம்பந்தத்தை ஜூரர்களுக்கு நான் விவரித்துக் கூற வேண்டுகிறேன். நல்லது, என் வழக்கை விவரித்துக் கூற எனக்கு அனுமதி இல்லையேல், நான் நிறுத்தி விடுகிறேன்.

நீதிபதி:—இந்த மத விஷயத்தை என் கொணருகிறீர்கள்? எனக்கு அது சம்பந்தமில்லையே. அனாவசியமாய் உங்களைக் கட்டுப்படுத்த எனக்கு இஷ்டமில்லை. உங்கள் மீது எற்படுத்தியிருக்கும் குற்றங்களைப்பற்றி மட்டில் நீங்கள் விவகரிக்கவேண்டும்.

மௌ. மு. அலி:—இவ்விஷயத்தில் எனக்கும் உங்கட்கும் முற்றிலும் அபிப்பராயம் மாறானது. வகுப்பு வித்யாசம் யாதுமே அன்னியில் என் மதம் யாது விதிக்கிறது என்பதை விவரிக்கவும், சட்ட ஆதரவு பெறவேண்டியது இம் மதம்தான் என்பதை ருசுப்படுத்தவும் எனக்கு உரிமையுண்டு என நான் நினைக்கிறேன். என் மதத்திற்குச் சட்ட ஆதரவு இல்லை என்று கூறிவிடுங்கள், எனக்குத் திருப்தி, நான் உட்கார்ந்து விடுகிறேன். ஜூரர்களுக்கு நீங்கள் இவ் வழக்கை எவ்வாறு தொகுத்துச் சொல்லப்போகிறீர்களோ

எனக்குத் தெரியவில்லை. ஆதலால், நீங்கள் தொகுத்துக் கூறுமுன்னம், ஜூரர்கள் அபிப்பராயம் வெளியிடுமுன், நான் இதை ஜூரர்களுக்கு விளங்கவைத்துக்கொண்டிருக்கிறேன்.

மதமும் குற்றமும்

நீதிபதி:—ஆனபோதிலும், ஜூரர்களிடம் தாங்கள் கூறும் சமாதானமானது தாங்கள் ஏதாவது குற்றஞ் செய்திருந்தால், அக்குற்றத்திற்கேற்ற சமாதானமல்லவென்றும், குற்றத்திற்கு மதம் சமாதானம் அளிக்காதென்றும் நான் சொல்லிவிடுகிறேன்.

மௌ. மூ. அலி:—ஆகையினாலே, ஜூரர்களை நோக்கி நான் செய்துவரும் பிரசங்கம் முடியுமுன், நீதிபதி வழக்கைத் தொகுத்துக் கூறியாய்விட்டதுபோல் தோன்றுகிறது. இவ்விசாரணையில் இப்பேர்ப்பட்ட அநேக விஷயங்கள் ஏற்கனவே நடந்தேறியிருக்கின்றன.

நீதிபதி:—நீங்கள் குற்றஞ் செய்திருக்கிறீர்களா, இல்லையா என்பது இந்நாட்டில் அமுலில் இருந்துவரும் சட்டப்பிரகாரம் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்.

மௌ. மூ. அலி:—பிரகடனை அமுலிலிருக்கிற வரையில் ஒருவனது மதப்பிரசாரமான எதுவும் பிரிட்டிஷ் இந்தியாவில் குற்றமாகாது. தாங்கள் இந்நாட்டில் ஒரு ஹிந்துவைக் கொண்டு ஒரு பசுவைக் கொல்விக்க முடியாது. புது சிப்பாய்களைச் சேர்க்குமுன்னர், நீங்கள் அவர்களுடைய ஜவாப்புகளைக் குறித்துக்கொண்டு, அவர்களை ஒரு வித ஸத்யத்திற்குக் கட்டுப்படுத்துகிறீர்கள். புது சிப்பாய்கள் சேர்க்கப்படும் முறை இதுவாகும். (ஒரு பாரத்தைக் காண்பித்துக்கொண்டு) அவர்களது வாக்குப்பிரகாரம் நடந்துகொள்வ

தாக ஜனங்கள் சத்தியஞ்செய்து கொடுக்கிறார்கள். அவ்வா றிருந்தும், இந்த சத்தியஞ்செய்த எந்த ஹிந்து சிப்பாயும், அவன் அரசனுக்குக் காட்டவேண்டிய கடமைப்பட்ட விசுவாசமெல்லாமிருந்தும் ஒரு பசுவைக் கொல்லான். ஆனதால், அவனுடைய தலைமை உத்தியோகஸ்தர் ஒரு பசுவைக் கொல்லுமாறு அவனுக்கு உத்தரவிட்டு, அந்த ஹிந்து சிப்பாய் அவ்வாறு செய்ய மறுத்தால், அவனு இந்த நீதிஸ்தலத்தின் முன் கொணரப்படுவான்? ஹிந்துக்களும் முஸல்மான்களும், பசுக் கொழுப்பு, பன்றிக் கொழுப்பிட்ட தோட்டாக்களைத் தொடமாட்டார்கள்; இவைகளை உபயோகிக்குமாறு படைத் தலைவர் ஒருவர் ஹிந்து சிப்பாய்க்காவது, முஸல்மான் சிப்பாய்க்காவது உத்தரவிட்டு, அவன் அதை மறுப்பின், எந்த நீதி சபையின் முன்னரும் அவன் கொணரப்பட முடியுமா? உங்களது பீனல்கோட் என்ன சொன்னாலும் சரி, மகாராணியின் பிரகடனை அவனுக்கு ஆதரவு அளிக்கும். எனது செய்கைகளெல்லாம் என் மதத்துக்கு அடங்கியிருக்கும் வரை இந்தியன் பீனல்கோட் அல்லது மற்ற பீனல் சட்டமும் என்னைத் தொடமுடியாது; ஏனெனில், மகாராணியாரின் பிரகடனை இதோ அமுலில் இருந்து வருகிறது; அம்மகாராணியின் வாரிசு, அரசராக இருக்கும் வரை, அவ்வரசனின் படம் இங்கு இருக்கிற பரியந்தம், நீதிபதியாக விளங்கும் தாங்கள் அம்மகாராணியாரின் பிரகடனையினிருந்தும், அரசனுடையதினின்றும் உத்தரவுகளைப்பெறவேண்டியது; இல்லையேல், எல்லாம் வெறும் வேஷம்தான், மதத்துவேஷமின்மை என்பதைப்பற்றிய பேச்செல்லாம் கேவலம் டம்பம்தான், போக்கிரித்தனம்தான் என எனக்குத் தெரியவரும்! இப்போது, இந்த பாரத்தில் ''நீர்மார்க்கமாவது, தரைமார்க்கமாவது எங்கு

போக உத்தரவு அளிக்கப்படுகிறதோ, அங்கு தங்களுடைய ராணுவ உத்யோக சம்பந்தமாக ஜாதி மதப் பழக்க வழக்கங்களுக்குத் தடையாயிருக்கிறது என்று கூருமல் செல்ல மனமுண்டா?" என்று ஒரு கேள்வி இருக்கிறது. புதிதாகச் சேரும் ஒவ்வொரு சிப்பாயும் இக்கேள்விக்கு இணங்கியே இந்த பாரத்தில் கையொப்பமிடவேண்டும். இதனால், மதத்தின் எக்கட்டளைக்கும் ஒரு சிப்பாய் கட்டுப்பட்டவன் அல்லன் என்று தலைமை உத்யோகஸ்தர் நம்பிவிட இடமுண்டா? ஒரு தலைமை உத்யோகஸ்தர் தனது மாட்டிறைச்சிக்காக ஒரு பசுவைக் கொல்லுமாறு ஒருவனுக்கு உத்தரவிடுகிருரென வைத்துக்கொள்வோம்; அவன் தனது வேதத்தையும், சாஸ்திரத்தையும் ஆதாரமாக எடுத்துக்காட்டி, கண்டிப்பாய் மறுத்துவிடுகிருன் என்றால், உங்களது பீனல்கோடின் எந்த ஸெக்ஷனும், அம்மனிதன் அவனது மதத்திற்கு அடங்கி நடக்கிருன், ஆதலால், அவனுக்குத் தண்டனையுண்டு, என்று நீதிபதிக்காவது, ஜூரர்களுக்காவது அனுகூலமாக விளங்காது. அவனுக்குத் தண்டனை பெற இடமில்லை என்று கூறிவிடுங்கள், நான் உட்கார்ந்துவிடுகிறேன். கனவான்களே, பீனல் கோடின் ஒவ்வொரு ஸெக்ஷனிலும், இன்னம் இதர சட்டத்திலும், வக்கீல்களிடையில் அடிக்கடி வழங்கிவருகிற "பங்கமின்றி" என்னும் வாசகத்தை, அதாவது "ஒருவனுடைய மதத்திற்கு பங்கமின்றி" என்பதைக் கூட்டிவைக்க வேண்டும். "உடன்கட்டைஏறுதல்" போன்ற கெட்ட வழக்கங்கள் இருக்கின்றன; அவைகளுக்கு நாங்கள் இடங்கொடுக்க இயலாது என நீங்கள் கூறலாம். அப்படிக்கானல் உங்களது சம்மதம் பெற்ற பழக்க வழக்கங்கள்தான் யாவை, அவைகளை எந்தெந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்

பட்டு அனுஷ்டித்தால், உங்களால் இடங்கொடுக்க இயலும் என்பதைத் தெரிவிக்கவேண்டும். கொலைசெய்கிறது ஒருவனது மதக்கட்டளையாயிருக்குமாயின், கொலையும் கொலையாகாது. மகாராணியாரும் அம்மதத்திற்குப் பிரகடனையால் சட்ட ஆதரவு அளித்திருக்கின்றனர். அநேக மதங்களும், பிரிவினைகளும் இந்நாட்டில் உள்ளன என நீங்கள் கூறலாம். நல்லது, அப்படியானால், இன்ன இன்ன மதங்களுக்குத் தான் ஆதரவு உண்டு என நீங்கள் வெளிப்படையாகத் தெரிவித்திருக்க வேண்டும். இந்த இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுகிறவர்கள்தாம் இந்த ராஜ்யத்தில் வாழ்ந்துவரப் பிரியப்படலாம், அவர்களைத்தாம் ராஜவிசுவாசமுள்ள குடிகளாக கருதப்படும் என நீங்கள் தெளிவுறச்செய்திருக்கவேண்டும். இந்த ராஜபக்திஎல்லைக்குள் வாழ மனமில்லாதவன், ராஜ்யத்தை விட்டு வெளியேறியிருப்பான், அல்லது உங்களையாவது உதைத்து வெளியேற்றியிருப்பான்.

சாட்சியம்—அற்பவிஷயங்கள்

நாங்கள் மிகவும் உண்மையானவர்களென்றும், நேர்வழியிலிருக்கிறவர்களென்றும் எனது நண்பர் பப்ளிக்ப்ராஸிக்யூடர் உங்களுக்குத் தெரிவித்தார். இவ்வாறு அவர் எங்களைச் சிலாகித்துக் கூறியதற்காக, நான் அவருக்கு வந்தனம் செலுத்துகிறேன். ஆனால், அவரது சுய காரியத்திற்காகவே, அவர் இம்மாதிரி எங்களைச் சிலாகித்திருக்கிறது; இப்போது, என் சுய காரியத்திற்கே, நான் அதை உபயோகிக்க உத்தேசித்திருக்கிறேன். கனவான்களே, உங்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சாட்சியத்தின்படி நாங்கள் தண்டனைக்கு அருகர்களாயிருந்தால், அத்தண்டனையினின்று தப்பித்துக்கொள்ளும்பொருட்டு பொய் பேசுமாறு

சுலபமாய்ப் பயமுறுத்தப்படுகிறவர்கள் நாங்களல்லவென, இப்போது நீங்கள் அறியலாம். இவ்வழக்கில் எந்த சாட்சியம் இருக்கிறதோ, அது கேவலம்தான்; இந்தக் கேவலமான விஷயங்களைக் குறித்து நான் உங்களுக்குத் தொந்திரவு கொடுக்க உத்தேசமில்லை. காலக்கிரமமாக கூறியுள்ள சாட்சியத்தைக் குறித்தும் நான் சிரமம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. நாங்கள் கன்யாசாலையை விட்டுப் புறப்பட்டோமோ, அல்லது அங்கு திரும்பி வந்தோமோ, அல்லது விஷயாலோசனைக் கமிட்டியைப் பற்றியோ, இவை எங்களது கூட்டை ருசுப்படுத்தக் கொணரப்பட்டதாகும். யாருடன் கூட்டு? என்சகோதரருடன் கூட்டா? அப்படியானல், இதேபோல் பப்ளிக் ப்ராஸிக்யூடர் எங்களது பழைய விருத்தாந்தங்களனைத்தையும் சுலபமாய் வெளியிட்டிருக்கக்கூடும். என் ஜனனகாலத்தில் என் சகோதரர் அருகாமையிலிருந்தார்; நாங்கள் இருவரும் ஒரே குடும்பமாய் வாழ்ந்து வருகிறோம், நாங்கள் பள்ளியில் படித்து வருகையில், நான் என் செலவுக்கு வைத்துக்கொண்டிருந்த பணத்தை அவர் பிடுங்கிக்கொண்டுவிட்டார், என் பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடுமாறு நான் அவரைக் கேட்டபோது, அவர் என்னைக் கருரத்தம் பாய அடித்தார் (சிரிப்பு). இவை முதலான விஷயங்களை அவரது காலக்கிரமப்படி வரிசைப் படுத்தி உங்கள் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சாட்சியத்தில் சேர்த்து வைத்திருக்க வேண்டும். இது தான் கூட்டு (சிரிப்பு). ஜூரர்களாய் விளங்கும் கனவான்களே, இதெல்லாம் கேவலமான சாட்சியமல்லவா? மகாராணியாரின் பிரகடனையானது முஸ்லிம் மதத்திற்கு ரட்சிப்பு அளிக்கிறதா இல்லையா என்பதுதான் முக்கிய வழக்கு. பிரிட்டிஷ் சைன்யத்தில் வேலையிலமர்ந்து உழைத்

தல் கூடாது என நாங்கள் முஸ்லிம் சிப்பாயிடம் சொன்னாலும் சரி, சேனையில் சேர நாங்கள் மறுத்தாலும் சரி, சேர வேண்டாமென பிறருக்கு நாங்கள் சொன்னாலும் சரி, இவையெல்லாம் திருக்குர்ஆனில் காணப்படலாகும் என நாங்கள் சொல்லி, எங்கள் கூற்றையும் ருசுப்படுத்தினால், எங்களுக்கு மன்னிப்புண்டு என்பதுதான் என் கட்சி யெல்லாம். நீங்கள் எங்களைத் தண்டிக்க முடியாது. எந்த எந்த இடத்தில் பீனல்கோட் குர்ஆனுக்கு முரண்படாமலிருக்கிறதோ அங்கங்கே தான் பீனல்கோடிற்கு ஆதிக்கம் உண்டு. பீனல்கோட் குர்ஆனுக்கு மாறாகவிருந்தால், பீனல்கோடிற்கு நிற்கவே இடமில்லை. அது ஒழிய வேண்டுவதுதான். இதுதான் என் கட்சி யெல்லாம். இவ்விஷயத்தில் நான் பிசகாயிருந்தால், நீதிபதி தீர்மானம் சொல்லட்டும், எனக்குத் திருப்திதான். கனவான்களே, தனி மனிதரது அபிப்பிராயத்திற்கும், எங்கள் வழக்குக்கும் சம்பந்தமுண்டென எதிர்க்கட்சி கூறுகிறதை நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது; அவ்வாறு சம்பந்தமிருப்பினும் மனிதரது மதாபிமானங்களைக் குறித்து நாம் யோசிக்கவேண்டியிருக்கிறது. மௌலானா ஹுஸைன் அஹ்மத் சாகிப் அவர்களால் எடுத்துக்கூறப்பட்ட 34 ஹதீஸ்களில், 17 அல்லது 13ஐ யும் குர்ஆனிலுள்ள 6 ஆயத்துக்களையும் நான் உங்களுக்குக் கூறிவிட்டேன். இதே கூற்றுகளிலிருந்து ஜூரர்களாய் விளங்கும் கனவான்களும், இவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதியும் ஒரு முஸ்லிம் எது எது செய்யக்கூடாது என்பதை மிகத் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். ஆயத்துக்களின் முன்பின் சம்பந்தம் விளக்காமல் பப்ளிக் ப்ராஸிக்யூடர் பேசியிருக்கிறார். அவ்வாறின்றி ஸந்தர்ப்பத்தை நீங்கள் சுலபமாய் அறிந்துகொள்ளும்பொருட்டே

நான் குர்ஆனிலிருந்து நீண்ட பாகங்களை உதாகரித்திருக்கிறேன். நான் சொல்லுகிறதெல்லாம் குர்ஆனில் எழுதப்பட்டிருக்கிறதா இல்லையா என முஸ்லிமில் எந்த வகுப்பினுள் எவனையும் கேட்குமாறும், எவனை வேணுமானாலும் கூப்பிட்டு அழைத்தும் - கோர்ட் சப்ராவியைக்கூட-கேட்குமாறும், நான் வேண்டிக்கொள்கிறேன். அவன் குர்ஆன் வாசிக்கக்கூடுமானால், சுலபமாய் உங்களுக்கு எடுத்துக் காட்டுவான், அரபி தெரிந்தவனாயிருப்பின், அவன் அதை உங்களுக்கு விளக்குவான். அபிப்ராயபேதமே இராது. எங்களது கூற்றுப் பிசகு என்று கூறும் எம்மனிதனையாவது, எந்த சட்டநிபுணரது அபிப்பிராயத்தையாவது, எந்த மதத்தீர்ப்பையாவது, சர்க்காராவது வாதியாவது என்னுடன் பந்தயம்போட்டுக் கொணர இயலுமா? ஷியாக்களுக்கும், ஸுன்னீகளுக்கும் வித்தியாசம் இருக்கலாம். கிலாபத் விஷயங்களைப்பற்றி வித்தியாசம் இருந்துகொண்டு வருகிறது. சுல்தானது கிலாபத்தில் ஷியாக்களுக்கு நம்பிக்கை இல்லை. மற்றும் சில விஷயங்களைக் குறித்து பேதமிருக்கலாம்; ஆனால், இதைப்பற்றி அபிப்பராயபேதமே இல்லை. ஒத்துழையாமையைப்பற்றிப் பொதுவாய் பேதமிருக்கலாம். பட்டங்கள், உத்தியோகங்கள், பள்ளிக்கூடங்களுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கும் திரவிய லாபங்கள் (கிராண்டு வாங்கல்) ஆகிய இவைகளை உதறித் தள்ளுவதை ஆட்சேபிக்கிறவர்களுமிருக்கலாம். இது வியாபார முறை; சிநேகமாவது, ஒத்துழைப்பாவது அன்று என்பது அவர்களது கூற்று. நீங்கள் இந்தக் கொடையை எற்றாலும் சரி, எற்காவிடினும் சரிதான். ஆனால், கடைசியாக, அப்படிக் கூறுகிறவர்களின் தொகை சொல்பமே; இந்தச் சொல்பத் தொகையில் பலர் தங்களைச் சர்க்காருக்கு விற்றிருக்கின்

றனர். ஆனால், மற்றொரு முஸல்மானைக் கொலை செய்கிறது என்கிற கேள்வி வந்தாலோ, அபிப்பிராயபேதமே கிடையாது. இதுதான் முக்கிய விஷயம்.

சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள்

கனவான்களே, எங்கள்மீது சுமத்தியிருக்கும் குற்றங்களைப்பற்றி இச்சந்தர்ப்பத்தில் சில விஷயங்களை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒன்றோடொன்று ஒவ்வாத குற்றங்களை இணைத்துச் சாட்டுவதை, கனவான்களே, நீங்களும் ஆட்சேபித்தல் கூடாது, நானும் ஆட்சேபித்தல் கூடாது. இவ்விஷயத்தைக் குறித்து நான் நீதிபதியவர்களுடன்தான் பேசவேண்டும். இதைப்பற்றிப் பேச எனக்கு உரிமையுண்டென்றே நான் நினைக்கிறேன். ஆனால், நீங்கள் சம்பந்தப்பட்டமட்டிலோ, இந்தியன் பீனல்கோடின் 109, 117, 120, 131, 505 முதலான ஸெக்ஷன்கள் பல தாறுமாறாக, கனவான்களே, மனக்குழப்பம் விளைவிப்பதற்காகவே இணைக்கப்பட்டிருக்கின்றன என்றே நான் உங்களுக்குச் சொல்லுவேன். க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 233-வது ஸெக்ஷன்படி இக்குற்றங்கள் இவ்வாறு இணைக்கப்பட இடமில்லை. 233-வது ஸெக்ஷன் என்னவென்றால்:-

ஒருவன் செய்ததாகக் கூறப்படும் ஒவ்வொரு தனிக் குற்றத்திற்கும், ஒரு தனித்த குற்றச்சாட்டு இருத்தல் வேண்டும்; அப்பேர்ப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டும், 234, 235, 236, 239 ஸெக்ஷன்களில் கூறியுள்ள வழக்குகள் நீங்கலாக, தனிப்படவே விசாரணை செய்யப்படல் வேண்டும். ஸெக்ஷன் 234 கூறுகிறதாவது:—ஒரு மனிதன் ஒரு வருஷகாலத்திற்குள் ஒரே விதமான பல குற்றங்கள் செய்ததாகக் கூறப்பட்டு, அவைகளில் மூன்றுக்கு மேற்

படாத குற்றங்களுக்கு ஒரே விசாரணையில் விசாரிக்கப்பட்டால்,

நீதிபதி:—ஜூரர்களுக்கு நீங்கள் இதைப் படித்துக் காட்டும் சிரமம் வேண்டாமென்றே நான் நினைக்கிறேன். வியவகாரம் இத்துணை தூரம் ஆனபிறகு, இனிக் குற்றச் சாட்டுகளில் மாற்றம் ஏற்படுத்தல் இயலாது.

மௌ. மு. அலி:—தனி மனிதர்கள் தனித்தனியாகவே விசாரிக்கப்படவேண்டுமென்பதும், குற்றச்சாட்டுகள் வேறு வேறாகவே வியவகரிக்கப்படவேண்டுமென்பதும் பொதுவிதியாகும்; ஏனெனில், இவ்வாறு செய்யப்படாவிடில், குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு அனுகூலமிராது. ஜூரர்களாய் விளங்கும் கனவான்களுக்குத் தப்பு அபிப்பராயம் ஏற்படல் உண்டு; ஏன் அவைகள் தாறுமாறாக இணைக்கப்பட்டிருக்கின்றன வென்பது விளங்காது; ஆனால், ஸர்க்கார் தரப்பிலுள்ள யாவரும் குற்றம் வாய்ந்த சதியோசனை செய்திருக்கிறார்களென்றே எனக்குத் தோன்றுகிறது. (சிரிப்பு). அதனால்தான், ஒருவருக்கும் ஒன்றும் விளங்காமலிருப்பதற்காகவே, சட்டத்தின் அத்துணை ஸெக்ஷன்கள் இணைக்கப்பட்டுள்ளன. கனவான்களே, உங்களில் எவருக்காயினும் அவைகள் தெளிவாய் விளங்குகின்றனவா என்பதை நான் அறியேன். முதல் குற்றச்சாட்டு எது, இரண்டாம் குற்றச்சாட்டு எது, ஜூரர்களாய் விளங்கும் உங்கள் முன்னர் வரவேண்டியது எது, நீதிபதி முன்பும் அஸெஸர்களாய் விளங்குங்காலையில் உங்கள் முன்பும் வரவேண்டுவது எது, ஆகிய எதுவும் எனக்குச் சற்றேனும் இன்றுவரை விளங்கிற்றில்லை. வால்டேரிலிருந்து நான் இங்கு அழைத்து வரப்பட்டபோது, ஸ்பெஷல் ரயில் வண்டியில் என்னை அழைத்துவந்த ஒரு டாணுக்காரன் என்மீது சுமத்தியுள்ள

குற்றம்யாதென வினவ, நான் "எனக்குத் தெரியாது, வாரண்டில் குறித்திருக்கும் ஸெக்ஷன்கள் 120, 121, 505, 117" என்று அவனிடம் சொன்னேன். அதற்கு அவன் பரிகாசமாய் "எத்தனை ஸெக்ஷன்கள் வேணுமானாலும் அவர்கள் போடுவார்கள்; அவர்களது இஷ்டம்; ஆனால், எல்லாம்கடைசியாக, அவை எல்லாம் அவர்கள் வீட்டு ஸெக்ஷன்கள்தானே" என்று உருதுவில் சொன்னான். (சிரிப்பு). கனவான்களே, உங்களில் யாராகிலும் பில்லியார்ட்ஸ் விளையாடியிருக்கிறீர்களோ? நல்லது, பில்லியார்ட்ஸில் மூன்று பந்துகள் உண்டு. நீங்கள் உங்கள் பந்தை அடிக்கும் மாதிரியில், அப்பந்து உருண்டு ஓடிப்போய் மற்றிரண்டு பந்துகளையும் அடிக்க வேண்டும்; அல்லது மற்றொரு பந்தை அடித்துவிட்டு, மேஜையின் பக்கங்களில் தொங்கவிட்டிருக்கும் பைகள் ஒன்றில் விழுந்துவிடவேண்டும், அல்லது இப்பைகளில் மற்றப் பந்துகளைத் தள்ளிவிடவேண்டும்; அப்போதுதான் உங்களுக்கு வெற்றி. ஆனால், சில சமயங்களில், இந்த நாசமாய்ப் போகும் பந்துகள் நீங்கள் வெற்றி பெற யாது செய்வதென உங்களுக்கு விளங்காமலிருக்கும்படியான அவ்வாறான ரீதியில் மேஜையின் மீது அமைந்து கிடக்கும்; பிரதம அப்பியாசிகள் தொல்லைப்படுமாறு அத்துணை அடிக்கடி இச்சம்பவம் நிகழும். நல்லது, இச்சமயத்தில் நல்ல அனுபவசாலிகள் கூறும் யோசனை என்னவென்றால், ஓங்கி அடியுங்கள், அதிர்ஷ்டம் உள்ளபடி நடக்கும் (சிரிப்பு) என்பதுதான்; அநேகமாய், உங்கள் எதிராளிக்கு ஏதோ அபஜயம், உங்களுக்கோ மிகக் கஷ்டப்பட்டு கொடுத்த ஒரு அடி ஜயம் அளித்தது (சிரிப்பு). நல்லது, கனவான்களே, குற்றச்சாட்டுகள் விஷயத்தில் இதையேதான் ப்ராஸிக்யூஷன் தரப்பில் செய்திருக்கின்றனர்; ஓங்கி ஓர்

அடி அடித்திருக்கிறார்கள்; உங்களையும், நீதிபதியையும் தான் வெற்றிக்கு நம்பியுள்ளார்கள். அநேக ஸெக்ஷன்கள் பலிக்காவிடினும், ஒன்றிரண்டாவது ஒட்டிக்கொண்டு கோரிய பலனையளித்துவிடும். (சிரிப்பு).

இரண்டு பிரதான குற்றங்கள்

எனக்குத் தெரிந்த வரையில் இவ்வியவகாரம் பூராவும் எங்கள்மீது சுமத்தியுள்ள இரண்டு பிரதான குற்றங்களாகும்:—குற்றம் வாய்ந்த சதியோசனையாகும் ஒரு ஒப்பந்தம் முதலாவது குற்றம், குற்றஞ்செய்ய யத்தனம் இரண்டாவது குற்றம்—(கோர்ட்டார் குறுக்கிட்ட பின்னர்)-குற்றஞ் செய்ய ஒரு ஒப்பந்தமே குற்றம் வாய்ந்த சதியோசனையாகும் - இது முதற் குற்றம், அந்த சதியோசனையை அனுசரித்த ஒரு கார்யம் செய்வது இரண்டாவது குற்றம்:—இவைதான் முதலிரண்டு குற்றச்சாட்டுகள். துருப்புக்களின் ராஜபக்தியைக் கலைப்பதுபோலிருந்த என் வசனம் அப்புறம்தான் வருகிறது. என் ஸகாக்கள் சிலர் அதற்கு உடந்தையாயிருந்ததும் இதற்குப் பிறகுதான். ஜூரர்களாய் விளங்கும் உங்கள் முன்னர் வரவேண்டுவது அந்த சதியோசனையை அனுசரித்த பிரயத்தனம் ஒன்றுதான் என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனாலும், முதல் குற்றச் சாட்டை நான் முதலில் எடுத்துக்கொள்ளுகிறேன். அதாவது, ஒப்பந்தத்தைப் பற்றியதை. கனவான்களே, இந்த 120-A, 120-B பிரிவுகள் பீனல்கோடிற்கு சேர்க்கப்பட்டு வெகுகாலம் ஆகிவிடவில்லை என்பது உங்களில் எவருக்காவது தெரியுமா என்பது எனக்குமுற்றிலும் நிச்சயமாகவில்லை. சதியோசனைச் சட்டம் அஸம்பிளியில் நிறைவேறுகையில் நான் அங்கு இருக்க நேரிட்டது. பத்திரிகை ரிபோர்ட்டர்கள் அமர்ந்திருக்கும் காலரியில்

நான் உட்கார்ந்துகொண்டிருந்தேன். சிற்றுண்டி அருந்தும் நேரத்தில் என் பழைய நண்பர் ஸர் வில்லியம் வின்ஸென்ட் சபை கூடும் மண்டபத்தில் பிரவேசித்தார். பிரசித்தி வாய்ந்த ஒரு பத்திரிகைத் தொழிலாளருடன் நான் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அவர் இப்போது மிதவாதியாக மாறி, சர்க்காருக்கு ஒரு விசேஷ நண்பராக விளங்குகிறார். நாங்கள் இருவரும் சதியோசனை செய்துகொண்டிருக்கிறோமோ என்று ஸர் வில்லியம் வின்ஸென்ட் என்னைத் தமாஷாகக் கேட்டார். "சதியோசனைக்கு ஒற்றுமை அவசியம்; எவரோடும் எனக்கு ஒற்றுமையே கிடையாது என்பது நீங்கள் நன்கறிந்த விஷயமாயிற்றே" (சிரிப்பு) என்று நான் அவருக்குக் கூறினேன். ஜூரர்களாய் விளங்கும் கனவான்களே, ஒப்பந்தமே கிடையாது. இது உண்மை. இங்கேயாவது, கீழ்க்கோர்ட்டிலாவது ஒப்பந்தத்தைப்பற்றி சாட்சியம் இல்லை. "அது ஊகித்தறியவேண்டிய விஷயம்" என்கிறார் பப்ளிக் ப்ராஸிக்யூடர். ஊகத்தின்பேரிலேயே தான் எனக்கு தீவாந்தரசிட்சை ஆயுள்பரியந்தம் கிடைக்கப்போகிறதும், என் குடும்பத்தை விட்டு என்னைப் பிரித்தெடுத்துப்போவதும். என் சிறு பெண்ணிடமிருந்து என்னைப் பிரித்துவிடுவதும், என் மனைவியிடமிருந்தும் வயது சென்ற தாயிடமிருந்தும் என்னைப் பிரிப்பதும்-இதை விட எனக்கு அதிக முக்கியமானது-என் நாட்டைவிட்டு என்னை வெளியேற்றுவதும் நிச்சயம். இவையெல்லாம் ஊகத்தின்பேரிலேயே தான். ஒப்பந்தத்தைப்பற்றி ஒருபேச்சாவது இருந்ததென்றுகூற ஒரு சாட்சியமாவது இல்லை. நீதிபதியானவர் இதைக் குறித்து எங்களைக் கேள்விகள் கேட்டுச் சாட்சியத்தைப் பூர்த்தி செய்துகொள்ளுகிறார்களோ என்று நான் முற்றிலும் நிச்சயமாகக் நினைக்

கக்கூடுமோயில்லை. எப்படியிருந்தாலும் துருப்புகளைப் பற்றி நாங்கள் ஒருபோதும் யோசனைசெய்யவில்லை என நான் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். ப்ராஸிக்யூஷன் தரப்பைவிட குற்றவாளிகளுக்கு அதிகம் தெரியுமென ப்ராஸிக்யூஷன் தரப்பினரே எங்களுக்கு கூறியுள்ளார்கள்; அது முற்றிலும் உண்மையென்றே நான் நினைக்கிறேன். உண்மையிலேயே, ப்ராஸிக்யூஷன் தரப்பினருக்கு கொஞ்சங் கூட ஒன்றும் தெரியாது (சிரிப்பு). போலீஸாரின் கற்பனை யினது உதவிகொண்டு அவர்கள் விஷயங்கள் நிரம்பவும் தெரிந்துகொள்ளுவதாக அவர்கள் வேஷம் போடுகிறார்கள். (சிரிப்பு). ஆம், ப்ராஸிக்யூஷன் தரப்புக்குத் தெரியாதது, குற்றவாளிகள் எனப்படும் எங்களுக்குத் தெரியும். தண்டனை விதிக்கும் மாஜிஸ்திரேட் முன்னர் அவர்கள் கைவரிசைகளை யெல்லாம் காட்டிவிடவில்லையா ?

ப்ராஸிக்யூஷனின் உற்பத்திக்கிரமம்

கனவான்களே, கீழ்க்கோர்ட்டில் நான் கொடுத்த என் வாக்குமூலத்தை கோர்ட் குமாஸ்தா உங்களுக்கு நீண்ட நேரம் படித்துக்காண்பித்திருக்கிறார். இந்த ப்ராஸிக்யூஷன்களின் உற்பத்திக்கிரமங்கள் பூராவையும் நான் அந்த வாக்குமூலத்தில் மிகத் தெளிவாய் விளக்கி யிருக்கிறேன். நீங்கள் அதற்கு மிகவும் கவனத்துடன் செவி கொடுத்தீர்களென்றே நம்புகிறேன். நல்லது, நான் மிகவும் கபடமற்றவன் என்றே கருதப்படுகிறேன் - நாங்கள் மிகவும் கபடமற்றவர்கள்தாம். இதிலிருந்து, நாங்கள் உண்மையான ஆசாமிகள் என்றுகூட நீங்கள் நினைப்பீர்கள். இந்தியாவிலுள்ள முஸ்லிம் துருப்புகளுக்கு இஸ்லாமிய சட்டம் அவர்களது பொறுப்பைக் குறித்து யாது கூறுகிறது என்

பதைத் தெரிவிப்பதுமட்டிலுமான ஒரு ஒப்பந்தத்தைக் குறித்த விஷயத்திலோ, உங்கள் முன்னர் உள்ள தீர்மானத்தைத் தவிர வேறு யாதொன்றும் கிடையாது. ஆனால், இன்று ஒருவன் தன்னை முஸல்மான் எனச் சொல்லிக் கொண்டால், அவன் குர்ஆனில் அடங்கியவற்றின் பிரகாரம் நடந்துகொள்ளக் கட்டுப்பட்டவனாகிறான். அந்நூலில் அடங்கியுள்ள ஒரு அசையையேனும் நான் தள்ளுவேனாகில், நான் ஒரு முஸ்லிம் அல்லன். நான் ஒரு மகாபாபியாயிருக்கலாம், நான் அத்துணை பாபம் வாய்ந்தவனாயிருந்தாலும் பரவாயில்லை, நான்-இப்புத்தகத்தில் அமைந்துள்ள ஒரு அசைச்சொல்லையேனும் தள்ளாதவரையில்-ஒரு முஸ்லிம் தான். ஆனால், இதை நான் தள்ளுகிற க்ஷணமே, நான் எவ்வளவு பக்திமானாயிருந்தாலும், அல்லது மற்ற யோக்யதையமைந்தவனாயிருப்பினும் நான் முஸல்மானல்லன். இந்த குர்ஆனில் அடங்கியுள்ள எதையும், குர்ஆனிலுள்ள அதே சட்டப்படி உலகத்துள்ள ஒவ்வொருவருக்கும் - முஸ்லிம் அல்லாதாருக்குங்கூட - நான் சென்று பிரசாரம் செய்ய வேண்டுவது. என் நன்மதிப்புக்குரியவரும், என் நண்பருமான இங்குள்ள மௌலானா ஹுஸைன் அஹமத் ஸாஹிப் அவர்களை எடுத்துக்கொள்வோம். அவர் மதீனாவில் உபதேசங்கள் செய்துகொண்டிருந்தார் - காலஞ்சென்ற ஷெய்குல் ஹிந்த் எனப்படும் மௌலானா மஹ்மூதுல் - ஹஸன் ஸாஹிப் அவர்களின் சீடர் இவராகும். ஹிஜாஸில் அவர் பிடித்துக்கொள்ளப்பட்டு, பிறகு ஈஜிப்துக்கும், அதன்பின் மால்டாவுக்கும் அழைத்துச்செல்லப்பட்டார். பத்து வருஷங்களாக அவர் மதீனாவில் உபதேசங்கள் செய்துகொண்டிருந்தார். நபி பிரானின் ஹதீதுகளை அவர் அங்கு உபதேசித்தார். அவர் அவரது வீட்டுத் தெருத் திண்ணையில்

அமர்ந்து, குர்ஆனை ஓதுகையில், "முஸ்லிம் ஒருவனை வேணு மென்று கொல்லுகிற எவனும் நரகத்தில் அவனது சன்மா னத்தைப் பெறுவான். அவன் என்றைக்கும் அங்கேதான் வாழ்வான். ஆண்டவனது கோபம் அவன்மீது என்றும் இருக்கும். ஆண்டவன் அவனைச் சபிப்பான். ஆண்டவன் அவனுக்காக ஒரு கடும் வாதை தயாரித்துள்ளான்" என் கிற அதே ஆயத்துக்களை ஓதுகிறாரென வைத்துக்கொள் வோம். இவ்வாறு அவர் ஓதிக்கொண்டிருக்கையில், ஒரு முஸ்லிம் சிப்பாய் அவ்வழி சென்றுகொண்டிருந்ததாக வைத்துக்கொள்வோம். இப்போது அந்த மௌலானா ஹுஸைன் அஹ்மத் என்பார் இந்தியன் பீனல் சட்டம் 505 வது ஸெக்ஷன்படி குற்றமொன்றிழைத்தார் என்று நீங்கள் சொல்லுவீர்களா? அவ்வாறு நீங்கள் கூறுகிறதாயிருப்பின் அபிப்பிராயபேதங்களுக்கு இடங்கொடுத்தலைப்பற்றி இந்த ஜம்பப்பேச்செல்லாம் என்? அல்லது, ஒரு முஸ்லிம் சிப் பாய் ஒரு பள்ளிவாசலுக்கு வருகிறதாய் வைத்துக்கொள் ளுவோம். அந்தச் சிப்பாய் அங்கு வந்துகொண்டிருக் கையில் அந்த மௌலானா இந்த ஆயத்தைத் தொழுகையில் ஓதினால் குற்றவாளியாகிவிடுகிறாரா? மற்றொரு உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். சிப்பாய் ஒருவன் அவரிடம் சென்று, "மௌலானா, இஸ்லாமிய சட்டம் யாதென்று நான் அறிய விரும்புகிறேன்; கிலாபத்துக்கு விரோதமாக சண்டை யிட மெஸொபொடேமியாவுக்குச் செல்ல எனக்கு உத் தரவு வந்திருக்கிறது; நான் அங்கு சென்று முஸல்மான் களுக்கு எதிராகச் சண்டை செய்வது சட்டமாகுமா?" என்று வினவுகிறான். அதற்கு அவர் அது சட்டமல்ல என்கிறார். அது சட்டமாகும் என்று அவர் கூறினாலோ, அவர் காபிர் ஆகிவிடுகிறார். அவர் மௌனம் சாதித்தாலோ ஆண்டவன்

அவரைச் சபிப்பான், உலகம் பூராவும் அவருக்குச் சாபம் கொடுக்கும். ஆகையினல், அவர் "அது சட்டமாகாது" என்று கூறவேண்டியிருக்கிறது. இஸ்லாமியசட்டம் யாதென்று ஒருவன் வந்து அவரைக் கேட்டால், மதபோதகர் என்ற தோரணையில் இஸ்லாமியசட்டத்தை அவனுக்கு உண்மையாக விளங்கவைப்பது அவரது கடமையாகும். ஆனல், பீனல்கோடிற்குப் பயந்து உண்மையுரைக்க முடியாதவராகிவிடின், அப்போது அவருக்கு ஆண்டவனது சாபம் விதிக்கிறது.

தூர் - ஆனின் கட்டளைகள்

மற்ருெரு உதாரணம் எடுத்துக்கொள்வோம்: மௌலானு ரயில்வண்டித் தொடரில் ஏறிச் செல்லுகிருர்; அப்போது மற்ற முஸல்மான்களுக்கு எதிராகவும், கலீபாவை எதிர்த்தும், மதப்போர் (ஜிஹாத்) புரிவோர்களுக்கு விரோதமாகவும் சண்டையிடும்பொருட்டு மெஸொபொடேமியாவுக்குச் சென்றுகொண்டிருக்கும் முஸ்லிம்களைக் கண்ணுறுகிருர். "இது சட்டமன்று; இஸ்லாம் இதற்கு இடங் கொடாது" என அவர்களுக்கு மௌலானு கூறி, "என் காலத்திற்குப் பிறகு நீங்கள் ஒருவரை ஒருவர் மாய்த்துக்கொண்டு காபிராகி விடாதீர்கள்" என்று நபி நாயகம் (ஸல்) கூறியுள்ளார், என்ற மேற்கோளையும் எடுத்துக்காட்டுகிருர். நீங்கள் அந்த மௌலானுவுக்குச் சட்ட ஆதரவு அளிக்கமாட்டீர்களா? நல்லது, இதை அவர் அவரது தொழுகையிற் சொல்வது பொருந்தும்; எவரேனும் அவரை அணுகி, இஸ்லாமிய சட்டம் யாதென வினவினுலும், மதபோதகர் என்ற தோரணையில் அவர் அவ்வாறு கூறுவதும் சரியாகும்; ஆனல் வீட்டுக்கூறைமீதேறி, அங்

இருந்து யாருமறிய பறைசாற்றுவது அவரது கடமை யாகாது; அப்போதுதான் ஜனங்கள் மனதைக் கலைத்த லென்னும் குற்றமாகி, ஸெக்ஷன் 505, 117, அல்லது, 121-A, 121-B முதலியவைகளின்கீழ் வருமென நீங்கள் கூறலாம். இதுவுங்கூட அபிப்பிராயபேதங்களுக்கு இடங் கொடாமை என்றே நான்கூறுவேன்; ஏனென்றால், எவ ருக்கு மோக்ஷம் உண்டு,எவருக்கு இல்லைஎனக் குர்ஆன் விதித் திருக்கிறது. (குர் ஆனிலிருந்து உதகரிக்கிறார்). உலக சரித் திரத்தின் ஆதரவுகொண்டு ஆண்டவன் ஸத்யமாய்க் கூறு கிற குர்ஆனின் சிறிய அத்யாயத்தை நான் உதாகரிக்க வில்லை. நான் கூறுவது ஸத்யம்; இதற்கு உலக சரித்திரமே சாட்சி என்கிறான் ஆண்டவன் அந்த அத்தியாயத்தில். "காலத்தின்மீது பிரமாணமாகக் (கூறுகிறேன்). நிச்ச யமாக மனிதன் மோசம்போனவனாகவிருக்கிறான். ஆனால், ஈமான்கொண்டு, நற்கிரியைகளைச் செய்து, சத்தி யத்தை ஒருவருக்கொருவர் உபதேசித்து, பொறுமையா யிருக்குமாறு உபதேசித்தவர்களைத் தவிர." குர்ஆனில் அடங்கியுள்ள அத்யாயங்களின் யாவற்றிலும் சிறியதான இந்த அத்தியாயத்தில் மோக்ஷம் விரும்பும் ஒரு முஸ்லிம் அனுஷ்டிக்க வேண்டிய நான்கு நிபந்தனைகள் கூறப்பட்டுள் ளன. ஒருவனது மோட்சம் இவைகளைப் பொருத்திருக் கின்றது. அவையாவன:—முதலாவது, ஈமான்; இரண்டா வது, அந்த பக்திக்கேற்ற அனுஷ்டானம். (ஸாலிஹான அமல்) இஸ்லாத்தில் பக்தியுள்ள ஒருவன் தொழுகைகள் நடத்துகிறான், ஏழைகளுக்கு பிச்சையிடுகிறான், ரம்ஜான் நோன்பு பிடிக்கிறான், ஹஜ்ஜுக்குப் போகிறான், யாருக் கும் தீங்கிழைக்கிறதில்லை. இவை மாத்திரத்திலா அவ னுக்கு மோட்சம் கிடைக்குமென நீங்கள் நினைக்கிறீர்கள்?

இல்லவே இல்லை; ஏனென்றால், குர்ஆன் கூறுகிறபடி, அவன் மூன்றாவது படியும் ஏறவேண்டும். அதாவது, ஒவ்வொருவரிடமும் சென்று சத்தியங்களை உபதேசித்தல் வேண்டும். நீங்கள் இக்கொள்கைகளைப் பிரசாரம் செய்தல் அவ்சியம். உங்களை மாத்திரம் மோட்சத்திற்கு ஏற்றிக் கொள்ள நீங்கள் பிறக்கவில்லை. உங்களை அண்டினவர்களுக்குங்கூட நீங்கள் மோட்ச நெறியைக் காட்ட வேண்டும். ஆதலால், முஸ்லிம் ஒருவன் செய்ய வேண்டிய மூன்று விஷயங்கள் யாதெனில்: (1) ஈமான் (2) நற்கிரியை (3) ஸத்திய உபதேசம். முஸ்லிம் ஒருவன் மற்றொரு முஸ்லிமைக் கொல்வது ஹராம் என்பதை தான் நம்புகிறதாகக் கூறிக் கொண்டு, அவனே சென்று மற்றவனைக் கொலை புரிந்தால், அவனுக்கு மோட்சம் கிடைக்காமலிருக்கலாம். ஆனாலும், அப்படியிருப்பினும், அவன் தன்னை ஒரு பாபியென உண்மையாக நம்பினால், அவன் ஒரு முஸ்லிம்தான். அவன் அதை ஹராம் அல்லவெனக்கூறினால் குர் ஆனைத் திருத்துகிறது ஆகிறது. அப்போது அவன் காபிர் ஆகிவிடுகிறான். ஆனால், அவன் அதை ஹராம் என நம்பி, மற்றொரு முஸ்லிமைக் கொல்கிறதில்லை என வைத்துக் கொள்வோம்; அப்படி யிருந்தும், பிறர் அவனைக் கொலை செய்ய, இவன் சோம்பலாய் உட்கார்ந்திருப்பின், இவனுக்கு மோட்சம் கிட்டாது. ஆனால், இவன் சோம்பலின்றி, அது ஹராம் என பிறரிடம் சென்று உபதேசித்து, உபதேச பிரயத்தனங்கள் பலிக்காவிடினும்கூட, அவனது பிரசாரத்தில் தீவரக் குறைவில்லையேல், அவனுக்கு மோட்சம் உண்டு. அவனது பிரசாரம் பலனற்று, ஸெக்ஷன்கள் 505, 117 காரணமாக அவனுக்கு கஷ்டம் ஏற்பட்டு, அவன் ஜயிலுக்குப் போக நேரிட்டால், அவன் யாது செய்கிறது? அப்

போது அவன் பொறுமையாகவே இருக்கவேண்டும். அவனைத் தூக்கிலிட்டு, இழுத்து, நான்கு துண்டாய் வெட்டலாம்; அப்போதும் அவன் பொறுக்கத்தான்வேண்டும்; அவனது பிரசாரத்தில் அவன்கடைப்பிடித்து நிற்றல்வேண்டும். அப்போதுதான் அவன் நரகம் தப்பி, மோட்சம் பெறுவான். ஆண்டவன் சட்டத்தை ஒரு அசையேனும் மாற்ற, அவன் யத்தனிக்கக் கூடாது. அதன் பிரகாரம் அவன் ஒழுகி, வருகிற பலனை அனுபவிக்கவேண்டும்.

கனவான்களே, பரலோகஞ்சென்று அங்குள்ள ரம்பைகளை(ஹூறுல் ஈன்களை)த் தழுவுவது சுலபமான ஒரு காரியமல்ல. உர்தூ கவிஞர் ஒருவர் கூறுகிறபடி "அன்பெனும் பலிபீடத்தை நோக்கித் துணிவுடன் அடியெடுத்து வைத்தல் வேண்டும்." முஸல்மானுக விருக்கிறது சுலபமென ஜனங்கள் நினைக்கின்றனர். மீசையைக் கத்தரித்து, தாடியை நீள வளர்த்து, தொழுகைகளையும் நடத்தினுல் ஒருவன் முஸ்லிம் ஆய்விடுகிருன். இவையெல்லாம் அவன் செய்யவும் வேண்டும்; இன்னமும் அநேக இதர விஷயங்களையும் அவன் செய்யவும் வேண்டும். ஏனெனில், இவைகளை யெல்லாம் நாங்கள் செய்ய வேண்டுவது எங்கள் மதக்கட்டளையாகும். யுத்தத்திற்கு நான் போகக்கூடாது என்பதுமட்டில் போதாது. மற்ற முஸ்லிம்களிடமும் சென்று, அவர்களது சகோதரர்களுடன் யுத்தஞ்செய்யப்போதல் கூடாதென அவர்களுக்கு நான் உபதேசஞ் செய்தலும் வேண்டும்.

கூடுமான ஒவ்வொரு வழியிலும் நான் அவனுக்கு உபதேசஞ் செய்யவேண்டும். அவன் கையிலிருந்து நான் துப்பாக்கியைப் பிடுங்கிவிடவேண்டும், பலாத்காரத்தினுலுமல்ல, பலவந்தத்தினுலுமல்ல, எங்களது மார்க்க சட்டத்தைத் தெளிவுற விளக்குவதினுலேயே

பிடுங்கிவிடவேண்டும். மற்ற முஸல்மான்களோடு யுத்தஞ் செய்து அவர்களைக் கொல்லச் செல்லும் ஜனங்களை நாங்கள் செல்லவே விடாமல் தடுத்தால்தான் எங்களுக்கு நற்கதி கிடைக்கும்.

மனதைக் கலக்கிறவர்கள் உண்மையில் யார் ?

கனவான்களே, இந்த வழக்கில் விளங்குகிற கர்ணல் க்விர் போன்ற ஒரு ராணுவப் பெருமான் பம்பாய் சென்ருர். அவர் பெயர் கர்ணல் பீச், "பயனீர்" பத்திரிகையில் பிரசுரமாயிருக்கும் ஒரு தந்தி சமாசாரப்படி. இவர் ஸிம்லா விலுள்ள தனதிருப்பிடத்திலிருந்து இங்கு வந்து எனது தொழில் முறையி லமர்ந்துள்ளோரைச் சந்தித்தார்—ஒருக் கால் அவர்களது கடமைகளை அவர்கள் செய்யலாகாது என அவர்கள் மனதைக் கலக்கும் பொருட்டு சந்தித்திருக் கலாம்—(சிரிப்பு.) உள்ளூர் பத்திரிகையாசிரியர்கள் என்ன, செய்தி அனுப்புகிறவர்கள் என்ன, இன்னூர் போன்றவர் களை ஒரு வட்டமேஜை நாடாகக் கூட்டி, பல விஷயங் களுக்கிடையில், அலி சகோதரர்கள் கைது செய்யப்பட் டிருக்கிற விஷயத்தைப்பற்றி, இவ்விஷயமோ கோர்ட் நட வடிக்கையிலிருந்து வருகையிலே, இதைக் குறித்துப் பின் வருமாறு பேசினூராம்:—ராஜப் பிரதிநிதி ஸிம்லாவிலுள்ள இந்த உத்யோகஸ்தர் வரை இவ்வாறு செய்ய சுவாதீனம் உண்டுபோல் எனக்குத்தோன்றுகிறது. (சிரிப்பு. பத்திரிகை யிலிருந்து படிக்கிறூர்.) அலி சகோதரர்கள் கைதுசெய்யப் பட்டதைக் குறித்து, கர்ணல் பீச் என்பவர் சிப்பாய் என் னும் ஹோதாவில் சொன்னதாவது, சேனையை விட்டு ஓடின சிப்பாய் அவனை வசப்படுத்திச் சேர்க்கப்பட்ட எந்த கட்சிக்காவது அவன் உண்மையாய் இருப்பானூ வென்

பதைக் சிப்பாய்களின் மனதைக் கலைப்பார் யாவரும் ஒரு கணமேனும் யோஜிப்பார்களாக என்றனராம். பேஷ், கர்னல் பீச்! (சிரிப்பு) யாவற்றினும் சிறந்ததோர்கொள்கை! சிப்பாய்க்கேற்ற நல்ல புத்திதான் (சிரிப்பு). சிப்பாய் என்னும் தோரணையில் பேசாமல், ஒரு முஸ்லிம் என்ற ஹோதாவில் கலைக்கிறவர் எவர் என நான் ஒரு கேள்வி போடலாமா? இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் முதலில் ஆண்டவனது சிப்பாய்; அவனது முதற் கடமையினின்றும் ஏக பக்தியினின்றும் அவனைக் கலைக்கும் கர்னல் பீச், கர்னல் க்விர் போன்றவர்களே கலகக்காரர்களாவார்கள். ஆதியில் ஆண்டவன் சிப்பாய்களாய் விளங்கின இந்தப் பீச்சுகளும், க்விர்களும் அந்த சேனையை இப்போது முற்றிலும் விட்டொழிந்து தற்சமயம் ஒருவகையில் வசப்பட்டுச் சேர்ந்திருக்கும் கட்சிக்கு உண்மையாயிருப்பார்களா? மனிதனது முதற்கடமை அவனைப்படைத்த ஆண்டவனுக்காகும். ஆன்மாக்கள் மனித சரீரமெடுக்குமுன் (ரோஸமீதாக்கில்) அவர்களைப் பார்த்து ஆண்டவன் "நான் உங்களுக்கு ரட்சகன் அல்லவா" என, அவர்கள் எல்லோரும் ஒன்றாகவே "ஆம்" எனக் கூறினார்களென குர்-ஆன் கூறுகிறது. நல்லது. ஆன்மாக்களெல்லாம் ஒழியட்டும், கனவான்களே. ஸெக்ஷன் 120-A, 120-B யின் கீழ் அடங்கலான நீங்கள் வேண்டும் குற்றம் பொருந்திய சதியோசனைக்கு ஒப்பந்தமெல்லாம் அவ்வளவுதான். (சிரிப்பு). இல்லை, கனவான்களே, ஸிம்லாவிலுள்ள சேனை வாசஸ்தானத்திலிருக்கும் உங்கள் பீச்களும், மேற்றிசைத் தலைமையதிகாரம் வகிக்கும் உங்கள் க்விர்களும்தான் சிப்பாய்களை அவர்களது கடமையைச் செய்யவொட்டாது கலைக்கின்றனர். உங்களுக்கு ஏதாவது பக்தி இருப்பின், ஆண்டவ

னிடத்து உங்களுக்குக் கொஞ்சமேனும் ஏதாவது நம்பிக்கை இருப்பின், உங்களது முதற்கடமையும், பிரதம பக்தியும் கடவுளுக்கேயாகும். கிறிஸ்துவிடம் நம்பிக்கை வைப்பது கிறிஸ்தவர்களின் கடமையல்வா? கிருஷ்ண பகவான் மீது நம்பிக்கை வைத்து, அவர் நெறி நிற்பது ஹிந்துவின் முதற்கடமையல்லவா? அப்படியிருந்தும், ராஜபக்தியென்றும், ராஜவிசுவாசமென்றும் நாம் பேசிவருகிறோம். ஒரு ஆங்கிலேயன்—முஸல்மானல்ல—ஆனால் ஒரு கிறிஸ்தவன், மிஸ்டர் எச். ஜி. வெல்ஸ் என்பவர் இந்த மகா யுத்தத்திற்குப் பின்னர் ஒரு நூல் எழுதினார். அது பிரிட்டிஷ் ஜாதி முழுமையினரையும் குறித்து உருவகவணியாகும். அதை நீங்கள் யாராகிலும் படித்திருக்கிறீர்களோவென்பது எனக்குத் தெரியாது. "மிஸ்டர் ப்ரிட்லிங் என்பவன் அதைச் சாங்கோபாங்கமாய்ப்பார்க்கிறான்" என்று அப்புத்தகத்தின் பெயர். அவன் யாது பார்க்கிறான்? 'மிஸ்டர் பிரிட்லிங் என்பவன் ஒரு சாமான்ய ஆங்கிலேயன். இந்த கோரயுத்தத்தை அவன் சாங்கோபாங்கமாய்க் கவனித்ததின் முடிவு என்ன? மதம் என்பதுதான் முதன்மையிலும், முடிவிலும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். எவன் ஒருவன் மதத்திலேயே ஜனித்து, மதத்திலேயே மரிக்கவில்லையோ, அவன் ஸத்யத்தில் கழியவில்லை, வாழ்க்கையின் தத்வத்தைக் கண்டானில்லை. அவனது ஏக பக்தி—ஒரே கடமை—ஆண்டவனுக்கே யுரித்து. அவனுக்கு ஏதோகொஞ்சம் கௌரவம் கிடைத்திருக்கலாம், ஏதோ சொல்பம் ராஜபக்தி இருந்திருக்கலாம், ஆனால், இதர விஷயங்களைக் குறித்து—ஆண்டவனிடத்துள்ள பக்தி விசுவாசங்களைப்பற்றி—கவனிக்கப் புகுந்தாலோ, இந்த அற்பமான லௌகிக கௌரவம், ராஜபக்தி இவையெல்லாம் தீயிலிட்ட காகிதத்தைப்போல்

சுருண்டு நான்கு திக்குக்களிலும் சிதறிப்போய் விடுகின்றன. அல்லது கை யெல்லாம் கரியாய்ப்போகிறது. இதைத்தான் அந்த ஒரு சாமான்ய ஆங்கிலேயன் சாங்கோபாங்கமாய்ப் பார்த்து பகிரங்கமாய்ச் சொல்லுகிருன். இதர மகா யுத்தத்திற்குப் பிறகுதான் இந்தியாவில் ஆண்டவனது சட்டம் நம்மைப் பொருத்தியமட்டில் ஒரு புறமாய்த் துடைத்துத் தள்ளிவிடப்படுகிறது; ஏனென்ருல்,ஸெக்ஷன்கள் 123—B, 131, 505, 117—இவைகள் பிரகாரம் மனிதன் சட்டம்தான் முந்தி, ஆண்டவன் சட்டம் பிந்தி, என் நாட்டிற்கு சுய ஆட்சி கிடைத்ததும், என் நாட்டினர் எவரையும் அவர்களது உண்மையான பக்தியினின்று யாரும் கலைக்கவிடாமல் நான் கண்டிப்பாய்க் கவனிப்பேன். ஆனுல், ப்ரிட்டிஷ் இந்தியாவில் நான் வாழ விரும்புகிற வரையில், ராணியின் பிரகடனையினது ஆதரவை நாட எனக்கு உரிமையுண்டு. நான் ஒரு ஹிந்துவாகயிருந்தாலுங்கூட, இதையே தான் கூறியிருப்பேன். கிறிஸ்து யாது சொல்லியிருக்கிறதாக கூறப்பட்டுள்ளதென்ருல் (இவ்வாக்யத்திடையில் கச்சேரி கலைந்தது).

மௌ. மு. அலி:—நல்லது, கனவான்களே, கிறிஸ்துவைப்பற்றி பேச ஆரம்பிக்கையில் கச்சேரி கலைகிறது. அவர் கூறியுள்ளது யாதெனச் சொல்லுகிருர்களோ அதை நாளைக்கு நான் உங்களுக்கு எடுத்துரைப்பேன்.

அக்டோபர் 27உ நடவடிக்கைகள்

மௌலானு முஹம்மதலி அவர்கள் ஜூரர்களைநோக்கிச் செய்யும் பிரசங்கத்தைத் தொடர்ந்துகொண்டு சொன்னதாவது:—

ஜூரர்களாய் விளங்கும் கனவான்களே,

1858ம் ஆண்டில் மகாராணியார் ஒரு பிரகடனம் வெளியிட்டனர். ஷை ராணியாரினது பிரகடனத்தின் 50-வது ஆண்டு விழாவின்போது காலஞ்சென்ற எட்வர்ட் அரசர் அவரது பிரகடனத்தில் அது உறுதியாக்கப்பெற்றது. ஜார்ஜ் மன்னர் சிம்மாசனம் ஏறிய பின்னர் இந்திய ஜனங்களுக்கும், சிற்றரசர்களுக்கும் விடுத்த கடிதங்களிலும் கூட அது உறுதி செய்யப்பட்டது. இப்பிரகடனமானது இந்தியாவிலுள்ள மாட்சிமை தங்கிய அரசனின் குடிகளுக்கு அவர்களது மதசம்பந்தமான நம்பிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் சட்ட ஆதரவு அளித்தது. நம்முடைய வழக்கு பூராவும் அவ்வளவுதான் என்று நான் உங்களுக்கு கூறிக்கொண்டிருந்தேன். பீனல் கோட் பிரகாரம் குற்றம் எதாயிருப்பினும், எந்த கோட் பிரகாரமாயிருப்பினும் சரி, எவனோ ஒருவன்—ஹிந்து, முஸல்மான், கிறிஸ்தவன் யாரானாலும் சரி—அவனது மதப்பிரகாரம் ஒரு விஷயத்தைச் செய்தால், அது பிரிட்டிஷ் இந்தியாவில் பலாத்காரத்தால் அமுலிலிருந்து வரும் பீனல் கோட், அல்லது மற்ற எந்தச் சட்டப்படிக் குற்றமாயிருப்பின், அச்சட்டம் அவனது பாதையில் குறுக்கிடாது, அவன் தண்டிக்கப்படவும் முடியாது. இம்மூன்று பிரகடனைகளில் கூறியுள்ளபடி சட்டம் அவனுக்கு ஆதரவு அளிக்கிறது. ஆனால், நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுவது, அவனது வார்த்தையல்ல. அது அவனது மதாசாரமென அவன் ருசுப்படுத்த வேண்டியது; அவன் அதை விவரித்தல் அவசியம். நேற்று நான் தங்களுக்குக் கூறியிருக்கிறபடி, இவ்விசாரணையானது உண்மையில் மிகவும் முக்யமான ஒரு விசாரணையாகும்; ஏனென்றாலோ, யாவற்றிலும் கடைசியாக, இதில் சம்பந்

தித்தும், தெளிவுற விசாரணை செய்து முடிவுக்கு வரவேண்டிய விஷயம் யாதெனில், ஆண்டவனது சட்டம் வியவகாரத்தில் இருந்துவருகிறது சிறந்ததா அல்லது மனிதன் சட்டம் ஆண்டவன் சட்டத்தின்மீது குதிரை ஏறுவதா?—மகாராணியின் பிரகடனத்திற்கு ஏதாவது மதிப்புண்டா?—அரசனது தீவரமான வாக்குக்கு ஏதாவது மதிப்புண்டா, இல்லையா?—ஜூரர்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களா, அல்லவா என்பதுதான். நீதிபதியவர்கள் என் வழக்கைத் தொகுத்துக் கூறிய பின்னர், நான் அதை விரித்துக்கூற இயலாது. அவர் எவ்வாறு தொகுத்து கூறுவாரோ அறியேன். ஆனாலும், இவ்விஷயத்தில்தான் நீதிபதியவர்களின் தொகுத்துக் கூறல் முக்கியமாயிருக்கும். நான் கூறுவதும், பப்ளிப்ராஸிக்யூடர் கூறுவதும் சட்டமாகாது. ஆனால், நீங்கள் அதை நீதிபதியிடமிருந்தே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், ஜூரர்களாய் விளங்கும் கனவான்களே, இதே சந்தர்ப்பத்தில் நீங்கள் அறிந்துகொள்ளவேண்டியது யாதெனில், ஒரு ஹிந்துவுக்கோ, அல்லது ஒரு முஸல்மானுக்கோ, அல்லது ஒரு கிறிஸ்தவனுக்கோ ஆண்டவனுக்கு அவன் இயற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய—செய்யாவிடில் அவனுக்கு விளையும் கஷ்டங்கள், ஏற்படும் தண்டனைகள்—இவ்வுலகத்ததாய் இல்லாவிடினும், மற்றொரு மறு உலகத்ததாயிருக்கலானவை—இவைகளைக் கொண்டு நிர்ப்பந்தித்து அவனது மதம் செய்யச் சொல்லுகிற எதையும் அவன் செய்ய அவனுக்கு உரிமையை நீங்கள் இன்று இல்லையென்றால், அவனது மதப்பிரகாரம் அவன்செய்ய வேண்டியனவற்றைச் செய்ய நீங்கள் அவனுக்கு இடங்கொடாவிடில், மகாராணியாரினது பிரகடனையால் அளிக்கப்பட்டதும், இந்நாட்டில் அனுபவித்து வரப்படுகிறதுமான மத சுதந்தரத்தை

யழிப்பதில் நீங்களே கூட்டாளியாகுவீர்களென்று நான் இப்போது கூறுகிறேன். குறித்த ஒரு மதத்தைப்பற்றிய கேள்வியேயல்ல—ஹிந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், யூத மதத்தைப்பற்றிய கேள்வியேயல்ல. ஒவ்வொரு மதமும், நம்பிக்கையிற்றவன் மதம்கூட, நாஸ்திகனது மதம்கூட—ரட்சிக்கப்படவேண்டியிருக்கிறது—ஆனுல், இவர்களது சுதந்திரம் எடுபட்டுப்போய்விடும். இதற்கு நீங்கள் உடந்தையா என்று தான் நன் உங்களைக்கேட்கிறேன். மிஸ்டர் எச்.ஜி. வெல்ஸ் என்பவர் அவரது "ஆண்டவன் கண்ணிற்குப் புலப்படா அரசன்" என்கிற நூலிலும் "அத்யக்ஷ குருவின் ஆத்மா" என்ற அவரது மற்ெருரு நூலாகிய கற்பனைக்கதையிலும், யாது கூறியுள்ளார்? என்பதைக்குறித்து நேற்று நான் உங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தேன். அவர் எழுதுகிறதாவது: "ஸீஸருக்குரித்தானதை ஸீஸரிடம் கொடுத்துவிடு, ஆண்டவனுக்குரித்தானதை ஆண்டவனிடம் ஒப்படைத்துவிடு" என்கிற வசனம் யேசு கிறிஸ்து நாதர் (அவருக்கு அமைதியுண்டாவதாக) கூறியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. பிறகு அவரது கேள்வியாவது:—இவ்வுலகத்தை ஆண்டவனுடன் பங்கிட்டுக்கொள்ள விரும்பும் இந்த ஸீஸர் யாவன்? ஸீஸருக்கு உரித்தாயிருக்கிறதும், அதே நேரத்திலேயே ஆண்டவனுக்கு உரித்தாயிராமலிருக்கிறதுதான் என்ன? ஒரு பாகம் ஆண்டவனுக்கு உரித்தானது; மற்றது ஸீஸருக்கு உரித்தானது; என்று இருபாகங்களாக இவ்வுலகம் பிரிக்கப்பட்டு இல்லை, இல்லவே இல்லை. ப்ரென்ட்போர்ட் அரசர்கள் இருவரல்ல. ஆண்டவனேதான் ஏக சக்ராதிபதி. அரசனே, அல்லது மற்ற எந்த மனிதப்பிராணியோ, அவன் ஜனநாயக தேசத்தலைவனுயிருந்தாலும் சரி, நீதிபதியாயிருப்பினும் சரி, ஜஊரியங்கத்தினராய் விளங்கினும் சரியே, உங்க

ளிடமிருந்து அவர் எதை வேண்டினும், அவர் அதை ஆண்டவன்பொருட்டாகவும், ஆண்டவன்மூலமாகும் வேண்டுதல் வேண்டும். ஆண்டவனுக்குப்பிடித்தமற்ற எதையும் அவர்கள் உங்களிடமிருந்து வேண்டினால், அவ்வேண்டுகோள் இணங்கப்படமாட்டாது. ஆண்டவனது வேண்டுகோள் ஒன்றேதான் இணங்கப்பட வேண்டத்தக்கது. இதுதான் தற்காலிக லோக மதமாக விளங்கப்போகிறது, என்று மிஸ்டர் எச். ஜி. வெல்ஸ் கூறுகிறார். அவ்வாறு இது விளங்கினாலும் சரி, விளங்காவிடினும் சரி, இதுதான் ஒவ்வொரு முஸ்லிமின்மதம் என்பது மட்டும் நிச்சயம். எனது தனி நம்பிக்கையான எனது பிரமைகளையும், சுபாவத்தையும் குறித்தல்ல கேள்வி. ஆண்டவன் கூற்று எவ்வாறிருப்பினும், "உன் மதப்பிரகாரம் உன் நடக்கை இருந்து வரினும் நீ அவ்வாறு நடத்தல் கூடாது" என ஸர்க்கார் சொன்னால், அப்போது "நான் சர்க்காரையே தான் பின்பற்றி ஒழுகல் வேண்டும் என எந்த முஸல்மானாவது சொல்லமாட்டானா? இவ்விசாரணையில் சம்பந்தப்பட்ட எவனையாவது இவன் அவ்வாறு சொல்லுபவன் என்று சர்க்காராவது, பப்ளிக்ப்ராஸிக்யூடர் ஆவது ஒரு ஆளைமுன் கொணர்ந்து நிறுத்துவார்களா? அவ்வாறு சொல்லும் முஸல்மான் ஒரு முஸல்மான் அல்லவென்றே நான் பட்டவர்த்தனமாய்க் கூறுவேன். இது ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், ஆஸ்திகர்கள் ஒவ்வொருவர் விஷயத்திலும் உண்மையேயென நான் நம்புகிறேன்.

அப்கனிஸ்தான அமீர் அவர்களைப் பற்றியது

பிரிட்டிஷ் இந்தியாவில் வாழும் ஒவ்வொரு முஸ்லிமும் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், அவன் எங்கே

குடியிருந்துவந்தாலும் சரி அவனுக்கு மாகாராணியாரின் பிரகடனத்தினுடைய ஆதரவு இருக்கிறது என்பதே, தேசத்தில் அமுலிலிருந்து வரும் சட்டதிட்டங்களை அனுசரிக்கத்தான் வேண்டும். ஆனாலும், அவனது மதத்துக்குப் பங்கம் வராமல் அனுசரித்தலவசியமாகும். இப்போது உங்களுக்குச் சொல்லிவரும் இவ்விஷயத்தையே தான் ராஜப்பிரதிநிதியிடமும் நாங்கள் சிறை சென்றபோழ்து சொன்னோம். நாங்கள் இதைச் செய்யலாம், மற்றதைச் செய்தல் கூடாது என்ற சில நிபந்தனைகள் மீது எங்களைச் சிறை விடுக்க அவர் விரும்பிய போது நாங்கள் அந்நிபந்தனைகளுக்கு இணங்குகிறோம், ஆனால் எங்கள் மதத்திற்கு பாதகம் ஏற்படல் கூடாது என்றோம். 1919ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் தேதியன்று நாங்கள் அடைப்பட்டிருந்த பெத்தூல் சிறை அதிகாரி மூலமாய் ராஜப்ரதிநிதிக்கு ஒரு கடிதம் அனுப்பினோம், அதில் நாங்கள் கூறியுள்ளதாவது : உலகத்துள்ள எங்களது பல வகுப்பினர்களையும் எங்களது மதமானது எவ்வாறுஒருமைப்படுத்துகிறதுஎன்றும், வியவகாரநிமித்தம் பலபோல் தோன்றிடினும் உண்மையில் மத ஒற்றுமையால் கட்டுப்பட்டதென ஸர்க்காருக்குத் தெரிந்திராமையால், விஷயங்கள் தெளிவு பெறக்கூறப்படல்வேண்டும்; அதாவது மனதுக்கு அதிகம் நன்ருய்ப் பதியாத ருசுவைக் கொண்டு ஒரு இஸ்லாமியன் மற்றொரு இஸ்லாமியன் மீது மாறான அபிப்பராயம் கொள்ளலாகாது. எங்களது முஸ்லிம் சகோதரர்கள் அன்னாரின் மதக்காப்பின் பொருட்டு ஆயுதங்களை ஏந்தினர்கள் இல்லை, முறை தவறியே கலகம் ஆரம்பித்த குற்றம் அவர்களதாகும் என்று எங்களுக்கு நிச்சயமாய்ப் புலப்படுகிறவரை நாங்கள் அவர்களுடன் சண்டையிடல் இயலாது.'' (1919ம்ஆண்டில் பிரிட்டிஷாருக்கும் ,அப்கானி

யர்களுக்கும் நடந்த யுத்தத்தை ஒட்டியதாகும் இது.) இப்போது எங்கள் நிலைமையாதெனில் : அமீருடைய கெட்ட எண்ணம்அல்லது பைத்தியத்தைக் குறித்தோ எங்களுக்கு, அதிக நல்ல ருசுக்கிடைக்காமல், இந்தியப்படை வீரர்களை முஸல்மான் சிப்பாய்கள் உள்பட, விசேஷமாய் எங்களது உதவியையும் தைரியமும் கொண்டு அப்கானிஸ்தானத்தை எதிர்த்து கைவசப்படுத்த நிச்சயமாய் விரும்போம், பிறகு விளையலாகும் குழப்பத்திற்கும் கலக்கத்திற்கும் ஆளாகோம். இவை மிஸ்டர் மான்டேகுவின் சொந்த வார்த்தைகளாகும்—முஸ்லிம் நாட்டைக் காலி செய்து விடல் வேண்டும், இஸ்லாத்தின் லௌகிக அதிகாரத்தில் எஞ்சியதைக்காப்பாற்றல் வேண்டும் என கும்பலில் கூச்சலிடோம்.

நாங்கள் இன்னம் கூறியுள்ளதாவது:—ஏப்ரல் 24 ம் தேதியன்று தங்களுக்குத் தெளிவாகவும் விஸ்தாரமாகவும் தெரிவித்துக் கொண்டிருக்கிறதைச் சுருக்கமாய் இது கூறியது கூறலாகும்.இதற்கு எங்கள் மதத்தில் நிரம்ப ஆதாரமுண்டு, இன்னமும் "பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமைத் தொழுகைக்கு வழக்கமாய் வரும் மாஜிஸ்திரேட், போலிஸ் உத்யோகஸ்தர் முன்னர் பல தடவை நாங்கள் இந்த நிலைமையைத் தெளிவுறச் செய்திருக்கிறோம், அமீர் அவர்கள் அவர்களது ராஜ்யத்தைப் பெரிதாகக் விருப்பங் கொண்டு நிரபராதியான நம் தேசத்தின்மீது கைவைத்தால், அவரை எஜமானுக என்றும் வேண்டாத நம் தேசக் குடிகளை அடக்கியாள அவர் நாடுவாராயின், இந்திய முஸல்மான்கள் அன்னருக்கு உதவிபுரிதல் கூடாது என நாம் கூறுவதுமன்றி, அப்பேர்ப்பட்ட துஷ்ட, கிறுக்கான வலுச் சண்டைக்கு எதிராக நாம் நின்று மிகவும் தீவிரமாக வாதாடி, நம்மால் இயன்றவரைத் தடையும் இயற்ற வேண்

டும். 1917ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முஹம்மதாபாத் கனம் ராஜா ஸாகிப் அவர்கள் சுண்டுவோடாவில் எங்களைக் காணவந்தபோது, அயல் நாட்டு வலுச்சண்டை ஏற்படலாகு மென குறிப்பிடுகையில் நாங்கள் அவரிடம் கூறியதும் இதுவே யாகும். அதன்மீது அவர் ஸிம்லாவிலிருந்த கனம் ஜின்னுவுக்கு தந்தி கொடுத்தார். எங்களது ராஜீய நோக் கம் இவ்வாறுகுமென ஸர்க்காருக்கு அறிவிக்கும் பொரு ட்டே இருக்கலாம். அரசாங்க மாற்றம் நாங்கள் வேண்டு வதில்லை; ஐக்கியப்பட்ட ஜனங்களுக்கு உத்தரவாதமுள்ள ஒரு அரசாங்கம் சீக்ரம் ஸ்தாபனமாக வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை; எவ்வாறுன சந்தேகமும், தப்பெண்ண மும் உண்டாக இடமின்றி; நாங்கள் விஷயத்தைத் தெளிவு றச் செய்தோமென நினைத்தோம்.''

ஆனுல், அமீர் மகாராஜா அவர்களுக்கு இந்தியாவோ டும், அதன் குடிகளோடும் சண்டையில்லையேல், செக்ரடரி ஆப் ஸ்டேட் பகிரங்கமாய்க் கூறியபடி, முஹம்மதிய உல கில் இருந்துவரும் ஒரு கிளர்ச்சியே அமீர் அவர்கள் நோக் கத்துக்குக் காரணமாயிருக்கு மாகில், இக்கிளர்ச்சியோடு மனமார்ந்த அனுதாபம் தனக்கு உளதென வெளிப்படை யாய்க் கூறியுள்ளார்; அதாவது, பலமற்றவர்களுக்கு ஏற்பட் டிருக்கும் மார்க்கமாகும் ஹிஜ்ரத்தை நாங்கள் சிந்திக்கக் காரணமானது மதாபிமானமே யாகும்; இவ்ஹிஜ்ரத்தே எங்களது சொல் சக்திக்கு ஏற்றது; இம்மதாபிமானமே அமீர் அவரது பலத்திற்கு ஏற்றபடி அவரை ஜிஹாத் செய்ய தீவரமாய் ஆலோசிக்கக் காரணமா யிருப்பின், இது இவரால் கூடுமானது; பலம், அதிபலம் என்பாருடன் இவர் போட்டி செய்தால், காலிபாவோடும், ஜிஹாத் செய்பவர் களோடும்; ஜஸீரத் - துல் - அரப் முதலிய பரிசுத்த ஸ்த

லங்களை அநீதியாய் ஆக்ரமித்து அவைகளை ஸ்வாதீனப் படுத்தி வைத்திருப்பவர்களோடும், இஸ்லாத்தைப் பல ஹீனப்படுத்த நோக்கங் கொண்டவர்களோடும், அதற்கு விரோதமாய் வித்யாசங் காட்டுபவர்களோடும், அவைகளின் கட்சியை எடுத்துப் பேச எங்களுக்குப் பூரண சுதந்தரம் கொடுக்க மறுப்பவர்களோடும், அவர் வாதாடுவோ ராகில், அப்போது, இஸ்லாமிய சட்டம் தெளிவுறக் கூறுவது யாதெனில்; முதலாவது, ஒரு முஸல்யான் அவருக்கு விரோதமாய் எவருக்கும் எந்த உதவியையும் ஆற்றல் கூடாது; அடுத்தபடி, இந்த ஜிஹாத் எந்த பிராந்தத்தை யாவது நோக்கிச் சென்று விட்டால் அப்பிராந்தத்துள்ள முஸல்மான் ஒவ்வொருவனும் முஜாஹிதீனைச் சேரவேண் டும்; அவனது அல்லது அவளது சக்திக்கு ஏற்றபடி அவர்களுக்குத் தன்னால் இயன்றவரை உதவி புரிய வேண்டும்.''

''இஸ்லாத்தின் தெளிவான சட்டம், மறுக்க முடியாத சட்டம் இதுவாகும். காலஞ் சென்ற அமீரது ஜீவிய காலத் தில், எல்லைப் புறத்தில் கலகம் என்ற பேச்சே இல்லாத சந்தர்ப்பத்தில், முஸ்லிமில்லாத அரசின் குடி முஸ்லிம் குடி ஒருவன், அவ்வரசுக்கு மாற்றாய் ஜிஹாத் ஏற்பட்டிருந் தால், அவனது மதக் கடமை எவ்வாறு என, எங்களது வழக்கை விசாரித்த கமிட்டியார் போட்ட கேள்விக்கு தெளிவாய் நாங்கள் பதில் கூறியுள்ளோம்.''

ஒரு முஸல்மானின் மதம்—அது என்ன ?

''இன்னும் ஒரு விஷயம் அதிகத் தெளிவுறுத்த வேண்டியதா யிருக்கிறது; இது இப்போழ்துதான் எங் எங்களுக்குத் தெரியவந்தது. அஃதாவது, இப்போது நாங்

கள் கூறலாக விருக்கும் கொள்கையானது முஸ்லிமல்லாதார் விசேஷமாய் உத்யோக கோஷ்டியில் எவ்வளவு தெரிந்து இருக்க வேண்டியதோ, அத்துணை சாதாரணமாய் தெரிந்தில்லை. ஒரு முஸல்மானின் மதமானது கொள்கைகளின் ஒருவரிசையை நம்பி, அந்நம்பிக்கைப் பிரகாரம் தான் நடப்பதில் மட்டும் அடங்கிவிடாது; தன்னுலியன்ற மட்டும், எவரையும் நிர்ப்பந்தம் மட்டும் செய்யாமல், குறித்தநம்பிக்கைகளையும், பழக்கங்களையும் ஏனையரும் அனுசரிக்குமாறு, தானும் வேலை செய்யவேணும். இஃது பரிசுத்த குர்ஆனிலும், திரு நபிகளின் சில ஹதீதுகளிலும் "அம்ரே மாரூப்—நஹி அனில் முன்கர்" என்று கூறப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தின் இந்த முக்ய கொள்கைக்கு ஹதீஸ் (traditions) பரம்பரைகளிலும் சம்பந்த மிருக்கிறது. நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளர் என்று ஒரு முஸல்மான் கூறமுடியாது; ஏனெனில், ஒரு விதத்தில் அவன் காவலாள்தான். பிறரையும்கூட தீயனவற்றை விலக்கி நல்லனவற்றின்படி ஒழுகுமாறு வேண்டிக்கொள்ளாவிடில், அவனுக்கு நற்கதி நிச்சயமன்று; ஆதலால், எந்த முஸல்மானுகிலும் இஸ்லாத்தின் முஜாஹித்துக்கு விரோதமாய்ப் போர்புரிய நிர்ப்பந்திக்கப் பட்டால் அவனுக்கு மட்டில்மனச்சாட்சியைப் பொருத்த தடையிருந்தால் மாத்திரம் போதாது; அவனுக்கு நற்கதி கிடைக்க வேணுமென அபிமானமிருப்பின், தனக்கு என்ன ஆபத்துக்கள் நேரிடினும், அவனது சகோதரர்களைக்கூட அவ்வாருன ஆட்சேபனை கூறுமாறு தூண்டவேண்டும். அப்போதுதான் அதுவரையன்று, அவனுக்கு நற்கதி கிடைக்க வழியேற்படலாகும். இது எங்களது நம்பிக்கையாகும். மற்ற ஒவ்வொரு முஸல்மானது நம்பிக்கையும் இதுவே.

ஏதோ எங்களால் இயன்றவரை, நாங்கள் இதன் பிரகாரம் நடந்துவருமாறு நாடுகிறோம். இக்கொள்கையைப் பிரசாரம் செய்யச் சுதந்திரம் எங்களுக்குக் கிடைக்காவிடில், இச் சுதந்திரம் இல்லாத நாடு இஸ்லாத்துக்கு ரட்சணையாகாது என நாங்கள் முடிவுசெய்து கொள்ளவேண்டும்.''

இப்போது, ஸர்க்காரின் மீது நாங்கள் கொணர்ந்திருக்கும் முதற் குற்றச்சாட்டு இதுவாகும். மகாயுத்தத்தின்போது முஸல்மான்கள் அவர்களது மதக்கடமைகளை அசட்டை செய்து கலீபாவுக்கும், ஜிஹாதில் அமர்ந்துள்ளோருக்கும் எதிராகப் போர்புரிவதில் சர்க்காருக்கு உதவி புரியுமாறு வேண்டிக்கொள்ளப்பட்டனர். வைஸ்ராய் யாது செய்தார் தெரியுமா? அரசனுக்கு மாறுகப்போராடினதென்று ஸெக்ஷன் 121ன் கீழ் எங்களைத் தூக்கிவிடவில்லை. 131வது பிரிவின்படி எங்களுக்குத் தீவாந்தர சிக்ஷை விதிக்கவில்லை. எங்களைச் சும்மா சிறைவிடுத்து, இதே இஸ்லாமிய சட்டத்தை இங்கிலாந்துசென்று, அங்குள்ள பிரதம மந்திரிக்கும், மந்திரிசபையிலுள்ள மற்றோருக்கும் விளக்குமாறு ஏற்பாடு செய்தனர். ஆனால், இப்போது அதற்காகவே குற்றம்வாய்ந்த சதியோசனையென நாங்கள் விசாரணை செய்யப்பட்டுவருகிறோம். எங்களது வழக்கில் விசேஷமான குற்றம் யாது! இதே விஷயத்தை இன்று கூறிக்கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கானவும், லட்சக் கணக்கானவுமான ஜனங்களைக் குறித்த வழக்கு எவ்வாறாகிறது? அவர்கள் என் எங்களுடன் இல்லை? குற்றச்சாட்டுகள் பொருத்தமுற இணைக்கப்படவில்லை என நான் குறை கூறியுள்ளேன்; ஏனெனில், அளவுக்கு மிஞ்சின குற்றவாளிகள் அளவுக்கு மிஞ்சின குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டு வருகின்றனர். ஆனால், இந்த மண்டபத்தில் போதுமான இட

மில்லை. எம்மண்டபத்தும் இடமில்லை. அது அவனது நம்பிக்கையும் கூடத்தான். அவனது தர்மமுந்தான் என்று கூறும் ஒவ்வொருவனையும் ஒன்றுகூட்டி விசாரிப்பதற்கு, அடிக்கடி நான் கூறியிருக்கிறபடி தனித்த ஒருவனது நம்பிக்கையைத் குறித்ததன்று அதுகேள்வி. தனித்த எனது சொந்த நம்பிக்கையைக் குறித்ததுமன்று அதுகேள்வி, ஆக்ஸ்போர்டில் கல்விபயில இங்கிலாந்து சென்று, ஆங்கிலேயர்களுடன் வாழ்ந்துவந்த யான்; ஆங்கில ஜனங்களோடு கூட மகா ஸ்நேகமாயிருந்த யான், நான் அதைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது; ஏனெனில், அது ஒரு மதக் கடமையாகும். எந்த முஸல்மானும் பிரிட்டிஷ் ஸைன்யத்தில் வேலையிலமர்த்தப்படக்கூடாது; அங்கே அவன் அதர்மம் ஓங்குவதற்காக, அவனது சொந்தச் சகோதரர்களையே கொலை புரிய நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறான், என நான் கூடச் சொல்லவேண்டியிருக்கிறது. நான் அப்போதும் அதைச் சொன்னேன், இப்போதும் அதைச் சொல்லுகிறேன், அது மதச்சட்டத்திற்கு மாறானதென்று அதை நான் அப்போது சொன்னேன், இப்போழ்தும் அதையே கூறுகிறேன், எப்போதும் அதையே கூறுவேன். அதற்காக நான் தூக்கிலிடப்படினும் பரவாயில்லை, நான் மாண்டுவிட்ட பிறகு அது முஸ்லிம்களது மதமாகும் (நம்பிக்கையாகும்) என என்சவம் குழியிலிருந்து உரக்கக் கூவும்.

இங்கே கோர்ட்டாரவர்கள் மத விஷயங்களைப்பற்றிய பிரசங்கத்திற்கு இடங்கொடுக்கலாகாது எனப் பொருள்படலான ஏதோ சிலவற்றைக் கூறி மௌலானாவைக் குறுக்கிட்டார்.

மௌ. மு. அலி:—குர்ஆனது சட்டம் இவ்வாறெனக் குறிப்பிட எனக்கு அனுமதிகொடுக்கமாட்டீர்களா? இது தான் சட்டமென என் குர்ஆன் கூறுகிறது. முஸ்லிம் ஒருவனுக்குச் சட்டமாவது அவனது குர்ஆன் அல்லவென நீங்கள் கூறிவிட அதிகாரமுண்டென்று சொல்லிவிடலாமே.

கோர்ட்டார்:—குர்ஆன் சட்டம் தேசத்தில் அமுலிலிருந்துவரும் சட்டமன்று.

மௌ. மு. அலி:—நான் செய்ததற்கு நியாயங்கூறுகிறேன். நான் செய்திருக்கிறதைச் செய்ததற்கு என் குர்ஆனின் ஆக்ஞை உண்டென்பதை மட்டில் நான் கூறுகிறேன்.

கோர்ட்டார்:—இது தேசத்தில் அமுலிலிருந்துவரும் சட்டமாகாது.

மௌ. மு. அலி;—நான் சம்பந்தப்பட்டவரை யாதெனில், என்சட்டம்தான் என்னைக்கட்டுப்படுத்தலான முதற் சட்டமாகும், இம்மூன்று பிரகடனைகளும் எனக்கு ரக்ஷிப்பு அளிக்கிறது என்றே கூறுகிறேன்.

கோர்ட்டார்:—இது உமக்கு விரோதமானதென்று நான் உத்தரவு பிறப்பிக்கிறேன்.

மௌ. மு. அலி:—அது எனக்கு பிரதிகூலமென்று நீங்கள் உத்தரவு பிறப்பிக்கிறதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமே. அரசனுக்கு மாற்றமாக நீதிபதி மட்டில் உத்தரவு போட்டாரில்லை; சமீபத்தில் சட்டசபையில் முஸ்லிம் மெம்பர் ஒருவர் ஸர்க்கார் உத்யோகஸ்தர் எவரும் விசேஷமாய் எந்த முஸ்லிம் சிப்பாயும் அவனது மார்க்கச் சட்டத்துக்கு மாறுக நடக்க உத்தரவிடப்படல் கூடாது என சர்க்காருக்கு, சிபார்சு செய்யவேண்டுமென்று ஒரு தீர்

மானம் கொணர்ந்தார். வைஸ்ராய் என்ன செய்தார்? அத் தீர்மானமே கொணரலாகாது எனத் தடுத்து விட்டனர்.

முதற் குற்றச் சாட்டு

ஆனபோதிலும், எங்கள் மீது சுமத்தியுள்ள முதற் குற்றச்சாட்டைக்குறித்து இப்போது பேசுகிறேன்; அது விஷயமாக நீங்கள் மதிப்பாளர் அஸெஸர்களாக மட்டில் இங்கு அமர்ந்திருக்கவேண்டியிருக்கிறது. ஆனாலும், எப்படியிருப்பினும், கனவான்களே, நான் உங்களை இப்போது அஸெஸர்களாக மதித்துப் பிரசங்கம் செய்திடினும், நான் உங்களிடம் பிரசங்கம் செய்யக் கூடுமெல்லவா? உங்களுக்கு அறிவித்திருக்கிறார்கள், நீங்களும் நேரில் பார்த்தும் இருக்கிறீர்கள். எப்போதாவது எவ்விதமான உடன்படிக்கை யாவது இருந்ததென ருசுப்படுத்த ஒரு சாக்ஷியாவது பெட்டியில் போடப்படவில்லை என்று. இங்குள்ள என் சிநேகிதர் அதை ஊகத்தால் அறிந்து கொள்ளும்படி உங்களைக் கேட்டுக் கொண்டார். என்ன ஊகம், கேவலம் இவ்வூகத்தின் பொருட்டா—கிஞ்சித்தேனும் இதற்குச் சாக்ஷி கிடையாது—சுத்தமாய் இல்லவே இல்லை—எங்களை நீங்கள் தூக்கிவிடப்போகிறீர்கள்?

எவனாவது—ஒரு சாக்ஷியாவது—நாங்கள் எதோ ஒரு குற்றஞ் செய்யச் சதியோசனையோ, ஒப்பந்தமோ செய்கிறதைப் பார்த்ததாவது, கேட்டதாவது, சந்தேகப்பட்டதாவது எப்போதாகிலும் உண்டெனக் கூறினனில்லை. 1920ஷு பிப்ரவரியில் நான் இங்கிலாந்தில் இருந்தேன்; கல்கத்தாவில் ஒரு கான்பரென்ஸ் கூடி, அதில் சில தீர்மானங்கள் நிறைவேறிய அன்றே இருக்கலாம். நான் ஸெக்ரடரி ஆப் ஸ்டேட் வேலையைத் தாத்காலிமாகக் கவனித்து வந்தவ

ரிடம் பேட்டி கொடுத்துப்பேசிக் கொண்டிருந்தேன். அது எனக்கு விரோதமான சாக்ஷியம். ஆனால், அதை நான் லக்ஷியம் செய்யவில்லை. எவிடன்ஸ் ஆக்டின் 10வது ஸெக்ஷனை பப்ளிக் ப்ராஸிக்யூடர் உங்களுக்கு வாசித்துக்காண்பித்தார். அது எனக்கு விரோதமான சாட்சியமாகச் சேர்க்கப்படும் என்று அந்த ஸெக்ஷன் கூறுகிறதாக அவர் உங்களுக்கு சொன்னார். ஆனால், ஆங்குள்ள என் அன்பார்ந்த சிநேகிதர் (பப்ளிக் பிராஸிக்யூடரைச் சுட்டிகாட்டிக் கொண்டு) ஏதோ சற்று அதிகமாகவே நீங்கள் செய்ய வேணுமெனக் கோருகிறார். அவர் மிகவும் சாமர்த்தியசாலி. ஆனாலும், அவர் நாட்டங்கொண்டிருக்கிறதை யான் அறிவேன். அது எனக்கு விரோதமான சாட்சியமாகச் சேர்க்கப்படும் என்று அவர் கூறினார். அவரது எண்ணம் அம்மட்டும் அன்று; ஒவ்வொரு விஷயத்தையும் வேத வாக்கான ஸத்யமாய் நீங்கள் ஒத்துக்கொள்வது கடமையாகுமென்றே. சாட்சியத்தின் ஒவ்வொரு துணுக்கையும் உண்மையெனவே சும்மா நீங்கள் நம்ப வேணும்; தவிர,குற்றம் பொருந்திய சதியோசனை என ருசுவாக்கவேண்டிய மற்ற ஒவ்வொன்றையும் ஊகித்துக்கொள்ளவேண்டும். இதைத்தான் அவர் உங்களை வேண்டுகிறார். ருசுவினாலாகவேண்டியது ஊகத்தாலாக வேண்டியிருக்கிறது. எங்களுக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தர தண்டனை கிடைக்க எந்த சாட்சியமும் போதும். கனவான்களே, சதியோசனையைப் பற்றிய எவ்விஷயமும் எனக்குத் தெரியவே தெரியாது: என் சகோதரர் அஸாம் சென்றதும் நான் அறியேன். பப்ளிக்பிராஸிக்யூடர் எழுந்து நின்று இதை ருசுப்படுத்த ஒரு சாட்சி கொண்டுவருவதாகக் கூறினவரை, அதைப்பற்றி எனக்குத் தெரியாது. என் சகோதரன் அங்கு சென்றிருக்கிறான் என்று அப்போது

தான் எனக்கு முதலில் தெரியவந்தது. அயோக்யன்! எனக்குத் தெரியாமல் அங்கே போகிறான், அதற்காக ஆயுள் பரியந்தம் தீவாந்தர சிட்சை. தம்பியாய்ப் பிறப்பது யாவற்றினும் கேடே (சிரிப்பு). ஆனாலும், அதுவும்கூட குற்றம் வாய்ந்த தீங்கு செய்ய ஒப்பந்தத்துக்கு ருசுவேயன்று. நீங்கள் அதை ஊகித்துக்கொள்ளக்கூடாது. அது ருசுப்படுத்தப்படல் வேண்டும். சந்தேகத்தின் சாயை கூட இல்லாமல் ருசுப்படுத்தப்படல்வேண்டும். கராச்சி கான்பெரன்ஸ் விஷயமாகவென்றாலோ, பேசவேயில்லை என்ற விஷயத்தில் என் சகோதரர் தப்பித்துக்கொள்ளமுடியும். ஆனாலும், பப்ளிக் ப்ராஸிக்யூடர் இக்குறையைக்கூட நீக்கிவிடக்கூடும். ஆஸ்த்ரேலியாவில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு பிள்ளை—கெட்டிக்காரப் பையனல்ல. ஜனங்கள் அவனை முட்டாள் என்றுகூட இரக்கமற்றுக் கூறினார்கள். அவனது முட்டாள்தனத்திலிருந்து அவன் தகப்பனார் அவனைக் காப்பாற்றிய எவ்விடத்தும், அவர் ஒருவித அவமானத்தில் மாட்டிக்கொள்வார். ஒரு தடவை ஒரு விருந்துக்கு அந்தத் தகப்பனார் அழைக்கப்பெற்றிருந்தார். மகன் பேசுவான், முட்டாள் எனக் கருதப்படுவான், இன்னமொரு முறை அவமானத்துக்காளாகவேண்டிவரும் என அவர் பயந்தார். ஒரு வார்த்தைகூடப் பேசுகிறதில்லையென பிள்ளை உறுதி கூறினான்.

ஆதலால், கடைசியாக, அம்மடையனை விருந்துக்கு அழைத்துப்போக அவன் தகப்பனார் உடன்பட்டார். மகன் அங்கு சென்றான், ஸௌக்யமான ஒரு மூலையிலமர்ந்தான். பற்பலர் பற்பல கேள்விகள் அவனைக் கேட்டார்கள். ஆனால்; அம்மகன் அவனது தகப்பனருக்கு உறுதிகூறியபடியே ஒருவார்த்தைகூடப் பதிலளிக்கவில்லை. மற்றொரு

கேள்வி அவனை ஒருவர் கேட்க, விருந்தினர்களில் ஒருவர் 'இவனுக்கு எக்கேள்விபோடுவதில் என்ன பயன்? அவன் ஒரு மடையன் என நீங்கள் அறியமாட்டீர்களா? என்றார். உடனேயே அம்மகன் மேஜையின் மற்றக் கோடியிலமர்ந்துள்ள தன் தகப்பனை உயர்ந்த குரலில் கூவியழைத்து, "தகப்பனாரே, தகப்பனாரே, அவர்கள் அதைக் கண்டுகொண்டுவிட்டனர். ஆனால், நான் வாயே திறக்கவில்லை" என்றனன். (சிரிப்பு). அவ்வாறே, பப்ளிக் ப்ராஸிக்யூடரும் கூட என் சகோதரர் பேசாமலிருந்தபோதிலும் கராச்சிக் கான்பரென்ஸில் அவரை ஒரு சதியோசனையாளரெனக் கண்டுவிட்டார்.

ஒப்பந்தம் அனுவசியம்

நாங்கள் விளையாட்டுப் பிள்ளைகளல்லவென பப்ளிக் ப்ராஸிக்யூடர் சொல்லியிருக்கிறார்; அவ்வார்த்தையைக் கொண்டே, கனவான்களே, நாங்கள் உண்மையாளர்களென கொள்ளலாகும். பிரமாண வாக்குமூலம் கொடுக்கும் சாட்சியாக நான் இப்போது விளங்காவிடினும், நான் சத்யமாகக் கூறுவது யாதெனில்—நீங்களும், நீதிபதியும் என் வார்த்தையை நம்பலாம்—எப்போதாவது எங்களுக்குள் பிரிட்டிஷ் ஸைன்யத்தில் முஸ்லிம் துருப்புகள் வேலை செய்வதைக்குறித்து இஸ்லாமிய சட்டம் பஹிரங்கமாய் வெளிப்படல் வேண்டுமென்ற பேச்சே கிடையாது. நீதிபதியவர்கள் என்னை இக்கேள்வி கேட்டார். எக்காலத்தும் பேச்சே இருந்ததில்லையெனப் பதிலளித்தேன். இதைப் பற்றி பேச்சே என் பேசல்வேண்டும்? கராச்சியில் கூடியுள்ள முஸ்லிம்களை நாளைக்கு நாங்கள் ஒரு கான்பரென்ஸ் கூட்டி, ஆண்டவன் ஒருவனே தவிர, ஏனைக்கடவுளில்லை;

முஹம்மது அவனது தூதர் என்று பகிரங்கமாய்ச் சொல்கிற தாக வைத்துக்கொள்வோம். இதற்கு நாங்கள் ஒன்றுகூடி உட்கார்ந்து, ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுவது அவசியமென்று நீங்கள் கருதுகிறீர்கள்? நான் ஒரு முஸல் மான் என்று சொல்லுகிற அந்த க்ஷணத்திலேயே அவ்வொப் பந்தம் இருக்கிறது. ஆனால், அதற்கு எந்தக் கால அளவும் இருத்தல் முடியாது. 1920 பிப்ரவரிக்கும் 1921 செப்டம்ப ருக்கும் இடையில் மட்டும் இருக்க இயலாது. (மிஸ்டர் ராஸ் ஆல்ஸ்டனைச் சுட்டிக் காட்டிக்கொண்டு) குற்றச் சாட்டின் கால அளவுக்கு கூடுதல் அதோ இருக்கிற என் சிறிய நண் பரது விசேஷித்த கொடையென்று உங்களுக்குத்தான் தெரியுமே. எங்களை ஸெஷன்ஸ் கோர்ட்டிற்கு அனுப்பி வைத்த மாஜிஸ்திரேட் முன்னர் 1920 ஐப்பற்றிப் பேச்சே இல்லை. இஃது குற்றச் சாட்டிற்கு என் அற்ப நண்பர் இயற்றிய அற்ப மாறுதலாகும். அதாவது, எங்கள் மீது சுமத்தியுள்ள சதியோசனை என்ற குற்றச்சாட்டின் காலத்திற்கு 12 மாதகாலம் கூடுதல்தான். ஆகையால், நம்புங்கள் என்னை, நாங்கள் முஸல்மான்கள் என்கிற ஒப்பந்தத்தைத் தவிர, வேறு ஒப்பந்தமில்லை. ஒவ்வொரு முஸல்மானும், அவன் ஒரு முஸ்லிம் என்றும் எங்களது நபி ஹஜ்ரத் முஹம்மது—ஆண்டவனது ஆசியும், அமை தியும் அவரதாக—அவர்களுடைய கூற்றுகளையும், கூறிய வண்ணம் செயல்களையும் ஒத்துக்கொண்டும் இருக்கி ருனே, அந்த க்ஷணமே அவன் நியாயமான காரணமின்றி முஸல்மான்களை எதிர்த்துச் சண்டையிட்டுக் கொலை புரியும் ஸைன்யத்தில் வேலையிலமரவோ, அமர்ந்த வேலையில் நிலைத்திருப்பதோ மார்க்க சட்ட விரோத மென்றே ஒப்புக்கொள்கிறுன். ஜமிய்யத்துல் உலமா

கான்பரென்ஸில் நடந்தேறிய தீர்மானத்தைக் குறித்தென்ன வென்றுலோ,அவர்கள் நிறைவேற்றியதும்,வெளிப்படையாகத் தெரிவித்ததும் புதிதாக ஒன்றுமல்ல. முஸல்மான்களைக் கொல்வது யாவருமறிந்த இஸ்லாமிய சட்டத்துக்கு விரோதமென்று பகிரங்கமாய்க் கூறுவதற்கும், ஒரு பத்வாவில் கையொப்பமிடுவதற்கும், நீதி முறையில் ஒரு தீர்மானம் அளிப்பதற்கும், உலமாவுக்கும், என்னபேச்சோ, ஒப்பந்தமோ வேண்டுவது? அம்மாதிரியாகவே, இங்குள்ள தீர்மானத்தைக் குறித்துப் பேசுமுன் எங்களது ஸகக்குற்றவாளிகளாய் விளங்குகிற இரண்டு முஸல்மான்களுக்கும், எந்தப் பேச்சுதான் அல்லது ஒப்பந்தம்தான் தேவை? ஷரீயத்தைப் பகிரங்கமாய் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டனர். அவர்களும் அவ்வாறே கூறினுர்கள். சேனை சம்பந்தப்பட்டது தீர்மானமன்று; சட்டப்பிரகடனையேயாம்.

அங்கோரா அரசாங்கத்திற்கு மாறன விரோதச்செயல்.

ஆனுலும், ஒரு தீர்மானங்கூட இருந்தது. பயபக்தி விளக்கும் திடமான தீர்மானமாகும்: அஃதாவது, பிரிட்டிஷ் அரசாங்கம் நேர்முகமாவது, ஜாடையாகவாவது, ரஹஸ்யமாகவாவது, பகிரங்கமாகமாவது, அங்கோரா அரசாங்கத்திற்கு எதிராக ஏதாவது விரோத நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால், இந்தியாவிலுள்ள முஸல்மான்கள் காங்கிரஸுடன் கலந்து ஸிவில் டிஸ்ஒபிடியன்ஸ் (ஸாத்விக எதிர்ப்பு) நடத்தவேண்டிவரும்,டிஸம்பரில் அஹ்மதாபாதில் நடந்தேறலாகும் வருஷாந்தர காங்கிரஸ் கூட்டத்தில் இந்திய சுவதந்திர (ஸ்வராஜ்ய) த்தைப்பற்றி ஒரு பிரகடனஞ் செய்யவேண்டிவரும், குடியரசு ஸ்தாபனத்தைக் குறித்தும் பிரகடனம் பண்ணவேண்டிவரும். கனவான்களே, பிரிட்டி

ஷாரது அங்கோராவுக்கு விரோதமான பகிரங்கச்செயல் களுக்கு மாத்திரமல்லாமல், ரகஸ்யச் செயல்களுக்கும் கூட-பிரிட்டிஷாரின் நேர்முகமான காரியங்களுக்கு மாத்திர மன்று, கிரேக்கர்கள் மூலமான ஜாடையான நடவடிக்கை களும்கூட—நாங்கள் ஏற்பாடு செய்துவைத்திருந்தோம். ஆம், ஆங்கிலேயரின் ராஜ்ய தந்திரம் எங்களுக்கு வெகு நன்ருய்த் தெரியும். அஸோஸியேஷன் உதைப்பந்து விளையாட்டிற்கும் ரக்பி உதைப்பந்து விளையாட்டிற்கும், ஆக்ஸ்போர்டில் யாது வித்யாஸம் கூறுகிருர்களென்ருல்:— "ஸக்கர்" என்கிற விளையாட்டில், பந்தை உதைக்கமுடியா விடில், ஆளை உதைக்கவேண்டியது; "ரக்கர்" என்கிற விளையாட்டில், ஆளை உதைக்க முடியாவிட்டால், பந்தை உதைக்கவேண்டியது (சிரிப்பு). இங்கிலாந்தில் என்ன அபிப் பிராயமென்ருல், மற்ற ஒவ்வொரு ஜாதியையும், விசேஷ மாய் துருக்கியர்களை ஒழித்துவிட வேண்டியது. ஆனல், ரக்கரைப்போல் சட்டம் என்னவென்ருல், போர்புரியப் பிறர் அகப்படாவிடில்தான், தங்களுக்குள் சண்டைபோடு வார்கள். (மறுபடியும் சிரிப்பு.) கனவான்களே, அங்கோரா ராஜாங்கத்திற்கு மாருக விரோதங்கள் திரும்பவும் கிளம் பும் விஷயத்தில், இந்திய நாஷனல் காங்கிரஸுடன்—எங்களது நாட்டினரான ஸகாக்களுடன்—கலந்து ஸாத்விக இயக்கம் (ஸிவில் டிஸ்ஒபீடியன்ஸ்) ஆரம்பிப்பது எங்கள் கடமையாகும் என்றனம். இவ்வாருன விஷயம் நடந்து கொண்டே போனல், எங்களது கடமையாவது யாதுதா னெனில், மகத்தான பொறுப்பாய் விளங்கும் கடமைதான் யாதெனில், நாங்கள் அதை ஒரு அற்ப விஷயமாய் கருத வேயில்லை, நாங்கள் எடுத்துக்கொள்ளத் தீர்மானித்த கனத்த பொறுப்பாகும். அஃது, இந்தியாவின் பூரண ஸ்வர்

திரம், ஸ்வாதீனம் என்று பகிரங்கக் கூற்றாய் விளங்கும் பொறுப்பு—இந்தியாவில் ஒரு சுவாதீனக் குடியரசு ஸ்தாபனம் ஒரு பரிகாசமாகவாவது, கேவலம் ஒரு முரட்டுத்தனமாகவாவது, குஷியாயுள்ள ஒரு சமயத்திலாவது இஃது உரைக்கப்பெற்றதன்று. உண்மையில், இஃதோர் மிகவும் தீவரமான விஷயமாகும். நாங்கள் செய்யப் புகுந்திருக்கிறது என்னவென எங்கட்குத் தெரியும். தாய்க்குப் பிள்ளையாய்ப் பிறந்திருக்கும் எங்கள் ஒவ்வொருவரும் தூக்கு மேடை ஏறிட நேரிடலாம். இம்மண்டபத்திற்கு எங்களை இட்டு வந்து, நீதிபதி, ஜூரி முதலிய இவ்வாடம்பரங்கள் நிறைந்த விசாரணை என்ற ஒரு கூத்து இன்றி, எங்களைச் சுட்டிருந்திருக்கவும் கூடும். நீண்ட, இந்தச் சுற்று பிரயாணத்திற்குப் பதிலாக, ஒரு குறுக்குவழி இருக்கக்கூடும்—தண்டனை இல்லை, நீதிபதி இல்லை, ஜூரி இல்லை. ஆனால் மட்டும்; கர்னல் க்விர் அல்லது கர்னல் பீச் தலைமையின்கீழ் பொழுது புலரும் நேரத்தில் ஒரு துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யும் கோஷ்டி, துப்பாக்கிகளின் கலவரம், யாவத் விஷயமும் முடிவு. அப்படிக்கிருந்தும், நாங்கள் இதைப் பகிரங்கமாகவே சொன்னோம்; அந்தத் தீவரமான விஷயத்தை யோஜித்தே, நாங்கள் எங்களது நாட்டினரான ஸகாக்களுடன் கலந்து இவ்விரண்டு விஷயங்களில் ஒன்றையாவது, இவ்விரண்டையுமாவது நாங்கள் செய்வோம். இவ்வாறிருந்தும், வழக்கு அதற்காக அன்று. தீர்மானத்தின் முந்திய பாகத்திற்காகத்தான்; வழக்குத் தொடருமாறு உத்தரவு பிறப்பித்த ஸர்க்கார் உத்தரவில் இஃது தான் எடுத்துக் கூறப்பட்டுளது. ஆனாலும், தீர்மானத்தின் முந்திய பாகம் முழுமையும் கூறப்படவில்லை. தீர்மானம் யாதுதானென்றால்:—மேலும் இக்கூட்டம் தெளி

வுறப் பகிரங்கமாய்க் கூறுவது யாதெனில், இஸ்லாமிய ஷரீயத்தின் பிரகாரம் பிரிட்டிஷ் ஸைன்யத்தில் வேலையிலமர்வதோ, சிப்பாயாயிருப்பதோ, அல்லது ஆள் சேர்த்துக் கொடுக்கிறதோ கண்டிப்பாய்க் கூடாதெனத் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், குற்றச்சாட்டு என்னவென்றால், இஸ்லாமிய சட்டத்தை நாங்கள் பகிரங்கமாய்ச் சொன்னோம், முஸ்லிம்களது சட்டத்தை வெளிப்படையாய்க் கூறுதலே குற்றமாயின், கனவான்களே, அப்படிச் சொல்லலாமே. விஷயம் இப்படியாயின், கிறிஸ்தவ சமய சட்டங்களை நீங்கள் யாவருமறியக் கூறிடின், அதுவும்கூட ஒரு குற்றம்தான். தங்களது சொந்த மதக் கட்டளைகளை அனுஷ்டித்துவரும் ஹிந்துக்கள் ஹிந்துசட்டத்தை வெளிப்படுத்தின்—அதுவுங்கூட ஒரு குற்றமாகும். ஆகையினாலே, இந்திய சிப்பாய் ஒருவனை அவன் பசுவைக் கொல்லக்கூடாதென பலர் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டால், அவர்கள் தீங்கமைந்த ஒரு குற்றஞ் செய்ய ஒப்பந்தம் பண்ணின குற்றம் வாய்ந்தவர்களாவார்கள்—அதாவது, குற்றம் பொருந்திய சதியோசனை இயற்றிய குற்றவாளிகளாவார்கள். இப்போது யான் கூறுவது யாதெனில், இவ் வெளிப்படைக் கூற்று ஒரு ஒப்பந்தமாகுமேல், இஸ்லாமிய சட்டத்தைப் பகிரங்கமாய்க் கூறுவது குற்றமாகில், நாங்களும் அப்படியானால் குற்றவாளிகளாயிருக்கின், கனவான்களே, அவ்வாறே சொல்லிவிடலாமே. ஆனால், இஃதைத் தீர்மானித்துவிட நீதிபதிக்குத்தான் அதிகாரமிருக்கிறது. மதிப்பாளர் அஸெஸர்களாகமட்டில் நீங்கள் உங்களது அபிப்பராயத்தைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. உங்களபிப்பராயத்தை எடுத்துக்கொள்கிறதும், தள்ளிவிடுகிறதும் அவரது பொறுப்பு. அரபியில் பழமொழி ஒன்று இருக்

கிறது. உன் மனைவியை எப்போதும் யோசனை கேள்; ஆனால், உனக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ அதையே செய் (சிரிப்பு). அஸெஸர்களைப் பொருத்த சட்டமும் அஃதேதானென்று சொல்வேன். (சிரிப்பு)—எப்போதும் உன் ஸம்ஸாரத்துடன் கலந்துகொள், அதாவது அஸெஸர்களுடன். ஆனால், நீங்கள் (நீதிபதி) உங்களுக்கு உசிதமாகத் தோன்றுகிறதைத்தான் செய்யவேண்டும். (சிரிப்பு.) கனவான்களே, ஆங்கிலேயருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இருமணம் குற்றமாகும். முஸல்மானுக்குக்கூட மனைவிகள் நான்கு மட்டுந்தான் உண்டு. ஆனால், இவ்வழக்கில் நீதிபதிக்கு ஐந்து பத்தினிகளிருக்கின்றனர். (சிரிப்பு). அவர்களை யோஜனை கேட்கவேண்டியிருக்கிறது. அப்படிக்கிருந்தும், நீதிபதி அவருக்கு உசிதமாக விளங்குகிறதைத்தான் செய்வார். நீதிபதியிடமே நான் இன்னம் முறையிட்டுக்கொள்வேன். எங்களுக்கிருக்கிறது போல் அவருக்கும் ஆத்மா ஒன்று இருக்கிறது. அஃது நற்கதி அடைய வேண்டும். என் சொந்த நிமித்தமாக நான் அவரிடம் எவ்வாறும் முறையிடவில்லை. என் பொருட்டு நான் ஜூரியிடம்கூட முறையிடவில்லை. அவர்கள் நிமித்தமாகவே அவர்களிடம் நான் முறையிடுகிறேன். இவ்விஷயமாக நான் சொல்லவேண்டிய எதையும் அவர்களிடம் நான் கூறியுள்ளேன். உங்கள் முன்னுள்ள விஷயங்களை (உண்மைகளை)க் கொண்டே நீங்கள் தீர்மானம் செய்ய வேண்டும், உங்களது தீர்மானம் புறம்பான செல்வாக்குக்குக் கட்டுப்பட்டுவிட்டதென யாரும் சொல்லாதிருப்பார்களாக.

மதியயக்க எத்தனித்ததாகக் குற்றச் சாட்டு

ஜூரியாய் அமைந்திருக்கும் உங்கள் முன்னர் இருக்கிற குற்றச் சாட்டுக்கு இப்போது நான் வருகிறேன். நீங்

களேதான் இங்கு நீதிபதி. இங்கு நீங்கள் கண் நோட்டமிடும் யாவற்றிற்கும் அதிபதிகளே. நீங்கள் கண்டுபிடிக்கும் விஷயத்தைப்பற்றி உங்களுக்குள்ளேயே அபிப்பராய பேதம் இருக்கலாகாது என்பது என் கோரிக்கை. உங்களது முடிவு எங்களுக்கு அனுகூலமானாலும் சரி, பிரதிகூலமாயிருந்தாலும் சரி, உங்களுள் மட்டும் அபிப்பராய ஒற்றுமை வேண்டும். ஆனால் மட்டும் ஒப்பந்தம் ஒன்று இருக்கட்டும். ஹிந்து ஜூரர்கள் இந்த முடிவுக்கு வந்தார்கள், கிறிஸ்தவ ஜூரர்கள் அந்த முடிவுக்கு வந்தனர், என்று யாரும் சொல்லக்கூடாது; ராலி சகோதரர்கள் என்ற க்ரீக் வியாபாரிகளிடம் வேலை செய்கிற கனவான்கள் இந்த அபிப்பராயம் கொடுத்தனர். போர்ப்ஸ் அண்ட். காம்பவில் வேலைசெய்யும் கனவான்கள் அந்த அபிப்பராயம் கொடுத்தனர் என யாவரும் சொல்லுதல் வேண்டாம். நீங்கள் ஒற்றுமைப்பட்டிருத்தலவசியம். இதுபோன்ற தீவரமான விஷயத்தில் நீங்கள் ஒன்று பட்டிருத்தல் நலமென்பது என் அபிப்பராயம். உங்களது சொந்த மனசாட்சியே உங்களுக்கு வழிகாட்டியாக விளங்கட்டும். ஏனெனில், எம்மதங்களுக்கும் அதுதான் அஸ்திவாரமாய் விளங்கும் சட்டமாகும். நீங்கள் ஒழுங்கான காரியத்தையே இயற்ற வேண்டும். உங்களது மனச்சாட்சி கூறுகிறபடியே ஒழுகல் வேண்டும். இவ்விஷயமாக இப்போது உங்களுக்கு மீண்டும் கூறுகிறேன். நீங்களே இங்கு ஏக அதிபதியாக விளங்குகின்றீர்கள்; நீங்கள் தீர்மானம் அளிக்கவேண்டிய குற்றச்சாட்டுதான் யாதெனில் "யத்தனம்" என்கிற விஷயம்; அதாவது ஸெக்ஷன் 131-வதன் கீழ். (ஸெக்ஷனைப் படிக்கிறார்). 'மகாராணியரது கப்பற்படை அல்லது சேனையிலுள்ள ஒரு உத்யோகஸ்தர் அல்லது சிப்பாய் அல்

லது மாலுமியால் செய்யப்படும் கலகத்திற்கு உடந்தையாக யார் இருக்கிறார்களோ, அல்லது உத்யோகஸ்தர், சிப்பாய், அல்லது மாலுமியை அவனது கடமையைச் செய்யவொட்டாது கலைக்க யத்தனிக்கிறார்களோ—இதுவேதான் எங்கள் மீதுள்ள குற்றச்சாட்டு—எங்கள்மீது சுமத்தப்படாத விசுவாசத்தை நான் விட்டுவிடுகிறேன்—தண்டிக்கப்படுவார்கள் இத்யாதி, இத்யாதி''

நீதிபதி:—துருப்புகளைக் கலைக்க யத்தனித்த ஒரு சதியோசனையினது அங்கத்தினர்களாக இருந்தீர்களென உங்கள் மீது குற்றஞ் சாட்டி யிருக்கிறது.

மௌ. மு. அலி:—சதியோசனை ஒன்றின் அங்கத்தினர்களாக விளங்கினேமென்று எங்கள்மீது குற்றச்சாட்டு அதாவது தீங்கு வாய்ந்த குற்றஞ்செய்ய ஒப்புக்கொண்டதாக குற்றச்சாட்டு. அச்சதியோசனையின்படியே, இச்சதியோசனை யிலடங்கிய சிலர், சிலசதியோசனைக்கூட்டாளிகள் இவ்விஷயங்களை யத்தனித்தார்கள். நாங்களே யத்தனித்திருந்தாலும் சரி, அல்லது வேறு சில ஜனங்கள் யத்தனம் செய்திருந்தாலும் சரி, பரவாயில்லை. உண்மையாகவே! நல்லது! பப்ளிக் ப்ராஸிக்யூடருக்கு உதவியாக இருந்து வருகிற ஐக்கியமாகாண அட்வொகேட் ஜெனரல், அலஹாபாத் மிஸ்டர் ராஸ் அல்ஸ்டன் ஆலஹாபாததில் யாரையோ பிடிக்கிறார்; எங்கேயோ எதையோ அவர் அச்சிலிடுகிறார், உலமா பத்வாவிலிருந்து அந்த யாரோ ஒருவரைக்கொண்டு பார்த்துத் திரும்ப எழுதச் சொல்லுகிறார்; இந்த லக்ஷணத்தில் அவருக்குக் குர்ஆனே சுத்தமாகத் தெரியாது. இஃதெல்லாம் ஜாக்கிரதையாகச் சொல்லப்படல் வேண்டும். பார்த்துஎழுதுகிறதற்கு அவர் ஒரு எழுத்து வாசனையற்ற மௌலவியைப் பிடிக்கிறார்—குர்ஆனில் இருந்து எதையாவது பார்த்து

எழுத வேண்டியிருப்பின் ஒவ்வொரு முஸல்மானும் பயப் படுகிறான், நடுங்குகிறான்.—ஏனெனில், ஏதோ வித்யாச மாய் அவன் எழுதிவிட்டால், அஃது ஆண்டவனதாகும் என்று தப்பாகக் கூறிவிட்டால்—அந்த மௌலவி பார்த்து எழுதுகிறான் அதை. மிஸ்டர் ராஸ் ஆல்ஸ்டனுக்காக அதைப் பிரசுரமும் செய்விக்கிறான். அலஹாபாத்திலோ அல்லது லாகூரிலோ அதை அச்சுப்போட்டுவிக்கிறான். அதே மாதிரியான லக்கோடாக்களையும் சம்பாதித்து விடு கிறான். பற்பல விடங்களிலிருந்தும், ஆனால் விசேஷமாக மிஸ்டர் ராஸ் ஆல்ஸ்டன் ஊராகிய அலஹாபாத்திலிருந்தும், கடிதங்கள் தபாலில் போடப்படுகின்றன (சிரிப்பு). இதற்கு நீங்கள் எனக்கு ஆயுள் பரியந்தம் தீவாந்திர சிக்ஷை விதிக்க வேண்டியிருக்கிறது. இவ்விஷயத்தைத்தான் நாங்கள் செய்திருக்கிறதாக கருதப்படுகிறோம். ருசு என்ன? இது தான் ருசு என்று பப்ளிக் ப்ராஸிக்யூடர் சொல்லுகிறார். சூரியன் புறப்பாடே சூரியனிருக்கைக்கு ருசுவாகுமென கவிஞர் ஒருவர் கூறுகிறார். அப்படியே இவ்வழக்கிலும்கூட இன்னம் யாது ருசு வேண்டும் நல்லது, குற்றச் சாட்டு யாதெனில், இத்துண்டு பத்திரிகைகள் முஸ்லிம் சிப்பாய் களுக்கு அனுப்பலானவை, அநேகமாய் அலஹாபாத்தி லிருந்தே தபால் மூலமாய் வந்தவை. ஏனெனில், சிலவை கான்பூரில் தபாலில் போடப்பட்டவை. குற்றவாளிகளில் ஒருவராகக் கருதப்படும் மௌலானா நிஸார் அஹ்மத் ஸாஹிப் அந்த ஊரினர்தான். பப்ளிக் ப்ராஸிக்யூடர் அவற்றை அவர்மீதும் எங்கள்மீதும் ஆரோபணம் செய்தார். நல்லது, மிஸ்டர் ராஸ் ஆல்ஸ்டனும் அவ்வூரார்தான். எங்க ளுக்கு விரோதமாய் வாக்குமூலமளித்திருக்கிற இரண்டு ஸி. ஐ. டி. உத்யோகஸ்தர்களும் அலஹாபாத்காரர்கள்

தான். நல்லது, இதிலிருந்து மிஸ்டர் ராஸ் ஆல்ஸ்டனே இதைச் செய்ததென நீங்கள் ஊகித்தறியலாகாதோ? (சிரிப்பு). இந்த பதார்த்தம் (துண்டு பத்திரிகையைக் காண்பித்துக்கொண்டு) யாருமறிய அனுப்பப்பெற்றால், இதுவே உங்களுக்குப் போதுமா? அறிவுள்ளவர்களாகிய உங்கட்கு, விவகாரம் தெரிந்த வியாபாரிகளாகிய உங்களுக்கு; எனக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தர தண்டனை விதிக்க உங்கட்குப் போதுமானதா?—என் குழந்தையை விட்டு என்னை நீக்கிவிட—என் மனைவியிடமிருந்து என்னை விலக்கிவிட, என் தாயிடமிருந்து என்னைப் பிரித்துவிட—எனக்கு அருமையாகவிருக்கிற என் நாட்டிலிருந்து என்னைச் செலுத்திவிட—ஆண்டவனது சேவையிலிருந்து என்னை ஒழித்துவிட, ஏனெனில், அவைகள் அநேகமாய் அலஹபாதில் தபாலில் போடப்பட்டன. குற்றமெல்லாம் இதுதான் அல்லவா? நீங்களே அதை வாசியுங்கள். சாட்சிய ரிகார்ட் பூராவிலும் இதைத் தேடிப் பாருங்கள். மனச்சாட்சியுள்ளவர்களாக நீங்கள் இருக்கின், உங்களது தீர்ப்புச் சரியாக இருத்தல் வேண்டும். மனச்சாட்சியுள்ளவர்களான நீங்கள்—காரணமின்றி ஒரு கொசுவையும் கொல்லமாட்டாதவர்களான நீங்கள்—அறுவர்களை நீங்கள் ஆயுள் பரியந்தம் தீவாந்தரமனுப்பப்போகிறீர்கள்-அறுவரல்ல, ஏனென்றால் குறைந்த பக்ஷம் நாங்கள் எழுவராயிருப்போமெனத் தோன்றுகிறது—எனது பூஜ்ய நண்பரான ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியாரும் முஸல்மான்களான எங்களுடன் வரலாகும். ஏனெனில், அவருக்கு விரோதமான சாட்சியம் இல்லை என்றாலும், சாந்தஸ்வரூபியான பப்ளிக்ப்ராஸிக்யூடரினது கோபாவேசத்தால் எல்லாம் சரிப்படுத்தியிருக்கிறது. நீங்களே அதைக் கண்ணுற்றீர்கள். உண்மையான புயலன்று, கவனியுங்கள்,

அப்பேர்ப்பட்ட சாதுவான ஒரு கனவானிடமிருந்து. ஆனுலும், ஒரு நல்ல போலிப்புயல், மின்னல், இடி, ஆலங் கட்டி, காற்று யாவையும் உண்டென எங்களுக்கு மனதில் அமையும்படியான அத்துணை உண்மை வாய்ந்ததுதான்—எல்லாம் எனது பிரிய, சாது நண்பர் அதோ இருக்கிருரே அவரிடமிருந்துதான் (சிரிப்பு). ஏதோசில லகோடாக்கள் இருக்கின்றன; சேனையிலுள்ள சில உத்தியோகஸ்தர்க ளுக்கு அவைகள் கிடைக்கலானவை. இந்த ருசுவைக் கொண்டா நீங்கள் எங்களை யெல்லாம் தண்டிக்கப் போகி நீர்கள்? உத்யோகஸ்தர்களாம். இதிற் சிறந்த இடக்கரடக் கல் வேறிருக்க முடியாது. ஆம், உத்யோகஸ்தர்கள், யுத்த களத்தில் தைர்யமும், நீடித்த உழைப்பும், பதக்கங்களும், அவர்களது மார்புகளில் தொங்கலாகும். உண்மையான அப்பதக்கங்கள் வெள்ளியினுலன்று. ஆனுல், அவர்கள் சம் பந்தப்பட்ட மட்டில் அன்னரது உடம்பிலும், மார்பிலும் அறிகுறியாய் விளங்கலான துப்பாக்கி ஈயக்குண்டுகளாகும் பதக்கங்கள். உண்மையில் உத்யோகத்தினர்கள்தான். ஆனு லும், அனுபவசாலிகளையும், நூறு யுத்தகளங்களில் தேறின வீரர்களையும் போலவே, நேற்று வந்த வெள்ளையனுக்கு—முகத்தில் மீசையே முளைக்காத கேவலம் சிறுவனுக்கு சிறு பெண்களுக்கிருக்கலான சிவந்த பூ மயிர்தான் முகத்திலிருக்கிறது—இப்பேர்ப்பட்டவனுக்கு தண்டமிட வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவர்களின் நிறம் கருமை. இவர்கள்தான் உங்கள் முன் வருகிருர்கள். உங்கள் எதிர் வந்து, இவ்விஷயங்களைச் சமர்ப்பிக்கின்றனர். மஹா பயங் கரமான விஷயம் நேர்ந்து விட்டதென்கின்றனர். ஓ! ஆயத்து—குர்ஆனிலிருந்து தவருகப் பார்த்தெழுதப்பட்ட ஒரு ஆயத்து எங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த

லகோடாக்களை திறந்து பார்க்காமலே துப்பாக்கி மருந்து மணம் வீசுகிறதென நாங்கள் வாசனை கண்டு பிடித்து விட்டோம். 1875-ம் ஆண்டின் மணம், எங்களது தலைமை உத்தியோகஸ்தரிடம் அவசரமாய் ஓடிச்சென்று யாங்கள் கூறியதாவது:—ஐயா—இஸ்லாத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள். எங்களது மனம் புண்ணாகி விட்டது; எங்களது மத உணர்வு புண்பட்டு விட்டது. எங்களுக்கு மதத்தை நினைவுறுத்துகிறார்கள். ஆண்டவனைக் குறித்து எங்களுக்கு மதத்தை ஊட்டுகிறார்கள். ஆண்டவன் பொருட்டு ஆண்டவனிடமிருந்து எங்களை காப்பாற்றுங்கள். ராணியின் பிரகடனை எங்களுக்கு ரட்சிப்பு அளிக்கவில்லையா? குர்ஆன் குண்டுகள் எங்கள் மீது பொழிகிறார்களே. எந்த பீரங்கிக் குண்டுகளையும் நாங்கள் தாங்கவல்லோம். ஆனால், இது மாத்திரம் வேண்டாம்.'' எங்களுக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தர சிக்ஷை விதிக்க இதுதான் சாட்சியாம்.

ஆனால், ஜூரர்களாய் விளங்கும் கனவான்களே, நீங்கள் என்னைக் காக்கவேணுமாய் நான் உங்களை வேண்டவில்லை. உங்களை நீங்களே காப்பாற்றிக் கொண்டால் எனக்குச் சந்தோஷம். இந்த ஒரே சாட்சியர்தான், வேறு அதிகம் இல்லை. இதை விட ஒரு அணுக்கூட அதிகம் இல்லை. யாதேனும் இருந்திருப்பின், நம் நண்பர் (பப்ளிக் ப்ராஸிக்யூடர்) உங்களுக்கு அறிவித்திருப்பார். எழுவருக்கு அவர் ஆயுள் பரியந்தம் தீவாந்தர சிட்சை கொடுக்கவேண்டியிருக்கிறது.—உண்மையில் அது ஒரு பெரியதும் நீடித்ததுமான தீவாந்தரம்தான். உங்களிடத்து அவர் நான்கு மணிநேரம் பேசினார்—அநேகமாய் ஒருநாள் பூராவுமே. இவ்வாறு ஒரு நாள் சம்பளம் அவருக்குக் கிடைத்து

விட்டது. அவரது தினசரிச் சம்பளம் உங்கள் யாவருடைய மாதச் சம்பளத்தைவிட அதிகமேபோல் (தடை)

நீதிபதி:—ஒருவரைக் குறித்துப் பேசுவதற்கு உங்களுக்கு உரிமையில்லை. அது நன்றாக வில்லையே? நீங்கள் அவ் வெண்ணத்துடன் பேசவில்லை யென்றே நான் நினைக்கிறேன்.

மௌ. மு. அலி:—எனக்கு வருத்தமாயிருக்கிறது. நீங்கள் எதைக் கூடாதென்கிறீர்கள்? ஜூரர்களது அற்பசம்பளத்தைக் குறித்தும், பப்ளிக் ப்ராஸிக்யூடர், அவரது சிறு நண்பர், இவ்விருவரது கொழுத்த சம்பளத்தைக் குறித்துப் பேசினேனே, அதுவா ?

நீதிபதி:—ஒருவரைக் குறித்துப் பேசுகிறது எதுவும் நன்றாகவில்லை. அல்லவா?

மௌ. மு. அலி:—மறுபடியும் அதைக் குறிப்பிட்டேன். உங்களது பீனல் சட்டத்துக்கு மாறாக அத்துணை குற்றங்கள் யான் இழைத்திருக்கையில், நாஸுக்குக்கு மாறாக ஒரே ஒரு குற்றம் இழைக்க அனுமதி யிருக்கு மென்றே எண்ணினேன் (சிரிப்பு).

(**நீதிபதி** ஏதோ சொன்னார், காதில் விழவில்லை) மௌலானா முஹம்மதலி இன்னம் சொன்னதாவது ?

நல்லது, கனவான்களே, நீங்கள் ஐவர் உங்களது வேலையை நிறுத்திவிட்டு ஜூரிகளாய் பிரமாணம் செய்து வந்திருக்கும் முக்கிய விஷயம் இதுதான். நல்லது, ராலி ப்ரதர்ஸிலிருந்தோ, அல்லது போர்ப்ஸ் அண்டு காம்பனிலிருந்தோ, அல்லது தீர்வைச் சாவடியி லிருந்தோ, நீங்கள் எங்கிருந்து வந்தாலும் சரி, நீங்கள் அக்கார்யத்திற்காகவே இங்கு இருக்கிறீர்கள். இல்லையேல், இரண்டு கனவான்கள் மட்டும்தான் அஸெஸர்களாகக் கொணரப் பெற்

றிருக்கலாகும். நீதிபதியின் மனைவிகளாக (சிரிப்பு.) இவ் வழக்கில்நீங்களேபதிகள், நீங்களே பத்தினிகள் இரண்டும் (சிரிப்பு). உங்களுக்குள்ளேயே ஸகல வியாபாரமும். நீங் களே இவ்வழக்கில் ஜூரிகள் என்ற முறையில் ஏகதேச நீதிபதி. மற்றுஞ் சில குற்றச் சாட்டுகள் இருக்கையிலுங் கூட—ஸெக்ஷன்கள் எத்தனை யென எண்ணக்கூட முடிய வில்லை—120—B, 117, 505, முதலிய ஸெக்ஷன்கள் இருக்கின்றன—இவைகளுக் கெல்லாம் நீங்கள் அஸெஸர் களாக மட்டில் விளங்குகிறீர்கள். உங்களுக்கு நினைவு இருக்கலாம். கராச்சிக்குப் போலிஸ்காரர்கள் என்னை அழைத்துக் கொண்டு வருகையில், அவர்கள் என்மீதுள்ள ஸெக்ஷன்கள் யாதென வினவ, நான் எல்லாக் குற்றச் சாட்டுகளையும் சொன்னேன்; அதற்கு அவர்கள், இவை யெல்லாம் தாங்களே செய்து கொண்ட ஸெக்ஷன்கள் தான் (சிரிப்பு), அவர்கள் இஷ்டப் பிரகாரம் எத்தனை வேணுமானாலும் உபயோகித்துக் கொள்ளலாம் என்றனர். ஆகையால், 131-வது ஸெக்ஷனுடன் 120—B ஸெக்ஷ னைப் படித்துப் பார்க்க—இது ஒன்றுதான் ஜூரி விசாரிக்க லான குற்றச்சாட்டு. பத்வாவிலிருந்து எடுத்து வரையப்பட் டுள்ள துண்டுப் பத்திரிகை சம்பந்தமாயுள்ளது இதுதான். இந்தப் பத்வாவிற்கு கை யொப்பமிட்டது ஜாமியத்துல் - உலமா. நாங்கள் மிகவும் கபடமற்றவர்க ளெனக்கருது கின்றனர். ஆகையால், நாங்கள் கீழ்க் கோர்ட்டிலும் சொன்னோம். இங்கேயும் சொன்னோம். கடைசியாக, ஜமியத் துல்-உலமா அன்னாரது கடமையைச் செய்கிறார்க ளென நாங்கள் களிப்பதாக. சதியோசனைக்கு ஜமியத்- உல்-உலமாவும் கூட்டாளி யெனக் கருதுகின்றனர், ஆனல், சர்க்கார் மிகவும் நிதானமுள்ளவர்கள். இவ்விசாரணைக்கு

மூன்று உலயாக்களை மட்டில் பொறுக்கி எடுத்திருக்கின்றனர். "எனக்கே என் நிதானத்தைக் கண்ணுற ஆச்சரியமாக இருக்கிறது" என்று க்ளைவ் பிரபு அவரது கொள்ளையைக் குறித்துக் கூறியதே போல், சர்க்காருக்கு அவர்களுடைய நிதானம் ஆச்சரியமாகத் தானிருக்கிறது. பத்வாவில் கையொப்பமிட்ட 500 உலமாக்களில் இரண்டு அல்லது மூன்று பேர்தான் இங்கு கொணரப்பட்டுள்ளனர். நல்லது, மற்றைப் பேர்கள் மீது ஏன் வழக்குத் தொடரவில்லை? இதைச் செய்த உலயாக்கள் யாவரும் இங்கிருப்பார்களென்றே நான் எண்ணினேன். என் ஆயுளில் இது தான் முதல் தடவையாகும், இங்கே இத்துண்டுப் பத்திரிகையைப் பார்ப்பது. உண்மையில் என் வாழ்நாளில் இது தான் முதல் தரம்; சற்றுநேரம் முன் இவ்விஷயமாக ஜமியத்-துல் உலமாவின் இவ்பத்வாவைப்பற்றி, டில்லியில் அவர்களது கான்பரென்ஸில் நடந்தேறிய தீர்மானம் எனக்குத் தெரியும். ஆயினும், என்னுடன் சதியோசனை இயற்றிய மற்றவர்களை நான் அறியா திருப்பினும் பரவாயில்லை. அது எனக்குக் காப்பு ஆகாது; நான் எதையும் நாடவில்லை. ஆனல், சதியோசனை நிமித்தமாய் ஏற்பட்ட யத்தனமாய் விளங்கும் இவ்வழக்கில் ஜாமியத்துல்-உலமாதான் சதியோசனைக் காரர்கள் என்பது ஸ்பஷ்டம் என்று நினைத்தேன். சதியோசனை எதுவாயிருப்பினும், ஜமியத்துல்-உலமா அதில் சம்பந்தப்பட்டவர்களே. கடைசியாக, உலமாசபை அதனுடைய மதக்கடமையைச் செய்து கொண்டிருக்கிறதென நான் சொன்னேன். ஆனல், தக்ஷணமே என் நண்பரும், மைத்துனரும், வக்கீலுமான மிஸ்டர் முஅஸ்ஸம் அலி என்னைத் திருத்தினர்-இவ்வழக்கில் அவர் என் வக்கீல் இல்லை—அவர் சொன்னது யாதெ

னில்:—இல்லை, இத்துண்டு பத்திரிகைகளை அச்சிட்டதும், பிரசாரம் செய்ததும் தாங்கள் அல்லவென ஜமியத்துல்-உலமா கூறுகிறதென்று. ஆதலால், கீழ்க்கோர்ட்டில் நான் மாறிச் சொன்னதாவது:— "நல்லது, நான் கூறுவதே சரியன்று. ஆனால் கள்ள-தஸ்தாவேஜை உண்மையென அவர்கள் சீக்கிரம் திருத்தி விடுவார்களெ"ன்பதுதான்.

ஆனால், கனவான்களே, நீங்கள் வியவகாரம் இயற்ற வேண்டுவது நடந்த விஷயங்களோடே யல்லாமல், கள்ள விஷயத்தைப் பற்றியல்ல. இதைச் செய்கிற எவனும் சதி யோசனையின் நபர் என்பது உண்மையா? இது ஊகமே யொழிய, உண்மையல்ல. நல்லது, கனவான்களே, பப்ளிக் ப்ராஸிக்யூடர் கட்டி விட்டிருக்கும் இச்சிலந்திக் கூடுகளை யெல்லாம் (ஒட்டடைகளை யெல்லாம்) உங்கள் மண்டையை விட்டு இறக்குங்கள், உங்கள் கண்களில் மண்ணைத்தான் தூற்றுகிறார்கள், வேறல்ல, நல்ல பழைய, கராச்சி மண்ணை. (சிரிப்பு). இதைத்தவிர வேறொன்று மில்லை.

ஸெக்ஷன் 505.

இப்போது 505 வது ஸெக்ஷனுக்கு வருகிறேன். இதனது உடந்தையைக் குறித்து எதுவும் நான் சொல்கிறதற்கில்லை. ஸெக்ஷன் 505 சம்பந்தமாக எனது சொந்தத் தனி ஹோதாவில் என்னைப்பற்றி மாத்திரம் நான் வியவகரிக்கவேண்டியிருக்கிறது; ஏனெனில், இவ்விஷயத்தில் நான்தான் யாரிலும் பெரிய அபராதி; மற்றவர்கள் 109 வது ஸெக்ஷன் கீழ் உடந்தையானவர்கள் மட்டும்தான். "மாட்சிமைதங்கிய அரசியினது சேனையிலோ, கப்பற் படையிலோ, அல்லது ராயல் இந்திய மாரினிலோ, அல்லது இம்பீரியல் சர்விஸ் துருப்புகளிலோ உள்ள எந்த உத்தி

யோகஸ்தனையாவது, சிப்பாயையாவது, அல்லது மாலுமியையாவது கலகஞ் செய்யுமாறோ, அல்லது வேறுவிதமாகவாவது அவனது கடமையை உதாசீனஞ் செய்யும்படியோ, அல்லது செய்யத் தவறும்படியான எந்த வாக்குமூலத்தையோ, வதந்தியையோ, எவன் செய்தாலும் சரி, பிரசுரித்தாலும் சரி, நாலு பேருக்கிடையில் பரவச்செய்திடினும் சரி, அவன் தண்டிக்கப்படுவான். இத்யாதி, இத்யாதி.''

இஃது, கனவான்களே, 131 வது ஸெக்ஷனைவிட அதிக விஸ்தாரமானது; ஏனெனில், எனது சொந்த ராஜ்யமாகிய ராம்பூரில்கூட (Imperial service) துருப்புக்களிடம் அவர்களது மதக்கடமைகளைக் குறித்து நான் பிரசங்கஞ் செய்யக்கூடுமோயில்லாமலிருக்கலாம். 1857ம் ஆண்டில் வாழ்ந்த ராம்பூர் நவாப் சாஹிபுக்கு சர்க்கார் கூற்றின்படியே வலது கையாய் விளங்கியவரும், தன் சொந்த உயிரையும் ஆபத்துக்கிடமாக்கி நூற்றுக்கணக்கான ஆங்கிலப் பூமான்களையும், ஸ்திரீகளையும் காப்பாற்றினவரும், யு. பி. ஸர்க்காரையும் காத்தவருமான என்பாட்டனார் ''முஸல்மான்களது உயிரைக் காக்கவேணுமென்று இஸ்லாமிய சட்டத்தை ராம்பூர் பட்டாணியர்களுக்குப் பகிரங்கமாய்க் கூறியதற்காக, அவரது பேரப் பிள்ளைகள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதைக் குறித்து'' யாது எண்ணமிட்டிருப்பார்? ஆனால், அது கதை வேறு. நல்லது, கனவான்களே, ஸிம்லாவிலுள்ள சேனைத் தலைமை ஸ்தானத்துக் கர்னல் பீச்சும், மெகாலே பிரபுவும் எனக்கு என் அடி எடுத்துக்கொடுத்திருக்கிறார்கள் என்று கூறிவிட்டு வாசிக்கிறார்:—''சிப்பாய்களை அவர்களது கடமையை, கடமை என்ற முறையில்

அசட்டை செய்யுமாறே, அல்லது, செய்யாமல் தவறு மாறே, செய்யவோ அல்லது செய்யலாமோ என்ற எண்ணத்தோடு.''

ஆனால், அவர்களது கடமைதான் என்ன? இச்சிப்பாய்கள் அசட்டை அல்லது தவறுதல் செய்யலாகாதான, அவர்களது முதற்கடமைதான் என்ன? ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தால்—அக்குடும்பத்தில் ஏதாவது மதமிருந்தால்—ஒரு பையன் அல்லது ஒரு பெண் பிறந்திருக்கிறதென தாதி சொல்லல்கூடாது, ஆண்டவனது சேனைக்கு ஒரு புது ஆள் பிறந்திருக்கிறது என்றே சொல்லல்வேண்டும். அக்குழந்தை ஆண்டவனது சிப்பாயாக இருத்தல்வேண்டும். அதனாலேதான் (ரோஸமீதாக்கில்), ஆத்மாக்களை நோக்கி ஆண்டவன் ''நான் உங்களுக்கு றப்பு அல்லவா'' என்று வினவ, அவர்களும் ''ஆம்'' என்றனர். கனவான்களே, ஒரு செய்யுளை எடுத்துரைக்க எனக்கு மனம் வருகிறது—நான் ஆக்கிய எனது சொந்தச் செய்யுள், டச்ஸ்டோன் சொன்னதுபோல்—ஒரு அற்பவிஷயம், ஆனால், என் சொந்தமானது—ஸீஸர் கொலையுண்டு, மார்க் அந்தோனியனது வாக்குச் சாமர்த்தியத்தால் ஜனத்திரள்கள் மதிமயங்கி யிருந்தபோது, சதியோசனைக்கார ஸின்னு வுக்குப் பதிலாக கவி ஸின்னு கொலையுண்டான். அவனை அவர்கள் ஒரு சதியோசனைக்காரனென்று நினைத்துக் கொன்றுவிட்டனர். ''நான் சதி யோசனைக்கார ஸின்னு அல்ல, அல்ல, அல்ல என்று அவன் கதறினான். ''ஸின்னு கவிஞன் நான்'' என்றான். ஆனாலோ அவர்கள் ''அவனது இழுக்கான பாட்டிற்கு அவனைக் கொன்றிடுங்கள்'' என்றனர். (சிரிப்பு). கனவான்களே, எனது இழுக்கான பாட்டுகளுக்காக, எனக்கு ஆயுள் பரியந்தம் தீவாந்தர சிட்சை

யிடாதீர்கள். என் சொந்தச் சகாக்களான நாட்டினர்க்கும் என் சொந்தச் சகாக்களான பிறமதத்தினர்க்கும் உரைக் கின்றேன். யான் அவர்களிடம் கூறுவது யாதெனில்: உங்களது கடமை உங்களுக்கு நினைவுறுத்தப்படுகிறது; உங்களது பக்தி உங்களுக்கு நினைவு மூட்டலாகிறது; உங்களது விசுவாஸம் உங்களது நினைவுக்குக் கொணரப்படுகிறது; உங்களது ஆண்டவன், ஜனங்கள் முன்பாக நீங்கள் சர்க்காருக்கு அளித்திருக்கும் வாக்கு உங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது; உங்களது கண்யத்தைப்பற்றி உங்களுக்கு நினைவு வரவழைக்கப்படுகிறது; நீங்கள் உண்மையாளர்களாக இருக்க வேண்டுமென உங்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. (அரபியிலிருந்து ஒரு செய்யுள் ஒப்பிக்கிறார்.) "முதலாவது, வாக்கைத் தயவுசெய்து காப்பாற்றுங்கள், நீங்கள் அவ்விஷயமாய் தீவரமாயிருக்கையில் ஆண்டவனுக்களித்த வாக்கு. நீங்கள் விசுவாசம் வாய்ந்தவர்களே. கொஞ்சம் அதிகம் விசுவாசம் தவறுதலாகாது. இவர்கள் அன்னாரின் கடவுளிடத்து உண்மையாயிராவிட்டால், அவர்களது அரசனிடம் உண்மையா யிருக்கக்கூடுமாவென நான் நீதிபதியிடம் சொல்லமுடியாதா? ஜூரியிடம் சொல்லமுடியாதா?" (குண்டூசி விழும் சப்தம் கேட்கும் கச்சேரியில்; அத்துணை நிசப்தம்). அவர்களுக்கு உயிர், மானம், மதம், விசுவாசம், ஒவ்வொன்றையும் கொடுத்த அக்கடவுளே அரசனையும் அன்னாருக்குக் கொடுத்திருக்கின்றனன். அவர்களது ஆண்டவனிடம் உண்மையாயிராவிடின், அன்னாரது அரசனிடத்தும் உண்மையாயிருக்க இயலாது. ஒவ்வொன்றிற்கும் முன் ஆண்டவன் என்றே நான் கூறிடுவேன்—விசுவாசத்திற்கு முந்தியே கடவுள்—அரசன் பிந்தி, ஆண்டவன் முந்தியே—தேசாபிமானம் பிந்தி, ஆண்டவன் முந்தி-நாடு பிந்தி, நாதன்

முந்தி-தெய்வம்தான் முதல், என் தந்தை தாய் மக்கள் பிறகுதான். இதுதான் என் மதம் உங்களுக்குப் பிரியப் பட்டால் என்னைத் தூக்கிலிடுங்கள். ஆனால், அதைச் செய்துவிட்டு, கனவான்களே, நீங்களுங்கூடத் தற்கொலை புரிந்துகொள்ளலாம்; ஏனெனில், அப்போதே உங்களது ஆத்மாக்களை நீங்கள் கொலைசெய்து இருப்பீர்கள். நீங்கள் நடக்கலாம், உட்காரலாம், நிற்க இயலும், வேலையும் செய்யலாம்; ஆனால், உங்களது உடம்புகள் ஆத்மாக்களற்ற நடைபிணங்களே, காக்கை உகக்கும் அழுகல் பிண்டமே.

கனவான்களே, ஆண்டவனது சிப்பாய்களின் மனதைக் கலைப்பவர்கள் சர்க்காரவர்களேதான். அன்றாது புராதன பக்தி விசுவாஸத்திற்கு நாங்கள் அவர்களைக் கொணர யோசனை. எவ்விஷயத்திலும் சிறப்பு விதி ஒன்று உண்டென சட்டம் கூறுகிறது. (படிக்கிறார்) "ஒரு வாக்கு மூலத்தையோ, வதந்தியையோ செய்கிறவரோ, அல்லது பிரசுரிக்கிறவரோ, அல்லது பிரசாரஞ்செய்கிறவரோ, அந்த வாக்கு மூலமாவது, வதந்தியாவது உண்மையென நம்புகிற தற்கு நியாயமான காரணமிருந்திடின் இந்த ஸெக்ஷனின் வியாக்யானப்படி அஃது குற்றமாக முடிவு கட்ட வராது."

நீதிபதி: — மிஸ்டர் முஹம்மதலி, அந்த ஸெக்ஷனைப் பூராவும் வாசியுங்கள்.

மௌலானா முஹம்மதலி:—வாசிப்பேன் ஐயா, ஒரு சிறிதேனும் இம்மியும் விடேன். சர்க்கார் தங்களது ஒரு பவுண்ட் மாமிசம் அறுத்து எடுத்துக்கொள்வதாய்ப் பிடிவாதம் செய்கிறார்கள். ஷைலக் விஷயத்தில், மாமிசத்தை மட்டில் எடுத்துக்கொள்ள அனுமதியளித்தனர்; ஆனால், கிறிஸ்துவினது ரத்தம் ஒரு சொட்டேனும் சிந்தவிடோமென்றனர். ஆனால், என்னிடமிருந்து நீங்கள் அதையும்

கூட வழிய வழிய அளந்து கொள்ளலாகும். இச்சிறப்பு விதி எப்போது இயலும் என்றால், அவ்வாக்கு மூலத்தின் உண்மையை நீங்கள் ஸ்தாபிக்கவேண்டும். அதன் உண்மையில் உங்களுக்குஇருக்கலான நம்பிக்கைக்கு நியாயமான காரணங்களையும் நிலை நாட்டல் வேண்டும். மேற்கூறியவாறு அப்பேர்ப்பட்டயாதொரு விஷயமும் அன்னியில்நீங்கள் அதைச் செய்தீர்கள். அந்த ஒரு ஆண்டவனைத் தவிர்த்து வேறு கடவுளே இல்லை,முஹம்மது அவனது தூதர். இது என் வாக்கு மூலமல்லவா? எனது மட்டுமல்ல,இது முஸல்மான்கள் யாவரதும் கொள்கையாகும். ஆண்டவனுக்கு அடங்காமையை விளைக்கிற விஷயங்களில் தங்களுக்குப் பணிவை ஒருவனிடம் நாடினால், அம்மனிதன் ராஜ விசுவாசத்தை இக்கொள்கை கலைத்திடுமோபோலிருப்பினும், இக்கொள்கையை வெளிப்படையாகக் கூறுவது குற்றமெனஆகுதல் முடியாது.

அப்படிக் கூறுதல் ஒரு குற்றமா ?

அடுத்த குற்றம்

பத்து மனிதர்களை அல்லது அதிகம் பேர்களை அதே போன்ற ஒரு குற்றஞ் செய்யுமாறு சொல்லுவது அடுத்த குற்றமாகும். அதற்குங்கூட வாக்குமூலத்தைக் குறித்த கேள்விதான் முதற்கேள்வி. யாரது வாக்குமூலம்? என் வாக்குமூலமன்று. ஆண்டவனின் வாக்குமூலம். குர் ஆனது சட்டத்தை அஸ்திவாரமாகவுடைய பிரகடனம். குர்ஆனை அறிந்து கொள்ளக்கூடிய ஒவ்வொரு முஸல்மானுக்கும் அஃது நன்கு தெரியும். அஃது என் சொந்த அபிப்பிராயத்தின் விஷயமன்று. எனக்குத் தீவாந்தரதண்டனை விதிக்கப்படு முன்னர், நான் உங்களை அரபி தெரிந்த ஓரிடத்திற்கு, எடனுக்கு என்று வைத்துக் கொள்ளுவோம்; இத்தீவாந்தரத்துக்கு அனுப்புகிறேன். குர் ஆனை அரபிபாஷை

யில் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு ஸோமாலி அல்லது அரபி சிப்பாய், மௌலானு ஹுஸைன் அஹ்மத் ஸாகிப் என்கிற அரபி உபாத்தியாயர், முஸ்லிம்களைக் கொலை செய்தல் கூடாதென்கிற குர்ஆன் ஆயத்துக்களைப் படிக்கிறதைக் கேட்டால், அல்லது, நேற்று நான் கூறிய படி, ஒருவன் வந்து, முஸ்லிம்களை எதிர்த்துச் சண்டையிடத் தன்னை மெஸொபொடேமியாவுக்குப் போகுமாறு உத்தரவிட்டிருக்கிறார்கள், என்று அவரிடம் கூறி, உண்மையான மதச்சட்டத்தை அவரிடம் விசாரிக்க, அம்மௌலானு ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுடன் சண்டையிடுவது மத சட்டமல்லவென உரைத்தால், அஃது சட்டத்தின்கீழ் வருமா? அது ஒரு வாக்குமூலம்; ஆனாலும், அது அவரது சொந்தமல்ல: அது ஆண்டவனது; அது உண்மையே. ஒரு ஹிந்துவைச் சர்க்கார் ஒரு பசுவைக் கொலை செய்ய வேணுமென்கிறார்களென வைத்துக் கொள்வோம்; அப்போது ஏதோ ஒருபிராமணன் அவனிடம் "பசு ஒரு பரிசுத்த பிராணி, அது ரக்ஷிக்கப்படல் வேண்டும், தாய், தந்தையற்ற குழந்தைகள் லட்சக்கணக்கானவற்றிற்கு அது தாயாய் விளங்குகிறது; அது யாவற்கும் உணவு அளிக்கிறது; ஆண்டவனது படைப்பிலடங்கிய பிராணிகளில் பேதமைக்கும், ஆதரவற்றதற்கும் ஓர் அடையாளமாய்விளங்கி, நமது சௌகர்யமான ஆதரவை வேண்டுகிறது. நீங்கள் அதை ரட்சிக்கவேண்டும்" என்று சொன்னால், சேனைத்தலைவன் அப்பசுவைச் சேனையினது ஆகாரத்திற்கு வேண்டியிருப்பினும்கூட அந்த ஹிந்து அவனது கடமையைச் செலுத்துவதை அப்பிராமணன் கலைத்தான் என்ற குற்றம் ஏற்படுமா? ஒரு முஸல்மான் சிப்பாய் அல்லது ஒரு ஹிந்து சிப்பாய் அவனது மார்க்கத்துக்கு விரோதமாய்

நடப்பது உத்யோகமுறையில் கடமையாகும் என்று சேனுதி பதியாவது, சேனுதிபதிகளின் தலைவராவது கூறமாட்டாரா வென நான் அறை கூவுகிறேன். வைசிராய் சட்டசபையில் தீர்மானம் கொணரலாகாது என்று தள்ளி விட்டனர். அச்சபையில் ஒரு அங்கத்தினராக விருக்கும்படி என்னைக் கேட்டனர். ஒருக்கால் "நீங்கள் ஜனங்களை வசீகரிக்க முடியும். ஜனங்கள் மீது அத்துணை வசீகரமான சக்தி உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு அப்பேர்ப்பட்ட சாமர்த்தியங்களுண்டு. சாமானிய ஜனங்களை இழுக்கலான அதிசய குணம் உங்களுக்கு இயற்கையாய் அமைந்துள்ளது. நீங்கள் சபைக்கு வரமாட்டீர்களா?" என்று "பைனீர்" பத்திரிகை எழுதியது. எனது ஒரு பிரசங்கத்தில் சொன்னேன். அவ்விஷயம் மற்றொரு வழக்கிற்கு விஷயமாய் விளங்குகிறது. என்னுல் முடியாது என்றேன்; ஏனெனில், சபைக்குச் செல்பவர் எவரும் "ஊர்ந்து செல்லும் சந்து" வழியாய் அவனது மார்பின் மீதுதான் செல்லல் வேண்டும்; நமது ஜலியன்வாலா சகோதரிகள்தான் அதற்கு கௌரவக்காப்புச் சேனை; அவர்களை ஒரு பயந் தாங்கொள்ளி அதிகப்பிரசங்கி மானபங்கஞ் செய்ய எத்தனித்தான்.

நீதிபதி:-(காதில் படாமல்) உங்களது நோக்கமென்ன?

மௌலானு முஹம்மது அலி:—அச்சபைக்கு என்னை அழைத்தார்கள். வைசிராய் இப்போது தள்ளிவிட்ட தீர்மானத்தைப்போன்ற தீர்மானம் யாரும் அங்கே கொணர உத்தரவில்லை. சர்க்கார் சேவையிலுள்ள, விசேஷமாய் சேனையிலுள்ள எவனும், எந்த முஸல்மானும், அவனது மார்க்கத்துக்கு மாருக நடக்க நிர்ப்பந்தப் படுத்தல் கூடாதென்பதே அத்தீர்மான்மாகும். (ஒரு சிப்பாய் சேனையில் சேருமுன்

னர் எழுதிக் கொடுக்க வேண்டிய பாரத்தைப் படிக்கிறார். மறுபடியும் நீதிபதி மௌலானாவைக் குறுக்கிட்டு, நீர் எதை ருசுப்படுத்தப் போகிறீர் என்றனர்.)

மௌலானா முஹம்மதலி:—சேனையில்சேரும் ஒருவன் யாது செய்யக்கடவன் என்னும், அதாவது சிப்பாய் என்ற முறையில் அவனது கடமை இன்னது, இன்னதல்லவென நான் எடுத்துக்காட்ட நோக்கம். (வாசிக்கிறார்.) கனவான்களே, இக்கேள்வியைக் கவனியுங்கள்! “நிலமார்க்கமாவது நீர்மார்க்கமாயாவது நீ எங்கேயும்போக வேண்டுமென்று உத்தரவு போடப்படினும், உனது ராணுவக் கடமையில் மதாசாரங்கள் சம்பந்தபடாமைக்கும், உனக்குச் சம்மதந்தானா?”—உனது மதத்திற்குமாறாக எதையும் நீ செய்வாயா” என்றாவது, “பாபஞ் செய்யுமாறு உன்னைக் கேட்பின், உனக்கு ஏதாவது ஆட்சேபணை யிருக்குமா என்றாவது, “நிலமார்க்கமாகவாவது, நீர்மார்க்கமாகாவது நரகத்துக்குப்போக உனக்கிஷ்டமுண்டா? (சிரிப்பு). என்றாவது அவனைக் கேட்கிறதே இல்லை. இதுபோன்ற கேள்வியே இல்லை. பப்ளிக் ப்ராஸிக்யூடர் என்னைக் கேட்டார். என்னிடம் சொன்னார். நரபலியில் யாரேனும் நம்பிக்கை பூண்டு, உனது குழந்தையைக் கேட்டால், நீங்களேதான் முதன் முதலில் சட்ட ஆதரவை நாடுகிறவர்களாக விளங்குவீர்கள். எவ்வாறிருப்பினும் இக்காலத்துள்ள ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்தவனான யான் சட்ட ஆதரவை நாட எனக்கு இஷ்டமில்லை. மற்ற ஜனங்களிடத்து அவ்வாறான பலியைக் கேட்கிற யாதொரு வகுப்பினர் உளரென நான் நம்பவில்லை. மற்ற ஜனங்களது குழந்தைகளை நரபலியாகக் கேட்கக்கூடிய ஒரே வகுப்பு ராணுவ வகுப்பினர்களே யாவர். அவர்கள் அதைக்கேட்கின்றனர்—

அவர்களது பேராசைப்பேய் அதைக் கேட்கிறது—ராஜ்யப் பிசாசு அதைக்கேட்கிறது—ராஜ்யப்பேராசை அதை அவாவுகிறது. நடுச்சமுத்திரத்தில், ஆண்டவன் படைத்துள்ள மஹா சமுத்திர நடுவில், அவர்களது கப்பல்கள் ஒன்றை இதர தேசத்துக்கப்பல் கடந்து செல்ல நேரும்பொழுதெல்லாம், இங்கிலாந்து தேசம் "கடல்களுக்கெல்லாம் ராணி" என்னும் பெருமையை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக கொடியை தாழ்த்தவேணுமாம். இஜ்ஜனங்களே அப்பேர்பட்ட நரபலிகளை நாடுகிறவர்கள்.

நீதிஸ்தலத்தில் பேச்சுத்தடிப்பு

நீதிபதி என்னைக்கேட்டதாவது:—ஆனால், திருடனைப் பற்றி நீங்கள் யாது கூறுவது? திருடனது கை சேதிக்கப் படவேணுமென்பது உங்கள் அபிப்பிராயமா? அரசாங்கம் இஸ்லாமிய அரசாங்கமாயிருப்பின், நான் இதை அதனிடம் வேண்டுவேன். வியபசாரம் செய்கிறவர்களைக் கல்லாலடித் துச்சாகுவிக்கவேணு மென்றும் வேண்டுவேன்; ஆனாலும், இங்கிலிஷ் சட்டப்படி வியபசாரம் அத்துணைகுற்றமில்லை. இஸ்லாமிய அரசாங்கத்துடன் ஒரு முஸ்லிம் என்கிற ஹோதாவில் எனது ஒப்பந்தம் வேறுதான். முஸ்லிமல்லாத அரசாங்கத்தோடு ஒரு முஸ்லிம் என்ற ஹோதாவில் எனது ஒப்பந்தம் வேறுதான். எனது சொந்த மத அபிப்பராயங்கள்படி நான் யாரையும் பொருட்படுத்தாது நடக்க எனக்கு இடங் கொடுத்தல் வேண்டும்; இதைத்தவிர, எனக்கு முஸ்லிமல்லாதார் எதையும் செய்ய வேணுமென நான் வேண்டுவதில்லை. எனது மதம் அதன் கடமைகளை என் மீது மட்டில் சுமத்தமாட்டுமே யல்லாது, பிறர்மீது அன்று. பிரிட்டிஷ் சைன்யத்தைச் சேருவதும், நியாயமான காரணமின்றி ஒரு

முஸ்லிமுடன் சண்டை போடுவதும், சர்க்கார் உத்தரவே நிமித்தமாக ஒரு முஸ்லிம் சகோதரனைக் கொல்வது அநியாய மென்றும், இவை மதத்தில் தடுக்கப்பட்டவை என்றும், பக்தி விசுவாசமின்மைக்கு அடுத்தாற்போன்றது ஆகும் என்கிற ஆண்டவனது சொந்த உண்மையைக் கூறுவது என்மீது சுமத்தியிருக்கும் கடமை. நபிகள் நாயகம் (ஸல்) சொன்னார்: ஹஜ்ஜு யாத்திரைக்கு வந்திருந்த எல்லா முஸ்லிம்களையும் ஒன்றுகூட்டி, அவர் சொன்ன கடைசி விஷயம்: மினாவிலிருந்து சுமார் 124 ஆயிரம் ஹாஜிகள் ஒன்றுகூடி இருந்தனர். "யாது தினம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வினவ—

நீதிபதி:—தங்களது பிரசங்கத்தை நிறுத்துமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நபிகள் ஒரு புறமிருக்கட்டும்.

மௌ. மு தலி:—(கோபமாய்) நபிகளை நான் கவனித்தே தீரல் வேண்டும், நீங்கள் உங்களது இவ்வசனத்தை வாபீஸ் வாங்கிக்கொள்வது நலம்.

மௌ. ஷௌ. அலி:—தெய்வநிந்தை, அதனைப் பிரசங்கித்தனம்.

மௌ. மு. அலி.—நீங்கள் அதை வாபீஸ் வாங்கிக் கொள்ளல் வேண்டும். நீங்கள் பரிகாரம் செய்யல் மன்னிப்பு கேட்பது அவசியம். நபிகளையே நான் கவனித்துத் தீர வேண்டியிருக்கிறது. நபிகளை அவதூறு செய்பவன் உயிரை நான் வாங்கவேண்டியிருக்கிறது.

நீதிபதி:—உங்களது பிரசங்கத்தை நீங்கள் நிறுத்த வேண்டும். நீங்கள் பேசிக்கொண்டேபோக உத்தரவு கொடுக்க இயலாது.

மௌ. மு. அலி: சட்டம் எனக்கு அனுமதியளித்திருக்கிறதை நான்செய்துகொண்டிருக்கிறேன். துருப்புக்கள் அவர்

களது கடமையைச் செய்யவொட்டாது அவர்களது மனதை நான் கலைக்கவொண்ணுதெனச் சட்டம் கூறுகிறது. முஸ் லிம் சகோதரன் ஒருவனைக்கொல்வது முஸ்லிம்சிப்பாய் ஒரு வனதுகடமையின் ஒருபாகம் அல்லஎன நான் கூறுகிறேன். இதை அந்தம் வரை நான் வாதுபுரிய எனக்கு இங்கு உரிமையுண்டு. எனது நிலைமையை நான் விவரித்துக் கூற எனக்கு இஷ்டப்படும் வரையில், எனக்கு இவ்வுரிமை யுண்டு. இவ்வுரிமையை எடுத்து விட்டு, இக்கூத்தையும் ஒழித்து விடலாமே. இக்கூத்தினுல் யாது பிரயோசனம்? சுட்டுத்தள்ளிவிடுகிறது என்று வைத்துக்கொண்டு, எங்களைச் சுட்டுத் தள்ளி விடுங்கள். விசாரணை என்கிற இக்கூத்து இருந்துவர உங்களுக்குப் பிரியமாயிருந்தால், நெல்ஸன் பிரபு ஒருகால் செய்தது போல் நாங்கள் மரித்த பிறகு எங் களை விசாரியுங்கள். எவனும் அவனது மதத்துக்கு மாருக நடக்கிறதற்கு இடமில்லை—ராணுவக் கடமை இதைப் போதனை செய்கிறதுமில்லை.

நீதிபதி:—அது விஷயத்தை ஒட்டியதே யல்ல.

மௌலானு முஹம்மதலி:—எனது மதம் கூறுகிறதை நான் விவரமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதைக் கீழ்க்கோர்ட்டில் எனது வாக்கு மூலத்தில் கொடுத்திருக்கி றேன். அது முற்றிலும் பொருத்தமானதே.

நீதிபதி:—உட்காருங்கள்.

மௌலானு முஹம்மதலி:—ஸெக்ஷன் 505ஐப்பற்றி நான் இன்னும் பேசி முடித்தபாடில்லை; ஸெக்ஷன் 117 ன் கீழ் என்மீது சுமத்தியுள்ள குற்றச் சாட்டு விஷய மாக நான் இன்னம் தொடக்கூடவில்லை. அதைக்குறித்து நான் ஒருவார்த்தைகூட பேசவில்லையே. அது சம்பந்தமாக

ஒரு மொழியேனும் கூறுமலா நான் தண்டனைக்களாக வேண்டியது?

நீதிபதி:—பேசும் ஓர் உரிமையை உங்களுக்கு நான் அளியேன்.

மௌலானு முஹம்மதலி:—அவ்வுரிமையை எடுத்து விட நீதிபதிக்கு அதிகாரமுண்டென உங்களது சட்டப் புத்தகங்களிலிருந்து ஒரு வாக்கியத்தையேனும் நீங்கள் எனக்கு எடுத்துக் காட்டுவீர்களா? ப்ராஸிக்யூஷன் தரப்பினர் ஜூரிக்குப் பிரசங்கம் செய்யுமுன்னர், வாக்குமூலம் கொடுக்கலான என் உரிமைகளில் ஒன்றை நீங்கள் ஏற்கனவே அபகரித்துவிட்டீர்கள். உங்களது சொந்த பம்பாய் ஹைகோர்ட்டும் இதைக்கூறுகிறது, பப்ளிக் ப்ராஸிக்யூடரும் சரியென்கிறார், ஸிந்து ஜூடீஷியல் கமிஷனர் மற்றொரு சட்டம் ஏற்படுத்தியிருக்கிறாரோவென்பது எனக்குத் தெரியாது. ஜூரிக்கு நான் செய்துவரும் பிரசங்கத்தை இப்போது நீங்கள் நிறுத்தப் போகிறீர்கள். என் பிரசங்கத்தின் ஏதோ ஒரு குறித்த பாகத்திற்கு நீங்கள் ஆட்சேபனை செய்யலாம். "இதைச் சொல்லாதே" என்று நீங்கள் கூற இயலும். இனி எதுவுமே பேச உத்தரவு கொடோமென்று சொல்லிக்கொண்டே நீங்கள் என்னை அடியோடே எவ்வாறு தடுத்துவிடமுடியுமென எனக்கு விளங்கவில்லை. ("உட்காருங்கள்" "நான் உங்களுக்குச் செவிகொடேன்" என்று நீதிபதி சொல்லிக்கொண்டேயிருந்தனர்.)

மௌ. மு. அலி:—அவனது மதத்துக்கு விரோதமாக நடப்பது முஸ்லிம் ஒருவனது கடமையின் எப்பாகமுமாகாது, அது சட்டமல்லவென்றும் நான் விவரித்துக்கூறிக் கொண்டிருக்கிறேன். தீர்மானத்தில் அடங்கியிருக்கும் இவ் வாக்குமூலம், உண்மையானது, பொய்யல்லவென நான்

ருசுப்படுத்தவேண்டாமா? அது பொருத்தமா, அல்லவா?--நான் கேட்கிறேன்.

நீதிபதி:—முழுமையும் பொருத்தமேயில்லே.

மௌ. மு. அலி:—முற்றிலும் பொருத்தமில்லேயா? ஆதலால்தான், நான் அதைக் குறித்து வாதமும் செய்யவேண்டியிருக்கிறது.

நீதிபதி:—நீங்கள் வாதம் புரிய நான் உங்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறேன்.

மௌ. மு. அலி:—நீங்கள் அளவுக்கு மிஞ்சி அடிக்கடி குறுக்கிடுகிறீர்கள், இதுதான் தொந்திரவு. இந்த ஸெக்ஷனின்கீழ் நான் வரவில்லேயென யாவற்றிற்கும் முதலாக நான் கூறுகிறேன். எனது மதம் யாதென்றும், மதவிரோதமாக நடப்பது சிப்பாய் என்கிற ஹோதாவில் அவனது கடமையாகாது என்றும், நான் ருசுவாக்கவேண்டியிருக்கிறது. பிரகடனம் ஏன் செய்யப்பட்டதென்றும், நான் ருசுப்படுத்தவேண்டியிருக்கிறது. அப்பிரகடனே உண்மையெனவும் நான் ருசு செய்யவேண்டியிருக்கிறது.

நீதிபதி:—அது பொருந்தாது.

மௌ. மு. அலி: அவ்வுரிமையை என்னிடமிருந்து பிடுங்கிவிட உங்களுக்குச் சட்டப்படி அதிகாரமிருக்கிறதென நீங்கள் நினைக்கிறீர்களா? ஸெக்ஷனின் அர்த்தத்திற்குள்ளாக அது குற்றமென ஆகாதென்று சட்டம் கூறுகிறது. (மறுபடியும் சிறப்பு விதியின் முதற்பாகத்தைப் படிக்கிருர்).

நீதிபதி: மேலும்

மௌ. மு. அலி: "மேலும்" ஒரு புறமிருக்கட்டும். அது உண்மை வாக்குமூலமென நான் வாதிக்கிறேன். மனோபாவத்தைக் குறித்து நான் இன்னம் வாதிக்கவில்லே.

நீதிபதி: உங்களுக்குச் செவிசாய்க்க எனக்கு இஷ்ட மில்லை.

மௌ. மு. அலி: அது எப்படியும் அஸெஸர்களது வேலையாகும்; அவர்களது உரிமையை நீங்கள் பிடுங்கிவிட இயலாது. நான் குற்றவாளியாயிருந்தாலும், இல்லாவிடி னும் அவர்கள் இதைக் குறித்து அவர்களது அபிப்பிராயத் தைக் கொடுக்கவேண்டும். அதுதான் சட்டப்படியாகும். சட்டம் கூறுவதும் இதுதான் (மறுபடியும் படிக்கிறார்). அது விஷயமாக உங்கள் வார்த்தையை நான் எடுத்துக்கொள்ள முடியாது. உண்மையிலேமுடியாது. எவனது வார்த்தையைக் கேட்டும் சட்டத்தினது தெள்ளிய கூற்றுக்கு மாறாக நான் நடக்க இயலாது.

நீதிபதி: உங்களது வழக்கைக் குறித்துப் பேசுங்கள்.

மௌ. மு. அலி: நான் வாதஞ்செய்வது உங்களது வழக்கன்று. (சிரிப்பு). நல்லது, ஜூரியில் விளங்கும் கன வான்களே,

நீதிபதி: உங்களது பிரசங்கம் கேட்க எனக்குப் பிரியமில்லை.

மௌ. மு. அலி: அநேக இதர சந்தர்ப்பங்களில் நீங் கள் நடந்துகொண்டவாறே, நீங்கள் என் பேச்சைக் கேட் காமலிருக்கலாம். ஸாட்சியம் பெரும்பான்மை வாசிக்கப் படுகையில் நீங்கள் நித்திரை புரிந்திருக்கிறீர்கள். இப்போ தும் நீங்கள் தூங்கலாம். ஆனால், நான் ஜூரிக்கு பிரசங்கம் செய்யவேண்டியிருக்கிறது.

நீதிபதி (பார்வைக்கு கோபமாய்): நீங்கள் அமருகிறீர் களா? இல்லையா?

மௌ. மு. அலி: நான் அமராவிடிலோ?

நீதிபதி: நான் உங்களைக் காவலில் வைப்பேன்.

மௌ. மு. அலி: செய்யுங்கள்.

(குற்றவாளியை அமரச் செய்யும்படி இங்கு போலிஸ் ஸூபரின்டென்டிற்கு உத்தரவு அளிக்கப்பட்டது; ஆனால் அவரைத் தொடாமல், நிற்கவே விட்டுவிட்டு, அவர் பின்வாங்கினார்)

இரண்டாம் நம்பர் குற்றவாளி மௌலானா ஹுஸைன் அஹமதைக் கூப்பிடுமாறு நீதிபதி சிரஸ்ததாருக்கு அறிவிக்க, சிரஸ்ததார் அணுகிவந்து கூவினார், ஆனால் மௌலானா ஹுஸைன் அஹமத் ஒருவார்த்தைகூடப் பேசவில்லை. (கிஞ்சித்தும் நகரவேயில்லை).

மௌ. மு. அலி: (இக்குறுக்கிடுகையைக் கவனியாமல்) இப்போது, ஜூரியிலமர்ந்திருக்கும் கனவான்களே—

நீதிபதி:—கச்சேரியில் குறுக்கிடலாகாது.

மௌ. மு. அலி: நீதிஸ்தலத்தில் நான் குறுக்கிடவே யில்லை; நீங்கள்தான் என்னைக் குறுக்கிட்டுத் தடுக்கிறது வாஸ்தவம். இச்சிறப்பு விதியைப்பற்றி நான் வாதம் புரிய வேண்டியிருக்கிறது. நான் இதைக் குறித்து வியவகரிக்க வேண்டியிருக்கிறது. உங்களால் கூடுமானால் என்மீதுள்ள 505, 117 ஸெக்ஷன்கள் கீழ்எற்பட்டிருக்கிற குற்றச் சாட்டுகளை நீக்கிவிடுங்கள், நான் ஓய்ந்து விடுகிறேன். கடைசி வரை குற்றச் சாட்டுகளைத் திருத்தியமைக்க உங்களுக்கு அதிகாரமிருக்கிறது.

நீதிபதி: மதச் சட்டத்தைக் குறித்து இங்கு வியவகரிக்க நான் உங்களுக்கு இடங்கொடேன்,

மௌ. மு, அலி: மதச்சட்டத்தைப்பற்றிக் கேள்வியே யில்லை. தேசத்தில் வழங்கலாகும் சட்டம் எனக் கூறுகிறீர்களே அதைக்குறித்துத்தான் நான் வாதஞ் செய்கிறேன். தீர்மானத்திலடங்கியுள்ள வாக்குமூலமாகும், இப்பிரகட

னம் உண்மையென்றும், ஏனென்றிடில், குர்ஆனிலும் ஹதீதிலும் அதற்கு ஆதாரம் உளதென்றும், அஸெஸர்களுக்கு நான் காட்டவேண்டியிருக்கிறது.

நீதிபதி: அதைப்பற்றிய ஆவசிகமேயில்லை.

மௌ. மு. அலி: அதன் அவசியத்தைக் குறித்து யோஜிக்கவேண்டியது நானேயன்றி, நீங்களல்ல. ப்ராஸிக்யூஷன் தரப்பு காட்சிகளை நிறுத்த உங்களுக்கு உரிமையே கிடையாது. அவர்களது சாட்சியும் சேர்த்துக் கொள்ளுவதற்கில்லை என நீங்கள் சொன்னுலொழிய, நீங்கள் அவர்களை நிறுத்தியிருக்கக்கூடுமாயிராது. பப்ளிக் ப்ராஸிக்யூடரை நீங்கள் நிறுத்தவில்லை. எது அவசியமென்று அவருக்குத் தோன்றியதோ அதை அவர் ருசுவாக்க வேண்டியிருந்தது. ஆவசீகமென நான் நினைக்கிறதை, அதாவது நான் கூறியுள்ளது முஸ்லிம் சட்டம் உள்ளது உள்ளபடியே என்றும், சேனையிலமருவது ஹராம் என்றும் ருசுப்படுத்த, ஆனுல் நீங்கள் எனக்கு இடங்கொடுக்கவேண்டும். குர்ஆனிலிருந்தும், ஹதீதிலிருந்தும், பிரயோஜனமோ, நிஷ்பிரயோஜனமோ, நான் அதை ருசுச் செய்யவேண்டியிருக்கிறது. நான் அதைச் செய்தே தீரவேண்டியது, இஸ்லாமிய சட்டத்திலிருந்தே நான் அதைச்செய்யவேண்டியிருக்கிறது. குர்ஆனிலிருந்தும், அரசனிடமிருந்தும் நான் எனது சட்டத்தைக்கிரகிக்க வேண்டியிருக்கிறது. குர்ஆன் சட்டங்களை அனுஷ்டிக்கிறதற்கு அரசன் எனக்கு இந்தப் பிரகடனைகள் மூலமாய் ஆதரவளிக்கிறுன். அதுதான் அரசனது சட்டமாகும். நீங்கள் அதன்படி நடவாவிடில், (சுவற்றில் தொங்கவிட்டிருந்த எட்வர்ட் அரசன் படத்தைச் சுட்டிக்காட்டிக்கொண்டு) அரசனது படம் ஏன் அங்கேயிருக்கிறது. உங்களிடமிருந்து நான் எனது சட்டத்தைக்

இரகிக்க வேண்டியிருக்கிறது, நீங்கள் அரசிடமிருந்து சட்டம் பெறவேண்டியது. இந்த அரசனது சட்டத்தைத்தான் என் வாக்கு மூலம் ஆதாரமாக கொண்டிருக்கிறது, யாவரும் பார்க்க ஒரு கூத்தடிக்க எனக்கு இஷ்டமில்லை, அந்நோக்கங்கொண்டு நான் இங்கு இல்லை, அரசின் அங்கமாய் விளங்குகிற நீதிஸ்தலத்திற்கு எந்த மரியாதையும் காட்ட எனக்குக் கூடுமோயில்லையாயினும்கூட, நான் உங்களுக்கு மரியாதையே காண்பித்து இருக்கிறேன். பிடிவாதக்காரனுயும், அதிகப்பிரசங்கியாயும் இருக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனுல், என் உரிமையை மட்டில் ஒருபுறமாய்த் துடைத்து எறிந்துவிட இயலாது.

நீதிபதி:—ஆனுல், உங்களுக்கு அத்துணை அதிகம் நேரம் பிடிக்கிறதே.

மௌ. மு. அலி:—வழக்குச் சம்பந்தமாய் நடந்த விஷயங்கள், சட்ட விசேஷங்கள் இவைகளைக் குறித்து நான் பேசுமுன்னர், மதச் சட்டத்தின் தலைமைத் தனத்தைப் பற்றி வியவகரிக்க இன்று எனக்கு அரைமணி நேரம் அதிகம் நீங்கள் தருவதாக நேற்று எனக்கு வார்த்தையனுப்பியிருக்கிறீர்கள். ஏற்கனவே அதை நான் முடிவுகட்டியிருக்கிறேன். ஒவ்வொரு விஷயத்திலும் மதச்சட்டம் சிறப்புவிதியாகவே விளங்கவேண்டுமென்றே நான் கூறுகிறேன். நாட்டில் அமுலிலிருந்துவருகிற சட்டமாகும் ஸெக்ஷன் 505க்கு இப்போது நாம்வரின், தீர்மானத்தின்பிரகடனையான சேனையில் உத்யோகத்திலமர்வது மதபூர்வமாய்த்தடைசெய்யப்பட்டிருக்கிறது என்கிறது உண்மையான வாசகமென்றும், ஆதலால், ஸெக்ஷன் 505ன் சிறப்பு விதியின் கீழ் நான் வருகிறேனென்றும், ருசு செய்யவேண்டியிருக்கிறது.

நீதிபதி:—அது உண்மையான வசனம் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென வைத்துக் கொண்டாலோ?

மௌ. மு. அலி:—அஸெஸர்கள் அதை ஒப்புக் கொள்ளட்டும், அதை அவர்கள் எனக்கு எழுத்து மூலமாய்க் கொடுக்கட்டும். இது ருசுவாகிவிட்ட விஷயமென மதித்து அவர்கள் எனக்கு அதைத் தருவார்களா? இஃது ருசுவாகிவிட்டது என்றும், என் வசனம் உண்மை என்றும் நீங்கள் என்னிடம் கூறிவிடுங்கள். நான் மேலே போகிறேன். அப்போது அதைப்பற்றி ஒரு வார்த்தை அதிகம் நான் வாதஞ் செய்யேன். எனக்கு அவ்வுரிமையுண்டா இல்லையாவென பப்ளிக் ப்ராஸிக்யூடரைக் கேளுங்கள்.

பப்ளிக் ப்ராஸிக்யூடர்:-கீழ்க்கோர்ட்டில் இந்த வாக்கு மூலத்தில் உதாகரித்திருக்கும் வாக்கியங்கள் குர்ஆனில் உள்ளனவென்று நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம்.

மௌ. மு. அலி:—அதைவிட அதிகம் நீங்கள் ஒத்துக் கொள்ள வேணுமென்பது என் இஷ்டம். ஸெக்ஷன் 505ன் கீழ் என்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் இந்த வாக்கியம் குர்ஆன், ஹதீதுபிரகாரம் இருக்கிறதென நீங்கள் ஒத்துக்கொள்ள வேணுமென்பது என் இஷ்டம்.

பப்ளிக் ப்ராஸிக்யூடர்:—நாங்கள் அதை ஒத்துக் கொள்ளமுடியாது.

மௌ. மு. அலி:—நீங்கள் ஒத்துக்கொள்ளாவிடில், நான் அதை ருசுப்படுத்த வேண்டியிருக்கிறது. கிறிஸ்தவன் ஒருவன் கடவுளிடத்து அவனது நம்பிக்கை, கடவுளான பிதா, கடவுளது குமாரன், பரிசுத்த ஆவி, இவைகளைக் குறித்து வாக்குமூலம் கொடுத்தானெனக் குற்றஞ் சாட்டப் பட்டிருக்கிறதாக வைத்துக் கொள்வோம். அது கிறிஸ்தவ

நம்பிக்கையென்றும், உண்மையான ஒரு வாக்கியமென்றும் அவன் ருசுப்படுத்த வேண்டியிருக்கிறதென்று அவன் கூறுகிறான். பைபிளிலிருந்து நான் அதைக்காட்டுவேன்—எபிஸில்ஸிலிருந்து நான் அதைக்காட்டுவேன்—காஸ்பல்ஸிலிருந்து நான் அதைக் காட்டுவேன்—பிரார்த்தனைப் புத்தகமிருந்து நான் அதைக் காட்டுவேன்" எனச் சொல்லுகிறான். தீர்மானிக்க அவனுக்கு உரிமையில்லையா?—நீங்கள் அதைச் செய்கிறீர்களா? கிறிஸ்தவ பூர்த்த நம்பிக்கையின் உண்மையான வாக்கியம் இஃதென்று ருசுப்படுத்த அவனுக்கு நான் இடங்கொடாவிடில், அது நியாயமென முஸல்மானான நான் நினைப்பது நியாயமாகுமா?

நீதிபதி:—(தலையை ஆட்டிக்கொண்டு) உட்காருங்கள்.

மௌ. மு. அலி:—எனது வாக்கியம் உண்மையென நீங்கள் ஒத்துக்கொள்ளாவிடில் நான் உட்காரமுடியாது. விஷயம் ஒன்று நான் சொல்லவேண்டுகிறேன். பிடிவாதமாயிருக்க உண்மையில் இஷ்டமில்லை எனக்கு. நீதி ஸ்தலத்தின்மீது கெட்ட எண்ணத்தாலும், கேவலம் துவேஷத்தாலும் அனுவசியமாக தொந்தரவு புரிய எனக்கு இஷ்டமில்லை. உங்களுக்கு எந்த அவமரியாதையும் புரிய எனக்கு இஷ்டமில்லை. ஒரு குற்றவாளி அல்லது ஒத்துழையாதவன் என்கிற எனது நடவடிக்கையின் எப்பாகத்துடனும் இஃது பொருந்தவில்லை. ஆனாலும், என் உரிமையின் பக்கத்து நிலைத்து நிற்க எனக்குப் பிரியம்.

நீதிபதி:—கச்சேரியின் காலத்தை நீங்கள் வீணே கழிக்கிறீர்கள்.

மௌ. மு. அலி:—யாருடைய நேரத்தையும் நான் வீணில் போக்கவில்லை. வாக்குமூலம் உண்மை வாக்குமூலம்

என்று ஜூரி மனதில் படவேணுமாய்ச் செய்யவேண்டு மென்பது தான் என் கோரிக்கை.

நீதிபதி:—அது பரவாயில்லை.

மௌ. மு. அலி:—எனக்கு அதனால்தான் பெருங்காரியமாகிறது. என்மட்டில் எனக்கு அது பிரமாதம்தான். இது குர்ஆன், ஹதீஸ் பிரகாரம் இருக்கிறது, நான் அதை உற்பத்தி செய்யவில்லை என்று ஜூரியாயமைந்திருக்கும் கனவான்களுக்கு நான் ருசுப்படுத்துவது பெருங்காரியம்தான். தப்பு வாக்குமூலம் ஒன்று நான் செய்திருக்கலாம். நான் ஒரு கற்பழித்ததாக வைத்துக்கொள்ளுவோம். கச்சேரி முன்பு நான் வந்து, எனது மதத்தில் இதற்கு இடமுண்டு என்கிறேன். "உனது மதச்சட்டத்திலிருந்து அதை எனக்குக் காண்பி" என்று நீங்கள் கேட்க இயலும். நீங்கள் இதுவிஷயமாய் என் வார்த்தையை நம்பமாட்டீர்கள். அதை நான் ருசுப்படுத்த நீங்கள் எனக்கு இடங்கொடுக்கவேண்டியிருக்கும். கடைசியாக, விஷயந்தானென்ன? நான் செய்திருக்கும் ஒரு கொலை நிமித்தம் காப்பு நான் கேட்கவில்லை. வீட்டிற்குத் தீவைத்துவிட்டு நான்சரண் புகவில்லை—கொள்ளையடித்துவிட்டு அபயம் நான் கேட்கவில்லை. சேனைத் தலைவன் உத்தரவுபோட்டால் கொள்ளை புனிதமடைகிறது. சேனாபதி ஆக்ஞையென்றிடின், கொலை கொலையாகாது. என் விஷயத்தில்கூட, குர்ஆன் உத்தரவு அளித்தால், கொலை கொலையில்லை. அவ்வாறே, குர்ஆனை நான் குறிப்பிட்டால், "எனக்குக் காண்பி" என்று நீங்கள் கூறக்கூடும்.

நீதிபதி:—பேச்சு நிமித்தமாக நாம் அதை ஒத்துக் கொள்ளுகிறோமென வைத்துக்கொண்டால்,

மௌ. மு. அலி:--எல்லாக்காரியங்களுக்குமே அஃது ஒத்துக்கொள்ளப்படல் வேண்டுமென என் இஷ்டம். எண்ணத்தைக் குறித்து ஒரு வார்த்தை நான் பேசாதிருக்கலாம். கனவான்களே, என் காப்பு நிமித்தம் நான் பேசவேயில்லை. ஆனால், இது உண்மை வசனமென நான் ருசுப்படுத்தவேண்டும். என் நண்பர் மிஸ்டர் மான்டேகுவிடமும் இதே கஷ்டம்தான் எனக்கு. "உன் மத சம்பந்தமான வாதத்தில் தலையிட, மிஸ்டர் முஹம்மதலி, எனக்குச்சற்றும் இஷ்டமில்லை" என்றனர். "தயவுசெய்து தலையிடுங்கள், நாம் அதைக்குறித்து வியவகரிப்போம்; என்மதம் இன்னதென நான் உங்களுக்கு விளங்கவைக்கிறேன்" என்று நான் அவரிடம் கூறினேன். அவரது சர்க்காருக்கு விரோதமாய் இருப்பது எனக்குச் சந்தோஷமில்லை என, நான் அவரிடம் கூறின போது கண்ணும் கண்ணீருமாய் அவர்முன் உண்மையில் நின்றேன். அக்கண்ணீருக்கு அவர்மதிப்பளித்தார். கிலாபத், ஜஸிரத் உல்-அரப் இவைகளைப்பற்றிய மதச்சட்டத்தை நான் விவரித்துக் கூறினேன். அவர் செவி சாய்க்கவேண்டியிருந்தது. மிஸ்டர் லாய்ட் ஜார்ஜுக்கும்கூட, மந்திரி சபையிலுள்ள மற்றச்சில அங்கத்தினருக்கும் எனது மதத்தை நான் விவரித்துக்கூற வேண்டியிருந்தது. குர்ஆனுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லையென அவர்கள் கூறவேயில்லை. இது உண்மை வாக்கியமென நான் ருசுப்படுத்த வேண்டுகிறேன். அதை ருசுசெய்யும் என் உரிமையை நீங்கள் எடுத்துவிடலாகாது. நீங்கள் அதற்கு இடங் கொடுப்பீர்களா?

நீதிபதி:—நீங்கள் மிகவும் சுருங்கக்கூறினால் (நீதிபதி கடைசியாக இறங்கிவந்ததற்கு சபை முழுமையும் கொல்லென நகைத்தார்கள்)

மௌ. மு. அலி:—(நீதிபதியிடம்) ஏற்கனவே நீங்கள் ஏன் அவ்வாறு கூறவில்லை? சுருக்கமாகவே, உண்மையில் மிகவும் சுருக்கமாகவே, நான் கூறிவிடுகிறேன்.

குர்ஆனிலிருந்து மேற்கோள்

பிறகு மௌலானா குர்ஆனிலிருந்து மூன்று அல்லது நான்கு ஆயத்துக்கள் உதாகரித்தார்; கீழ்க்கோர்ட்டில் அவைகளை ஏற்கனவே அவரது வாக்குமூலத்தில் கூறியிருந்தார்; நியாயமான காரணமின்றி முஸல்மான்களைக் கொல்வதற்கும், கிலாபத்தையும் இஸ்லாத்தின் லௌகிக அதிகாரத்தையும் நாசமாக்குவதற்கும் உபயோகப்பட்டு வரும் பிரிட்டிஷ் சைன்யத்தில் வேலை செய்பவர்கள் "ஹராம்" என்று ருசுப்படுத்த சிறு வியாக்யானங்களும் செய்தார். பின்னர், அவர் கீழ்க்கோர்ட்டு வாக்குமூலத்தில் உதாகரித்திருந்த சில ஹதீஸுகளைக்கூறி, தீர்மானத்திலடங்கியிருந்த பிரகடனைக்கு அவைகளின் பொருத்தத்தை விளக்கினார். அந்த ஆயத்துக்களும், ஹதீஸுகளும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன:—

(1) மேலும், மூமீனான ஒருவரைத் தவறுதலாக அல்லாமல் (வேண்டுமென்றே) கொல்வது (உண்மையான) மூமினுக்கு உரியதல்ல. ஆனால், ஒரு மூமினை (தங்களுள்) எவரேனும் தவறுதலாகக் கொலை செய்துவிட்டால் இரண்டு மாதங்கள் இடையறு நோன்பு நோற்கவேண்டும்;

(2) ஆனாலும், ஈமானுள்ள ஒருவனை வேண்டுமென்றே கொல்பவன் எவனுக்கும் நரகப்ராப்திதான்; அங்கே அவனுக்கு நிரந்தரவாஸம்; ஆண்டவன் அவன்மீது கோபிப்பான். அவனுக்கு சாபமளிப்பான். அவனுக்கு பெரும்

ஒரு தொந்திரவு தயாரித்து வைத்திருக்கிருன். (சூரத் நிஸா.)

(3) ஈமானுள்ளவர்களே, ஒருவர் மற்றவரது சொத்துக்களை மோசஞ்செய்து விழுங்கிவிடாதீர்கள்; உங்களது சொந்தச் சம்மதியின்பேரில் உங்களுக்குள் வியாபார முறையில் சொத்துக்களை மாற்றிக்கொள்ளலாம்; உங்களது சொந்த ஜனங்களைக் கொல்லாதீர்கள். ஆண்டவன் உங்கள்மாட்டு அன்புள்ளவனுகவே இருக்கிருன். மேலும், எவன் அநீதியாயும், எல்லையைக் கடந்தும், இதனைச் செய்கிருனே, அவனை நாம் சீக்கிரத்தில் நரகில் புகவைப்போம். இன்னும், இது அல்லாஹ்விற்கு மிகச் சுலபம். விலக்கப்பட்டவற்றுள் பெரும்பாவங்களை நீங்கள் தவிர்த்துவிட்டால், நாம் உங்களது (சிறு) குற்றங்களை ஒழித்து, கண்ணிய ஏற்புடன் உங்களைச் சுவர்க்கத்துள் அழைத்துச் செல்வோம். (சூரத் நிஸா.)

(4) முதற் கொலையினது கதையை, (அதாவது) ஒரு சகோதரன் மற்ருெரு சகோதரனைச் செய்த கொலை "என்னைக் கொல்வதற்கு என்மீது நீ கையை நீட்டினுலும், அகிலத்தாரின் றப்பாகிய அல்லாஹ்வை நான் பயப்படுகிறேன்" என்று ஹாபீல் தனது அஹிம்சைக் கொள்கையை இவ்விதமான அஹிம்சை எல்லா முஸ்லிம்களுக்கும் இருக்க வேண்டும். எனக் கூறியும் காபீல் குற்றம் செய்ததைக் கூறிவிட்டு—"இதனுற்ருன், இதற்குள், இஸ்ராயிலின் சந்ததியினரிடத்தில் அல்லாமல் அல்லது நாட்டில் கலகஞ் செய்ததற்காக அல்லாமல் ஒருவரை மற்ருெருவர் கொலை புரிவாராயின் அவர் மனித வர்க்கத்தினர் யாவரையும் கொலை செய்தவரைப்போலாகிருர்; இன்னும், ஒருவரை மற்ருெருவர் (கொலையினின்று) காப்பாற்றினுல் மனிதவர்க்கத்தினர் யாவரையும் காப்பாற்றியவராகிருர் என்று வாதித்தோம்"

என்பதாக திரு குர்ஆன் ஸூறயே மாயிதாவில் சொல்லப் பட்ட ஆயத்தை ஓதிக் காண்பித்தார்.

(5) மேலும் (அல்லாஹுத ஆலாவின் நல்லடியார் கள்) அல்லாஹ்விற்கு வேறு தெய்வங்களை இணையாக்கி வணங்காமலிருப்பவர்கள் இன்னும், நியாயமான காரண மின்றிக் கொல்லலாகாது என்று விலக்கி இருப்பதை (மதித்து) ஒருவரையும் கொலைசெய்யாதிருப்பவர்கள் இன்னும் வியபசாரம் செய்யாதிருப்பவர்கள் (ஆகியவர்க ளாவார்கள்). ஆகவே, எவர்கள் இதை மீறிச் செய்கிறார் களோ அவர்கள் பாபத்தில் வீழ்ந்திடுவர். நியாயத் தீர்ப்பு நாளில் அவருக்கு இரட்டிப்பு வேதனை அளிக்கப்படும். அங்கு அவன் எப்பொழுதும் நிரந்தரமாக பழிக்கப்பட்ட வனாக இருப்பான். (ஸூரயே அல் அஃரா)

(1) மூன்று சந்தர்ப்பங்கள் தவிர, முஸ்லிம் ஒருவ னது ரத்தத்தைச் சிந்தலாகாது. அப்போது உயிருக்குயிர் வாங்கலாம். (அதாவது, தன் கட்சி நீங்கும் பதிதனுக்குத் தண்டனையாக,) புசாரி, முஸ்லிம், டிர்மிஷி, அபுதெனத், நஸாய், இன்னம் மற்றவர்களது அதி உண்மையான திரட்டு களில் இது காணலாம்.

(2) முஸ்லிம் ஒருவனைத் தனது நாவிற்கும், கையி னுக்கும் அகப்படுத்தாதவனே முஸ்லிம் எனப்படுவான்.

(3) முஸ்லிம் ஒருவனைத் திட்டுவது தவறு செய்வதா கும். அவனுக்கு மாறாக யுத்தம் புரிவது ஈமான்இன்மை யாகும். (குபுர்) (பி. எம். டி. எடி. நஸாய் - என்.)

(4) எங்களுக்கு மாறாக ஆயுதம் தாங்குபவர் எங்களைச் சேர்ந்தவரல்லர். அதாவது அவர் முஸ்லிமல்ல.

(5) தனி ஒரு முஸ்லிமைக் கொலை புரிவதில் விண் ணுளோரும் மண்ணுளோரும் உடந்தையாயிருப்பினும்,

சரி, அவர்கள் யாவரையும் ஆண்டவன் நரகிலிடுவது நிச்சயம்.

(6) முஸ்லிம் ஒருவனைக் கொலை புரிவதில், ஒரு அரை வார்த்தையிலேயாயினும் உதவி புரிந்தார்,யாராயிருப்பினும், "ஆண்டவன் கருணைக்கு ஏங்குகிறவர், (அதாவது, ஆண்டவனது பொங்கும் கருணையில் கொஞ்சமும் அவனுக்கில்லை)" என அவரது கண்களுக்கிடையில் எழுதப்பெற்று ஆண்டவன் முன் நிற்பார்.

(7) ஒவ்வொரு பாபத்தையும் ஆண்டவன் மன்னிக்கலாம் என நம்பலாகும். ஆனால், ஈமானற்றவனாக இருக்கையிலேயே மரித்தவனும், வேண்டுமென்றே ஒரு முஸ்லிமைக் கொன்றவனும், ஆகிய இவர்களது பாபம் நீங்கப்படுகிறதில்லை.

(8) எவனால் கூடுமோ அவன், சுவர்க்கத்துக்கும் தனக்கும் இடையில் முஸ்லிம் ஒருவனது ஒரு கை ரத்தம்கூட இல்லாமலிருக்குமாறு பார்த்துக் கொள்ளட்டும்; ஏனெனில் ஸ்வர்க்கவாசலில் அவ்வாறுபோய் நிற்பவர் யாவராயினும் சரி, அவனுக்கும் ஸ்வர்க்கத்திற்கும் இடையில் ஆண்டவன் குறுக்கிட்டு நிற்பான்.

(9) இரண்டு முஸல்மான்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, கத்திப்பிரயோகம் செய்தால், மாண்டவனும், மாளச்செய்தோறும் தீயிலிடப்படுவோர்கள். "ஆண்டவனது தூதரே, மாளச்செய்தோன் தீயிடப்படுவதன் காரணம் விளங்குகிறது. ஆனால், மாண்டோனுங்கூட ஏன்" என்று ஜனங்கள் வினவ, நபி (ஸல்) அவர்கள், ஏனெனில், அவனது தோழனை அவன் கொல்ல எண்ணியிருந்தான்" என பதிலளித்தார்.

இந்த என் வாக்குமூலம், கனவான்களே, குர் ஆனை யும், ஹதீஸையும் முற்றிலும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இப்போது நீங்களே கண்டுகொள்ள லாம்; எனக்குப் பின்னர், மௌலானா ஹுஸைன் அஹ்மத் ஸாகிப் இதை ருசுப்படுத்துவார். இதைத் தவிர, இதின் உண்மையை உலமாக்களின் பத்வா ஸ்திரப்படுத்தியிருக் கிறது. ஆனால், அதை எங்களது குற்றமின்மைக்குச் சாட்சி யமாக அமைக்காமல் குற்றத்திற்குச் சாட்சியமாக அமைக் கப் பெற்றிருக்கிறது.

என்லிஸ்ட்மேன்ட் பாரம்

கனவான்களே, சேனையிலமர்ந்துள்ள ஒருவனுக்கு ஜாதி அனுஷ்டானங்கள் வேண்டாமென பிரத்தியேக அனு மதி அளிக்கப்பட்டிருக்கிறதோ வென்பது எனக்குத் தெரி யாது. அவைகளைக் குறித்து இப்பாரத்தில் கேவலம் ஒரு கேள்விமட்டுந்தானிருக்கிறது. அவைகளை அனுஷ்டித்துவர ஆவல் இருந்தும், அதில்சேர விருப்பமுள்ளவனுக்கு என்ன வாகிறதென நாம் அறியோம். ஆனால், இது ஜாதி முறை யல்ல. மதச்சட்டத்திற்கு விரோதமாய்ச் செல்லும்ஒருவிஷய மாகும் இஃது. ஒருவனது ராணுவக் கடமை மார்க்கச் சட் டத்திற்கு முரணாக நடக்க வேண்டியிருப்பின்—சேனாதிபதி அவ்வாறு எண்ணில், அவன் இக்கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு ஹிந்து சிப்பாயையும் அவர்கள் கேட் கட்டும்—ஒவ்வொரு முஹம்மதிய சிப்பாயையும் அவர்கள் கேட்டு அன்னார் கூற்றைக் குறித்துக் கொள்ளட்டும். டான்டே(Dante)அவரது“இன்பர்னோ”வில்எழுதினார்,மில் டன்கூட அவரது “பாரடைஸ் லாஸ்டி”ல் (Paradise lost) உதாகரித்திருக்கிறார், இப்பழமொழி நரகவாயிலில் வரை

யப்பட்டிருக்கிறதென்று,“இங்கு பிரவேசிப்பவர்கள் எவரும் நம்பிக்கை என்பதையே அறவே ஒழித்திடல் வேண்டும்.” அதேபோலும் “பிரிட்டிஷ் இந்திய ஸைன்யத்தின் வாயிற்படிமேல் ஈண்டு நுழைபவர்கள் எவரும் சகல நம்பிக்கையையும் பின்னாலேயே விடக்கடவர்” என எழுதப் பெறல் வேண்டும். பேரான ஒரு சமயத்தில், அவசியம் எற்படின், மார்க்கச்சட்டம் எதுவும் அதன் முன்னர் விளங்காது. ஒழுங்கீனமான இக்கொள்கையை வெறுப்பவர்கள் சட்டம் மீறினவர்களாகக் கருதப்பட்டுத் தண்டனையடைகின்றனர், என்று ஜெர்மன் சான்ஸெல்லர் கூறியிருக்கிறார். சர்க்கார் அதைக்குறித்து நேர்முறையாகவும், யோக்யமாகவும் இருக்கிறார்கள் என்பதுதான் நாம் வேண்டுவது. தற்காலத்தில், ஜனங்கள் கண்மூடித்தன்மையாகவே சேனையில் சேருகிறதாகத் தோன்றுகிறது. திறந்த கண்களுடன் அவர்கள் அங்கு செல்லல்வேண்டுமென நம் கோரிக்கை. அவர்களது மார்க்கச் சட்டத்திற்கும், அதனால் அவர்கள்மீது எற்பட்டிருக்கும் கடமைக்கும் மரியாதை கொடுக்கப்படமாட்டாதென்றும், ராணுவ அவசரங்கள்என்னும் பேய்க்குப் பலியிடலாகும் என்றும், ஒரு ராணியின் பிரகடனையும் இரண்டு ராஜாக்களின் பிரகடனைகளும் அன்னாருக்கு ரட்சிப்பை யளிக்கிறதில்லையென்றும் மிகவும் நன்றாய் அறிந்துகொண்டு, அவர்கள் சேனையில் சேர்ந்திடில், அப்போது சர்க்காரைக் குறைகூறுபவர் யாருமிலர். இதைத்தெரிந்தும் சேர்ந்தால் அவ்வாறு சேனையில் சேர்ந்தோர்களதேயாகும் இப்பாவமெல்லாம். அந்த இஸ்லாமிய சட்டம் இன்றைக்கு வேண்டுவதெல்லாம் யாதுதான்? எந்தக் குற்றங்களுக்காக அஃது லௌகிக சட்டத்தின் ஆதரவை நாடுகிறது? நரபலிக்காகஅன்று!“உங்களது அதிகாரிகளைச் சுட்டுவிடுங்கள்-அவர்

களைக் கொல்லுங்கள்'' என நான் கூறவில்லை. இல்லவே யில்லை. ஆனால், அவர்களது முஸ்லிம் சகோதரர்களது நர பலி—பிராதர்ஹத்தி—என்ற குற்றத்திற்கு அவர்கள் ஆளா கக்கூடாது என்றேநான் வேண்டுகிறேன். மகாயுத்தம் ஆரம் பமானபோது, நீங்கள் அவர்களை ஜெர்மன் ஜனங்களோடுசண் டையிட அழைத்துச்செல்லுகையில், ''அவர்களோடுசண்டை போடாதீர்கள்''என நான் கூறவில்லை. கராச்சியில் ஒழுங்கீ னம்ஏற்பட்டு, முஸ்லிம்கள் கலகஞ் செய்யின், முஸ்லிம் சிப் பாய் அங்குசென்று அதை நிறுத்தல்கூடாது என்று நான் கூறவில்லை. ''இந்தப் பாரத்தில்'' (என்லிஸ்ட்மென்ட் பாரத்தைக் காண்பித்துக்கொண்டு) சகலவிதமான கேள்வி களும் போடப்பட்டிருக்கின்றன. ''அடியிற்கண்ட ஒன்பது கேள்விகள்'' என்று பாரம் கூறுகிறது. ஆனால் உண்மையி லிருப்பவை 14 கேள்விகள், ஒன்பதல்ல (எல்லாக் கேள்வி களையும் படிக்கிறார்). அம்மை குத்திக்கொள்ளவோ, அல் லது மறுமுறை அம்மை குத்திக்கொள்வதற்கோ சம்ம தியாவிடில்---பசுவிலிருந்து அம்மைப்பால் எடுப்பதால் சில ஹிந்துக்கள் சம்மதியாமலிருக்கலாம்---யாது நடக் கிறதென்று எனக்குத் தெரியாது. கருங்கடல் கடப்ப தற்கும், ஜாதியாசாரங்களை ஒழிக்கிறதற்கும் மனமில்லை யென ஒருவன் கூறிடில் என்னவாகிறதென யான் அறி யேன். மறுமொழிகள் உண்மையென்றும், செய்திருக்கும் ஒப்பந்தங்கள், அவைகள் யாவையென விரிவுற விளங்கி யிராவிடினும், அவைகள் நிறைவேற அவன் இஷ்டமுள்ள வன் என்பதைமட்டில் புதிதாகச் சேரும் ஆளின் ஸத்திய வாக்குமூலம் கூறுகிறது. அம்மை குத்தப்படுவதற்கும், மறு அம்மை குத்திக்கொள்வதற்கும், நில நீர்மார்க்கமாக எங்கே செல்ல உத்தரவாகிறதோ அங்கு செல்லவும், அவனது

ராணுவக் கடமைகளில் அவனது ஜாதி அனுஷ்டானங்கள் தலையிடவொட்டாமலுமிருத்தலான ஒப்பந்தங்கள்—இவைகளுக்கு அவனது சம்மதியை அவன் தெரிவித்திருக்கிறதாக நாம் வைத்துக்கொள்ளுவோம். "உனக்கு உத்தரவளிக்கப்பட்ட எதையும் செய்வதற்கும், உனது ராணுவக்கடமைகளில் எந்த மதக் கட்டளையும் தலையிடவொட்டாததற்கும் உனக்குச் சம்மதிதானா? உனது மதத்தை விட்டுவிட உனக்குச் சம்மதியா"? என்று 15-வது கேள்வியிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட கேள்வி ஒன்று இந்தப் பாரத்தில் எங்கேயிருக்கிறது? ஒருவன் "ஆம்" எனக்கூறின் பிறகு, சரிதான்; அவன் சம்மதியாவிடின், நீங்கள் அவனைத்தள்ளிவிடலாம். ஆனால், நீங்கள் இக்கேள்வி அவனைக் கேட்கிறதில்லை. அதைக்கேட்க உங்களுக்குத் தைரியமில்லை.---அப்படியிருந்தும், நீங்கள் அவனை எடுத்துக்கொள்ளுகிறீர்கள். உள்ளும் புறமும் பதிதனாகவும், ஈமானற்றவனாகவுமாகலான மகா கோரமான பாவத்தை அவன் செய்ய மறுத்தால், ராணுவக் கடமையில் அவன் தவறிவிட்டானென நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், உங்களது சொந்த என்லிஸ்ட்மென்ட் பாரப்படிக்கே, அது சிப்பாயின் கடமையினது எப்பாகமுமாகாது. ஆகையினாலே, ஐயா, கடமையிலிருந்து மனதைக்கலைப்பது என்கிற கேள்வி அது ஆகாது. ஏற்கனவே நான் கூறியிருக்கிறபடி, நாம் அவனுக்கு அவனது முதற்கடமையைக் கற்பித்துக்கொண்டிருக்கிறோம்—அதாவது, அவனது முதற் கடமை ஆண்டவனுக்காகும், இரண்டாங்கடமை அவனது நாட்டிற்கும், அவனது அரசனுக்கும் ஆகும். ஜூரியில் விளங்கும் கனவான்களே, கொழும்புத்தோட்டா சமாசாரங்கள், கலகம் இவைகளுக்குப்பின்னர் பிரகடனை வந்ததென உங்களுக்குத் தெரியும். ராணுவக்கடமை என்பதின் எல்லை

யற்ற இந்த அர்த்தத்தை நிராகரிக்கிறதற்கே 1858ல் அது வெளிவந்தது. முஸ்லிம் ஒருவனைக் கொல்வதான பாபத்திற்கு எதிராகுமா கொழுப்பிட்ட வெடிமருந்துச்சுருளை பற்களால் கிழிக்கிறதும், முழுப்பன்றியைச் சாப்பிடுவதும்? கீழ்க்கோர்ட்டில் என் வாக்குமூலத்தில் ஏற்கனவே நான் கூறியுள்ளேன். இங்கும் நான் அதைத்திரும்பக் கூறுகிறேன். அதாவது, பன்றியிறைச்சி தின்னச் சம்மதிக்காவிடில், பிராணாபாயம் விளையுமென ஒருவன் பயமுறுத்தப்படில், அவன் அதைச் சாப்பிடலாமென்பது மட்டிலன்று, சாப்பிட வேண்டும், அவ்வாறு செய்ய அவன் மறுத்து உயிர் நீங்க நேரிடின், அவன் பாபியாக மரிக்கிறான். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அந்தரங்கத்தில் ஈமானுள்ளவனாக இருந்து, அவ்வாறு இல்லாமலிருப்பதே நல்லது, அவன் தன்னைக் காபிர் என்றே பகிரங்கமாய்க்கூடக்கூறிக்கொள்ளலாம். மறுதளித்ததற்காக அவன் கொலையுண்டால், நல்விஷயத்தின் பொருட்டு உயிரைத் தியாகஞ் செய்தவனாய் விளங்குகிறான். ஆனால், இவ்வாறான சமயங்களில் மற்றொருமுஸ்லிமை அவன் கொல்லவும் கூடாது, அங்கபங்கம் இயற்றுதலும் கூடாது; பொறுமையுடன் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள இணங்கல் வேண்டும். 1857ல் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்தும், 1858ம் ஆண்டு பிரகடனை முதற்கொண்டும் பன்றிக்கொழுப்பிட்ட தோட்டாக்களை ராணுவக்கடமையின் ஓர் பாகமாக முஸல்மான் ஒருவனை நீங்கள் தொடச்சொல்ல உங்களுக்குத் துணிவில்லை. அப்படியிருந்தும் முஸல்மான்களைக் கொலைபுரிவது ராணுவக்கடமையிலடங்கியது என்று நீங்கள் கூறுகிறீர்கள். பன்றி தின்பதைவிட அஃது அதிகக்கேடாகும்; பாஹ்யமான மத தியாகத்தைக் காட்டினும் கேடானதே; நான் குறிப்பாய் கூறியிருக்கிறதுபோல், அவ்

வாறான கேள்வியின்மைக்கு அர்த்தம் யாதெனின், அது எதற்கு வழிகாட்டியாகுமென சர்க்காருக்குத் தெரியும். ஆகையினாலே, முஸ்லிம் சிப்பாய் ஒருவனுக்கு ஆண்டவனிடத்து அவன் கடமையை நினைவு மூட்டுவதும், ஆண்டவனது சட்டத்தை அனுஷ்டிப்பது முறை என முஸல்மான் ஒருவனைக்கேட்பதும், எங்கள் கடமையிலடங்கியதாக நாங்கள் கருதுகிறோம். சேனையில் அவனது கடமையைச் செய்வதிலிருந்து அவனது மனதைக்கலைப்பது இஃதாகாது. எவ்வாறிருப்பினும், அவனது கடமையைவிட்டு அவன் ஓடவேண்டுவதுமில்லை, கடமையில் தவறவும் வேண்டுவதில்லை. ஆனால், இருக்கிற அவ்வாறான கடமைகள் அவனது மதத்துக்கு மாறாக இருப்பதால், அவனிடமிருந்து வாங்கப்படாமலிருக்கலாமென்று அவனது மேலதிகாரிகள் மூலமாக சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ளலாம். ஆகையால், சிப்பாய் ஒருவனை அவனது கடமை என்பதிலிருந்து மனதைக் கலைப்பது என்கிற எண்ணமோ, கலைக்கலாம் என்பதோ இல்லை.

ஸெக்ஷன் 117

இப்போது ஸெக்ஷன் 117 வருகிறது. என்மீதுள்ள மற்ற ஒரு ஸெக்ஷன் இதுதான் (வாசிக்கிறார்). "சாதாரணமாக, பொதுமக்களாலாவது அல்லது பத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையினராலாவது செய்யப்படும் குற்றத்திற்கு உடந்தையாயிருப்பவர் யாராயிருப்பினும் மூன்று வருஷ காலம் நீடிக்கலான இருவகைப்பாடான சிறைவாசம் அல்லது அபராதம், அல்லது இரண்டும், ஆகிய தண்டனை விதிக்கப்படுவார்கள்."

ஆனால், குற்றம் எங்கே? நான் விளக்கிக் காட்டியிருக்கிறபடி ஸெக்ஷன் 120-Bன் கீழ்க் குற்றமாகும் சதியோசனையேயில்லை. அந்த ஸெக்ஷன் கீழும், 131வது ஸெக்ஷன் கீழும், நான் விளக்கியிருக்கிறபடி, எங்களாலாவது அல்லது, சதியோசனைஸகா ஒருவனாலாவது பிரயத்தனமே இல்லை.

நீதிபதி:—மிஸ்டர் முஹம்மது அலி, இம்மீட்டிங்கிலும், மற்ற இடங்களிலும் பத்து அல்லது அதிகம் பேர்கள் தீங்கிழைப்பதற்கு நீங்கள் உடந்தையாயிருந்ததாக உங்கள்மீது குற்றச்சாட்டு.

மௌ. மு. அலி.: "சாதாரணமாக, பொது மக்களாலாவது அல்லது பத்து அல்லது அதிகம்பேர்களாலாவது செய்யப்படும் குற்றத்திற்கு உடந்தையாயிருப்பவர் யாரும்... இத்யாதி" ஆனால் குற்றம் என்ன? முஸ்லிம் சிப்பாயை ஆண்டவனிடத்து அவனது கடமையைச் செய்யுமாறு கேட்டுக்கொள்வதும், இஸ்லாமிய சட்டத்தை அவனது மனதிற் பதியச் செய்வதும் குற்றம். ஆனால், அது குற்றமல்லவே. ஆகையால் நான் எக்குற்றமும் புரியவில்லை. பிராஸிக்யூஷன் தரப்பினர் நிற்பதற்கே இடமின்மையின், நான் உடந்தையாயிருக்கலான குற்றமேயில்லை-

இரண்டு அல்லது மூவாயிரம் ஜனங்கள் அங்கு இருந்தனர் என்று சாட்சியத்தில் இருக்கிறது. இரண்டாயிரம் ஜனங்கள் மட்டில்தானிருந்தனர். அவர்களும் அநேகமாய் முஸல்மான்கள் என்று இரண்டு அல்லது மூன்று கனவான்கள் பிரமாணமாய்க் கூறியிருக்கிறார்கள். அங்கே—அந்த மீட்டிங்கிலேயே—நான் பிரஸிடென்டாக இருந்தேன்; எத்தனைபேர்கள் அங்கு இருந்தனர் என்று உங்களுக்குக் கூற எனக்கு அதிக யோக்யதை

இருக்கிறது. கராச்சியிலிருந்து பம்பாய் திரும்பிவந்தபோது அப்பெருங்கூட்டத்தில் குறைந்த பட்சம் பாதியினர் ஹிந்துக்கள் என்பதைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாயிருந்ததென நான் மகாத்மா காந்தியிடம் கூறினேன். ஆனால், அது கிலாபத் தேசீய பிரசினை, தனித்த முஸ்லிம் பிரசினையல்லவெனத் தெரிவிக்கிறது. கோஹக் தீர்மானத்தைக் குறித்து உங்களிடம் பேசிய மகாராஷ்டிரக் கனவான் அங்கு 1500 பேர்கள் இருந்தனர் என்றும், அந்த **கான்பரேன்ஸ்** (மகாநாட்டு) பந்தலின் முழு விஸ்தீரணமும் இம் மண்டபம், அதன் தாழ்வாரம், இவையின் பரப்பைவிட அதிகமில்லை என்றும் கூறினர். கராச்சி அகில இந்திய கிலாபத் மகாநாடு கூடிய பந்தல்—இவ்விடமிருந்து தூரத்தில் இல்லை—அப்பந்தல் இம்மண்டபத்தைவிட பத்து அல்லது பதினைந்து மடங்கு பெரிது. பூராவும் நெருக்கமாயிருந்தது. பத்தாயிரம் பேர்களுக்கு குறையாமல் அங்கிருந்தனர். ஆகையால், பத்துப் பேரைக் கிளப்பிவிட்டோம் என்ற கேள்வியல்ல. அத்தீர்மானத்தில் நாங்கள் அவர்களைக் கேட்டதைச் செய்யப் பதினாயிரவர் இருந்தனர். ஆனால், நாங்கள் அவர்களை எக்குற்றமும் செய்யுமாறு தூண்டவில்லை. எல்லா வழியினாலும் உங்கள் முயலைப் பாகம் செய்யுங்கள், ஆனால், அதைத் துண்டுபோடுங்கள், ஜீரணியுங்கள். ஆனால், முதலில் நீங்கள் முயலைப் பிடிக்க வேண்டும். ஆனால், நண்பர்களே (பப்ளிக்பிராஸிக்யூடரையும், மிஸ்டர் ஆல்ஸ்டனையும் சுட்டிக் காட்டிக்கொண்டு), அவர்களது முயலை அவர்கள் இன்னம் மோப்பம் பிடித்தார்களில்லை. அவ்வாறிருக்க அதை எங்கே பிடிப்பது? உண்மையில் ஏதாவது குற்றம் இருந்ததென அவர்கள் ருசுப்படுத்தவில்லை. அப்படியிருக்க நாங்கள் உடந்தையாயிருந்

தது எதுதான். அவர்கள் ஆண்டவனிடத்து அவர்களது கடமையைச் செய்யவேண்டு மென்பதை, அவர்கள் மனதில் படுமாறு செய்ய (அவரது தீர்மானக்காப்பியிலிருந்து படிக்கிறார்). ஆனால், நீதிபதி குறுக்கிட்டார். (நீதிபதியிடம்) என் காப்பியை நான் படிக்கவேண்டும். ஏனெனில், அத்தீர்மானத்தினுடைய அதே வார்த்தைகளை நான் உங்களுக்கு கொடுக்கவேண்டும். அது வாசிக்கப்பட்டு, பிரேரேபிக்கப்பட்டு, ஆமோதிக்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டு, எந்தெந்த வார்த்தைகளில் நிறைவேற்றப்பட்டதோ அப்படியே (உருதுவில் மூலத்தைப் படிக்கிறார்.)

இதன்பொருட்டு முஸ்லிம் சிப்பாய்கள் மனதில் படியவேண்டியவை என் அபிப்பராயங்களல்ல, வாசகங்களல்ல, கராச்சி கான்பரென்ஸ் தீர்மானங்கள்கூட அல்ல; ஆனால், இஸ்லாமிய கட்டளைகளே. இஸ்லாமிய சட்டத்தையே முஸ்லிம் சிப்பாய்களுக்குத் தெரிவிப்பது முஸல்மான்களது கடமையாகும் என்று பகிரங்கமாய்க் கூறுவதுகூடவா இப்போது குற்றமாகிவிட்டது? இது இஸ்லாமிய சட்டமல்லவெனக்கூறும் ஒரு தனி முஸ்லிமைச் சர்க்கார் கண்டுபிடிக்க இயலாதென நான் நேற்று சொன்னேன். ஆனால், அப்பேர்ப்பட்ட ஒருவனை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்களென வைத்துக்கொள்வோம்—அப்பேர்ப்பட்ட ஒருவனை அவர்கள் படைத்துவிட்டாரென வைத்துக்கொள்வோம், ஏனென்றால், கடவுளது கட்டளைகளுக்கு அல்லாமல், அவர்களது ஆக்ஞைகளுக்கு பணிவு அவர்கள் நாடுகையில், சிருஷ்டி கர்த்தாவின் தொழில்கூட அவர்களுக்குண்டு என்னலாம்—அவ்வாறான ஒருவனை அவர்கள் உண்டுபண்ணுகிறார்கள். ஒரு முஸ்லிமாகக்கூட அவனைச் செய்கிறார்கள். சேனையில், கட்டளையின் ஒவ்வொரு வார்த்தையும் ஆண்ட

வனது சொந்தக் கட்டளைகளாகும். முஸ்லிம் ஒருவனைச் சுடு என சேனாதிபதி கூறின், உடனேயே அவனுக்குப் பணிய வேண்டும் என்று இஸ்லாமிய சட்டம் கூறுகிறதாக அவன் சொல்லுகிறான். நாம் யாது கேட்கிறோம்? சிப்பாயிடம், முஸ்லிம் சிப்பாயிடம் இஸ்லாமியசட்டத்தை அறிவி என்றே நாம் கூறுகிறோம். அதற்கு நான் செய்திருக்கும் வியாக்கியானத்தை அறிவி என்று நான் கூறவில்லை. சேனையிலுள்ள முஸல்மான்களுக்கு அவ்விஷயத்தைச் சம்பந்தித்த இஸ்லாமிய சட்டத்தை அறிவி என்றுதான் நான் கூறுகிறேன். இஸ்லாமிய சட்டப் பிரசாரங்கூடவா குற்றம்? முற்றிலும் எனக்கு விரோதமாகவே அவன் இருக்கிறான் என்று வைத்துக் கொண்டால், முஸல்மான் ஒருவனைக் கொல்வது ஒரு பாபமல்ல, அல்லவே அல்ல, முஸ்லிம் ஒருவனைக் கொல்லும்படி சேனாதிபதி உத்தரவு போட்டால், மத பக்தியுள்ள முஸ்லிம் அதைப் பணிவது கடமையாகும், என்று அவன் கூறுகிறான். இதைச் சிப்பாய்களுக்கு அறிவியாதே, நான் கூறும் சட்டத்தை அறிவி, என நான் அவனிடம் சொல்லவில்லை. முஸ்லிம் சிப்பாய்களுக்கு அவன் அறிவிக்கலாகலானது என்னவென்று இஸ்லாமிய சட்டம் கூறுகிறதென்றுகூட நான் அவனைச் சும்மா கேட்டேன். பட்டதாரியான ஒரு கனவான் எனக்குத்தெரியும், அவரது பிள்ளைகளுக்குச் சில உத்தியோகங்கள் கிடைத்திருக்கின்றன. எப்படியென்றால், முஸ்லிம்களைப் பற்றியும், விசேஷமாய் முஸ்லிம் சிப்பாய்கள் அவர்களது தற்காலிக லௌகிக அரசரிடத்து செய்யவேண்டிய கடமைகளைக் குறித்தும், மிகவும் விசித்திரமான ஏதோ கொள்கைகள் அவருக்கு இருக்க நேரிட்டது. அவர் மௌலவிகளை அமர்த்தி, தேவையான இடங்களுக்குப் போகச் செய்து, அவரது

பக்தி விசுவாச கொள்கைகளை எந்நேரத்திலும், எச்செலவிலும் பிரசாரம் செய்வது வழக்கம். அதுகூட பப்ளிக் ப்ராஸிக்யூடருக்குக் குற்றமாகும்போல் தோன்றுகிறது. இஸ்லாமிய சட்டத்தை முஸ்லிம் சிப்பாய்கள் மனதிலமையும்படி செய்வது பொதுவாய் முஸல்மான்களது கடமை, விசேஷமாய் இஸ்லாமிய உலமாவின் கடமையாகுமெனப் பகிரங்கமாய்க் கூறுவது ஐ. பி. ஸி. ஸெக்ஷன் 117ன் கீழ்வரும் குற்றம். அல்லது, பத்து அல்லது அதிகம் பேரிடம் சொன்னால்மட்டில் குற்றமா? இரண்டு அல்லது மூன்று பேரிடம் கூறினால் பரவாயில்லை, அந்தப் பத்துப் பேரிடம் சொன்னால், பத்துக்கு நீங்கள் வரும் க்ஷணமே—அதாவது பத்து முடிந்துவிட்டது, அல்லது பொதுவாக நீங்கள் ஜனங்களிடம் சொன்னால், நீங்கள் தூக்கிலிடப்படுவீர்கள். எவ்விதத்தும், கனவான்களே, நான் கூறியதைக்கொண்டே ஸி. ஐ. டி. குறுக்கெழுத்துக்காரர் குறித்துக் கொண்டதைக் கொண்டே, நான் சொன்னதாக ஒரு அற்ப போலீஸ் பொய்யன் சொன்னதைக் கொண்டே நீங்கள் சொல்லல் வேண்டும்.

(மௌலானா முஹம்மதலி கான்பரென்ஸில் படித்த உர்து தீர்மானங்களின் நகலை இன்ஸ்பெக்டர் லக்திஹஸன் செய்திருந்தார்; அதை வரவழைத்துக் கராச்சிக்கான்பரென்ஸ் வரவேற்புக் கமிட்டியினது எழுத்திதழில் (letter-paper) எழுதப்பெற்றதும், பம்பாய் ஸென்ட்ரல் கிலாபத் ஆபீஸிலிருந்து அவர் வரவழைத்ததுமான நகலுடன் ஒத்துப்பார்த்துச் சரியாயிருக்கக் கண்டனர்; கான்பரென்ஸ் நடந்த காலத்திலேயே இரண்டாவது கூறப்பட்ட நகல் தயாரிக்கப்பெற்றதென விளங்கியது. ஆனால், சர்க்கார் மொழிபெயர்ப்பாளர் “இக்கட்டளைகளில்” ஸெக்ஷன் 505

பொருத்தமாயிருப்பின் ஐ. பி. ஸி. ஸெக்ஷன் 117ம் பொருந்தச்செய்யுமாறு தப்பாகமொழிபெயர்த்திருந்தார். ஆனாலோ தீர்மானத்தின் இப்பாகத்தில் வழங்கியிருக்கும் வார்த்தைகள் தீர்மானத்தின் முந்தியபாகத்திலடங்கிய ராணுவசேவை ஹரும் என்கிற இஸ்லாமிய சட்டப் பிரகடனையைக் குறிக்கவில்லை; பொதுவாக இஸ்லாமிய சட்டத்தைக் குறிக்கிறது என்பதே.)

ஜூரியில் விளங்கும் கனவான்களே, தப்பித்துக் கொள்ள நான் ஆவலாயில்லை; என் தற்காப்பிற்கு நான் ஆவலாயில்லை; உங்களுக்கு இஸ்லாமியச் சட்டத்தையும், நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் நிலைமைக்கு அதன் பொருத்தத்தையும், நான் விளக்க வேண்டியிருந்தும், நான் எவ்வாறான எதிர்வாதமும் புரியவில்லை. சாட்சிகளை நான் குறுக்கு விசாரணை செய்யவில்லை. என் சொந்த தரப்பில் சாட்சியம் கொணரவுமில்லை. நீங்கள் அநேகர் என்னுட்டினரே; இச்சர்க்காரோடு நீங்கள் ஒத்துழைப்பினும், இதை ஆலோசிக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். உலக சரித்திரத்தில் அநேக பேர் பெற்ற விசாரணைகள் நடந்திருக்கின்றன; பெரியார்கள் அநேகர் அநேக குற்றங்களிழைத்ததாகத் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றனர். இதை நீங்கள் அறிவீர்கள். ஆங்கில சரித்திரத்திலேயே, எளிய ஜோன் அப் ஆர்க் என்பாள் சூன்யக்காரியென மதிக்கப்பட்டு கொலையுண்டிருக்கிறாள். ஆனால், அதன் பலன் என்ன ? அவளது பொன்னிற உருவச்சிலை பிரான்ஸில் எனது ஹோட்டலின் எதிரில் நின்றது; நான் அங்கு இருக்கையில், கத்தோலிக்க மாதா கோயில், கார்டினல்கள் சபை, ஆகிய இவர்களால் அழைத்துச் செல்லப்பெற்று, அவளைப் புனிதையாக்கிவிட்டது.

அவளை அவ்வாறு தீயிட்டவர்களின் சந்ததியார் யாது செய்தனர். என், பிரிட்டிஷ் சேனை அவளது ஞாபகத்தைக் கண்ணியப்படுத்தி, அவளது சிலைமீது மாலைபோடுவதில் பிரெஞ்சுக்காரருடன் கூடிக்கொண்டது. அப்பேர்ப்பட்ட ஒரு காட்சியில் நான் ஆஜராயிருந்தேன். மூன்றும் ஜார்ஜ் காலத்தில் ஜார்ஜ் வாஷிங்டன் ஒரு துஷ்ட கலகக்காரன். இன்று பிரிட்டிஷ் சர்க்காரின் தீர்மானம் என்ன? அவன் மகாப் பெரிய தேசாபிமானி.

ஜூரியிலமைந்துள்ள தனித்த ஒரு ஆங்கிலேயரை நோக்கி ஒன்று, இரண்டு குறிப்புகள் கூற வேண்டுகிறேன். ஆங்கிலேயர்கள் அவர்களது நாட்டினர் பெரும்பான்மையினரை விசேஷமாய் அதர்மத்திலும், அநீதியிலும் பின்பற்றக் கடமைப்பட்டவரல்லர். என்னை நம்புங்கள், ஆங்கில சரித்திரம் பெரும்பாலும் அநேகமாய் நல்வழியிலிருந்தது சிறுபான்மையினரே, எப்படியிருந்தாலும், பெரிய, நல்ல இயக்கங்களை ஆரம்பித்தது சிறுபான்மையினரே. உலக சரித்திரத்தில், ஒரு பெருங்காரியம் பெரும்பான்மையினரால் என்றும் துவக்கப்படவில்லை. (உங்களது கொள்கைப்படி) சிலுவையிலறையப்பட்டது பைலட் அல்ல;கிறிஸ்துவே---ஆண்டவன் அவருக்கு சாந்தத்தையும், ஆசியையும் அளிப்பானாக! கிறிஸ்துவுக்கு விரோதமாக தீர்மானம் அளித்த நீதிபதி பைலட். ஆனால், இப்போது தீர்மானம் கூறுகிறவர் யார், இனித் தீர்மானம் கூறுபவர் யார்? தீர்ப்புத் தினமாகிய கடைசிநாளில், உண்மை யாது என அறியாதவனும், கீர்த்தியோ அபகீர்த்தியோ்வாய்ந்த அக்கேள்வியைஅத்துணை மானிடத்துவேஷத்துடன் கேட்டவனுமான பைலட் மீது தீர்மானங் கூறுபவர் கடவுள். ஆனால், இப்போது பைலட் எங்கே? அவனை நினைவில் வைத்திருக்கும் யாவரும்

—சிலுவையிலறையும் இப்பெரிய நீதிபதியைக் கிறிஸ்துவைச் சிலுவையிலறைந்ததற்கு நீங்கலாக. இப்போது மானிட ஜாதியில் லக்ஷக்கணக்கான பேர்களுக்குக் கிறிஸ்து ரக்ஷகர். ஆனால் கிறிஸ்துவினது பாதத்தூளைக்கூடத்தொட யோக்யதையையற்ற யான், ஒரு அற்பன். கிறிஸ்துவுடன் ஒப்புமை பாராட்ட நான் யார்? ஆனாலும், கவி கூறுகிறபடி "பலவீனம் என்றும் பொய்யாயிருக்க அவசியமில்லை. ஒவ்வொரு அளவில் உண்மை உண்மையே. சிருஷ்டிக்கு ஆண்டவன் கொடுத்த இடி என் ஆன்மாவின் அருகே எனக்கு ரகசியம் கூறிற்று."

பிரிட்டிஷ் சட்டிப்பீரங்கிகளின் இடியோசைகளில் அற்பனான மனுஷ்யனுடைய ஆத்மாவின் நிசப்தமான சிறு குரல் இச்சிறு துணுக்காகும் உண்மையை---சாசுவதமான, ஆத்மாவை ஆதரிக்கிற உண்மையை — ஆண்டவனது தெள்ளிய சட்டம் இருந்தும், முஸ்லிம்கள் முஸ்லிம்களால் கொலை செய்யப்படுகிறதை ஒருவன் நின்றுபார்த்திருக்கலாகாது; ஆனால், மனிதனுக்குப்பயந்து நடுங்காமலும், லௌகிக சம்பவங்களுக்குக் கலங்காமலும் அதற்கு மாறாகப் பிரசங்கித்து, ஆண்டவனது உண்மையைப் பிரசாரம் செய்யவேண்டுமென என் செவியில் ரகசிமாய்க் கூறியது.

கனவான்களே, மற்றொரு விஷயம் எடுத்துக்கொள்வோம்—கர்பலாவில் உயிரை நீத்தவர்களது விஷயம். நபியினது பேரப்பிள்ளையினிடம் 72 பேர்கள்தானிருந்தனர். யஸீத் ஸைன்யத்தில் ஆயிரக்கணக்கானவர் இருந்தனர். அவர்கள் அவனைக்கொன்றுவிட்டனர். அப்போது அவர்கள் மிகச்சிறுபான்மையிலிருந்தனர். ஆனால் 1300ஆண்டுகளாக, அக்கெட்ட செய்கைக்குத் துக்கம்—அதிகாரத்திலிருந்த சர்க்காரின் செயல்—அனுஷ்டானத்திலிருந்தே வருகிறது.

ஒவ்வொரு முஸ்லிமும் ஹூஸேனுக்காக, பலியாகிவிட்ட ஹூஸேனுக்காக வருந்துகிறான். கர்வி, ஜயசாலி யஸீதுக்கு அன்று. அநேக முஸ்லிம் நகரங்களில் வெளிப்பக்கத்தில் கர்பலா எனக் கூறப்பெற்ற ஒரு ஸ்தலம் இருக்கின்றது. யஸீத் என்பவன துசவக்குழியின் அடையாளமேனும் எங்குங்காணக் கூடுமாயில்லை. ஆகையினால், கனவான்களே, உங்களது தீர்மானத்தால் இன்று நாளை விளையும் பலாபலன்களைக்கவனியாதீர்கள்; இங்குமானிடசுதந்திரத்துக்கும், இனிமறுஉலகத்துக்கும், கடைசியாக அதனால் எற்படும் பலன்களைக் கவனியுங்கள். நீங்களே உங்களுக்குள்ளேயே தீர்மானித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது; ராலி பிரதர்ஸ் உங்களுக்காகத் தீர்மானம் செய்ய முடியாது, சிறிய ஒரு காந்திகுல்லாவுக்குத் தடைசொல்லிய போர்ப்ஸ், போர்ப்ஸ், காம்ப்பெல் உங்கள் பொருட்டுத் தீர்மானிக்கமுடியாது. மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் உங்கள் நிமித்தம் நிச்சயிக்கமாட்டாதவர். தீர்ப்புத் தினத்தன்று ஆண்டவன் லாய்ட் ஜார்ஜை அவரது ஆன்மாவைப் பற்றி உங்களதைக் குறித்தல்ல, கேட்பார்; அவருக்குப் பதிலளிக்க அதிகம் இருக்கும். ஆண்டவன் உங்களது தனி ஆத்மாவைப்பற்றி உங்களைக் கேட்பார். மற்றொரை ஒன்றுங்கேளார். அதைக் குறித்து ராலி பிரதர்ஸையாவது, போர்ப்ஸ், போர்ப்ஸ், காம்ப்பெல்லையாவது அவர் கேளார். ஹிந்து என்கிற முறைபில், ஆன்மாக்களின் பரகாயப் பிரவேசம் என்கிற சக்கர மூலமாய் இவ்வுலகிலேயே தண்டனையென நீங்கள் நம்பினால், உங்களது நம்பிக்கைப் படியே, ஆண்டவனது தீர்ப்பு இங்கேயே கிடைத்துவிடும்; அப்புறமல்ல; உங்களது உடம்பாகிய வாஸத்தை உங்களது ஆத்மா நீங்கி வேறு உடலை நாடுகிற க்ஷணமே உங்களுக்குத் தீர்ப்புக் கிடைத்துவிடும். உங்களது மதம் எதுவாயிருப்

பினும், உங்களது கர்மா உங்களுக்குச் சொந்தமானதே, கடைசித் தீர்ப்பு உங்களைப் பொறுத்ததுமல்ல, அதோ உள்ள நீதிபதியைப் பொறுத்ததுமல்ல, எல்லா உலகங்களுக்கும் நாதனான ஆண்டவனைப் பொறுத்தது. கனவான்களே, உங்களது காலத்தில் அதிகம் எடுத்துக்கொண்டு விட்டேன், அடிக்கடி குறுக்கிடப்பட்டு, தடை செய்யப்பட்டிராவிடில் நான் எடுத்துக்கொண்டிருந்திருக்கும் நேரத்தைவிட, நான் எடுத்துக்கொள்ள எண்ணியிருந்த நேரத்தைவிட. ஆனால், நான் ஆரம்பத்திலேயே கூறியிருக்கிறபடி, என்னைப்பற்றிய தனித்தோ அல்லது குற்றவாளிகளான எங்கள் எல்லோரையும் ஒருங்கே சேர்த்த தற்காப்பு விஷயமாகவோ இருந்திருந்தால், இத்துணை விஸ்தாரமாகவும், இத்துணைப் பிடிவாதமாகவும் நான் வாதம் புரிந்திரேன். தண்டனையை விலக்கிக்கொள்ள நான் நாடவில்லை. ஏனெனில், இந்தியாவின் சுதந்திரத்துக்குஜெயில்தான்வாசற்படியாகும். தண்டனையை விலக்க நான் நாடியிருந்தால், ப்ராஸிக்யூஷனையே நான் உடைத்தெறிந்திருக்கக்கூடுமென்றும், தேசத்தில் அமுலிலிருந்து வருகிற சட்டமெனக் கூறுகிறீர்களே அதே சட்ட ஒழுங்குகளின்படி எனது வழக்கை ருசுப்படுத்தியிருக்கமுடியுமென்றும் நினைக்கிறேன். சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்திருக்கக்கூடும், அவர்களது சாட்சியங்களை பிய்த்தெறிந்திருக்கமுடியும், கர்னல் க்விர், அவரது என்லிஸ்ட்மென்ட்பாரம், சிப்பாய் என்கிற ஹோதாவில் அவனது கடமை என்ற விஷயம் வந்தபோது, நான் அவ்வாறே செய்ய உண்மையில் ஆத்திரமடைந்தேன்; எனது நண்பர் பப்ளிக்ப்ராஸிக்யூடர்போலும், அவரது (சிறு உதவி) போலும் ஒரு பெரிய சட்ட நிபுணராக நான் பெருமை பேசாவிடினும் இதைக்கூறலாம் என நான் நினைக்கின்

றேன். அவ்வாருயினும், வழக்குக் கேவலம் பலமற்றதே; இங்கிலாந்து மாஜி லார்ட் சீப் ஜஸ்டிஸ் ரூபூஸ் ஐஸக்ஸ் கே. ஸி. என்று யாவரும் அவரை நன்கு அறிவர், அவரே சர்க்கார் தரப்பில் வகாலத்து வாங்கியிருந்தாலும், ஒரு நாளுக்குக்கூட அவர் எங்களை ஜெயிலுக்கு அனுப்பமுடிந்திராது. ஆனால், நானே ஒத்துழையாதவன். ஆகையால், அந்த ஹோதாவில் என்னைக் காத்துக்கொள்ள எனது கடமை குறுக்கிடுகிறது. அவ்வாறிருந்தும், விஷயம் வியவகாரத்தில் இருந்துவருகிறதென தெரிந்தும், ஒப்புக்கொண்டும், வைசிராய் குன்றின் சிகரத்திலிருந்து இடையில் பேசிவிட்டார். இது இஸ்லாமெதிர்ப்பு அல்லவே என்றும், மதத்தில் தலையிடுகையல்லவென்றும் கூறினர். இதைவிட இவ்விரு விஷயத்திலும் கோரமான வழக்கு யாது இருக்க முடியும்? இஸ்லாத்தையும் அதன் சட்டங்களையும் உயர்த்திப் பிடித்தது காரணமாக பெருந்தலைவர்கள் வீழ்த்தப்படின், எஞ்சியவரை இஸ்லாமிய சட்டத்தைக் குறித்து உங்களது அபிப்பராயம் யாதென வினவினல், அடுத்தபடி இதேதான் உங்களது கதியும்—உண்மை கூறத் துணிவீர்களாகில் என்று இக்கேள்விக்கு அர்த்தம்—இன்னமும் அவர்கள் துணிந்தால், அவர்களது தலையும் நீங்கள் வீழ்த்திவிடுகிறீர்கள். இதன் முடிவு யாதெனில், உங்களது அபிப்பராயத்தைத் தடுத்துக்கூற எழுந்து நிற்பவர் யாருமிலர். அப்போது நீங்கள் "உங்களது மதத்தில் நாங்கள் தலையிடுகிறதில்லை" எனக்கூறுவீர்கள். தலையிடாமை இதுவாயின், சகிப்பால் விளையும் அவ்வாறான பெருமைகளை அடிப்படையாக் கொண்ட சந்தோஷத்தை நீங்களே அனுபவிக்கக்கூடும். ஆனல், இதுமட்டுமல்ல. இங்கிலாந்தின் இஸ்ராயில் தோட்டத்தில் ஓங்கி வளர்ந்

திருக்கும் கசகசாச் செடியாகவும், பிரிட்டிஷ் சங்கிப்பின் யோக்யதாபத்திரமாகவும் விளங்குகிருரென நாங்கள் கருத வும் வேண்டுமோம். ஆனால், கனவான்களே, இங்கிலாந்தின் மாஜி லார்ட் சீப் ஜஸ்டிஸும், இப்போது இந்தியாவின் வைஸ்ராயாகவும் விளங்குபவரைப்போல் நான் நடந்து கொள்ள முடியாது. அவரது சட்டம் அவருக்கு, எனது சட்டம் எனக்கு. அவரது ஜாதி ஜனங்களின் மாதிரி அவர் கோபித்துக் கொள்ளல் கூடாது— முஸ்லிம்கள் அவை களை ஒழிக்கவேண்டு மென்றும், ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டுமென்றும், குர்ஆனில் அடிக்கடி எடுத்துக் கூறப் பட்டிருக்கிறது. குர்ஆனில் கூறியுள்ளபடி, எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களைப் பத்திர்மாய் வெளியில் கொணர்ந் தார் மூஸா (அலை) (சாந்தியும், ஆசியும் ஆண்டவன் அவருக்கு அளிப்பானாக). பிர்ஔனின் கொடுங்கோன்மையினின்றும் அவர்களுக்கு விமோசனமாயிற்று. அப்போது, அவர்க ளுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் நாட்டிற்குச் செல்லுமாறு, அவர்கள் உத்தரவு பெற, ஆனால், "அரக்கர்கள் அங்கே ஆட்சிபுரிகிருர்களே; அன்னூர் அங்குள்ளவரையில், நாங்கள் ஒருபோதும் அங்கு பிரவேசிக்க இயலாது" என்றனர். "நாங் கள் இங்கே சுகமாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்; நீங்களும், உங்கள் றப்பும்போய், அவர்களைச் சண்டை யிடுங்கள்" என மூஸா (அலை) இடம் அவர்கள் கூறினர்.

நல்லது, கனவான்களே, எனது பரிசுத்த நாட்டின் சம்பந்தமாக இது நான் ஒதுக்கவேண்டிய உதாரணமே யன்றி, பின்பற்றவேண்டியதல்ல. இச்சட்டத்தை நான் அனுஷ்டிக்க இயலாது. பலவான்கள் அதை ஆண்டுவரு கின்றனர், அவர்கள் அரக்கர்கள், "நீங்களும் உங்களது கடவுளரும் சென்று யுத்தம் புரியுங்கள்," நாங்கள் இங்கு

அமர்ந்திருக்கிறோம். அவ்வுதாரணம் அல்லது அச்சட்டத்தினது உசிதத்தைக் குறித்து வினவ நான் அங்கில்லை. நான் சம்பந்தித்தவரை குர்ஆன் எனது சட்டமாகும். அரக்கர்கள் அரக்கர்களாகார். எனது ஆண்டவன் என்னிடம் அதை நாடினால், நான் சண்டையிடுவேன், ஓயமாட்டேன், அவ்வரக்கர்களை நீங்களே போர்புரியுமென அவரிடம் கூறேன். அதற்காக—அரசனுக்கு எதிராக யுத்தம் புரிந்ததற்காக—நான் தூக்கிலிடப்பட்டால், இது என்சட்டம், அது சரி, என்றே இன்னமும் சொல்லுவேன், தூக்குமரத்திலிருந்து தொங்கிக்கொண்டிருக்கும் என் சவம் கூட அதையே கூறுமென நான் நம்புகிறேன். ஆகையால், கனவான்களே, ஆயுள்பரியந்தம் தீவாந்தர தண்டனையிலிருந்து என்னைத் தப்புவிக்க எண்ணங்கொள்ளாதீர்கள். ஆனால், ஆண்டவன் இருக்கிறதாக உங்களுக்கு எண்ணமிருப்பின், உங்களது ஆத்மா நற்கதியடைய வேண்டுமென உங்களுக்கிருப்பின், உங்களுக்கு ஈமான் உளதாயின், உங்களது மனச்சாட்சிப்படி நீங்கள் தீர்மானம் கூறுங்கள். ராலி பிரதர்ஸாகிய ஒரு க்ரீக் கம்பெனியினுடையவோ,-போர்ப்ஸ்,போர்ப்ஸ் அண்ட் காம்பெலினுடையவோ, தீர்வைச் சாவடியினுடையவோ, சம்பளக்காரர்களாக நீங்கள் இருக்கிறதாக நினைத்தல் கூடாது; அதைப்பற்றி ஒன்றுமே நினைக்கலாகாது; நீங்கள் ஆண்டவனது அடிமைகள், சேவகர்கள் என்று மட்டில் நினைத்தல்வேண்டும், கனவான்களே, இஃதோர் முக்கியமான விஷயமாகும். ஆதலால், உங்களுடைய மனச்சாட்சிப் பிரகாரம் தீர்மானியுங்கள்—என்னைக் காப்பாற்றுவதற்கல்ல, உங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கே. “நான் இதற்கு இடங்கொடேன்” என்று கூறி, என்னை நீதிபதி நிறுத்த விரும்பியபோது, “அவ்வாறாயின் இந்

நாடகத்தை நிறுத்தி, என்னைத் தடையன்னியில் என் தூக்கிலிடக்கூடாது" என அவரிடம் கூறினேன். நல்லது, அவர் புன்னகை செய்து, எனக்கும் அவருக்கும் இடையிலுள்ள விஷயம் மட்டும் அல்ல அது என்றும், அவருக்கும் பொதுமக்கட்கும் இடையிலுள்ள விஷயமுங்கூட ஆகும் அஃது என்று மறுமொழியளித்தார். இம்மண்டபத்திலும், தெருக்களிலும் கூட, ஆகிய இரண்டு இடத்திலும் பொது ஜனங்கள் ஆயிரக்கணக்கில் கூடி, நாங்கள் போகும்போதும் வரும்போதும் ஆரவாரித்து, கிழவிகளும் பர்தாவிலிருந்தும் கூட வெளிவந்து, இவ்விசாரணை முதற்கொண்டு என் வயது சென்ற தாயார் செய்தது போல்—அவர்கள் எங்களது கஷ்டங்களை நீக்கிவிட விரும்பினவர்களென அடையாளங் காட்டிக்கொண்டு அவர்களது தீர்மானத்தை ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள் என்று நான் பதிலளித்தேன்.

நல்லது, கனவான்களே, எனது பிரதிவாதம் ஆண்டவன், எனது நாட்டுச் சகாக்கள் ஆகிய இவர்கள் முன்னர் ஆகும். நாங்கள் இப்போது இங்கு இந்நீதிஸ்தலத்தில் கைதிகளாகவும், குற்றவாளிகளாகவும் விளங்குகிறோம். ஆனால், ஆண்டவனது தீர்ப்புஸ்தானத்தின் முன்னர், நீதிபதி, ஜூரி, குற்றவாளி, ஸகக்குற்றவாளிகள் யாவரும், பப்ளிக்ப்ராஸிக்யூடரும், அவரது துணைவரும், அரசனும், கூட ஒவ்வொருவரும் குழுமியிருக்கும்போது, "இன்று யாருடையது ராஜ்யம்" என்று ஆண்டவன் கேட்கின், "சக்தியும் கீர்த்தியும் உங்களதே, ராஜ்யம் தங்களதே" என்று நீங்கள் கூறுவீர்கள். "உங்களது ராஜ்யம் வரட்டும்" என்று இப்போது நீங்கள் கூறுகிறது. ஆனல், கனவான்களே, அவரது ராஜ்யம் வந்துவிட்டது. ஆண்டவனது ராஜ்யம் வந்துவிட்டது. இன்றுகூட இங்கு

ஆண்டவனது ராஜ்யம் இருக்கிறது. ஜார்ஜ் மன்னரின் ராஜ்யமன்று, ஆண்டவனதே. அந்த அடிப்படைகொண்டே நீங்கள் தீர்மானம் புரியல்வேண்டும். அந்நிலைவுகொண்டே நானும் நடத்தல்வேண்டும். அதுகாரணம்பற்றித்தான் எனது ஆண்டவன் சட்டத்துக்கு மாருக என்னை நடக்கும்படி ஜார்ஜ் அரசன் நிர்ப்பந்தியாவரை, நான் அவரது சட்டப்படி ஒழுகுவேன். என்னிடம் அவருக்கு ஆளுக்குஆள் விரோதமான கெட்ட எண்ணங்களே கிடையாது. இங்குள்ள நீதிபதிக்கு விரோதமாய்க்கூட, சர்க்காருக்கு விரோதமாயும், எனக்கு ஒன்றுமில்லை. எனது பொதுஜனப் பிரசங்கங்களிலிருந்து ஒரு உதாரணங்கூட எடுத்துக்காட்ட இயலாது. இல்லை, கனவான்களே, பொதுநன்மையையே நோக்கங்கொண்டு நாம் ஒழுகவேண்டுவதல்லாது, பரஸ்பர துவேஷங்கொண்டல்ல. ஒருகாலத்தில் நபிகளின் மாப்பிள்ளையும், ஞாதியும், வார்ஸுமான ஹஸ்ரத் அலிக்கு ஒருயூதன் மீது கோபம் பிறந்துவிட்டது; அவன் இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் கடவுளையும், இஸ்லாத்தின் ஈமானையும் அவமதித்தான். அலி அவனை உடனே கீழே தள்ளி, அவன்மீது குதித்து அமர்ந்துவிட்டார். உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதென்றே அந்த யூதன் நினைத்துக் கேவலம் ஒன்றுந்தோன்ருதவனுய் அலியினது முகத்தில் துப்பினுன். நீங்கள் பார்த்திருக்கிறீர்கள், தீயில் காய்ந்துவரும் பால் பொங்குந்தருவாயில் குளிர்ந்த ஜலம்பட்டவுடன் அடங்கிவிடுகிறதென்று. யூதனின் எச்சில் அவ்வாறே செய்தது; என்ன ஆச்சரியம், அலியின் கோபம் உடனேயே தணிந்தது; யூதனை விடுத்தார்; அவனும் கடிந்தேகினுன். ஆனுல், இவ்வெதிர்பாராத நிகழ்ச்சிகளைக் கண்டு அந்த யூதன் ஆச்சரியமடைந்து, அவர் பின்னர் ஓடிச்சென்று, அவரைக் கட்டிப் பிடித்துக்

கொண்டு "இஃதென்ன, மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறதே, நான் திட்டினபோது. நீங்கள் என்னைக் கீழே தள்ளினீர்கள், கொன்றுமிருப்பீர்கள்; ஒன்றுந் தோன்றாமல், நான் உங்கள் முகத்தில் துப்பினேன். நீங்கள் என்னை விட்டுவிட்டீர்களே" என அலி "நீ ஆண்டவனை அவமதித்தால் நான் உன்னைக் கொன்றிருக்கமுடியும்; ஆனால், நீ என்மீது துப்பினபோது, என்னைப் பொருத்தமட்டில்தான் எனக்கு உன் மீது கோபம் வந்தது; பரஸ்பர துவேஷமும் பொதுஜன சேவையாகிய கடமையும் ஒன்றோடொன்று பொருந்தாது. ஆண்டவன்நிமித்தம் நான் கொலையாளியாக இருக்கக்கூடும்; ஆனால்,அலிக்காக கொலைகாரனாய் விளங்க இயலாது"என்றனர். கனவான்களே, அலி என்ற அந்தப் பூஜ்யப் பெயரை நாங்களும் தாங்குகிறோம், அலியைவிடப் பெரியாரான மற்றொருவரின் பெயருங்கூட எனக்குண்டு. பரஸ்பர துவேஷம் காரணமாக அரக்கன் ஒருவனைக் கொலைசெய்ய நான் உடந்தையாயிருக்கமாட்டேன்; ஆனால், ஆண்டவன் பொருட்டு நான் யாரையும் கொன்றிடுவேன். யாவர் ஒருவரையும், நான் எஞ்சவிடேன், என் சொந்தச் சகோதரர்களையும், எனது அருமைத் தாயான கிழவியையும், மனைவி மக்களையும் ஆண்டவன் நிமித்தமாக எல்லாரையும் வதை செய்திடுவேன்—ஆதலால், ஆண்டவனே எனக்குத் துணை புரிவாராக! (இதை அவர் கூறியதும், அவரது குரல் எழும்பவில்லை, கண்ணீர் துளிகள் அவரது கன்னங்களில் வழிந்தோடின, முற்றிலும் களைத்து ஓய்ந்து உட்கார்ந்தனர்.)

அனுபந்தம் 2

வட்டமேஜை மகாநாட்டில்
மௌலானா முஹம்மது அலி
(19-11-1930-ல்) செய்த பிரசங்கம்

வட்டமேஜை மகாநாட்டில் மௌலானா முஹம்மது அலி (19-11-1930-ல்) செய்த பிரசங்கம்

அக்கிராசனபதியே,

நான் ஒரு நோயாளி என்பதால் உட்கார்ந்துகொண்டே பேசலாகுமா? எனது நண்பர் டாக்டர் மூஞ்சேயுக்குத் தேசத்துரோகி எனும் பட்டம் எவ்வாறு கிடைத்துளதென்னும் அவரது நிலைமையை அவரே விளக்கிவிட்டார். இவ் விஷயத்தில் நாங்களிருவரும் ஒன்ருக இணைக்கப்பட்டிருக் கிரூமென்றே நான் நினைக்கலாகும். அவரும் நானும் இந்தியாவை விட்டு புறப்பட்ட தினத்து, நாங்கள் குறிக் கொண்டு செல்லும் காரியம் விளங்காமற் போகவேண்டு மென்பதற்கு அடையாளமாக கறுப்புக் கொடிகள் பறந் தன; இத்தனை ஆண்டுகளாக எங்களுடன் உழைத்துவந்த ஜனங்கள் நாங்கள் ஏறிவந்த கப்பல் "வைசிராய் ஆப் இந்தியா" கடற் பிரயாணத்தக்கு உதவாதே போகக் கடவது என்று பிரார்த்தித்தனர்; இதை அவர் நன்கறிவார். இந் நாட்டிற்கு நான் வந்த பிறகுங்கூட, இங்கிலாந்திலுள்ள ஒரு சமாசாரப் பத்திரிகை—பணமுடையில்லாமல் அதை நிலைத்திருக்க உதவிபுரிந்துளேன்—பத்து லட்சம் பிரதிகள் இன்று விற்பனையாகிறதைப் பார்க்க எனக்கு மெத்தச் சந் தோஷம்—அது "டெய்லி ஹெரல்ட்"—எனது படத்தைப் பிரசுரித்து, 'மாறினவன்' என்ற திருநாமத்தையும் எனக்குச் சூட்டியது. தேசாபிமானமிருந்து தேசத்துரோ கத்திற்கு மாறினவன் என்பது அதன் அர்த்தம் போலும்; நேற்று கபடமற்றும், உண்மையாயும் பேசிய கன்ஸெர்வடிவ் பிரபுவைத் தவிரப் பார்லிமென்டில் மற்றொரு தீவரமான

கன்ஸெர்வடிவ் கனவான் இருக்கிறார்; ஆக்ஸ்போர்டில் அவர் எனக்கு ஆசிரியராய் விளங்கிய ப்ரொபஸர் ஸர். சார்லஸ் ஓமான் என்பார். அவர் எழுதிய சரித்திரப் புத்தகமிருந்துதான் ஒரு சிறு வாக்கியம் உதாகரிக்கிறேன்; அவ்வாக்கியம் இந்திய ஸிவில் ஸர்விஸ் பரீட்சையில் எங்களைக் கேட்டிருந்த கேள்விகளுள் ஒன்றின் விஷயமாய் விளங்கியது; அப்பரீட்சை நான் சென்று தவறியவன்; அவ்வாக்கியமாவது:—"ஸாரஸன் (Saracen) (அரபியன் அல்லது மகம்மதியன்) ஒருவனைத்தான் மாற்றுவது அசாத்தியம்" என்பதே. இங்குள்ள எல்லா வெள்ளையர்களைப்போலும், டாக்டர் மூஞ்சேயைப்போலும் என் நரம்பில் ஓடுகிறது ஆர்ய ரத்தம் என நான் சொல்லிக்கொள்ளவில்லை. என்னில் உள்ள ரத்தம் என்னை ஜெயிலுக்கு அனுப்பிய ரீடிங் பிரபுவின் நரம்புகளில் ஒருக்கால் ஓடிக்கொண்டிருக்கலாகும். நான் ஒரு ஸேமைட், யூதமதமிருந்து அவர் மாறியிராவிட்டால், நான்கூட இஸ்லாமிருந்து மாறவில்லை, பாய்ச்சின இடமே இருக்கிறது எனது நங்கூரம். என் கட்சியைச் சார்ந்த என்னை ஒருவனையே சிறப்புற்ற ராஜப்பிரதிநிதியோ அல்லது இங்குள்ள மாட்சிமை தங்கிய அரசின் ராஜாங்கமோ, அல்லது இந்த அதிசயப் பிரதிநிதிகளை நியமித்துள்ளவர்கள் எவர்களோ, அவர்களே என்னைப் பொறுக்கியிருக்கின்றனர். யாருடைய பிரதிநிதிகள் நாங்கள் என எங்களுக்கு விளங்கவில்லை. யாருக்காவது பிரதிநிதி என நான் என்னைக் கூறிக்கொள்ளவில்லை; ஆனால், இதுமட்டில் நான் சொல்லுவேன்; அதாவது, நான் கூறுவதை நீங்கள் கேட்ட பின்னர்—பொறுமையாகவே செவி சாய்ப்பீர்களென நம்புகிறேன்—எனது வேண்டுகோள் சரியென்றும், குறைந்தது 'என் உள்ளம் ஒன்று வைத்துப் புறம் ஒன்று

பேசவில்லை என்றுவது நீங்கள் சொல்லுவீர்களென்பது எனக்கு நிச்சயமாய்ப்படுகிறது. இஃதே போதுமானதாயிருக்கவேண்டுமென்பதே என் எண்ணம். ராஜீயத்தில், உள் ஒன்றும் புறம் ஒன்றும் விளங்குபவர்கள் அளவுக்கு மிஞ்சி உளர்.

பீல் பிரபுவுக்கு மறுமொழியளிக்கும் விஷயமாய், தலைவாயில் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில், நான் கூறியதேபோல்,ஒரு ஆங்கிலக்கவியிலிருந்துஅவருக்கு உதாகரித்துப் பதிலளிப்பேன். நீங்கள் பிரபு கன்ஸெர்வடிவ் தான், கன்ஸெர்வடிவ் ஆகவே இருந்துவிடுவீர்களென நான் நம்புகிறேன்; ஏனெனில், கன்ஸெர்வடிவ் ஒருவரைப்பற்றி நான் படித்த ஒரே லட்சணம் டென்னிஸன் கூறுகிறபடி "வாடிப்போன கிளையைத் தரித்தெறிகிறவனே சிறந்த கன்ஸெர்வடிவ்" என்று கூறினேன். மிகவும் உண்மையாகவும், கபடமற்றும் பீல் பிரபு வெளியிட்ட அபிப்பராயங்கள் தரித்தெறியப்படவேண்டிய வாடிப்போன கிளையை உண்மையில் குறிக்கிறது என நான் நினைக்கிறேன். இதுதான் அவருக்கு எனது ஒரே பதில். மற்ற கன்ஸெர்வடிவைப்பற்றியோ, இந்தியாவிலிருந்து வந்திருக்கிற நமது சொந்தச்சிற்றரசரான ஹிஸ் ஹைனஸ் ரீவா நாட்டு மகாராஜா ஸாகேப் அவர்களைப்பற்றியோ, அவரது பூர்வாசார ரட்சணையைப் பற்றி, எனக்கு முற்றிலும் நிச்சயமாய் விளங்கவில்லை. பர்க் என்பாரை அவர் கன்ஸெர்வடிவாக மதித்து—அவரது பிரசங்க முடிவில் அவரை உதாகரிக்கின், "கன்ஸெர்வடிவ் ஆகவே இருந்துவிடுங்கள்,அங்கேயே ஒட்டிக்கொண்டிருங்கள்" என்று நான் கூறுவேன்; ஏனெனில், பர்க் என்பாரை ஆதாரமாகக் கூறிக்கொண்டு, "பெரும் ராஜ்யங்களும் அற்ப

மனங்களும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவை" என ஹிஸ் ஹைனஸ் சொன்னார். பிரிட்டிஷ் ராஜ்யம்—நீங்கள் அதைச் சக்ராதிபத்யம் என்றாலும் சரி, பல ஜாதியினரடங்கிய பிரஜாதிபத்யம் என்றிடினும் சரியே, நீங்கள் உங்களதிஷ்டம் போல் எப்பெயரிட்டு அழைக்கினும் சரி, நான் அதைக் குறித்துக் கவனிக்கவில்லை—பிரிட்டிஷ் ராஜ்யம் பெரிதாகவே இருந்துவரவேண்டுமானால், அளவுக்கு மிஞ்சின காலமாகப் பஹிரங்கத்திலிருந்தும், பிரசங்கம் புரிந்தும் வரும் அற்ப மனத்தினர்கள் மறைந்தொழிதல் வேண்டும்.

பர்க் என்பாரின் சொற்படி நீங்கள் நடந்திருந்தால், அமெரிக்கா உங்கள் கைவசமிருந்து விலகியிராது; யுத்தக் கப்பல்கள் கட்டும் விஷயத்தில் இன்று நீங்கள் சமத்துவம் பேசிக்கொண்டிருக்கமாட்டீர்கள். தயாளத்துவத்தைக் குறித்து அதிகம் பேசல் வேண்டும். நீங்கள் கொடுத்தாக வேண்டிய அக்கடனெல்லாம் இருந்திராது. ஆயுத பரிகார மகா நாட்டின் பூர்வ கமிஷனுக்காக அத்துணை அடிக்கடி ஜினீவாவுக்கு நீங்கள் போகவேண்டியிருந்திராது. பூர்வாங்கம் எத்தனை நாள் பிடிக்குமோ ஆண்டவனே அறிவார். இவையெல்லாம் வந்துவிட்டன; ஏனென்றாலோ, உங்களது மகத்தான ராஜீய நிபுணரை, உங்களது மாபெரும் மந்திரியை நீங்கள் மறந்தீர்கள்; காமன்ஸ் ஸபையில் அவர் ஒருவர்; அவருக்கு நீங்கள் "சாப்பாட்டு மணி" எனப் பட்டமளித்தீர்கள்; எவ்வாறென்றிடின், பிரசங்கம் புரியுமாறு பர்க் என்பார் எழுந்ததும், நீங்கள் யாவரும் போய்விட்டீர்கள், சாப்பாட்டறைக்குச் சென்றீர்கள். பர்க்கை போன்றவர்களிடம் இன்னமும் நீங்கள் அவ்வாறே நடந்துகொள்ளுகிறீர்கள். ஆகையால், நான் கூறுவது யாதெனில்—இன்ன

மொருமுறை அவரையே ஆதாரமாகக் கூறுகிறேன்—"மனிதர்கள் அளவைகளல்ல." எவ்வாருன அரசாட்சி அமைப்பு நீங்கள் எங்களுக்குத் தயாரித்துத் தருகிறீர்களென்பதைப் பற்றி நான் குறிப்பாக இல்லை; ஆனால், உண்மையாளன் ஒருவன் இங்கிலாந்தில் இருந்தால், எல்லாம் சரியாகி விடும்:—

"என்றைக்கும், என்றைக்கும் திரும்பியே வாராத சாமானியப் பெரியார் சிலரைப்போன்ற மனமும், புத்தியும், செய்கையும் வாய்ந்த ஒருவரை அனுப்பத் தயைகூறுங்கள், கடவுளே! கூச்சல் நிறைந்த நாட்டில் மௌனம் வாய்ந்த பலவான் ஒருவன். அவனை எப்பெயரிட்டழைப்பினும், எனக்குப்பரவாயில்லை. பிரபுவோ, சர்வாதிகாரியோ, பிரஜாதிபத்யத்தின் தலைவனோ,—ஆட்சிபுரியும் திறன் வாய்ந்தவனாக மட்டிலிருத்தல்வேண்டும்; பொய்கூறத் துணியாதவனாயுமிருக்கவேண்டும்."

எனது பழைய நண்பர் மிஸ்டர் மாக்டொனல்டாவது ஆட்சி புரியும் திறன் வாய்ந்தவராய் விளங்குவாரென்றும், அவரது சொந்த மனச்சாட்சிக்கும், அவரது தேசத்திற்கும் பொய்கூறத் துணியாரென்றும் நான் நம்புகிறேன். எல்லாக் கட்சியினருமாகிய நீங்கள் அவருக்கு உதவிபுரிந்தால், அது உங்களது கடமையாகும், உங்களது பெயர் சரித்திரத்தில் விளங்குமென நான் உறுதி கூறுவேன். எனது பழைய நண்பரான மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டை நான் நம்புவதை விட இன்னம் அதிகமானது யாதெனில், குடியரசுவாதியாகிய யான் இதை ஒப்புக்கொள்ளுவேன்: அம்மனிதன் மீது நான் நம்பிக்கை வைக்கிறேன்—நான் அவரை "ஒரு மனிதன்" என்றே அழைக்கிறேன்—ஏனெனில், "அஃ

தெல்லாவற்றிற்கும் ஒரு மனிதன், மனிதன் தான்''— லார்ட்ஸ் சபையின் தாழ்வாரத்தில் இந்தச் சபையை ஆரம் பித்துவிட்டவரை ''ஒரு மனிதன்'' என்றே நான் அழைக் கிறேன்; அவரது பெயர் ஜார்ஜ். நீங்கள் அவரை மாட்சிமை தங்கியவர் என்றாலும் சரி, அல்லது, நீங்கள் அவரை எவ் வாறு அழைத்திடினும், அவர் ஒரு மனிதன் தான்! அவரது மந்திரிகள் பழையவர், புதியவர் யாவரையும் விட அவர் இந்தியாவை நன்கறிந்தவர்; மனித சமூகம் பூராவிலும் ஐந்தில் ஒரு பங்கினராய் விளங்கும் முப்பத்து முக்கோடி ஜனங்களுக்கு அவர் நீதி செய்யவேணுமென நான் எதிர் பார்க்கிறேன். இந்த என் நம்பிக்கைக்குப் பலமாய் விளங் குவது யாதெனில், இந்தியாவின் பூர்வாசார ரட்சகர்களாய் விளங்கி, அதோ அணியணியாயமர்ந்திருக்கும் சிற்றரசர்கள் காண்பிக்கும் ஆச்சரியகரமான தேசாபிமானமே.பீல் பிரபு வுக்கும், ரீடிங் பிரபுவுக்கும் இது ஆச்சரியமாகவிருக்கும்; ஆனால்,எனக்கு இது ஆச்சரியகரமாயிராது. நான் ஒரு விசித்திரமான ஆள் தான். நான் ஒரு பிரிட்டிஷ் குடி, இந் தியன் ஸிவில் ஸர்விஸ் பரிட்சையிலிருந்து என்னை விலக்கி யிருந்தனர்; ஏனெனில், நாட்டிலே பிறந்த பிரிட்டிஷ் குடி நான் அல்ல என்றனர்—என் தாயிடமிருந்து ருசுவரும் வரை என்னைத் தாத்காலிகமாக சேர்த்துக்கொண்டனர், கடைசியாக அவர்கள் என்னைச் சேர்த்துக்கொண்டும் விட் டனர்—ஒரு இந்திய சிற்றரசின் குடி கூட நான்; இவ்விஷ யத்தில் கூட யான் இச்சபையில் தனித்தவனாய், அதாவது, என்னைப்போன்ற யாருமிலனாக, விளங்குகிறேன். நான் ஒரு சிற்றரசனது ராஜ்யத்தில் பிறந்தேன்; நான் அந்த ராஜ்யத்தில் உத்தியோகம் வகித்திருக்கிறேன். நான் மற் றொரு ராஜாங்கத்தில் அதாவது பரோடாவில் வேலை

பார்த்திருக்கிறேன் — எனது எஜமானுயிருந்த கேக்வார் இதோ இருக்கிறுர்.; ஏழு வருஷகாலம் அவரது உப்புத் தின்றேன்—இரண்டு வருஷம் முன்னர் நான் 'சாகக் கிடக்கையில், அல்வர் நாட்டு ஹிஸ் ஹைனஸ் ஆன ஒரு இந்திய சிற்றரசர்தான் அவரது சொந்தச் செலவில் இங்குள்ள அவரது வைத்தியரிடம் என்னை அனுப்பினுர். ஸிம்லாவில் இன்னமொரு முறை நான் இறந்துவிடுவேனே எனக் கருதினபோது, ஒரு சிற்றரசர்தான்—நான் அவருக்குத் தனி ஆசிரியராக அப்போதுதான் அமர்ந்திருந்தேன், போபால் நவாப் சாகிப் ஆகும் அவர். உபசரணை என்பதையே என்னிடம் உண்மையாய் விளக்கிக் காட்டியவர்—பிரிட்டிஷர் இன்னம் அதை அனுஷ்டிக்கவில்லை—அவருடைய விருந்தினர் விடுதியை ஒரு ஆஸ்பத்திரியாக என்பொருட்டு மாற்றிவிட்டார். இங்குள்ள ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் எனக்கு இலவச வைத்தியம் செய்துவிக்க இடங்கொடுத்தால், அப்போதுதான் பிரிட்டிஷார் மனோதர்மத்தில் உபசரணை செய்து வருகிறதுபோல், கிரியாம்சையிலும் எனக்கு அதை இயற்றியவர் ஆவர். ஸிம்லா ஆஸ்பத்திரியில் நானிருந்தபோது, நிச்சயதாம்பூலமாகியிருந்த இருவரன்களுக்கிடையில் என்னைச் சாதுர்யமாய்க் கிடத்தியிருந்தனர். ஒரு பக்கல் கன்னிகை, மற்றப் பக்கம் ஒரு ராணுவ உத்தியோகஸ்தர். இவ்விருவருக்குந்தான் சமீபத்தில் விவாக மகோற்சவம்; அன்னோருக்கிடையில்தான் எனது அறை. இருவரும் பாதைப்பட்டுக்கொண்டிருந்தனர். ஐரோப்பியர்கள் இருக்கும் இடத்திற்கு அசாதாரணமான தோற்றமுள்ள ஒரு இந்தியன் வருகிறதைக் கண்டு அப்பெண் "இக்கிழவனுக்கு என்ன நோவு" என்று எங்கள் வைத்தியரைக் கேட்

டாள். "அக்கிழவனுக்கு இல்லாத நோவு என்ன" என்று கேட்டால் உசிதமாயிருக்குமென விடை பகர்ந்தனர். வைத்தியர் என்னைப்போல் ஹிருதயம் வீங்கின ஒருவன்; கண்ணிலுள்ள ஜவ்வுக் கோளாறினால் குருடனாகப் போகிறவன், அடிக்கடி குருடாயிருந்தும் வருகிறவன்; நரம்பு சம்பந்தித்த வியாதியால் ஒருதரம் பாதமழுகினவன்—ஜலோதரத்தால் வீங்கியுள்ள இப்பெரும்பாதம், மாமிசத்தைச் சம்பந்தித்த ரோகம் என்ன; நீர்ரோகம் என்ன; நீண்ட ஜாப்தா பூராவும் ஒப்பிக்க முடியும், கர்னல் கிட்னி மட்டில் நான் அவருடன் வைத்தியத்தில் போட்டி போடுகிறேன் என நினைக்காவிடில்; இந்த நோவெல்லாம் உள்ள ஒருவன் அவனுக்கு புத்தி இருந்தால் எழு மைல் போக மாட்டான். நீரும் நிலமும் சேர்ந்து எழாயிரம் மைல் வந்து விட்டேன். ஏனென்றால், இஸ்லாமும் இந்தியாவும் சம்பந்தித்த விஷயத்தில் எனக்குப் பைத்தியம்தான்; "டெய்லி ஹெரல்ட்" கூறுகிறதுபோல், நான் "மாறினவன்" தான். சர்க்காருக்கு விரோதியாயிருந்து தேசத்துக்கு 'துரோகி' யாய்விட்டேன், இப்போது நான் சர்க்காருடன் ஒத்துழைக்கிறேன். இவ்வேலையைப்போல், ஆண்டவன் காரணமாக மட்டில் இருப்பின், பேயோடு கூட என்னால் வேலை செய்ய முடியும்.

எனது அசௌக்கியம், நோவு, மற்ற எல்லா விஷயங்கள், ஆகிய இவைகளைக் குறித்து இந்த நீண்ட பீடிகை போட்டதற்கு நீங்கள் என்னை மன்னிக்கவும். ஆனால், விஷயம் என்னவென்றால் இன்று நான் வந்திருக்கும் கருத்து யாதெனில், எனது கையில் சுதந்தரம் என்னும் பொருளோடு நான் செல்லக் கூடுமாயின், என் நாட்டிற்குத்

திரும்பிப்போக இஷ்டமுண்டு; இல்லையேல், அடிமைத் தேசத்திற்கு திரும்பேன். ஒரு அன்னிய நாட்டில், அது சுதந்தர தேசமாயிருந்திடில்போதும், நான் அங்கு உயிர் நீத்தலும் மேல்; இந்தியாவில் எங்களுக்கு நீங்கள் சுதந்தரம் அளிக்காவிட்டால், நீங்கள் என்னை இங்கேயே அடக்கஞ் செய்ய நேரிடும்.

கன்ஸெர்வடிவ்களுக்கு வந்தனஞ் செலுத்திவிட்டு, அன்னாரைக்குறித்துப்பேச ஆரம்பிக்கிறேன். சர்க்கார் எங்களுக்களித்த உபசார விருந்தில் மிஸ்டர் பால்ட்வினை நான் சந்தித்தபோது—அச்சமயம் நான் உண்மையில் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தேன்; படுக்கையிலேயே இருந்திருக்க வேண்டும்—சொர்ரிக்கட்டை சுக்கான் எப்போது வெளி வரும் எனக்காத்திருந்தேன்; ஆண்டவனருளால், அது வெளிக்கிளம்பியது. ஆதலால், நான் மிஸ்டர் பால்ட்வினை அணுகி இரண்டு விதத்தில் உங்கள் பெயர் சரித்திரத்தில் விளங்கும். பணக்காரச் சோம்பேறிகள் என்கிறார்களே, அக் கட்சியைச் சார்ந்த கர்னஸெர்வடிவ் ஆக இருந்தும், இச் சட்டத்தை ஸ்தாபிக்கவாவது உங்களுக்கு இரக்கம் இருந்தது: அதாவது, "விருந்திற்குப்பிறகு இங்கு கொரோனாத் தான் புகை பிடிக்கலாம். அப்பேர்ப்பட்ட இடத்தில், பிரியமுள்ளவன் இப்போது மட்டதுண்டுப் புகையிலையை வெளியில் எடுக்கலாம், சொர்ரிக்கட்டை சுக்கானில் போடலாம், நான் ஆக்ஸ்போர்டில் வழக்கமாய்ச் செய்ததுபோல், அதைப்புகைபிடிக்கலாம்." ஆனால், நான் அவரிடம் கூறியுள்ளது போல், சரித்திரத்தில் விளங்கலான மற்றொரு விஷயம்கூட அவர் செய்துளார்: இர்வின் பிரபு போன்ற ஒரு கன்ஸெர்வடிவ் ராஜப்பிரதிநிதியை அவர் அனுப்பியிருக்கிறார். இன்று

பிரிட்டிஷ் ராஜ்யத்தை எவராவது காப்பாற்றியிருக்கிறதா யிருந்தால், அது அந்த நெட்டையான, ஒல்லி கிறிஸ்தவர் தான். இர்வின் பிரபு இன்று அங்கு இல்லாதிருப்பின், யாது நேர்ந்திருக்குமோவென்பதை ஆண்டவனே யறிவான். குறைந்தது, “மாறினவன்” என்கிறார்களே என்னை, நான் அவ்வாறு “மாறி” இருந்திருக்கமாட்டேன், இவ்வட்ட மேஜையிடத்து நாங்கள் வந்திருக்க முடிந்திராது; சமாதானம், சிநேகம், சுதந்தரம் ஆகிய இவை பொருட்டு, நாங்கள் இங்கு வந்துளோம். அவையாவற்றுடனும் நாங்கள் திரும்புவோமெனவே நான் நம்புகிறேன்; அவ்வாறில்லையேல், சண்டைபோடுகிறவர்கள் வரிசைகளுக்கிடையில் நாங்கள் திரும்பச்செல்லுகிறோம். அங்குதான் பத்து வருஷங்களுக்கு முந்தி இருந்தோம். இப்போது எங்களைத் தேசத்துரோகிகள் என அவர்கள் அழைக்கலாம்; அப்புறம் நீங்கள் எங்களை கலகக்காரர்கள் என்றும் பிரஷ்டர்கள் என்றும் கூறுவீர்கள். நாங்கள் பொருட்படுத்தோம்.

மேன்மைதங்கிய இர்வின் பிரபுவைப்பற்றி ஏதோ கொஞ்சம் சொன்னேன்; ஆனால் அவை யாவையும் அவரது அரசாங்கத்திற்குப் பொருத்த எனக்கு இஷ்டமில்லை. அன்னார் விஷய நிர்வாகம் துக்ககரமானதே. அவர்களது முக்கிய கட்டளை எங்களுக்கு மற்றொரு “சரித்திர சம்பந்தமான தஸ்தாவேஜ் ஆக விளங்குகிறதென்பதுதான் அதைப்பற்றி ஒரு நல் விஷயம். நாங்கள் யோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய தஸ்தாவேஜ் ஸைமன் கமிஷன் ரிபோர்ட் மட்டுமல்ல. அக்கட்டளை அதிமோசமான தஸ்தாவேஜ்.” அதற்குப்பின் நாங்கள் செய்யக்கூடிய அதிசிறப்பான விஷயம் யாதெனில், இங்கு எங்களது சொந்த “சரித்திர சம்பந்த

மான தஸ்தாவேஜ்" சிருஷ்டிப்பதே, இரு பெரு நாட்டினது அதிசிறப்பான மனங்களும், மூளைகளும் இங்கு கூடியுள்ளன. இங்கு இருந்தேதீரவேண்டியவர்களான பலர் இந்தியாவில் இன்னமும் ஜெயிலில் இருந்துவருகின்றனர். மிஸ்டர் ஜயகரும், ஸர் தேஜ் ஸாப்ரூவும், நானும் ராஜப்பிரதிநிதிக்கும் காந்திஜிக்கும் சமாதானம்செய்துவைக்க யத்தனித்தோம், ஆனால் பயனில்லை. முதலில் சென்றவன் நான், ஆனால், பிரயோசனமில்லை. சுதந்தரப்பொருளை எங்களுடன் தூக்கிக்கொண்டு இந்தத்தடவை எங்கள் நாடு நாங்கள் திரும்பச் சென்றால் நாங்கள் பிரயோசனமடையாமற் போகோம் என நான் நம்புகிறேன்.

"ஓ, ஆம், ஆனால் உங்களுக்கிசைந்ததோர் திட்டத்தோடு, நீங்கள் உங்களது நாடு திரும்பச் சென்றால், ஒத்துழையாதார் உங்களது கையிலிருந்து அதைப்பிடுங்கிக்கொண்டுவிடுவார்கள்" என பீல் பிரபு புகன்றார். அதைப் பிடுங்கவா! பிரிட்டிஷருடன் சண்டையிட என்னால் இயலும்போது, இந்தியர்களுடனும் சண்டைபோட முடியும். ஆனால், சண்டையிட எதேனும் எனக்களியுங்கள். இங்கிருந்து அடிமைப் பட்டயம் ஒன்று என்னைத் திரும்பவும் எடுத்துச் செல்லும்படி செய்யாதீர்கள். அதை வைத்துக்கொண்டு என் சொந்த ஜனங்களுடன் என்னைச் சண்டையிடும்படி எதிர்பாராதீர்கள். அவ்வாறு நான் செய்ய இயலாது. அப்படிச் செய்ய முயன்றால், நான் தவறிப்போவது நிச்சயம். ஆனால், எங்களது கையில் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டு, என் நண்பர் மிஸ்டர் ஜயகர் யாவர்பொருட்டு பேசினரோ, அவர்களிடம் சந்தோஷமாய் திரும்புவேன். யுவ இந்தியாவின் பொருட்டு பேசுகிறதாக அவர் கூறு

கிருர். அவரைவிட வயதில் நான் பெரியவனுகிலும், மனே தைரியத்திலும், உற்சாகத்திலும், சுபாவத்திலும், சண்டையிடுவதின் ஆசையிலும், நான் இளைஞனே என்பதை அவர் அறிவாரென்றே நான் எண்ணுகிறேன். மிஸ்டர் ஜயகர் நியாயஸ்தலத்தில் வக்கீல்தொழில் நடத்திவருகையில், நான் ஒத்துழையா இயக்கத்திலிறங்கிவிட்டேன். (மிஸ்டர் ஜயகர் தலையை அசைத்தார்). எவ்வாருயினும், என்னுடன் அவர் சிறையில் இல்லை. ரீடிங் பிரபுவால் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டவர் பலரில் என் அண்ணனும், நானும் முதலில் சென்றவர்களே. அதற்கு எனக்கு அவர்மீது வருத்தங் கிடையாது. ஆனுல் எனக்கு அதிகாரம்கூட வேண்டும். இந்தியாவில் ரீடிங் பிரபு மறுபடியும் பிசகாய் நடந்தால், அவரை ஜெயிலுக்கனுப்ப எனக்கு அதிகாரமும் வேண்டும்.

குடி எற்று நாட்டு அந்தஸ்து கேட்க நான் வந்திருக்கவில்லை. குடியேற்று நாட்டு அந்தஸ்து அடைவதை நான் நம்பவில்லை. நான் கட்டுப்பட்டிருக்கும் ஒரேவிஷயம் பூரண சுதந்தரம். 1927ம் ஆண்டில் சென்னையில் இதை எங்களது கடைநோக்கமாக வைத்து ஓர் தீர்மானம் நிறைவேற்றினேம். 1928ம் ஆண்டில் ஸர்வ கட்சி மகாநாட்டில் நெஹ்ரு ரிபோர்ட் திட்டம் அங்கீகாரம் ஆலோசனைக்குக் கொணரப்பட்டது. அதன் முதல் ஷரத் குடியேற்று நாட்டு அந்தஸ்தைப்பற்றி. எனது பழைய காரியதரிசி, இன்றைக்குக் காங்கிரஸ் பிரஸிடென்டாக விளங்குகிற பண்டித ஜௌஹர்லால் நேருவைக்கூட, அவரது தகப்பனுர் அமர வைத்துவிட்டனர். "நாயாய்ப் பிறந்தாலும் பிற, தம்பியாக மட்டில் பிறவாதே" என்ற பாரசீகப்பழமொழி ஒன்றுண்டு. அதோஇருக்கிற என் பெரிய அண்ணனைப் பார்த்தால்,

கர்னல் வெட்ஜ்உட் கூறியபடி "ஏழடி உயரம் ஐந்தடி அகலம்" நான் இப்பாரசீகப் பழமொழியில் நம்பிக்கைகொண்டுளேன் என்பது உங்களுக்கு நன்கு விளங்கும். ஜௌஹர்லால் விஷயத்தில் "பூனையாய் பிற, உன் அப்பனுக்குப் பிள்ளையாய்ப் பிறவாதே" என்றே கூறுவேன். ஏனெனில் அவரது தகப்பனார்தான், காங்கிரஸ் பிரஸிடெண்ட் என்ற ஹோதாவில், 1928ம் ஆண்டில் கல்கத்தாவில் ஏழை ஜௌஹர்லாலைக் குரல்வளையைப் பிடித்தது. நல்லது, பூரணசுதந்தர சார்பாக அவர் பேசமுடியாதபோது அவரது ஸ்தானத்தில் நான் எழுந்தேன். குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் குறித்த ஷரத்தை நான் எதிர்த்துப் பேசினேன். ஆனால் 1929ம் ஆண்டில் ஜௌஹர்லாலைப்போல் நான் மேலே போகவில்லை. அதை எனது கொள்கையாகக் கொள்ளவுமில்லை. ஏனெனில். காங்கிரஸில் அதை எங்களது கொள்கையாக நாங்கள் ஒருதரம் செய்துவிட்டால், அக்கொள்கையை ஏற்றுக்கொள்ளாத எவரையும் காங்கிரஸில் நாங்கள் சேர்த்துக்கொள்ள இயலாது. மத்யஸ்தத்துக்கு இடமிருக்கவேண்டுமென்பதே என் விருப்பம். யாரையும் வரவொட்டாது தடுக்க எனக்கு இஷ்டமில்லை. மேன்மை தங்கிய இர்வின் பிரபு, ஒரு கன்ஸெர்வடிவ் வைசிராய், 'இடத்திலிருக்கும் ஆள்.' இடத்தில் அவர் கண்டது அவரது மனதில் போதுமான அளவு பட்டிருக்கிறது. அவரும் இங்கு வந்துளார். லண்டனுக்கு நாங்கள் வந்ததும், தெருவில் போகும் மனிதனைக் கேளுங்கள் என ஒவ்வொருவரும் கூறுவது எங்களது செவிக்கு எட்டியிருக்கிறது. தெருவில் செல்லும் ஒருவனுக்கு யாவரேனும் எப்போதாவது செவி சாய்க்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது; ஆனால் ராதர்மீர் பிரபுவும், பீவர்ப்ருக் பிரபுவும்,

மற்ற ஒவ்வொருவரும் தெருவில் போகிறவன்தான் கடைசி அப்பீல் கோர்ட்டென மதிக்கிறதுபோல் பேசுகின்றனர். இந்தியாவில் அது "இடத்திலிருக்கும் ஆள்". நல்லது. "இடத்திலுள்ள ஆள்" இங்கு வந்தார், "தெருவில்போகும் நாட்டாண்மை" ஆளிடம் பேசினார்; அவரே இங்கு அக்கிராசனம் வகித்திருக்கிறார். மாறினவர்களிடத்தே அவர் பிரசங்கம் புரிந்தாரென்பது எனக்கு நிச்சயம். மிஸ்டர் பால்ட்வினைக்கூட அவர்கள் திருப்பிக் கொணர்ந்தார்கள்; சில கன்ஸர்வடிவ்களையும் அவர்கள் திருப்பி, அவர்களால் கூடுமான ஒவ்வொருவரையும் திருப்பினர்; "பொறுப்புள்ள அரசாங்கம்" என்று அவர்கள் 1917ல் சொன்னது "குடியேற்ற நாட்டு அந்தஸ்து" என்ற அர்த்தத்தில்தான் என்று அறிக்கை செய்தனர். அது 1924ம் ஆண்டில் இந்திய சட்டசபையினது மிகவும் நினைவிலிருக்க வேண்டிய ஒரு மீட்டிங்கில் அக்காலத்தில் ஹோம் இலாகாவை நிர்வாகம் செய்த உத்தியோகஸ்தரால் கிளப்பப்பட்ட மூடுபனியை விலக்கியது. அவரை இன்று இங்கு காண எனக்குச் சந்தோஷமே.

இரண்டு, மூன்று தினங்களுக்குமுன் நான் கூறியபடி 150 மைல் அடியெடுத்து வைக்கக்கூடிய பாதரட்சை இந்தியா போட்டிருக்கிறது. சிரமத்துடனே நாங்கள் மேல் நோக்கிச் செல்லுகிறோம். இது உலகத்துக்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்; ஒரு புதிய குடியேற்ற நாடு பிறந்தாலொழிய நாங்கள் இந்தியா திரும்பச் செல்லோம். ஒரு புதிய குடியேற்ற நாட்டுப் பிறவியில்லாமல், நாங்கள் திரும்ப இந்தியா சென்றால், என் கூற்றை நம்புங்கள், கஷ்டமான ஒரு குடியேற்ற நாட்டிற்கு நாங்கள் திரும்புவோம். ஒரு அமெ

ரிக்காவுக்கு நாங்கள் திரும்புவோம். அப்போது நீங்கள் காணலாம்—பிரிட்டிஷ் ப்ரஜாதிபத்யம் அல்லது பிரிட்டிஷ் ராஜ்யத்துக்குள்ளாவது அல்ல—ஆனல் அதற்கு புறம்பே—இந்திய சிற்றரசர்களோடுகூட, டாக்டர் மூஞ்சேயுடன் கூட, மிஸ்டர் ஜயகரோடுகூட, என்னேடும் என் அண்ண னுடன்கூட இந்தியாவின் சுதந்தர, ஐக்கிய ராஜ்யங்களை, அதைவிடக் கொஞ்சம் அதிகயாகவே யிருக்கும் அஃது. நீண்ட வருடங்களுக்கு முன்னர் நான் ஆக்ஸ்போர்டை விட்டுப் பிரிந்த சிறிது காலத்துக்குப்பின் எழுதியதுபோல், ஒரு அமெரிக்காவைவிட ஏதோ சற்று சிறந்தது இந்தியா வில் எங்களுக்கு உளதாகும். ஏனெனில், எங்களுக்கு உளவாவது ஐக்கிய - ராஜ்யங்கள் மட்டுமல்ல, ஐக்கிய மதங் களும் கூட.

"ஒன்று போன்றதல்ல மற்றென்று; ஆயினும், பேதத்தில் ஒன்று போன்றதே; ஒவ்வொன்றும் சுயமரி யாதை வாய்ந்தது; பிறருக்கு மரியாதையுமளிப்பது; தனித் தனியாகவே விளங்க வல்லது; ஆனல், பிரியம் வாய்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் போன்றது."

இவ்வெண்ணங்கள் எங்களது ஹிருதயங்களில் பொங்க, நாங்கள் இங்கு வந்திருக்கிறேம். இப்போது நமது கன் ஸர்வடிவ் நண்பர்களையும், நமது ராடிகல் நண்பர்களையும், நமது தொழிலாளி நண்பர்களையும், இன்னும் அதிகமாக ஓர் ஆசாமியையும்—இங்கிலாந்தில் யாரைக்காட்டிலும் எனக்கு அவரிடம்தான் நம்பிக்கை—மாட்சிமை பொருந்திய ஜார்ஜ் மன்னர், நல்ல விக்டோரியா ராணியின் பேரன்—இந்தியா மீது அவருக்கு அபிமானமில்லையென யாரும் கூறத் துணி யார்—இவர்களைப் பொறுத்ததாகும். அவளது வாஞள்

முழுவதும் இந்தியாவின் பெரும் பட்டயமே, அவளது பேரப்பிள்ளை காலத்தில் "மூன்றும் ஜார்ஜ் அமெரிக்காவைத் தொலைத்தான்; ஐந்தாம் ஜார்ஜ் இந்தியாவை வசியம் செய்தான்" என சரித்திரம் கூறும்.

கஷ்டங்கள் இருக்கின்றனவென்கின்றார்கள். "சிற்றரசர்களது நாடுகளைப் பாருங்கள்" என்கின்றனர். ஆனால் நான் அந்நாடுகளைச் சார்ந்தவன்தான்; எவ்விதக் கஷ்டமுமில்லையென எனக்குத் தெரியும். "அப்புறம், சேனை இருக்கிறது." நல்லது, சேனையைப்பற்றி என்ன? இன்று ஸைன்யம் எங்களதல்லவென்பது பிரிட்டன்மீது மாபெருங்குற்றமாகும்; சைன்யம் என்று சாக்கு போக்குகள் எப்போதாவது நீங்கள் கூறினால், உங்களது சொந்த வாயினாலேயே நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொள்ளுகிறீர்கள். பட்டவர்த்தனமாயும், யோக்கியமாயும், நான் உங்களுக்குக் கூறுவேன்; ஆனாலும், நட்பு முறையில் கூறுகிறேன்; இந்தியாவைப் பேடியாக்கியது மஹத்தான பாபமாகும்.

"கவனியுங்கள், கவனியுங்கள்" என டாக்டர் மூஞ்சே கூறுகிறதைக் கேட்க எனக்குச் சந்தோஷம். எங்களது ஜனங்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுவதும், கொஞ்சநேரம் அதனால் அவர்கள் ஓடுவதும், பிறகு திரும்புவதும், இதைப்பற்றி அவர் பேசுவதைக் கேட்க எனக்கு வருத்தமாயிருக்கிறது. நாங்கள் முப்பத்து முக்கோடி ஜனங்கள். பஞ்சம், பிளேக் முதலியவைக்கு லட்சக் கணக்காய் அவர்கள் ஆளாகையில், பிரிட்டிஷ் குண்டுகளுக்கும் அவர்கள் நிச்சயமாக ஆளாகலாம். காந்திஜி எங்களுக்குக் கற்றுக்கொடுக்க விரும்பிய பாடம் இதுதான்; இப்போது நாங்கள் கற்கவேண்டிய பாடமும் அதுவேதான். 1913-ம்

ஆண்டில் நான் இந்நாட்டிலிருந்தேன்; காந்திஜி அப்போது தென் ஆப்ரிகாவில் அவரது இயக்கத்தை நடத்திக்கொண்டிருந்தார். எஸ்ஸெக்ஸ் மண்டபத்தில் ஒரு கூட்டத்திற்கு மிஸ்டர் ஜி. கே. செஸ்டர்டன் தலைமைவகித்தார்; என்னைப் பேசுமாறு அவரும் அழைத்தார். காந்திஜியின் புதிய தத்துவத்தைக் குறித்து மற்ற வாக்காளர்கள் பேசியிருந்தனர், "அதைக் குறித்து ஒரு விஷயம் தயவு செய்து அறிந்து கொள்ளுங்கள். இது அவருடைய தத்துவமோ, டால்ஸ்டாயினதோ, யேசு கிறிஸ்துவினதோ, அல்லது எனதோ, எவ்வாறாயினும், அது பிரம்மாண்டத்துள்ள மானிடருக்கமைந்த தத்துவம்" என்றேன். கொலைபுரிதல் என்கிற எண்ணம் மட்டிலிருந்தால், சண்டையில் ஜயிப்பவர் யாருமிலர். கொல்கிறது என்ற எண்ணத்திற்கு முன்பு கூட, சாக வேண்டும் என்கிற எண்ணம் உங்களுக்கிருக்கவேண்டும். இந்தியாவில், எங்களுக்குக் கொலை செய்யும் அதிகாரமில்லை; ஆனால், சாக வேண்டும் எனவான மனப்பான்மையை நாங்கள் விருத்தி செய்யும் க்ஷணமே கணக்கிட்லாகும். முப்பத்து முக்கோடி ஜனங்களைக் கொன்று விடுவது சாத்தியமல்ல. முப்பத்து முக்கோடி ஜனங்களைக் கொல்ல இயந்திரம் இயற்ற உங்களுக்குப் பணம் கிட்டாது. அவ்வியந்திரம் கிட்டினாலும்கூட, தளவாடங்கள் உங்களுக்கு கிடைத்தாலும் கூட, முப்பத்து முக்கோடி ஜனங்களைக் கொல்ல நற்குணமோ, தீக்குணமோ, தைரியமோ கிடையாது. ஒரு சுதந்தர ஐக்கிய ஜாதியாக இந்தியா பிறக்க வேண்டுமாயின், அதன்பொருட்டு நாங்கள் உயிர் கொடுக்கலான திண்மை எங்களிடமிருத்தல் வேண்டும். இதைத் தான் நாங்கள் சீக்கிரமாய் வளர்த்துவருகிறோம். இஃது பூரணமாய் வளர்ந்த பின்னர், நீங்கள் யாது செய்ய

இயலும்? அவர்களது நாட்டின் சுதந்தர நிமித்தம் உயிர் விடத் தயாராகவும், நிராயுதபாணிகளாகவும், ஸாத்விகமாயுமுள்ள ஜனங்கள்மீது நீண்ட நேரம் தீ பொழியுமாறு அத்துணை கன்னெஞ்சமும், உபேட்சையும் வாய்ந்த ஒரு நூற்றுவர் இங்கிலாந்து பூராவுமே காணக்கிடைக்குமாவென ஒரு கணமேனும் நான் யோசனை செய்ய வேண்டவே வேண்டாம்; ஆங்கிலச் சிப்பாய்கள் அத்துணை கெட்டவர்களென நான் நினைக்கவில்லை.

இக் காலமெல்லாம் எங்களைக் கலக்கியே வரும் உண்மை பிரசினை யாதெனில், மூன்றாவது பிரசினை—ஹிந்துமுஸ்லிம் பிரசினை; ஆனால், அஃது பிரசினையேயன்று. விஷயம் யாதெனில், ஹிந்துமுஸ்லிம் சங்கடம், சேனை சங்கடத்தைப்போல், உங்களது சொந்த சிருஷ்டியே யாகும். ஆனால், பூராவுமல்ல. "பிரித்தாளுதல்" என்கிற பழைய கொள்கையே அஃது. ஆனால் இங்கே இவ்வேலையில் பங்கு இருக்கிறது. பிரிந்திருக்கிறது நாங்கள், ஆட்சி செய்கிறது நீங்கள். பிரிகிறதில்லை என நாங்கள் தீர்மானிக்கும் க்ஷணமே, நீங்கள் இன்று ஆண்டுவருகிறதுபோல் ஆளவே முடியாது. பிரிகிறதேயில்லை என்ற தீர்மானத்துடன் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். எங்களது கதியை உருவாக்கியமைக்க எண்ணமிடும் ஒவ்வொரு பிரிட்டிஷ் பூமானுக்கும் ஸ்திரீக்கும் நான் நிச்சயமாய்க் கூறுவது யாதெனில், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இன்று இடையிலுள்ள ஒரே சண்டை யாதெனில், ஹிந்துவுக்கு எங்கே அதிகாரம் கிடைத்துவிடுகிறதோ என்று முஸ்லிமுக்குப் பயம், முஸ்லிமுக்கு ஒரு சமயம் அதிகாரம் வந்துவிட்டாலோ என, ஹிந்து, நான் நினைக்கிறேன்,

பயப்படலாம் எனலான ஒரு சண்டைதான். (டாக்டர் மூஞ்சே: இல்லை, ஹிந்துவுக்கு ஒருபோதும் பயமில்லை). நல்லது, அதைக் கேட்க எனக்கு மெத்தச் சந்தோஷம். எனது நாட்டில், எருமைக் கிடாரிக்கு பயம் வந்தால்தான் அது முட்டவருகிறது; பசுவினிடத்து ஹிந்துவுக்குள்ள பயபக்திவிசுவாசம் என்னவாறிருப்பினும், எருமைக் கிடாரிக்குள்ள பயம் அவனிடத்து என்றும் கிடையாது; அவ்விஷயத்தில் எனக்குச் சந்தோஷமே. அப்பயத்தை ஒழித்துவிட வேணுமென எனக்கு இருக்கிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இன்று சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார்களே அவ்விஷயமே யாதெனில், ஒரே ஒரு கணமேனும் பிரிட்டிஷ் அதிகாரத்தை அவர்கள் யாவரும் பொறுக்க முடியவில்லை. இது மனதில் நன்கு வாங்கிக்கொள்ளவேண்டிய குறிப்பான விஷயமாகும். இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரம் ஒழியவேண்டியதுதான். நமது நட்புங்கூடவா ஒழிதல் வேண்டும்? எனது சகோதரர் சர்க்கார் வேலையிலமர்ந்தார். 17 வருஷம் உழைத்தார், ஆனால், அவர் எனக்கு ஒரு விஷயம் செய்தார். அவர் என்னை ஆக்ஸ்போர்டுக்கு அனுப்பினார். "ஆக்ஸ்போர்ட் எனலான அந்த ஸ்தலத்தின் மீது உன் அந்தரங்கத்தில் உனக்கு அபிமானமிருக்கிறது" என அவர் ஒத்துழையாமை இயக்க நாளில் கூறி என்னை எப்போதும் பரிகசிப்பர். எனக்கு அவ்வாறிருந்ததெனவே நான் ஒப்புக்கொள்ளல் வேண்டும். நான் அங்கு நான்கு ஆண்டு கழித்தேன். அக்காலத்தைக் குறித்த அதி இன்பமான நினைவுகளே எனக்கு எப்போதும் இருந்துவருகின்றன; அவ்வுணர்வைக் காத்துக்கொள்ளவே எனக்கு விருப்பம். எனக்கு அறிவூட்டிய ஸ்தலமிடத்து என் அந்தரங்கத்தில் எனக்கு அபிமானம் உண்டுதான். ஆனால், என்

அண்ணனையுங்கூட நான் பரிகசிக்க இயலும். கராச்சியில் அவர் விசாரணை நடக்கும்போது—ஜூரி எங்களை விடுதலை செய்தனர், அவர்களில் பிரிட்டிஷ் ஜூரர் ஒருவர், நாங்கள் மிகத் தமாஷ் பேர்வழிகளாக இருந்தபடியால், எங்களை விட்டுவிடலாகும் என அவர்கள் அபிப்பராயம் கூறினர்—என்று பெரிய அண்ணன் கூறியதாவது: "முதன் முதலில் நான் சந்திக்கலாகும் இங்கிலீஷ்காரனைக் கொலை செய்து விடுவது எனது கடமையாய் விளங்கிடினும்கூட, அவனுக்கு நீல நிறக் கண்கள் இருக்குமாயின் என் கத்தி வேலை செய்யாது; ஏனெனில் அலிகாரிலுள்ள எனது பழைய காலேஜ் மாஜி பிரின்ஸிபல் த்யோடர்பெக் அவர்களது கண்கள் நினைவுக்கு வந்து விடும்."

அலிகாரின் பழைய மாணவர் பலர் இங்குளர்; பெக்கினிடம் அலிகாரில் படிப்புற்ற எங்களுக்கு இங்கிலீஷ்காரரிடத்து எங்கள் அந்தரங்கத்தில் அபிமானம் இல்லாமல் இருக்கமுடியாது என்பதற்கு அவர்கள் சாட்சியாவர். ஆதலால், பிரிட்டிஷ் அதிகாரம் ஒழிந்திடுவதாயிருப்பினும்—அது இங்கேயே பலியாகவேண்டும்—பிரிட்டிஷ் நட்பைச் சிதைக்குமாறு எங்களை ஆளாக்காதீர்கள். பிரிட்டன்மீது எங்களது அந்தரங்கத்தில் எங்களுக்கு அன்புண்டு; எங்களுக்கு அஃதிருக்கட்டும்; நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முஸல்மான்களுடைய நிலைமையைப்பற்றி ஒரு வார்த்தை; அதைப்பற்றி விவரமாக மற்றொரு சந்தர்ப்பத்தில் பார்த்துக்கொள்வேன். ஹிந்து முஸல்மான் பிரசினை ராஜீயத்தில் ஏன் வருகிறது, அதற்கும் இவ்விஷயங்களுக்கும் யாது சம்பந்தம் என இங்கிலாந்திலுள்ள அநேக ஜனங்

கள் எங்களைக்கேட்கின்றனர். "ராஜீயத்திலிருந்து மதத்தை நீங்கள் ஒழித்துவிட்டால், மதத்தைக்குறித்து உங்களுக்குள வாகும் அபிப்பராயம் தவறே, மதம் என்பது மூட நம்பிக்கையன்று: அது சடங்குமன்று; மதம் என்பது வாழ்க்கை என்பதின் வியாக்கியானம் எனலாம் என்று என் மனதிற்குத் தோன்றுகிறது. எனக்கு ஒரு நாகரீகம், ஒருவகை அரசியல் முறை, வாழ்க்கை நோக்கம் ஒரு விதம்—பூரணமாக ஓர் சமுச்சயம்—இதுதான் இஸ்லாம். ஆண்டவனது ஆக்ஞை சம்பந்தப்பட்டமட்டில், முதலிலும் நான் முஸல்மான், இரண்டாவதிலும் முஸல்மான், கடைசியிலும் முஸல்மான், முஸல்மான் தவிர வேறல்ல. அந்த சமுச்சயத்தையும், அந்த அரசியல் முறையையும், அந்த நாகரீகத்தையும், அந்த ஒழுக்க முறையையும் தியாகஞ்செய்துவிட்டு உங்களது ராஜ்யத்திலோ, ஜாதியிலோ என்னைப்பிரவேசிக்குமாறு நீங்கள் வேண்டினுல், நான் செய்யவே மாட்டேன். எனது முதற்கடமை என்னைப்படைத்தவனுக்காகும், மாட்சிமை தங்கிய சக்கரவர்த்திக்கன்று, எனது தோழர் டாக்டர் மூஞ்சேயுக்குமன்று. எனது முதற்கடமை என்னைப் படைத்தவனுக்கேயுரித்து, டாக்டர் மூஞ்சே விஷயம் கூட அப்படித்தான். முதலில் அவர் ஹிந்துவாகயிருக்க வேண்டும், நான் முதலில் முஸஸ்மானுக இருக்க வேண்டும், இவ்விரண்டும், அந்தக்கடமையைப் பொறுத்த மட்டில். ஆனுல் இந்தியா சம்பந்தப்பட்டமட்டிலோ, நான் முதலிலும் இந்தியன், இரண்டாவதிலும் இந்தியன், கடைசியிலும் இந்தியன், இந்தியனைத்தவிர வேருென்றுமல்ல.

சம அளவுள்ளதும், ஆனுல் ஒரே மத்தியம் வாய்ந்திலாதவையுமான இரண்டு வட்டங்களுக்கு என்க்கு உரிமை

உண்டு: ஒன்று இந்தியா, மற்றது முஸ்லிம் உலகம். கிலாபத் பிரதிநிதித்துவத்துக்குத் தலைமை வகித்து 1920ல் நான் இங்கிலாந்து வந்தபோது "உனது கடித வகையறுக்களுக்கு ஏதோ ஒருவித முடிவு நீங்கள் அமைத்துக்கொள்ளவேண்டும்" என என் நண்பர்கள் கூறினர். இரு வட்டங்கள் அதன்மீது பொருத்தி அதை வைத்துக்கொள்ள தீர்மானித்தேன். ஒரு வட்டத்தில் "இந்தியா" என்னும் வார்த்தை, மற்ற வட்டத்தில் இஸ்லாம் "கிலாபத்" என்ற வார்த்தையோடு, இந்திய முஸல்மான்கள் என்கிற முறையில் இரு வட்டங்களிலும் நாங்கள் வருகிறோம். இவ்விரண்டு வட்டங்களிலும் எங்களுக்குரிமையுண்டு, ஒவ்வொன்றும் முப்பது கோடிக்குமேல், இரண்டில் ஒன்றையும் நாங்கள் விட இயலாது. நாங்கள் தேசீய வாதிகள் அல்ல; ஆனால் தேசீயாதீதவாதிகளாகும் நாங்கள்; "ஆண்டவன் படைத்தது மனிதன், பேய் படைத்தது ஜாதி" என்று முஸல்மான் என்ற ஹோதாவில் நான் கூறுவேன். தேசீயம் பிரிக்கிறது; எங்கள் மதம் இணைக்கிறது. உங்களது கடந்த யுத்தத்தில் நடந்ததுபோல், எந்த மதப்போரிலும், குரோதப்போரிலும், அவ்வாறான ஹோமம் கிடையவே கிடையாது; அஃது உங்களது தேசீய யுத்தம், எனது ஜிஹாத் அல்ல.

ஆனால், எங்கள் தேசம் சம்பந்தப்பட்ட விஷயத்திலோ, வரி விசாரணை சம்பந்தித்த விஷயத்திலோ, எங்களது மாசூல் விஷயத்திலோ, சீதோஷ்ண நிலை விஷயமாகவோ, சாதாரண வாழ்வை ஒட்டிய ஆயிரக் கணக்கான அவ்விஷயங்களை ஒறுத்த சகல கூட்டுகள் விஷயத்திலும் "நான் ஒரு முஸல்மான், அவன் ஒரு ஹிந்து" என்று நான் எவ்வாறு கூற இயலும்? ஹிந்துவுக்கும் முஸல்மானுக்கும்

இடையிலுள்ள சச்சரவுகளைப் பற்றி தவறுகள் செய்யாதீர்கள்; அதிகாரம் என்னும் பயம் ஒன்றேதான் அவைகளுக்கு அஸ்திவாரம். இந்தியாவைப் பேடியாக்கிவிட்ட பாபம் தவிர, மற்றொரு பாபம் பிரிட்டன் செய்திருக்கிறது யாதெனில்: இந்தியாவைக் குறித்து பொய்ச்சரித்திரங்கள் எழுதி, எங்களது பள்ளிகளில் அவைகளை எங்களுக்குப் போதித்து, கடைசியாக எங்களது பள்ளி மாணவர்கள் பொய் இந்திய சரிதை கற்றிருக்கிறதேயாகும். சில ஓய்வு நாட்களில் எங்களது தெருக்களில் சில சமயங்களில் பார்க்கலான சச்சரவுகள் எங்களது "புத்திமான்கள்" என்கிறார்களே மடையர்களென்றே நான் கூறுவேன். அவர்களது ஹிருதயத்தில் புகுத்த விட்டிருக்கும் அபிப்பராயங்களால், ராஜீய நோக்கங்களுக்களாக எங்களது பள்ளிகளில் பொய்ச்சரித்திர போதனையால் விளைந்த சச்சரவுகளே. இந்தியாவிலுள்ள சில ஜனங்களது ராஜீயத்தின்மீது "பழி" என்ற அத்துணை பெரியதாக எழுதும் அவ்வுணர்வு இப்போது உளதுபோல் இருந்தால், இன்று இருக்கிற ரீதியில் இருந்திடில், நூற்றுக்கு 25 விகித முறையில் முஸல்மான்கள் சிறு பான்மையினராகவே எங்கேயும் இருந்து, ஹிந்துக்கள் 66 விகிதம் பெரும்பான்மையினராகவே எங்கும் இருந்துவிட்டால், இன்று எனக்கு நம்பிக்கையின் ஒரு கிரணங்கூடக் காணலரிதாகும்; ஆனால், எங்களது ஒலிமார்களும் சிப்பாய்களும் புரிந்திருக்கும் ஊழியந்தானென்னே! என் நண்பர் டாக்டர் மூஞ்சே வாழும் மாகாணத்தில் நான் நூற்றுக்கு 4 விகிதம் தான் இருக்கிறேன்; அவ்வாறான மாகாணங்களிருந்திடினும், 93 விகிதம் நான் இருக்கிற மற்ற மாகாணங்கள் என் நண்பர் ஸர் அப்துல் கையூம் வாழும் மாகாணம் போன்று—இருக்கின்றன; அவைகளுக்கு நாங்கள் சமசுதந்

தரம் வேண்டுகிறோம். முஸல்மான்கள் முதலில் கரைதட்டிய பழைய ஸிந்து மாகாணமிருக்கிறது. அங்கே அவர்கள் நூற்றுக்கு 73 விகிதம் உளர்; பஞ்சாபில் 56 விகிதம்; வங்காளத்தில் 54 விகிதம். அஃது எங்களுக்கு ரட்சிப்பு அளிக்கிறது; ஏனெனில், ஹிந்துக்கள் மிகவும் பெரும்பான்மையினராக விளங்கும் மற்ற மாகாணங்களில் நாங்கள் மனப்பூர்வமாய் பிணை ஆட்கள் கொடுத்திருக்கிறது போல் நாங்கள் பிணை ஆட்கள் வேண்டுகிறோம்.

முதன் முதலாக நீங்கள் இந்தியாவில் ஒரு பெரும் புரட்சியை நுழைத்துக்கொண்டிருக்கிறீர்களென்பதை நீங்கள் அறியவேண்டுமென்பது என் கோரிக்கை; முதன் முதலாக இந்தியாவில் பெரும்பான்மையினர் ஆட்சி புகுத்தப்படுகிறது. ராமன் காலத்தில் பெரும்பான்மையினர் ஆட்சி கிடையாது. இருந்திருந்தால் அவர் வனவாசம் சென்றிரார். ராஜ்யங்களைச் சூதாடி தோற்ற பழைய காலத்து பாண்டவ கௌரவர்கள் பெரும்பான்மையினர் ஆட்சி ஸ்தாபனம் செய்யவில்லை. கஜனி மாமூது, அக்பர், அவுரங்கஜீப் ஆகிய இவர்கள் காலத்தும் பெரும்பான்மையினர் ஆட்சி இல்லை, சிவாஜி காலத்துமில்லை. ரஞ்சித சிம்ஹன் பாஞ்சாலத்தை ஆண்ட போதும் பெரும்பான்மையினர் ஆட்சி இல்லை. இர்வின் பிரபுவினது காலத்துக்கூட பெரும்பான்மையினர் ஆட்சி இல்லை. முதன் முதலாக இந்தியாவில் பெரும்பான்மையினராட்சியை நாம் புகுத்தப்போகிறோம்; இரண்டும் இரண்டும் ஐந்து என்று ஐம்பத்தொருவர் கூறி, இரண்டும் இரண்டும் நான்குதான் என நாற்பத்தொன்பதின்மர் மறுக்கினும், இரண்டும் இரண்டும் ஐந்துதான் என ஐம்பத்தொருவர் கூறுகிறதால் ஐந்தாகாது என

சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவனாகிய யான் மிகவும் நன்ருய் அறிந்திருந்தும் பெரும்பான்மையினராட்சியை ஏற்றுக்கொள்ளுகிறேன். பெரும்பான்மையினராட்சிக்கு அடங்கி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆயினும், சில மாகாணங்களில் முஸல்மான்கள் பெரும்பான்மையின ராக விருப்பது அதிர்ஷ்டவசமே. பந்துக்கட்டு (பெடரல்) ரீதியான ஆட்சி முறை ஏற்பட்டுவிட்டால், அது இந்தியா வுக்குப் பொருந்தியது, ஹிந்து முஸ்லிம் பிரசினைமுடிவுக்குமட்டிலன்று சிற்றரசர்களுக்கும் கூட ஆவசீகமானது இஃது எங்களுக்கு அனுகூலமே. இந்தியாவின் தராசுத் தட்டு நிலைமை எவ்வாறிருக்கிறதெனில், பந்துக்கட்டு ரீதி யான ஆட்சி ஏற்படின், சமநிலையடைந்தேவிடும். அதன் வருகை இந்திய சர்க்கார்கூறுகிறபடி என்றைக்கோ அன்று. இன்றே, இப்போதே, இந்நிமிஷமே இந்தியாவில் பெட ரேஷன் (பந்துக்கட்டு அல்லது பாந்தவியம்) ஸ்தாபனமாகி சிற்றரசர்களுடன் புதுஉடன்படிக்கைகளும் ஏற்பட்டு யாவும். சக்கரவர்த்தி, சிற்றரசர்கள் ஆகிய இவர்களது சம்மதியின் பேரில் நடந்தேறிவிட்டபின்னரே தான் நாங்கள் இச்சபை விட்டேகுவோம்.

சிற்றரசர்கள் சம்மதியன்னியில் ஒன்றும் நடவாது என்ற கூற்று சில சமயங்களில் என் செவியில் படுகிறது. அவ்வாறில்லை. பெருத்தவர்களாகிய நீங்களும், சிறுத்தவர் களாகிய நாங்களும் உங்களது சம்மதியின்றி யாதும் செய் யோம். ஆனல், 1857ம் ஆண்டுக்கடைசியில், ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் அதிகாரங்கள் சக்கரவர்த்தினிக்கு அளிக் கப்பட்டபோது, உங்களது சம்மதம் கேட்கலாகும் என யாவரும் எப்போதும் எண்ணினார்களில்லை. "உங்களது அனு

மதிபெற்று'' எனலானவை கூட கிடையாது. சக்கரவர்த்தினியோடு உங்களது சம்பந்தம் இருந்தவாறே ஸ்தாபிக்கபெற்றது. ஆனால், உண்மையிலே நல்லவர்களாயிருந்த ராஜாக்கள் ராணிகள் அடங்கிய குடும்பத்தோடு அது ஏற்பட்டது. அவர்களில் அநேகருக்கு மனச்சாட்சியே அரசாய் விளங்கியது; அதுதான் எங்கட்கு நம்பிக்கையளிக்கிறது.

இன்னமொரு வார்த்தை: இத்துடன் நான் முடித்துக் கொள்ளுகிறேன். சேனையைப்பற்றி இதுமட்டும் நான் கூற விரும்புகிறேன். சேனையைக் குறித்த ஒரு ரகஸ்யத்தை இப்போது நான் வெளியிடுகிறேன். பத்து வருடங்களுக்கு முன்னர் இந்திய சட்டசபைகளைத் திறந்துவைக்க ஹிஸ் ராயல் ஹைனஸ் டியூக் ஆப் கன்னாட் இந்தியாவுக்கு வந்திருந்தபோது, மகாத்மா காந்தியையும், பண்டித மோதிலால் நேருவையும், என்னையும், காலஞ்சென்ற எங்களது அருமை நண்பர் ஸி. ஆர். தாஸ் அழைத்திருந்தார். இம் மேஜையின்கண் அன்னாரை எங்களது கண்கள் தேடு தேடென வீணிலே தேடுகின்றன. அவர் இன்று உயிருடன் இருந்திருப்பின் மோதிலால் நேருவையும், மகாத்மா காந்தியையும்கூட இம்மேஜைக்கு அழைத்து வந்திருப்பார். ஏனெனில், அவருக்கு நிகழ்வன விளங்கும். காந்திஜியும் நானும் தாஸின் விருந்தினராக அமர்ந்திருந்தோம். மகாத்மா காந்திக்கு நான் மணியக்காரனாய் வேலை பார்த்து வந்தேன். மகாத்மா காந்தியைக்கண்டு அவரது பாதங்களைத் தொடுவதற்கு ஜனங்கள் எண்ணிக்கையற்று வந்துகொண்டிருந்தனர். பூரான்போன்று அவருக்கு நூறு கால்கள் இருத்தல்கூடாதா என விரும்புவதுமுண்டு; ஆனால், அப்போதும்கூட, அவரது பாதங்களைத் தொடவரும் ஆயிரக்

கணக்கான ஜனங்களைச் சமாளிக்க இயலாது. கூடியவரை அவர்களைத் திருப்திசெய்ய யத்தனிப்பதும் காந்திஜியையும் கூட காப்பாற்ற முயலுவதும் எனக்குத் துன்பமாயிருந்தது. இவர்களுக்கிடையில் நான் 10 அல்லது 12 பேர்வழிகளைப் பார்த்தேன். அவர்கள் நெட்டையாயிருந்தனர், தலைப் பாகை கட்டியிருந்தார்கள்; ஒரே வித உடை உடுத்திரா விடினும், அநேகமாய் கிட்டத்தட்ட பார்வைக்கு ஒரே விதமாகக் காணப்பட்டனர். பஞ்சாபிலிருந்து வந்துள்ள ஸி. ஐ. டி. யைச் சார்ந்தவர்களென நான் எண்ணியிருந்தேன். அண்டையிலுள்ள ஒரு ஒற்றனது ரிபோர்டுகளின்மீது, 1915ல் நான் கைதியாய் சிறைபெற்ற பின்னர் ஆண்டவனும், பிரிட்டிஷ் ஸி. ஐ. டி. யும் இல்லாத இடம் கிடையாதென்றே என் நம்பிக்கை; அதனால், நான் யாது சொல்லிடினும், செய்திடினும், ஆண்டவனும், பிரிட்டிஷ் ஒற்றனும் சமமாய் எங்கும் நிறைந்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கையிலேயே சொல்லுகிறேன், செய்கிறேன். பிரிட்டிஷ் ஒற்றர்கள் என நான் நினைத்த இவர்களிடம் நான் சென்று "என்னால் ஏதாவது தங்களுக்குச் செய்ய லாகுமோ? கலகத்துவாராக நான் ஸி. ஐ. டிக்கு நிரம்ப செய்து வருகிறேன். இன்னமும் அதிகம் செய்யப் பிரியப் படுகிறேன்" என, அவர்கள் "நாங்கள் ஸி. ஐ. டி. லாகாவைச்சேர்ந்தவர்களல்ல; நாங்கள்சேனையைச் சேர்ந்தர்வகள்" என்றனர். "அப்படியாயின், இக்கலக வீட்டில் நீங்கள்யாது செய்து கொண்டிருக்கிறீர்கள்" என நான் வினவ, அவர்கள் "மகாத்மா காந்திக்கு நாங்கள் எங்களது மரியாதையைச் செலுத்த வந்துளோம்; ட்யூக் ஆப் கன்னாட்டின் நிமித்தமாக பூனாவிலிருந்து தருவிக்கப்பட்ட பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள்" என்றனர். மகாத்மா காந்தியை அவர்கள்

பார்க்க விரும்பினுல். நேராகவே அன்னுரை அழைத்துச் செல்வேனென்றேன். ஸ்வராஜ்யத்தில் அவர்களுக்கு சிரத்யையுண்டோவென மகாத்மா காந்தி அவர்களை வினவ, "ஆம்" என அவர்கள் விடை பகர்ந்தனர். பிரிட்டிஷ் இந்திய சேனையிடத்து எனக்குள்ள மரியாதையை வெளியிட நான் இப்போது எழுந்து நின்று, அவர்களது வார்த்தைகளை ஒப்புவிப்பேன். காந்திஜி அவர்களிடம் கூறினுர்: "சேனையிலமர்ந்துள்ள உங்களுக்கு வங்காள ஜனங்களையும், முதன்மையான ராஜதானியையும், ட்யூக் ஆப் கன்னுட்டின் பத்திரத்தின் பொருட்டு கம்பமுடியாமல்-பூனுவிலிருந்து அத்துணை தூரம் பரிவாரமாக வரவழைக்கப் பட்டுள்ள உங்களுக்கு ஸ்வராஜ்யத்தில் சிரத்தையுண்டோ?" "சமீபத்தில் ஒருநாள் நாங்கள் அணிவகுத்து நிற்கையில் எங்களது கர்னல், காந்திஜீ, தங்களைப்பற்றி ஏதோ சிரித்துக்கொண்டே கூறினுர். அந்த வணிக காந்தி இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கேட்கிறது உங்களுக்குத் தெரியுமா?" என்று கூறிச் சிரித்தார். "உங்களுக்கும் கூட ஸ்வராஜ்யம் வேண்டுமோ?" என்றும் கேட்டார். நாங்களெல்லாரும் "வேண்டாம்" எனக்கூறி விடுவோமென்றே அவர் எதிர்பார்த்தார்; ஆனுல், அப்பட்டாளத்தினர் "ஐயா, நாங்கள்கூட இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுகிறேம்" என மிகவும் அமைதியுடன்கூறினர். அப்போது கர்னல் பயந்து; அவருக்கு தூக்கிவாரிப் போட்டது. ஸ்வராஜ்யம் உங்களுக்கு எதற்காக என்று வினவினர்; அதற்கு அவர்கள் "ஐரோப்பாவிற்கு நாங்கள் யுத்தம் புரியச் சென்றபோது, பெல்ஜிய சிப்பாய்கள் தோற்றுத் திரும்பிவர நாங்கள் கண்டோம்; அப்போதும் கூட அவர்களை யாரேனும் நீங்கள் யாரென விசாரித்தால், அவர்கள் நிமிர்ந்து நின்று 'நாங்கள் பெல்ஜியர்

கள்; பெல்ஜிய சேனையைச் சேர்ந்தவர்கள்' என்று கர்வத்துடன் பதிலளிப்பர். சிலவேளை பிரெஞ்சுக்காரர்கள் பின்னிட்டு ஓடி வருவார்கள்; ஆனால், அவர்களை யாரென்று எவரேனும் விசாரித்தால், 'அவர்களும் நிமிர்ந்து நின்று பிரான்ஸ் சேனையிலுள்ளவர்களென' கர்வமாய் விடைபகருவார்கள். பிரிட்டிஷாரும் அப்படியே. ஆனால், 1914-ம் ஆண்டில் இவர்கள் ஜயித்து, ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பிரெஞ்சு கடற்கரையைக் காப்பாற்றியிருந்தும் கூட, அவர்கள் யாரென யாவர் அவர்களைக் கேட்டாலும், இந்திய சேனையிலுள்ளவர்களென சம கர்வத்துடன் அவர்கள் கூறக்கூடுமாயில்லை. 'நாங்கள் பிரிட்டிஷ் சர்க்காரின் சேனையிலுள்ளவர்கள்' என்றே அவர்கள் கூற வேண்டியிருந்தது. அவர்களும் நிமிர்ந்து நின்று "நாங்கள் இந்திய சேனையைச்சேர்ந்தவர்கள் எனக்கூறக்கூடுமாயிருத்தல் வேண்டும்" என்று இவர்கள் கூறியதாகக் கூறினர். இந்திய சேனையைக்குறித்த இவ்விஷயத்தை, ஆண்டவனது சொந்த உண்மையை, நான் உங்களுக்கு கூறுகிறேன். இந்திய சேனையிலுள்ளவர்கள் யாரையும் நீங்கள் நேரில்கேட்டுக் கணக்கிடுங்கள், ஸர்வ வல்லமையுள்ள ஆண்டவனும், பிரிட்டிஷ் ஒற்றர்களும் கூடத்தான் இருக்கட்டும். ஆனாலும் எங்களில் சிலரும் இருக்கட்டும், அவ்விஷயத்தைக் குறித்து யாரையும்விட எங்களுக்கு அதிகம் தெரியுமென நீங்களே காணலாகும். இன்றைக்கே இந்தியா தன்னைக் காத்துக்கொள்ளும், உண்மையில் உங்களுக்கு அது சம்மதியிருக்கும் பட்சத்தில்.

ஸர் ஜான் ஸைமன் ரிபோர்ட்டைவிட இந்திய கவர்ண்மெண்டாரின் கட்டளை தாராளமாகப் பேசுகிறது. அதா

வது, சேனையானது இங்கிலாந்து சர்க்காரின் ஆட்சிக்குக் கீழ் இருத்தலாகாது, இந்தியா சர்க்காரின் கீழேயே இருக்க வேணுமென்றுகூறுகிறது. இந்தியா கவர்ண்மெண்டில்மூன்று மெம்பர்கள் உளர்; அவர்களது நிறம் என் நிறம்போன்றே இருக்கிறது; சற்று கறுப்பாகக்கூட இருக்கிறது. அவர்களில் இருவர் இங்கிலாந்தில் மாணவர்களாக இருக்கையில் எனக்கு நிலைத்த நண்பர்கள்; மூன்றாவதவரும் அக்காலத்தில் இங்குதான் படித்தனர். இவர்கள் சேனையை நிர்வகிக்கக் கூடுமானால், ஸர் தேஜ் பகதூர் ஸாப்ரூ இந்தியாவின் பிரதம மந்திரியாக ஏன் இருக்க வொண்ணாது? ஸர் முகம்மது ஷாபி, அல்லது மிஸ்டர் ஜின்னா இந்தியாவின் பிரதம மந்திரியாக ஏன் விளங்கலாகாது? இந்திய சேனா நிர்வாகம் ஏன் புரிய இயலாது? என் பேச்சில் நீங்கள் களைத்து விட்டீர்களென்பதிற் சந்தேகமில்லை; ஆனால், நான் சம்பந்தப்பட்டமட்டில், பூராவும் பேசிவிட்டேன், களைப்பையும் உண்டாக்கிவிட்டேன். இப்போது நான் என் ஆசனத்தில்மருவேன்; அக்ராசனாபதியே, இங்கிலாந்தைப் போன்ற சுதந்திரம் இந்தியாவுக்கும் ஏற்பட்டுவிட்டது என்று நீங்கள் பகிரங்கமாய்க் கூறும்வரை, மறுபடியும் என்னைப்பேசுமாறு கூப்பிடமாட்டீர்களென நம்புகிறேன்.

Printed at The B. N. Press, Mount Road, Madras.